செம்மொழித் தமிழ் அகப்பொருள் களஞ்சியம்

தொகுதி–8

பொருள்வயிற்பிரிவு - 1

முனைவர் சிலம்பொலி சு. செல்லப்பன்

செம்மொழித் தமிழ்
அகப்பொருள் களஞ்சியம்

பொருள்வழிப்பிரிவு - 1

தொகுதி - 8

முனைவர் சிலம்பொலி சு. செல்லப்பன்

பழனியப்பா பிரதர்ஸ்
'கோனார் மாளிகை'
25, பீட்டர்ஸ் சாலை, இராயப்பேட்டை,
சென்னை - 600 014.
தொலைபேசி : 044-28132863 / 43408000
e-mail: sales@palaniappabrothers.com
கிளைகள்
திருச்சி - 620 002 சேலம் - 636 001
கோயம்புத்தூர் - 641 001 மதுரை - 625 001
ஈரோடு - 638 001

முதல் பதிப்பு : 2017
© உரிமை – ஆசிரியருக்கு

ISBN: 978-81-8379-767-2 (Set of 14)
978-81-8379-775-7 (Vol-8)

தனிப்பிரதி விலை ரூ. 550/–
(தொகுதி–8)

மொத்த விலை ரூ. 7200/–
(14 தொகுதிகள்)

கணினி அச்சு : திருமதி இந்திராகாந்தி ரவி
ரமணா கணினி வரையகம், 97890 65515

ஏசியன் பிரிண்டர்ஸ், சென்னை – 600 014.

கிளைகள்

திருச்சி
பழனியப்பா பிரதர்ஸ்
அஞ்சல் பெட்டி எண். 312,
தெப்பக்குளம்,
திருச்சிராப்பள்ளி – 620 002
தொலைபேசி : 0431–2702160

சேலம்
பழனியப்பா பிரதர்ஸ்
கதவு இலக்கம் 77,
(பழைய எண் 39) செர்ரி சாலை,
சேலம் – 636 001
தொலைபேசி : 0427–2450711

கோவை
பழனியப்பா பிரதர்ஸ்
683, ராஜா தெரு,
கோயமுத்தூர் – 641 001
தொலைபேசி : 0422–2393704

மதுரை
பழனியப்பா பிரதர்ஸ்
23-A, மேற்கு கோபுரத் தெரு,
மதுரை – 625 001
தொலைபேசி : 0452–2346258

ஈரோடு
பழனியப்பா பிரதர்ஸ்
950, ப்ரோக் சாலை,
ஈரோடு – 638 001
தொலைபேசி : 0424–2256261

பொருளடக்கம்

களஞ்சிய வாயில் xv
மதிப்புரை xx
பதிப்புரை xxi
அகத்திணை xxiii

பொருள்வயிற்பிரிவு - 1

நூல்	பாடல்	ஆசிரியர் பெயர்	பக்கம்
அகநானூறு 3	இருங்கழி	எயினந்தை மகனார் இளங்கீரனார்	47
அகநானூறு 5	அளிநிலை	பாலை பாடிய பெருங்கடுங்கோ	91
அகநானூறு 13	தன்கடற்	பெருந்தலைச் சாத்தனார்	196
அகநானூறு 27	கொடுவரி	மதுரைக் கணக்காயனார்	287
அகநானூறு 43	கடல்முகந்து	மதுரையாசிரியர் நல்லந்துவனார்	33
அகநானூறு 51	ஆள்வழக்கு	பெருந்தேவனார்	95
அகநானூறு 59	தண்கயத்து	மதுரை மருதனிளநாகனார்	392
அகநானூறு 75	அருள்அன்று	மதுரைப் போத்தனார்	121
அகநானூறு 77	நல்நுதல்	மருதனிளநாகனார்	98
அகநானூறு 81	நாள்உலா	ஆலம்பேரி சாத்தனார்	154
அகநானூறு 121	நாம்நகை	மதுரை மருதனிளநாகனார்	105
அகநானூறு 127	இலங்குவளை	மாமூலனார்	384
அகநானூறு 131	விசும்புஉற	மதுரை மருதனிளநாகனார்	89

நூல்	பாடல்	ஆசிரியர் பெயர்	பக்கம்
அகநானூறு 137	ஆறுசெல்	உறையூர் முதுகூத்தனார்	291
அகநானூறு 143	செய்வினைப்	ஆலம்பேரி சாத்தனார்	135
அகநானூறு 147	ஓங்குமலைச்	ஔவையார்	361
அகநானூறு 149	சிறுபுன்	எருக்காட்டூர்த் தாயங்கண்ணனார்	9
அகநானூறு 157	அரியல்	வேம்பற்றூர்க் குமரனார்	315
அகநானூறு 161	வினைவயின்	மதுரைப் புல்லங்கண்ணனார்	143
அகநானூறு 167	வயங்குமணி	கடியலூர் உருத்திரங்கண்ணனார்	84
அகநானூறு 179	விண்தோய்	கொடிமங்கலத்து வாதுளி நற்சேந்தனார்	180
அகநானூறு 187	தோள்புலம்பு	மாமூலனார்	357
அகநானூறு 191	அத்தப்	ஒரோடாகத்துக் கந்தரத்தனார்	102
அகநானூறு 193	கான்உயர்	மதுரை மருதனிளநாகனார்	28
அகநானூறு 199	கரைபாய்	கல்லாடனார்	5
அகநானூறு 217	பெய்துபுறந்	கழார்க் கீரன்எயிற்றியார்	324
அகநானூறு 225	அன்பும்	எயினந்தை மகனார் இளங்கீரனார்	81
அகநானூறு 245	உயிரினும்	மதுரை மருதனிளநாகனார்	78

நூல்	பாடல்	ஆசிரியர் பெயர்	பக்கம்
அகநானூறு 253	வைகல்	நக்கீரர்	380
அகநானூறு 271	பொறிவரிப்	காவிரிப்பூம்பட்டினத்துச் செங்கண்ணனார்	151
அகநானூறு 293	இலைஒழித்து	காவன்முல்லைப் பூதனார்	319
அகநானூறு 305	பகலினும்	வடமவண்ணக்கன் பேரிசாத்தனார்	327
அகநானூறு 307	சிறுநுதல்	மதுரை ஈழத்துப் பூதன் தேவனார்	141
அகநானூறு 319	மணிவாய்க்	எருக்காட்டூர்த் தாயங்கண்ணனார்	176
அகநானூறு 327	இன்பமும்	மருங்கூர்ப் பாலைச் சாத்தன் பூதனார்	114
அகநானூறு 335	இருள்படு	மதுரைத் தத்தங்கண்ணனார்	108
அகநானூறு 337	சாரல்	பாலை பாடிய பெருங்கடுங்கோ	50
அகநானூறு 339	வீங்குவிசை	நரைமுடி நெட்டையார்	112
அகநானூறு 345	விசும்புதளி	குடவாயிற்கீரத்தனார்	352
அகநானூறு 353	ஆள்வினைப்	மதுரை அளக்கர் ஞாழலார் மகனார் மள்ளனார்	57
அகநானூறு 355	மாவும்	தங்கால் பொற்கொல்லனார்	321
அகநானூறு 377	கோடை	மாறோக்கத்துக் காமக்கணி நப்பாலத்தனார்	18

நூல்	பாடல்	ஆசிரியர் பெயர்	பக்கம்
அகநானூறு 379	நம்நயந்து	பாலை பாடிய பெருங்கடுங்கோ	54
அகநானூறு 387	திருந்துஇழை	மதுரை மருதனிளநாகனார்	161
ஐங்குறுநூறு 301	மால்வெள்	ஓதலாந்தையார்	183
ஐங்குறுநூறு 302	அரும்பொருள்	ஓதலாந்தையார்	146
ஐங்குறுநூறு 303	புதுக்கலத்து	ஓதலாந்தையார்	189
ஐங்குறுநூறு 304	கல்லாக்	ஓதலாந்தையார்	184
ஐங்குறுநூறு 305	களிறு	ஓதலாந்தையார்	186
ஐங்குறுநூறு 306	வெல்போர்க்	ஓதலாந்தையார்	150
ஐங்குறுநூறு 307	ஞெலிகழை	ஓதலாந்தையார்	167
ஐங்குறுநூறு 308	பல்இருங்	ஓதலாந்தையார்	201
ஐங்குறுநூறு 309	வேனில்	ஓதலாந்தையார்	160
ஐங்குறுநூறு 310	பொலம்பசும்	ஓதலாந்தையார்	169
ஐங்குறுநூறு 315	பாயல்	ஓதலாந்தையார்	363
ஐங்குறுநூறு 316	பொன்செய்	ஓதலாந்தையார்	365
ஐங்குறுநூறு 340	அம்ம	ஓதலாந்தையார்	402
ஐங்குறுநூறு 368	ளிப்பூ	ஓதலாந்தையார்	157
ஐங்குறுநூறு 423	மாமழை	பேயனார்	193
ஐங்குறுநூறு 424	புறவணி	பேயனார்	159
ஐங்குறுநூறு 430	நெடும்பொறை	பேயனார்	63
ஐந்திணை எழுபது 29	எழுத்துடைக்	மூவாதியார்	342
ஐந்திணை எழுபது 30	வில்லுழு(து)	மூவாதியார்	300

நூல்	பாடல்	ஆசிரியர் பெயர்	பக்கம்
ஐந்திணை எழுபது 31	பேழ்வாய்	மூவாதியார்	311
ஐந்திணை எழுபது 32	நீர்இல்	மூவாதியார்	301
ஐந்திணை எழுபது 34	பீர்இவர்	மூவாதியார்	302
ஐந்திணை எழுபது 35	சூரல்	மூவாதியார்	308
ஐந்திணை எழுபது 37	பொரிபுற	மூவாதியார்	148
ஐந்திணை எழுபது 38	கோள்வல்	மூவாதியார்	355
ஐந்திணை எழுபது 39	கொடுவரி	மூவாதியார்	303
ஐந்திணை எழுபது 40	மன்ற	மூவாதியார்	372
ஐந்திணை எழுபது 41	பூங்கண்(இ)டம்	மூவாதியார்	371
ஐந்திணை ஐம்பது 32	விலங்கல்	மாறன் பொறையனார்	396
ஐந்திணை ஐம்பது 34	கோட்டமை	மாறன் பொறையனார்	147
ஐந்திணை ஐம்பது 36	கழி(து)ஓடும்	மாறன் பொறையனார்	299
ஐந்திணை ஐம்பது 38	சுனைவாய்ச்	மாறன் பொறையனார்	397
ஐந்திணை ஐம்பது 39	மடவைகாண்	மாறன் பொறையனார்	74
ஐந்திணை ஐம்பது 40	இன்(று)அல்கல்	மாறன் பொறையனார்	27
கலித்தொகை 2	தொடங்கற்கண்	பாலை பாடிய பெருங்கடுங்கோ	253
கலித்தொகை 3	அறனின்றி	பாலைபாடிய பெருங்கடுங்கோ	202
கலித்தொகை 4	வலிமுன்பின்	பாலை பாடிய பெருங்கடுங்கோ	207
கலித்தொகை 5	பாஅல்	பாலை பாடிய பெருங்கடுங்கோ	211

நூல்	பாடல்	ஆசிரியர் பெயர்	பக்கம்
கலித்தொகை 6	மறைஆ	பாலை பாடிய பெருங்கடுங்கோ	331
கலித்தொகை 7	வேனில்	பாலை பாடிய பெருங்கடுங்கோ	214
கலித்தொகை 8	நடுஇகந்து	பாலை பாடிய பெருங்கடுங்கோ	218
கலித்தொகை 10	வறியவன்	பாலை பாடிய பெருங்கடுங்கோ	222
கலித்தொகை 11	அரிதுஆய	பாலைபாடிய பெருங்கடுங்கோ	403
கலித்தொகை 12	இடுமுள்	பாலை பாடிய பெருங்கடுங்கோ	226
கலித்தொகை 13	செருமிகு	பாலை பாடிய பெருங்கடுங்கோ	283
கலித்தொகை 14	அணைமருள்	பாலை பாடிய பெருங்கடுங்கோ	229
கலித்தொகை 15	அரிமான்	பாலை பாடிய பெருங்கடுங்கோ	233
கலித்தொகை 18	அரும்பொருள்	பாலை பாடிய பெருங்கடுங்கோ	239
கலித்தொகை 19	செவ்விய	பாலை பாடிய பெருங்கடுங்கோ	237
கலித்தொகை 20	பல்வளம்	பாலை பாடிய பெருங்கடுங்கோ	335
கலித்தொகை 21	பால்மருள்	பாலை பாடிய பெருங்கடுங்கோ	242

நூல்	பாடல்	ஆசிரியர் பெயர்	பக்கம்
கலித்தொகை 22	உண்கடன்	பாலைபாடிய பெருங்கடுங்கோ	244
கலித்தொகை 23	இலங்குஒளி	பாலை பாடிய பெருங்கடுங்கோ	339
கலித்தொகை 24	நெஞ்சு	பாலை பாடிய பெருங்கடுங்கோ	312
கலித்தொகை 25	வயக்குறு	பாலைபாடிய பெருங்கடுங்கோ	248
குறுந்தொகை 4	நோம்என்	காமஞ்சேர் குளத்தார்	406
குறுந்தொகை 5	அதுகொல்	நரிவெரூஉத்தலையார்	408
குறுந்தொகை 16	உள்ளார்	பாலை பாடிய பெருங்கடுங்கோ	378
குறுந்தொகை 20	அருளும்	கோப்பெருஞ்சோழன்	268
குறுந்தொகை 22	நீர்வார்	சேரமானெந்தை	276
குறுந்தொகை 37	நசைபெரிது	பாலை பாடிய பெருங்கடுங்கோ	390
குறுந்தொகை 41	காதலர்	அணிலாடு முன்றிலார்	409
குறுந்தொகை 63	ஈதலும்	உகாய்க்குடி கிழார்	87
குறுந்தொகை 71	மருந்தெனின்	கருவூர் ஓதஞானி	14
குறுந்தொகை 76	காந்தள்	கிள்ளி மங்கலங்கிழார்	329
குறுந்தொகை 101	விரிதிரைப்	பரூஉ மோவாய்ப் பதுமன்	31
குறுந்தொகை 135	வினையே	பாலைபாடிய பெருங்கடுங்கோ	277
குறுந்தொகை 151	வங்காக்	தூங்கலோரி	38

நூல்	பாடல்	ஆசிரியர் பெயர்	பக்கம்
குறுந்தொகை 154	யாங்குஅறிந்	மதுரைச் சீத்தலைச்சாத்தன்	410
குறுந்தொகை 168	மாரிப்	சிறைக்குடி ஆந்தையார்	69
குறுந்தொகை 174	பெயல்மழை	வெண்பூதி	269
குறுந்தொகை 180	பழூஉப்பல்	கச்சிப்பேட்டு நன்னாகையார்	387
குறுந்தொகை 190	நெறிஇருங்	பூதம்புல்லன்	412
குறுந்தொகை 207	செப்பினம்	உறையனார்	351
குறுந்தொகை 215	படரும்	மதுரை அளக்கர் ஞாழார் மகனார் மள்ளனார்	389
குறுந்தொகை 243	மான்அடி	நம்பிகுட்டுவன்	414
குறுந்தொகை 256	மணிவார்ந்	ஆசிரியர் பெயரை அறிய இயலவில்லை	72
குறுந்தொகை 260	குருகும்	கல்லாடனார்	369
குறுந்தொகை 267	இருங்கண்	காலெறி கடிகையார்	36
குறுந்தொகை 273	அல்குறு	சிறைக்குடி ஆந்தையார்	278
குறுந்தொகை 325	சேறும்	நன்னாகையார்	415
குறுந்தொகை 331	நெடுங்கழை	வாடாப் பிரமந்தன்	280
குறுந்தொகை 347	மல்குசுனை	காவிரிப்பூம்பட்டினத்துச் சேந்தன் கண்ணன்	77
குறுந்தொகை 348	தாமே	மாவளத்தன்	282
குறுந்தொகை 363	கண்ணி	செல்லூர்க் கொற்றன்	179
குறுந்தொகை 376	மன்உயிர்	படுமரத்து மோசிகொற்றன்	71

நூல்	பாடல்	ஆசிரியர் பெயர்	பக்கம்
கைந்நிலை 13	கடுகி	புல்லங்காடனார்	138
கைந்நிலை 15	......கடுங்	புல்லங்காடனார்	140
கைந்நிலை 18	ஆமா	புல்லங்காடனார்	377
கைந்நிலை 19	அரக்(கு)ஆர்ந்த	புல்லங்காடனார்	368
திணைமாலை நூற்றைம்பது 68	சென்றக்கால்	கணிமேதாவியார்	21
திணைமாலை நூற்றைம்பது 76	நெஞ்சம்	கணிமேதாவியார்	68
திணைமாலை நூற்றைம்பது 80	உருவவேல்	கணிமேதாவியார்	373
திணைமாலை நூற்றைம்பது 82	ஆண்கடனாம்	கணிமேதாவியார்	343
திணைமாலை நூற்றைம்பது 83	செல்பவோ	கணிமேதாவியார்	304
திணைமாலை நூற்றைம்பது 84	கள்ளியங்	கணிமேதாவியார்	305
திணைமாலை நூற்றைம்பது 85	பொருள்பொருள்	கணிமேதாவியார்	170
திணைமாலை நூற்றைம்பது 86	ஒவ்வார்	கணிமேதாவியார்	310
திணைமாலை நூற்றைம்பது 91	கள்ளிசார்	கணிமேதாவியார்	306
திணைமாலை நூற்றைம்பது 92	செல்பவோ	கணிமேதாவியார்	309

நூல்	பாடல்	ஆசிரியர் பெயர்	பக்கம்
திணைமொழி ஐம்பது 11	கழுநீர்	கண்ணஞ்சேந்தனார்	318
திணைமொழி ஐம்பது 12	முரிபரல	கண்ணஞ்சேந்தனார்	187
திணைமொழி ஐம்பது 18	கதிர்சுடக்	கண்ணஞ்சேந்தனார்	271
நற்றிணை 1	நின்ற	கபிலர்	262
நற்றிணை 3	ஈன்பருந்து	இளங்கீரனார்	42
நற்றிணை 5	நிலம்நீர்	பெருங்குன்றூர் கிழார்	272
நற்றிணை 16	புணரின்	சிறைக்குடி ஆந்தையார்	3
நற்றிணை 18	பருவரல்	பொய்கையார்	366
நற்றிணை 24	பார்பக	கணக்காயனார்	349
நற்றிணை 26	நோகோ	சாத்தந்தையார்	125
நற்றிணை 33	படுசுடர்	இளவேட்டனார்	133
நற்றிணை 43	துகில்விரித்	எயினந்தையார்	171
நற்றிணை 46	வைகல்	ஆசிரியர் பெயரை அறிய இயலவில்லை	165
நற்றிணை 48	அன்றை	பாலை பாடிய பெருங்கடுங்கோ	129
நற்றிணை 52	மாக்கொடி	பாலத்தனார்	1
நற்றிணை 62	வேர்பிணி	இளங்கீரனார்	45
நற்றிணை 71	மன்னாப்	வண்ணப்புறக் கந்தரத்தனார்	174

நூல்	பாடல்	ஆசிரியர் பெயர்	பக்கம்
நற்றிணை 73	வேனில்	மூலங்கீரனார்	260
நற்றிணை 79	சிறைநாள்	கண்ணகனார்	266
நற்றிணை 124	ஒன்றுஇல்	மோசி கண்ணத்தனார்	194
நற்றிணை 126	பைங்காய்	ஆசிரியர் பெயரை அறிய இயலவில்லை	40
நற்றிணை 129	பெருநகை	ஔவையார்	294
நற்றிணை 137	தண்ணிய	பெருங்கண்ணனார்	12
நற்றிணை 141	இருஞ்சேறு	சல்லியங்குமரனார்	22
நற்றிணை 153	குணகடல்	தனிமகன்	398
நற்றிணை 162	மனைஉறை	ஆசிரியர் பெயரை அறிய இயலவில்லை	333
நற்றிணை 166	பொன்னும்	ஆசிரியர் பெயரை அறிய இயலவில்லை	119
நற்றிணை 171	நீர்நசைக்கு	ஆசிரியர் பெயரை அறிய இயலவில்லை	297
நற்றிணை 177	பரந்துபடு	ஆசிரியர் பெயரை அறிய இயலவில்லை	258
நற்றிணை 205	அருவி	இளநாகனார்	16
நற்றிணை 229	சேறும்	ஆசிரியர் பெயரை அறிய இயலவில்லை	345
நற்றிணை 241	உள்ளார்	மதுரைப் பெருமருதனார்	400
நற்றிணை 256	நீயே	பாலை பாடிய பெருங்கடுங்கோ	117

நூல்	பாடல்	ஆசிரியர் பெயர்	பக்கம்
நற்றிணை 262	தண்புனக்	பெருந்தலைச் சாத்தனார்	25
நற்றிணை 266	கொல்லைக்	கச்சிப்பேட்டு இளந்தச்சனார்	347
நற்றிணை 296	என்ஆ	குதிரைத்தறியனார்	264
நற்றிணை 298	வம்ப	விற்றூற்று வண்ணக்கன் தத்தனார்	75
நற்றிணை 308	செலவிரைவு	எயினந்தை மகன் இளங்கீரனார்	66
நற்றிணை 312	நோகோ	கழார்க் கீரன்எயிற்றியார்	64
நற்றிணை 318	நினைத்தலும்	பாலை பாடிய பெருங்கடுங்கோ	127
நற்றிணை 325	கவிதலை	மதுரைக் காருலவியங் கூத்தனார்	190
நற்றிணை 333	மழைதொழில்	கள்ளிக்குடிப் பூதம் புல்லனார்	375
நற்றிணை 337	உலகம்	பாலை பாடிய பெருங்கடுங்கோ	131
நற்றிணை 366	அரவுக்கிளர்ந்	மதுரை ஈழத்துப் பூதன்தேவனார்	61
நற்றிணை 391	ஆழல்	பாலை பாடிய பெருங்கடுங்கோ	274
நாலடியார் 393	கம்மம்செய்	சமணப் புலவர் ஒருவர் - பெயரை அறிய இயலவில்லை	200

களஞ்சிய வாயில்

சிலம்பொலி சு. செல்லப்பன்

ஒரு மொழியின் பயன்பாடு உயிர்ப்புடன் இருக்க வேண்டுமெனின் அம்மொழிக்குரிய வேர்களை உயிர்ப்புடன் திகழுமாறு காக்க வேண்டும். மொழிக்கு வேர்கள் என்பவை அதன் இலக்கியங்களே! நூல்களெங்கும் பரந்து கிடக்கும் இலக்கியச்சுவை, ஒரு பூவினடியில் அமைந்திருக்கும் அமிழ்தத்தை ஒத்தது. ஒட்டுமொத்த தமிழ்ச்சமுதாயமும் இலக்கியங்களின் சுவையை அறிந்து மகிழுமாறு செய்ய, ஒவ்வொரு பூவிலும் உறிஞ்சி எடுத்த அமிழ்தத் துளிகளைச் சேகரித்துச் சுவையான தேனடையாக உருவாக்கித் தரும் தேனீயின் உழைப்பினையொத்த அயராத பணி இன்றியமையாததாகிறது. இவ்வாறான பணியை ஒவ்வொரு காலகட்டத்திலும் வெவ்வேறு தமிழறிஞர்கள் மேற்கொண்டுள்ளனர் என்றாலும், 'செம்மொழித் தமிழ் அகப்பொருள் களஞ்சியம்' என்னும் இந்நூலின் தொகுதிகள் உருவாக மேற்கொள்ளப்பட்ட முயற்சி தனித்தன்மை வாய்ந்ததாகும்.

இதுவரை சொல்லப்பட்ட எதையும் தாண்டிச் சொல்லப்படவில்லை என்றாலும், இதுவரை சொல்லப்பட்ட ஒன்றை, இதுவரை யாரும் சொல்லாத முறையில் சொல்ல மேற்கொண்ட முயற்சியால் உருவானதே இக்களஞ்சியமாகும்.

'உரை' என்பதற்கும் 'திரட்டு' என்பதற்கும் உழைப்பு அளவிலேயே வேறுபாடு இருக்கிறது. சிலப்பதிகாரம் உள்ளிட்ட எத்தனையோ நூல்களுக்கு உரை எழுதியிருக்கிறேன். அவை ஒரு நெடுஞ்சாலைப் பயணம்போல் சீராகத் தொடங்கி முடிந்துள்ளன. ஆனால், குறிப்பிட்ட ஒரு பாடுபொருளை, குறித்த ஒரு கால எல்லைக்குள், அது

பாடப்பட்டுள்ள இலக்கிய நூல் ஒன்றுவிடாமல் தேடியெடுத்து, உரிய விளக்கத்துடன் தந்துள்ள இம்முயற்சி, என் வாழ்நாளில், எனக்கு வாழ்க்கை தந்த தமிழுக்கு, என் நன்றிக் கடனைச் செலுத்தக் கிடைத்த ஒரு நல்வாய்ப்பாய் எண்ணி மகிழ்கிறேன்.

'செம்மொழித் தமிழ் அகப்பொருள் களஞ்சியத்தை' உருவாக்க நான் மேற்கொண்ட முயற்சி ஓர் அகழ்வாராய்ச்சிக்கு இணையானது எனலாம். செம்மொழித் தமிழ் இலக்கிய நூல்களிலுள்ள 2586 அகப்பாடல்கள் பதினான்கு தொகுதிகளில் விளக்கம் பெற்றுள்ளன. இக்களஞ்சியம் வெறும் அகத்திரட்டு மட்டுமன்று; ஒரு யுகத்திரட்டு. ஒரு வகையில் இதனைத் தமிழ் அகப்பொருள் கலைக்களஞ்சியம் (Encyclopedia) என்று கூடச் சொல்லலாம்.

நூல் உருவாக்கம்

தமிழ் அகத்திணையில் இயற்கைப் புணர்ச்சி, இடந்தலைப்பாடு, பாங்கற் கூட்டம், பாங்கியிற் கூட்டம், குறியிடம், சிறைப்புறம், ஒருவழித்தணத்தல், வரைவு நீட்டிப்பு, வரைவு கடாயது, அறத்தொடு நிற்றல், வரைவிடைப் பிரிவு, வரைவு மலிதல், உடன்போக்கு, ஏறு தழுவுதல், மங்கல மனையறம், பொருள்வயிற் பிரிவு, பரத்தையிற்பிரிவு என்பவற்றோடு இன்னும் பல துறைகள் உள்ளன. ஒவ்வொரு துறை சார்ந்த பாடல்கள் ஒவ்வொரு நூலினின்றும் முதலில் திரட்டப்பட்டன; பின்னர் ஒவ்வொரு துறைக்குமுரிய பாடல்கள் அனைத்தும் ஒன்று சேர்க்கப்பட்டு இக்களஞ்சியம் உருவாக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு துறைக்குமுரிய பாடல்கள் அனைத்தையும் ஒரேயிடத்தில், நிகழ்ச்சி நடைபெறும் வரிசை முறையில், தக்க விளக்கத்துடன் இக்களஞ்சியத்தில் காணமுடியும். களவு, கற்பு என்னும் நிலைகளில் ஒவ்வொரு துறைக்குமுரிய பாடல்களைத் தனியே ஓரிடத்தே காண்பதற்கான வாய்ப்பு இக்களஞ்சியத்தில் உள்ளது.

பதிப்பில் பின்பற்றப்பட்டுள்ள நெறிமுறைகள்

மூல பாடம் பலவற்றுள் சிறந்தது என்று கருதப்பட்டது இந்நூலில் எடுத்தாளப்பட்டுள்ளது.

அக்காலப் பாடல் நடையமைப்புச் சற்றுக் கடினமானதுதான். ஆதலின் எளிதில் படித்துப் பொருளறியும் முறையில் சொற்கள் பிரிக்கப்பட்டு அசையும் சீரும் சிதையாவண்ணம் பாடல்கள் தரப்பட்டுள்ளன.

ஒவ்வொரு பாடலும் யாருடைய கூற்று என்பது முதலில் தரப்பட்டுள்ளது. அடுத்த அடியில் அப்பாடல் எந்த நூலில் எத்தனையாவது எண்ணில் அமைந்துள்ளது என்பதும், அதனை இயற்றிய ஆசிரியர் எவர் என்பதும் தரப்பட்டுள்ளன. அடுத்துப் பாடல் எத்திணையைச் சார்ந்தது என்பது கொடுக்கப்பட்டுள்ளது. அதனையடுத்துப் பாடலின் கூற்றும், கூற்று விளக்கமும் இடம் பெற்றுள்ளன. இவற்றையடுத்துப் பாடலும், பாடலின் தெளிவுரையும், கருத்துச் சுருக்கமும் உள்ளன.

மேற்கொண்டு விளக்கமும், தேவையான குறிப்புகளும் உள்ளன. சில பாடல்களுக்கு இறைச்சி, உள்ளுறைப் பொருள் ஆகியன தரப்பட்டுள்ளன. இறுதியில் பாடலிலுள்ள இன்றியமையாச் சொற்களுக்குப் பொருள் கொடுக்கப்பட்டுள்ளது. சொல்லுக்கு நேரடிப் பொருளோடு, பாடலைப் புரிந்துகொள்ளும் வகையில் மேலும் தேவைப்படும் சொற்களும் இணைக்கப்பட்டுள்ளன. அதனால், பாடலையும் சொற்பொருளையும் ஒன்றிணைத்துப் படித்தால் பாடலின் பொருள் உரையின்றியே நன்கு விளங்குவதை அறியலாம்.

நன்றி மலர்

களஞ்சியத்தை உருவாக்க எனக்குத் துணை நின்றவர், பலர்.

நான் எழுதியதைச் செப்பனிட்டு வரிசையாக்கி, நூல் முழுவதையும் படித்துத் தக்க திருத்தங்களை வழங்கியவர், என் மருகர் பொறிஞர்

நா. புஷ்பராசு. அவருக்கு வாழ்க்கைத்துணையாக மட்டுமன்றி இப்பணிக்குப் பெரிதும் துணை நின்ற என் மகள் முனைவர் மணிமேகலை, இவர்களுக்கு இனிய ஒத்துழைப்பு நல்கிய பொறிஞர் அ. இரவீந்திரன்,

நூல் முழுமைக்கும் மெய்ப்புப் பார்த்துத் துணை செய்ததோடு 'அகத்திணை அஞ்சிறைத் தும்பி' எனப் பாராட்டுரையையும் தந்துள்ள கவிமாமணி தேனி திருமாவளவன்,

'ஆழங்காற்பட்ட அகப்பொருள் நுணுக்கம்' எனும் நுண்ணிய ஆய்வுரையை வழங்கியுள்ள பேராசிரியர் முனைவர் இராம. குருநாதன்,

உள்ளம் கொள்ளை கொள்ளும் வகையில் அருமையானதோர் அணிந்துரை நல்கியுள்ள பேராசிரியர் முனைவர் மறைமலை இலக்குவனார்,

எத்தனை திருத்தங்கள், மாற்றங்கள் செய்தாலும் சலிப்பின்றி அத்தனையையும் உடனுக்குடன் கணினிமூலம் செம்மையாய்ச் செய்து வெளிவர உதவிய திருமதி இந்திரா காந்தி ரவி,

தரமான இலக்கிய நூல்களைப் பதிப்பிப்போர் என்றதும் முதலில் நினைவில் நிற்பவர் பழனியப்பா பிரதர்ஸ் நிறுவனத்தார் ஆவர். அவர்கள் இக்களஞ்சியத்தைக் காண்பவர் பாராட்டும் வகையில் பதிப்பித்து வெளியிட்டுள்ளனர். அவர்கள் தந்துள்ள பதிப்புரை என் நெஞ்சில் என்றென்றும் பதிந்திருக்கும். அத்தகைய பதிப்பக உரிமையாளர் திரு. ப. செல்லப்பன், பதிப்பில் எனக்கு எல்லா வகையிலும் துணை நிற்கும் சுப்பு என்கிற திரு. இராம. சுப்பையா, களஞ்சியம் சிறந்த முறையில் உருவாக முன்னின்று முழு மூச்சுடன் பாடுபட்ட முனைவர் ப. முத்துக்குமாரசாமி,

முகப்போவியத்தை அழகுற வடிவமைத்துத் தந்துள்ள ஓவியர் ஜீவா,

கடின உழைப்பில் என் உடல் நலம் கெட்டுவிடாதவாறு பேணி வந்ததோடு, களஞ்சியம் வெளிவருவதில் பெரிதும் ஆர்வம் காட்டிய

என் மகன் செ. கொங்குவேள், மருமகள் மருத்துவர் ஈஸ்வரி மற்றும் குடும்பத்தினர் ஆகிய

அனைவரையும் பாராட்டிப் புகழ ஏற்ற சொற்கள் எனக்குக் கிட்டவில்லை என்பதால், 'நன்றி' என்னும் ஒரு சொல்லை என் உள்ளத்தின் ஆழத்திலிருந்து வெளிப்படுத்தி வணங்குகின்றேன்.

களஞ்சியப் பொருளைப் பாதுகாத்தல் மட்டும் போதாது; அதனை நாமும் துய்த்து அனைவர்க்கும் வாரிவாரி வழங்க வேண்டும். களஞ்சியத்தைத் துய்த்தால், தமிழரின் வீரம் செறிந்த, அறஞ்சார்ந்த காதல் வாழ்க்கை முறையினைச் சற்றே வாழ்ந்துவிட்ட நுகர்வும், இவ்வளவு மென்மையும் உயர்வும் அரியதும் ஆனதா தமிழ்க்காதல் என்னும் உள்ளுணர்வும் மேலோங்கி நிற்கும் என்பது உறுதி.

களஞ்சியத்தைப் பயன்படுத்துங்கள்; மேலும் மேலும் விரிவடையச் செய்யுங்கள்.

என்றும் உங்கள்

சு. செல்லப்பன்

மதிப்புரை

அகத்திணை அஞ்சிறைத் தும்பி

கவிமாமணி தேனி **திருமாவளவன்**

தனி ஒருவராய், இருபது ஆண்டுகள் இடைவிடாது முயன்று, பல மணி நேர உழைப்பை நல்கி, வெற்றிகரமாய் முடித்துள்ளார், சிலம்பொலி. இந்த இமாலயச் சாதனையை எவ்வாறு போற்றிப் புகழ்வது? சிலம்பொலியின் இந்நூல் தமிழறிவைத் தழைத்திடச் செய்யும். பேச்சாற்றலைப் பெருக்கிடப் பயன்படும். ஆராய்ச்சியாளர்க்கு அருந்துணையாகும். மாணவர்க்கு மாங்கனியாகும். ஆசிரியருக்கு உரை நூல் ஆகும். இந்நூலை ஒவ்வொருவரும் பயின்று, "பெருமை கொள்வாய் தமிழா – தமிழ்நாட்டில் பிறந்ததனால் மிகச் சிறந்தவன் நான் என்று" மகிழ்ந்திட வேண்டுகிறேன்...

ஆழங்காற்பட்ட அகப்பொருள் நுணுக்கம்

பேராசிரியர் முனைவர் **இராம. குருநாதன்**

அகப்பொருள் சார்ந்த இப்பெருநூலினைத் தமிழுலகம் நன்கறிந்த முனைவர் சிலம்பொலி சு. செல்லப்பனார் இலக்கிய இன்பம் தோய இதனைப் படைத் துள்ளார். இந்நூல் செல்லப்பனாரின் சொற்சிறப்பச்சிகரம் என்று செப்புவது மிகையான கூற்றன்று. அகப்பொருள் கருத்தாக்கத்தை இவர் போல் சொல்லு வதற்கு இனி ஒருவர் உண்டோ என்று சொல்லும் அளவிற்கு இந்நூல் சிறந்து விளங்குகிறது. இஃது இவரது வாழ்நாள் சாதனை என்று நவின்று, இதற்கு வரவேற்பு வளையம் வைத்துக் கொண்டாடலாம். இந்நூலினை உருவாக்கி உலவ விட்டமைக்குத் தமிழுலகம் நன்றி சொல்லும். கொண்டாடும்...

தமிழ்க்களஞ்சியத்திற்கு ஒரு தங்கத் திறவுகோல்

பேராசிரியர் முனைவர் **மறைமலை இலக்குவனார்**

மிக எளிமையாகவும், இனிய எளிய நடையிலும், பாடல்களில் கருத்து களையும் சிறப்புகளையும் சுவைபடவும், பயன்பாடு மிக்கதாகவும் சிலம்பொலி செல்லப்பனார் வழங்கியுள்ள அகப்பொருள் களஞ்சியம் தமிழ்கூறும் நல்லுலகத் திற்கு ஒரு மகத்தான கொடை என உறுதியாகக் கூறலாம். மிகவும் அரிதின் முயன்று, நீண்ட காலம் அயராது உழைத்து, சங்க இலக்கியம் எனும் கடலில் மூழ்கிச் சிறந்த முத்துகளைத் தேடியெடுத்தது போன்று மிகச் சிறந்த படைப்பு களுள் ஒன்றாகவும், தமிழிலக்கியச் செவ்வியற்கால அகப்பொருள் செய்திகளை நிரல்படக் கூறும் கருத்துப்பெட்டகமாகவும் விளங்குகின்றது. தமிழ்க்களஞ்சியத் திற்கு ஒரு தங்கத் திறவுகோலை இதோ சிலம்பொலி செல்லப்பனார் வழங்கி யுள்ளார். களஞ்சியப் பொருளைக் கைக்கொள்க! பயன் பெறுக!

பதிப்புரை

சொல்வேந்தர் சிலம்பொலிக்குச் சூட்டுகின்றோம் மணிமகுடம்

பழனியப்பா பிரதர்ஸ்

பொன்னொளியே! பூமழையே!
பூவணியும் காவிரியே!
தண்ணமுதே! தாமரையே!
தாழம்பூ நறுமணமே!
தென்பொதிகைச் சந்தனமே!
தேனிழைக்கும் வண்டினமே!
கன்மலையின் நறுஞ்சுனையே!
கண்ணகலா ஆழ்கடலே!
செண்பகமே! கற்பகமே!
சிலம்பொலியே! வலம்புரியே!

பண்டையநல் புலவர்களும்
பாராட்டும் வகையினிலே
கண்டுகண்டு பாடல்களைக்
காட்சிவழி நீதொகுத்துச்
செண்டெனவே தந்தனையே
செந்தமிழர் கரங்களிலே!
இன்தமிழும் புதியதொரு
ஏற்றமுற வழியமைத்தாய்!
குன்றெனவே இமயமலை
குன்றிடவே நீஉயர்ந்தாய்!

என்னபணி! இரவுபகல்
எத்தனைநாள் பேருழைப்பு!
என்னுமொரு சிந்தனையில்
எம்இதயம் கனக்கிறது!
உன்நூல்கள் பலதொகுப்பாய்
நன்னூலாய் யாம்அளித்தோம்!

உன்கழுத்தில் இன்றணியும்
ஒவ்வொருபூ மாலையிலும்
நன்மலரை ஒன்றிணைக்கும்
நாரெனவே யாம்அமைந்தோம்!

கங்குகரை காணாத
கடல்மூழ்கி எழுவோரே
சங்கொடுநல் முத்துகளைத்
தாம்வாரிக் கொணர்ந்திடுவார்!
பொங்கியெழும் நறுமணத்தைப்
பூங்காவில் நுழையாமல்
எங்ஙனந்தான் பெறக்கூடும்
இயம்பிடுக தோழர்களே!
அங்ஙனமே நீர்விரும்பி
இந்நூலின் தொகுதிகளை

வாங்கிடுக! படித்திடுக!
வரிவரியாய்ப் பொருளறிந்தே
ஓங்கிடுக! உணர்ந்திடுக
உள்ளூறும் கலைநயத்தை!
தேங்கிநின்று மறைபொருளாய்த்
திரட்டுப்பால் போலினிக்கும்
பாங்கான உவமைநலம்
பலர்போற்றும் 'இறைச்சி'யுமே!
வீங்கிடுமே உம்முடலும்
விள்ளரிய பெருமிதத்தால்!

பல்கலையின் கூடமன்றோ
பழனியப்பா பிரதர்ஸும்!
நல்லறிஞர், கவிவல்லார்,
நாடறிந்த பேச்சாளர்,
துள்ளுநடை சிறுவர்க்குச்
சுவைக்கதைகள் படைத்திடுவோர்,
வல்லமையால் எழுத்துலகில்
வந்தமர்ந்தோர் நடுவினிலே
சொல்வேந்தர் சிலம்பொலிக்குச்
சூட்டுகின்றோம் மணிமகுடம்!

அகத்திணை

பொழிலிலோ புனத்திலோ எழிலார்ந்த வேறோர் இடத்திலோ ஆண்மகன் ஒருவன், பெண்மகள் ஒருத்தி, தன் விளையாட்டுத் தோழியர் எவருமின்றித் தனித்து நிற்பதைக் காண்கிறான். எல்லா வகையிலும் தன்னை ஒத்திருக்கும் அவள்பால் அவனையுமறியாமல் ஓர் இயற்கை ஈர்ப்பால் அவள் ஒருத்திமீது மட்டுமே அவன் உள்ளம் செல்லுகிறது. அவளும் அவனை மட்டுமே விரும்புபவளாய் இருக்கிறாள். எதிர்ப்படும் எல்லாரிடமும் ஆண், பெண் உள்ளம் சென்றுவிடாது. அவளது அழகு கண்டு, 'இவள் தெய்வ மகளோ', 'உண்மையிலேயே மானிடப் பெண்தானோ' என ஐயுறுகிறான்; சில செய்கைகளால் அவள் மானிடப் பெண்ணே என்று தெளிவடைகின்றான். தன்னைப்போல அவளும் தன்னை விரும்புகிறாளா என்பதைக் குறிப்புகளால் உணர்கிறான். இருவரும் ஒருவரையொருவர் காண்கின்றனரெனினும், பெண்ணை ஆண் கண்டான் என்று சொல்வதே செய்யுள் வழக்கம். அவ்வாறு காதல் கொள்பவருள் ஆண்மகனைக் 'காதலன்' என்றோ, 'தலைவன்' என்றோ, 'கிழவன்' என்றோ, பெண்மகளைக் 'காதலி' என்றோ, 'தலைவி' என்றோ, 'கிழத்தி' என்றோ இலக்கியங்கள் வழங்குகின்றன.

தலைவனும் தலைவியும் ஒரு நிலத்தைச் சார்ந்தவராகவோ, வெவ்வேறு நிலத்தைச் சார்ந்தவராகவோ இருக்கக்கூடும். ஐவகை

நிலங்களுள் எந்நிலத்தவராயும் இருக்கலாம். எனினும், காதலனும் காதலியும் குறிஞ்சி நிலத்தில் ஒருவரை ஒருவர் கண்டு காதல் கொள்கின்றனர் என்று சொல்வதே அக இலக்கிய வழக்கம். எல்லா நிலங்களிலும் காதல் தோன்றத்தான் செய்யும்! 'பின்புலம் இயற்கை யழகு வாய்ந்ததாய் இருந்தால்தான் காதல் காட்சி சிறப்புறும்.' பாலைநிலத்திலும் கடுமையாய் வெயில் வீசும் பசுமையற்ற பின்புலத் திலும் காதல் காட்சியைக் காண எவரும் விரும்பார். எனவேதான், குறிஞ்சி நிலத்தைப் பின்புலமாய்க்கொண்டு, அங்கு ஒருவனும் ஒருத்தியும் எதிர்ப்பட்டுக் காதல் கொள்வதாய் அமைக்கின்றனர். இவ்வாறே காதல் கொள்ளும்போது ஏற்படும் மாறுபட்ட நிலைகளுக் கேற்பப் பின்புலங்களாய் முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகியன அமையும்.

ஒருவனும் ஒருத்தியும் கண்டுகொள்வதைக் 'காட்சி' என்பர். தான் கண்ட பெண் எவ்விடத்தினளோ, யார் மகளோ, நம் காதலுக்கு இசைவளோ என்றெல்லாம் ஆண்மகன் ஐயுறுவான். இஃது 'ஐயம்' எனப்படும்.

அணிகலன்கள் அணிந்திருத்தல், காமப் பார்வை பார்த்தல், புதிதாய்த் தன்னைக் கண்டதால் உடலில் நடுக்கம் தோன்றுதல், தான் நோக்கும்போது அவள் தன்னைப் பார்க்காது நிலத்தைப் பார்த்தல், தான் காணாதிருக்கும்போது அவள் தன்னை நோக்குதல் போன்ற குறிப்புகளால் ஆண்மகன் ஐயம் நீங்கி அவள் தன்மீது காதல் கொண்டுள்ளாள் எனத் தெளிவடைகிறான்.

தலைவி அணிந்துள்ள பூக்களில் வண்டுகள் மொய்த்திருத்தல், சிறந்த அணிகலன்களை அவள் அணிந்திருத்தல், அவள் மார்பு மற்றும் உடலில் ஓவியம் எழுதப்பட்டிருத்தல், அணிந்துள்ள மலர்மாலையில் மலர் வாடியிருத்தல், மருண்ட பார்வை கொண்டிருத்தல், கண்களை இமைத்தல், முகத்தில் அச்சம் தோன்றுதல் போன்றவற்றாலும் இன்ன பிறவற்றாலும் காதலன் தன் ஐயம் நீங்கி அவள் மானிடப் பெண்ணே என முடிவு செய்வான்.

"வண்டே இழையே வள்ளி பூவே
கண்ணே அலமரல் இமைப்பே அச்சம் என்(று)
அன்னவை பிறவும் ஆங்கவண் நிகழ
நின்றவை களையும் கருவி என்ப" (தொல். கள. 4)

என்பது தொல்காப்பிய நூற்பா.

இயற்கைப் புணர்ச்சி

தலைவி தன்மீது காதல் கொண்டுள்ளாள் எனத் தெளிந்த தலைவன், தன் காதலை உணர்த்தத் துணிவான்; தலைவியும் தன் காதற்குறிப்பை உணர்த்துவாள். நாணத்தால் தலைவி, தன் காதலை வெளிப்படையாய் உணர்த்தாது குறிப்பினாலேயே உணர்த்துவாள்.

தன்னை அவள் விரும்புவதுணர்ந்த பின்னரே அவன் அவளைத் தனிமையில் சென்றடைந்து, ஒன்றுகூடி இன்புறுவான். இவ்வாறு தலைவனும் தலைவியும் ஒருவரையொருவர் கண்டு முதல்நாளில் கூடியிருத்தலை 'இயற்கைப் புணர்ச்சி' என்பர்.

தலைவிக்கு முதன்மைத்தோழி ஒருத்தியும், உடன் விளையாடும் மகளிரும் (ஆயத்தார்) இருப்பர். ஆண்மகனின் பாங்கறிந்தொழுகும் உயிர்த்தோழன் பாங்கன் என்று வழங்கப்படுவான்.

இடந்தலைப்பாடு

தற்செயலாய்க் கண்ட ஆணும் பெண்ணும் ஒருவரை ஒருவர் விரும்பி, முதல் நாள் ஒன்றுபட்டுக் காதலராயினர். இவ்வாறு இயற்கைப் புணர்ச்சி புணர்ந்த தலைவன், தன் காதலியை முதல் நாள் கண்ட அதே இடத்தில் மறுநாளும் காணலாம் எனச் செல்கிறான்; காதல் மிக்க தலைவியும் அங்கு வந்து நிற்பாள். தோழியரோடு விளையாடாது, பூப்பறித்து மாலை தொடுத்திடாது தனித்திருக்கும் தலைவியிடம் தலைவன், "தனித்து நிற்கும் நீ யாரோ? உன்னைத் தொழுது கேட்கிறேன்" என்று தன் காதல் உள்ளத்தை வெளிப்படுத்துவான். அது கேட்டுத் தலைவி நாணி நிற்பாளேயன்றி மறுமொழி எதுவும் கூறமாட்டாள். தலைவன் அவளை நெருங்கித் தன் காதலை உறுதிப்

படுத்திக்கொள்வான். யாருமறியாதவாறு தலைவன் தனியே வந்து, தலைவியை முதல்நாள் கண்ட அதே இடத்திலேயே இரண்டாம் நாளும் கண்டு, கூடிக் களிப்பது 'இடந்தலைப்பாடு' எனப்படும்.

பாங்கற்கூட்டம்

தலைவியைக் கண்டது முதற்கொண்டு தலைவன் மனஞ்சோர்ந்து, உடல் தளர்ந்து உயிர்க்களையற்றிருப்பான். ஆண்மை மிக்க அவன் அவ்வாறு சோர்ந்திருப்பது எதனால் எனப் பாங்கன் கேட்பான். அது பெண் ஒருத்தியால் நிகழ்ந்ததென்பான், தலைவன். பகைவரும் கண்டஞ்சும் வீரமிக்க அவன், பெண் ஒருத்தியால் இடிந்துபோய் இருத்தல் கூடாதெனப் பாங்கன் இடித்துரைப்பான். இதனைப் பாங்கன் கழறுதல் (இடித்துரைத்தல்) என்பர். பாங்கன் இடித்துரைத்ததை மறுத்துத் தலைவன், 'நீ அவளைக் கண்டாயானால் என்னை இவ்வாறு இழிவாய்ப் பேசமாட்டாய்' என்று கூறுவான். தோழனின் கூற்றினைத் தலைவன் மறுத்துப் பேசுவதைக் 'கழற்றெதிர் மறை' என்பர்.

தலைவனின் காதற்பெருக்கையும், அதை அவன் தாங்க இயலாது தவிப்பதையும் கண்டு, "அப்பெண் யார்? எவ்விடத்துள்ளாள்? எத்தன்மையள்?" என்று பாங்கன் கேட்டறிந்து, அவ்விடம் சென்று, தலைவன் குறிப்பிட்ட அவளைக் கண்டு, தலைவன் அவளை விரும்பியது சரியெனத் தெளிவான்; தலைவனுக்கு எல்லா வகையிலும் துணை நிற்கவும் உறுதி பூணுவான்; தலைவனைத் தலைவி இருக்கு மிடத்திற்கு அழைத்துச் செல்வான். தலைவி இருக்கும் இடத்தைப் பாங்கன் காட்டத் தலைவனோடு தலைவிக்கு ஒருநாள் கூட்டம் நிகழும். இது 'பாங்கற்கூட்டம்' எனப்படும்.

பாங்கியிற்கூட்டம் (தோழியிற்புணர்ச்சி)

தலைவிக்கு விளையாட்டுத்தோழியர் பலராய் இருப்பர். தலைவி அவர்களை விட்டுப்பிரிந்து எப்பொழுதும் மறைந்து செல்லல் அரிது. அவர்களைத் தனியே விட்டுப் பிரிந்து சென்றால் திடீரென்று வந்து தலைவியை அடைவர், தோழியர். இது போன்ற இடையூறுகளை

யெல்லாம் கடந்து, தலைவியைத் தன்னிடம் கொண்டுவந்து விடத் தலைவிக்குத் தோழியராய் உள்ளவருள் முக்கியமான ஒருத்தியை அறியத் தலைவன் முற்படுவான்.

தலைவியைப் பெற்றெடுத்தவள், நற்றாய்; வளர்த்தவள், செவிலித் தாய். நற்றாய், செவிலிக்குத் தலைவியும் தோழியும் ஆவாள். அதே போலவே, செவிலிக்கு மகள், நற்றாய் பெற்ற மகளான தலைவிக்கு உயிர்த்தோழியாய் இருப்பாள். இருவரும் ஈருடலும் ஒருயிருமாயிருப்பர். அத்தகைய தோழியை அறிந்து, அவளிடம் தன் குறையைக் கூறி, அவள் வழிநடத்துதலின்படி தலைவியைக் கூடிடத் தலைவன் விரும்புவான்.

தலைவியைச் சூழ ஒரு படைபோலக் கூட்டமாய்த் தோழியர் வருகின்றனர். அவர்களுள் யார் முதன்மையானவள் என்பதை எவ்வாறு அறிவது? தோழியர் கூட்டத்தை நன்கு கவனித்துப் பார்க்கிறான், தலைவன். அவர்களுள் ஒருத்தி எதைச் சொன்னாலும் தலைவி அதை ஏற்பதையும், அவள் செய்வதுபோலவே தலைவி செய்வதையும் கண்டு, அவள்தான் தலைவிக்கு உயிர்த்தோழி என்றறிகிறான்.

குறையிரத்தல்

அத்தோழியின் தோழமையைப் பெற்றாலன்றித் தலைவியின் நட்பைப் பெறுதல் அரிது என்றுணர்ந்தான், தலைவன். அவன், தான் தலைவி மீது கொண்டுள்ள காதலை அத்தோழியிடம் தெரிவிப்பான். தலைவியைத் தனியே சந்திக்க இயலாதிருப்பதைக் கூறி, அக் குறையை நீக்கித் தான் தலைவியை அடையத் துணை நிற்குமாறு மிகவும் இரங்கிக் கேட்பான். இது ‘குறையிரத்தல்’ எனப்படும்.

தோழியும் தலைவியும் ஒருங்கே இருக்கும்போது சென்று, வெளிப் படையாகவோ குறிப்பாகவோ தன் நிலையைத் தலைவன் நயமாய்ப் புலப்படுத்துவான். முதலில் தோழி தலைவனுக்குத் துணை நிற்க மறுப்பாள்.

மதியுடம்பாடு

தலைவன் தன்னிடம் கூறியவற்றையும், தலைவியின் செயல்களையும் தனித்தனியாகவும், சேர்த்தும் ஆராய்ந்து, அவர்கள் இருவரும் ஒரே வகையான இன்பதுன்பங்களைக் கொண்டிருத்தலையும், இருவர் அறிவும் ஒன்றாய் இருத்தலையும் தோழி உணர்ந்தறிவாள். தலைவன் தலைவியர் உணர்வோடு தோழியின் உணர்வும் ஒத்துச்செல்லும் நிலை உண்டாதலை, 'மதியுடம்பாடு' என்பர்.

மதியுடம்பட்ட தோழி, தலைவியின் குறிப்பறிய முற்படுவாள். தலைவி, தான் ஒருவனைக் கண்டு காதலுற்றிருப்பதை நாண மிகுதியால் தோழியிடம் கூறமாட்டாள். தலைவி ஆயத்தோடு கூடாது தனித்திருத்தல், ஏதோ ஒன்றை நினைந்து வருந்தியிருத்தல் போன்ற நிகழ்வுகளால், அவள் காதலைத் தான் அறிந்திருந்தும் அறியாதவள் போலத் தலைவியிடம் மறைமுகமாய்க் கூறி, தலைவியின் நாணம் ஊறுபடாதவாறு, தோழி அவள் நெஞ்சக்கருத்தை அறிவாள்.

சேட்படை

தோழியைக் குறையிரந்து வரும் தலைவன், காணிக்கை (கையுறை)யாய் அரிய தழை, முத்து முதலியவற்றைக் கொண்டுவந்து அவற்றைத் தலைவியிடம் தந்து, அவளை எவ்வாறாயினும் தன்னுடன் கூட்டி வைத்திடுமாறு தோழியிடம் வேண்டுவான்.

'நாம் விரும்பியபடி இவள் எளிதிலே நமக்குக் கிடைக்கக் கூடியவள் அல்லள்' என்று கருதும் தலைவன், தழையும் கண்ணியும் கொண்டு வந்து தோழிக்குப் பின்னின்று குறையிரப்பான். அவன் உணரும்படியாகத் தோழி அவனைச் சேட்படுத்துவள் – அஃதாவது, தலைவனைத் தலைவியுடன் நெருக்கமாய்ப் பழக விடாது சற்று அகற்றி வைப்பாள் (சேட்படுத்தல் – அகற்றுதல்).

மடலேறுதல்

தலைவன் தலைவியரின் ஆழமான காதலை அறிந்த பின்னும் தோழி, அவர்கள் எளிதில் சந்திக்க இடமளிக்க மாட்டாள்; காதலன் அரிதின்

முயன்று ஆர்வத்தோடு கொண்டுவரும் கையுறையை ஏற்க மறுப்பாள்; பல்வேறு தடைகளை ஏற்படுத்துவாள். தலைவன் தலைவிமீது கொண்டுள்ள காதல் உறுதியானதுதானா என்பதை அறிவதற்கே இத்தகு செயல்களைத் தோழி செய்வதற்கான நோக்கமாகும்.

தோழி வேண்டுமென்றே தன் குறைக்குச் செவிசாய்க்காது காலங் கடத்துவதைக் காணும் தலைவன், தன் எண்ணம் ஈடேறுவதற்காகத் தான் மடலேற உறுதி பூண்டுள்ளதைத் தோழியிடம் தெரிவிப்பான்.

மடல் மா என்பது பனங்கருக்கினால் செய்யப்பட்ட குதிரையைக் குறிக்கும். தான் காதலித்த பெண்ணை எய்தப்பெறாதவன் தன் உடல் முழுவதிலும் திருநீற்றைப் பூசிக்கொண்டு, ஆவிரம் பூ மாலையை மார்பிலும், எருக்கம்பூ மாலையைத் தலையிலும் அணிந்துகொண்டு பனங்கருக்கால் செய்யப்பட்ட குதிரைமேல் ஏறிக்கொள்வான்; தான் விரும்பும் காதலியின் படத்தைத் துணியில் எழுதிக் கையில் பிடித்திருப்பான். அக்குதிரையைச் சிலர் வீதியில் இழுத்துச் செல்வர். இது மடலேறுதல் எனப்படும். இதனால் அவன் உறுதியான காதல் வெளிப்படும்; மேலும், அரம் போன்ற பனங்கருக்கு உடலினை அறுத்தலால் வெளிப்படும் குருதிப்பெருக்கும் இரக்கத்தை ஏற்படுத்தும். ஊரார், இவ்வளவு காதல் கொண்டுள்ளவனுக்கு மகளைக் கொடுக்க மறுக்கலாமா எனப் பெண்ணைப் பெற்றோரைக் குறை கூறுவர்; அவர்களை அணுகி, எடுத்துரைத்து, அவளை அவனுக்கு மணம் முடித்து வைப்பர். மடல் ஏறுவேன் என வாயளவில் சொல்லுவது ஐந்திணையின்பாற்படும்; சொன்னபடி மடலேறிக் காட்டுவது பெருந்திணையின்பாற்படும். சங்க இலக்கியங்களில் மடலேறுவதாய்ச் சொல்லும் நிலை மட்டுமே உள்ளது; மடல் ஏறியதாய்ப் பாடல் எதுவும் இல்லை.

மடலேறுவேன் என்று தலைவன் சொன்னதும், அவனது காதல் திட்பத்தினைக் கண்ட தோழி, அவனுக்குத் துணை செய்ய முற்படுவாள்.

குறியிடம்

தலைவன் தந்த கையுறையைத் தலைவியிடம் கொடுத்து, அவள் குறிப்பினை உணர்ந்துகொள்வாள், தோழி. தலைவன் குறையைத்

தலைவி நயக்கவே, அவ்விருவரும் ஒருவரை ஒருவர் சந்திப்பதற்கேற்ற வகையில் 'இன்ன இடத்திற்கு வந்தால் தலைவியைக் களவிற் கூடலாம்' என்று தோழி குறியிடங் கூறுவாள்.

தலைவியைத் தலைவன் பகலில் கூடுதற்கு ஓர் இடத்தை வரையறுத்துத் தோழி குறிப்பிடுவாள். இது 'பகற்குறி' எனப்படும்.

அடுக்காய் உள்ள மலைப்பக்கமாகவோ, அழகிய மலர்ச் சோலையாகவோ, காதலுணர்வை மிகுவிக்கும் இன்ன பிற இடங்களாகவோ பகற்குறி அமையும். அவ்விடங்கள் பலவகைப்பட்ட மரங்களால் பொலிவு பெற்றனவாயும், வெளியிலிருப்போர் உள்ளிருப்போரை எளிதில் காண்பதற்கு இயலாதனவாயும், ஆனால், உள்ளே இருப்போர் வெளியிலிருப்பவரை எளிதில் கண்டு கொள்ளத்தக்கனவாயும், ஆசைகளை விட்டொழித்தோரையும் ஆசை கொள்ளத் தூண்டும் தன்மையனவாயும் இருக்கும். பகலில் கூடுமிடம் வீட்டிற்குப் புறத்தே, தலைவி வழியறிந்து வரக்கூடியதாயும், அவளுக்குப் பழக்கமான இடமாயும் அமைந்திருக்கும்.

பகற்குறி நாடி வந்த தலைவன், அக்குறிக்கண் செல்ல இயலாதவாறு தடைகள் சில நேர்வதுமுண்டு. (பகற்குறி இடையீடு)

அந்நிலையில், தலைவன் விருப்பத்தை ஈடேற்றுதலை அறமாய்க் கருதும் தலைவி, அவன் விரும்பியவாறே இரவில் வந்து தன்னைச் சந்திப்பதற்கு வரையறுத்துரைக்குமிடம் 'இரவுக்குறி' எனப்படும். அவ்விடம் தலைவியின் இல்லத்து மதில் எல்லைக்குள் இருக்கும்; இல்லத்தவர் பேசும் பேச்சினை வெளியிலிருந்து கேட்குமளவிற்கு அண்மையில் அகமனைக்கும் புறமனைக்கும் நடுவே அமைந்திருக்கும். அது, தலைவியின் வீட்டு எல்லைக்கு உட்பட்டிருக்கும் செய்குன்று, இளமரக்கா, பூப்பந்தர், விளையாட்டிடம் போல்வனவற்றுள் ஏதேனும் ஒன்றாயிருக்கும். தலைவன், தான் இரவுக்குறியிடத்துக்கு வந்திருப்பதைத் தெரிவிக்க அங்குள்ள நீர்நிலையில் கல்லெறிந்து ஒலி எழுப்பல், மரங்களில் தங்கியிருக்கும் பறவைகளை எழுப்பிவிடல் போன்ற

அடையாளக்குறிகளைச் செய்வான். அவ்வொலி கேட்டுத் தலைவி அங்கு வந்து சேர்வாள்.

சில சமயம், தலைவன் செய்ய வேண்டிய குறி காற்றசைவு போன்றவற்றால் இயற்கையாய் நிகழ்ந்துவிடும். அதை அவன் செய்ததாய் எண்ணி வந்து தலைவி ஏமாந்து திரும்புவாள். பிறகு அங்கு வந்த தலைவன் குறி எழுப்ப, அதைக் கேட்கும் தலைவி, அது தலைவன் எழுப்பிய குறியன்று என்று கருதி வாராதிருப்பாள். அதனால் தலைவன் சந்திப்பு நேராமலே திரும்புவான். இஃது 'அல்ல குறிப்படுதல்' ஆகும்.

சிறைப்புறம்

ஒருவரை ஒருவர் கண்ணால் பார்க்க வாய்ப்பு இல்லாததாயும், ஆனால், ஒருவர் கூறியதை மற்றவர் காதால் கேட்கும் தொலைவில் உள்ளதாயும் இருக்கும் பகுதி 'சிறைப்புறம்' எனப்படும். அதை வீட்டருகே உள்ள ஓர் இடம்; பச்சை உயிர்வேலி எனலாம்.

தோழிக்கும் தலைவிக்கும் இடையே நிகழும் உரையாடல்களைத் தலைவன் மறைந்திருந்து கேட்டு அறிதற்கு வசதியாய் மனைக்குப் புறமாய்க் காவலாய் அமைக்கப்பட்டுள்ள வேலி அமைப்பினைச் சிறைப்புறம் எனலாம்.

இற்செறிப்பு

தலைவன் தலைவியரிடையே ஏற்பட்டுள்ள களவுறவை ஊரார் அறிந்து பழிச்சொல் கூற முற்படுவர். இப்பழிச்சொல் 'அலர்' எனப்படும். ஊரெங்கும் பழிச்சொல் ஏற்பட்டிடவே தலைவி வீட்டார் அவளை வீட்டை விட்டு எங்கும் வெளிச் செல்லாதவாறு வீட்டுக்காவலில் வைப்பர். இஃது 'இற்செறிப்பு' எனப்படும்.

தலைவியின் தோற்ற மாறுபாட்டைக் கண்டும், ஊரவர் குறிப்பாய்ப் பேசிக்கொள்வதைக் கேட்டும், விளையாடல் முதலியவற்றிற்குத் தன் இல்லத்தைவிட்டுத் தலைவி வெளியே செல்ல இயலாதவாறு செவிலி அவளை இல்லத்திற்குள்ளேயே தங்கச்செய்வாள்.

ஒருவழித்தணத்தல்

அலர் அடங்குமாறு தலைவன் தலைவியைக் காண வாராது, தன் ஊரிலேயே சில காலம் தங்கி இருப்பான். இதனை 'ஒருவழித்தணத்தல்' என்பர்.

வரைவு கடாயது

தலைவன் சிறைப்புறத்தானாயிருக்க, ஊரார் அலர் கூறுவதையோ, தலைவிக்கு இற்செறிப்பு ஏற்பட்டிருப்பதையோ, அயலவர் மணம் பேசி வருகின்றனர் என்பதை அறிவித்தோ, இனியும் களவொழுக்கம் நீட இடந்தரலாகாது என்றும், உடனே அவன் வரைவு மேற்கொள்ள வேண்டும் என்றும் தலைவியும் தோழியும் வற்புறுத்திக் கூறுவர். தலைவன் சிறைப்புறமிருக்க, தலைவியும் தோழியும் அவன் கேட்குமாறு தம்முள் பேசி, அவனை உடனடியாக வரைந்துகொள்ளவும் தூண்டுவர்.

வெறியாட்டு

தலைவனோடு களவொழுக்கம் மேற்கொண்டுள்ள தலைவி, அவன் பிரிவைப் பொறுக்க இயலாது உடல் மெலிவாள். தன் மகளின் உடல், நாள்தோறும் மெலிவதற்கான காரணத்தை அறியாது அவள் தாய் கலங்குவாள். உடல் மெலிவு முருகனால் ஏற்பட்டது என நம்பி, செவிலி முருக பூசை செய்ய முனைவாள். முருக பூசை செய்வதற்குரிய பூசாரி, வேலன் எனப்படுவான். அவன் முருகனைக் கூவி அழைத்தும், வெறி யாட்டுக் கூத்தாடியும், கழற்சிக்காயிட்டும் தலைவியின் நோய்க்குக் காரணம் முருகனே என்பான்.

தெய்வம் மக்கள்மீது ஏறி ஆடுவதை 'வெறியாட்டு' என்பர். வெறியாடுபவன் தன் கையில் வேலைத் தாங்கி ஆடுவான். ஆதலின், இவன் வேலன் என்று வழங்கப்பட்டான்.

வெறியாடும் இடத்தில் பல்வகை மலர்களையும் பரப்பி, அழகுறச் செய்து முருகனை வழிபட்டு வேலன் வெறியாட்டயர்வான். அவ் விடத்தை 'வெறியாடு களம்' என்பர். அங்கு வேலன், ஆட்டுக்குட்டியை வெட்டிப் பலி கொடுத்துப் பூசை செய்வான்.

கட்டுவிச்சியை அழைத்து மகளின் நோய்க்குக் காரணம் யாது என வினவுவதும் உண்டு. முறத்தில் நெற்களைப் பரப்பி, எண்ணிக் குறி சொல்வது கட்டுவிச்சியின் வழக்கம்.

அறத்தொடு நிற்றல்

வெறியாட்டு நடத்தச் செவிலி முற்படும்போது தலைவி தோழியிடம், தன் காதலைத் தக்கவாறு செவிலியிடம் கூறி வெறியாட்டினை நிறுத்துமாறு வேண்டுவாள். இஃது 'அறத்தொடு நிற்றல்' எனப்படும்.

செவிலித்தாய் தோழியிடம் 'தலைவிக்கு இவ்வேறுபாடு எதனால் ஏற்பட்டது?' என்று கேட்பாள். தோழி மிக்க கவனத்தோடும் விழிப்போடும், எவர்க்கும் கெடுதியும் துன்பமும் நேராதபடி செவிலியிடம் உரைப்பாள். கற்பு அழியாதவாறு, தலைவி தலைவனொடு ஒழுகிவந்த களவொழுக்கத்தைப்பற்றிச் செவிலியிடம் வெளிப் படுத்துவாள். இது, 'தோழி செவிலிக்கு அறத்தொடு நிற்றல்' எனப்படும். தலைவி தோழியிடமும், தோழி, தன் தாயாகிய செவிலியிடமும் அறத்தொடு நிற்பர். செவிலி, தன் தோழியும், தலைவியைப் பெற்றெடுத்தவளுமாய நற்றாய்க்கு அறத்தொடு நிற்பாள். நற்றாய் தலைவியின் தமையன்மார்க்கும் தந்தைக்கும் அறத்தொடு நிற்பாள். தலைவியின் ஆழ்ந்த காதலை அறிந்த அவள் பெற்றோர் திருமணத் திற்கு உடன்படுவர்.

வரைவிடைப்பிரிவு

அறத்தொடு நின்ற நிலையில், பெற்றோர் வரைவுக்கு உடன்படு வராயின், மகட்கொடையாகவும் மண நிகழ்வுக்காகவும் தலைவியைப் பெற்றோர்க்குத் தலைவன் பொருள் தரவேண்டும். இவ்வாறு அளிக்கப்படும் பொருள், மகட்கொடை, முலை விலை என்னும் பெயர்களால் வழங்கப்படும். இப்பொருளைத் தேடி வரத் தலைவன் தலைவியைப் பிரிந்து செல்வான். இது 'வரைவிடைப்பிரிவு' எனப்படும். வரைவிடைப்பிரிவால், தலைவி ஆற்றாது வருந்தத் தோழி அவளைத் தேற்றுவிப்பாள்.

தலைவன் வரைபொருட்காகப் பிரிந்து சென்று, பொருள் திரட்டி மீண்டதும் தன் சுற்றத்தவர்களை முற்கொண்டு, தலைவியில்லம் போந்து, பெண் தருமாறு வேண்டுவான்; சுற்றத்தவர் அல்லாமல் அறநிலை சான்ற வேறு சான்றோர்களை முற்கொண்டும் பெண் தருமாறு வேண்டுதலுமுண்டு; பின்னர், முறைப்படி திருமணம் நிறைவேறும். (வதுவை அயர்தல்)

உடன்போக்கு

பெற்றோர் சிலர் தம் மகளின் களவொழுக்கத்தை அறியாத நிலையிலும் அறிந்த நிலையிலும் தலைவியை வீட்டை விட்டு வெளிப் போகாதவாறு வீட்டினுள் வைத்துக் காத்து வருவர். அந்நிலையில் தலைவியின் வருத்த மிகுதியைக் காணும் தோழி, தலைவி, தலைவன் ஆகிய இருவர் ஒப்புதலையும் பெற்று, எவருமறியாதவாறு தலைவியைத் தலைவனுடன் அவன் ஊர் செல்ல அனுப்பி வைப்பாள். அவ்வாறு தலைவனுடன் தலைவி செல்லுதல் 'உடன்போக்கு' என்றும், 'கொண்டுதலைக் கழிதல்' என்றும் வழங்கப்பெறும். ஏதமிக்க காட்டு வழியில் தன்னுடன் வரும் தலைவிக்குத் துன்பம் எதுவும் தோன்றா வண்ணம் தலைவன் அவளிடம் இன்மொழி பேசியும் நற்செயல்களைச் செய்தும் அழைத்துச் செல்வான்.

உடன்போகும் காதலர்களை வழியிடையே காண்பவர் அவர்கட்கு ஆதரவாய் இருப்பர். 'பொழுது சென்று இருள் வந்தது; வழி துன்பமானது. இந்நேரத்தில் தனியே செல்லுதல் தகாது. இரவு எம்மூரில் தங்கிச் செல்லுங்கள்' என்று அன்போடு வேண்டுவர்.

தலைவி தம் வீட்டை விட்டு வெளியே சென்றதை அறிந்த நற்றாயும் செவிலியும் மிகவும் வருந்துவர். 'காதலனிடம் மகள் கொண்ட அன்பு இவ்வளவினது என யாம் அறிந்திருந்தால் எம் வீட்டிலேயே திருமணத்தை முடித்து வைத்திருப்போமே' என்பர். உடன்போக்குச் சென்ற மகளைச் செவிலித்தாய் தேடியும் செல்வாள். அவளை எதிர்ப் படும் ஆன்றோர், அவள் நிலை கண்டு இரங்கி, "உன் மகள் அறவழி

யினையே மேற்கொண்டுள்ளாள். அவளைத் தடுக்க வேண்டா; அவளை அவள்வழிச் செல்ல விடுங்கள்" என ஆறுதல் கூறி அனுப்பி வைப்பர்.

தலைவன் தலைவியைத் தன்னூர் அழைத்துச் சென்றதும் அங்கு அவளை மணந்துகொள்வான். களவொழுக்கத்தைத் தலைவியைப் பெற்றோர் ஏற்றனரென்றால் திருமணம் அவர்கள் வீட்டிலும், அவ்வாறன்றித் தலைவனுடன் தலைவி உடன்போக்கில் சென்றால் திருமணம் தலைவன் இல்லத்திலும் நடைபெறும். திருமணம் எங்கு நடைபெற்றாலும் திருமணத்திற்குப் பின்பு இருவீட்டாரும் ஒன்று பட்டிருப்பர்.

மங்கல மனையறம்

திருமணத்தின் பயனாய்த் தலைவன் தலைவியர் இல்வாழ்க்கை யினை மேற்கொள்ளத் தலைப்படுவர். இல்வாழ்க்கை மேற்கொள்ளும் தலைவனுக்குத் தன்னைச் சார்ந்த மனைவி, மக்கள், பெற்றோர், உற்றார், ஏனை உறவின் முறையினர், ஆன்றோர், விருந்தினர் ஆகியோரை உண்டி, உடை, உறையுள் முதலியவற்றால் பாதுகாக்கும் கடமையும், இவையொழிய இன்னும் ஏனையவாயமைந்துள்ள இல்வாழ்க்கைக் கடமைகளும் உண்டாகின்றன. அவ்வெல்லாக் கடமைகளையும் முறைப்படி அவ்வக் காலங்களில் செய்வதற்குப் பொருள் இன்றியமையாததாகும்.

பொருள்வயிற் பிரிவு

தலைவன் திருமணம் செய்துகொள்ளுதற்கு முன் வரைதற் பொருட்டுப் பொருள் தேடியது, திருமணக் கடமைகளுக்காக மட்டுமே. திருமணத்திற்குப் பின்னர்த் தனது இல்வாழ்க்கைக்குரிய கடமைகளை நிறைவேற்றும்பொருட்டும் பொருளைத் தேட வேண்டியவனாகிறான்.

முன்னோர் தேடிய பொருள் தன்னிடம் மிகுதியாய் இருக்குமாயினும் தலைவன் தன் முயற்சியால் பெற்ற பொருள் கொண்டு இல்வாழ்க்கை யினை நடத்துவதையே பெருமையாகவும் சிறப்பாகவும் கருதுவான்.

பொருள் தேடி வரச் செல்லக் கருதும் தலைவன், தலைவி தன் பிரிவை ஆற்றியிராள் என்பதுணர்ந்து சில காலம் பயணத்தைத் தவிர்ப்பான். பின்னர்த் தோழியிடம் கூறித் தலைவியிடம் தன் பிரிவை அறிவிக்கச் சொல்வான். முதலில் தோழியே செலவினை மறுப்பாள்; நீண்ட பிரிவாய் இருக்குமென்பதால் தலைவியும் ஒருப்படாள்; ஆயினும், அறங்கருதித் தலைவி இசைவாள். நாடுகளை நீங்கியும் காடுகளைக் கடந்தும் தொலைவில் சென்று, பொருளீட்ட வேண்டும். இச்செயலைச் செய்து முடிக்க வேனிற்காலமே ஏற்றதாகும். வேனிற்பருவத்தே பிரிந்து செல்லும் தலைவன் கார்காலத் தொடக்கத்தில் திரும்பி வருவதாய்க் கூறிச் செல்வான்.

தலைவன் சென்றதும் தலைவி துயர் தாளாது மிகவும் வருந்தி யிருப்பாள்; தோழி அவளை ஆற்றுவிப்பாள். தான் புறப்படும்போது சொல்லிச் சென்றவண்ணம் கார்காலத் தொடக்கத்தே தலைவன் வாராதிருப்பின் தலைவியின் துயரம் மிகுதியாகும். கார்காலத்திற்குரிய அறிகுறிகள் தென்பட்டாலும் அவை கார்காலத்திற்குரியவை அன்று என்று கூறித் தலைவியைத் தோழி தேற்றுவிப்பாள்.

பொருள் தேடப் பிரிந்த தலைவனும், தலைவியைப் பிரிந்திருக்க இயலாதவனாய்த் தவிப்பான்; இடைவழியிலேயே திரும்பிவிடலாமா என்றுகூட எண்ணுவான்; ஆயினும், கடமையில் கருத்தூன்றி, பொருள் தேடி முடித்த பின்னரே திரும்புவான். திரும்புங்கால், விரைந்து சென்று தலைவியை அடைய வேண்டும் என்னும் வேட்கையில் தேரினை விரைவாய்ச் செலுத்துமாறு பாகனிடம் கூறுவான். அவ்வாறே பாகனும் செலுத்தத் தலைவன் தன் இல்லமடைந்து தலைவியைக் கூடி மகிழ்ந்து இனிதே நல்வாழ்க்கை நடத்துவான். இனிய மக்கட்பேறும் வாய்க்க அவர்கள் இல்லறம் மேலும் சிறப்புறும். காதலர் அன்புடையராய், விருந்தோம்பி, நடுவுநிலைமை மேற்கொண்டு, ஒப்புரவறிந்து, ஈகை மேற்கொண்டு புகழ் வாழ்வு வாழ்வர்.

தலைவன் பொருள் தேடுவதற்காக மட்டுமன்றி, உயர்கல்வி கற்பதற்காகவும், அரசனுக்காகப் போர்மேற்செல்வதற்காகவும் பிரிந்து செல்வதுண்டு.

களவுக்காலத்தில் ஒருவழித்தணத்தல், வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிதல் எனத் தலைவன் பிரியும் நிலைகள் உண்டு.

கற்புக்காலத்தில் ஓதல், காவல், தூது, பொருள் தேடல், வேந்தற்கு உற்றுழி உதவல் முதலியன கருதித் தலைவியை விடுத்துப் பிரிதல் உண்டு.

தலைவன் பிரிந்திருக்கும் காலங்களில் தோழி தலைவியைத் தேற்றுவித்துத் துணை நிற்பாள்.

பரத்தையிற்பிரிவு

இல்லற வாழ்வில் தலைவனோடு தொடர்பு கொள்வதைத் தன் வாழ்க்கைநெறியாய்க் கொண்டிருப்பவள் மனைவி. அவ்வாறு அல்லாது ஆடவர் பலரோடு தொடர்பு கொள்ள விரும்பும் மகளிர் பரத்தையர் எனப்படுவர். இவர்கள் திருமணம் என்னும் வரையறைக்கு உட்பட்டவர் அல்லர். தம்மை நாடி வருபவர்க்கு இன்பமளிப்பதே இவர் தொழில். அதனால் இவரை, 'வரைவின் மகளிர்', 'பொருள்விலைப் பெண்டிர்' என்றும் கூறுவர்.

தலைவன் தலைவியைப் பிரிந்து சென்று, பரத்தையர் இல்லத்தில் தங்கி இன்பம் பெறுவதுண்டு.

தலைவன் தன்னைப் பிரிந்து பரத்தையிடம் சென்றதால் தலைவி வெகுண்டு ஊடியிருப்பாள். தலைவனது இல்வாழ்க்கையில் நிகழும் ஊடல் முதலியவற்றைப் போக்கும் வழிகளாய் இருப்பவர் 'வாயில்கள்' எனப்படுவர்.

பரத்தையிற்பிரிவுக்குப்பின் தன் இல்லத்திற்கு வரும் தலைவன், ஊடிய தலைவியை நேர்விக்கத் தோழியை வாயிலாக வேண்டுவான். வாயிலாக வந்தவர்க்கு முகங்கொடுக்க மறுத்தல் 'வாயில்' மறுத்தலாம். தோழியே தலைவனைக் கண்டித்து வாயில் மறுப்பாள். பாணன், விறலியர் முதலியோரையும் தலைவன் வாயிலாக அனுப்புவதுண்டு. தோழியும் தலைவியும் அவர்களைக் கடிந்து திருப்புவர்.

தலைவன் பல முறை பணிந்து வேண்டியதால், தோழி மனமிரங்கித் தலைவியிடம் உரையாடி, தலைவனை ஏற்று ஊடல் தணியுமாறு செய்து வாயில் நேர்விப்பாள்.

வாயிலை ஏற்று, தலைவனுக்கு இடங்கொடுத்து அவனைத் தலைவி சேர்த்துக்கொள்வாள். ஊடலும் கூடலுமாய் அவர்கள் வாழ்க்கை இன்பமாய் அமையும்.

வாழ்க்கை, காதல் ஒழுக்கத்தால் அமைவது. தமிழ் மக்களின் காதல் வாழ்க்கை களவு, கற்பு என இரு வகைப்படும். தலைவன், தலைவியைக் கண்டு காதல் கொண்டது முதல் அவளைத் திருமணம் செய்து கொள்ளும்வரை உள்ள பகுதி களவு எனப்படும். இது களவியல், களவு நெறி, களவொழுக்கம் என்றும் வழங்கப்பெறும்.

திருமணம் முடிந்த பின் தொடங்கும் இல்லற வாழ்க்கை, கற்பொழுக்கம் என்று வழங்கப்படும்.

நாகரிகத்தில் மேம்பட்டிருந்த பண்டைக் காலத்தில் தமிழர் மேற்கொண்டிருந்த இனிய இல்லற நெறிகளே களவும் கற்புமாகும்.

பொருள்வயிற்பிரிவு – 1

தொகுதி 8

பக்கம் 1 முதல் 416 வரை

பொருள்வயிற்பிரிவு

திருமணமாகித் தலைவன் தலைவி இல்லறம் நடத்தும்போது, இல்லறக் கடமைகளைச் செய்வதற்காகத் தலைவன் பிரிவதுண்டு. முன்னையோர் ஈட்டிய செல்வம் பெருமளவில் இருந்தபோதும், தான் ஈட்டிய செல்வத்தைக் கொண்டே விருந்தோம்பல் போன்ற இல்லறக் கடமைகளைச் செய்வது பண்டைய தமிழர் களின் பண்பாடு.

தலைவன் தலைவியைப் பிரிந்து, காடு மலை கடந்து தொலைநாடுகளுக்குச் சென்று இல்லறக் கடமை களுக்கான பொருள் ஈட்டிவருதல், 'பொருள்வயிற் பிரிதல்' எனப்படுகிறது.

தலைவன் செலவழுங்கியது.

(செலவழுங்குதல் - பொருளீட்டி வருவதற்காக மேற்கொண்ட பயணத்தை நிறுத்தியது.)

தலைவன் கூற்று

நற்றிணை 52 **பாலத்தனார்**

திணை : பாலை

கூற்று

தலைமகன் செலவழுங்கியது.

கூற்று விளக்கம்

பொருளீட்டுவதற்காகத் தலைவியைப் பிரிந்து செல்ல முற்பட்டான், தலைவன்; ஆனால், தலைவியைப் பிரிய இயலாமையைத் தன் நெஞ்சத்திடம் கூறிச் செல்லுதலைத் தவிர்த்தான்.

மாக்கொடி அதிரல் பூவொடு பாதிரித்
தூத்தகட்டு எதிர்மலர் வேய்ந்த கூந்தல்
மணம்கமழ் நாற்றம் மரீஇ, யாம்இவள்
சுணங்குஅணி ஆகம் அடைய முயங்கி,
வீங்குஉவர்க் கவவின் நீங்கல் செல்லேம்;
நீயே, ஆள்வினை சிறப்ப எண்ணி, நாளும்
பிரிந்துறை வாழ்க்கை புரிந்துஅமை யலையே;
அன்புஇலை; வாழிஎன் நெஞ்சே! வெம்போர்
மழவர் பெருமகன் மாவண் ஓரி
கைவளம் இயைவது ஆயினும்,
ஐதுஏகு அம்ம இயைந்துசெய் பொருளே.

தெளிவுரை

நெஞ்சே! கருமையான கொடியில் பூத்துள்ள காட்டுமல்லிகை மலருடன் தூய இதழினைக் கொண்ட பாதிரியின் புது மலரையும் சேர்த்துக் கட்டிய மணம் கமழும் மாலையைச் சூடிய கூந்தலைக் கொண்டவள், நம் தலைவி. அழகிய தேமல் விளங்கும் அவள் மார்பினைத் தழுவிக்கொள்வேன். இன்சுவை வாய்ந்த இத் தழுவலை விட்டுப் பிரியேன். நீயோ பொருள் ஈட்டும் முயற்சியில்

எண்ணம் கொண்டுள்ளாய். ஆதலால், தலைவியைப் பிரிந்து வாழ வேண்டிய நிலையை நீ எண்ணினாய் அல்லை. உனக்கு என்மீது அன்பு இல்லை. போர் ஆற்றல் மிகுந்த மழவர் தலைவனான ஓரி என்பவன் பெருவள்ளல். அவன் கையில் உள்ளதுபோலப் பேரளவாகிய செல்வம் எனக்குக் கிட்டு வதாயினும் அதனை விரும்பேன். (தலைவி தரும் இன்பத்தினும் செல்வம் சிறந்ததெனின் நீ செல்; நான் வரமாட்டேன்.)

கருத்து

காதலியை விட்டுப் பிரிவதால் பெரும் பொருளே கிட்டுமாயினும் அவளை விட்டுப் பிரிய மாட்டேன்.

குறிப்பு

தலைவன், தலைவியோடு இன்ப வாழ்வில் ஈடுபட்டுப் பொருள்வயிற்பிரிய மனமில்லாதிருப்பதாய்க் கூறிப் பிரிவினைத் தவிர்த்தான். ஆயினும், பின்னர்த் தலைவியைத் தேற்றிப் பொருளீட்டத் தலைவன் முனைந்தான். தன் பிரிவுக்கு வருந்திய தலைவியிடம் ஆறுதல் அளிக்கும் வகையில் கூறியது, இக்கூற்று.

சொற்பொருள்

1. மாக்கொடி - கருமையான கொடி; அதிரல் - காட்டுமல்லிகை.
2. தூ - தூய; தகடு - இதழ்; எதிர்மலர் - புதுமலர்; வேய்ந்த - சூடிய.
3. மரீஇ - பொருந்திய.
4. சுணங்கு - தேமல்; முயங்கி - தழுவி.
5. வீங்கு - மிக்க; உவர் - சுவை; கவவு - முயக்கம்.
6. ஆள்வினை - முயற்சி.
7. புரிந்து - விரும்பி; அமையலை - அமைந்துள்ளாய்.
8. வெம்போர் - கடுமையான போர்.
9. மழவர் - மழவர்குடி; பெருமகன் - தலைவன்; மாவண் - பெரிய வள்ளல் தன்மை; ஓரி - கடையெழு வள்ளல்களுள் ஒருவன்.
10. கைவளம் - கையில் உள்ள செல்வம்; இயைவது - எய்துவது.
11. ஐது - சிறிதேயாகும்; ஏகு - நீ மாத்திரம் செல்; இயைந்து - உன்னோடு சேர்ந்து; செய்பொருள் - ஈட்டக்கூடிய பொருள்.

தலைவன் கூற்று

நற்றிணை 16 **சிறைக்குடி ஆந்தையார்**

திணை : பாலை

கூற்று

பொருள்கடைக்கூட்டிய நெஞ்சினை நெருங்கித் தலைமகன் செலவழுங்கியது.

கூற்று விளக்கம்

பொருள் ஈட்டுவதற்காகப் பிரிய எண்ணிய தலைவன், தலைவியை விட்டு நீங்குதற்கு மனமின்றிப் பயண எண்ணத்தை விட்டுவிடுமாறு தன் நெஞ்சத்திடம் கூறியது.

புணரின் புணராது பொருளே; பொருள்வயின்
பிரியின் புணராது புணர்வே; ஆயிடைச்
செல்லினும், செல்லாய் ஆயினும், நல்லதற்கு
உரியை வாழிஎன் நெஞ்சே! பொருளே,
வாடாப் பூவின் பொய்கை நாப்பண்
ஓடுமீன் வழியின் கெடுவ, யானே,
விழுநீர் வியலகம் தூணி யாக
எழுமாண் அளக்கும் விழுநிதி பெறினும்,
கனங்குழைக்கு அமர்த்த சேயரி மழைக்கண்
அமர்ந்துஇனிது நோக்கமொடு செகுத்தனென்;
எனைய ஆகுக! வாழிய பொருளே!

தெளிவுரை

நெஞ்சமே! தலைவியைப் பிரியாது இல்லத்திலேயே தங்கியிருந்தால் செல்வம் நம்மை வந்து சேராது; பிரிந்து சென்றாலோ தலைவியோடு கூடி மகிழ்ந்திருக்கும் இன்பம் வாய்க்காது. ஆகவே, பொருள் தேடப் பிரிந்து செல்வது அல்லது பிரியாது தலைவியோடு இன்புற்றிருப்பது என்னும் இரண்டனுள் நல்லது எது என்பதைத் தேர்ந்தெடுக்கும் உரிமை உன்னிடந்தான் உள்ளது. (ஆனாலும் என் எண்ணம் யாது என அறிவாயா?) பொருட்செல்வமானது, வாடாத பூக்களைக் கொண்ட பொய்கையில் மீன் நீரைக் கிழித்துச் செல்வதால்

ஏற்படும் வழிபோல உடனே மறைந்துவிடும் இயல்பினைக் கொண்டது. கடல் சூழ்ந்த அகன்ற இந்நிலவுலகத்தையே அளக்கும் மரக்காலாய்க் கொண்டு ஏழு மரக்கால் பெருஞ் செல்வத்தைப் பெறுவதாய் இருந்தாலும் அதை விரும்ப மாட்டேன். ஏனெனில், கனமான காதணியுடைய தலைவியின், ஒன்றுக்கொன்று எதிர்ப்பட அமைந்த, செவ்வரி படர்ந்ததும், குளிர்ச்சி பொருந்தியதுமான கண்களின் இனிய பார்வை என்னைப் பொருள் தேடச் செல்லவிடாது தடுத்துவிட்டது. அதனால் நெஞ்சே! நான் உன்னோடு வரமாட்டேன். பொருள் எத்தன்மையது ஆயினும் ஆகட்டும்; அதனைப் போற்று வோரிடம் சென்று அது சேரட்டும்.

கருத்து

பொருளினும் காதலியோடு பெறும் இன்பமே பெரிதெனக் கருது கின்றேன். ஆதலின் நெஞ்சே! பொருள் தேடப் பிரியும் எண்ணத்தை விடு.

குறிப்பு

தலைவன் முதலில் இவ்வாறு எண்ணுவானாயினும் இல்லறத்திற்குப் பொருள் இன்றியமையாத தேவை என்பதைக் கருதி, தன் நெஞ்சைத் தேற்றித் தலைவியையும் தேற்றிப் பொருள்தேடப் புறப்படுவான்.

சொற்பொருள்

1. புணரின் - தலைவியோடு சேர்ந்திருந்தால்; பொருள் புணராது - பொருள் வந்து சேராது; பொருள்வயின் - பொருளைத் தேடிச் சென்றால்.
2. புணர்வு புணராது - தலைவியோடு கூடியிருக்கும் இன்பம் கிட்டாது; ஆயிடை - இவ்விரண்டிலும் கருத்தைச் செலுத்தி; நல்லதற்கு - நல்லது எது என்பதைத் தேர்ந்தெடுப்பதற்குள்ள.
4. உரியை - நெஞ்சே! உரிமை உன்னுடையதே.
5. நாப்பண் - நடுவில்.
6. ஓடுமீன் வழியின் - மீன் நீரைக் கிழித்து சென்ற வழியைப் போல; கெடுவ - உடனே அழியும்.
7. விழுநீர் - கடல் (சூழ்ந்த); வியலகம் - அகன்ற உலகம்; தூணி - அளக்கும் கருவி, மரக்கால்.
8. எழுமாண் - ஏழு தூணி; விழுநிதி - பெருஞ்செல்வம்.
9. அமர்த்த - வேறுபட்ட.

10. செகுத்தனென் - விட்டுவிட்டேன்.
11. எனைய ஆகுக - எத்தன்மையது ஆயினும் ஆகட்டும்.

தலைவன் கூற்று

அகநானூறு 199 **கல்லாடனார்**

திணை : பாலை

கூற்று

பொருள் கடைக்கூட்டிய நெஞ்சிற்குத் தலைமகன் சொல்லியது.

கூற்று விளக்கம்

பொருள் ஈட்டுவதே ஆடவர்க்குத் தக்கது என ஊக்கப்படுத்திய நெஞ்சத்தினிடம் தலைவியைப் பிரிந்தால் பெருஞ்செல்வம் கிட்டுமாயினும் அவ்வாறு பெற விரும்பேன் என்று தலைவன் கூறினான்.

கரைபாய் வெண்திரை கடுப்பப் பலவுடன்
நிரைகால் ஒற்றலின், கல்சேர்பு உதிரும்
வரைசேர் மராஅத்து ஊழ்மலர் பெயல்செத்து
உயங்கல் யானை நீர்நசைக்கு அலமரச்,
சிலம்பி வலந்த வறுஞ்சினை வற்றல்
அலங்கல் உலவை அரிநிழல் அசைஇத்
திரங்குமரல் கவ்விய கையறு தொகுநிலை
அரம்தின் ஊசித் திரள்நுதி அன்ன
திண்நிலை எயிற்ற செந்நாய் எடுத்தலின்
வளிமுனைப் பூளையின் ஒய்யென்று அலறிய
கெடுமான் இனநிரை தரீஇய, கலையே
கதிர்மாய் மாலை ஆண்குரல் விளிக்கும்
கடல்போல் கானம் பிற்பட, பிறர்போல்
செல்வேம் ஆயின்,எம் செலவுநன்று என்னும்
ஆசை உள்ளம் அசைவின்று துரப்ப
நீசெலற்கு உரியை நெஞ்சே! வேய்போல்
தடையின மன்னும் தண்ணிய திரண்ட

பெருந்தோள் அரிவை ஒழியக் குடாஅது
இரும்பொன் வாகைப் பெருந்துறைச் செருவில்
பொலம்பூண் நன்னன் பொருதுகளத்து ஒழிய
வலம்படு கொற்றம் தந்த வாய்வாள்
களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரல்
இழந்த நாடுதந் தன்ன
வளம்பெரிது பெறினும், வாரலென் யானே.

தெளிவுரை

“நெஞ்சே! பொருளீட்டுதற் பொருட்டுத் தலைவியைப் பிரிந்து செல்வது நல்லதே என அயலவர்போலப் பொருளாசையுற்று என்னைத் தூண்டி வற்புறுத்துகிறாய்.

நீரற்ற வறண்ட காட்டின் வழியே நாம் செல்ல நேரிடும். காற்று கடுமையாய் வீசுதலால் வெண்கடம்ப மரத்தின் மலர்கள் வெள்ளிய கடல் அலைபோலப் பாறையின்மீது உதிர்ந்து கிடக்கும். நீர் வேட்கையால் வருந்தும் யானை, அதை மழையென்று கருதி நீர் வேட்கையைத் தணிக்க, அப்பூக்களைச் சுற்றிச் சுற்றி ஓடும். இலையற்ற மரங்களின் கிளைகளில் சிலந்தி வலை பின்னியிருக்கும். காற்றால் அம்மரங்களின் கிளைகள் அசைவதால் கோடு கோடாய் உள்ள நிழலில் மான் கூட்டம் தங்கிக் காய்ந்த மரல்களைக் கடித்து கொண்டிருக்கும். அரத்தால் அராவப்பட்ட ஊசியின் திரண்ட முனையை ஒத்த உறுதி பொருந்திய பற்களைக் கொண்ட செந்நாய் ஒன்று தன் இரைக்காக அம்மான்களைத் தாக்கும். அதனால் அஞ்சிய மான் கூட்டம், காற்றடிக்கும்போது, ஒய்யென்ற ஓசையுடன் பறக்கும் பூளைப் பூவைப்போல, அலறி விரைந்து ஓடும். காணாதுபோன தன் இனமாகிய கூட்டத்தைக் கூட்டுவதற்கு, ஓர் ஆண்மான் மாலைக்காலத்தில் தன் குரலெடுத்து அழைக்கும். அத்தகைய காடு கடல்போலப் பரந்து கிடக்கும். அதைக் கடந்து செல்லும் துணிவு உனக்கு உண்டு.

ஆனால், மூங்கிலைப் போன்ற குளிர்ந்த தோளைக் கொண்ட தலைவியை இங்கே தனியே விட்டுவிட்டு வரமாட்டேன். களங்காய்க்கண்ணி நார்முடிச் சேரல் என்னும் சேர மன்னன்,

மேற்குத் திசையில் பொன் போன்ற பூக்களைக் கொண்ட வாகை மரம் நிறைந்த பெருந்துறை என்னும் இடத்தில் நன்னனோடு போர் செய்தான். நன்னன் இறந்து படவே, முன்பு அவனிடம் தான் இழந்த நாட்டைத் திரும்பப் பெற்றான். அந்நாட்டை ஒத்த பெருஞ்செல்வத்தைப் பெறலாம் என்றாலும் நான் உன்னுடன் வரமாட்டேன்" என்று தலைவன் தன் நெஞ்சத்தினை நோக்கிச் சொன்னான்.

கருத்து

களங்காய்க்கண்ணி நார்முடிச் சேரல் பெற்ற நாட்டைப் போன்ற பெறுதற்கரிய செல்வத்தைப் பெறலாம் என்றாலும், தலைவியைப் பிரிந்து பொருள் ஈட்டச் செல்ல மாட்டேன்.

விளக்கம்

"நெஞ்சே! பிறர்போல், தலைவியைப் பிரிந்து கானத்தைக் கடந்து சென்று பொருளீட்டி வருதல் நன்று என்னும் ஆசையை உண்டாக்கி என்னைப் பயணத்தில் செலுத்தத் தூண்டுகிறாய். நான், வாகைப் பெருந்துறைப் போர்க்களத்தில் நன்னன் இறந்ததால், நார்முடிச் சேரல் பெற்ற நாட்டைப் போல, பெரிய செல்வத்தைப் பெறலாம் என்றாலும் தலைவியைப் பிரிந்து வரமாட்டேன்" என்று தலைவன் தன் நெஞ்சை நோக்கிச் சொல்லுகிறான்.

குறிப்பு

'களங்காய்க்கண்ணி நார்முடிச் சேரல்' என்பவன் சேர மன்னருள் ஒருவன். அவனது நாட்டை அவன் அரசனாவதற்கு முன், 'கடம்பின் பெருவாயில்' என்னும் ஊரை ஆண்ட குறுநில மன்னனாகிய நன்னன் கவர்ந்துவிட்டான். அவனோடு நார்முடிச் சேரல், 'வாகைப் பறந்தலை' என்னுமிடத்தில் மீண்டும் போரிட்டு அவனைக் கொன்று, அவனது காவல்மரமாகிய வாகை மரத்தை வெட்டி வீழ்த்தித் தன் நாட்டை மீட்டான் என்பது வரலாறு.

சொற்பொருள்

1. **திரை - அலை.**
2. **நிரைகால் - வரிசையாய் வீசும் காற்று; ஒற்றலின் - மோதுதலின்; கல் சேர்பு உதிரும் - பாறையின்மேல் உதிரும்.**

3. மராஅம் - மரா மரம், வெண்கடம்பு மரம்; ஊழ்மலர் - முற்றிய மலர்; பெயல் - மழை; செத்து - கருதி, எண்ணி.
4. உயங்கல் - வருந்தும்; நீர் நசை - நீர் வேட்கை; அலமர - வருந்திச் சுழல.
5. சிலம்பி - சிலந்தி; வலந்த - பின்னிய.
6. அலங்கல் - அசைகின்ற; உலவை - மரம்; அரிநிழல் - இடைவிட்ட நிழல்; அசைஇ - தங்கி.
7. திரங்கு - வாடிய; மரல் - ஒரு வகைக் கற்றாழை; கையறு - செயலற்ற; தொகுநிலை - கூட்டம்.
8. அரம்தின் ஊசி - அரத்தால் அராவப்பட்ட ஊசி; திரள்நுதி - திரண்ட முனை.
9. திண்நிலை - உறுதி பொருந்திய; எடுத்தலின் - தாக்குதலின்.
10. வளிமுனை - காற்றின் முன்; பூளை - பூளைப் பூ; ஒய்யென்று - விரைந்து; அலறிய - அலறி ஓடிய.
11. கெடு - காணாதொழிந்த; தரீஇய - கூட்டுதற்கு; கலை - கலைமான்.
12. கதிர்மாய் - ஞாயிறு மறையும்; ஆண் குரல் - தனது ஆண் குரல் தோன்ற; விளிக்கும் - அழைக்கும்.
13. பிறர் போல் - ஏதிலரைப் போல்.
14. எம் செலவு நன்று - என் பயணம் நன்றாகும்; என்னும் - என்று கருதும்.
15. அசைவின்று - உள்ளம் தளர்வின்றி; துரப்ப - செலுத்த, ஊக்கப்படுத்த.
16. வேய் - மூங்கில்.
17. தடையின - வளைவினைக் கொண்டதாய்; மன்னும் - பொருந்தும்; தண்ணிய - குளிர்ந்த.
18. ஒழிய - தணித்திருப்ப; குடாஅது - மேற்கே.
19. இரும்பொன் வாகை - பெரிய பொன் போன்ற (பூக்களையுடைய) வாகை மரம்; பெருந்துறைச் செருவில் - பெருந்துறை என்னுமிடத்தில் நடந்த போரில்.
20. பொலம் பூண் - பொற்பூண் (அணிந்த); நன்னன் - நன்னன் என்னும் மன்னன்; களத்து - போர்க்களத்தில்; ஒழிய - அழிய.
21. கொற்றம் தந்த - வெற்றியினைத் தந்த; வாய் வாள் - கூரிய வாள்.
23. தந்தன்ன - பெற்றதால் ஒத்த.
24. வளம் பெரிது - பெரிய செல்வம்; வாரலென் - வரமாட்டேன்.

தலைவன் கூற்று

அகநானூறு 149 **எருக்காட்டூர்த் தாயங்கண்ணனார்**

திணை : பாலை

கூற்று

தலைமகன் தன் நெஞ்சிற்குச் சொல்லிச் செலவு அழுங்கியது.

கூற்று விளக்கம்

பொருள் தேடி வரவேண்டும் என்னும் ஆர்வம் தன் நெஞ்சிலே எழ, முன் தான் அவ்வாறு பிரிந்த காலத்தில், தலைவி அடைந்த வேதனையை மறவாத தலைவன், 'வாரேன்' எனத் தன் நெஞ்சத்தினிடம் கூறிச் செலவைத் தவிர்த்தான்.

சிறுபுன் சிதலை சேண்முயன்று எடுத்த
நெடுஞ்செம் புற்றத்து ஒடுங்குஇரை முனையின்,
புல்அரை இருப்பைத் தொள்ளை வான்பூப்
பெருங்கை எண்கின் இருங்கிளை கவரும்
அத்தம் நீள்இடைப் போகி, நன்றும்
அரிதுசெய் விழுப்பொருள் எளிதினின் பெறினும்,
வாரேன் – வாழி,என் நெஞ்சே! சேரலர்
சுள்ளிஅம் பேரியாற்று வெண்நுரை கலங்க,
யவனர் தந்த வினைமாண் நன்கலம்
பொன்னொடு வந்து கறியொடு பெயரும்
வளம்கெழு முசிறி ஆர்ப்புஎழ வளைஇ,
அருஞ்சமம் கடந்து படிமம் வவ்விய
நெடுநல் யானை அடுபோர்ச் செழியன்
கொடிநுடங்கு மறுகின் கூடல் குடாஅது,
பல்பொறி மஞ்ஞை வெல்கொடி உயரிய,
ஓடியா விழவின், நெடியோன் குன்றத்து,
வண்டுபட நீடிய குண்டுசுனை நீலத்து
எதிர்மலர்ப் பிணையல் அன்னஇவள்
அரிமதர் மழைக்கண் தெண்பனி கொளவே.

தெளிவுரை

"என் நெஞ்சமே! வாழ்க! சேர மன்னர்களுக்குரிய முசிறி என்னும் துறைமுகத்தில் சுள்ளி, பேரியாறு என்னும் ஆறுகளின் வெள்ளிய நுரை சிதற, தொழில் மாட்சிமைப்பட்ட யவனர்களின் மரக்கலங்கள் பொன்னை இறக்குமதி செய்து, மிளகுகளை ஏற்றிக்கொண்டு திரும்பும். வளமிக்க அம்முசிறியை ஆரவாரம் மிக வளைத்து, அரிய போரிட்டு வென்று, அங்கிருந்த பொற்பாவையினைக் (குவியலைக்) கவர்ந்து சென்றான், பாண்டிய மன்னன் ஒருவன். கொடிகள் அசையும் தெருக்களைக் கொண்ட கூடல் மாநகரம், அப்பாண்டியனின் தலைநகரம். அந்நகருக்கு மேற்கில் உள்ளது, திருப்பரங்குன்றம். அங்கு வெற்றி தரும் மயில் கொடியைக் கொண்ட முருகன் கோவில் உள்ளது. அங்குத் திருவிழாக்கள் நடைபெற்ற வண்ணம் இருக்கும். அம் மலையில் உள்ள நீண்ட ஆழமான சுனையில், எதிரெதிர் இருப்பன போன்று நீல மலர்கள் பூத்திருக்கும். அவற்றில் வண்டுகள் மொய்த்திருக்கும். அம்மலர்களைப் போன்ற, செவ்வரி படர்ந்து, வளமான, குளிர்ச்சி பொருந்திய பார்வையினைக் கொண்ட கண்கள் அழகு கெடுமாறு நான் பிரிய மாட்டேன்.

கரையான் நீண்ட காலமாய் முயன்று அமைத்த உயர்ந்த சிவந்த புற்றில் சேர்த்து வைத்திருக்கும் புற்றாஞ்சோற்றை இரை தேடிப் புறப்பட்ட பெரிய கையினைக் கொண்ட கரடிக்கூட்டம் உண்ண விரும்பாவிடில், பொலிவற்ற அடிமரத்தைக் கொண்ட இருப்பையின் துளை பொருந்திய வெண்மையான பூக்களை உண்ணும். அத்தகைய நீண்ட பாலை நில வழியில் சென்று, அரிய முயற்சியால் பெறத்தக்க சிறந்த செல்வத்தை மிகுதியான அளவில் எளிதில் பெற இயலுமாயினும் (நெஞ்சமே!) உன்னுடன் வர மாட்டேன்" என்று தலைவன் தன் நெஞ்சிற்குச் சொல்வதுபோல் கூறுகிறான்.

கருத்து

நெடுந்தொலைவு சென்று, பெருமளவில் பொருள் ஈட்ட இயலுமாயினும், நெஞ்சமே! நான் தலைவியைப் பிரிந்து உன்னுடன் வர மாட்டேன்.

விளக்கம்

நெஞ்சே! கரடிக்கூட்டம் புற்றாஞ்சோற்றை வெறுத்தால் இருப்பைப்பூவைக் உண்ணும் காட்டுவழியில் போய் மிகவும் அரிதாய்ப் பெறக்கூடிய பொருளை எளிதாய்ப் பெறலாம் என்றாலும், திருப்பரங்குன்றத்துச் சுனையில் பூத்த இணை யொத்த இரு நீல மலர்கள் போன்ற இவள் குளிர்ந்த கண்கள் நீர் சிந்தும்படி இவளைப் பிரிந்து வரமாட்டேன்; நீ வாழ்க!

குறிப்பு

1. தலைவியைப் பிரிந்து சென்று பொருளீட்டி வரத் தலைவனின் மனம் விரும்பியது; சிறிது சிந்தித்த பின் பிரியும் எண்ணத்தை மாற்றிக் கொண்டான். தன்னைத் தன் நெஞ்சம் பொருளீட்ட அழைத்தது போலவும், அந்நெஞ்சத்தினிடம், 'நான் வாரேன்; நீ வேண்டுமானால் செல்' என்று மறுமொழி கூறுவதுபோலவும் தலைவன் கூறுகின்றான்.
2. சுள்ளி, பேரியாறு என்பன, சேர நாட்டுத் துறைமுகமான முசிறிக்கு அருகே கடலில் கலக்கும் ஆறுகளின் பெயர்கள்.
3. யவனர்கள் என்பார் எகிப்து, கிரேக்கம் முதலிய மேலைநாட்டினர். அந் நாளில் சேர நாட்டுடன் வாணிபத்தொடர்பு கொண்டிருந்த அவர்கள் பொன்னைத் தந்து, மிளகைப் பெற்றுச் சென்றனர்.

சொற்பொருள்

1. சிறுபுன் - சிறிய எளிய; சிதலை - கறையான்; சேண் - நீண்ட காலம்; எடுத்த - சேர்த்து வைத்த.
2. நெடும்செம் - உயர்ந்த சிவந்த; புற்றம் - புற்று; ஒடுங்கு இரை - உள்ளிருக்கும் (அடங்கியிருக்கும்) இரை; முனையின் - வெறுத்தால்.
3. புல் அரை - புல்லிய அடிமரம்; இருப்பை - ஒருவகை மரம்; தொள்ளை - துளையினைக் கொண்ட; வான் பூ - வெள்ளையான பூ.
4. எண்கு - கரடி; இருங்கிளை - பெரிய கூட்டம்.
5. அத்தம் - வழி; நீள்இடை - நீண்ட தொலைவு.
6. அரிதுசெய் - அரிதின் ஈட்டக்கூடிய; விழுப்பம் - பெருமை.
7. சேரலர் - சேர மன்னர்.
8. சுள்ளி, பேரியாறு - சேர நாட்டு ஆறுகள்.
9. யவனர் - எகிப்து, கிரேக்க நாட்டினர்; வினைமாண் - தொழில் மாட்சிமைப்பட்ட; கலம் - மரக்கலம் (படகு, கப்பல்).

10. கறி - மிளகு; பெயரும் - திரும்பும்.
11. முசிறி - சேரர் துறைமுகம்; ஆர்ப்பு - ஆரவாரம்; வளைஇ - வளைத்து.
12. சமம் - போர்; படிமம் - பொன் பாவை (பொற்குவியல்); வவ்வுதல் - கைப்பற்றிக்கொள்ளுதல்.
13. செழியன் - பாண்டிய மன்னன்.
14. நுடங்குதல் - அசைதல்; மறுகு - தெரு; கூடல் - மதுரை நகர்; குடா அது - மேற்கே.
15. மஞ்ஞை - மயில்.
16. ஒடியா - இடையறாது; நெடியோன் - முருகன்; குன்றம் - திருப்பரங்குன்றம்.
17. குண்டு - ஆழம்; நீலம் - நீல மலர்.
18. எதிர்மலர் - எதிரெதிராய் உள்ள மலர்கள்.
19. அரி - செவ்வரி படர்ந்த; மதர்ப்பு - அழகு, செழிப்பு; மழை - குளிர்ந்த; தெண் - தெளிந்த; பனி - நீர் (தெண்பனி - தெளிந்த கண்ணீர்).

தலைவன் கூற்று

நற்றிணை 137 **பெருங்கண்ணனார்**

திணை : பாலை

கூற்று

தலைமகன் செலவழுங்கியது.

கூற்று விளக்கம்

பொருள்வயிற்பிரிந்து செல்லக் கருதும் தலைவன் தன் நெஞ்சத்தினிடம், 'அரிய பாலை வழியில் செல்லக் கருதும் நீ, நம் காதலியைக் கைவிடக் கருதுகிறாய்; இவளைவிட அரியதொரு பொருளை நீ காட்டுவழியில் காண்பாய் போலும்; வாழியே நெஞ்சே!' என வருந்தி இகழ்ந்துரைத்துத் தன் செலவினை நிறுத்தினான்.

தண்ணிய கமழும் தாழ்இருங் கூந்தல்,
தடமென் பணைத்தோள், மடநல் லோள்வயின்,
பிரியச் சூழ்ந்தனை ஆயின், அரியதுஒன்று,
எய்தினை, வாழிய நெஞ்சே! செவ்வரை
அருவி ஆன்ற நீர்இல் நீள்இடை,

கயந்தலை மடப்பிடி உயங்குபசி களைஇயர்,
பெருங்களிறு தொலைத்த முடத்தாள் ஓமை
அருஞ்சுரம் செல்வோர்க்கு அல்குநிழல் ஆகும்
குன்ற வைப்பின் கானம்
சென்றுசேண் அகறல் வல்லிய நீயே!

தெளிவுரை

நீரில்லாத அருவியுடன் விளங்கும் செம்மையான மலையில் நீண்ட வழி: அவ்வழியில் மென்மையான தலையைக் கொண்ட இளைய பிடியானையின் பசியைப் போக்கப் பெரிய களிற்றி யானை ஓமை மரத்தை முரித்துத் தள்ளும். அவ்வாறு முரிந்து வளைந்த அடிப்பகுதிகளைக் கொண்ட மரம், அரிய பாலை நிலத்திலே செல்வார்க்கு நிழலாய் அமையும்; நெஞ்சே! இத்தகைய குன்றங்கள் இடைப்பட்டு விளங்கும் காட்டுப் பகுதியைக் கடந்து நெடுந்தொலைவு செல்ல நீ கருதியுள்ளாய். குளிர்ச்சி பொருந்திய மணம் கமழும் நீண்டு தாழ்ந்த கரிய கூந்தலையும், அகன்ற மென்மையான பருத்த தோளினையும், மடப்பத்தையும் கொண்டவள், நல்லோளாகிய நம் காதலி; அவளைக் கைவிட்டுப் பிரிய நீ கருதுகின்றனை. அஃது உண்மை யாயின் (நன்கு ஆராயின்) அடைவதற்கரியதும் இவளைவிடச் சிறந்ததுமானதொரு பொருளை நீ காட்டுவழியில் அடைந்து விட்டாய் போலும். அங்ஙனம் பெற்ற பொருளுடன் நீடு வாழ்க! நான் இவளை விடுத்து உன்னுடன் வரமாட்டேன். அங்ஙனம் பிரியும் வல்லமை உனக்கேயுள்ளது.

கருத்து

நெஞ்சே! நீ விரும்பும் பொருள் இவளைவிடச் சிறந்ததாகாது; ஆதலின், பொருள் தேடப் பிரிய வேண்டா.

உள்ளுறை

பெண்யானையின் துயரைப் போக்குதற்கு ஓமையை முரித்து உண்ணத் தருகின்ற ஆண்யானையின் பெருந்தன்மைபோல, நாமும் பெருந்தன்மை கொள்வதற்கு மாறாய், நாமே அவளுக்கு வருத்தத்தை உண்டாக்குவது பொருத்தமற்றது எனத் தலைவன்

கருதுகிறான்.

நீரற்ற அருவிபோலவும், நிழலற்ற கானம்போலவும் அவளும் தன் நலனிழந்து உயிர் கெடுவாள்.

சொற்பொருள்

1. தண் - குளிர்ச்சி; தாழ் - தொங்கும்; இரு - கரிய.
2. தட - அகன்ற; பணை - பருத்த; மடம் - இளமை; வயின் - இடம்.
3. சூழ்ந்தனை - கருதினை.
4. எய்தினை - அடைந்துவிட்டாய்; வரை - மலை.
5. ஆன்ற - அமைந்த; நீர்இல் - நீர் இல்லாத.
6. கயந்தலை - மென்மை கொண்ட தலை; உயங்குதல் - வருந்துதல்; களைஇயர் - களைவதற்காக.
7. தொலைத்த - முறித்த; முடம் - வளைவு; ஓமை - ஒருவகை மரம்.
8. அல்குதல் - தங்குதல்.
9. குன்ற வைப்பின் - குன்றுகளை இடையிடையே கொண்ட.
10. சேண் - நெடுந்தொலைவு; வல்லிய - வன்மையுள்ள.

தலைவன் கூற்று

குறுந்தொகை 71 — **கருவூர் ஓதஞானி**

திணை : பாலை

கூற்று

பொருள் கடைக்கூட்டிய நெஞ்சிற்குத் தலைமகன் சொல்லிச் செலவழுங்கியது. (கடைக்கூட்டிய - தேடிவரத் துணிந்த; செலவழுங்கியது - செல்லுதலைக் கைவிட்டது.)

கூற்று விளக்கம்

பொருள் தேடி வரப் புறப்பட விரும்பிய தலைவன், தலைவியைப் பிரிய இயலாது என்பதைத் தன் நெஞ்சத்திடம் சொல்லிப் பயணத்தைக் கைவிட்டான்.

மருந்தெனின் மருந்தே வைப்புஎனின் வைப்பே
அரும்பிய சுணங்கின் அம்பகட்டு இளமுலைப்
பெருந்தோள் நுணுகிய நுசுப்பின்
கல்கெழு கானவர் நல்குறு மகளே!

தெளிவுரை

தேமல் அரும்பிய அழகிய அகன்ற இளமார்பினையும், பெரிய தோளினையும், நுண்ணிதாய்ச் சிறுத்த இடையினையும் கொண்ட இவள், மலைகள் பொருந்திய காடுகளுக்குரியவரான கானவர் பெற்றுத் தந்த மகள். இவள் எனக்குக் காமநோயைத் தீர்க்கும் மருந்தாகவும் இருக்கிறாள்; தேடித் தொகுத்து வைக்கும் செல்வமாகவும் இருக்கிறாள். (நெஞ்சே! இவளை நான் எவ்வாறு பிரிவேன்?)

கருத்து

இவளைப் பிரிந்து சென்று பெறக்கூடிய செல்வம் இவள் தரும் இன்பத்தினும் பெரிதன்று.

விளக்கம்

இவளைப் பிரிந்து சென்றால் காமநோய் எனக்குத் துன்பம் தரும். அந்நோய்க்கு இவளேதான் மருந்து. (பிரியாதிருப்பின் நோயே இல்லை.) ஈட்டிவரச் செல்லும் பொருள், இன்பம் துய்க்கத்தான். அந்த இன்பமும் இவளே! எனவே, நான் இவளை விட்டு வேறு எந்தச் செல்வத்தைத் தேடிச் செல்வது? ஆதலால் நெஞ்சே! இப்போது நான் பிரிந்துபோக விரும்பவில்லை என்று தன் நெஞ்சத்தினிடம் கூறுகிறான்.

சொற்பொருள்

1. வைப்பு - தேடிச் சேமித்து வைக்கும் செல்வம்.
2. சுணங்கு - தேமல்; அம் - அழகிய; பகட்டு - அகன்ற.
3. நுணுகிய - நுண்ணிதாய; நுசுப்பு - இடை.
4. கல் கெழு - கற்கள் பொருந்திய; நல்குறு மகள் - பெற்றுத் தந்த மகள்.

தலைவன் கூற்று

நற்றிணை 205 — **இளநாகனார்**

திணை : பாலை

கூற்று

தலைமகன் தன் நெஞ்சிற்குச் சொல்லிச் செலவழுங்கியது.

கூற்று விளக்கம்

பொருளீட்டி வரத் தலைவியைப் பிரிய இயலாதவனாய்த் தலைவன் தன் நெஞ்சத்தினிடம், "நீ இவளைப் பிரிந்தால் இவளது அழகு, அப்பொழுதே நீங்கிவிடும்" என்று கூறித் தன் பிரிவைத் தவிர்த்தான்.

அருவி ஆர்க்கும் பெருவரை அடுக்கத்து,
ஆளி நன்மான், வேட்டுஎழு கோள்உகிர்ப்
பூம்பொறி உழுவை தொலைச்சிய, வைந்நுதி
ஏந்துவெண் கோட்டு, வயக்களிறு இழுக்கும்
துன்அருங் கானம் என்னாய், நீயே
குவளை உண்கண் இவள்ஈண்டு ஒழிய,
ஆள்வினைக்கு அகறி ஆயின், இன்றொடு
போயின்று கொல்லோ தானே படப்பைக்
கொடுமுள் ஈங்கை நெடுமா அம்தளிர்
நீர்மலி கதழ்பெயல் தலைஇய
ஆய்நிறம் புரையும்இவள் மாமைக் கவினே!

தெளிவுரை

நெஞ்சே! அருவிகள் ஒலிக்கின்ற பெரிய மலைப்பக்கத்தில் ஆளி என்னும் சிறந்த விலங்கு இரை தேட வேட்டைக்குச் சென்றது. அங்கே, கொல்லவல்ல நகங்களையும் அழகான கோடுகளையும் கொண்ட புலியை மிகவும் கூர்மையும் எடுப்பும் கொண்ட வெண்ணிறத் தந்தங்களைக் கொண்ட யானை ஒன்று கொன்றது. ஆளி, அந்த வலிமையான யானையைக் கொன்று தன் குகைக்கு இழுத்துச் சென்றது. நீ செல்ல நினைக்கும் காடு அத்தகைய புகுதற்கரிய கொடுமையானது என்பதை நீ கருதவில்லை.

மேலும் தலைவி, தோட்டப்புறத்துள்ள வளைவான முள்களைக் கொண்ட ஈங்கைச்செடியின் நீண்ட அழகிய தளிர் பெருமழையால் நனைந்தபோது தோன்றும் அழகிய நிறம் கொண்டவள். நீ இவளைப் பிரிவாயாயின், பிரிந்த அப் பொழுதே, மாந்தளிர் போன்ற இவள் அழகும் உடனே மறைந்து விடும். (ஆதலால், இவளைப் பிரிந்து செல்வதைத் தவிர்.)

கருத்து

'நீ பிரியின் தலைவியின் அழகு கெடும் ஆதலின் பிரிவைத் தவிர்' எனத் தன் நெஞ்சத்தினிடம் கூறுகிறான், தலைவன்.

விளக்கம்

'ஆளி வாழுகின்ற பெரிய மலைப்பக்கம்; அங்குப் புலியை ஆண்யானை குத்திக் கொல்லும்; அந்த யானையை ஆளி கொன்று அதனைத் தன் இரைக்காகக் குகைக்கு இழுத்துச் செல்லும். நீ செல்ல வேண்டிய வழி இத்தகைய கொடுமை யானது. மேலும், நீ தலைவியைப் பிரிந்து சென்றால், நீ பிரிந்த அக்கணமே அவளது அழகிய மாமை கவின் அழிந்து அவள் நலம் கெடும். ஆதலின், நீ அவளைப் பிரிய வேண்டா' என்று தலைவன் தன் நெஞ்சிற்குக் கூறித் தன் பயணத்தைத் தவிர்த்தான்.

குறிப்பு

தலைவனது கடமையுணர்வு, தான் பொருள் தேடத் தலைவியைப் பிரிந்து செல்ல வேண்டும் என்று அவனிடம் கூறுகிறது. காதலுணர்வோ, பொருள் தேடத் தான் பிரிந்து சென்றால் தலைவியின் அழகு அழியுமே என்று நினைத்து ஏங்குகிறது. கடமைக்கும் காதலுக்கும் இடையேயான போராட்டம் இது. காதல் தற்காலிகமாய் வெற்றி பெறுகிறது.

சொற்பொருள்

1. பெருவரை - பெரிய மலை; அடுக்கம் - மலைச்சாரல், பக்கமலை.
2. ஆளி நன்மான் - ஆளி என்னும் சிறந்த விலங்கு; வேட்டு எழு - வேட்டம் சென்று; கோள் - கொல்லுதலில் வல்ல; உகிர் - நகம்.
3. பூம்பொறி - அழகான கோடுகள்; உழுவை - புலி; தொலைச்சிய - கொன்ற; வைந்நுதி - கூரிய முனை.

4. ஏந்து வெண்கோடு - ஏந்தியுள்ள வெண் கொம்பு, தந்தம்; வயக்களிறு - வலிமையான ஆண்யானை; இழுக்கும் - இழுத்துச் செல்லும்.
5. துன்அரும் - புகுதற்கரிய; என்னாய் - என்று கருதாய்.
6. ஒழிய - தங்கியிருக்க.
7. அகறி ஆயின் - நீங்குவாய் என்றால்; இன்றொடு - நீ பிரிந்து செல்லும் இன்றிலிருந்தே.
8. போயின்று - போய்விடும்; படப்பை - தோட்டம்.
9. ஈங்கை - ஈங்கைச்செடி; நெடு - நீண்ட; மா - அழகிய.
10. நீர்மலி - நீர் நிறைந்த; கதழ் - விரைந்து; பெயல் - மழை; தலைஇய - நனைந்த போது.
11. ஆய் நிறம் - அழகிய (தளிரின்) நிறம்; புரையும் - போலும்; மாமைக் கவின் - மாமை நிறம்.

தலைவன் கூற்று

அகநானூறு 377 — **மாறோக்கத்துக் காமக்கணி நப்பாலத்தனார்**

திணை : பாலை

கூற்று

பொருள் கடைக்கூட்டிய நெஞ்சிற்குத் தலைமகன் சொல்லியது.

கூற்று விளக்கம்

பொருள் தேடக் கருதிய பொழுது தலைவியைப் பிரிந்திருக்க முடியாததை எண்ணித் தலைவன் தன் செலவைத் தவிர்த்தது.

கோடை நீடலின், வாடுபுலத்து உக்க
சிறுபுல் உணவு, நெறிபட மறுகி,
நுண்பல் எறும்பு கொண்டுஅளைச் செறித்த
வித்தா வல்சி, வீங்குசிலை, மறவர்
பல்ஊழ் புக்குப் பயன்நிரை கவர
கொழுங்குடி போகிய பெரும்பாழ் மன்றத்து,
நரைமூ தாளர் அதிர்தலை இறக்கி,
கவைமனத்து இருத்தும் வல்லுவனப்பு அழிய,
வரிநிறச் சிதலை அரித்தலின், புல்லென்று,

பெருநலம் சிதைந்த பேஎம்முதிர் பொதியில்,
இன்னா ஒருசிறைத் தங்கி, இன்நகைச்
சிறுமென் சாயல் பெருநலம் உள்ளி,
வம்பலர் ஆகியும் கழிப மன்ற –
நசைதர வந்தோர் இரந்தவை
இசைபடப் பெய்தல் ஆற்று வோரே.

தெளிவுரை

கோடை வெப்ப மிகுதியால் வறண்ட நிலத்தில் உதிர்ந்து கிடந்த புல்லரிசியை எறும்புகள் ஒழுங்கு வரிசையில் கொண்டு சென்று தம் புற்றில் சேர்க்கும். தாம் விதைத்து விளைவிக்காத அப்புல்லரிசி உணவை மறவர் எடுத்து உண்பர். அம்மறவர் ஊர்தோறும் சென்று பால்பசுக் கூட்டங்களைக் கவர்ந்து சென்றமையால் வளம்மிக்க ஊரில் இருந்த மக்கள் குடிபெயர்ந்து பிற இடங்களுக்குச் சென்று விட, ஊர் மன்றம் பாழ்பட்டுக் கிடந்தது.

அம்மன்றத்தில் உள்ள அம்பலத்தில், நரைத்த முடியினைக் கொண்ட முதியோர் முதுமை காரணமாய் நடுங்கும் தம் தலையைக் கவிழ்த்து, சூதாடும் இடத்தில் இருப்பர். அவ்விடத்தைக் கறையான்கள் அழித்தமையால் அவ்விடம் பொலிவழிந்து அழகு கெட்டுக் காணப்பட்டது. வறுமையால் பொருள் பெற வந்த இரவலர், இரந்து கேட்ட பொருள்களை அளித்துப் புகழ் பெறுவதன்பொருட்டுப் பொருள் தேடிச் செல்பவர், துன்பம் மிக்க இப்பாழ்மண்டபத்தின் ஒரு புறத்தே தங்கி, இனிய புன்முறுவலையும் மெல்லிய சாயலையும் உடையவரான தம் தலைவியரின் பேரழகை நினைப்பர்; பின்னர் அயலவர்போல மேலும் செல்வர்.

நெஞ்சே! நீயும் அவ்வாறு செல்லும் வல்லமையைப் பெற்றிருந்தால் சென்றிடு. எனக்கு அத்தகைய வல்லமை இல்லை.

கருத்து

நெஞ்சே! பேரழகும், இனிய முறுவலும், மென்மையான சாயலும் கொண்ட தலைவியைப் பிரிந்து செல்ல என்னால் இயலாது.

விளக்கம்

“நெஞ்சே! இல்லையென்று வந்து கேட்டவர்க்கு ஈந்து புகழ் உண்டாக வாழ விரும்புவோர், பொருள்தேடச் சென்று, வழியில் ஒரு பாழ்மன்றத்தில் துன்பம் தரும் ஒரு பக்கத்தில் தங்கித் தம் தலைவியரின் பேரழகை நினைத்து, பிறகு மனத்தைத் தேற்றிக் கொண்டு மேலும் செல்வர். இவ்வாறு செல்லும் வலிமை உனக்கு உண்டா? இல்லை.” - தலைவன் இவ்வாறு தன் நெஞ்சை நோக்கிச் சொல்லி, தான் பொருள் தேடச் செல்லுதலைத் தவிர்த்தான்.

சொற்பொருள்

1. நீடலின் - மிகுந்தமையால்; வாடுபுலம் - வறண்ட நிலம்; உக்க - உதிர்ந்த, சிந்திய.
2. புல் உணவு - புல் அரிசி; நெறிபட - ஒழுங்குபட, வரிசையாய்; மறுகி - சென்று.
3. அளை - வளை; செறித்த - தொகுத்து வைத்த.
4. வித்தா வல்சி - (தாம்) விதைத்து விளைவிக்காத உணவு; வீங்கு சிலை - பெருத்த வில்.
5. பல் ஊழ் - பல முறை; நிரை - ஆநிரை - பசுக்கூட்டம்.
6. கொழுங்குடி - வளமுற்றிருந்த குடி; பெரும்பாழ் - பெரிதும் பாழடைந்த.
7. மூதாளர் - முதியவர்; அதிர்தலை - நடுங்கும் தலை; இறக்கி - கவிழ்த்து.
8. வல்லு - சூதாடு கருவி, இங்குச் சூதாடும் இடத்தைக் குறித்தது. (நரை மூதாளர் பொது இடத்தில் சூதாடுவர்).
9. சிதலை - கறையான்; புல் என்று - பொலிவற்று.
10. நலம் - அழகு; பேஎம் - அச்சம்; முதிர் - மிக்க; பொதியில் - அம்பலம்.
11. இன்னா - இனிமை இல்லாத; ஒருசிறை - ஒரு பக்கம்.
12. பெருநலம் - பேரழகு; உள்ளி - நினைத்து.
13. வம்பலர் - புதியவர், அயலவர்; கழிப - நீங்குவர்.
14. நசைதர வந்தோர் - பொருள் வேண்டுமென்ற ஆசையால் வந்து கேட்டவர்; இரந்தவை - இரங்கிக் கேட்டதை.
15. இசை - புகழ்; பட - உண்டாகுமாறு; பெய்தல் ஆற்றுவோர் - கொடுக்க விரும்புபவர் (இயன்றவர்).

தலைவன் கூற்று

திணைமாலை நூற்றைம்பது 68 **கணிமேதாவியார்**

திணை : பாலை

கூற்று

பொருள் வலித்த நெஞ்சிற்குத் தலைமகன் சொல்லிச் செலவழுங்கியது.

கூற்று விளக்கம்

பொருள் தேடச் செல்ல வேண்டும் என்று விரும்பிய தன் மனத்திடம் தலைவன் சொல்லிச் செலவை நிறுத்தியது.

சென்றக்கால் செல்லும்வாய் என்னோ இருஞ்சுரத்து
நின்றக்கால் நீடி ஒளிவிடா – நின்ற
இழைக்கமர்ந்த ஏளர் இளமுலையாள் ஈடில்
குழைக்(கு)அமர்ந்த நோக்கின் குறிப்பு.

தெளிவுரை

'நெஞ்சே! தலைவி, அணிகலன்களுக்கு ஏற்ற அழகு பொருந்திய இளமையான மார்பகங்களைக் கொண்டவள். காதுவரை நீண்டிருக்கும் ஒப்பற்ற அவள் கண்களின் பார்வைத்தோற்றம், நீண்ட தொலைவு தொடர்ந்து நம் முன்னே வந்து ஒளிவிட்டு, நாம் செல்லும் வழியில் எதிர்ப்பட்டுத் தோன்றினால் நாம் இவளை நீங்கிப் போகும் எண்ணம் என்னவாகும்?' என்று வினவித் தலைவன் தன் பயணத்தை நிறுத்திக்கொண்டான்.

கருத்து

'தலைவியின் பார்வைக் குறிப்பு நாம் செல்லும் வழியில் நம் கண் எதிரில் தோன்றின், நாம் பயணம் மேற்கொள்ள இயலாது' என்று கூறித் தலைவன் செலவினைத் தவிர்த்தான்.

சொற்பொருள்

1. சென்றக்கால் - (பொருளைத் தேட இவளைப்) பிரிந்து செல்லும் பொழுது; செல்லும்வாய் - செல்லும் வகை; என்னோ - என்ன ஆகுமோ? இரும்சுரத்து - பெரிய பாலை நில வழியில்.

2. நின்றக்கால் - எதிர்ப்பட்டுத் தோன்றினால்; நீடி - நெடுந்தொலைவு தொடர்ந்து (நம் முன்னே வந்து); ஒளிவிடா - ஒளிவிட்டு; நின்ற - நிலை பெற்ற.
3. இழைக்கு - அணிகலனுக்கு; அமர்ந்த - தக்கவாய; ஏஎர் - ஏர், அழகு; ஈடில் - ஈடுஇல் - ஒப்பற்ற.
4. குழை - காதணி (வரை); அமர்ந்த - சென்று கலக்க விரும்பும்; நோக்கின் - கண்களின்; குறிப்பு - கருத்து.

தலைவன் கூற்று

நற்றிணை 141 **சல்லியங்குமரனார்**

திணை : பாலை

கூற்று

பொருள் கடைக்கூட்டிய நெஞ்சிற்குத் தலைமகன் சொல்லிச் செல வழுங்கியது.

கூற்று விளக்கம்

பொருள் தேடத் தூண்டிய தன் நெஞ்சத்தினிடம், தலைவன், 'நான் தலைவியின் கூந்தலில் படுத்துறங்குவதை நீங்கேன்; ஆதலின், நீ வேண்டுமானால் செல்' என்று தன்னால் வர இயலாமையை நெஞ்சத்தினிடம் கூறியது.

இருஞ்சேறு ஆடிய கொடுங்கவுள், கயவாய்,
மாரி யானையின் மருங்குல் தீண்டி,
பொரியரை ஞெமிர்ந்த புழற்காய்க் கொன்றை,
நீடிய சடையொடு ஆடா மேனிக்
குன்றுஉறை தவசியர் போலப் பலவுடன்
என்றூழ் நீள்இடைப் பொற்பத் தோன்றும்
அருஞ்சுரம் எளியமன் நினக்கே; பருந்துபட,
பாண்டிலொடு பொருத பல்பிணர்த் தடக்கை
ஏந்துகோட்டு யானை இசைவெங் கிள்ளி
வம்புஅணி உயர்கொடி அம்பர் சூழ்ந்த
அரிசில்அம் தெள்அறல் அன்னஇவள்
விரிஒலி கூந்தல் விட்டுஅமை கலனே.

தெளிவுரை

"நெஞ்சமே! (நீ செல்ல வேண்டிய வழியில்) சேற்றிலே கிடந்து புரண்டதால் மேனியெங்கும் சேறு படிந்ததும், வளைந்த கன்னத்தினையும், அகன்ற வாயையும் கொண்டவையுமான கரிய மேகம் போன்ற யானைகள் உள்ளன. அவை விலாப்புறத்தால் உராய்ந்த மையால் அங்கிருந்த கொன்றை மரங்களின் அடிப்புறம் சொரசொரப்பாயிருக்கும். உள்துளை கொண்ட காய்களைக் கொண்ட அம்மரங்கள் பலவும் வெயில் நிலைபெற்ற இடங்களில் அழகுடன் தோன்றும். அவை, குன்றுகளில் நெடிய சடையுடன் அசையாத மேனியராய்த் தவம் புரியும் தவசிகள் போன்றிருக்கும். இத்தகைய காட்சிகளைக் கொண்ட கடத்தற்கரிய பாலைவழி, நெஞ்சே! பொருள் வேட்கை கொண்ட உனக்குக் கடத்தற்கு எளியதாயிருக்கலாம். ஆதலால், நீயே செல்.

போர்க்களங்களில் கொல்லப்பட்டு விழும் பிணங்களைப் பருந்தினம் மொய்த்துத் தின்னுமாறு பகைவரின் தேர்ப்படையோடு போர் செய்தனவும், பலவாகிய சருச்சரை அமைந்த பெரிய துதிக்கைகளைக் கொண்டனவும், ஏந்திய தந்தங்களை உடையனவுமாகிய யானைப்படையைக் கொண்டவன், புகழை விரும்பும் சோழன், கிள்ளி வளவன். புதிதாய் அலங்கரிக்கப்பட்ட உயர்ந்த கொடிகள் கட்டப்பட்டது, அவனுடைய அம்பர் நகரம். அந்நகரைச் சூழ்ந்துள்ள அரிசிலாற்றின் அழகிய தெளிந்த அறல்மணலையொத்தது, தலைவியின் விரிந்து தழைத்த கூந்தல். அக்கூந்தலில் கிடந்து துயிலுவதை விட்டுச் சிறுபொழுதும் நீங்கி இருக்க மாட்டேன்" என்று தலைவன் தன் நெஞ்சத்தினிடம் கூறினான்.

கருத்து

"நெஞ்சே! தலைவியின் கூந்தலில் கிடந்து தூங்குவதை விட்டு உன்னோடு சேர்ந்து பொருள்தேடப் புறப்பட மாட்டேன்; வேண்டுமானால் நீ செல்" எனத் தலைவன் தன் நெஞ்சத்தினிடம் கூறுகிறான்.

விளக்கம்

யானைகளால் உராயப்பட்டுப் பட்டை உரியப்பட்டிருப்பதும், உள்துளை கொண்ட காய்களைக் கொண்டுள்ளதுமான கொன்றை மரங்கள், குன்றுகளில் தவம் செய்யும் தவசியர்போல

அசையாது பாலை வழியில் நிற்கும். வெயில் நிறைந்த அந்தக் கொடுமையான வழியைக் கடக்க நான் அஞ்சவில்லை. ஆனால், சோழன் கிள்ளிக்குரிய அம்பர் நகரைச் சூழ்ந்திருக்கும் அரிசி லாற்றின் அழகிய கருமணலையொத்த தலைவியின் விரிந்து தழைத்த கூந்தலில் கிடந்து துயில்வதிலிருந்து நான் நீங்க மாட்டேன். ஆதலின், நெஞ்சே! நீ செல்வதாயின் தனியே செல். நான் உன்னுடன் வாரேன்.

சொற்பொருள்

1. கொடுங்கவுள் - வளைந்த கன்னம்; கயவாய் - பெரிய வாய்.
2. மாரி - மேகம் (போன்ற); மருங்குல் - பக்கம்; தீண்டி - உராய்தலால்.
3. பொரியரை - பொரிந்தது போன்ற அடிமரத்தின்; ஞெமிர்ந்த - பட்டை தேய்ந்த; புழல் - உள்ளே புழை பொருந்திய.
4. நீடிய சடையொடு - நீண்ட சடையுடன்; ஆடா மேனி - நீராடாத மேனி(யும் கொண்ட).
6. என்றூழ் நீளிடை - வெயில் பரந்த நெடிய இடைவெளி; பொற்ப - அழகுற.
7. பருந்துபட - பருந்துகள் மொய்க்க.
8. பாண்டில் - தேர்; பிணர் - சொரசொரப்பு.
9. ஏந்துகோடு - ஏந்திய கொம்பு, தந்தம்; கிள்ளி - சோழ மன்னன்.
10. வம்பு - புதிய; அம்பர் - ஒரு நகரம்.
11. அரிசில் - ஓர் ஆறு.
12. விட்டு அமைகலன் - நீங்கி இருக்க மாட்டேன்.

தலைவன் கூற்று

நற்றிணை 262 **பெருந்தலைச் சாத்தனார்**

திணை : பாலை

கூற்று

தலைமகள் ஆற்றாக் குறிப்பறிந்து பிரிவிடை விலக்கியது.

கூற்று விளக்கம்

பொருள் தேடிவரக் கருதித் தலைவன் தன்னைப் பிரியக் கருதியுள்ளான் என்பதறிந்து தலைவி பெரிதும் வருந்தி நலிவுற்றாள். அவளது நலிவைக் கண்டு அஞ்சிய தலைவன், 'அவளைப் பிரிந்திருப்பதினும் வறுமை கொடிய தன்று' எனத் தன் நெஞ்சத்தினிடம் கூறித் தன் பயணத்தை நிறுத்தியது.

தண்புனக் கருவிளைக் கண்போல் மாமலர்,
ஆடுமயில் பீலியின், வாடையொடு துயல்வர,
உறைமயக் குற்ற ஊர்துஞ்சு யாமத்து,
நடுங்குபிணி நலிய நல்எழில் சாஅய்,
துனிகூர் மனத்தள், தனிபடர் உழக்கும்
பணைத்தோள் அரும்பிய சுணங்கின் கணைக்கால்
குவளை நாறும் கூந்தல், தேமொழி
இவளின் தீர்ந்தும், ஆள்வினை வலிப்ப,
பிரிவல்நெஞ்சு, என்னும் ஆயின்,
அரிதுமன் றம்ம, இன்மையது இளிவே.

தெளிவுரை

"குளிர்ச்சியான புனத்தில் கண்போல் தோன்றும் கருவிளை மலர், வாடைக்காற்று வீசுவதால் ஆடுகின்ற மயிலின் தோகை அசைவதுபோல அசைந்து தோன்றும். ஓயாது மழைத்துளிகள் பெய்யும் நடுயாமத்தில் ஊரினர் யாவரும் உறங்குவர். இவ் வேளையில், நாம் பொருள் தேடிப் பிரிந்தால் தலைவி குளிர் நடுக்கத்தோடு காம வேட்கையும் வருத்த, நல்ல அழகு குறையப் பெற்று எப்பொழுதும் எப்பொருளையும் வெறுத்த மனப் பான்மை கொண்டவளாய்த் தனிமை மிகுதிப்பட இருப்பாள். திரண்ட தண்டினைக் கொண்ட குவளை மலரின் மணம் வீசுகின்ற கூந்தலும், இனிய மொழியும், பருத்த தோளும்,

அரும்பிய தேமலும் கொண்ட இவளைப் பிரிந்து பொருளீட்டும் செயலில் ஈடுபடுமாறு உள்ளம் என்னை இழுக்கிறது. நெஞ்சே! இதனால் பிரிவு நன்றே என்று துணிவாயாயின் அதற்குக் காரண மாகிய பொருள் இன்மையால் நேரும் இழிவு பொறுத்தற் குரியதே!

கருத்து

தலைவியைப் பிரிந்திருப்பதினும் வறுமை கொடியதன்று; ஆதலின், பொருளீட்டுதற்காகத் தலைவியை விட்டுப் பிரியேன்.

விளக்கம்

முயங்குங்கால் இன்பம் தரும் கூந்தலினையும், முயங்காதிருப் பினும் இனிமை செய்யும் மொழிகளையும் கொண்டவளாகிய தலைவியை நெஞ்சு பிரியக் கருதியது குறித்துத் தலைவன் கலங்கினான். இத்தலைவியிடம் பெறும் அரிய இன்பத்தினும் பொருளில்லாத வறுமையால் வரும் இழிவு பெரியதாகாது என்று கூறிச் செலவழுங்கினான்.

குறிப்பு

இன்பமும் பொருளுமாகிய இருபெரும் தேவைகளுக்கு நடுவே சிக்கி ஊசலாடுகின்ற தலைவனின் உள்ள நிலையை உணர்த்துகிறது, இப்பாடல்.

சொற்பொருள்

1. கருவிளை - கருவிளை மலர்; கண்போல் - கண்போல் தோன்றும்; மாமலர் - பெரிய மலர்.
2. பீலியின் - தோகையைப் போல; துயல்வர - அசைய.
3. உறைமயக்குற்ற - மழைத்தூவலும் கலந்து வீச.
4. நடுங்குபிணி - நடுக்கத்தோடு கூடிய காம நோய்; நலிய - வருத்த; சாஅய் - குன்றி.
5. துனிகூர் மனத்தள் - வெறுத்த மனப்பான்மை கொண்டவளாய்; தனிபடர் - தனிமைத் துன்பம்; உழக்கும் - வருத்தும்.
6. பணை - பெரிய; சுணங்கு - தேமல்; கணைக்கால் - திரண்ட தண்டு.
7. தேமொழி - தேன் போன்ற இனிய மொழி.
8. இவளின் தீர்ந்தும் - இவளினின்றும் நீங்கி; ஆள்வினை வலிப்ப - செய்வினை பற்றிய முயற்சி உள்ளத்தை ஈர்த்தலால்.

9. பிரிவல் நெஞ்சு - நெஞ்சு பிரிந்து செல்லும்.
10. இன்மையது இளிவு - பொருள் இல்லாமையால் உண்டாகும் இழிவு; அரிது மன்றம்ம - அப்பிரிவினும் பொறுத்தற்கரியது ஆம்.

லைவன் கூற்று

ஐந்திணை ஐம்பது 40 **மாறன் பொறையனார்**

திணை : பாலை

கூற்று

தலைமகன் பொருள் வலித்த நெஞ்சிற்குச் சொல்லித் தன் செலவழுங்கியது.

கூற்று விளக்கம்

தலைவி தன் பிரிவை ஆற்றாள் எனத் தலைவன் தன் நெஞ்சத்திினிடம் சொல்லித் பொருள் தேடிவரத் தான் பிரிந்து செல்வதைத் தவிர்த்தது.

இன்(று)அல்கல் ஈர்ம்படையுள் ஈர்ங்கோதை தோள்துணையா
நன்கு வதிந்தனை நல்நெஞ்சே! – நாளைநாம்
குன்(று)அதர் அத்தம் இறந்து தமியமாய்
என்கொலோ சேக்கும் இடம்.

தெளிவுரை

நல்ல உள்ளமே! இன்று இரவில் குளிர்ச்சி பொருந்திய படுக்கையிடத்தே குளிர்ந்த தன்மை கொண்ட மாலையைக் கொண்டவளின் தோள்கள் துணையாய் இருக்க நன்றாய்த் தங்கியிருக்கின்றாய். இவ்வின்பத்தை விட்டு, நாளை இவளைப் பிரிந்து சிறு மலைகளுக்கிடையே செல்லும் அரிய வழியில் தன்னந்தனியாய்த் துணை ஏதுமில்லாமல் சென்று தங்குமிடம் எதுவோ?

இவ்வாறு கூறித் தலைவன் தன் செலவினைத் தவிர்த்தான்.

கருத்து

இனிமை தரும் இவளைப் பிரிந்து செல்வது அரிது.

சொற்பொருள்

1. அல்கல் - இரவு; ஈர்ம்படை - குளிர்ந்த படுக்கை; ஈர்ங்கோதை - குளிர்ந்த மாலை(யைக் கொண்டவள்).
2. வதிந்தனை - தங்கியுள்ளாய்.
3. குன்று அதர் - குன்றுகளுக்கிடையே செல்லும் வழி; அத்தம் - அரிய வழி; இறந்து - சென்று; தமியமாய் - தன்னந்தனியாய்.
4. என்கொலோ - எதுவோ?; சேக்கும் - தங்கும்.

தலைவன் கூற்று

அகநானூறு 193 **மதுரை மருதனிளநாகனார்**

திணை : பாலை

கூற்று

பொருள் வலித்த நெஞ்சிற்குச் சொல்லித் தலைமகன் செலவு அழுங்கியது.

கூற்று விளக்கம்

பொருள் ஈட்டுமாறு தலைவனை அவன் நெஞ்சு தூண்டியது. அதனை நோக்கித் தலைவன், ‘நாம் காட்டுவழியை எளிதாகக் கடந்து சென்று விடலாம்; ஆனால், தலைவியின் தோளில் பொருந்திய இனிய துயிலைப் பெற இயலாது என்பதை உணர வேண்டும்’ எனத் தன் நெஞ்சத்தினிடம் கூறிப் பயணத்தைத் தவிர்த்தது.

கான்உயர் மருங்கில் கவலை அல்லது,
வானம் வேண்டா வில்ஏர் உழவர்
பெருநாள் வேட்டம், கிளைஎழ வாய்த்த,
பொருகளத்து ஒழிந்த குருதிச் செவ்வாய்,
பொறித்த போலும் வால்நிற எருத்தின்,
அணிந்த போலும் செஞ்செவி, எருவை,
குறும்பொறை எழுந்த நெடுந்தாள் யாஅத்து
அருங்கவட்டு உயர்சினைப் பிள்ளை ஊட்ட,
விரைந்துவாய் வழுக்கிய கொழுங்கண் ஊன்தடி
தொல்பசி முதுநரி வல்சி ஆகும்

சுரன்நமக்கு எளிய மன்னே; நல்மனைப்
பன்மாண் தங்கிய சாயல், இன்மொழி,
முருந்துஏர் முறுவல், இளையோள்
பெருந்தோள் இன்துயில் கைவிடு கலனே.

தெளிவுரை

"நெஞ்சே! நாம் செல்லும் காட்டுநிலப் பெருவழி பல கிளை களாய்ப் பிரிந்து செல்லும். அப்பாலை நிலத்தில் வாழும் வழிப்பறி கள்வர் மழையை விரும்பாதவர்; தம் வில்லினால் வழி செல்வோரைக் கொன்று, கொள்ளையடித்து வாழ்பவர். தம் உறவினருடன் சென்றவர்களை அவர்கள் கொன்றதால் அவர்களின் உடலிலிருந்து சிந்திய குருதியை உண்ட கழுகின் வாய் சிவந்தது. பொறித்து வைத்தாற் போன்ற வெண்ணிறமான கழுத்தினையும், செய்து ஒட்டியது போன்ற சிவந்த செவியினை யும் கொண்ட அக்கழுகு இறந்தோரின் கண்களைப் பறித்துச் சென்று, மலையில் நெடிய அடியினைக் கொண்ட யா மரத்தின் கிளையில் தங்கியிருக்கும் தன் குஞ்சுக்கு உணவாக ஊட்டும். அப்போது அக்குஞ்சின் வாயினின்றும் தவறி விழும் ஊன் துண்டு அம்மரத்தடியிலிருக்கும் கிழட்டு நரிக்கும் உணவாகும்.

இத்தகைய காட்டுவழியைக் கடந்து செல்வது எனக்கு எளிதே! ஆனால், வீட்டில் பல்வகை மாண்புகளுடன் மென்மைத் தன்மையினையும், இனிய மொழியினையும், மயிலிறகின் அடியினையொத்த பற்களையும் கொண்ட நம் தலைவி வாழ் கிறாள். அவள் பெரிய தோளில் இனிய துயிலைப் பெறுவதை என்னால் கைவிட இயலாது. அதனால் நாம் இப்பொழுது பொருளீட்டச் செல்ல வேண்டா" எனத் தலைவன் தன் நெஞ்சத்தினிடம் கூறிப் பொருளீட்டச் செல்லும் பயணத்தைத் தவிர்த்து விடுகிறான்.

கருத்து

தலைவியின் மென் தோளில் தோய்ந்து உறங்கும் இன்பத்தைத் துறந்து பொருள்தேடப் புறப்பட மாட்டேன்.

விளக்கம்

"நெஞ்சே! கழுகு தன் குஞ்சிற்கு ஊட்டும்பொழுது குஞ்சின் வாயிலிருந்து தவறி விழுந்த ஊன்துண்டு மிகுந்த பசி கொண்ட நரிக்கு உணவாகும். இத்தகைய காட்டு வழியில் பொருள் ஈட்டச் செல்ல வேண்டும். அவ்வழியில் செல்வது எனக்கு எளிமை யானதே! ஆனால், நம் நல்ல வீட்டில் மாண்பும், மென்மையும், இன்மொழியும், மயிலிறகின் அடி போன்ற பற்களையும் கொண்டவளாகிய இளைய தலைவியின் பெரிய தோளில் தோய்ந்து உறங்கும் இன்பத்தைக் கைவிடுதல் என்னால் இயலாது. நெஞ்சே! ஆதலின் நான் உன்னுடன் வாரேன்" என்று தலைவன் தன் நெஞ்சத்தினிடம் கூறினான்.

பருந்தின் தோற்றம்

ஆறலைப்போர் செய்த சண்டையில் வழிச்செல்வோர் உடலிலிருந்து ஒழுகிய குருதியைக் குடித்ததால் சிவப்பு நிறம் பெற்ற வாய்; வெள்ளை நிறப் புள்ளிகளைப் பொருத்தி வைத்தது போன்ற கழுத்து; ஊன் துண்டினை ஒட்ட வைத்தது போன்ற சிவந்த காது ஆகிய இவற்றைக் கொண்டதாய்ப் பருந்து இருக்கிறது எனும் இயல்பான வருணனை இனிமை தருகிறது.

இறந்தவர்களின் கண்களைப் பருந்து பறித்துவந்து தன் குஞ்சுக்கு உணவாய் ஊட்டுகிறது; அப்போது குஞ்சின் வாயிலிருந்து நழுவி விழும் ஊன்துண்டு பசியோடிருக்கும் கிழட்டு நரிக்கு உணவாகிறது.

சொற்பொருள்

1. கான் - காடு; மருங்கில் - பக்கத்தில்; கவலை - இரு பிரிவாய்ச் செல்லும் வழி.
2. வானம் வேண்டா - மழையை விரும்பாத; வில்லேர் உழவர் - வில்லாகிய ஏரினால் உழுதலைச் செய்வோர் (வழியில் செல்வோரை வருத்திப் பொருள் பறிப்போர்).
3. பெருநாள் - நன்னாள்; வேட்டம் - வேட்டை; கிளை எழ - தம் சுற்றத்துடன் செல்ல; வாய்த்த - கிடைத்த.
4. பொருகளத்து - (ஆறலைப்போர்) பொருத களத்தில்; ஒழிந்த - (பயணிகளின் உடம்பிலிருந்து) ஒழுகிய; குருதி - இரத்தம் (உண்ட); செவ்வாய் - சிவந்த வாய்.

5. பொறித்த போலும் - பொருத்தி வைத்தது போன்ற; வால் நிறம் - வெண்மையான நிறம்; எருத்து - கழுத்து.
6. அணிந்த போலும் - செய்து சூட்டியது போன்ற; செஞ்செவி - சிவந்த காது; எருவை - பருந்து.
7. குறும்பொறை - குறிய மலை; எழுந்த - வளர்ந்த; நெடுந்தாள் - நீண்ட அடிமரம்; யாஅத்து - யா மரத்தின்.
8. கவடு - கப்பு, மரக்கொம்பு; சினை - கிளை; பிள்ளை - குஞ்சு.
9. வாய் வழுக்கிய - (குஞ்சின்) வாயினின்றும் தவறி வீழ்ந்த; கொழுங் கண் - கொழுவிய கண்; ஊன்தடி - தசைத்துண்டு.
10. தொல்பசி - பழைய (பல நாள் உணவின்மையால் ஏற்பட்ட) பசி; முதுநரி - முதிய (கிழட்டு) நரி; வல்சி - உணவு.
11. சுரன் - காடு (பாலை நில வழி); எளிய - எளியது.
12. பல்மாண் - பலவகைச் சிறப்பு; சாயல் - மென்மை.
13. முருந்து - மயிலிறகின் அடி; ஏர் - ஒத்த; முறுவல் - புன்சிரிப்பு.
14. கைவிடுகலன் - கைவிட மாட்டேன்.

தலைவன் கூற்று

குறுந்தொகை 101 **பருஉ மோவாய்ப் பதுமன்**

திணை : குறிஞ்சி

கூற்று :

வலித்த நெஞ்சிற்குச் சொல்லிச் செலவழுங்கியது.

கூற்று விளக்கம்

தலைவியைத் தழுவும் இன்பத்தை விடுத்துப் பொருளீட்டச் செல்லேன் எனத் தலைவன் தன் நெஞ்சிற்குச் சொல்லியது.

விரிதிரைப் பெருங்கடல் வளைஇய உலகமும்
அரிதுபெறு சிறப்பின் புத்தேள் நாடும்
இரண்டும் தூக்கின் சீர்சா லாவே!
பூப்போல் உண்கண் பொன்போல் மேனி
மாண்வரி அல்குல் குறுமகள்
தோள்மாறு படூஉம் வைகலொடு எமக்கே.

தெளிவுரை

பூப்போன்ற மையுண்ட கண்களையும், பொன் போன்ற நிறமுள்ள மேனியையும், அழகிற் சிறந்த வரிகளையுடைய அல்குலையும் கொண்ட இளையவள், என் காதலி. அவள் தோளோடு தோள் எதிர்ப்படத் தழுவி இன்புறும் நாளே எனக்கு இனிய நாள். விரிந்த அலைகளைக் கொண்ட பெரிய கடலால் சூழப்பட்டுள்ள இவ்வுலகம், பெறுதற்கரிய சிறப்பினைக் கொண்ட தேவ உலகம் ஆகிய இரண்டையும் ஒன்று சேர்த்து, அதனையும் தலைவியைத் தழுவும் இன்ப நாளையும் ஒரு தராசில் வைத்து நிறுத்தால் அவ்விரு உலகங்களும், இன்ப நாளுக்கு ஈடாகா. (ஆதலின், தலைவியை விட்டுப் பிரியேன்.)

கருத்து

இவ்வுலகம் தேவருலகம் ஆகிய இரண்டையும் சேர்த்தாலும் கிடைக்கும் இன்பம் தலைவியைத் தழுவும் இன்பத்திற்கு ஈடாகாது. ஆதலின், தலைவியை நீங்கிப் பொருள்தேடி வரப் புறப்படேன்.

சொற்பொருள்

1. விரிதிரை - விரிந்த அலை; வளைஇய - சூழ்ந்த; உலகம் - இந்நிலவுலகம்.
2. அரிதுபெறு - பெறுதற்கரிய; புத்தேள் நாடு - தேவருலகம்.
3. தூக்கின் - நிறுத்தால்; சீர் - சிறப்பு; சாலா - ஈடாகா.
5. மாண் - அழகிய; குறுமகள் - இளமகள் (தலைவி).
6. தோள்மாறு படுதல் - தோளோடு தோள் எதிர்ப்படுதல் (தழுவுதல்); வைகல் - நாள்.

தலைவன் கூற்று

அகநானூறு 43 **மதுரையாசிரியர் நல்லந்துவனார்**

திணை : பாலை

கூற்று

தலைமகன் பொருள் கடைக்கூட்டிய நெஞ்சிற்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

பிரிந்து சென்று பொருள் தேட வேண்டும் என இடைவிடாது வற்புறுத்தியது, நெஞ்சு. ஆனால், அது பிரிதற்கு இயலாத கார் காலமாகும். எனவே, தான் பொருள் ஈட்டச் செல்வதைக் கைவிட்டதைத் தலைவன் தன் நெஞ்சத்தினிடம் சொல்லியது.

கடல்முகந்து கொண்ட கமஞ்சூல் மாமழை
சுடர்நிமிர் மின்னொடு வலன்ஏர்பு, இரங்கி,
என்றூழ் உழந்த புன்தலை மடப்பிடி
கைமாய் நீத்தம் களிற்றொடு படீஇய;
நிலனும் விசும்பும் நீர்இயைந்து ஒன்றி,
குறுநீர்க் கன்னல் எண்ணுநர் அல்லது
கதிர்மருங்கு அறியாது, அஞ்சுவரப் பாஅய்,
தளிமயங் கின்றே தண்குரல் எழிலி, யாமே
கொய்அகை முல்லை காலொடு மயங்கி,
மைஇருங் கானம் நாறும் நறுநுதல்,
பல்இருங் கூந்தல் மெல்இயல் மடந்தை
நல்எழில் ஆகம் சேர்ந்தனம், என்றும்
அளியரோ அளியர் தாமே – அளிஇன்று
ஏதில் பொருட்பிணிப் போகி,தம்
இன்துணைப் பிரியும் மடமை யோரே.

தெளிவுரை

நெஞ்சே! இடி முழக்கத்தையும் முகில்களையும் கொண்ட கார் காலம் வந்தது. மேகங்கள் கடல்நீரை முகந்து வலப்பக்கமாய் எழுந்து மின்னலுடன் மழை பெய்கிறது. முதுவேனில் காலத்தில் வெயில் வெப்பத்தால் வருந்திய பெண்யானைகள் தம் ஆண் யானைகளுடன் நீர்நிலைகளில் துதிக்கையை மறைக்கும் அளவு

பெருகிய வெள்ளத்தில் படிந்து விளையாடுகின்றன. நிலமும் வானமும் மழை நீரால் ஒன்றுபொருந்தியிருக்கின்றன. நாழிகைக் கணக்கர் சிறிதளவு நீருள்ள நாழிகை வட்டிலால் பொழுது அளந்து கூறுவது அன்றி, ஞாயிறு இருக்குமிடம் இது என அறிய இயலாத நிலையில் மேகம் எங்கும் பரவி இடி முழக்கத்துடன் மழை பெய்கிறது.

இத்தகைய கார்ப் பருவத்தில் கொய்யப்படும் முல்லையின் மணம் வாடைக்காற்றுடன் கலந்து காடு முழுவதும் மணக் கின்றது. அது போன்ற நறுமணமிக்க நெற்றியையும், நெருங்கிய கரிய கூந்தலையும், மென்மையான சாயலையும் கொண்ட தலைவியின் அழகு பொருந்திய மேனியைப் பிரியாது சேர்ந் திருப்போம். இக்கார் காலத்தில் பொருள் ஈட்டும் பொருட்டுத் தலைவியைப் பிரிபவர் அறிவில்லாதவர்.

கருத்து

காதலர் இணைந்திருக்க வேண்டிய பருவம், இக்கார் காலமாகும். எனவே, தலைவியின் அழகு பொருந்திய மேனியை அணைத்திருப்பதை விட்டு அவளைப் பிரியேன்.

விளக்கம்

"மேகம் வலமாய் எழுந்து மின்னலொடு மழை வீழ்கிறது; பெரும் வெள்ளத்தில் ஆண்யானை பெண்யானையோடு களித்து விளையாடுகிறது. நிலமும் விசும்பும் நீரால் ஒன்றி ணைந்து நிற்கின்றன. நாழிகை வட்டில் மூலம் நேரத்தைக் கணித் திருந்து சொல்வதால் அதனை அறிந்து கொள்ள இயல்கிறதே யன்றி, யாராலும் சூரியனைப் பார்த்துப் பொழுதை அறிய இயலாதவாறு வானில் இருள் செறிந்துள்ளது; நான் தலைவி யின் அழகு பொருந்திய மேனியைச் சேர்ந்திருக்கிறேன். பொருளாசையால் இக்காலத்தே தம் இனிய துணையாகிய மகளிரைப் பிரிவோர் அறிவில்லாதவரே. அவர்கள் பெரிதும் இரங்கத்தக்கவர்கள்" என்று தலைவன் தன் நெஞ்சிற்குச் சொல்வதுபோல் கூறுகிறான்.

சொற்பொருள்

1. கடல் முகந்து கொண்ட - கடல்நீரை முகந்து நிறைந்த; கமஞ்சூல் - நிறைந்த கருவுற்றுள்ள; மாமழை - கரிய மேகம்.
2. சுடர் நிமிர் - ஒளி மிக்க; வலன் ஏர்பு - வலமாய் எழுந்து சென்று; இரங்கி - ஒலித்து.
3. என்றூழ் - வெப்பம்; உழந்த - வருந்திய; மடப்பிடி - இளைய பெண் யானை.
4. கைமாய் நீத்தம் - துதிக்கை மறைகின்றவாறு பாயும் வெள்ளம்; களிறு - ஆண்யானை; படீஇய - படிந்து விளையாட.
5. நிலனும் - நிலத்தையும்; விசும்பும் - ஆகாயத்தையும்; நீர் - மழைக்கால்; இயைந்து ஒன்றி - நீர் பொருந்திச் சேர்த்திட.
6. குறுநீர் - சிறிதளவு நீரைக் கொண்ட; கன்னல் - நாழிகை வட்டில்; எண்ணுநர் - நாழிகை அளந்து கூறுபவர்; அல்லது - கூறுவதால் அறிவதலன்றி.
7. கதிர் - ஞாயிறு; மருங்கு - உள்ள இடம்; அஞ்சுவர் - அறிய இயலாததாய்; பாஅய் - பரந்து பெய்யும்.
8. தளி - மழை; மயங்கின்று - பொருந்தியது; தண்குரல் - தண்ணிய முழக்கத்தைக் கொண்ட.
9. கொய் அகை முல்லை - கொய்யப்படும் தழைத்த முல்லை மலர்; காலொடு மயங்கி - காற்றொடு கலந்து.
10. மை - கரிய; இரும் - பெரிய; கானம் - காடு.
11. மெல் இயல் - மெல்லிய தன்மை.
12. நல் எழில் - நல்ல அழகு பொருந்திய உடல்; சேர்ந்தனம் - பிரியாதிருக்கின்றோம்.
13. அளியரோ அளியர் - எஞ்ஞான்றும் இரங்கத்தக்கவர்; அளி இன்று - இரக்கம் இன்றி.
14. ஏதில் - அயலது; பொருட்பிணி போகிய - பொருளீட்டும் பற்றுக் கொண்டு பிரிந்து சென்று.
15. இன்துணை - இனிய துணையை; மடமையோர் - அறிவில்லாதவர்.

தலைவன் கூற்று

குறுந்தொகை 267 **காலெறி கடிகையார்**

திணை : பாலை

கூற்று

'மேல் நின்றும் ஆடவர் பொருட்குப் பிரிந்தாராகலின் நாமும் பொருட்குப் பிரிதும்' என்னும் நெஞ்சிற்கு நாளது சின்மையும் இளமையது அருமையும் கூறிச் செலவழுங்கியது. (மேல் நின்றும் - முன்னைய காலம் தொடங்கி; சின்மை - குறுகிய தன்மை; அருமை - பெறுதற்கரிய தன்மை, போனால் வாராது.)

கூற்று விளக்கம்

பொருள் தேடப் பிரிதல் ஆடவர்க்குரிய கடமை என்ற முன்னோர் கருத்தைப் பின்பற்றித் தானும் பொருள் தேடி வரத் தலைவியைப் பிரிந்து செல்ல வேண்டும் என்று தூண்டிய தன் நெஞ்சிற்கு, தலைவன் நாளது குறுகிய தன்மையினையும் இளமையின் பெறுதற்கரிய அருமையையும் கூறித் தன் பயணத்தைத் தவிர்த்தது.

இருங்கண் ஞாலத்து ஈண்டுபயப் பெருவளம்
ஒருங்குடன் இயைவது ஆயினும், கரும்பின்
கால்எறி கடிகைக் கண்அயின் றன்ன,
வால்எயிறு ஊறிய வசைஇல் தீம்நீர்க்
கோல்அமை குறுந்தொடிக் குறுமகள் ஒழிய,
ஆள்வினை மருங்கில் பிரியார், நாளும்
உறல்முறை மரபின் கூற்றத்து
அறன்இல் கோள்நற்கு அறிந்திசி னோரே.

தெளிவுரை

நெஞ்சமே! நாள்தோறும் முறையாய் வந்து, உயிரைப் பற்றிக் கொண்டு செல்லும் கூற்றுவனது இரக்கமற்ற கொடிய செயலை நன்றாய் அறிந்திருக்கிறோம். கரும்புத்துண்டின் அடிப்பகுதியில் வெட்டிய துண்டத்தை உண்டது போன்ற சுவையினை நல்குவதும், வெண்மையான பல்லில் ஊறியதுமான குற்றமற்ற இனிய நீரைக் கொண்டவள், தலைவி. திரட்சியமைந்த சிறிய வளையல்களை அணிந்துள்ள அவள் இளமையானவள்;

இடமகன்ற இவ்வுலகில் மிகுந்த பயனைக் கொண்ட பெரிய செல்வம் அனைத்தும் பொருள் தேடும் முயற்சியின்மூலம் ஒன்றாய்க் கிட்டுவதாயிருந்தாலும் அவளைத் தனியே விட்டு விட்டு நான் பிரிய மாட்டேன்.

கருத்து

இளமையின் அருமையையும், வாழ்க்கையின் நிலையாமையையும் உணர்ந்துள்ள நான் பெருஞ்செல்வம் பெறுவதாயினும் இவளைப் பிரியேன்.

விளக்கம்

இளமை நில்லாது; சென்றது திரும்பாது; வாழ்க்கையும் நிலை யற்றது. எனவே, இளமைக்காலத்தில் அவ்விளமை இன்பத்தைச் சுவைத்துக் கழிப்பதே சிறப்பு.

குறிப்பு

கரும்பின் அடிப்பாகத்தில் வெட்டப்பட்ட துண்டில் இனிப்பு மிகுந் திருக்கும். அதனைக் 'காலெறி கடிகைக் கண்அயின் றன்ன' என இப்பாடலாசிரியர் உவமையாய்க் கூறியுள்ளார். இவரது இயற்பெயர் தெரியவில்லை. எனவே, குறுந்தொகைத் தொகுப்பாளர் இவருக்குக் 'காலெறி கடிகையார்' என்றே பெயர் சூட்டியுள்ளார்.

சொற்பொருள்

1. இருங்கண் - இடமகன்ற; ஞாலம் - உலகம்; பயம் பெருவளம் - பயனை நல்கும் பெரிய செல்வம்.
3. கால் - அடிப்பாகம்; எறி - வெட்டப்பட்ட; கடிகை - கரும்பு; அயின்றன்ன - உண்டது போன்ற.
4. வால் எயிறு - வெண்மையான பற்கள்; வசைஇல் - குற்றமற்ற; தீம்நீர் - இனிய நீர்.
5. கோல்அமை குறுந்தொடி - திரட்சியாய் அமைந்த சிறிய வளையல்; ஒழிய - தனியே விட்டுவிட்டு.
6. ஆள்வினை - பொருள் தேடும் முயற்சி.
7. உறல் முறை - (உயிரைக்) கொள்ள வேண்டிய முறை; கூற்றம் - கூற்றுவன்.
8. அறன்இல் கோள் - இரக்கமின்றி உயிரைக் கொண்டு போவதை; நன்கு - நன்றாய்; அறிந்திசினோர் - அறிந்தவர்.

தலைவன் கூற்று

குறுந்தொகை 151 **தூங்கலோரி**

திணை : பாலை

கூற்று

பொருள் வலிக்கப்பட்ட நெஞ்சிற்குத் தலைமகன் சொல்லியது. (வலிக்கப்பட்ட - வற்புறுத்திய.)

கூற்று விளக்கம்

பொருள் தேடிவரும் விருப்பத்தினனாய்த் தலைவியைப் பிரிந்து செல்ல வேண்டும் என்ற எண்ணம் தன் நெஞ்சில் தோன்றுவதை உணர்ந்த தலைவன், தன் பிரிவால் தலைவிக்குண்டாகும் துயரத்தை நினைந்து சொல்லியது.

வங்காக் கடந்த செங்காற் பேடை
எழால்உற வீழ்ந்தெனக் கணவற் காணாது,
குழல்இசைக் குரல குறும்பல அகவும்
குன்றுகெழு சிறுநெறி அரிய என்னாது
'மறப்புஅருங் காதலி ஒழிய
இறப்பல்'என்பது, ஈண்டு இளமைக்கு முடிவே.

தெளிவுரை

ஆண் வங்காப்பறவை தன்னை விட்டு நீங்கியதால் பெண் பறவை தனித்திருந்தது. அப்பெண் பறவையை இரையாய்க் கொள்ள அதன் மீது புல்லூறு என்னும் பறவை பாய்ந்தது. அப்போது தன் ஆணைக் காணாமல் பெண்வங்கா குழலிசை போன்ற குரலால் பலவாறாய்க் கூவி அழைத்துக்கொண்டிருக்கும். அத்தகைய குன்றுகளில் பொருந்தியுள்ள சிறிய வழிகள் கடத்தற்கரியவை என்று எண்ணாமல், 'மறத்தற்கரிய காதலியை விட்டுவிட்டுப் பிரிந்து செல்வேன்' என்று சொல்வது நம் இளமைப்பருவம் பயனற்றுப் போகவே வழிவகுக்கும்.

கருத்து

பொருள் தேடி வருமுன் இளமை முடிந்துவிடும்; அதனால் மனமே, பிரிதலைக் கைவிடு.

குறிப்பு

இளமைக்காலத்தில் தலைவியோடிருந்து இன்புற வேண்டும். அப்போது பொருள் தேடச் சென்றால், பொருள் தேடி வருமுன் இளமை கழிந்துவிடும் என்பதால் தலைவியைப் பிரிந்து செல்லாதிருக்க வேண்டும் எனத் தலைவன் தன் மனத்திடம் கூறுகிறான். (குறிப்பிட்ட பருவத்தில் திரும்பிவிடுவான்; ஆயினும், புறப்படும் முன்பு, திரும்ப நீண்ட காலம் ஆகுமோ எனக் கருதிப் பயணத்தைத் தவிர்க்க விரும்புகிறான்.)

வங்காவைப் பிரிந்த அதன் பேடையைப் புல்லூறு பற்றித் தனக்கு இரையாக்கிக்கொள்ள முயல்வது போலத் தலைவனைப் பிரிந்த தலைவியைப் பசலை பற்றியுண்ண முற்படும். புல்லூற்றினின்று தன்னைக் காத்துக் கொள்ளத் தன் ஆணை அழைக்க அகவும் பேடையைப்போல், தலைவியும் தலைவனை எண்ணிக் கலங்குவாள். ஆண் பறவை துணைக்கு வாரா திருப்பின் புல்லூறு, பேடை வங்காவை உண்டு அழித்துவிடும். அதுபோல, தலைவன் துணையில்லாமல் போனால் தலைவியும் பசலையால் உண்ணப்பட்டு மெலிவாள். அதனால் தன் இளமைக் கனவுகள் அனைத்தும் முடிந்துபோம் எனத் தலைவன் எண்ணுகிறான்.

சொற்பொருள்

1. வங்கா - (ஆண்) வங்காப் பறவை; கடந்த - நீங்கிய.
2. எழால் - புல்லூறு என்னும் பறவை; வீழ்ந்தென - பாய்ந்த போது.
3. குரல - குரலால்; குறும்பல - குறுகிய பல; அகவும் - கூவி அழைக்கும்.
4. உறு - பொருந்திய; சிறுநெறி - சிறிய வழிகள்.
5. மறப்பு அரும் - மறப்பதற்கு அரிய, மறக்க இயலாத.
6. இறப்பல் - செல்வேன்; ஈண்டு - இங்கே.

தலைவன் கூற்று

நற்றிணை 126 **ஆசிரியர் பெயரை அறிய இயலவில்லை**

திணை : பாலை

கூற்று

பொருள் வலித்த நெஞ்சினைத் தலைமகன் நெருங்கிச் செலவழுங்கியது.

கூற்று விளக்கம்

பொருளீட்டி வர வேற்று நாட்டுக்குப் பிரிந்து செல்ல விரும்பிய தலைவன், தலைவியைப் பிரிவதற்கு மனமில்லாமல் தன் நெஞ்சத்தினிடம் செலவைத் தவிர்க்குமாறு கூறியது.

பைங்காய் நல்இடம் ஒரீஇய செங்காய்க்
கருங்கனி ஈந்தின் வெண்புறக் களரி
இடுநீறு ஆடிய கடுநடை ஒருத்தல்
ஆள்பெறல் நசைஇ நாள்சுரம் விலங்கித்
துனைதரும் வம்பலர்க் காணாது, அச்சினம்
பனைக்கான்று ஆறும் பாழ்நாட்டு அத்தம்,
இறந்துசெய் பொருளும் இன்பம் தரும்எனின்,
இளமையின் சிறந்த வளமையும் இல்லை;
இளமை கழிந்த பின்றை, வளமை
காமம் தருதலும் இன்றே; அதனால்
நில்லாப் பொருட்பிணிச் சேறி;
வல்லே நெஞ்சம்! வாய்க்கநின் வினையே!

தெளிவுரை

நெஞ்சே! நீ செல்லவிருக்கும் களர் வழியில் ஈச்ச மரங்கள் ஈன்ற பசுங்காய்கள் செங்காய்களாக மாறிப் பின்னர்க் கருங்கனி களாய் முதிர்ந்து உதிர்ந்து கிடக்கும். அக்களர் நிலத்தில் புழுதி படிந்த மேனியையும் விரைந்த நடையினையும் கொண்ட யானை அங்கு வருவாரைக் கொல்லும் எண்ணத்துடன் விடியற்காலத்தில் திரிந்து கொண்டிருக்கும். அங்கு யாரும் வாராத காரணத்தால் அந்த யானை பனைமரங்களை மோதிச் சாய்த்துத் தான் கொண்டிருந்த சினத்தைத் தணித்துக்கொள்ளும். இத்தகைய பாலை நிலத்தைக் கடந்து சென்று ஈட்டிவரும் பொருள்

இன்பத்தைத் தரும் என்றாலும், இளமையில் நுகரும் காம இன்பத்தினும் சிறந்ததாய் இருக்குமா? (இராது.) காம இன்பம் இளமையில் துய்க்கப்படுவதே அன்றி முதுமையில் அன்று. இளமையைப் பொருளீட்டுவதில் கழித்துவிட்டால், முதுமையில் காம இன்பத்தை நுகர இயலுமா? இதனை எண்ணிப் பாராமல் பொருள் ஈட்டும் வேட்கை உன்னைக் கட்டி இழுப்பதால் காம இன்பத்தைக் கைவிட்டு விரைந்து செல்லக் கருதுகின்றாய். நெஞ்சமே! நான் வாரேன். நீ செல்க. பொருளீட்ட விழையும் உன் செயல் சிறக்கட்டும்.

கருத்து

இளமை இன்பத்தை நுகர்வதை விடுத்துப் பொருளீட்டப் பிரிய மாட்டேன்.

விளக்கம்

"இளமைப்பருவத்தில் நுகரும் காம இன்பத்தைப் பொருள் ஈட்டுதலில் கழித்துவிடின், முதுமையில் அவ்வின்பத்தை நுகர இயலாது. இதனால் இளமையில் இன்புற்றுப் பருவ நலத்தைத் துய்த்தலே தக்கது என்பதால், நெஞ்சமே! பொருள் தேடப் பிரியும் என் எண்ணத்தைக் கைவிட்டேன்" என்று தலைவன் தன் நெஞ்சிற்குக் கூறினன்.

இறைச்சி

'பைங்காய் நல்லிடம் ஒரீஇய செங்காய்க் கருங்கனி ஈந்தின் வெண்புறக் களரி' என்னும் தொடர்மூலம், 'ஈந்தின் பசுங்காய் செங்காயாய் ஆகி, பின்பு முதிர்ந்து, கனியாகும். அதுபோல, நமது இளமைப் பருவம் நீங்கி யாக்கை முதிர்ந்த பின்பு அது தளர்ந்துபோம்' என்னும் கருத்துப் பெறப்படுகிறது.

சொற்பொருள்

1. பைங்காய் - பசுங்காய்; ஒரீஇய - நீங்கிய.
2. ஈந்து - ஈச்ச மரம்; வெண்புறம் - வெண்மை நிற மேற்பரப்பைக் கொண்ட; களரி - உப்புப் பூத்த பாழ்நிலம்.
3. இடுநீறு ஆடிய - காற்று அலைத்தலால் துகள் படிந்த; ஒருத்தல் - யானை.

4. ஆள் பெற நசைஇ - வழிச்செல்வோரைக் கொல்ல விரும்பி; நாள் - விடியற்காலத்தில்; சுரம் விலங்கி - காட்டிற்குக் குறுக்கே நின்று.
5. துனை தரும் வம்பலர் - விரைந்து செல்லும் புதியவர்.
6. பனைக்கான்று - பனை மரங்களை மோதிச் சாய்த்து; ஆறும் - சினம் தணியும்; அத்தம் - வழி.
7. இறந்து - கடந்து சென்று.
8. வளமை - செல்வம்.
10. காமம் - காம இன்பம்.
11. நில்லா - நிலைத்து நில்லாத; பொருள்பிணி - பொருள் வேட்கையால் கட்டுண்டு; சேறி - செல்ல நினைக்கிறாய்.
12. நெஞ்சம் - நெஞ்சமே; நின்வினை - பொருள் தேடிச் செல்லும் உன் செயல்; வல்லே வாய்க்க - விரைவில் முடியட்டும்.

தலைவன் கூற்று

நற்றிணை 3 **இளங்கீரனார்**

திணை : பாலை

கூற்று

முன்னொரு காலத்துப் பொருள்வயிற் பிரிந்த தலைமகன் பின்னும் பொருள் கடைக்கூட்டிய நெஞ்சிற்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

முன்னொரு காலத்தில் பொருள் தேடி வரத் தலைவியைப் பிரிந்து சென்ற தலைவன், அப்பிரிவுக்காலத்தில் அவளது நினைவால் பெருந்துயர் உற்றான். மீண்டும் பொருள்வயிற்பிரிவுக்கு அவன் நெஞ்சம் தூண்டிய பொழுது, முன்பு தானுற்ற துயரினை நினைந்து தலைவியைப் பிரியும் எண்ணத்தைக் கைவிடுமாறு தன் நெஞ்சத்தினிடம் அவன் கூறியது.

ஈன்பருந்து உயவும் வான்பொரு நெடுஞ்சினைப்
பொரிஅரை வேம்பின் புள்ளி நீழல்,
கட்டளை அன்ன வட்டரங்கு இழைத்துக்
கல்லாச் சிறாஅர் நெல்லிவட்டு ஆடும்
வில்ஏர் உழவர் வெம்முனைச் சீறூர்ச்
சுரன்முதல் வந்த உரன்மாய் மாலை

உள்ளினென் அல்லெனோ, யானே உள்ளிய
வினைமுடித் தன்ன இனியோள்
மனைமாண் சுடரொடு படர்பொழுது எனவே.

தெளிவுரை

நெஞ்சமே! வானளாவி நிற்கும் உயர்ந்த கிளைகளையும் பொரிந்த அடிமரத்தினையும் கொண்ட வேப்ப மரத்தில் குஞ்சு ஈன்ற பருந்து ஒன்று வருத்தத்துடன் தங்கியிருந்தது. அம்மரத்தின் புள்ளிபட்டாற் போன்ற நிழலில் பொன்னுரை கல்லைப் போலத் தோன்றும் வட்டாடும் அரங்கினை அமைத்துக்கொண்டு, கல்வி கல்லாச் சிறுவர்கள் நெல்லிக்காய்களைக்கொண்டு விளை யாடிக் கொண்டிருந்தனர். வில் தொழில் வேட்டுவர் குடியிருப் பினைக் கொண்ட சிற்றூருக்கு அருகே (முன்பொரு முறை பொருள்தேடச் சென்றிருந்தபோது) நாம் தங்கியிருந்தோம். அப்போது நம் வலிமையனைத்தையும் சிதைக்குமாறு மாலைப் பொழுது வந்து சேர்ந்தது. அம்மாலைக் காலத்தில், 'கருதிய செயலைச் செய்து முடிக்கும்போது உண்டாகும் இன்பம் போலும் இனிமைப் பண்பினைக் கொண்ட நம் தலைவி மனைமாட்சி தரும் விளக்கினை ஏற்றி வைத்து, அதன்முன் நின்று நம்மை நினைந்து துன்புற்றிருக்கும் மாலைப்பொழுது இது' என்று அவளை நினைத்து நான் வருந்தினேன் அன்றோ? அதனால் நெஞ்சே, இப்பொழுது நீ பொருள் தேடிப் பிரியக் கருதியிருக்கும் எண்ணத்தை விட்டுவிடு.

கருத்து

முன்னொரு காலத்தில் பொருள் தேடச் சென்றிருந்தபோது இடை வழியில் வருந்தியதை இப்போது நினைத்து உன் பயண எண்ணத்தைக் கைவிடு.

விளக்கம்

"நெஞ்சே! நீ பொருள்வயிற்பிரிவதை எண்ணியிருக்கிறாய். முன்பொருகால் நாம் பிரிந்தபோது, காட்டுவழியில், மாலைப் பொழுது தோன்றக் கண்டு, 'இனியளாகிய நம் காதலி நம் இல்லத்தில் விளக்கேற்றி வைத்து நம்மை நினைத்து வருந்தும்

காலம் இது அன்றோ' என நினைத்துப் பெரிதும் வருத்த முற்றோம். அதனை மறந்துவிட்டாயா? ஆதலால், இப்பொழுது பிரியக் கருதுவதை விட்டுவிடு" எனத் தலைவன் தன் நெஞ்சத் தினிடம் கூறினான்.

இறைச்சி

தலைவன் தலைவியைப் பிரிந்திருப்பதால் படும் துன்பத்திற்கு அஞ்சியிருக்க, அதனைப் பொருட்படுத்தாமல் பொருளைத் தேடும் முயற்சியில் நெஞ்சம் ஈடுபட்டிருக்கிறது என்னும் இறைச்சிப் பொருள் தோன்ற, மரத்தில் பருந்து வருந்தியிருக்கும் நிலையை அறியாமல் சிறுவர்கள் அம்மரநிழலில் விளையாடிக் கொண்டிருப்பர் என்பதாம்.

சொற்பொருள்

1. ஈன் - குஞ்சு ஈன்ற; உயவும் - வருந்தும்.
2. பொரி அரை - பொரிந்த அடிமரம்; வேம்பு - வேப்ப மரம்.
3. கட்டளை - பொன்னுரைக்கும் கல்; வட்டு - வட்டாடும் அரங்கு (வட்டு - ஒரு விளையாட்டு); இழைத்து - அமைத்து.
4. நெல்லி - நெல்லிக்காய்களைக்கொண்டு.
5. வில்ஏர் உழவர் - வேட்டுவர்; வெம்முனை - வெய்ய குடியிருப்பு.
6. உரன் - வலிமை; சிதைதல் - அழிதல்.
7. உள்ளுதல் - நினைத்தல்; உள்ளிய - நினைத்த.
8. வினைமுடித்து - செயலை முடிப்பது; அன்ன - போன்ற; இனியோள் - இனிமையானவள்.
9. மனைமாண் சுடர் - மனைக்கு மாட்சிமை தரும் மாலை விளக்கு; படர்பொழுது - (நம்மை நினைந்து) வருந்தும் பொழுது.

தலைவன் கூற்று

நற்றிணை 62 **இளங்கீரனார்**

திணை : பாலை

கூற்று

முன்னொரு காலத்துப் பொருள்வயிற் பிரிந்து வந்த தலைமகன், பின்னும் பொருள் வலிக்கப்பட்ட நெஞ்சிற்குச் சொல்லிச் செலவழுங்கு வித்தது.

கூற்று விளக்கம்

பொருளீட்டப் பிரிய வேண்டும் என்று கருதிய தன்னுடைய நெஞ்சத்தினிடம் தலைவன், முன்னொரு காலத்தில் பொருள் கருதிப் பிரிந்து சென்றபோது தானுற்ற துயரினைத் தன் நெஞ்சிடம் கூறி, தற்போது கொண்டுள்ள பிரியும் எண்ணத்தைக் கைவிடுமாறு கூறியது.

வேர்பிணி வெதிரத்துக் கால்பொரு நரல்இசை
கந்துபிணி யானை அயாஉயிர்த் தன்ன
என்றூழ் நீடிய வேய்பயில் அழுவத்துக்
குன்றுஊர் மதியம் நோக்கி நின்றுநினைந்து,
உள்ளினேன் அல்லனோ யானே முள்எயிற்று,
திலகம் தைஇய தேம்கமழ் திருநுதல்,
எமதும் உண்டோர் மதிநாள் திங்கள்,
உரறுகுரல் வெவ்வளி எடுப்ப, நிழல்தப
உலவை ஆகிய மரத்த
கல்பிறங்கு மாமலை உம்பரஃது எனவே?

தெளிவுரை

வேர்கள் ஒன்றோடொன்று பின்னிப்பிணைந்திருக்கும் மூங்கில் காட்டில் காற்று மோதிச் செல்லுதலால் உண்டாகும் ஓசை, தறியிலே கட்டப்பெற்ற யானை வருந்திப் பெருமூச்சு விடுவதுபோல் இருக்கும். எப்போதும் கோடைக்காலமே நிலைபெற்றிருக்கும் அக்காட்டுவழியே முன்னொரு காலத்தில் பொருள் தேடிவரச் சென்றபோது, மலையிடத்தே மறையும் முழு நிலவினை நோக்கியதும் மேலே நடை தொடர முடியாமல் நின்று, தலைவியை நினைத்து, முள் போன்ற கூரிய பற்களையும்

திலகமிடப்பெற்ற இனிமை கமழும் அழகிய நெற்றியையும் கொண்ட முழு நிலவு ஒன்று நம் உரிமைப் பொருளாய் நம்மிடம் உள்ளதையும் நினைத்தேன் அன்றோ! அந்நிலவு (தலைவியின் முகம்), வெம்மைக்காற்று வீசுவதால் இலையுதிர்ந்து, நிழலின்றி, உலர்ந்து நிற்கின்ற மரங்களோடு கற்கள் நிரம்பியுள்ள இம் மலைக்கு அப்பாலுள்ள ஊரிலன்றோ இப்போது உள்ளது என்று நினைத்து வருந்தினேன் அன்றோ? (மலைக்கு அப்பாலுள்ள ஊரிலிருக்கும் தலைவியின் திங்கள் முகத்தை எண்ணி நான் வருந்தியிருந்தது உனக்குத் தெரியுமன்றோ?)

கருத்து

நெஞ்சே! முன்னொரு முறை பொருள் தேடக் காட்டுவழியில் சென்ற போது தலைவி நினைவாலேயே வருந்தினேன் என்பது அறியாததா?

விளக்கம்

"முன்னொரு முறை பொருளீட்டி வரும் நோக்குடன் தலைவியினைப் பிரிந்து பாலைநில வழியில் சென்றேன். மாலை நேரத்தில் குன்றிடையே மறையும் முழு நிலவினை நோக்கினேன். உடனே அந்நிலவுபோன்ற முகம் கொண்ட தலைவியின் நினைவு தோன்றியது. அம்முகத்திற்குரியவள் குன்றுக்கு அப்பாலிருப்பதால் அப்போது அவளை அடைய இயலாது பெரிதும் வருந்தினேன் என்பதை நெஞ்சமே, நீ அறிவாய்! இப்போது பொருளீட்டக் கருதி இவளைப் பிரிந்தால் முன்போல நான் அவ் வருத்தத்தை அடைய நேரிடும். ஆதலின் நெஞ்சே! இப்போது நான் தலைவியைப் பிரியேன்" எனத் தலைவன் தன் நெஞ்சத்தினிடம் கூறிப் பொருளீட்டச் செல்லும் பயணத்தினைத் தவிர்க்கிறான்.

சொற்பொருள்

1. வேர் பிணி - வேர்கள் பின்னிக்கொண்டிருக்கும்; வெதிரம் - மூங்கில்; கால் - காற்று; பொரு - மோதும்; நரல் இசை - ஒலிக்கும் இசை.
2. கந்துபிணி - கட்டுத் தறியிலே கட்டப்பெற்ற; அயா - வருந்தி; உயிர்த்து அன்ன - பெருமூச்சு விட்டதுபோல.
3. என்றூழ் - கோடை; வேய் - மூங்கில்; பயில் - பொருந்திய; அழுவம் - காடு.
4. மதியம் - நிலவு.

5. உள்ளினேன் - (தலைவியை) நினைத்தேன்; அல்லனோ - அன்றோ; முள்எயிறு - முள் போன்ற பற்கள்.
6. தைஇய - இடப்பெற்ற; தேம்கமழ் - இனிமை கமழும்.
7. எமதும் - என்னுடையதும்; நாள் திங்கள் - கலைமுற்றும் நிறைந்த; ஓர்மதி உண்டு - ஒரு நிலவு உண்டு.
8. உரறு குரல் - முழங்குகின்ற ஒலியினைக் கொண்ட; வெவ்வளி - வெவ்விய சூறைக்காற்று; எடுப்ப - வீசுதலால்; நிழல் தப - நிழல் இன்றாக.
9. உலவை ஆகிய - உலர்ந்து நிற்கின்ற.
10. கல் பிறங்கு - கற்கள் நிரம்பியுள்ள; உம்பர் - அப்பால்.

தலைவன் கூற்று

அகநானூறு 3 **எயினந்தை மகனார் இளங்கீரனார்**

திணை : பாலை

கூற்று

முன்னொரு காலத்து நெஞ்சினால் பொருள் வலிக்கப்பட்டுப் பிரிந்து இடைச்சுரத்தினில் அவள் நலம் நயந்து மீளலுற்ற நெஞ்சினைக் கழறிப் போய்ப் பொருள் முடித்து வந்த தலைமகன், பின்னும் பொருள் வலிக்கப்பட்ட நெஞ்சிற்குச் சொல்லிச் செலவழுங்கியது.

கூற்று விளக்கம்

முன் ஒரு காலத்து, பொருளை விரும்பித் தலைவியைப் பிரிந்து சென்றான், தலைவன். இடைவழியில் அவன் மனம் தலைவியை நினைந்து மீளுமாறு வற்புறுத்தியது; ஆனால் அதனை மீறிப் போய்ப் பொருள் தேடி வந்தான். இப்போது மீண்டும் அவன் நெஞ்சு பொருள் தேடி வர ஆர்வம் கொண்டது. பழைய நிலையைத் தன் நெஞ்சிற்குச் சொல்லி, அவன் தன் பயணத்தை நிறுத்தியது.

இருங்கழி முதலை மேஎந்தோல் அன்ன
கருங்கால் ஓமைக் காண்புஇன் பெருஞ்சினைக்
கடியுடை நனந்தலை, ஈன்றுஇளைப் பட்ட,
கொடுவாய்ப் பேடைக்கு அல்குஇரை தரீஇய,
மான்றுவேட்டு எழுந்த செஞ்செவி எருவை

வான்தோய் சிமைய விறல்வரைக் கவாஅன்,
துளங்குநடை மரையா வலம்படத் தொலைச்சி,
ஒண்செங் குருதி உவறிஉண்டு அருந்துபு,
புலவுப்புலி துறந்த கலவுக்கழி கடுமுடை,
கொள்ளை மாந்தரின் ஆனாது கவரும்
புல்இலை மராஅத்த அகன்சேண் அத்தம்,
கலம்தரல் உள்ளமொடு கழியக் காட்டி,
பின்நின்று துரக்கும் நெஞ்சம் நின்வாய்
வாய்போல் பொய்ம்மொழி எவ்வம்என் களைமா
கவிர்இதழ் அன்ன காண்புஇன் செவ்வாய்,
அம்தீம் கிளவி, ஆய்இழை, மடந்தை
கொடுங்குழைக்கு அமர்த்த நோக்கம்
நெடுஞ்சேண் ஆர்இடை விலங்கும் ஞான்றே.

தெளிவுரை

உப்பங்கழியில் உள்ள முதலையின் மேல்தோல் போன்ற அடியினைக் கொண்ட மரத்தின் அழகிய பெரிய கிளையின் காப்பினைக் கொண்ட உச்சியில், வளைந்த வாயினைக் கொண்ட குஞ்சினை ஈன்ற பெண் கழுகுக்கு, சிவந்த செவிகளைக் கொண்ட அதன் ஆண், இரை தேடிப் புறப்பட்டது.

விண்ணைத் தொட்டு நிற்கும் மலையுச்சியில் சிறப்பு வாய்ந்த பக்கமலையில் அசைந்த நடையைக் கொண்ட ஒரு மானைத் தன் வலப் பக்கத்திலே விழும்படி கொன்று, அதன் ஒளி பொருந்திய சிவந்த குருதியை நிரம்ப குடித்த புலி, புலால் நாறும் மானைக் கைவிட்டு நீங்கும். மிக்க நாற்றமுள்ள அப்புலால் உணவைப் பருந்துச்சேவல் கொள்ளையிடும்; கள்வரைப்போல் கவர்ந்து செல்லும். அத்தகைய இடத்தினைக் கொண்ட பாலை நிலத்தில் சிறிய இலைகளைக் கொண்ட மராமரங்களைக் கொண்ட அகன்று நீண்ட சுரவழியினை, அணிகலன்களை ஈட்டி வரும் எண்ணத்தாலே கடந்து செல்ல என்னைப் பின்னின்று தூண்டும் நெஞ்சமே!

முள் முருக்கை மலரைப் போன்ற சிவந்த வாயினையும், அழகிய இனிய மொழியினையும், ஆய்ந்தெடுத்த அணியினையும்

கொண்ட நம் தலைவியின் வளைந்த மகரக் குழையுடன் போரிடச் செல்வது போன்ற பார்வை, என் உள்ளத்தைச் சுரத்தில் செல்வதைத் தடுக்கும் (என்பதை அறியாயா?)

அங்ஙனம் தடுக்குமாயின், உண்மை போன்ற உன் பொய்ம் மொழி அப்போது என் வருத்தத்தை எவ்வாறு போக்கும்?

கருத்து

அச்சம் தரும் வழியில் சென்று பொருளீட்ட என்னைத் தூண்டும் நெஞ்சமே! தலைவியின் மயக்கும் கண் பார்வை, வழியில் என் பயணத்தைத் தடுத்து நிறுத்தி விடுமே! உன் பொய்ம்மொழியைக் கேட்டு இப்போது நான் புறப்பட மாட்டேன்.

விளக்கம்

"பொருள் ஈட்ட வேண்டும் என்னும் விருப்பத்தோடு அகன்ற நெடிய காட்டுவழியில் பிரிந்து செல்லுமாறு என்னைத் தூண்டுகின்ற நெஞ்சமே! காதணியோடு போரிடும் தலைவியின் நீண்ட கண் பார்வை, அரிய காட்டுவழியில் வந்து என்னைத் தடுக்கும்போது, நீ இப்போது கூறும் உண்மை போன்ற பொய்ம் மொழிகள் என் துன்பத்தை எவ்வாறு போக்கும்?" என்று கூறிப் பொருள்வயிற்பிரிய இயலாது எனத் தலைவன் செலவினைத் தவிர்த்தான்.

சொற்பொருள்

1. இருங்கழி - பெரிய உப்பங்கழி; மேஎந்தோல் - மேல் தோல்.
2. ஓமை - ஓமை மரம்; காண்பு இன் - காண்பதற்கு இனிய.
3. கடி - காவல்; நனந்தலை - அகன்ற இடம்; ஈன்று - குஞ்சினை ஈன்று; இளைப்பட்ட - துன்பப்பட்ட.
4. கொடுவாய் - வளைந்த வாய்; பேடை - பெண் பருந்து; அல்கு இரை - மிகுதியான இரை.
5. மான்று - மயங்கி; எருவை - பருந்து.
6. சிமைய - உச்சியைக் கொண்ட; விறல் - சிறப்பு; கவாஅன் - பக்க மலை, மலைச்சாரல்.
7. துளங்கு நடை - அசைந்த நடை; மரையா - ஒரு வகை மான்; வலம் பட - வலப்பக்கமாய் விழும்படி; தொலைச்சி - கொன்று வீழ்த்தி.
8. உவறி - உறிஞ்சி.

9. புலவுப் புலி - புலால் நாறும் புலி; துறந்த - விட்டுப் போன; கலவுக்கழி - மூட்டுவாய் கழிந்த; கடுமுடை - மிகுந்த நாற்றம்.
10. ஆனாது - விடாது.
11. புல் இலை - சிறிய இலை; மராஅம் - மரா மரம்; அகன்சேண் - அகன்ற நெடிய; அத்தம் - வழி.
12. கலம் - கலன் - அணிகலன்; கழியக் காட்டி - கடந்து செல்வதாய்க் காட்டி.
13. துரக்கும் - தூண்டும்; நின்வாய் - உன்னிடம் தோன்றும்.
14. வாய் போல் பொய்ம்மொழி - உண்மை போன்ற பொய்ம்மொழி; எவ்வம் - துன்பம்; களைமா - எங்ஙனம் போக்க இயலும்?
15. கவிர் - முருக்க மரம்; இதழ் - பூ.
16. ஆய் இழை - ஆராய்ந்தெடுத்த அணிகலன்.
17. கொடுங்குழை - வளைந்த காதணி; அமர்த்த - மாறுபட்ட; நோக்கம் - பார்வை.
18. ஆர்இடை - சுர வழியிடத்தே; விலங்கும் ஞான்று - தடுக்கும் பொழுது.

தலைவன் கூற்று

அகநானூறு 337 **பாலை பாடிய பெருங்கடுங்கோ**

திணை : பாலை

கூற்று

முன்னொரு காலத்துப் பொருள்வயிற் பிரிந்து வந்த தலைமகன், பின்னும் பொருள் கடைக்கூட்டிய நெஞ்சிற்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

முன்னொரு நாளில் பொருள் விரும்பிப் பிரிந்து சென்று பொருளீட்டித் திரும்பிய தலைவன், பின்னும் பொருள் விரும்பிய நெஞ்சத்தினிடம் முன் நடந்தவை பற்றிக் கூறிச் செலவினை நிறுத்துமாறு சொல்லியது.

சாரல் யாஅத்து உயர்சினை குழைத்த
மாரி ஈர்ந்தளிர் அன்ன மேனி,
பேர்அமர் மழைக்கண், புலம்புகொண்டு ஒழிய,
ஈங்குப்பிரிந்து உறைதல் இனிதன்று, ஆகலின்
அவணது ஆக, பொருள்என்று, உமணர்

கணநிரை அன்ன, பல்கால், குறும்பொறை,
தூதுஒய் பார்ப்பான் மடிவெள் ஓலை
படையுடைக் கையர் வருதிறம் நோக்கி,
உண்ணா மருங்குல் இன்னோன் கையது
பொன்ஆ குதலும் உண்டுஎன, கொன்னே
தடிந்துஉடன் வீழ்த்த கடுங்கண் மழவர்,
திறன்இல் சிதாஅர் வறுமை நோக்கி,
செங்கோல் அம்பினர் கைந்நொடியாப் பெயர,
கொடிவிடு குருதித் தூங்குடர் கறீஇ,
வரிமரல் இபவின் ஒருநரி ஏற்றை,
வெண்பரல் இமைக்கும் கண்பறி கவலை,
கள்ளி நீழல் கதறுபு வதிய,
மழைக்கண் மாறிய வெங்காட்டு ஆர்இடை,
எமியம் கழிதந் தோயே – பனிஇருள்
பெருங்கலி வானம் தலைஇய
இருங்குளிர் வாடையொடு வருந்துவள் எனவே.

தெளிவுரை

பக்கமலைச்சாரலில் யாமரத்தின் உயர்ந்த கிளைகளில் மழைக் காலத்தில் துளிர்த்த தளிர் போன்ற மேனியுடன் குளிர்ந்த கண்களையும் கொண்டவள், எம் தலைவி. அவள் தனிமையில் வருந்தியிருக்க நான் இங்கிருந்து பிரிந்து சென்று தங்குதல் நல்லதன்று. ஆதலின், அவள் உள்ள இடத்தில் இருத்தலே சிறப்பு. உப்பு வாணிகரின் பொதிகளைச் சுமக்கும் கழுதைகளின் வரிசைபோல விளங்கும் பாறைகளின் வழியே பல முறையும் தூது செல்லும் பார்ப்பான், தன் மடியில் கட்டிய வெண்மை யான ஓலைச் சுருளுடன் வருகின்ற இயல்பைக் கண்டனர், எயினர். அவன் உண்ணாமையால் வாடிய விலாவுடன் இருந்தான். இவன் கையில் இருப்பது பொன்னாகவும் இருக்கக் கூடும் என்று கருதி அவனைக் கொன்று வீழ்த்தினர், அக்கொடிய மறவர்; உடுப்பதற்குத் தகுதியற்ற கந்தையை உடுத்தியிருக்கும் பார்ப்பானது வறுமையைக் கண்டு, தாங்கள் செய்த செயலுக்கு வருந்தித் தம் கையை நொடித்து வேறு வழியில் சென்றனர். நீண்டு ஒழுகிய இரத்தத்துடன் தொங்கிய அவனது பிணக்

குடலைக் கடித்துக் கற்றாழை நிறைந்த பரல்கற்கள் மின்னும் கவர்த்த வழியில் ஓர் ஆண்நரி கள்ளி நிழலில் கூக்குரல் இட்டவாறு தங்கியிருந்தது. மழை பெய்யாதொழிந்த வெப்பம் மிக்க காட்டுவழியில் நாம் (முன் ஒருமுறை) தனியே இருக்க, நீ மட்டும் நடுக்கத்தைக் கொண்ட இருளில் ஆரவாரத்துடன் மழை பெய்தமையால், குளிரோடு கூடிய பெரிய வாடைக்காற்றில் அவள் வருந்துவாள் என்று எண்ணி, மீண்டும் இங்குத் திரும்பி வந்தாய் அன்றோ?

கருத்து

'நெஞ்சமே! குளிர் மிகுந்து வாடைக்காற்று வீசும் காலத்தில் தலைவி தனித்திருக்க நாம் பொருள் தேடி இங்கிருப்பது இனிதன்று என்று எண்ணி, அரிய காட்டு வழியின் இடையே நீ திரும்பி வந்தாயே! அது நினைவில் இல்லையா?'

விளக்கம்

'நெஞ்சமே! மழை பெய்யாது ஒழிந்த இக்காலத்தில் தலைவி தனித்திருக்க, நாம் பொருள் தேடிப் பிரிந்து செல்வது இனிதன்று. அவள் இருக்கும் இடத்திலே இருப்பதுதான் சிறந்தது. மிகக் குளிரோடு வாடைக் காற்றால் அவள் வருந்துவள் என்று கூறி, அரிய கொடுங்காட்டு வழியில் ஒருமுறை நான் தனித்திருக்க, நீ மீண்டு வந்து இல்லத்தே அவளோடு சேர்ந்தாயன்றோ? இப்போதும் என்னைப் பொருள் தேட அழைத்து, இடைவழியில் பிரிவாற்றாமையால் என்னைத் தனித்துவிட்டுத் திரும்பி விடுவாய். ஆதலின், நான் உன்னோடு வரமாட்டேன்' என்று தலைவன் தன் நெஞ்சத்தினிடம் கூறித் தான் பொருள் தேடச் செல்லுதலைத் தவிர்த்தான்.

சொற்பொருள்

1. சாரல் - பக்கமலை; யாஅ - ஒருவகை மரம்; சினை - கிளை; குழைத்த - தளிர்த்த.
2. மாரி - மாரிக்காலம்; ஈர்ந்தளிர் - குளிர்ந்த தளிர்.
3. அமர் - விரும்பத்தக்க; புலம்பு - தனிமை.
4. உறைதல் - தங்கியிருத்தல்.

5. அவணது - (அவள் உள்ள) அவ்விடத்தில் இருப்பதே (நமக்குப் பொருள்); உமணர் - உப்பு வாணிகர்.
6. கணம் நிரை - கூட்ட வரிசை; பொறை - பாறை.
7. தூதுஒய் பார்ப்பான் - தூது செல்லும் பார்ப்பான்; மடிவெள் ஓலை - தூதுச் செய்தியுள்ள வெண்ணிற ஓலை.
8. படையுடைக் கையர் - கையில் படையை (வில்லை)க் கொண்ட மறவர்.
9. உண்ணா மருங்குல் - உண்ணாமையால் வாடிய விலாப்பகுதி.
10. ஆகுதலும் - ஆகவும்; கொன்னே - வீணே.
11. தடிந்து - கொன்று.
12. சிதாஅர் - கிழிந்த துணி (கந்தைத்துணி).
13. கைந்நொடியா - கையை நொடித்து.
14. கொடிவிடு குருதி - நீள ஒழுகிய குருதி; தூங்கு குடர் - தொங்கும் குடல்; கறீஇ - கடித்து.
15. வரிமரல் - வரிகளைக் கொண்ட பரல் என்னும் ஒருவகைக் கற்றாழை; இயவின் - வழியில்; ஏற்றை - ஆண்.
16. பரல் - பரல் கற்கள்; இமைக்கும் - மின்னும்; கவலை - கவர்த்த வழி.
17. கதறுபு - கூக்குரலிட்டு; வதிய - தங்கியிருக்க.
18. மழைக் கண் மாறுதல் - மழை பெய்யாது ஒழிந்த; ஆர்இடை - வழியின் இடையே.
19. எமியம் - (முன்பு ஒருகால் நான்) தனியாய் (இருக்க); கழிதந் தோயே - (நீ மட்டும்) மீண்டு வந்தாயன்றோ?
20. கலி - ஆரவாரம்; தலைஇய - பொருந்திய.
21. இருங்குளிர் - மிகு குளிர்.

தலைவன் கூற்று

அகநானூறு 379 **பாலை பாடிய பெருங்கடுங்கோ**

திணை : பாலை

கூற்று

முன்னொரு காலத்துப் பொருள் முற்றி வந்த தலைமகன் பின்னும் பொருள் கடைக்கூட்டிய நெஞ்சிற்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

முன்னாளில் பொருள் விரும்பிப் பிரிந்து சென்று திரும்பிய தலைவன், பின்னும் பொருள் விரும்பிய நெஞ்சத்தினிடம் சொல்லியது.

நம்நயந்து உறைவி தொல்நலம் அழிய,
தெருளா மையின் தீதொடு கெழீஇ,
அருள்அற, நிமிர்ந்த முன்பொடு பொருள்புரிந்து,
ஆள்வினைக்கு எதிரிய, மீளி நெஞ்சே
நினையினை யாயின், எனவ கேண்மதி!
விரிதிரை முந்நீர் மண்திணி கிடக்கை,
பரிதிஅம் செல்வம் பொதுமை இன்றி,
நனவின் இயன்றது ஆயினும், கங்குல்
கனவின் அற்று,அதன் கழிவே, அதனால்,
விரவுறு பல்மலர் வண்டுசூழ்பு அடைச்சி,
சுவல்மிசை அசைஇய நிலைதயங்கு உறுமுடி
ஈண்டுபல் நாற்றம் வேண்டுவயின் உவப்ப,
செய்வுறு விளங்குஇழைப் பொலிந்த தோள்சேர்பு,
எய்திய கனைதுயில் ஏற்றொறும் திருகி,
மெய்புகு வன்ன கைகவர் முயக்கின்
மிகுதிகண் டன்றோ இலனே, நீநின்
பல்பொருள் வேட்கையின், சொல்வரை நீவி,
செலவுவலி யுறுத்தனை ஆயின், காலொடு
கனைஎரி திகழ்ந்த இலையில் அம்காட்டு,
உழைப்புறத்து அன்ன புள்ளி நீழல்,
அசைஇய பொழுதில் பசைஇய வந்து,இவள்
மறப்புஅரும் பல்குணம் நிறத்துவந்து உறுதர,
ஒருதிறம் நினைத்தல் செல்லாய், திரிபுநின்று,

உறுபுலி உழந்த வடுமருப்பு ஒருத்தற்குப்
பிடிஇடு பூசலின் அடிபடக் குழிந்த
நிரம்பா நீள்இடைத் தூங்கி,
இரங்குவை அல்லையோ, உரம்கெட மெலிந்தே?

தெளிவுரை

நம்மை விரும்பி இருக்கும் தலைவியின் பழைய அழகு கெட, அறியாமையால் நீ தீமையை நினைந்தாய்! இரக்கம் இல்லாமல் மிக்க வலிமையோடு பொருள் தேட விரும்பினை. அம் முயற்சியில் முன்னின்ற நெஞ்சமே! நீ சற்று நினைத்துப் பார். நான் சொல்வதைக் கேள். விரிந்த அலைகளைக் கொண்ட கடலால் சூழப்பெற்ற இந்நிலவுலகம் முழுவதையும் பிறர்க்குப் பொது என்பது இன்றி, ஆட்சிச் சக்கரத்தைச் செலுத்தும் சிறந்த செல்வமானது உண்மையாகவே கிடைத்தது என்றாலும், அஃது இரவிடைக் கனவில் தோன்றி மறைவது போன்ற இயல்பு டையது. (நீ பிரியாது இருப்பாயாயின்) வண்டு மொய்க்குமாறு பல மலர்கள் சூடிய தலைவியின் அசையும் திரண்ட கூந்தலில் நிறைந்துள்ள நறுமணத்தை வேண்டும்போது பெற்று மகிழலாம்; அணிகளால் அழகு பெற்ற அவள் தோள்களைச் சேர்த்து இன்புறலாம்; மிகுந்த உறக்கம் கொள்ளும்போது, உடலில் உடல் புகுவதுபோல் தழுவிக்கொள்ளலாம். இத் தழுவலை விட மேலான பொருட்செல்வத்தை நான் கண்ட தில்லை.

நீ பொருள் விருப்பத்தினால் என் சொல்லைக் கடந்து பிரிந்து செல்லுதலை வற்புறுத்துகின்றாய். அவ்வாறு பிரிந்து சென்றால், காற்றினால் எழுந்த தீ, பரவி அழித்தமையாலே இலையற்றுப் போன காட்டில், மானின் உடலில் தோன்றும் புள்ளிகளைப் போன்ற நிழலில் தங்கியிருக்கும்போது தலைவியின் மறத்தற்கரிய பல குணங்களும் உன் நெஞ்சத்தில் வந்து புகும். நீ வேறு ஒன்றையும் நினைக்க இயலாமல் உன் உறுதி கெட்டு மெலிவடை வாய். பெரிய புலியுடன் போரிட்டு வருந்திய ஆண்யானையின் பொருட்டு அதன் பெண்யானை ஆரவாரத்தோடு அடி வைத்துச் சென்றதால் உண்டாகிய பள்ளமான இடங்களைக் கொண்ட, செல்லத் தொலையாத நீண்ட பாலை வழியில் மயங்கி வருந்துவாய்!

கருத்து

நெஞ்சமே! பொருளை விரும்பிப் புறப்பட்டால், இடைவழியில் தலைவியை நினைந்து இரங்குவாய்.

விளக்கம்

"நெஞ்சே! கேள்! உலகாளும் பெருஞ்செல்வம் கைகூடிக் கிடைத்ததாயினும் அது கனவுபோல் தோன்றி மறைவதே. அதனால், தலைவியைவிடப் பெருஞ்செல்வம் பிறிதில்லை. நீ பொருள் வேட்கையால் பிரிந்து செல்ல விரும்பினால் இவளது பல குணங்களும் உன் நெஞ்சை வந்து உறுத்தும். போகவும் இயலாது; திரும்பவும் இயலாது; வழியிடையில் தங்கி வருந்து வாய்" என்று கூறித் தலைவன் தான் பொருள்தேடச் செல்வதை நிறுத்தினான்.

சொற்பொருள்

1. நயந்து - விரும்பி; உறைவி - வீட்டில் இருப்பவள்.
2. தெருளாமையின் - அறிவு தெளியப்பெறாமையால்; கெழீஇ - பொருந்தி.
3. நிமிர்ந்த - மிக்க; முன்பு - வலிமை.
4. ஆள்வினைக்கு எதிரிய - முயற்சி மேற்கொண்ட; மீளி - வலிய.
5. நினையினை ஆயின் - சிந்திப்பாய் ஆனால்; எனவ கேண்மதி - நான் சொல்வதைக் கேள்.
6. முந்நீர் - கடல்; மண்திணி கிடக்கை - மண் திணிந்த இவ்வுலகம் முழுவதும்.
7. பரிதிஅம் செல்வம் - ஆட்சி செலுத்தும் செல்வம் (பரிதி - ஆணைச் சக்கரம்).
8. நனவின் இயன்றது ஆயினும் - உண்மையாகவே கூடியதாயினும்; கங்குல் - இரவு.
9. கழிவு - மறைவு.
10. விரவு - கலந்து; அடைச்சி - சூடி.
11. சுவல்மிசை - பிடரியின் மேல்; தயங்கு - விளங்குகின்ற; உறுமுடி - மிக்க கூந்தல்.
12. ஈண்டு - செறிந்த; வேண்டுவயின் - வேண்டுமிடத்து; உவப்ப - பெற்று மகிழ.
13. பொலிந்த - பொலிவுற்ற (அழகு பெற்ற); சேர்பு - அணைந்து.

14. கனை - மிக்க; ஏற்றொறும் - ஏற்கும்தொறும்; திருகி - பொருந்திய.
15. மெய்புகுவன்ன - மெய்யினுள் மெய் புகுதல் ஒத்த; முயக்கின் - தழுவலினால்.
16. மிகுதி - மேம்பட்ட (செல்வம்)
17. சொல்வரை நீவி - என் சொல்லின் எல்லை கடந்து.
18. கால் - காற்று.
19. கனை - மிகுதி; எரி - நெருப்பு; இலையில் - இலையற்ற.
20. உழை - மான்; புறத்து - உடம்பில் உள்ள; புள்ளி நீழல் - புள்ளிகளைக் கொண்ட மர நிழலில்.
21. அசைஇய - தங்கியிருந்த; பசைஇ - விரும்பி.
22. நிறம் - மார்பு; உறுதர - வந்து புக.
23. ஒரு திறம் நினைத்தல் - ஒரு வகையாய் நினைக்க இயலாமல்; திரிபு நின்று - வேறுபட்டு நின்று.
24. உறு புலி - பெரிய புலி; உழந்த - போர் செய்து; வடு - வடு (பொருந்திய); ஒருத்தல் - ஆண்யானை.
25. பிடி - பெண்யானை; இடு - எழுப்புகின்ற; பூசல் - ஆரவாரம்.
26. நிரம்பா - செல்லத் தொலையாத; நீள் இடை - நீண்ட சுரம்; தூங்கி - தங்கி.
27. உரம் கெட - மனத்திட்பம் அழியும்படி.

தலைவன் கூற்று

அகநானூறு 353 **மதுரை அளக்கர் ஞாழலார் மகனார் மள்ளனார்**

திணை : பாலை

கூற்று

முன் ஒரு காலத்துப் பொருள்வயிற்பிரிந்த தலைமகன் பொருள் முற்றி வந்திருந்த காலத்து, மீண்டும் பொருள் கடாவின நெஞ்சிற்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

முன் ஒருமுறை தலைவியைப் பிரிந்து போன தலைவன், மிகவும் பொருள் சேர்த்து வந்து இல்லறம் நடத்தினான். அவன் நெஞ்சம் மீண்டும் பொருள் ஈட்டத் தூண்டிற்று. அப்போது அவன் தன் நெஞ்சிற்குச் சொல்லியது.

ஆள்வினைப் பிரிதலும் உண்டோ? பிரியினும்,
கேள்,இனி வாழிய, நெஞ்சே நாளும்
கனவுக் கழிந்தனைய வாகி, நனவின்,
நாளது செலவும், மூப்பினது வரவும்,
அரிதுபெறு சிறப்பின் காமத்து இயற்கையும்
இந்நிலை அறியாய் ஆயினும், செந்நிலை
அமைஆடு அம்கழை தீண்டி, கல்என
ஞெமைஇலை உதிர்த்த எரிவாய்க் கோடை
நெடுவெண் களரி நீறுமுகந்து சுழல,
கடுவெயில் திருகிய வேனில் வெங்காட்டு,
உயங்குநடை மடப்பிணை தழீஇய, வயங்குபொறி,
அறுகோட்டு, எழிற்கலை அறுகயம் நோக்கி,
தெண்நீர் வேட்ட சிறுமையின், தழைமறந்து,
உண்நீர் இன்மையின், ஒல்குவன தளர,
மரம்நிழல் அற்ற இயவின் சுரன்இறந்து,
உள்ளுவை அல்லையோ மற்றே உள்ளிய
விருந்துஒழிவு அறியாப் பெருந்தண் பந்தர்,
வருந்தி வருநர் ஓம்பி, தண்ணெனத்
தாதுதுகள் உதிர்த்த தாழைஅம் கூந்தல்
வீழ்இதழ் அலரி மெல்அகம் சேர்த்தி,
மகிழ்அணி முறுவல் மாண்ட சேக்கை,
நம்மொடு நன்மொழி நவிலும்
பொம்மல் ஓதிப் புனைஇழை குணனே?

தெளிவுரை

நெஞ்சே! பொருளீட்டும் முயற்சியில் இனி நாம் பிரிய இயலுமா? அவ்வாறு பிரிய நேர்ந்தாலும் நான் சொல்வதைக் கேள். நாள்கள் கழிவதும், முதுமையின் வருகையும், காம மிகுதியும், கனவில் காணும் பொருள்கள் விழிப்புற்றபோது மறையும் தன்மையுடையன போன்றவை என்பதை இப்போது நீ அறிய மாட்டாய்.

வெயில் முறுகிய வேனிற்காலக் கோடைக்காற்று, அசைகின்ற மூங்கில் தண்டினைத் தாக்கும்; 'கல்' என்னும் ஒலியுடன் ஞெமை

மரத்தின் இலைகளை உதிர்க்கும்; நீண்ட களர் நிலத்துப் புழுதியை அள்ளி வீசும். அக்காட்டில் இளைய பெண்மானைத் தழுவியவாறு, புள்ளிகள் பொருந்திய அற்றற்றுள்ள கொம் பினைக் கொண்ட அழகிய ஆண்மான் தெளிந்த நீர் பருகக் குளத்தினை நோக்கிச் சென்று, அங்கு நீர் இல்லாமையால் வாடிச் சோர்ந்து, மரங்களின் நிழலற்றுப் போன வழிகளில் வருந்திச் செல்லும். (இக்காட்டுவழியில்தான் நீ செல்ல வேண்டும்.)

விருந்தினர் இடையறாது வரும் குளிர்ந்த பந்தலின்கீழிருந்து வறுமையால் வருந்தி வருவாரைப் பாதுகாத்து இல்லறம் பேணுபவள், நம் தலைவி. தாழையின் மகரந்தப்பொடியை அப்பிய தன் கூந்தலின் மெல்லிய பின்னலில் விரும்பிய பூவின் இதழை வைத்துப் பின்னி மகிழ்ச்சி கொண்ட புன்னகையுடன் மாட்சிமைப்பட்ட படுக்கையிலிருந்து நம்முடன் இனிய மொழிகளைப் பேசும் நம் தலைவியின் குணங்களை நினைத்துக் காட்டுவழியில் செல்லும்போது நீ மயங்குவாய் அன்றோ? (துன்பம் தரும் கொடிய காட்டிடையே செல்லும்போது தலைவியின் அழகையும், இன்மொழியையும், பண்பு நலனையும் நினைத்து நீ மீள்வாய். ஆதலின், பயணத்தைக் கைவிடு) எனத் தலைவன் தன் நெஞ்சிற்குக் கூறுகிறான்.

கருத்து

நெஞ்சே! முன்னொரு முறை பொருள் தேடித் திரும்பியுள்ளாய். இனிப் பொருள் தேடப் பிரியக் கருதாதே!

விளக்கம்

"நெஞ்சே! வாழிய! பொருள் தேடும் முயற்சியால் இனி இவளைப் பிரிதலும் கூடுமோ? பிரிவதாயினும் நான் கூறுவதைக் கேள். நாள் கழிவதும், முதுமை வருவதும், காமத்தின் இயற்கையும் ஆகியவை கனவில் கண்ட பொருள்கள் விழிப்புற்றபோது மறையும் தன்மையன போன்றன என்பதை இப்போது நீ அறியாய்; ஆயினும், பாலையைக் கடந்து செல்லும்போது நம் தலைவியின் இனிய குணங்களை நினைத்து மயங்குவாய்

அன்றோ? (இதனை முன்பே நீ அறிந்ததுதானே. ஆதலின், போதல் ஒழிக) என்று தலைவன் தன் நெஞ்சத்தினிடம் கூறினான்.

சொற்பொருள்

1. ஆள்வினைப் பிரிதல் - பொருளீட்டும் முயற்சி காரணமாய்ப் பிரிதல்.
3. கனவு கழிந்தனைய - கனவிலே பொருள்கள் தோன்றி மறைவது போல.
4. நாளது செலவு - நாள்கள் விரைந்து கழிதல்.
6. செந்நிலை - செவ்விய நிலை.
7. அமை - மூங்கில்; கழை - தண்டு; தீண்டி - தாக்கி.
8. ஞெமை - ஒரு வகை மரம்; எரிவாய் - வெப்பம் பொருந்திய; கோடை - மேல்காற்று.
9. களரி - களர் நிலம்; நீறு - புழுதி.
10. திருகிய - முறுகிய.
11. உயங்கு நடை - வருந்தித் தளர்ந்த நடை; பொறி - புள்ளி.
12. அறுகோட்டு - அறல்பட்ட கொம்புகளைக் கொண்ட; அறுகயம் - நீரற்ற குளம்.
13. தெண்நீர் - தெள் நீர் - தெளிந்த நீர்; வேட்ட - விரும்பிய; சிறுமை - துன்பம்.
14. ஒல்குதல் - மெலிதல்.
15. இயவு - வழி.
17. விருந்து ஒழிவு அறியா - விருந்தினர் வருதல் நீங்காத.
18. ஓம்பி - பேணி, பாதுகாத்து.
19. தாழை - தாழை மலர்.
20. அலரி - பூ.
21. சேக்கை - (பள்ளியறைப்) படுக்கை.
22. நவிலும் - கூறும்.
23. பொம்மல் ஓதி - பொலிவு கொண்ட கூந்தல்; புனை இழை - இழை அணிந்த.

தலைவன் கூற்று

நற்றிணை 366 **மதுரை ஈழத்துப் பூதன்தேவனார்**

திணை : பாலை

கூற்று

உலகியல் கூறிப் பொருள்வயிற்பிரிய வலித்த நெஞ்சிற்குத் தலைமகன் சொல்லியது. (வலித்த - தூண்டிய.)

கூற்று விளக்கம்

பொருள் ஈட்டி வர நினைக்கும் தலைவன், 'பொருள் ஈட்டிவரினும் இல்லறம் நடத்துபவள் மனைவிதானே! இறந்துபடுமாறும் வாடைக்காற்றால் வருந்துமாறும் அவளை விட்டுப் பிரிதல் அறிவுடைய செயலாகுமோ?' என்று தன் நெஞ்சத்தினிடம் கூறியது.

அரவுக்கிளர்ந் தன்ன விரவுறு பல்காழ்
வீடுறு நுண்துகில் ஊடுவந்து இமைக்கும்
திருந்துஇழை அல்குல், பெருந்தோள் குறுமகள்
மணிஏர் ஐம்பால் மாசுஅறக் கழீஇ,
கூதிர் முல்லைக் குறுங்கால் அலரி
மாதர் வண்டொடு சுரும்புபட முடித்த
இரும்பல் மெல்அணை ஒழிய, கரும்பின்
வேல்போல் வெண்முகை பிரியத் தீண்டி,
முதுக்குறைக் குரீஇ முயன்றுசெய் குடம்பை
மூங்கில் அம்கழை தூங்க ஒற்றும்
வடபுல வாடைக்குப் பிரிவோர்
மடவர் வாழி!இவ் உலகத் தானே!

தெளிவுரை

நெஞ்சே! பாம்பு படமெடுத்தாற்போன்ற பல மணிகள் கோக்கப் பெற்ற மேகலை; நுண்ணிய துகில் ஒதுங்குவதால் வெளித் தோன்றும் திருந்திய அணிகலன்களை அணிந்த அல்குல்; பெரிய தோள்; நீலமணியை ஒத்த கூந்தல் ஆகியவற்றை உடைய இளமடந்தை, நம் மனைவி. அவள் நீலமணிக்கு ஒப்பான தன் கூந்தலை மாசில்லாதபடி தூய்மையாய்க் கழுவி, கூதிர்க்காலத்தே பூக்கும் முல்லையின் குறுகிய காம்பினைக்

கொண்ட மலர்களை இளைய பெண் வண்டுகளோடு ஆண் வண்டுகளும் மொய்க்குமாறு சூட்டிக் கொள்பவள். கருமை யானதும் மென்மையானதுமான அந்தக் கூந்தல் படுக்கையில் கிடந்து துயிலுதலே இன்பமானது; அதனை விட்டு, கரும்பின் வேல்போலும் வெண்மொட்டு விரியுமாறு தீண்டியும், கருக் கொள்ளும் காலத்தை முற்பட உணரும் அறிவு மிகுந்த தூக்கணங்குருவி முயன்று கட்டிய கூட்டினை மூங்கில் அசைந்து தாக்குமாறும் வாடைக்காற்று வீசும் கூதிர்ப்பருவத்திலே பிரிபவர் மிகுந்த அறியாமை வாய்ந்தவர் ஆவர். (ஆதலின், நாம் அவளைப் பிரியோம்.)

கருத்து

காதலர் இணைந்திருக்க வேண்டிய கூதிர்ப்பருவத்தில், காதலியைப் பிரிந்து செல்லுதல் அறிவுடைமையாகாது.

இறைச்சி

(1) வாடைக்காற்று மணமற்ற கரும்பின் மலரைத் தீண்டும் என்பது, தலைவனும் நிலையில்லாத பொருளை ஈட்ட முயல்கின்றான் என்னும் இறைச்சிப் பொருளை உணர்த்து கிறது.

(2) குருவி தன் கூட்டினை மூங்கிலிலே கட்டியிருப்பினும், வாடைக்காற்று மூங்கிலை அசைத்தாட்ட, அதனுடன் அக் கூடும் ஆடியாடி வருந்தும் என்பது, பிரிவில் வருந்தியிருக்கும் தலைவியும் பாதுகாவலாய் வீட்டிலே இருந்தபோதிலும், பிரிவின் துயரத்தை வாடைக்காற்று மிகுதியாக்கி நலிவித்த லால் துன்புற்றிருப்பாள் என்னும் இறைச்சிப் பொருளை உணர்த்துகிறது.

சொற்பொருள்

1. அரவு - நல்ல பாம்பு; கிளர்தல் - தலையுயர்த்திப் படம் விரித்தாடுதல்; விரவுறு - கலப்புக் கொண்ட; காழ் - மணி வடம், மேகலை.
2. வீடுறு - விலகுதலால்; ஊடுவந்து - இடையிடையே; இமைக்கும் - தோன்றியும் மறைந்தும் (அழகு காட்டும்).
3. திருந்துஇழை - திருத்தமாய்ச் செய்யப்பெற்ற அணிகலன்.
4. மணி ஏர் - நீலமணி ஒத்த; ஐம்பால் - ஐந்து வகையாய்ப் பிரிக்கப்பட்ட கூந்தல்.

5. அலரி - அலர்ந்த மலர்.
6. மாதர் - அழகிய; சுரும்பு - வண்டின் ஒருவகை.
7. இரும்பல் - கரிய பலவாகிய; மெல் அணை - மென்மையான படுக்கை; ஒழிய - நீங்குமாறு.
8. வெண்முகை - வெள்ளிய பூ; தீண்டி - மோதி.
9. முதுக்குறை - கருக்கொல்லும் காலத்தை முற்பட உணரும் அறிவு மிகுந்த; குரீஇ - தூக்கணங்குருவி; குடம்பை - கூடு.
10. கழை - குச்சி; தூங்க - அசைய; ஒற்றும் - தாக்கி மோதும்.
11. வடபுலம் - வடதிசை.
12. மடவர் - அறிவில்லாதவர்.

தலைவன் கூற்று

ஐங்குறுநூறு 430 **பேயனார்**

திணை : முல்லை

கூற்று

பிரியுங்கொல் என்று ஆற்றாளாகிய தலைமகட்குத் தலைமகன் பருவ வரவுகூறி, 'இது காரணத்தாலும் பிரியேன்' எனச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் தன்னைப் பிரிந்து செல்வான் என்பதை உய்த்துணர்ந்து தலைவி ஆற்றாமை கொண்டாள். அப்போது தலைவன் கார் கால வரவைச் சுட்டிக் காட்டித் தான் பிரிய மாட்டேன் என்று சொல்லியது.

நெடும்பொறை மிசைஇய குறுங்கால் கொன்றை
அடர்பொன் என்னச் சுடர்இதழ் பகரும்
கான்கெழு நாடன் மகளே,
அழுதல் ஆன்றிசின் அழுங்குவல் செலவே.

தெளிவுரை

நெடிய குன்றின்மேலுள்ள குறிய அடிமரத்தைக் கொண்ட கொன்றை மரங்கள் பொன் தகடுகளோ என்று சொல்லும்படி ஒளிமிக்க இதழ்களை வழங்கும் காடுகள் பொருந்திய நாடன் மகளே! நீ அழுவதனைக் கைவிடு; நான் என் செலவினைக் கைவிடுவேன்.

கருத்து

கார் காலம் கவின் பெற்றுள்ளது; நான் பிரிய மாட்டேன்.

சொற்பொருள்

1. நெடும் பொறை - நெடிய குன்று; மிசைஇய - மேலுள்ள; குறுங்கால் - குறுகிய அடிமரம்
2. அடர்பொன் - பொன்அடர் - தங்கத்தகடு; சுடர் இதழ் - ஒளி பொருந்திய பூ இதழ்; பகரும் - கொடுக்கும், வழங்கும்.
3. கான் - காடு; கெழு - பொருந்திய.
4. அழுதல் ஆன்றிசின் - அழுவதை நிறுத்து; அழுங்குவல் செலவே - பயணத்தை நிறுத்துவேன்.

தலைவன் கூற்று

நற்றிணை 312 **கழார்க் கீரன்எயிற்றியார்**

திணை : பாலை

கூற்று

பொருள் வலித்த தலைமகன் நெஞ்சினை நெருங்கிச் சொல்லியது.

கூற்று விளக்கம்

பொருள்வயிற்பிரிந்து செல்ல எண்ணும் தலைவன் தன் தலைவியின் பிரிவுத் துயரை எண்ணி வருந்துகிறான். பொருளீட்டும் ஆசைக்கும் பிரிதலுக்கும் இடையிலிருந்து வருந்தும் அவன் தன் நெஞ்சத்தினிடம் வற்புறுத்திக் கூறியது.

நோகோ யானே, நோம்என் நெஞ்சே
பனிப்புதல் ஈங்கை அம்குழை வருட,
சிறைகுவிந் திருந்த பைதல்வெண் குருகு,
பார்வை வேட்டுவன், காழ்களைந் தருள,
மாரி நின்ற, மையல் அற்சிரம்
யாம்தன் உழையம் ஆகவும், தானே,
எதிர்த்த தித்தி முற்றா முலையள்,
கோடைத் திங்களும் பனிப்போள்
வாடைப் பெரும்பனிக்கு என்னள்கொல் எனவே.

தெளிவுரை

பொருளீட்டுவதற்குச் செல்லவில்லையே என்று என்னை நொந்துகொள்ளும் என் நெஞ்சமே! மேனிமேல் படர்ந்த தேமலையும் முதிர்ச்சி பெறாத கொங்கைகளையும் கொண்டவள், நம் காதலி. நாம் பிரியாது அருகில் இருக்கும் இக்கோடைக்காலத்திலும் நான் பிரிவேனோ என்று கருதி அவள் நடுங்கியிருக்கிறாள். குளிர்ந்த புதரிலேயுள்ள இண்டங்கொடியின் அழகிய தளிர்கள் வருடுவதால், குளிரில் தன் சிறகை ஒடுக்கி வருந்தியிருக்கும் வெண்மையான பார்வைக் கொக்கினைக் கண்ட வேட்டுவன் அதன் கால்கட்டினை அவிழ்த்துவிடுகின்ற தன்மை கொண்டது, கார் காலம். பகல் எது, இரவு எது என அறிய இயலாது மயங்கிக் கிடத்தற்குரியது, கூதிர்க்காலம். வாடைக் காற்றோடு பனி பெய்தலும் கொண்டது முன்பனியும், பின்பனியும் ஆகிய பருவங்கள். இக்காலங்களில் தனிமையில் இருந்து அவள் என்ன துன்பம் அடைவாளோ என்று நான் வருந்தியிருக்கிறேன். நெஞ்சே! என் வருத்தம் அறியாது நீயும் என்னை வருத்துகின்றாய்!

கருத்து

நெஞ்சமே! வாடைக்காற்று வீசும் கூதிர்க் காலத்தைத் தலைவி நானின்றி எங்ஙனம் பொறுப்பாள்? ஆதலின், பிரியும் நினைவைக் கைவிடு.

குறிப்பு

பிற குருகுகளைப் பிடிப்பதற்கெனப் பயிற்றப்பட்ட குருகினை, 'பார்வைக் குருகு' எனல் வழக்கம்.

உள்ளுறை

வேட்டுவனால் பார்வைப்புள்ளாகப் பிடித்து வைக்கப்பட்டிருக்கும் வெண்குருகு, இண்டங்கொடியின் தளிர் வருடுதலான் தன் துயரத்தைச் சற்றே மறந்து, அந்தச் சுகத்தை நினைந்து இன்புறும் என்பது, இல்லத்தில் தலைவனைப் பிரிந்து தனியளாய்த் துயருறும் தலைவியும் தோழி தேற்றத் தன் துயரை மறந்தவளாய் மழைக் காலத்தைக் கழிப்பாள் என்னும் உள்ளுறைப் பொருளைத் தருகிறது.

சொற்பொருள்

1. நோகு - வருந்துகின்றேன்.
2. ஈங்கை - ஒரு வகைச்செடி; அம்குழை - அழகிய தளிர்; வருட - தடவி விட.
3. சிறை - இறகு; பைதல் - வருத்தம்; குருகு - நாரை.
4. பார்வை - பார்வைப்புள்; காழ் களைந்து - கால் தளையை நீக்கி.
5. மாரி நின்ற - மழை பெய்கின்ற; மையல் - மயக்கம்; அற்சிரம் - கூதிர்ப் பருவம்.
6. உழையம் ஆகவும் - அருகே இருக்கவும்.
7. தித்தி - தேமற்புள்ளி; முற்றா - இளமையான.
8. பனிப்போள் - நடுங்குவோள்.
9. என்னள் கொல் - என்னாவளோ?

தலைவன் கூற்று

நற்றிணை 308 **எயினந்தை மகன் இளங்கீரனார்**

திணை : பாலை

கூற்று

நெஞ்சினாற் பொருள்வலிக்கப்பட்ட தலைமகன் தலைமகளை எய்தி, ஆற்றானாய், நெஞ்சினில் சொல்லிச் செலவழுங்கியது.

கூற்று விளக்கம்

தலைவன் பொருளீட்டச் செல்லக் கருதித் தலைவியிடம் சொல்ல வருகின்றான்; தலைவியின் நிலை கண்டு நெகிழ்கிறான்; தலைவி தன் பிரிவினை நினைந்து வாடும் தன்மையைத் தன் நெஞ்சத்தினுக்குக் கூறித் தன் பயணத்தைத் தள்ளி வைக்கிறான்.

செலவிரைவு உற்ற அரவம் போற்றி,
மலர்ஏர் உண்கண் பனிவர, ஆயிழை
யாம்தற் கரையவும், நாணினள் வருவோள்,
வேண்டா மையின் மென்மெல வந்து,
வினவலும் தகைத்தலும் செல்லாள் ஆகி,
வெறிகமழ் துறுமுடி தயங்க, நல்வினைப்
பொறிஅழி பாவையின் கலங்கி, நெடிதுநினைந்து,

ஆகம் அடைதந் தோளே; அதுகண்டு,
ஈர்மண் செய்கை நீர்படு பசுங்கலம்
பெருமழைப் பெயற்குஏற் றாங்குஎம்
பொருள்மலி நெஞ்சம் புணர்ந்துஉவந் தன்றே.

தெளிவுரை

அழகிய அணிகலன்களை அணிந்த என் காதலி, நான், பொருள் காரணமாய்ப் பிரிந்து செல்வதுபற்றிய என் சொல்லையும் தன் கடமையெனா விரும்பிக் கேட்டனள். ஆயினும், குவளை மலர் போலும் மையுண்ட அவள் கண்களிலிருந்து, அப்போது கண்ணீரும் வழிந்தது. நான் அதனை அறிந்ததும் அவளை என் அருகே வருமாறு அழைக்க, அவள் தான் கண்ணீர் விடும் அச்செயலுக்கு நாணியவளாய் வந்தாள். என் பிரிவை விரும்பாமையினாலே மெல்ல மெல்ல அடி வைத்து வந்த அவள், என் செலவு பற்றி வினவுதலோ, தடுத்தலோ எதுவும் செய்யவில்லை. மணங் கமழும் தன் கூந்தல் அசையுமாறு, விசைக்கயிறு கெட்டமையாலே செயலற்ற நல்ல வேலைப் பாடமைந்த ஓர் எந்திரப் பாவையைப் போலத் தன் நிலை தளர்ந்தாள். நெடும்பொழுது எதையோ நினைந்தவளாய்ப் பித்துற்று நின்றவள், சோர்ந்து என் மார்பின்மேல் மயங்கியும் விழுந்தாள். அவளது அந்நிலையைக் கண்டேன். ஈர மண்ணாலே செய்யப்பட்டு நீர் கசிந்துகொண்டிருக்கும் பசுமண் கலத்தைப் பெருமழை பெயலிலே கொண்டு வந்து வைத்த போது அது முற்றவும் அழிந்து கரைந்து போயினாற் போல, பொருளின் பொருட்டு அவளைப் பிரியக் கருதிய என் நெஞ்சமும் அதன்பால் செல்லாது, கரைந்து, அவளுடனேயே ஒன்றிக் கலந்துவிட்டது; இனிப் பிரிந்து போவதென்பது யாங்ஙனம் கைகூடுமோ?

கருத்து

‘பிரிவு’ என்னும் சொல்லைக் கேட்டதும் அவளது உள்ளத்தில் பொங்கிப் பெருகிய கலக்கமிகுதியைக் கண்டேன். ஆதலின், அவளைப் பிரியா திருத்தலே இப்போது செய்யத் தக்கது எனப் பயணத்தை நிறுத்திக் கொண்டேன்.

சொற்பொருள்

1. விரைவுற்ற - விரைந்து அதற்காவன செய்த; அரவம் - என் சொற்களை.
2. ஏர் - அழகு; பனிவர - கண்ணீர் வழிய.
3. கரைய - அழைக்க.
4. வேண்டாமையின் - என் பிரிவை விரும்பாமையின்.
5. தகைத்தல் - தடுத்தல்.
6. வெறி - மணம்; துறு - நெருக்கம்; தயங்க - அசைய; நல்வினை - நல்ல வேலைப்பாடமைந்த.
7. பொறி - விசைக்கயிறு; அழி - அறுபட்ட; பாவை - பொம்மை.
8. ஆகம் - (என்) நெஞ்சில்; அடைதந்தோளே - விழுந்தாள்.
9. ஈர்மண் - ஈர மண்ணால்; செய்கை - செய்யப்பட்டு; நீர்படு - நீர் நிறைந்திருக்கும்.
10. பெருமழை - பெரிய மழையில்; பெயற்கு ஏற்றாங்கு - வைக்கப்பட்டு உடைந்து கரைந்து ஓடினாற்போல.

தலைவன் கூற்று

திணைமாலை நூற்றைம்பது 76 **கணிமேதாவியார்**

திணை : பாலை

கூற்று

பொருள் வலித்த நெஞ்சிற்குச் சொல்லித் தலைமகன் செலவழுங்கியது.

கூற்று விளக்கம்

பொருள் தேடச் செல்ல வேண்டும் என்று விரும்பிய தன் மனத்திற்குத் தலைவன் தனக்குத்தானே சொல்லிச் செலவை நிறுத்தியது.

> நெஞ்சம் நினைப்பினும் நெல்பொரியும் நீள்அத்தம்
> அஞ்சல் எனஆற்றின் அஞ்சிற்றால் – அஞ்சிப்
> புடைநெடும் காதுறப் போழ்ந்தகன்று நீண்ட
> படைநெடுங்கண் கொண்ட பனி.

தெளிவுரை

நெஞ்சே! 'அஞ்ச வேண்டா' எனத் தலைவியை ஆற்று விப்பதற்குச் சில சொற்களைச் சொல்ல நீ விரும்புகிறாய்; பாலை

நில வழியில் அங்குப் போடப்படும் நெல்மணிகளும் கதிரவன் வெப்பத்தால் பொரிந்துவிடும். நான் செல்ல வேண்டிய நீண்ட வழியின் தன்மையை அவளிடம் கூறுதற்கும் நெஞ்சு அஞ்சு கிறது. என் முகக் குறிப்பால் என் பிரிவினை உணர்ந்த இவளின் காதளவோடிய நீண்ட கண்கள் அச்சத்தால் நீரை மிகுதியாய்ப் பொழிகின்றன. (ஆதலால், யான் இவளைப் பிரிந்து செல்லுதல் இயலாது.)

கருத்து

தலைவியின் நீரொழுகும் கண்களைக் கண்ட பிறகு இவளைப் பிரிந்து செல்ல இயலாது.

குறிப்பு

கடும் வெயில் பசும் நெல்லைப் பொரிய வைக்கும் வெப்பமுடையது என்பது புதிய வருணனை.

சொற்பொருள்

1. நீள் அத்தம் - நீண்ட வழி.
2. அஞ்சல் - அஞ்சாதே.
3. காது உற - செவிகளைப் பொருந்தும்படியாய்; புடைநெடும் - அடுத்து நீண்டிருக்கும்.
4. படை - வேற்படையை (ஒத்த); பனி - நீர்.

தலைவன் கூற்று

குறுந்தொகை 168 **சிறைக்குடி ஆந்தையார்**

திணை : பாலை

கூற்று

பொருள் வலிக்கும் நெஞ்சிற்குத் தலைமகன் உரைத்தது. (வலிக்கும் - வற்புறுத்தும்.)

கூற்று விளக்கம்

பொருளீட்டி வரப் பிரிய வேண்டும் எனத் துணிந்த தன் நெஞ்சிற்கு, 'தலைவியைப் பிரிந்தால் அவள் உயிர் வாழ்தல் அரிது' என்று தலைவன் சொல்லியது.

மாரிப் பித்திகத்து நீர்வார் கொழுமுகை
இரும்பனம் பசுங்குடைப் பலவுடன் பொதிந்து
பெரும்பெயல் விடியல் விரித்துவிட் டன்ன
நறுந்தண் ணியளே; நல்மா மேனி,
புனற்புணை அன்ன சாய்இறைப் பணைத்தோள்
மணத்தலும் தணத்தலும் இலமே;
பிரியின் வாழ்தல் அதனினும் இலமே.

தெளிவுரை

நெஞ்சே! மழைக் காலத்தில் பிச்சிப்பூவின் நீர் சொட்டும் முதிர்ந்த மொட்டுகள் பலவற்றைப் பசுமையான பெரிய பனை யோலைக் கூடைகளில் இட்டு மூடி வைத்து, மறுநாள் பெரு மழை பொழிந்த விடியற்காலத்தில் அக்கூடைகளைத் திறந்து பரப்பி விட்டால் வீடெல்லாம் மணக்கும். அதைப் போன்ற நறுமணமும் குளிர்ச்சியும் கொண்டவள், மாமை நிறத்தினளாய நம் தலைவி. நீரில் விடும் தெப்பத்தினை ஒத்த வளைந்த சந்தினைக் கொண்ட பருத்த அவள் தோள்களைக் கூடிப் பொருந்துவதன்றிப் பிரிதலே இல்லை. இந்நிலையில் அவளைப் பிரியின் அவள் உயிர் வாழ்தல் இல்லையாம்.

கருத்து

அவளைப் பிரியேன்; பிரியின் உயிர் வாழேன்.

சொற்பொருள்

1. பித்திகம் - பிச்சிப்பூ; நீர்வார் - நீர் சொட்டும்; கொழுமுகை - கொழுவிய மொட்டு.
2. இரு - பெரிய; பொதிந்து - மூடி வைத்து.
3. பெரும் பெயல் - பெருமழை.
4. தண்ணியள் - குளிர்ச்சியைக் கொண்டவள்; நல் மா - நல்ல அழகிய.
5. புனல் புணை - நீரில் விடும் தெப்பம்; சாய்இறை - வளைந்த சந்தினைக் கொண்ட.
6. மணத்தல் - பொருந்துதல்; தணத்தல் - பிரிதல்; இலமே - இல்லை.

தலைவன் கூற்று

குறுந்தொகை 376 **படுமரத்து மோசிகொற்றன்**

திணை : நெய்தல்

கூற்று

பொருள் வலிக்கும் நெஞ்சிற்குத் தலைமகன் சொல்லிச் செலவழுங்கியது.

கூற்று விளக்கம்

பொருள் தேடிவரப் புறப்படக் கருதிய தலைவன், தலைவியின் நல்லியல்புகளைக் கூறிச் செலவு தவிர்த்தது.

மன்உயிர் அறியாத் துன்னரும் பொதியில்
சூருடை அடுக்கத்து ஆரம் கடுப்ப,
வேனி லானே தண்ணியள்; பனியே,
வாங்குகதிர் தொகுப்பக் கூம்பி, ஐயென,
அலங்குவெயிற் பொதிந்த தாமரை
உள்ளகத் தன்ன சிறுவெம் மையளே.

தெளிவுரை

நிலைபெற்ற உயிர்கள் உட்சென்று முற்றிலும் கண்டறிய இயலாத பொதிய மலையில் அச்சம் தரும் தெய்வங்கள் உள்ள பக்க மலையிலே வளர்ந்த சந்தனத்தைப் போன்று, வேனிற் காலத்தில், தலைவியைத் தழுவுங்கால் மிகவும் குளிர்ச்சி பொருந்தியவளாய் இருக்கிறாள். பனிக்காலத்தில் தழுவும்போதோ, தாமரைப் பூ சூரியக் கதிர்களைத் தன்னகத்தே பெற்று, குவிந்து, திறக்கும்போது அதன் இதழ்கள் வெதுவெதுப்பாய் இருப்பது போல் சிறு வெம்மையினைத் தந்துகொண்டிருக்கிறாள். (நெஞ்சமே! இவளை விட்டு நான் எவ்வாறு பிரிந்து செல்வது?)

கருத்து

கோடையில் குளிர்ச்சியையும், குளிர் காலத்தில் வெப்பத்தையும் தருபவள், என் காதலி.

குறிப்பு

வெம்மை மிக்க வேனிற் காலத்தில் குளிர்ச்சியானவளாகவும், குளிர்ச்சி மிக்க பனிக் காலத்தில் சிறு வெம்மை கொண்டவளாகவும் விளங்கும்

தலைவியைப் பிரிந்து சென்று பொருள்தேடி வருவதென்பது தன்னால் இயலாதது எனத் தலைவன் சொல்கிறான்.

விளக்கம்

பகலில் தாமரை, சூரியக் கதிர்களை ஏற்றுக் குவியும். அது காலையில் விரியும்போது அதன் உள்ளே தொட்டுப் பார்த்தால் சிறிது வெம்மை இருப்பதை அறியலாம்.

சொற்பொருள்

1. மன்உயிர் - நிலைபெற்ற உயிர்த்தொகுதி; துன்அரு - நெருங்குதற்கரிய; பொதியில் - பொதிய மலை.
2. சூர் - தெய்வம்; அடுக்கம் - பக்க மலை; ஆரம் - சந்தனம்; கடுப்ப - போல.
3. பனியே - குளிர்ச்சியான காலத்தில்.
4. தொகுப்ப - மறைய; ஐயென - அழகாய்.
5. அலங்கு வெயில் - அசைகின்ற வெயில் (சூரியக்கதிர்கள்); பொதிந்த - உள்ளே வைத்துக்கொண்ட.
6. உள்ளகம் - உள்ளிடம்; சிறு வெம்மை - சிறிய வெம்மை.

தலைவன் கூற்று

குறுந்தொகை 256 **ஆசிரியர் பெயரை அறிய இயலவில்லை**

திணை : பாலை

கூற்று

பொருள் விலக்கப்பட்ட கிழவன் செலவழுங்கியது.

கூற்று விளக்கம்

பொருள் தேடி வருவதற்கு விரும்பிய தலைவன், அதனைத் தலைவியிடம் கூற அவள் ஏற்காது கலங்கினாள். தலைவியின் நிலையைக் கண்டு தன் செலவைத் தலைவன் தவிர்த்தது.

'மணிவார்ந் தன்ன மாக்கொடி அறுகைப்
பிணங்குஅரில் மென்கொம்பு பிணையொடு மாந்தி,
மான்ஏறு உகளும் கானம் பிற்பட,
வினைநலம் படீஇ, வருதும் அவ்வரைத்

தாங்கல் ஒல்லுமோ, பூங்குழை யோய்?'எனச்
சொல்லா முன்னர், நில்லாஆகி,
நீர்விலங்கு அழுதல் ஆனா,
தேர்விலங் கினவால், தெரிவை கண்ணே.

தெளிவுரை

அழகிய காதணியை அணிந்தவளே! நீலமணி நீளமாய்க் கிடப்பதுபோல, கருமையான அறுகுக்கொடிகள் பின்னு தலன்றிக் கிடக்க, அவற்றின் மெல்லிய தண்டினைப் பெண் மானோடு வயிறார உண்ட ஆண்மான் துள்ளித் திரியும் தன்மை வாய்ந்தது, காடு. அக்காடு, பின்படுமாறு அதைக் கடந்து சென்று, பொருள் தேடும் செயலில் நன்மை பெற்றுத் திரும்பும் வரை, 'உன்னால் தாங்கியிருக்க இயலுமா?' என நான் சொல்லி முடிக்கும் முன்பாகவே, அவள் கண்கள் கட்டுப்பாட்டை மீறிக் கண்ணீரால் மறைக்கப்பட அழுதன; அவை என் தேரைச் செல்லவிடாமல் தடுத்துவிட்டன.

கருத்து

என் பிரிவுக்குத் தலைவி உடன்படாததால் நான் என் பயணத்தைத் தவிர்த்தேன்.

சொற்பொருள்

1. மணிவார்ந்தன்ன - நீலமணி நீளமாய்க் கிடப்பதுபோல; அறுகை - அறுகம்புல்.
2. அரில் - பின்னிக் கிடத்தல்; மென்கொம்பு - மெல்லிய தண்டு; பிணை - பெண்மான்; மாந்தி - வயிறாற உண்டு.
3. உகளும் - துள்ளும்.
4. வினை - பொருள் தேடும் முயற்சி; நலம் படீஇ - நன்மை பெற்று; அவ்வரை - அதுவரை.
5. ஒல்லுமோ - இயலுமா?; குழை - காதணி.
6. நில்லா ஆகி - கட்டுப்பாட்டை மீறி.
7. விலங்கு - குறுக்காய் நிறைந்து; ஆனா - அமையாது.
8. விலங்கின - தடுத்துவிட்டன.

தலைவன் கூற்று

ஐந்திணை ஐம்பது 39 **மாறன் பொறையனார்**

திணை : பாலை

கூற்று

தலைமகன் பொருள் வலித்த நெஞ்சிற்குச் சொல்லிச் செலவழுங்கியது.

கூற்று விளக்கம்

பொருள் தேடப் பிரிய நினைத்த தலைவன், தலைவி தன் பிரிவை ஆற்றாள் எனத் தன் நெஞ்சிற்குச் சொல்லிச் செலவைத் தவிர்த்தது.

மடவைகாண் நல்நெஞ்சே மாண்பொருள் மாட்டுஓடப்
புடைபெயர் போழ்தத்தும் ஆற்றாள் – படர்கூர்ந்து
விம்மி உயிர்க்கும் விளங்கிழையாள் ஆற்றுமோ
நம்மில் பிரிந்த இடத்து.

தெளிவுரை

"நல்ல மனமே! சிறந்து விளங்கும் அணிகலன்களை அணிந்த நம் தலைவி, நாம் அவளைத் தழுவிச் சிறிது விலகுகின்ற காலத்திலும் பொறுக்க மாட்டாதவளாய்த் துன்பம் மிகுந்து ஏங்கிப் பெருமூச்சு விடுபவள். அத்தகையவள் சிறந்த பொருள் தேடும்பொருட்டு நீ பிரிந்து செல்லுதலை ஆற்றுவளோ? மாட்டாள்" எனத் தலைவன் தன் நெஞ்சத்தினிடம் சொல்லிப் பிரிந்து செல்லுதலைக் கைவிட்டான்.

கருத்து

தழுவிச் சிறிது விலகினாலும் பொறுக்கவியலாதவள், பிரிவை ஆற்று வளோ?

சொற்பொருள்

1. மடவை - அறியாய்; பொருள்மாட்டு - பொருள் தேடும்பொருட்டு; ஓட - (நீ) செல்ல.
2. புடை பெயர் - சிறிது விலகுகின்ற; போழ்தத்தும் - காலத்திலும்; படர் - துன்பம்; கூர்ந்து - மிகுந்து.
3. உயிர்க்கும் - பெருமூச்சு விடும்; இழையாள் - அணிகலன்களை அணிந்தவள்; ஆற்றுமோ - பொறுப்பளோ?
4. நம்மில் - நம்மினின்றும்.

தலைவன் கூற்று

நற்றிணை 298 **விற்றூற்று வண்ணக்கன் தத்தனார்**

திணை : பாலை

கூற்று

தோழியால் பொருள் வலிப்பித்துத் தலைமகளை எய்தி, ஆற்றாதாய நெஞ்சினை நெருங்கிச் சொல்லித் தலைமகன் செலவழுங்கியது.

கூற்று விளக்கம்

தோழி தலைவனிடம், 'பொருள் தேடி வருக' என்றாள். தலைவியிடம் அதனைக் கூறச் சென்ற அவன் தன் நெஞ்சிடம், 'தோழி சொல்லியபடி நீ பொருள் தேடச் சென்றால், திரும்ப வரும்போது தலைவியைக் காண இயலுமா? இயலுமாயின் நீ செல்' என்று சொல்லித் தன் பயணத்தை நிறுத்தியது.

வம்ப மாக்கள் வருதிறம் நோக்கிச்
செங்கணை தொடுத்த செயிர்நோக்கு ஆடவர்
மடிவாய்த் தண்ணுமைத் தழங்குகுரல் கேட்ட
எருவைச் சேவல் கிளைவயிற் பெயரும்
அருஞ்சுரக் கவலை, அஞ்சுவரு நனந்தலைப்
பெரும்பல் குன்றம் உள்ளியும், மற்று—இவள்
கரும்புடைப் பணைத்தோள் நோக்கியும், ஒருதிறம்
பற்றாய் வாழி,எம் நெஞ்சே! நல்தார்ப்
பொற்றேர்ச் செழியன் கூடல் ஆங்கண்,
ஒருமை செப்பிய அருமை, வான்முகை
இரும்போது கமழும் கூந்தல்,
பெருமலை தழீஇயும்,நோக்கு இயையுமோ மற்றே?

தெளிவுரை

என் நெஞ்சமே! வழியில் புதிதாய் வருகின்ற மக்களை நோக்கியபடியே காத்திருக்கும் ஆறலை கள்வர்கள் வருபவரைக் கொள்ளையிடுவதற்காகச் செவ்விய அம்புகளைத் தொடுப்பர். கோபம் கொண்ட பார்வையினைக் கொண்ட அவர்கள் முழங்கும் தண்ணுமையின் ஒலியைக் கேட்டதும், பருந்துச்சேவல் அச்சங்கொண்டு, தன் கூட்டம் வாழும் இடத்தை நோக்கிப்

பறந்து செல்லும். கடத்தற்கரியதும் பிரிவுபட்ட வழிகளைக் கொண்டதுமான அச்சந்தரும் அகன்ற பெரிய குன்றுகளைப் பொருள் தேடும் முயற்சியால் கடந்து செல்ல விரும்புகிறாய்; தலைவியின் கரும்பெழுதிய பணைத்த தோள்களைப் பிரிதல் வேண்டியிருப்பதையும் எண்ணிப் பார்க்கிறாய். ஒருபாற்பட்ட முடிவுக்கு வரஇயலாமல் மனம் மயங்குகிறாய். வேப்பந்தாரினை அணிந்த பொன்னாலாகிய தேரையுடைய பாண்டியனின் கூடல் நகரத்திலே, இவள் தோழி பொருள் தேடி வரும்படி உறுதிப் பாட்டுடன் கூறிய மொழி கேட்டுப் பெரிய மலைகள் உள்ள வழியில் நான் சென்றதன் பின்னர், வெண்மையான அரும்பு மலர்ந்த பெரிய மலரின் மணங்கமழும் கூந்தலைக் கொண்ட காதலியைப் பார்ப்பதற்கு இயலுமா? இயலுமாயின் பிரிக; இயலாது என்பதால் போக்கினைத் தவிர்க.

கருத்து

நெஞ்சமே! பிரியின் இவள் உயிர் வாழாள்; ஆதலின், பொருளை நாடிச் செல்லுதலைச் சிறிது காலம் மறந்திருப்பாய்!

சொற்பொருள்

1. வம்ப மாக்கள் - புதியவர்கள்.
2. செங்கணை - செவ்விய அம்பு; செயிர் - சினம்.
3. மடிவாய் - தோல் மடிக்கப்பட்ட; தண்ணுமை - முழவு; தழங்கு குரல் - முழக்கம்.
4. எருவை - பருந்து; கிளைவயிற் - தன் இனம் இருக்குமிடம் நோக்கி.
5. அருஞ்சுரம் - கடத்தற்கரிய காடு; கவலை - கவர்த்த (பிரிவுபட்ட) வழி; நனந்தலை - அகன்ற இடம்.
6. உள்ளியும் - நினைத்தும்; இவள் - தலைவி.

7-8. ஒரு திறம் பற்றாய் - ஒருபாற்பட்ட முடிவுக்கு வாராய்.

8. நல்தார் - நல்ல வேம்பின் மாலை.
9. செழியன் - பாண்டிய மன்னன்; கூடல் - கூடல் மாநகரம், மதுரை; ஆங்கண் - அவ்விடத்தே.
10. ஒருமை செப்பிய அருமை - ஒருதலையாய்ப் பொருள் தேடி வரும்படி தோழி கூறிய சொல்லைக் கேட்டு; வான்முகை - வெண்மையான அரும்பு.
11. இரும்போது - பெரிய மலர்.
12. தழீஇ - சென்றால்; நோக்கு இயையுமோ - காதலியைப் பார்க்க இயலுமோ?

தலைவன் கூற்று

குறுந்தொகை 347 **காவிரிப்பூம்பட்டினத்துச் சேந்தன் கண்ணன்**

திணை : பாலை

கூற்று

பொருள் வலிக்கும் நெஞ்சிற்குத் தலைமகன் சொல்லிச் செலவழுங்கியது.

கூற்று விளக்கம்

பொருள் தேடி வருதலின்பொருட்டுத் தலைவியைப் பிரிந்து செல்ல விரும்பிய தலைவன், தன்னால் தலைவியைப் பிரிய இயலாமையைத் தன் நெஞ்சிடம் சொல்லித் தன் செலவு தவிர்த்தது.

மல்குசுனை புலர்ந்த நல்கூர் சுரமுதல்
குமரி வாகைக் கோலுடை நறுவீ
மடமாத் தோகைக் குடுமியின் தோன்றும்
கான நீள்இடை, தானும் நம்மொடு
ஒன்றுமணம் செய்தனள் இவள்எனின்,
நன்றே நெஞ்சம்! நயந்தநின் துணிவே.

தெளிவுரை

நெஞ்சமே! நீர் நிரம்பியிருந்த சுனைகள் வறண்டுவிட்ட பாலை நிலத்தில் வளர்ந்துள்ள இளம் வாகை மரத்தின் நீண்ட காம்பில் உள்ள நறியமலர், இளமையான கரிய நிறங்கொண்ட மயிலின் உச்சிக் கொண்டையைப் போலக் காணப்படும். இத்தன்மை வாய்ந்த காட்டின் நெடுவழியில் தலைவியும் என்னுடன் சேர்ந்து இணைந்து செல்வதற்கு உடன்படுவாளாயின் (வருவாளாயின்) பொருளை விரும்பிப் பிரியத் துணிந்த உன் முடிவு நல்லதாம்.

கருத்து

தலைவி உடன் வருவாளாயின் செல்லலாம்.

குறிப்பு

பொருள் தேடச் செல்லும்போது தலைவியை உடன் அழைத்துச் செல்லுதல் பண்டைய மரபன்று; ஆதலின், அவளை விடுத்துச் செல்லத் தன்னால் இயலாது என்பதால் தலைவன் செலவைத் தவிர்த்தான்.

சொற்பொருள்

1. மல்கு - (நீர்) நிறைந்த; புலர்ந்த - வற்றிவிட்ட; நல்கூர் - வறுமை, வளங்குன்றிய.
2. குமரி வாகை - இளம் வாகை மரம்; கோல் - நீண்ட காம்பு; வீ - மலர்.
3. மடம் - இளமை; மா - கறுப்பு; தோகை - தோகையைக் கொண்ட ஆண் மயில்; குடுமி - உச்சிக்கொண்டை.
4. நீள்இடை - நீண்ட வழி; தானும் - தலைவியும்.
5. மணம் செய்தனள் - உடன்வரச் சம்மதித்தல்.
6. நயத்தல் - விரும்புதல்; துணிவு - பொருளீட்டுதற்காகப் பிரியும் துணிவு.

தலைவன் கூற்று

அகநானூறு 245 **மதுரை மருதனிளநாகனார்**

திணை : பாலை

கூற்று

பொருள் கடைக்கூட்டிய நெஞ்சினைக் கழறித் தலைமகன் சொல்லிச் செலவழுங்கியது.

கூற்று விளக்கம்

பொருளின் இன்றியமையாமையை உணர்த்தி, 'இப்போதே சென்று பொருள் ஈட்டி வரவேண்டும்' எனத் தூண்டிய தன் நெஞ்சத்தை இடித்துரைத்துப் பிரிந்து போகாமல் இருக்கும் தலைவன் சொல்லியது.

உயிரினும் சிறந்த ஒண்பொருள் தருமார்
நன்றுபுரி காட்சியர் சென்றனர், அவர்என
மனைவலித்து ஒழியும் மதுகையள் ஆதல்
நீநன்கு அறிந்தனை ஆயின், நீங்கி,
மழைபெயல் மறந்த கழைதிரங்கு இயவில்,
செல்சாத்து எறியும் பண்பில் வாழ்க்கை
வல்வில் இளையர் தலைவர், எல்உற,
வரிகிளர் பணைத்தோள், வயிறுஅணி திதலை,
அரிய லாட்டியர் அல்குமனை வரைப்பில்,
மகிழ்நொடை பெறாஅ ராகி நனைகவுள்
கான யானை வெண்கோடு சுட்டி,

மன்றுஓடு புதல்வன் புன்தலை நீவும்
அருமுனைப் பாக்கத்து அல்கி, வைகுற,
நிழல்படக் கவின்ற நீள்அரை இலவத்து
அழல்அகைந் தன்ன அலங்குசினை ஒண்பூக்
குழல்இசைத் தும்பி ஆர்க்கும் ஆங்கண்,
குறும்பொறை உணங்கும் ததர்வெள் என்பு
கடுங்கால் ஒட்டகத்து அல்குபசி தீர்க்கும்
கல்நெடுங் கவலைய கானம் நீந்தி,
அம்மா அரிவை ஒழிய,
சென்மோ நெஞ்சம்! வாரலென் யானே.

தெளிவுரை

நெஞ்சே! பொருள் ஈட்டச் செல்ல வேண்டும் என்று என்னைக் கட்டாயப்படுத்துகிறாய். 'நன்மையை விரும்பும் நம் தலைவர் உயிரைவிடச் செல்வத்தைப் பெரிதாய்க் கருதிச் சென்றார். அதனால் நாம் வீட்டில் பொறுமையோடு தங்கியிருக்க வேண்டும்' என்று எண்ணும் மன வலிமை உடையவள்தானா தலைவி என்பது உனக்குத் தெளிவாய்த் தெரிந்தால், நீ இவளை நீங்கிச் செல்லலாம். நீ செல்லும் வழி, பாலைநில வழி. அங்கு மூங்கில்கள் வற்றி நிற்கும்; வழிச் செல்வோரைத் துன்புறுத்தும் மறவர் அங்கு வாழ்வர். அவர்களின் தலைவன் இரவில், தன் சிற்றூரில் பருத்த தோளும், தேமல் படர்ந்த வயிறும் கொண்ட பெண்ணொருத்தியின் கள் விற்கும் கடைக்குச் சென்று கள் வாங்கப் பொருள் இல்லாமை யால் கையைப் பிசைந்து நிற்பான். அதனால் அங்கு மன்றத்தில் விளையாடும் தன் மகனை அழைத்துக் கொஞ்சலாக அவன் தலையைத் தடவிக் கொடுத்து, தன் வீட்டில் அழகுக்காக வைத்திருக்கும் யானைக்கொம்புகளுள் ஒன்றை எடுத்து வருமாறு கூறுவான். அத்தகைய சிற்றூரில் நீ இரவில் தங்கலாம். காலையில் நிழல் பரப்பும் இலவ மரத்தின் பூக்களில் வண்டுகள் இசைபோலப் பாடும். செல்லும் வழியில் பாறையின்மீது சுள்ளி போன்ற வெண்மையான எலும்புகளைக் காயவிட்டிருப்பர். அவ்வழியே வரும் ஒட்டகங்களின் நீண்ட நாள் பசியை அவை போக்கும். நம் தலைவி இங்கிருக்க எங்குப் பார்த்தாலும் கற்கள்

கிடக்கும், பின்னிய வழிகளைக் கொண்ட காட்டைக் கடந்து நான் வரமாட்டேன். நெஞ்சே! நீ வேண்டுமானால் செல்.

கருத்து

நெஞ்சே! என்னைப் பிரிந்திருக்கும் மன உறுதி தலைவியிடம் இல்லை; ஆதலால், நான் பிரிய மாட்டேன்; நீ வேண்டுமானால் செல்.

விளக்கம்

"நெஞ்சே! என்னைப் பிரிந்து தனித்திருக்கும் மன வலிமையில்லாத தலைவியைப் பிரிந்து பொருள் தேட நான் புறப்பட மாட்டேன். பொருள் தேடச் சென்றுள்ளார் என்று அறிந்து, மனையில் தங்கியிருக்கும் மன உறுதி நம் தலைவியிடம் இருக்கும் என்பதை நீ நன்றாய் அறிந்திருக்கிறாய் எனின், நீ தலைவியைத் தனியே விட்டுப் பிரிந்து செல்; ஆனால் நான் வரமாட்டேன்" என்று தலைவன் தன் நெஞ்சத்தினிடம் சொல்வதுபோலக் கூறுகிறான்.

சொற்பொருள்

1. தருமார் - தருதல் வேண்டி.
2. நன்று புரிகாட்சியர் - நன்மையை விரும்பும் அறிவினர்.
3. வலித்து - துணிந்து; ஒழியும் - தங்கியிருக்கும்; மதுகை - மன வலிமை.
4 நீ நன்கு அறிந்தனையாயின் - நீ தெளிவாய்த் தெரிந்தால்; நீங்கி - இவளை விட்டு நீங்கி.
5. கழை - மூங்கில்; திரங்கு - வற்றிய; இயவு - வழி.
6. சாத்து - வாணிகர் கூட்டம்; எறியும் - வருத்தும்; பண்பில் வாழ்க்கை - அன்பில்லாத வாழ்க்கையினை.
7. எல் - இரவு; உற - வந்து சேர.
8. கிளர் - விளங்கும்; பணை - பெரிய; திதலை - தேமல்.
9. அரியலாட்டியர் - கள் விற்கும் மகளிர்; அல்கு - பொருந்திய.
10. மகிழ் - கள்; நொடை - விலைப்பொருள்; நனை - (மதத்தால்) நனைந்த; கவுள் - கன்னம்.
11. வெண்கோடு - வெள்ளைக் கொம்பு (தந்தம்); சுட்டி - காட்டி.
12. மன்றோடு புதல்வன் - மன்றில் விளையாடும் புதல்வனுடைய; புன்தலை நீவும் - புல்லிய தலையைத் தடவி அனுப்பும்; புன்தலை - சிறிய தலை.

13. அருமுனை - அரிய போர் முனைகளைக் கொண்ட; அல்கி - தங்கி; வைகு - விடியல்.
14. கவின்ற - அழகு பெற்ற; நீள்அரை - நீண்ட அடிமரம்; இலவம் - இலவ மரம்.
15. அழல் - நெருப்பு; அகைத்தல் - தளிர்த்தல்; அலங்குதல் - அசைதல்; ஒண்பூ - ஒள்ளிய பூ.
16. ஆர்க்கும் - ஒலிக்கும்.
17. குறும்பொறை - பாறை; உணங்கும் - காய்ந்து கிடக்கும்; ததர் - சுள்ளி; என்பு - எலும்பு.
18. கடுங்கால் - வேகமாய் நடக்கும் கால்; அல்கு - மிக்க.
19. கவலை - கவர்த்த வழி; நீந்தி - கடந்து.
20. அம் மா - அழகிய மாமை நிறம்; ஒழிய - தனித்திருக்க.
21. வாரலென் - நான் வாரேன்; சென்மோ நெஞ்சம் - நெஞ்சமே செல்க.

தலைவன் கூற்று

அகநானூறு 225 **எயினந்தை மகனார் இளங்கீரனார்**

திணை : பாலை

கூற்று

பொருள் கடைக்கூட்டிய நெஞ்சிற்குத் தலைமகன் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவனுக்குப் பொருளின் இன்றியமையாமையை உணர்த்தி, அதனைப் பெறுவதற்காகத் தலைவியைப் பிரிந்து செல்ல வேண்டும் என்று அவன் உள்ளம் கூறியது. அந்நெஞ்சத்தினை நோக்கித் தலைவன் கூறியது.

அன்பும், மடனும், சாயலும், இயல்பும்
என்பு நெகிழ்க்கும் கிளவியும், பிறவும்
ஒன்றுபடு கொள்கையொடு ஓராங்கு முயங்கி
இன்றே இவணம் ஆகி, நாளைப்
புதல்இவர் ஆடுஅமைத் தும்பி குயின்ற
அகலா அம்துளை, கோடை முகத்தலின்
நீர்க்குஇயங்கு இனநிரைப் பின்றை வார்கோல்

ஆய்க்குழல் பாணியின் ஐதுவந்து இசைக்கும்
தேக்குஅமல் சோலைக் கடறுஓங்கு அருஞ்சுரத்து
யாத்த தூணித் தலைதிறந் தவைபோல்
பூத்த இருப்பைக் குழைபொதி குவிஇணர்
கழல்துளை முத்தின் செந்நிலத்து உதிர
மழைதுளி மறந்த அம்குடிச் சீறூர்ச்
சேக்குவம் கொல்லோ? நெஞ்சே! பூப்புனை
புயலென ஒலிவரும் தாழ்இருங் கூந்தல்
செறிதொடி முன்கைநம் காதலி
அறிவுஅஞர் நோக்கமும் புலவியும் நினைந்தே.

தெளிவுரை

நெஞ்சே! இன்று நாம் தலைவியின் அன்பு, பண்பு, மேனியின் மென்மை, உடம்பை உருக்கும் அன்பான சொற்கள் ஆகிய அனைத்தும் நம்மை மகிழச்செய்வதால், மகிழ்வாய் இருக்கிறோம். நாளை நாம் கடமைக்காகக் கடத்தற்கரிய பாலை நில வழியில் காட்டில் செல்ல நேரும். அங்கு அசைந்தாடும் மூங்கிலில் வண்டுகள் துளைத்து உண்டாக்கிய துளைகளில் கோடைக்காற்று புகுந்து வெளிவரும். அது, நீர் குடிக்கச் செல்லும் பசுக்களின் பின்னே ஆயர்கள் ஊதும் புல்லாங்குழல் இசைபோல மெல்ல வந்து ஒலிக்கும். தேக்கு மரங்கள் நிறைந்த காட்டில் இருப்பை மரங்களிலிருந்து அம்புப் புட்டியைத் திறந்து வைத்திருப்பது போன்று தளிர்களால் மூடப்பெற்ற பூக்கள், நூலிலிருந்து கழன்று விழும் முத்துகளைப் போல் தரையில் உதிரும்.

பூச் சூடி மேகத்தைப்போல் தழைத்துத் தாழ்ந்த கூந்தலினையும் வளைகள் செறிந்த முன் கையினையும் கொண்ட நம் காதலியின் அறிவு கலங்கிய பார்வையினையும், ஊடலையும் நினைத்து, மழை பெய்து நாள்கள் பல ஆகிவிட்ட காட்டில் உள்ள அழகிய சிற்றூரில் நாளை நாம் தனித்துத் தங்கியிருப்போமோ? (நெஞ்சே! அவ்வாறு நீ தங்கியிருக்க நினைப்பதுபோல என்னால் தலைவியை விட்டுப் பிரிந்து வர இயலாது.)

கருத்து

நெஞ்சே! இன்று இங்கே இன்பமாய் இருக்கிறோம். நாளை காட்டில் தலைவியைப் பிரிந்து தங்கியிருக்க இயலுமா? (இயலாது; ஆதலால் நான் பொருள்தேடப் புறப்படேன்.)

விளக்கம்

"நெஞ்சே! அன்பும் மடனும் சாயலும் ஒழுக்கமும் கொண்டுள்ள நம் தலைவியை ஒருசேரத் தழுவி இங்கே இருக்கிறோம். நம் பிரிவால் பூப் புனையாத கூந்தலும், வளை கழலும் கையும், கலங்கிய பார்வையும் அதனால் நம்மீது வெறுப்பும் கொண்டவளாய் நம் தலைவி விளங்குவாளே! இதனை நினைந்து நாளை அரிய பாலை வழியில் உள்ள சிற்றூரில் தங்கியிருப்போமோ?" என்கிறான்.

சொற்பொருள்

1. மடன் - மடப்பக்குணம் (ஒருவர் குற்றம் ஒருவர் அறியாமை); சாயல் - மென்மை; இயல்பு - நல்ல நடைமுறை.
2. என்பு - எலும்பு; கிளவி - சொல்.
3. ஓராங்கு - ஒருசேர.
4. இவணம் ஆகி - இவ்விடத்தில் இருந்து.
5. இவர் - பரந்த; ஆடுஅமை - அசையும் மூங்கில்; தும்பி - வண்டு; குயின்ற - துளைத்த.
6. அகலா - குறுகிய; கோடை - மேல்காற்று; முகத்தலின் - புகுந்து வருதலின்.
7. நீர்க்கு இயங்கு - நீர் பருகச் செல்லும்; இனநிரை - பசு மந்தை; பின்றை - பின்னே வரும்; வார்கோல் - நீண்ட கோல்.
8. ஆய்க்குழல் - ஆயர் குழல் (புல்லாங்குழல்); பாணி - இசை; ஐது வந்து இசைக்கும் - அழகியதாய் (இனிமை கொண்டதாய்) வந்து ஒலிக்கும்.
9. அமல் - நிறைந்த; கடறு - காடு.
10. யாத்த தூணி - அம்புகளைத் தொகுத்த புட்டில்கள் (அம்பறாத்தூணி); திறந்தவை - (மூடி) திறக்கப்பட்டவை.
11. இருப்பை - இருப்பை மரம்; குழை - தளிர்; பொதி - பொதியப்பெற்ற; குவிஇணர் - குவிந்த (துளைகளைக் கொண்ட) பூங்கொத்துகள்.
12. கழல் - (நூலினின்று) கழன்று விழும்; செந்நிலம் - சிவந்த நிலம்.

14. சேக்குவம் கொல்? - தங்கியிருப்போமோ?
14-15. பூ புனை புயல் - பூவால் புனையப்பெற்ற மேகம்.
15. ஒலிவரும் - தழைத்த; தாழ் - தாழ்ந்த; இருங்கூந்தல் - கரிய கூந்தல்.
16. செறி தொடி - நெருங்கிய வளையல்.
17. அஞர் - கலங்கிய; நோக்கம் - பார்வை; புலத்தல் - வெறுத்தல்.

தலைவன் கூற்று

அகநானூறு 167 **கடியலூர் உருத்திரங்கண்ணனார்**

திணை : பாலை

கூற்று

தலைமகன் பொருள் கடைக்கூட்டிய நெஞ்சிற்குச் சொல்லிச் செலவு அழுங்கியது.

கூற்று விளக்கம்

தன்னைப் போன்ற இளைஞர் பலர் பொருள் தேடிவரச் செல்வதைக் கண்ட தலைவனின் உள்ளத்திலும் அந்த ஆர்வம் தலையெடுத்தது. அதே சமயம் தன் தலைவியைப் பிரிய நேருமே என்ற துயரமும் எழுந்ததால், தன் நெஞ்சிற்குச் சொல்லித் தன் பயணத்தை நிறுத்தியது.

வயங்குமணி பொருத வகைஅமை வனப்பின்
பசுங்காழ் அல்குல் மாஅ யோளொடு
வினைவனப்பு எய்திய புனைபூஞ் சேக்கை,
விண்பொரு நெடுநகர்த் தங்கி, இன்றே
இனிதுஉடன் கழிந்தன்று மன்னே; நாளைப்
பொருந்தாக் கண்ணேம் புலம்புவந்து உறுதரச்
சேக்குவம் கொல்லோ, நெஞ்சே சாத்துஎறிந்து
அதர்கூட் டுண்ணும் அணங்குடைப் பகழிக்
கொடுவில் ஆடவர் படுபகை வெரீஇ
ஊர்எழுந்து உலறிய பீர்எழு முதுபாழ்,
முருங்கை மேய்ந்த பெருங்கை யானை
வெரிந்ஓங்கு சிறுபுறம் உரிஞ, ஒல்கி
இட்டிகை நெடுஞ்சுவர் விட்டம் வீழ்ந்தென,
மணிப்புறாத் துறந்த மரம்சோர் மாடத்து

எழுதுஅணி கடவுள் போகலின், புல்லென்று
ஒழுகுபலி மறந்த மெழுகாப் புன்திணைப்
பால்நாய் துன்னிய பறைக்கண் சிற்றில்,
குயில்காழ் சிதைய மண்டி, அயில்வாய்க்
கூர்முகச் சிதலை வேய்ந்த
போர்மடி நல்இறைப் பொதியி லானே?

தெளிவுரை

நெஞ்சே! மாந்தளிர் நிறத்தைக் கொண்ட நம் தலைவி, பளிங்கு போன்ற சரத்தில் இரத்தினங்களைக் கோத்த மேகலையை இடுப்பில் கட்டியிருக்கிறாள். அவளோடு விண்ணை அளாவும் பெரிய மாளிகையில் பூக்கள் நிரம்பிய படுக்கையில் இன்புற்றதால், இன்றைய பொழுது இனிதாய்க் கழிந்தது.

பொருளீட்டுவதற்காக நாம் செல்லும் வழியில் உள்ள ஊரில் பொதுமன்றம், வழிபடும் பலிபீடம் கொண்டதாய் உள்ளது. வில்லும் அம்பும் ஏந்தி, காட்டில் மறைந்திருந்து அவ்வழிச் செல்லும் வாணிகக் கூட்டத்தைக் கொன்று அவர் பொருளைக் கொள்ளையிடும் வேட்டுவர், ஊரினுள்ளும் வந்து தங்கியதால், மக்கள் அவர்களுக்கஞ்சி ஊரை விட்டுச் சென்றனர். வீடுகளில் பீர்க்கங் கொடி படர்ந்து கிடக்கிறது. அப்பாழூரில் முருங்கையை ஒடித்துத் தின்ற யானையின் மத்தகம் உரசியதால், செங்கல் சுவரின் மேல் இருந்த விட்டம் கீழே விழுந்துவிட்டது. அதிலிருந்த மணிப்புறாக்கள் பறந்து சென்றுவிட்டன. அடித்தளத்தின் கூரைச்சுவர் இடித்ததால் முதல் தளத்தின் கூரையில் உள்ள கைம்மரங்கள் தொங்கிப் போயின. மன்றத்தில் இருந்த தெய்வமும் நீங்கியது. அதனால் பலிபீடத்தின் திண்ணையும் மெழுகப்பெறாமல் பொலிவிழந்தது.

அண்மையில் ஈன்ற ஒரு நாய், திண்ணையின் தரையைப் பறித்துப் படுத்திருந்தது. அங்கே கீழே வீழ்ந்த கம்புகளின்மேல் கறையான் மூடி அரித்துத் தின்றதால் கூரை சாய்ந்து கிடந்தது. அத்தகைய பாழான அம்பலத்தில் நாளை நான் தன்னந்தனியாய் உறக்கம் கொள்ளாமல் அமர்ந்திருப்பேனா? அஃது இயலாதே.

கருத்து

நெஞ்சே! இன்று தலைவியோடு தங்கிப் பொழுது இன்பமாய்க் கழிந்தது. நாளை, செல்லும் வழியில், பாழடைந்த ஊரில் பொது இடத்தில் தங்கியிருப் போமோ?

விளக்கம்

"நெஞ்சே! விண்ணை முட்டும் மாளிகையில் அலங்கரிக்கப் பட்ட பூப்படுக்கையில் தலைவியோடு தங்கி இன்புற்றதால் இன்றைய பொழுது இனிதாய்க் கழிந்தது; நாளை, ஊர்மக்கள் வெளியேறிவிட்டதால் பாழடைந்ததும், யானை தன் முதுகினால் உராய்ந்ததால் விட்டம் விழப்பெற்றதும், புறாக்கள் தங்காத மாடங்களைக் கொண்டதும், மெழுகப் பெறாததும், சிறிய கரையான்களால் மொய்க்கப் பெறும் திண்ணையைக் கொண் டதுமான பொது மன்றத்தில், தனிமைத் துன்பத்தால் வருந்தித் தங்க வேண்டியிருக்கும்போலும்" என்று, பொருளீட்டப் பயணம் மேற்கொள்ளவிருந்த தலைவன், வழியின் கொடுமையைத் தன் நெஞ்சத்தினிடம் கூறிச் செலவினைத் தவிர்த்தான்.

சொற்பொருள்

1. வயங்குமணி - பளிங்கு மணி; பொருத - ஒத்த; வகையமை - கூறுபாடமைந்த.
2. பசுங்காழ் - பசிய சரம்; மாயோள் - மாமை நிறம் கொண்டவள்.
3. வினை வனப்பு - அழகிய வேலைப்பாடு; புனைபூ - பூக்களால் அலங்கரிக்கப்பட்ட; சேக்கை - படுக்கை.
4. விண்பொரு - வானை அளாவும்; நெடுநகர் - நீண்ட மாளிகை.
6. பொருந்தா - துயிலாத; கண்ணேம் - கண்களையுடையவனாய்; புலம்பு - தனிமை; உறுதர - வந்தடைய.
7. சேக்குவம் கொல் - தங்கி இருப்போமா?; சாத்து - வாணிகக் கூட்டம்; எறிந்து - கொன்று.
8. அதர் - வழியில்; கூட்டுண்ணும் - (அவர் பொருளைக்) கொள்ளை கொண்டு உண்ணுகின்ற; அணங்கு - வருத்தம்; பகழி - அம்பு.
9. படுபகை - மிக்க பகை; வெரீஇ - அஞ்சி.
10. ஊர் எழுந்து - (ஊர் மக்கள்) வெளியேறிவிட்ட; உலறிய - வளன் அற்ற; பீர் - பீர்க்கு; எழு - படர்ந்த; முதுபாழ் - பெரிய பாழிடத்தில்.
12. வெரிந் - முதுகு; ஓங்கு - உயர்ந்த; சிறுபுறம் - பிடரி; உரிஞு - உராய்தலின்; ஒல்கி - அசைந்து.

13. இட்டிகை - செங்கல்; விட்டம் - விட்ட மரம்.
15. எழுது அணி கடவுள் - எழுதப்பெற்ற அழகிய கடவுள்.
16. ஒழுகுபலி - இடையறாது நிகழும் பலி; மெழுகா - மெழுகப்படாத; புன்திணை - சிறிய திண்ணை; சிற்றில் - சிறிய வீடு.
17. குயில்காழ் - இயற்றப்பெற்ற கைமரம்; மண்டி - பரவி; அயில்வாய் - வேலின் முனை.
18. சிதலை - கறையான்; வேய்ந்த - மூடிக்கொள்ளுதலின்.
19. போர் மடி - கூரை மடிந்த (மக்கிய); இறை - இறைப்பு; பொதியில் - அம்பலம்.

தலைவன் கூற்று

குறுந்தொகை 63 **உகாய்க்குடி கிழார்**

திணை : பாலை

கூற்று

பொருள் கடைக்கூட்டிய நெஞ்சிற்குச் சொல்லியது. (கடைக்கூட்டுதல் - எண்ணி முடிவு செய்தல்.)

கூற்று விளக்கம்

பொருள்தேடி வரவேண்டும் எனத் துணிந்த நெஞ்சிற்குத் தலைவன் தன் நிலையைக் கூறியது.

'ஈதலும் துய்த்தலும் இல்லோர்க்கு இல்'எனச்
செய்வினை கைம்மிக எண்ணுதி' அவ்வினைக்கு
அம்மா அரிவையும் வருமோ?
எம்மை உய்த்தியோ? உரைத்திசின் நெஞ்சே!

தெளிவுரை

நெஞ்சமே! பிறர்க்குக் கொடுத்தலும், இன்பங்களை அனுபவித்தலும் ஆகிய சிறப்புகள் பொருள்வளம் இல்லாதவர்க்கு இல்லை என்று கருதி, பொருளைத் தேடுவதற்கான செயல்களைப் பற்றியே மிகவும் எண்ணுகின்றாய்! பொருள் தேடச் செல்லும்போது அழகிய மாந்தளிர் போன்ற நிறம் கொண்ட தலைவியும் நம்முடன் வருவாளா அல்லது என்னை மட்டும் தனியே செலுத்துவாயா? சொல்.

கருத்து

நெஞ்சே! தலைவியைப் பிரிந்து பொருள்தேடச் செல்லுதல் இயலாது.

விளக்கம்

தலைவன் பொருள் தேடச் செல்கையில் தலைவியை உடனழைத்துச் செல்லவும் இயலாது; தனியே அவளை விட்டுப் பிரிந்து செல்லவும் மனம் துணிவு கொள்ளவுமில்லை. எனவே, தலைவன் செலவைத் தவிர்க்கக் கருதுகிறான்.

குறிப்பு

தலைவன் பொருள் தேடும்பொருட்டுத் தலைவியைப் பிரிந்து செல்லாது செலவைத் தவிர்க்கக் கருதுதல் 'செலவழுங்குதல்' எனப்படும். இங்ஙனம் செலவழுங்கியது, செல்லாமல் இருப்பதற்கு அன்று. தன் மனத்திலுள்ள பேரன்பினைப் புலப்படுத்தி, ஒரு வகையாய்த் தலைவியைத் தேற்றிப் பின்பு பிரிவதே அவன் கருத்து.

சொற்பொருள்

1. துய்த்தல் - அனுபவித்தல்; இல் - இல்லை.
2. செய்வினை - பொருள் தேடும் செயல்; கைம்மிக - மிகவும்; எண்ணுதி - நினைக்கின்றாய்.
3. அம்மா - அ+மா - அழகிய மாந்தளிர் போலும் நிறம் கொண்ட; அரிவை - பெண், தலைவி.
4. உய்த்தியோ? - செலுத்துவாயா?; உரைத்திசின் - சொல்.

தலைவன் கூற்று

அகநானூறு 131 **மதுரை மருதனிளநாகனார்**

திணை : பாலை

கூற்று

பொருள் கடைக்கூட்டிய நெஞ்சிற்குத் தலைமகன் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவி தரும் இன்பத்தினும் ஈதல் இன்பம் சிறந்தது என்று கூறிப் பொருள் ஈட்ட வேண்டும் என வற்புறுத்திய நெஞ்சத்தினிடம் தலைவன் கூறியது.

'விசும்புஉற நிவந்த மாத்தாள் இகணைப்
பசுங்கேழ் மெல்இலை அருகுநெறித் தன்ன,
வண்டுபடுபு இருளிய, தாழ்இருங் கூந்தல்
சுரும்புஉண விரிந்த பெருந்தண் கோதை
இவளினும் சிறந்தன்று, ஈதல் நமக்குஎன,
வீளை அம்பின் விழுத்தொடை மழவர்
நாள்ஆ உய்த்த நாமவெஞ் சுரத்து
நடைமெலிந்து ஒழிந்த சேண்படர் கன்றின்
கடைமணி உகுநீர் துடைத்த ஆடவர்
பெயரும் பீடும் எழுதி அதர்தொறும்
பீலி சூட்டிய பிறங்குநிலை நடுகல்
வேல்ஊன்று பலகை வேற்றுமுனை கடுக்கும்
வெருவரு தகுந கானம், 'நம்மொடு
வருக' என்னுதி ஆயின்,
வாரேன் நெஞ்சம் வாய்க்கநின் வினையே!

தெளிவுரை

"நெஞ்சமே! வானளாவ உயர்ந்து வளர்ந்துள்ள இகணை மரம் பச்சைப் பசேலென்று மென்மையான இலைகளைக் கொண்டது. அவ்விலைகளை ஒடித்து ஒன்றனருகே ஒன்று நெருங்க வைத்ததுபோல நீண்டு தொங்கும் தலைவியின் கருங்கூந்தலில் வண்டுகள் மொய்ப்பதால் அது மேலும் கறுத்துத் தோன்றுகின்றது. வண்டுகள் தேனுண்ணும்படி மலர்ந்த பெரிய

குளிர்ச்சி பொருந்திய தலைமாலையினைச் சூடியுள்ள, 'இவளினும் (இத்தலைவியினும்) இரப்போர்க்கு ஈதலே நன்று' என்று எனக்குப் பொருளீட்டிவரச் செல்லும் விருப்பத்தினை உண்டாக்குகிறாய்.

செல்வம் சேர்த்தற்கு வேற்று நாட்டுக்குப் பாலை நிலத்தில் உள்ள காட்டுவழியில்தான் செல்ல வேண்டும். அக்காட்டில் சிறந்த மாலையணிந்த (வெட்சி) வீரர் சீட்டி அடித்தவாறு அம்பெய்து கொண்டிருப்பர். (அவர்கள் பகைவர் நாட்டில் புகுந்து பசுக் கூட்டங்களைக் கவர்ந்து) அவற்றை அதிகாலையில் காட்டுவழியில் ஓட்டி வருவர். பசுக்கூட்டத்தில் உள்ள கன்றுகள் நெடுந்தூரம் நடக்கவியலாமல் வருந்தி நின்றுவிடும். அவற்றின் கண்களில் வடியும் நீரை வீரர்கள் (கருணையுடன்) துடைத்து விடுவர். இத்தகைய வீரமும் கருணையும் கொண்டோர் (பசுக்களை மீட்க வரும் வீரருடன் போரிடும்போது) இறந்தால், அவர் நினைவாய் நடுகல் நட்டு, அதில் அவர் பெயரையும் பெருமையையும் பொறித்து வைப்பர். அந்நடுகல்முன் வேல் ஊன்றி, கேடகத்தை அதில் சார்த்தி, மயில்தோகையை வைத்தும் வழிபடுவர். வேற்று வேந்தரது போர் முனையை ஒத்துக் காணப்படும் அச்சம் தரும் இக்காட்டுவழியில், 'என்னோடு வருக; பொருளீட்டச் செல்லலாம்' என்று அழைக்கின்றாய். நான் வர மாட்டேன். (நீ வேண்டுமானால் செல்.) உன் செயல் வெற்றி பெறட்டும்" என்று சொல்லித் தலைவன் செலவினைத் தவிர்த்தான்.

கருத்து

நெஞ்சமே! தலைவியோடு வீட்டில் இருத்தலைக் காட்டிலும் இரப் போர்க்கு ஈந்து புகழ் பெறுவதே சிறப்பானது என்று பொருளீட்டிவர, அச்சம் தரும் காட்டு வழியே செல்ல என்னை அழைக்கிறாய். தலைவியைப் பிரிந்து நான் வரமாட்டேன். நீ வேண்டுமானால் செல்; உன் செயல் வெற்றி பெறட்டும்.

சொற்பொருள்

1. விசும்பு உற - வானத்தோடு பொருந்த; நிவந்த - உயர்ந்த; மாத்தாள் - பெரிய அடிமரத்தைக் கொண்ட; இகணை - இகணை மரம்.

2. பசுங்கேழ் - பச்சை நிறம்; மெல் இலை - மென்மையான இலை; அருகு நெறித்தன்ன - அருகருகே நெருங்க வைத்திருப்பது போன்ற.
3. வண்டு படுபு - வண்டுகள் மொய்க்கின்ற; தாழ் இருங்கூந்தல் - நீண்டு தொங்கும் கரிய கூந்தல்.
4. சுரும்பு - வண்டு; பெருந்தண் கோதை - பெரிய குளிர்ச்சியான தலை மாலை.
5. சிறந்தன்று - சிறந்தது; ஈதல் - இரப்போர்க்குக் கொடுத்தல்.
6. வீளை - சீட்டி, வாயை மடித்து எழுப்பும் சீழ்க்கை; விழுத் தொடை - பெரிய மாலை; மழவர் - (பசுக் கவரும்) வீரர்.
7. நாள்ஆ உய்த்த - விடியற்காலையில் ஆக்களைக் கவர்ந்துகொண்டு போன; நாம வெஞ்சுரம் - அச்சம் தரும் வெம்மையான காடு.
8. நடை மெலிந்து - நடை தளர்ந்து; ஒழிந்த - நின்றுகொண்ட; சேண்படர் - நெடுந்தொலைவு நடந்ததால்.
9. கடைமணி உகுநீர் - கடைக்கண்ணிலிருந்து ஒழுகும் நீர்.
10. பீடும் - பெருமையும்; எழுதி - பொறித்து; அதர்தொறும் - வழியிட மெங்கும்.
11. பீலி - மயில்தோகை; பிறங்கு நிலை - விளங்கும் (தோன்றும்) நிலை யினைக் கொண்ட
12. வேல் ஊன்று - வேலை ஊன்றி; பலகை - (அதில் சார்த்திய) கேடகம்; வேற்றுமுனை - பகைவர் போர்முனை; கடுக்கும் - ஒக்கும்.
13. வெருவரு - அச்சம் தருகின்ற; தகுந - இயல்பினைக் கொண்ட.
14. என்னுதி - என்று கூறுகிறாய்; ஆயின் - ஆனால்.
15. நின் வினை வாய்க்க - நீ மேற்கொண்ட செயல் வெற்றி பெறட்டும்.

தலைவன் கூற்று

அகநானூறு 5 **பாலை பாடிய பெருங்கடுங்கோ**

திணை : பாலை

கூற்று

பொருள்வயிற்பிரியக் கருதிய தலைமகன், தன் நெஞ்சிற்குச் சொல்லிச் செலவழுங்கியது.

கூற்று விளக்கம்

தலைவியைப் பிரிந்து சென்று பொருளீட்டிவரக் கருதிய தலைவன், 'நாம் பிரிவோமாயின் நம் தலைவி உயிர் வாழாள்' என்று உணர்ந்து, அவள்

தன்மையைத் தன் நெஞ்சத்தினிடம் எடுத்துக் கூறிச் செலவினைத் தவிர்த்தது.

அளிநிலை பொறாஅது அமரிய முகத்தள்,
விளிநிலை கொள்ளாள், தமியள், மென்மெல,
நலம்மிகு சேவடி நிலம்வடுக் கொளாஅ,
குறுக வந்து,தன் கூர்எயிறு தோன்ற
வறிதுஅகத்து எழுந்த வாய்அல் முறுவலள்,
கண்ணியது உணரா அளவை, ஒண்ணுதல்,
வினைதலைப் படுதல் செல்லா நினைவுடன்
முளிந்த ஓமை முதையல்அம் காட்டு,
பளிங்கத்து அன்ன பல்காய் நெல்லி,
மோட்டுஇரும் பாறை, ஈட்டுவட்டு ஏய்ப்ப,
உதிர்வன படூஉம் கதிர்தெறு கவாஅன்,
மாய்த்த போல மழுகுநுனை தோற்றி,
பாத்தி யன்ன குடுமிக் கூர்ங்கல்,
விரல்நுதி சிதைக்கும் நிரைநிலை அதர,
பரல்முரம்பு ஆகிய பயம்இல், கானம்
இறப்ப எண்ணுதிர் ஆயின் – 'அறத்தாறு
அன்றுஎன மொழிந்த தொன்றுபடு கிளவி
அன்ன ஆக' என்னுநள் போல,
முன்னம் காட்டி, முகத்தின் உரையா,
ஓவச் செய்தியின் ஒன்றுநினைந்து ஒற்றி,
பாவை மாய்த்த பனிநீர் நோக்கமொடு,
ஆகத்து ஒடுக்கிய புதல்வன் புன்தலைத்
தூநீர் பயந்த துணைஅமை பிணையல்
மோயினள் உயிர்த்த காலை, மாமலர்
மணிஉரு இழந்த அணிஅழி தோற்றம்
கண்டே கடிந்தனம் செலவே ஒண்டொடி
உழையம் ஆகவும் இனைவோள்
பிழையலள் மாதோ, பிரிதும்நாம் எனினே!

தெளிவுரை

"நெஞ்சே! ஒளி பொருந்திய நெற்றியைக் கொண்ட தலைவி, முன்பு எப்பொழுதும் இல்லாத அளவு நாம் அன்பு

காட்டியதால், நாம் பிரிய இருப்பதை உணர்ந்து கொண்டாள்; வேறுபட்ட முகத்தவள் ஆனாள். நாம் அழைத்த போதும் அதனைக் கேளாதவள்போல இருந்தாள். தன்னந்தனியளாய், அழகு மிகுந்த தன் சிவந்த பாதங்களால் நிலத்தில் சுவடுபட நடந்து என் அருகே வந்தாள். தன் கூர்மையான பற்கள் தோன்றுமாறு வாடிய உள்ளத்திலிருந்து எழுந்த போலிப் புன்முறுவலைக் காட்டினாள். நாம் பிரிந்து செல்வதைப்பற்றி நாமே ஒரு முடிவினை மேற்கொள்வதற்கு முன்னரே, ஒள்ளிய நுதலினைக் கொண்ட அவள், நாம் பொருள்வயிற்பிரிதலை உடன்படாத கருத்தினைக் கொண்டவள் ஆனாள்.

பட்டுப்போன ஓமை மரங்கள் கொண்ட பழமையான காட்டில் பளிங்கு போன்ற நெல்லிக்காய்கள், உயர்ந்த பெரிய பாறைகளில் சிறுவர்கள் வட்டாடச் சேர்த்துவைத்த கழங்கு களைப் போலக் கிடக்கும்; வெயில் காயும் பக்க மலைகளில் பதித்துவைத்தாற் போன்ற கூர்மையான பருக்கைக்கற்கள் தீட்டப்பட்டன போலத் தேய்ந்த முனைகளுடன் விளங்கும்; அவை அவ்வழி நடப்பவரின் விரல் முனைகளைச் சிதைக்கும். அத்தகைய பரல்கள் நிரம்பியதும் எவ்வகைத் தாவரங்களும் தோன்றுதல் இல்லாததுமான வன்னிலமாகிய கானத்தைக் கடந்து செல்லக் கருதினீர். அவ்வாறாயின், 'காதலித்தாரைப் பிரிதல் அறநெறியன்று என்று சொல்லப்படுகின்ற பழமையான முதுமொழி வெறும் கூற்றாகவே கருதப்பட்டுக் கழியட்டும்' என்று சொல்பவள் போன்ற குறிப்பினைத் தன் முகக் குறிகளால் உணர்த்தினாள். அந்த ஒரு நினைவையே தன் உள்ளத்தில் கொண்டு ஓவியப்பாவைபோல நின்றனள். கண்ணின் பாவையையும் மறைத்துக் கண்ணீர் நிரம்பியது; தன் மார்பில் அணைத்திருந்த எம் புதல்வனது சிறு குடுமியிலே சூட்டியிருந்த, தூய பூக்களால் தொடுக்கப்பட்ட, நீர் சொட்டிக்கொண்டிருந்த செங்கழுநீர் மாலையை மோந்து, பெருமூச்சு விட்டாள். அதனால் பவளம் போன்ற அந்தப் பெரிய மலர்கள் தம் அழகிய உருவத்தினை இழந்து பொலிவிழந்தன. ஆதலின், அவளைப் பிரிந்து செல்வதைத் தவிர்த்தேன்.

ஒளி பொருந்திய வளையலை அணிந்த அவள், நான் அருகில் இருக்கும் பொழுதே இவ்வாறு வருந்துகிறாளெனின், பிரிவே மாயின் உறுதியாய் உயிர்வாழ மாட்டாள்" என்று தலைவன் தன் நெஞ்சத்தினிடம் கூறித் தன் பயணத்தைத் தவிர்த்தான்.

கருத்து

நான் பிரியின் தலைவி உயிர் வாழாள் என்பதால் செலவினைத் தவிர்த்தேன்.

விளக்கம்

"தலைவி என் பிரிவை உணர்ந்த கருத்தினளாய், மனத்தொடு படாத முறுவலொடு, 'நீ பிரிவாயாயின் அஃது அறவழி அன்று' என்று குறிப்பிட்டு, தன் மார்பில் அணைத்திருந்த புதல்வனின் தலைமாலையை முகர்ந்து, பெருமூச்சு விட்டாள்; அவ்வளவில் அம்மாலையில் உள்ள மலர்கள் வாடி, நிறம் மாறிப் பொலிவிழந்தன. நாம் அருகிலிருக்கும் பொழுதே இவ்வாறு வருந்தும் தலைவி நாம் பிரிந்து சென்றால் உயிர் வாழாள் என்று கருதிப் பொருள்வயிற்பிரியும் எண்ணத்தைக் கைவிட்டேன்" என்று தலைவன் தன் நெஞ்சத்தினிடம் சொல்லித் தன் செலவினைத் தவிர்த்தான்.

சொற்பொருள்

1. அளிநிலை - கருணையோடு நோக்கும் நிலை; அமரிய - மாறுபட்ட.
2. விளிநிலை - அழைத்தலை; தமியள் - தனியளாயிருத்தல்.
3. சேவடி - சிவந்த அடி; வடு - சுவடு; கொளாஅ - கொள்ளுமாறு.
4. குறுக வந்து - அருகே வந்து; கூர்எயிறு - கூரிய பல்.
5. வறிது - சிறிது; அகத்து எழுந்த - தன்னிடத்தில் தோன்றிய; வாய்அல் முறுவலள் - பொய்யான புன்சிரிப்பு.
6. கண்ணியது - நினைத்தது.
7. வினை தலைப்படுதல் - பொருள்வயிற்பிரிய முற்படுதல்.
8. முளிந்த - காய்ந்த; ஓமை - ஒரு வகை மரம்; முதையல் - முதிய.
9. பளிங்கத்து அன்ன - பளிங்கு போன்ற.
10. மோட்டு - உயர்ந்த; இரும்பாறை - பெரிய பாறை; ஈட்டு - சேர்த்து வைத்த; வட்டு - சூதாடு காய்; ஏய்ப்ப - போல.

11. படூஉம் - கிடக்கும்; கதிர் - ஞாயிற்றின் கதிர்கள்; தெறு - காய்கின்ற; கவாஅன் - மலைச்சாரல்.
12. மாய்த்த - தீட்டிய; மழுகு நுனை - தேய்ந்த நுனி.
13. பாத்தி அன்ன - பகுத்து வைத்தால் ஒத்த; குடுமி - தலை, உச்சி.
14. நுதி - நுனி; சிதைக்கும் - அழிக்கும்; நிரை நிலை - நிரல்பட அமைந்துள்ள நிலைமையில் உள்ள; அதர - வழிகள்.
15. பரல் - பரல் கற்கள்; முரம்பு - மேட்டு நிலம்; பயம்இல் - வளம் இல்லாத; கானம் - காடு.
16. இறப்ப - கடந்து செல்ல; அறத்தாறு - அறத்தின் வழி.
17. தொன்றுபடு கிளவி - பழமை பொருந்திய சொல்.
18. என்னுநள் - என்று சொல்பவள்.
19. முன்னம் - குறிப்பு; உரையா - உரைக்கும், தெரிவிக்கும்.
20. ஓவம் - ஓவியம்; ஒற்றி - தீர்மானித்து.
21. பாவை - கண்ணின் பாவை; மாய்த்த - மறைத்த; பனிநீர் - கண்ணீர்.
22. ஆகம் - மார்பு; ஒடுக்கிய - அடக்கிய; புன்தலை - சிறிய தலை.
23. தூநீர் - தூய்மையான நீர்; பயந்த - தந்த, சொட்டிக்கொண்டிருந்த; பிணையல் - (செங்கழு நீர்) மாலை.
24. மோயினள் - முகர்ந்தனள்; உயிர்த்தல் - பெருமூச்சு விடுதல்.
25. மணி - பவளம்; உரு - நிறம்; அணிஅழி - அழகு அழிந்து.
26. கடிந்தனம் - தவிர்த்தனம்; செலவு - பயணம்.
27. உழையம் ஆகவும் - அருகே இருக்கவும்; இனைவோள் - துன்பப் படுபவள்.
28. பிழையலள் - உயிர் வாழ மாட்டாள்.

தலைவன் கூற்று

அகநானூறு 51 **பெருந்தேவனார்**

திணை : பாலை

கூற்று

பொருள்வயிற்பிரிவு கடைக்கூட்டிய நெஞ்சிற்குத் தலைமகன் சொல்லியது.

கூற்று விளக்கம்

பொருள் சேர்ப்பதற்காகத் தலைவியைப் பிரிந்து செல்ல உறுதி செய்த நெஞ்சத்தினை நோக்கித் தலைவன், 'நெஞ்சே! நீ அரிய காடு கடந்து அடைய விருக்கும் பொருள், இவளைப் பிரிவதனால்தான் கிடைக்குமென்றால், அதனைக் கைவிடு' என்று கூறியது.

ஆள்வழக்கு அற்ற சுரத்திடைக் கதிர்தெற,
நீள்எரி பரந்த நெடுந்தாள் யாத்து,
போழ்வளி முழங்கும், புல்லென் உயர்சினை,
முடைநசை இருக்கைப் பெடைமுகம் நோக்கி
ஊன்பதித் தன்ன வெருவரு செஞ்செவி
எருவைச் சேவல் கரிபுசிறை தீய,
வேனில் நீடிய வேய்உயர் நனந்தலை,
நீஉழந்து எய்தும் செய்வினைப் பொருட்பிணி
பல்இதழ் மழைக்கண் மாஅ யோள்வயின்
பிரியின் புணர்வது ஆயின், பிரியாது,
ஏந்துமுலை முற்றம் வீங்க, பல்ஊழ்
சேயிழை தெளிர்ப்பக் கவைஇ, நாளும்
மனைமுதல் வினையொடும் உவப்ப,
நினைமாண் நெஞ்சம்நீங்குதல் மறந்தே.

தெளிவுரை

"நெஞ்சே! மக்கள் நடமாட்டம் இல்லாத காட்டுவழியில் கதிரவன் காய்தலால் மிகுதியான வெப்பம் பரவி இருக்கிறது. நீண்ட அடிமரத்தைக் கொண்ட யாமரத்தின் அழகற்று வாடிய உயர்ந்த கிளையில் ஊடறுத்துச் செல்லும் காற்று இரைச்ச விடும். அம்மரக்கிளையில் புலாலினை விரும்பி இருக்கின்ற தன் பெடையின் முகவாட்டத்தினைப் பார்த்து, ஊன் துண்டினைப் பதித்து வைத்தாற் போன்ற அச்சந்தரும் சிவப்பான காதுகளைக் கொண்ட ஆண் பருந்து இரை தேட எழும்போது, அதன் சிறகுகள் தீய்ந்துவிடும் அளவுக்கு, மூங்கில்கள் உயர்ந்து வளர்ந்திருக்கும் அகன்ற அக்காட்டில் வெப்பம் மிகுந்திருக்கும்.

நீ அதனிடையே சென்று வருந்தி ஈட்டும் பொருள், மலர் போலும் குளிர்ச்சி பொருந்திய கண்களும் மாமை நிறமும் கொண்ட நம் தலைவியைப் பிரிவதால்தான் கைகூடும் என்றால், மாண்புடைய நெஞ்சமே! நீ அவளை விட்டு நீங்குதலை மறந்து விடு. அவளைப் பிரியாது, நிமிர்ந்த அவளது முலைப்பரப்பு விம்முறுமாறும், செம்மையான அவளுடைய அணிகள் ஒலி செய்யுமாறும், பன்முறையும் தழுவித் தழுவி, நாள்தோறும்

அவள் இல்லறம் நடத்துவதை உவப்புடன் கண்டு மகிழ்ந்திரு" என்று தலைவன் தன் நெஞ்சத்தினிடம் சொல்கிறான்.

கருத்து

நம் தலைவி இல்வாழ்க்கை நடத்துவதைக் கண்டு களிக்க வேண்டும். ஆதலால், அவளைப் பிரிய மாட்டேன்.

விளக்கம்

"நெஞ்சமே! தலைவியைப் பிரியாமல் அவள் முலைப்பரப்பு விம்முறுமாறும் அணிகலன்கள் ஒலிக்குமாறும் தழுவி, அவள் நாள்தோறும் இல்வாழ்க்கை நடத்துவதைக் கண்டு களிக்க வேண்டும். இதை விடுத்துத் தலைவியைப் பிரிந்து வேனில் வெப்பம் மிகுந்த காட்டுவழியே சென்றுதான் பொருள் ஈட்ட வேண்டும் என்றால் நீ அதை மறந்துவிடு."

சொற்பொருள்

1. வழக்கு - இயங்குதல்; சுரம் - பாலைநில வழி; கதிர் - ஞாயிறு; தெற - சுட.
2. எரிபரந்த - வெம்மை பரவிய; நெடுந்தாள் - நீண்ட அடிமரம்; யா - யா மரம்.
3. போழ் - பிளந்து செல்லும்; வளி - காற்று; புல்லென் - பொலிவற்ற.
4. முடை நசை - புலால் விருப்பம்; பெடை - பெண்.
5. ஊன் பதித்து அன்ன - ஊன் துண்டினைப் பதித்து வைத்தது போன்ற; வெருவரு - அச்சம் தரும்; செஞ்செவி - சிவந்த காது.
6. எருவைச் சேவல் - ஆண் பருந்து; சிறை கரிபு தீய - இறக்கை கரிந்து தீய்ந்திட.
7. வேய் - மூங்கில்; நனந்தலை - அகன்ற இடம்.
8. உழந்து - வருந்தி.
9. மழைக்கண் - குளிர்ந்த கண்; மாஅயோள் - மாமை நிறம் கொண்டவள்; வயின் - இடம்.
10. புணர்வது - கைகூடி வரக்கூடியது.
11. முலை முற்றம் - முலைப்பரப்பு; வீங்க - விம்ம; பல்ஊழ் - பல முறை.
12. சேயிழை - செம்மையான அணிகலன்; தெளிர்ப்ப - ஒலிக்க; கவைஇ - தழுவி.
13. மனை முதல் - தலைவி; வினை - இல்வாழ்க்கைத் தொழில்.
14. நினை - நினைத்துப்பார்; நீங்குதல் - பிரிதல்.

தலைவன் கூற்று

அகநானூறு 77 **மருதனிளநாகனார்**

திணை : பாலை

கூற்று

தலைமகன் பிரியக் கருதிய நெஞ்சிற்குச் சொல்லிச் செலவழுங்குவித்தது.

கூற்று விளக்கம்

வேற்று நாடு சென்று பொருள் தேடி வர விரும்புகிறான், தலைவன் ஒருவன். அவன் குறிப்பினை அறிந்த தலைவி, கண் கலங்கி நொந்து மெலிந்தாள். அதனைக் கண்டு தன் நெஞ்சத்தினிடம் சொல்லித் தலைவன் தன் பயணத்தைத் தவிர்த்துக்கொண்டது.

'நல்நுதல், பசப்பவும், ஆள்வினை தரீஇயர்,
துன்அருங் கானம் துன்னுதல் நன்று',எனப்
பின்னின்று சூழ்ந்தனை ஆயின்,நன்று இன்னாச்
சூழ்ந்திசின் – வாழிய, நெஞ்சே! வெய்துற
இடிஉமிழ் வானம் நீங்கி, யாங்கணும்
குடிபதிப் பெயர்ந்த சுட்டுடை முதுபாழ்க்
கயிறுபிணிக் குழிசி ஓலை கொண்மார்,
பொறிகண்டு அழிக்கும் ஆவண மாக்களின்,
உயிர்திறம் பெயர, நல்அமர்க் கடந்த
தறுக ணாளர் குடர்தரீஇ, தெறுவர,
செஞ்செவி எருவை, அஞ்சுவர இகுக்கும்
கல்அதர்க் கவலை போகின், சீறூர்ப்
புல்அரை இத்திப் புகர்படு நீழல்
எல்வளி அலைக்கும், இருள்கூர் மாலை,
வானவன் மறவன், வணங்குவில் தடக்கை,
ஆனா நறவின் வண்மகிழ்ப் பிட்டன்
பொருந்தா மன்னர் அருஞ்சமத்து உயர்த்த
திருந்துஇலை எஃகம் போல,
அருந்துயர் தரும்,இவள் பனிவார் கண்ணே.

தெளிவுரை

நெஞ்சே! நீ வாழ்க! நம் தலைவியின் அழகிய நெற்றியில் பசலை படர, அவளைப் பிரிந்து சென்று, முயற்சி செய்து, பொருளீட்டி வருவதற்கு அரிய காட்டினைக் கடந்து செல்லுதலும் நன்று என்று தூண்டுகின்ற நீ, எனக்கு நல்லது அல்லாததை எண்ணியதாய்க் கருதுகிறேன்.

நாம் செல்ல வேண்டிய வழியோ, இடிகளை உமிழ்கின்ற வானம் மழை பெய்யாமையால் எவ்விடத்தும் குடிமக்கள் தத்தம் ஊரைவிட்டுப் பெயர்ந்து போனதைச் சுட்டிக் காட்டும் வெம்மை மிக்க பாழ்பட்ட இடங்களைக் கொண்ட பாலை நிலம்.

கயிற்றினால் கட்டி முத்திரையிடப்பட்டுள்ள குடத்தினுள் (ஊராட்சிக்கு உரியவர்களைத் தேர்ந்தெடுக்க மக்கள் தாம் விரும்புவரின் பெயர்களை எழுதி இட்டுள்ள) ஓலைகளை எடுக்கும் முன்னர், அக்குடத்தின் மேலிட்ட முத்திரையை ஆய்ந்து சரிபார்த்த பின்னர்க் குடத்தினுள் கைவிட்டு ஓலைகளை ஆவணமாக்கள் வெளியே எடுப்பர்.

அதுபோல, தங்கள் உயிர் நீங்குமளவும் பகைவருடன் அஞ்சாது போர் செய்து இறந்துபட்ட வீரர்களின் குடலை, சிவந்த காதுகளைக் கொண்ட பருந்து, காண்பவர் அஞ்சுமாறு அவர்களின் உடற்கூட்டிலிருந்து இழுத்துப் போடும்.

அத்தகைய கற்களைக் கொண்ட கவர்த்த வழிகளிலே சென்றால் அங்குள்ள சிற்றூர்களின் அருகே பொலிவிழந்த அடிமரத்தைக் கொண்ட இத்தி மரத்தின் புள்ளிபட்ட நிழலிலே பெருங்காற்று அலைத்துக்கொண்டிருக்கும்.

பிட்டன் என்பவன் சேர மன்னனிடம் படைத்தலைவனாய் இருந்தான். அவன் வளைந்த வில்லைத் தன் பெரிய கையிலே கொண்டவன்; உண்ண உண்ணத் தெவிட்டாத கள்ளினால் ஏற்படும் பெரும் களிப்பினை விரும்புபவன். இருள் மிகுந்த மாலைப் பொழுதில் அவன், பகை மன்னருடன் செய்த அரிய போரில் உயர்த்திய, திருந்திய இலை அமைப்பைக் கொண்ட வேலினைப் போன்றுள்ள தலைவியின் நீரொழுகும் கண்கள் என்

முன் தோன்றி எனக்குப் பொறுத்தற்கரிய துன்பத்தைத் தருமன்றோ? (எனவே, நெஞ்சமே! பொருள் தேடச் செல்லும் முயற்சியைக் கைவிடு.)

கருத்து

பொருள் தேடத் தூண்டிய நெஞ்சத்தினை நோக்கித் தலைவன், ‘நெஞ்சமே! தலைவியைப் பிரிந்து பொருள் தேடச் சென்றால், சென்ற இடத்தில் அவள் நினைப்புத் தோன்றி, பொருள் தேடும் முயற்சியைத் தடைப்படுத்தும். எனவே நம் முயற்சியைக் கைவிடுவோம்’ என்று கூறுகிறான்.

விளக்கம்

குழியோலை என்பது குடவோலை முறை. பண்டை நாளில் மக்கள் ஊராட்சிக்குரியவர்களைக் குடவோலை முறையில் தேர்ந் தெடுத்தனர். மக்கள், ஊராட்சிக்குத் தாம் உறுப்பினராய்த் தேர்ந் தெடுக்க விரும்புவர் பெயர்களை ஓர் ஓலையில் எழுதி ஒரு குடத்தில் இடுவர். பின், குடத்தின் வாயைத் துணியால் போர்த்திக் கட்டி அதன்மீது இலச்சினையைப் பொறிப்பர். பின்னர், ஆவணமாக்கள் குடத்தின் மேலிட்ட இலச்சினையைப் பலர் முன்னிலையில் சரிபார்த்து நீக்கி, உள்ளிருக்கும் ஓலைகளை எடுத்துத் தேர்ந்தெடுக்கப்பட்டவர் பெயர்களை அறிவிப்பர். இதுவே குடவோலை முறை எனப்பட்டது.

ஆவணமாக்கள் ஓலையைக் குடத்தினுள் கைவிட்டு வெளியே எடுப்பர். அதுபோல, போர்க்களத்தில் இறந்துபட்டவர்களின் வயிற்றுப் புண்ணில் பருந்து தன் அலகை நுழைத்துக் குடலை உருவி எடுப்பது போன்றிருந்தது என உவமை கூறப்பட்டுள்ளது.

குறிப்பு

பிட்டன் என்பவன் சேர மன்னன் படைத்தலைவன்.

சொற்பொருள்

1. பசப்ப - பசலை படர; ஆள்வினை - முயற்சி; தரீஇயர் - பொருள் பெற வேண்டி.
2. துன் அரும் கானம் - நெருங்குதற்கு அரிய காடு.
3. பின் நின்று - என் பின்னே நின்று.

4. நன்று இன்னாச் சூழ்ந்தின் - நல்லது அல்லாததை எண்ணினாய்.
5. வானம் நீங்கி - மழை பெய்யாது நீங்க.
6. குடி - குடிமக்கள்; பதிப்பெயர்ந்த - தம் ஊரை விட்டுப் பெயர்ந்து சென்ற; சுட்டுடை - பலரும் சுட்டிக் கூறும்; முதுபாழ் - பாழ்பட்டுக் கிடக்கும் பாலை நிலம்.
7. கயிறு பிணி - கயிற்றால் கட்டப்பட்ட; குழிசி - குடம்; கொண்மார் - கொள்பவர்.
8. பொறி - இலாஞ்சினை, முத்திரை; கண்டு - ஆய்ந்து; அழிக்கும் - (துணியைக்) கிழிக்கும்; ஆவணமாக்கள் - ஓலைகளை எடுப்பவர்கள்.
9. திறம் - நிலை; பெயர - நீங்க; அமர் - போர்; கடந்த - வெற்றி பெற்ற.
10. தறுகணாளர் - (பகைவர்க்கு) அஞ்சா வீரர்; குடர்தரீஇ - குடலை உருவி; தெறுவ - மாற்றார் அஞ்ச.
11. செஞ்செவி - சிவந்த காது; எருவை - பருந்து.
12. அதர் - வழி; கவலை - கவர்த்த வழி; போகின் - சென்றால்; சீறூர் - சிறிய ஊர்.
13. புல் அரை - பொலிவிழந்த அடிமரம்; இத்தி - இத்தி மரம்; புகர்படு - புள்ளி பொருந்திய; நீழல் - நிழல்.
14. எல்வளி - பெருங்காற்று; அலைக்கும் - வீசும்; கூர் - மிகுதி.
15. வானவன் - சேர மன்னன்; மறவன் - படைத்தலைவன்; வணங்கு வில் - வளைந்த வில்; தடக்கை - பெரிய கை.
16. ஆனா - அமையாத; நறவு - கள்; வண்மகிழ் - மிக்க மகிழ்ச்சி; பிட்டன் - சேர மன்னன் படைத்தலைவன்.
17. பொருந்தா மன்னர் - பகை அரசர்; அருஞ்சமம் - அரிய போர்; உயர்த்த - ஏந்திய.
18. திருந்துஇலை - திருத்தப்பட்டு இலை வடிவில் உள்ள; எஃகம் - (எஃகினாலாகிய) வேல்.
19. அருந்துயர் - மிக்க துன்பம்; பனிவார் - நீர் வழியும்.

தலைவன் கூற்று

அகநானூறு 191 **ஒரோடோகத்துக் கந்தரத்தனார்**

திணை : பாலை

கூற்று

தலைமகன் தன் நெஞ்சிற்குச் சொல்லிச் செலவு அழுங்கியது.

கூற்று விளக்கம்

தலைவன் தன் நெஞ்சத்தினை நோக்கி, 'நாம் இப்பொழுது இவளைப் பிரிந்தால் இவள் இறப்பாள். அத்தகையவளுக்கு நம் பிரிவினை யார் சொல்வது? நான் இதனைச் சொல்ல மாட்டேன்' எனக் கூறித் தன் பயணத்தைத் தவிர்த்தது.

அத்தப் பாதிரித் துய்த்தலைப் புதுவீ
எரிஇதழ் அலரியொடு இடைபட விரைஇ,
வெண்தோட்டுத் தொடுத்த வண்டுபடு கண்ணி,
தோல்புதை சிரற்றுஅடி, கோலுடை உமணர்
ஊர்கண்ட அன்ன ஆரம் வாங்கி,
அருஞ்சுரம் இவர்ந்த அசைவுஇல் நோன்தாள்
திருந்துபகட்டு இயம்பும் கொடுமணி, புரிந்துஅவர்
மடிவிடு வீளையொடு, கடிதுஎதிர் ஓடி,
ஓமைஅம் பெருங்காட்டு வரூஉம் வம்பலர்க்கு
ஏமம் செப்பும் என்றூழ் நீள்இடை,
அரும்பொருள் நசைஇ, பிரிந்துஉறை வல்லி,
சென்று,வினை எண்ணுதி ஆயின், நன்றும்
உரைத்திசின் வாழி,என் நெஞ்சே – நிரைமுகை
முல்லை அருந்தும் மெல்லிய ஆகி,
அறல்என விரிந்த உறல்இன் சாயல்
ஒலிஇருங் கூந்தல் தேறும்என,
வலிய கூறவும் வல்லையோ, மற்றே?

தெளிவுரை

நெஞ்சே! வாழ்க! உமணர், உப்பை வண்டியில் ஏற்றிக் கடற்கரையிலிருந்து குறிஞ்சி, முல்லை, மருதம் ஆகிய நிலங் களுக்குச் சென்று விற்பர். அங்கங்குக் கிடைக்கும் மலர்களைச்

சூடும் வழக்கப்படி பாலை நிலத்தில் பஞ்சு போன்ற துய்யினைக் கொண்ட பாதிரிப் பூவை நெருப்புப் போன்ற இதழினைக் கொண்ட அலரிப்பூவோடு கலந்து வெள்ளிய தோட்டினைத் தாழம்பூவின் இதழில் வைத்துக் கட்டி, வண்டுகள் மொய்க்கத் தம் தலையில் சூடிக்கொள்வர். காலில் செருப்பு அணிந்திருப்பர். காளைகளைச் செலுத்தும் கம்புகளைக் கையில் கொண்டிருப்பர். இவர்கள் கூட்டமாகவே செல்வர். வண்டிகளில் பயணம் செய் கின்ற உமணர் நேரப்போக்கிற்காகவும், பயத்தை நீக்குவதற் காகவும் சீழ்க்கை அடிப்பர். காளைகளின் மணி ஒலியும், இவர்களின் சீழ்க்கை ஒலியும் காற்றில் கலந்து வழிப் போவோர்க்கு மக்கள் நடமாட்டம் உள்ளது போன்ற பாதுகாப்பு உணர்ச்சியைத் தரும். இத்தகைய வெம்மை மிகுந்த காட்டில், அரிய பொருளை ஈட்ட விரும்பி நம் தலைவியைப் பிரிந்து செல்லும் நெஞ்சமுழுத்தத்தை நீ எவ்வாறோ பெற்றுக் கருமமே கண்ணாய் இருக்கிறாய்.

ஆனால், மென்மையாய் அமைந்த முல்லை மலர்களை மிகுதியாய்ச் சூடி, கருமணல் அடுக்குப் போன்ற தழைத்த, விரிந்த, கரிய கூந்தலைக் கொண்ட நம் தலைவியிடம் சென்று, 'பொருளீட்டி விரைந்து வருவோம்' என்று பிரிவுணர்த்தும் வன்மையான சொற்களைக் கூற உனக்கு வலிமை உண்டா? உண்டாயின், அவளிடம் சென்று அவளைத் தேற்று.

கருத்து

தலைவியைத் தேற்றவியலாது; ஆதலால், நெஞ்சமே, பயணத்தைக் கைவிடு.

விளக்கம்

நெஞ்சே! கூட்டமாய்ச் செல்லும் உமணர்களின் வண்டிகளை இழுத்துவரும் மாடுகளின் கழுத்தில் கட்டப்பட்டுள்ள மணி ஒலி, காட்டுவழியே வரும் புதியவர்களுக்குப் பாதுகாப்பாய் அமையும் வெப்பம் மிக்க வழியில், தலைவியைப் பிரிந்து பொருளீட்ட வேண்டுமென்று கருதுகிறாய். முல்லை அரும்புகளை மிகுதி யாய்ச் சூடியுள்ள நம் தலைவியை ஆற்றியிருக்குமாறு சொல்லும் வல்லமை உனக்குண்டா? இல்லை. அதனால் பிரியும் எண்ணத் தைக் கைவிடு.

சொற்பொருள்

1. அத்தம் - பாலை வழி; பாதிரி - பாதிரி மரம்; துய்த்தலை - துய்யினை உச்சியிற்கொண்ட; புதுவீ - புதுமலர்.
2. எரிஇதழ் - நெருப்புப் போன்ற இதழ்; அலரி - அலரிப்பூ; இடைபட - இடையிடையே; விரைஇ - கலந்து.
3. வெண்தோடு - வெண்மையான இதழைக் கொண்ட (தாழம் பூ); கண்ணி - தலைமாலை.
4. தோல் புதை சிரற்று - பொதிந்த செருப்பு ஒலிக்கும்; உமணர் - உப்பு வணிகர்.
5. ஆரம் - வண்டி உறுப்பு (வண்டிச் சக்கரத்தின் வட்டையையும் குடத்தையும் இணைக்கும் குறுக்கு மரக்கட்டை).
6. இவர்ந்த - ஏறி வந்த; அசைவு இல் - தளர்வில்லாத; நோன்தாள் - வலிமையான அடி.
7. பகடு - எருது; இயம்பும் - ஒலிக்கும்; கொடுமணி - வளைந்த மணி; புரிந்து - விரும்பி.
8. மடி விடு - வாயினை மடித்து எழுப்புகின்ற; வீளை - சீழ்க்கை; கடிது - விரைந்து.
9. ஓமை - ஓமை மரம்; வம்பலர் - புதியவர்.
10. ஏமம் - பாதுகாவல்; செப்பும் - கூறும்; என்றூழ் - வெப்பமிக்க.
11. வல்லி - வன்மையுடையவனாய்.
12. வினை - பொருள் ஈட்டுதல்.
13. நிரைமுகை - நிரைத்த அரும்புகளை.

12-13 நன்றும் உரைத்திசின் - அவளிடத்தே பெரிதும் கூறி அவளைத் தேற்று.

14. முல்லை அருந்தும் - முல்லை மலரைச் செருகிய.
15. அறல் - கருமணல் போல்; உறல் இன் சாயல் - உறுதற்கினிய மென்மைத் தன்மை.
16. ஒலி - தழைத்த; தேறும் என - தெளிந்திருப்பாள் என்று.
17. வலிய சொல் - பிரிவுணர்த்தும் வன்மையுடைய சொற்களை; வல்லையோ - வன்மை உடையையோ.

தலைவன் கூற்று

அகநானூறு 121 **மதுரை மருதனிளநாகனார்**

திணை : பாலை

கூற்று

தோழியால் தலைமகளை உடன் வருமெனக் கேட்ட தலைமகன் தன் நெஞ்சிற்குச் சொல்லிச் செலவழுங்கியது.

கூற்று விளக்கம்

தலைவன் பொருளீட்டி வரத் தலைவியைப் பிரிந்து செல்ல எண்ணு கின்றான். அதனைக் குறிப்பால் உணர்ந்த தோழி, தலைவனிடம் சென்று, 'நீ பொருளீட்டச் சென்றால் தலைவியும் உடன் வருவாள்' எனக் கூறினாள். அது கேட்ட தலைவன் தோழி கேட்குமாறு தன் நெஞ்சத்தினிடம் சொல்லியது.

நாம்நகை உடையம் நெஞ்சே! கடுந்தெறல்
வேனில் நீடிய வான்உயர் வழிநாள்,
வறுமை கூரிய மண்நீர்ச் சிறுகுளத்
தொடுகுழி மருங்கில் துவ்வாக் கலங்கல்
கன்றுடை மடப்பிடிக் கயந்தலை மண்ணி,
சேறுகொண்டு ஆடிய வேறுபடு வயக்களிறு
செங்கோல் வால்இணர் தயங்கத் தீண்டி,
சொரிபுறம் உரிஞிய நெறிஅயல் மராஅத்து
அல்குறு வரிநிழல் அசைஇ, நம்மொடு
தான்வரும் என்ப தடமென் தோளி
உறுகண் மழவர் உருள்கீண் டிட்ட
ஆறுசெல் மாக்கள் சோறுபொதி வெண்குடை,
கனைவிசைக் கடுவளி எடுத்தலின், துணைசெத்து
வெருள்ஏறு பயிரும் ஆங்கண்,
கருமுக முசுவின் கானத் தானே.

தெளிவுரை

"நெஞ்சே! வழிச்செல்வாரைத் துன்புறுத்தும் மழவர்களின் வண்டிகள் சென்றமையால் பாலை நிலத்தில் பாதை உண்டாகி யுள்ளது. அவ்வழியில் வாணிகர் கூட்டம் செல்லும்; அவர்கள்

உண்ணப் பயன்படுத்திய தொன்னைகள் சூறாவளிக் காற்றில் பறக்கும்; அதனால் எழும் ஓசை கேட்டு ஆண்மான், அது பெண்மானின் குரல் என்று கருதி, அதற்கு அஞ்சி அதனை அழைக்கக் குரல் எழுப்பும்; அதனைக் கேட்டுக் கரிய முகம் கொண்ட குரங்குகள் அஞ்சி ஓடும். இத்தகைய காட்டில் வெயில் சுட்டெரிக்கும் கோடைக்காலம் நீண்டது. மழை பெய்யாமல் மேகம் நீங்கியது.

நாளுக்கு நாள் அதிகமாகும் பசியால் வருந்தும் யானைக் குடும்பம் ஒன்று, தண்ணீர் தேடி அலைந்தது. குளிக்கும் குளம் ஒன்று வறண்டு கிடந்தது; அதில் யாரோ தோண்டிய குழியில் கலங்கிய நீர் சிறிது இருந்தது. அந்நீரில், ஆண்யானை கன்றினை யுடைய தன் துணையாகிய பெண்யானையின் மெல்லிய தலையைக் கழுவியது; மீந்த நீரையும் சேற்றையும் தன்மீது விசிறிக் கொண்டதால் அதன் நிறம் மாறியது; முதுகில் தினவெடுக்கவே, கடம்ப மரத்தின் பூங்கொத்தை இழுத்துச் சொரிந்து கொண் டது. வெம்மை நிறைந்த இவ்வழியில், அக்கடம்ப மரத்தின் சிறு நிழலில் தங்கி நம்முடன் நடந்துவர, மென்மையான தோளினைக் கொண்ட தலைவி விரும்புகிறாளாம். இதைக் கேட்டுச் சிரிப்புத் தான் எழுகிறது" என்று தலைவன் நெஞ்சத்தினிடம் சொல்லு கிறான்.

கருத்து

நெஞ்சே! தன் ஊரும் வீடும் அன்றி வேறு அறியாத் தலைவி, கடுங்கோடைக் காலத்தில், நிழலும் நீருமற்ற அச்சந்தரும் காட்டுவழியில் வர விரும்பிய அறியாமையை எண்ண, 'சிரிப்புத் தோன்றுகிறது; அவளை அழைத்துச் செல்வது மரபன்று என்பதை நீ அறிவாய். ஆதலில், நீ செலவினைத் தவிர்த்திடு.'

குறிப்பு

ஆண்யானை தன் துணையின் தலையை முதலில் கழுவியது என்பதால் தலைவன் தலைவிக்கு அன்பு செய்பவன் என்பது வெளிப்படுகிறது.

சொற்பொருள்

1. நகை உடையம் - சிரிப்புத்தான் எழுகிறது; கடுந்தெறல் - மிகுதியாய்க் காயும்.

2. வான் உயர்வழி - மிக உயர்ந்த வழி; நாள் - நாளும்.
3. கூரிய - மிக; மண்நீர் - குளிக்கும் நீர்.
4. தொடுகுழி - தோண்டப்பட்ட குழி.
5. மடப்பிடி - இளம் பெண்யானை; கயந்தலை - மெல்லிய தலை; மண்ணி - கழுவி.
6. ஆடிய - விசிறிக்கொண்ட; வேறுபடு - நிறம் வேறுபட்ட; வயக்களிறு - வலிமை மிக்க ஆண்யானை.
7. செங்கோல் - சிவந்த காம்பு; வால்இணர் - வெண்மையான பூங்கொத்து; தயங்க - அசைய; தீண்டி - (தன் துதிக்கையால்) பற்றி.
8. சொரிபுறம் - சொரசொரப்பான முதுகு; உரிஞிய - உராய்ந்த; நெறி அயல் - வழியின் பக்கத்தில் உள்ள; மராஅம் - மரா மரம் (வெண்கடப்ப மரம்).
9. அல்குறு - சுருங்கிய; வரிநிழல் - வரிவரியாய் அமைந்த நிழல்; அசைஇ - தங்கி.
10. தடமென் - பெரிய மென்மையான.
11. உறுகண் மழவர் - வழிச்செல்வார்க்குத் துன்பம் செய்யும் மழவர்; உருள் - வண்டிச்சக்கரம்; கீண்டுதல் - கிழித்துச் செல்லுதல்.
12. சோறு பொதி - சோறு பொதிந்த; வெண்குடை - வெண்மையான பனையோலையாலான குடை.
13. கனைவிசை - மிகு வேகம்; கடுவளி - சூறாவளி, பெருங்காற்று; எடுத்தலின் - தூக்கலின்; துணை செத்து - தன் பிணையினது குரலென்று கருதி.
14. வெருள் - அஞ்சிய; ஏறு - மான் ஏறு; பயிரும் - அழைத்திடும்.
15. முசு - கருங்குரங்கு; கானம் - காடு.

தலைவன் கூற்று

அகநானூறு 335 **மதுரைத் தத்தங்கண்ணனார்**

திணை : பாலை

கூற்று

தலைமகன் பொருள் கடைக்கட்டிய நெஞ்சினைக் கழறிச் செலவழுங்கியது.

கூற்று விளக்கம்

பொருள் சேர்ப்பதற்காகத் தலைவியைப் பிரிந்து செல்ல வேண்டும் என்று இடைவிடாது வற்புறுத்திய நெஞ்சினை நோக்கித் தலைவன் இடித்துக் கூறியது.

இருள்படு நெஞ்சத்து இடும்பை தீர்க்கும்
அருள்நன்கு உடைய ராயினும், ஈதல்
பொருள்இல் லோர்க்குஅஃது இயையாது ஆகுதல்
யானும் அறிவென் மன்னே, யானைதன்
கொல்மருப்பு ஒடியக் குத்தி, சினம்சிறந்து
இன்னா வேனில் இன்துணை ஆர,
முளிசினை யாஅத்துப் பொளிபிளந்து ஊட்ட,
புலம்புவீற் றிருந்த நிலம்பகு வெஞ்சுரம்
அரிய அல்லமன், நமக்கே – விரிதார்
ஆடுகொள் முரசின் அடுபோர்ச் செழியன்
மாட மூதூர் மதிற்புறம் தழீஇ,
நீடுவெயில் உழந்த குறிஇறைக் கணைக்கால்
தொடைஅமை பல்மலர்த் தோடுபொதிந்து யாத்த
குடைஓ ரன்ன கோள்அமை எருத்தின்
பாளை பற்றுஇழிந்து ஒழிய, புறம்சேர்பு
வாள்வடித் தன்ன வயிறுடைப் பொதிய
நாள்உறத் தோன்றிய நயவரு வனப்பின்
ஆரத்து அன்ன அணிகிளர் புதுப்பூ
வார்உறு கவரியின் வண்டுஉண விரிய
முத்தின் அன்ன வெள்வீ தாஅய்
அலகின் அன்ன அரிநிறத்து ஆலி
நகைநனி வளர்க்கும் சிறப்பின், தகைமிக,

பூவொடு வளர்ந்த மூவாப் பசுங்காய்
நீரினும் இனிய ஆகி, கூர்எயிற்று
அமிழ்தம் ஊறும் செவ்வாய்
ஒண்தொடி, குறுமகட் கொண்டனம் செலினே.

தெளிவுரை

நெஞ்சே! வறுமையால் மயக்கம் கொண்ட நெஞ்சின் துன்பத்தினைப் போக்குகின்ற அருள் உள்ளத்தைக் கொண்டவராயினும், கைப்பொருள் இல்லாதார்க்கு ஈதல் இயலாது என்பதை நானும் அறிவேன். அறிந்து வைத்தும் யாது பயன்?

பாண்டியன், மலர்ந்த மாலையைத் தம் மார்பிலே அணிந்தவன்; வெற்றி தரும் முரசினையும், போரில் பகைவரை வெல்லும் திறமும் கொண்டவன். மாடங்கள் கொண்ட அவனது மதுரை மூதூரின் மதிற்புறத்தைத் தழுவிக் கிடந்த கமுக மரம் சொரசொரப்புடன் திரண்ட அடி பொருந்தியது. பல மலர் மாலைகளின் தொகுதியைப் பொதிந்து கட்டி வைத்த குடையைப் போன்ற காய்கள் பொருந்திய கழுத்தினைக் கொண்டது. அக்கழுத்தில் உள்ள பாளையின் பிடிப்பு நீங்கிட, அப்பாளையின் உள்ளே வாளை வடித்து வைத்தாற் போன்ற வயிற்றுப்பொதியில் உள்ள அழகிய புதுப் பூக்கள் வீசும் கவரி போல் வண்டுகள் உண்ணுமாறு பூத்துத் தொங்கின. அப்பூக் களோடு வளர்ந்து வரும் ஆலங்கட்டி போன்ற ஒளி பொருந்திய முற்றாத இளங்காயின் நீர், மிக இனிமை கொண்டது.

முள்ளை ஒத்த என் தலைவியின் முளையினைக் கொண்ட வெண்மையான கூரிய பற்களில் விடாது ஊறும் இனிய நீர், அப் பசுங்காய் கொண்ட நீரினைக் காட்டிலும் மிகமிக இனிமை வாய்ந்தது; அத்தகைய அமுதூறும் சிவந்த வாயினையும், ஒளி பொருந்திய வளையல்களையும் கொண்டவள், நம் தலைவி.

நாம் செல்லுகின்ற அருவழியில் யா மரம் உண்டு. அதனைக் காணும் களிறு, சினம் கொண்டு அதன் அடியைத் தன் கொம்பு ஒடியுமாறு குத்தி, அம்மரத்தின் பட்டையை அழிவுபடுத்துகின்ற வேனிற் காலத்தில், தான் இன்பம் பெறுகின்ற தன் பிடியினை உண்ணச்செய்யும்.

அத்தகைய துன்பம் மிகுந்த, நிலம் பிளக்கும் வெம்மையினைக் கொண்ட சுர வழிகள், நம் தலைவியை அழைத்துக்கொண்டு செல்லுதற்கு அரியன அல்ல. (ஆயினும் அவளை அழைத்துக் கொண்டு செல்ல மாட்டோம்.)

கருத்து

தலைவியை உடனழைத்துச் செல்லாது நான் மட்டும் தனியே செல்ல மாட்டேன். பொருள்வயிற் பிரிவில் தலைவியை உடனழைத்துச் செல்லுதல் மரபன்று. ஆதலால், நான் பொருளீட்டச் செல்ல மாட்டேன்.

விளக்கம்

“நெஞ்சே! ‘பொருள் இல்லை’ என்று தன்னிடம் வந்து கேட்டவர்க்கு இல்லை என்பது அறமன்று என்பதை நானும் அறிவேன். பாக்கின் முற்றாத பசுங்காய் நீரினும் இனிமையான அமிழ்தமனைய நீரினைச் சுரக்கும் சிவந்த வாயினைக் கொண்டுள்ள தலைவியை உடன்கொண்டு செல்வதென்றால், நிலம் பிளக்கும் கொடிய சுரமாயினும் செல்லும் வலிமையுடையேன்; ஆயினும், தனித்துச் செல்ல இயலாது” என்று தலைவன் தன் நெஞ்சத்தினிடம் கூறித் தன் பயணத்தைத் தவிர்த்தான்.

குறிப்பு

கமுகம் பாளை உட்புறத்தில் தொகுத்த மாலை போன்ற பூக்களைக் கொண்டது. அது புறமடலின் உள்ளே வாள்போலும் வடிவினைக் கொண்டது. அப்பூக்களில் உண்டாகும் பிஞ்சுக்காய்களின் உள்ளே இருக்கும் நீர் மிகவும் இனிமை வாய்ந்தது.

சொற்பொருள்

1. இடும்பை - வருத்தம், துன்பம்.
2. ஈதல் - இல்லார்க்குக் கொடுத்தல்.
3. அஃது - கொடுக்கும் சிறப்பு; இயையாது - பொருந்தாது.
5. மருப்பு - கொம்பு; சிறந்து - மிக்கு.
6. இன்னா - கொடிய; இன்துணை - இனிய துணையாகிய பிடி; ஆர - உண்ணும்படி.
7. முளிசினை - பட்டுப்போன கிளை; யாஅத்து - யாமரத்து; பொளி - பட்டை.
8. புலம்பு - வருத்தம்; நிலம்பகு - நிலத்தைப் பிளந்த.

10. ஆடுகொள் - வெற்றி பொருந்திய; அடுபோர் - வெல்லும் போர்; செழியன் - பாண்டிய மன்னன்.
11. மாட மூதூர் - மாடங்களைக் கொண்ட பழைய நகரம் (மதுரை); தழீஇ - தழுவி.
12. உழந்த - வருந்திய; குறிஇறை - குறுகிய சருச்சரை; கணைக்கால் - திரண்ட அடி.
13. தோடு - இதழ்; யாத்த - கட்டிய.
14. கோள் அமை - காய்த்தல் பொருந்திய; எருத்து - கழுத்து.
15. பற்று இழிந்து - பற்றுதல் நீங்கி; ஒழிய - விழ.
16. வாள் வடித்து அன்ன - வாளினை வடித்து வைத்தது போன்ற; வயிறுடைப் பொதிய - வயிற்றினைக் கொண்ட பொதியின் உள்ளேயுள்ள.
17. நாள் உற - பருவம் உற்றவிடத்து; தோன்றிய - வெளிப்பட்ட; நயவரு - இனிமை பொருந்திய; வணப்பு - அழகு.
18. ஆரத்து அன்ன - ஆரம் போலும்; அணிகிளர் - அழகு விளங்கும்.
19. வார்உறு - நீண்டிருக்கும்; கவரியின் - கவரி போல; விரிய - மலர்ந்த.
20. வெள்வீ - வெள்ளையான பூ; தாஅய் - பரந்து.
21. அலகின் அன்ன - பலகறையைப் போல; அரிநிறம் - ஒள்ளிய நிறம்; ஆலி - ஆலங்கட்டி (மழை).
22. நகை - மகிழ்ச்சியை; நனி - மிகுவிக்கும்; தகை - அழகு.
23. மூவா - முற்றாத; பசுங்காய் - பசிய இளங்காய்.
24. கூர் எயிறு - கூரிய பல்.
25. செவ்வாய் - சிவந்த வாய்.
26. கொண்டனம் - உடன் அழைத்துக்கொண்டு.

தலைவன் கூற்று

அகநானூறு 339 **நரைமுடி நெட்டையார்**

திணை : பாலை

கூற்று

போகாநின்ற தலைமகன், தன் நெஞ்சிற்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

பொருள் ஈட்டி வரவேண்டித் தலைவன் தலைவியைப் பிரிந்து சென்றான்; சென்றவன் அவள் உயர்ந்த பண்புகளை இடைவழியில் நினைத்துத் தன் நெஞ்சத்தினிடம் சொல்லியது.

வீங்குவிசை, பிணித்த விரைபரி, நெடுந்தேர்
நோன்கதிர் சுமந்த ஆழிஆழ் மருங்கில்,
பாம்புஎன முடுகுநீர் ஓட, கூம்பிப்
பற்றுவிடு விரலில் பயறுகாய் ஊழ்ப்ப,
அற்சிரம் நின்றன்றால், பொழுதே; முற்பட
ஆள்வினைக்கு எழுந்த அசைவுஇல் உள்ளத்து
ஆண்மை வாங்க, காமம் தட்ப,
கவைபடு நெஞ்சம், கண்கண் அகைய,
இருதலைக் கொள்ளி இடைநின்று வருந்தி,
ஒருதலைப் படாஅ உறவி போன்றனம்;
நோம்கொல்? அளியள் தானே – யாக்கைக்கு
உயிர்இயைந் தன்ன நட்பின், அவ்வுயிர்
வாழ்தல் அன்ன காதல்,
சாதல் அன்ன பிரிவுஅரி யோளே!

தெளிவுரை

விரைந்தோடும் குதிரைகள் பூட்டப்பட்ட மிக்க வேகங் கொண்ட தேரின் வலிமை பொருந்திய ஆரக்காலினைக் கொண்ட சக்கரங்கள் நிலத்தில் பதிந்து செல்லும் சுவட்டில், விரைந்து செல்லும் பாம்புபோல நீர் ஓடியது; குவிந்து ஒன்றோ டொன்று தொடர்பற்ற விரல்கள் போன்று பயிற்றங்காய்கள் விரிந்து முதிர்ந்தன; இவ்வாறாய்ப் பனிப்பருவம் தோன்றி நிலைத்தது.

ஒருபுறம், முயன்று பொருள் தேட வேண்டும் என்னும் எண்ணம் காரணமாய்த் தளர்விலாத உள்ளத்து எழுந்த ஆண்மை முன்னே இழுக்கின்றது; மறுபுறம், தலைவிபால் கொண்ட காமம் பின்னே இழுத்துத் தடுக்கின்றது; இவ்வாறு இருபாற்பட்ட நெஞ்சினைக் கொண்ட நானோ, கணுக்களின் இருபுறமும் தீப்பற்றிக்கொள்ள இருபுறமும் செல்ல இயலாது குழாயின் உள்ளே இருந்து வருந்துகின்ற எறும்பினைப் போன்று வருந்தி இருக்கின்றேன்.

உடலோடு உயிர் ஒன்றிய நட்பினையும், அவ்வுயிர் இன்புற்று வாழ்வதுபோலும் காதலையும், சாதல்போலும் துன்பத்தைத் தரும் பிரிவையும் கொண்ட நம் தலைவி இப்பொழுது பெரிதும் வருந்தி இருப்பாள். அவள் மிகவும் இரங்கத்தக்கவள்!

கருத்து

பொருள் தேடிவரப் புறப்பட்ட தலைவனின் ஊக்கம் நெஞ்சைத் தூண்டுகிறது; தலைவியின் காதலோ அவன் பயணத்தைத் தடுக்கிறது. (இருதலைப்பட்ட கொள்ளி போன்று தவித்த தலைவன், பிரிவால் தலைவியுறும் துன்பத்தைக் கருதிப் பயணத்தை நிறுத்தினான்.)

விளக்கம்

பொருள் தேடப் புறப்பட்ட தலைவன் தன் நெஞ்சத்தினிடம் சொல்லியது:

"நெஞ்சே! இது பனிப்பருவம். முயற்சியோடு சென்று பொருளீட்டி வருமாறு ஆண்மை உன்னைத் தூண்டுகிறது; காமமோ போகாதபடி உன்னைத் தடுக்கிறது. உன்னால் நான் இருதலைக் கொள்ளி எறும்பு போலானேன். நான் பிரிந்தால் நட்பும் காதலும் கொண்டிருப்பவளும், பிரிதற்கு அரியவளுமான நம் தலைவி வருந்தியிருப்பாளே! அவள் மிகவும் இரங்கத்தக்கவள்." ('நீ செல்; நான் வர மாட்டேன்' என்று கூறித் தலைவன் பயணத்தை நிறுத்தினான்.)

சொற்பொருள்

1. வீங்கு விசை - மிகுந்த விரைவு; பிணித்த - பூட்டிய; பரி - குதிரை.
2. நோன் - வலிமை; கதிர் - ஆரக்கால்; சுமந்த - கொண்ட; ஆழி - சக்கரம்; ஆழ் மருங்கு - ஆழ்ந்து செல்லும் சுவட்டில் (பள்ளத்தில்).

3. முடுகு - விரைந்து; கூம்பி - குவிந்து.
4. பற்றுவிடு விரல் - ஒட்டாமல் பிரிந்திருக்கும் விரல்கள்; பயறு - பயற்றுச் செடி; ஊழ்த்தல் - முதிர்தல்.
5. அற்சிரம் - பனிக்காலம்; முற்பட வாங்க - முன்னே இழுக்க.
6. ஆள்வினை - முயற்சி; அசைவுஇல் - தளர்தல் இல்லாத; உள்ளம் - ஊக்கம் (ஆண்மை).
7. வாங்க - இழுக்க; காமம் - காதல்; தட்ப - தடுக்க.
8. கவைபடு - இருபால்பட்ட; கண்கண் - கணுவுக்குக் கணு (குழாயின் இருபுறம்).
9. கொள்ளி - நெருப்பு.
10. ஒருதலைப் படாஅ - ஒரு பக்கமும் செல்ல இயலாது இடையில் நின்ற; உறவி - எறும்பு.
11. நோம் - வருந்தும்; அளியள் - இரங்கத்தக்கவள்; யாக்கை - உடம்பு.
12. இயைதல் - ஒன்றியிருத்தல்.
14. அரியோள் - பெறுதற்கு அரியவள்.

தலைவன் கூற்று

அகநானூறு 327 — **மருங்கூர்ப் பாகைச் சாத்தன் பூதனார்**

திணை : பாலை

கூற்று

பொருள் கடைக் கூட்டிய நெஞ்சினைக் கழறியது. (கழறுதல் - இடித் துரைத்தல்).

கூற்று விளக்கம்

பிரிவினைத் தலைவி பொறுத்துக் கொள்ள மாட்டாள் என அறிந்திருந்தும், அவளைப் பிரிந்து பொருள் ஈட்டி வருதல் வேண்டும் என இடைவிடாது தூண்டிய தன் உள்ளத்தைத் தலைவன் இடித்துரைத்தது.

இன்பமும் இடும்பையும், புணர்வும், பிரிவும்,
நன்பகல் அமையமும், இரவும் போல
வேறுவேறு இயல ஆகி, மாறுஎதிர்ந்து,
உளஎன உணர்ந்தனை ஆயின், ஒரூஉம்
இன்னா வெஞ்சுரம் நன்னசை துரப்ப,

துன்னலும் தகுமோ? துணிவுஇல் நெஞ்சே!
நீசெல வலித்தனை யாயின், யாவதும்
நினைதலும் செய்தியோ எம்மே? கனைகதிர்
ஆவி அவ்வரி நீர்என நசைஇ
மாதவப் பரிக்கும் மரல்திரங்கு நனந்தலை,
களர்கால் யாத்த கண்அகன் பரப்பின்,
செல்வரைக் கொழிநீர் கடுப்ப, அரவின்
அவ்வரி உரிவை அணவரும் மருங்கின்
புற்றுஅரை யாத்த புலர்சினை மரத்த
மைந்நிற உருவின் மணிக்கண் காக்கை
பைந்நிணம் கவரும் படுபிணக் கவலைச்
சென்றோர் செல்புறத்து இரங்கார் கொன்றோர்
கோல்கழிபு இரங்கும் அதர
வேய்பயில் அழுவம் இறந்த பின்னே.

தெளிவுரை

உறுதியில்லாத நெஞ்சே! இன்பம் - துன்பம், கூடுதல் - பிரிதல் ஆகியன பகற்பொழுதையும், இரவுப்பொழுதையும் போன்று வெவ்வேறு தன்மையனவாய்த் தம்முள் ஒன்றுக்கொன்று முரண்பட்டனவாய் உள்ளன. நீ அதனை உணர்ந்தாயாயின், இவளைப் பிரிந்து துன்பம் தரும் கொடிய பாலை வழியில், உன்னைப் பொருள் விருப்பம் துரத்த, நீ பிரிந்து போதல் தக்கதா? ஒருகால் நீ செல்வதற்குத் துணிந்தால் நீ செல்ல வேண்டிய வழியின் கொடுமையை எண்ணிப் பார்த்தாயா? காட்டில் கதிரவனின் மிக்க வெப்பத்தால் ஆவியாய்த் தோன்றும் கானல் நீர் அலைகளைத் தண்ணீர் என்று கருதி விலங்குகள் ஓடி அலையும்; மரல் செடி வாடும், களர் பரந்த அகன்ற பரப்பில் செங்குத்தான மலை உச்சியிலிருந்து ஓடி வரும் அருவிநீர் போல, உரிக்கப்பெற்ற பாம்பின் தோல்கள் பொருந்திக் கிடக்கும் பாறை இடங்களும் அங்கு உண்டு. புற்றுகள் கட்டப்பட்டுள்ள அடிமரத்தினையும், காய்ந்த கிளைகளையும் கொண்ட மரங் களில் கருமேகத்தின் நிறம் போன்ற உருவத்தையும், நீலமணி போன்ற கண்களையும் கொண்ட காக்கைகள் பசிய கொழுப் பினைக் கவர்த்த உண்ணும் பிணங்கள் கிடக்கும் கவர்ந்து பட்ட

வழி அது. வழிச் செல்லும் வணிகர்களின் பின் செல்லும் ஆறலை கள்வர்கள் உயிரிரக்கம் இன்றி அவர்களைக் கொன்ற பின், அவர்கள் இறந்ததற்கு வருந்தாது தங்கள் அம்பு தீர்ந்ததே என்று வருந்துவர். அங்குச் செல்லும்போது நெஞ்சே, நீ என்னைச் சிறிதேனும் நினைப்பாயா?

கருத்து

இவளைப் பிரியலாமா, வேண்டாவா என முடிவு செய்ய இயலவில்லை; நான் வாராமல் கொடிய பாலை வழியில் தனியே நீ பிரிந்து சென்றால், நெஞ்சே! என்னை நினைப்பாயா?

விளக்கம்

'உறுதியற்ற நெஞ்சமே! இன்பம் - துன்பம்; புணர்வு - பிரிவு ஆகியன வெவ்வேறு தன்மையனவாய் ஒன்றுக்கொன்று முரண்பட்ட பண்புகளைக் கொண்டனவாய் உள்ளன என்பதை நீ அறிவாயாயின், பொருள்வேட்கையால் கடுமையான காட்டு வழியில் செல்வது அறிவுக்குப் பொருந்துவது ஆகுமா? நீ செல்லுதற்குத் துணிந்துவிட்டாய். ஆயின், காட்டினைக் கடந்தபின் எம்மைச் சற்றேனும் நினைப்பாயா?' என்று சொல்லிச் செல்லாமல் தாமதித்தான்.

சொற்பொருள்

1. இடும்பை - துன்பம்; புணர்வு - கூடுதல்.
2. அமையம் - பொழுது.
3. இயல - தன்மையதாய்; மாறு எதிர்ந்து - மாறுபட்டு நின்று.
4. ஒரூஉம் - பிரியும்.
5. நசை - விருப்பம் (பொருள் வேட்கை); துரப்ப - செலுத்த.
6. துன்னல் - சென்று சேர்தல் (நெருங்குதல்)
7. வலித்தனை ஆயின் - துணிந்துவிட்டாய் ஆயின்.
8. எம்மே - என்னை; கனைகதிர் - (ஞாயிற்றின்) மிக்க கதிர்.
9. ஆவி அவ்வரி - ஆவியில் தோன்றும் அலைகளை (கானல் நீர்); நசைஇ - விரும்பி.
10. மா தவ பரிக்கும் - விலங்குகள் மிக ஓடி அலையும்; மரல் - மரல் செடி; திரங்கு - வாடும்.
11. களர்கால் யாத்த - களர் பரந்த.

12. செவ்வரை - செங்குத்தான மலை; கொழீநீர் - கொழித்து வரும் நீர்; அரவின் - பாம்பின்.
13. அவ்வரி - அழகிய வரிகளைக் கொண்ட; உரிவை - தோல் (சட்டை); அணவருதல் - பொருந்தியிருத்தல்; மருங்கு - (பாறை) இடங்கள்.
14. புற்று - புற்றுகள்; அரையாத்த - அடிமரத்தில் கட்டப்பட்டுள்ள; புலர் - காய்ந்த.
15. மை நிறம் - மேகத்தின் நிறம் (போலும்).
16. பைந்நிணம் - பசிய கொழுப்பு; கவரும் - உண்ணும்; படுபிணம் - பிணங்கள் கிடக்கும்; கவலை - கவர்த்த வழி.
17. செல்புறத்து - செல்லும் இடங்களின் பின்னே இருந்து.
18. கோல் கழிபு - அம்புகள் செலவானதன் பொருட்டு; இரங்கும் - வருந்தும்; அதர - வழிகளைக் கொண்ட.
19. பயில் - நெருங்கிய; அழுவம் - காடு.

தலைவியிடம் பிரியேன் என்று சொல்லுதல்.

தலைவன் கூற்று

நற்றிணை 256 **பாலை பாடிய பெருங்கடுங்கோ**

திணை : பாலை

கூற்று

'பொருள்வயிற் பிரிந்தான்' என்று ஆற்றாளாகிய தலைமகளைத் தலைமகன் ஆற்றியது.

கூற்று விளக்கம்

பொருள் தேடிவரத் தலைவன் பிரிவனோ எனத் தலைவி கலங்கி அழிந்தனள். அவளிடம் தான் எங்கும் செல்லப்போவதில்லை எனக் கூறி அவளைத் தலைவன் தெளிவித்தது.

நீயே, பாடல் சான்ற பழிதபு சீறடி,
அல்கு பெருநலத்து, அமர்த்த கண்ணை;
காடே, நிழல்கவின் இழந்த அழல்கவர் மரத்த,
புலம்பு வீற்றிருந்து நலம்சிதைந் தனவே;
இந்நிலை தவிர்ந்தனம் செலவே; வைந்நுதிக்
களவுடன் கமழ, பிடவுத்தளை அவிழ,
கார்பெயல் செய்த காமர் காலை,

மடப்பிணை தழீஇய மாஎருத்து இரலை
காழ்கொள் வேலத்து ஆழ்சினை பயந்த
கண்கவர் வரிநிழல் வதியும்
தண்படு கானமும் தவிர்ந்தனம் செலவே.

தெளிவுரை

நீயோ புகழமைந்த, குற்றந்தீர்த்த சிறிய அடிகளையும், பெரிய அழகிய கண்களையும் கொண்டவள். காடோ நிழலால் உண்டாகின்ற அழகினை இழந்து வேனிலின் வெம்மையினால் கரிந்து கிடக்கும் மரங்களைக் கொண்டுள்ளது. அதனால் அழகும் நிழலும் அங்கே இல்லை. யாரும் செல்லாதவாறு தனிமை நிலை பெற்று அழகிழந்தும் இருக்கிறது. இந்நிலை கருதி நான் கோடைக் காலத்தில் பயணம் செய்ய மாட்டேன்.

கார் காலத்திலோ கூர்மையான நுனியைக் கொண்ட களாவின் அரும்புகள் ஒருங்கே மலர்ந்து மணம் கமழும்; பிடவின் அரும்புகள் கட்டவிழ்ந்து இதழ் விரிந்து மலர்ந்திருக்கும்; இங்ஙனமாய்க் கார் காலம் மழையைப் பொழிந்தது. இனிதான இக்காலத்தின் மாலைப் பொழுதிலே, கரிய கழுத்தினைக் கொண்ட கலைமான், இளைய பிணையினைத் தழுவி இன்புற்றிருக்கும்; வயிரமேறிய வேல மரத்தின் தாழ்ந்த கிளைகள் உண்டாக்கிய, காண்பார் கண்களைக் கவரும் வரிப்பட்ட நிழலிலே தங்கியிருக்கும். உன்னைக் கூடியிருப்பதற்கான இக்கார் காலத்தே உன்னைப் பிரிந்து குளிர்ச்சி பொருந்திய காட்டில் செல்லுதலையும் கைவிட்டேன். உன்னைப் பிரிவேன் என நினைந்து நீ நலிந்து வருந்த வேண்டா.

கருத்து

தலைவியே! உன்னைப் பிரியேன்! நீ வருந்த வேண்டா.

விளக்கம்

நீயோ அழகிற் சிறந்தவள்; காடோ கோடையில் கரிந்து கிடக்கும்; அதனால் கோடையில் பயணம் செல்ல மாட்டேன். கார் காலத்திலோ மாலைப்பொழுதில் ஆண்மான் பெண் மானைத் தழுவி வேல மரத்தின் நிழலில் தங்கி இன்புற்றிருக்கும்.

இக்காட்சியைக் கண்டு நானும் உன்னைப் பிரிதற்கு விரும்ப மாட்டேன். ஆகவே, எக்காலத்திலும் நான் உன்னைப் பிரியேன்; வருந்தாதே!

குறிப்பு

கார்ப்பருவத்தில் பெண்மானைத் தழுவி மகிழும் ஆண்மான் என்றமையால், தலைவனும் அவ்வாறே தலைவியைத் தழுவி இன்புற்றிருப் பான் என்பதாம்.

சொற்பொருள்

1. பாடல் சான்ற - புகழமைந்த; பழிதபு - குற்றமற்ற.
2. அல்குதல் - தங்குதல்; அமர்த்த - விரும்பத்தக்க.
3. கவின் - அழகு; அழல் கவர் - வேனில் வெம்மையால் கரிந்த.
4. புலம்பு - தனிமை; நலம் - அழகு.
5. தவிர்ந்தனம் - கைவிட்டேன்; வைந்நுதி - கூரிய நுனி.
6. களவு - களா மரம்; பிடவு - பிடவ மரம்.
7. கார் - கார் காலம்; பெயல் - மழை; காமர் - விருப்பம், அழகு.
8. பிணை - பெண்மான்; மா எருத்து - கரிய கழுத்து; இரலை - ஆண் மான்.
9. காழ் - வயிரம்; வேலம் - வேல மரம்; ஆழ்சினை - தாழ்ந்து கிடக்கும் கிளை.
10. வரிநிழல் - வரிகளைக் கொண்ட நிழல்; வதியும் - தங்கியிருக்கும்.
11. செலவு - பயணம்.

தலைவன் கூற்று

நற்றிணை 166 **ஆசிரியர் பெயரை அறிய இயலவில்லை**

திணை : பாலை

கூற்று

செலவுக்குறிப்பினால் வேறுபட்ட கிழத்திக்குத் தலைமகன் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் பொருள் தேடப் பிரிந்து செல்லுதற்கு நினைந்தான் என்பதைக் குறிப்பால் உணர்ந்து அதனால் தலைவியின் உடல் வேறுபட்டது. அப்போது தலைவன் அவளிடம் கூறியது.

பொன்னும் மணியும் போலும் யாழநின்
நன்னர் மேனியும் நாறிருங் கதுப்பும்
போதும் பணையும் போலும் யாழநின்
மாதர் உண்கணும் வனப்பின் தோளும்
இவைகாண் தோறும் அகம்மலிந்து யானும்
அறம்நிலை பெற்றோர் அனையேன் அதன்தலை
பொலந்தொடிப் புதல்வனும் பொய்தல் கற்றனன்
வினையும் வேறுபுலத்து இலெனே; நினையின்
யாதனின் பிரிகோ? மடந்தை!
காதல் தானும் கடலினும் பெரிதே!

தெளிவுரை

“மடந்தையே! உன் அழகு மேனி பொன்னைப் போன்று ஒளி வீசுவதாய் இருக்கின்றது. மணங்கமழும் உன் கரிய கூந்தல் நீலமணியைப் போல ஒளி கொண்டதாய்த் திகழ்கிறது, அழகிய மையுண்ட கண்கள் குவளைப் போதினைப் போல விளங்கு கின்றன; வனப்பு வாய்ந்த உன் தோள்களோ, மூங்கில் போத்தினைப் போலத் தோன்றுகின்றன; இவற்றைக் காணுந்தோறும் நானும் மகிழ்ந்திருக்கிறேன். அறத்திலே நிலை பெற்றார் கொள்ளும் மனக் களிப்பினையும் கொண்டவனாயிருக்கிறேன். அதன் மேலும், பொற்றொடி அணிந்த புதல்வனும் விளையாடக் கற்றுக் கொண்டான். நான் வெளியே சென்று செய்வதற்குரிய செயல் எதுவும் இல்லை. பிறகு எது குறித்து நான் பிரியப் போகின்றேன்? உன்னிடம் நான் கொண்ட காதலும் கடலைக் காட்டினும் பெரிது. ஆதலால், நீ என்னைப் பற்றித் தவறாய் கருதித் தளர்ச்சி கொள்ளாதே!

கருத்து

தலைவியே! நான் பிரிந்து போதற்கு நினைந்திலேன்; ஆதலின் உன் மனத் தளர்வைக் கைவிடு.

விளக்கம்

மடந்தையே! உன் அழகு கண்டு நான் அறஞ்செய்தார் பெற்ற மகிழ்ச்சியை அடைகிறேன். புதல்வனும் விளையாடுகின்றனன்.

உன்னையும் புதல்வனையும் நோக்கி மகிழ்வதைக் காட்டிலும் வேறு சிறப்பு எனக்கு இல்லை. வெளியிடத்தில் எனக்கு வேலை எதுவும் இல்லை. எனவே, நான் எதற்காகப் பிரிதல் வேண்டும்? நான் பிரிந்து போகக் கருதவில்லை; ஆதலின், உன் மனத்தளர்ச்சி யைக் கைவிடு.

அருஞ்சொற்பொருள்

1. யாழ - முன்னிலைச்சொல் (மடந்தையே!).
2. நன்னர் - அழகிய; நாறிரும் கதுப்பு - மணம் கமழும் கரிய கூந்தல்.
3. போது - குவளை மலர்; பணை - மூங்கில்.
4. மாதர் - அழகிய; வனப்பு - அழகு.
5. அகம் மலிந்து - உள்ளம் மகிழ்ந்து.
6. அதன்தலை - அதற்கும் மேலாய்.
7. பொலம் - பொன்; தொடி - வளையல்; பொய்தல் - விளையாட்டு.
8. புலம் - இடம்.
9. யாதனின் - என்ன காரணத்தை முன்னிட்டு.

தலைவன் கூற்று

அகநானூறு 75 **மதுரைப் போத்தனார்**

திணை : பாலை

கூற்று

பொருள்வயிற்பிரிவர் என வேறுபட்ட தலைமகட்குப் பிரியேன் எனத் தலைமகன் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் பொருள் ஈட்டச் செல்வானோ எனக் கலங்குகிறாள், தலைவி. அதனைக் குறிப்பால் நோக்கிய தலைவன், 'நான் பிரியேன்' என்று சொல்லிச் செலவழுங்கியது.

'அருள்அன்று ஆக, ஆள்வினை, ஆடவர்
பொருள்'என வலித்த பொருள்அல் காட்சியின்
மைந்துமலி உள்ளமொடு துஞ்சல் செல்லாது,
எரிசினம் தவழ்ந்த இருங்கடற்று அடைமுதல்
கரிகுதிர் மரத்த கான வாழ்க்கை,

அடுபுலி முன்பின், தொடுகழல் மறவர்
தொன்றுஇயல் சிறுகுடி மன்றுநிழல் படுக்கும்
அண்ணல் நெடுவரை, ஆம்அறப் புலர்ந்த
கல்நெறிப் படர்குவர் ஆயின் நல்நுதல்,
செயிர்தீர் கொள்கை, சில்மொழி, துவர்வாய்,
அவிர்தொடி முன்கை, ஆய்இழை, மகளிர்
ஆரம் தாங்கிய அலர்முலை ஆகத்து,
ஆராக் காதலொடு தாரிடைக் குழையாது
சென்றுபடு விறல்கவின் உள்ளி, என்றும்
இரங்குநர் அல்லது, பெயர்தந்து, யாவரும்
தருநரும் உளரோ,இவ் உலகத் தான்?'என –
மாரி ஈங்கை மரத்தளிர் அன்ன
அம்மா மேனி, ஐதுஅமை நுசுப்பின்;
பல்காசு நிரைத்த, கோடுஏந்து அல்குல்;
மெல்இயல் குறுமகள்! – புலந்துபல கூறி
ஆனா நோயை ஆக, யானே
பிரியச் சூழ்தலும் உண்டோ,
அரிதுபெறு சிறப்பின் நின்வயி னானே?

தெளிவுரை

"கார் காலத்துத் தளிர்க்கும் இண்டஞ்செடியின் கரிய தளிரைப் போன்ற அழகிய மாமை நிற மேனியையும், நுணுகி அமைந்த இடையினையும், பல மணிகள் கோத்த மேகலையை அணிந்த அல்குலினையும், மென்மைத் தன்மையினையும் கொண்ட இளைய தலைவியே!

'அறிவிலா ஆடவர், உண்மைப்பொருள் அருள் அன்று, ஆள்வினையே என்று துணிவர். அவர்கள் ஊக்கங்கொண்ட உள்ளத்தவர். அவர்கள் செல்லும் காடு எரியும் தீப் பரந்து இலைகள் கரிந்து உதிர்ந்த மரங்களைக் கொண்டது. அக் காட்டில் வாழும் மறவர்கள் கொல்லும் புலிபோலும் வலிமை வாய்ந்தவர்; காலில் வீரக்கழலை அணிந்துள்ளவர்; பழைமை வாய்ந்த தமது சிற்றூரிலுள்ள மன்றத்து நிழலிலே படுத்து

உறங்குபவர்; அத்தன்மை வாய்ந்த நீண்ட மலையைக் கொண்ட நீரின்றிக் காய்ந்த கல்வழியில் ஊக்கமுடையார் பொருளீட்டச் செல்வர்.

அவர்கள், அழகிய நெற்றியினையும், குற்றமற்ற கொள்கையினையும், குறைந்த சொற்களையும், பவளம் போன்ற சிவந்த வாயினையும், ஒளிவீசும் வளையல் அணிந்த முன்கையினையும், ஆய்ந்தெடுத்த அணிகலன்களையும் கொண்ட மகளிரின் முத்தாரம் பூண்ட மார்பின் அடிபரந்த முலைப்பரப்பில் தெவிட்டாத காதலுடன் தங்கள் மாலையை இடையே குழையச் செய்யாது, நீங்கிச் செல்வதால், அம்மகளிர் இழந்த தம் பேரழகினை நினைத்து வருந்துவர். அதுவன்றி, 'இவ்வுலகத்தே கழிந்து சென்ற அழகினைப் பெயர்த்துத் தருபவரும் உளரோ?" எனத் தலைவியே! நீ வெறுத்துப் பலவும் கூறுகின்றாய்; நீங்காத நோய் கொண்டவளாயும் ஆயினாய்; இது கண்டும் நான் அரிய சிறப்பினைக் கொண்ட உன்னை விட்டுப் பிரியக் கருதுவதும் உண்டோ? இல்லை' என்று தன்னுள் மயங்கிக் கூறித் தலைவன், தலைவியைப் பிரிந்து செல்லும் எண்ணத்தை நீக்கினான்.

கருத்து

குறுமகளே! ஆடவர்களுக்கு முயற்சியே சிறந்த மூலதனம் எனக் கருதிப் பொருளீட்டப் பிரிவர். அவர்கள் பொருளை ஈட்டலாம்; ஆனால் அவர்களால் தம் தலைவியர் இழந்த அழகை மீட்டுத் தர இயலாது. ஆதலால், உன் அழகழியுமாறு உன்னை விட்டு நான் பிரியேன்.

விளக்கம்

தலைவியே! ஆடவர், முயற்சியே சிறந்த மூலதனம் எனக் கருதிப் பொருளீட்டச் சிற்றூர்களில் தங்கி, வெம்மையான காட்டுவழி என்றும் கருதாது செல்வர். அவ்வாறு அவர்கள் செல்லும்போது, 'தலைவியைப் பிரிந்து செல்கிறோம் என்று இரங்குவதன்றி, அவள் இழந்த அழகினை மீட்டுத் தரும் ஆடவர் உளரோ?' என்று வெறுப்பதுபோல் பேசும் தலைவியே, அதைக் கேட்டும் 'நான் உன்னை விட்டுப் பிரிவேனோ?' என்று சொல்லித் தலைவன் செலவழுங்கினான்.

சொற்பொருள்

1. ஆள்வினை - பொருளீட்டும் முயற்சி.
2. வலித்த - துணிந்த; பொருள் அல்காட்சி - பொய்யான அறிவினைக் கொண்ட.
3. மைந்துமலி - வலிமைமிக்க; துஞ்சல் - மடிதல், முயற்சி அறுதல்.
4. இருங்கடறு - பெருங்காடு; அடைமுதல் - புகுமிடத்தே.
5. கரிகுதிர் - இலைகள் கரிந்து உதிரப்பெற்ற.
6. அடுபுலி - கொல்லும் புலி; முன்பு - வலிமை.
7. சிறுகுடி - சிற்றூர்; படுக்கும் - கண் படுக்கும், உறங்கும்.
8. அண்ணல் - பெருமை வாய்ந்த; ஆம் அற - நீர் அற; புலர்ந்த - காய்ந்த.
9. படர்குவர் - செல்வர்.
10. செயிர் தீர் - குற்றமற்ற; துவர்வாய் - பவளம் போன்ற வாய்.
11. அவிர் தொடி - ஒளி வீசும் வளையல்.
12. ஆரம் - முத்தாரம்; அலர் முலை - பரந்த முலை; ஆகம் - மார்பு.
13. தார் இடைக் குழையாது - மாலையை இடையே குழையச்செய்யாமலே.
14. சென்றுபடு - சென்றொழிந்த; விறல் - மிக்க; கவின் - அழகு; உள்ளி - நினைத்து.
15. பெயர் தந்து - பெயர்த்து.
16. தருநரும் உளரோ - (அவ்வழகினைத்) தருவோரும் உண்டா?
17. ஈங்கை - ஈங்கைச்செடி.
18. ஐது - அழகு; நுசுப்பு - இடை.
19. பல்காசு நிரைத்த - பல மணிகள் கோத்த; கோடு - பக்கம்; ஏந்து - உயர்ந்த.
20. புலந்து - வெறுத்து.
21. ஆனா - அமையாத.
22. பிரியச் சூழ்தலும் உண்டோ? - பிரியுமாறு கருதுதலும் உளதோ?.
23. நின்வயின் - உன்னிடமிருந்து.

தோழி கூற்று

நற்றிணை 26 **சாத்தந்தையார்**

திணை : பாலை

கூற்று

தலைமகள் பிரிவுணர்ந்து வேறுபட்டமை சொல்லித் தோழி செலவு அழுங் குவித்தது.

கூற்று விளக்கம்

தலைவன் பிரிவான் என அறிந்ததுமே தலைவியின் நலம் வேறுபட்டது. தலைவனிடம், அவன் வினை முடிந்து வரும்வரை தலைவி ஆற்றியிராள் எனக் கூறித் தோழி அவன் செலவினைத் தடுத்தது.

நோகோ யானே; நெகிழ்ந்தன வளையே
செவ்வி சேர்ந்த புள்ளி வெள்அரை
விண்டுப் புரையும் புணர்நிலை நெடுங்கூட்டுப்
பிண்ட நெல்லின் தாய்மனை ஒழியச்
சுடர்முழுது எறிப்பத் திரங்கிச் செழுங்காய்
முடமுதிர் பலவின் அத்தம், நும்மொடு
கெடுதுணை ஆகிய தவறோ? வைஎயிற்று,
பொன்பொதிந் தன்ன சுணங்கின்,
இருஞ்சூழ் ஓதிப் பெருந்தோ ளாட்கே.

தெளிவுரை

தலைவனே! இவள் தாய் வீட்டில் நிறைய நெல் கொண்ட நெடிய நெற்கூடுகள் மலையொத்து நின்றிருக்கும். அழகமைந்த புள்ளிகளைக் கொண்ட அவ்வீட்டை நீங்கி, வெயில் எரித்தலால் வாட்டமுற்றுச் செழுமையான காய்களுடன் வளைந்து முதிர்ந்த பலா மரங்களும் வாடிப்போயிருக்கும் காட்டுவழியில் உன்னோடு உறுதுணையாய் உடன்போக்கில் வந்தவள், இவள். அவ்வாறு வந்தது தவறாயிற்றோ? கூர்மையான பற்களையும், பொன்பொதிந்தாற்போல் விளங்கும் தேமற்புள்ளிகளையும், கரிய நெருங்கிய கூந்தலையும், பெருத்த தோள்களையும் கொண்டவளாகிய இவள் உன் பிரிவைக் கேட்டதுமே, கைகளிலிருந்து வளைகள் நில்லாது கழன்று ஓடுகின்றன.

உன்னோடு உறுதுணையாய் உடன்போக்குக் காலத்தே வந்த தவற்றினாலே இவளுக்கு இஃது உண்டாயிற்றோ? அதனை எண்ணியே நான் வருந்துகின்றேன்.

கருத்து

'உன்னை நம்பிச் சுடுசுரம் கடந்து உடன்போக்கில் வந்த இவள் மெலியுமாறு நீ பிரிவது சரியா' எனத் தலைவனிடம் கேட்கிறாள், தோழி.

விளக்கம்

வளமான தன் தாய்வீட்டை விட்டு, கடுஞ்சுரத்தின் வெம்மையினையும் கருதாது, உன்னிடம் கொண்ட பெருங்காதலால் உன்னுடன் உடன்போக்கில் வந்தவள், தலைவி. அது தவறாயிற்றோ? உன் பிரிவுக் குறிப்புத் தெரிந்த அளவிலேயே இவள் தோள்கள் மெலிந்தன; வளைகள் நெகிழ்ந்தன; இந் நிலையைக் காண என் மனம் வருந்துகிறது என்று தோழி தலைவனிடம் கூறி அவன் செலவைத் தடுத்தாள்.

சொற்பொருள்

1. நோகு - நோவேன்.
2. செவ்வி சேர்ந்த - அழகமைந்த; வெள்அரை - வெறுமையான அடிப் பாகம்.
3. விண்டு - மலை; புணர்நிலை - அடுக்கிய தன்மை; நெடுங்கூடு - நெடிய நெற்கூடுகள்.
4. பிண்ட நெல் - நிறைந்த நெல்; தாய்மனை - தாய் வீடு.
5. திரங்கி - வாடிய.
6. முடமுதிர் பலவின் - வளைந்து முதிர்ந்த பலா மரங்கள் நிற்கும்; அத்தம் - வழி.
7. கெடுதுணை - கெடுதற்காலத்தும் உறுதுணையாய் விளங்கும் சிறந்த துணை.
8. பொதிந்தன்ன - பொருத்தி வைத்தாற்போன்ற; சுணங்கு - தேமல்.
9. இருஞ்சூழ் ஓதி - கரிய நெருங்கிய கூந்தல்.

தோழி கூற்று

நற்றிணை 318 **பாலை பாடிய பெருங்கடுங்கோ**

திணை : பாலை

கூற்று

பிரிவுணர்த்தப்பட்ட தலைமகனைத் தோழி சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவியைத் தன்னோடு உடனழைத்து வந்து, தன்னூரில் மணந்து இல்லறம் பேணிக்கொண்டிருந்த தலைவன், பொருள்தேடி வரச் சிறிது காலத்திற்குப் பிரிய எண்ணம் கொள்கிறான். அதனை அவன் தோழிக்குணர்த்த, அவள் தலைவியின் தன்மையைக் கூறி அவன் செல்வதைத் தடுத்தது.

நினைத்தலும் நினைதிரோ ஐய அன்றுநாம்
பணைத்தாள் ஓமைப் படுசினை பயந்த
பொருந்தாப் புகர்நிழல் இருந்தனம் ஆக
நடுக்கஞ் செய்யாது நண்ணுவழித் தோன்றி
ஒடித்துமிசை கொண்ட ஓங்குமருப்பு யானை
பொறிபடு தடக்கை சுருக்கிப் பிறிதோர்
ஆறிடைப் பட்ட அளவைக்கு வேறுணர்ந்து
என்றூழ் விடரகம் சிலம்பப்
புன்தலை மடப்பிடி புலம்பிய குரலே!

தெளிவுரை

ஐயனே! உடன்போக்கில் உம்முடன் வந்த அந்நாளிலே, பருத்த அடியினைக்கொண்ட ஓமை மரத்தின் தாழ்ந்த கிளைகளில் இலைகள் உதிர்ந்தமையால் உண்டான புள்ளிகளைக் கொண்ட நிழலில் களைப்பாறும்பொருட்டு நாம் தங்கியிருந்தோம் அன்றோ? அப்போது உயர்ந்த தந்தங்களைக் கொண்ட யானை ஒன்று நாமிருந்த இடத்திற்கு வந்து நமக்கு எவ்விதத் துன்பத்தையும் தாராமல் தோன்றியது. அது தழைகளை ஒடித்துத் தன்மேல் போட்டுக் கொண்டது; புள்ளிகளைக் கொண்ட தன் நெடிய கையினைச் சுருட்டிக் கொண்டு பிறிதொரு வழியில் சென்று மறைந்தது; அச்சிறிதளவு நேரப் பிரிவினையையே

ஆற்றாது, வெயில் பரவிய மலைப்பிளப்பெல்லாம் எதிரொலிக்கும் படி அதன் பெண்யானை குரலெடுத்துப் பிளிறியது. அவ்வாறு குரல் எழுப்பியதை நினைத்துப் பார்த்தாயாயின் காதலியான இவளைப் பிரிந்து செல்லமாட்டாய் அன்றோ?

கருத்து

'தலைவ! உன்னையே நம்பி உடன்போக்கில் உன்னோடு வந்த இவள் வருந்தும்படியாக நீ பிரிந்து செல்லலாமா?'

விளக்கம்

"ஐயனே! உடன்போக்கில் நீ தலைவியை அழைத்து வந்த பொழுது காட்டில் ஓமை மர நிழலில் தங்கியிருந்தோம். அப்போது ஆண்யானை தன் பார்வையிலிருந்து மறைந்த அந்தச் சிறிது நேரப் பிரிவைத் தாங்காத பெண்யானை மலையெல்லாம் எதிரொலிக்கும்படி பிளிறியதைக் கேட்டிருந்தாய் அன்றோ? அப் பெண்யானையினும் பெருங்காதல் கொண்ட தலைவி, நீ பிரியின் என்னாவள் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டாவா?" என்று கூறித் தலைவன் பிரிவதைத் தோழி தடுத்தாள்.

குறிப்பு

உடன்போக்கில் தோழியும் உடன்செல்லுதல் இல்லையாயினும், தலைவிக்கும் தோழிக்கும் இடையே உள்ள ஒருமைப்பாட்டைக் கருதி, 'நாம்' என்றாள்.

இறைச்சி

களிறு மறைந்த அளவிலே பிடியானை புலம்பும் என்பதிலிருந்து தலைவியும் உன் பிரிவால், பெரிதும் வருந்தி நலிவடைவள் என்னும் இறைச்சிப் பொருள் பெறப்படுகிறது.

சொற்பொருள்

1. நினைதிரோ - நினைத்துப் பார்ப்பீரோ (நினைத்துப் பார்ப்பீராயின்).
2. பணைத்தாள் - பருத்த அடி; ஓமை - ஓமை மரம்; படுசினை - தாழ்ந்த கிளை; பயந்த - உண்டாக்கிய.
3. பொருந்தா - செறிவின்றி; புகர் நிழல் - புள்ளிகளைக் கொண்ட நிழல்.

4. நடுக்கம் செய்யாது - துன்பம் தாராமல்; நண்ணுவழி - நாமிருந்த வழியில்.
5. ஒடித்து மிசை கொண்ட - தழைகளை ஒடித்துத் தன்மீது போட்டுக் கொண்ட.
6. பொறிபடு - புள்ளிகளைக் கொண்ட.
7. ஆறிடைப்பட்ட - வழியிடைச் சென்ற; அளவைக்கு - இடைப்பட்ட அச்சிறிதளவு நேரத்தில்; வேறுணர்ந்து - (ஆண்யானையைக் காணாமையால்) என்ன ஆயிற்றோ என்று வேறுபட உணர்ந்து.
8. என்றூழ் - வெயில்; விடரகம் - மலைப் பக்கம்; சிலம்ப - எதிரொலிக்கு மாறு.
9. புன்தலை - புல்லிய தலை; மடப்பிடி - இளமையான பெண்யானை; புலம்பிய - பிளிறிய.

தோழி கூற்று

நற்றிணை 48 **பாலை பாடிய பெருங்கடுங்கோ**

திணை : பாலை

கூற்று

பிரிவு உணர்த்திய தலைமகற்குத் தோழி சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவியைப் பிரிந்து செல்லுதற்குத் தான் எண்ணியுள்ளதைத் தலைவன் தோழியிடம் கூறினான். அவன் பிரிவைத் தலைவி ஆற்றியிராள் எனத் தோழி அவனிடம் கூறியது.

அன்றை அனைய ஆகி, இன்றும்எம்
கண்ணுள் போலச் சுழலும் மாதோ
புல்இதழ்க் கோங்கின் மெல்இதழ்க் குடைப்பூ
வைகுறு மீனின் நினையத் தோன்றி,
புறவுஅணி கொண்ட பூநாறு கடத்திடை,
கிடின்என இடிக்கும் கோல்தொடி மறவர்
வடிநவில் அம்பின் வினையர் அஞ்சாது
அமரிடை உறுதர, நீக்கிநீர்
எமரிடை உறுதர ஒளித்த காடே.

தெளிவுரை

கோங்கின் பூக்கள் மிகுந்த மெல்லிய இதழ்களைக் கொண்டவை; குடை போன்ற புல்லிய புறவிதழ்களைக் கொண்டவை. அவை வைகறைப்பொழுதிலே வானத்தில் பூத்த மீன்களெனக் கருதும்படி காடு அழகு பெற மலர்ந்திருந்தன. அவ்வாறு மலர்மணம் வீசும் காட்டுவழியில் 'கிடின்' என்னும் ஓசை உண்டாகுமாறு மோதும் மறக்குணம் மிக்க மறவர்கள் வீர வாளை அணிந்திருப்பர். அவர்கள் தம் கூர்மை பொருந்திய அம்பினாலே பிறரைத் துன்புறுத்தும் கொடுஞ்செயல் செய்பவர். அவரோடு ஏற்பட்ட போரில் நீ அஞ்சாது போரிட்டு அவர்களை வெற்றி கொண்டு விரட்டி ஓட்டினாய். அதன் பின் எம் உறவினர் எம்மைத் தேடிக் காட்டுக்கு வந்தனர். அவர்களைக் கண்ட நீ காட்டிலே சென்று ஒளிந்து கொண்டாய்! முன்பு உடன்போக்கு நிகழ்ந்த அந்நாளில் நிகழ்ந்த அந்நிகழ்ச்சி இன்றும் என் கண்முன்னே நிகழ்வதுபோலக் காட்சி தருகின்றது. அத்தகைய காட்டிடத்தே இப்போது நீ தலைவியைப் பிரிந்து செல்லலாமா?

கருத்து

'உன்னையே துணை எனக் கருதி உன்னோடு சேர்ந்துள்ள தலைவியிடம் அருளின்றிப் பிரிதல் பொருந்தாது' என்று தோழி தலைவனிடம் கூறுகிறாள்.

விளக்கம்

தலைவியைப் பிரியக் கருதிய தலைவனிடம் தோழி, முன்பு அவன் தலைவியோடு உடன்போக்கில் சென்றபோது நேரிட்ட மறக்க முடியாததொரு நிகழ்ச்சியை இப்போது எடுத்துக் கூறுகிறாள்.

"உடன்போக்கில் தலைவியுடன் நீ காட்டுவழியே சென்ற போது காட்டில் கோங்கு மரங்கள் மலர்ந்து விடியலில் தோன்றும் செம்மீன்கள்போலக் காட்சி தந்தன. உம் முன்னே சென்ற வில் வீரர் உம்மை மறித்துப் போரிட வந்தனர். நீ, அவர்களுடன் போரிட்டு அவர்களை விரட்டி ஓட்டினாய்! அதன் பின்னர் எம் உறவினர் வரக் கண்டதும் அவர்கள் கண்ணில்

படாமல் ஒளிந்துகொண்டாய். எம்மவருக்குத் துன்பமிழைக்கின் எம் உள்ளம் நோகும் என்ற அருளினாலே அன்று உன்னை எளியனாய்க் காட்டிக்கொண்டது. இதனால், உன் ஆண்மைக்கு இழுக்கெனக் கருதாது, தலைவியின் நலத்தையே கருதியிருந்த நீயா, இன்று இவளுக்கு அழிவைத் தருவதான இச்செயலைச் செய்யத் துணிந்தாய்?" என்று தோழி வினவினாள்.

சொற்பொருள்

1. அன்றை அனைய ஆகி - அந்நாளில் நிகழ்ந்த அத்தன்மையான காட்சி.
2. கண்ணுள் போல - கண்ணுக்கு முன் நடப்பது போல; சுழலும் - காட்சி தரும்.
3. கோங்கு - கோங்கு மரம்.
4. வைகுறு மீன் - வைகறையில் வானத்தில் தோன்றும் மீன்; நினைய - நினைக்குமாறு.
5. புறவு - காடு; கடம் - காடு.
6. கோல் தொடி - திரண்ட தோள்வளை.
7. வடிநவில் - கூரியதாய் வடிக்கப்பெற்ற; வினையர் - செயலாற்றுபவர்.
8. அமர் - போர்; உறுதர - வந்தபோது.

7-8. அஞ்சாது நீக்கி - அஞ்சாது விரட்டி ஓட்டி.

9. எமர் - எம் உறவினர்; ஒளித்த காடு - மறைந்துகொண்ட காடு.

தோழி கூற்று

நற்றிணை 337 **பாலை பாடிய பெருங்கடுங்கோ**

திணை : பாலை

கூற்று

தோழி, தலைமகன் பொருள்வயிற் பிரியலுற்றானது குறிப்பறிந்து விலக்கியது.

கூற்று விளக்கம்

பொருள் தேடி வரப் பிரிந்து செல்வதற்குத் தலைவன் திட்டமிடுவதைக் குறிப்பால் அறிந்த தோழி, அவனிடம் அறநெறி கூறி அவன் செலவினைத் தடுத்து நிறுத்தியது.

உலகம் படைத்த காலைத் தலைவ!
மறந்தனர் கொல்லோ சிறந்திசி னோரே;
முதிரா வேனில் எதிரிய அதிரல்,
பராரைப் பாதிரிக் குறுமயிர் மாமலர்,
நறுமோ ரோடமொடு, உடன்எறிந்து அடைச்சிய
செப்பு இடந்தன்ன நாற்றம் தொக்குஉடன்,
அணிநிறம் கொண்ட மணிமருள் ஐம்பால்
தாழ்நறுங் கதுப்பில் பையென முள்கும்
அரும்பெறல் பெரும்பயம் கொள்ளாது,
பிரிந்துஉறை மரபின் பொருள்படைத் தோரே.

தெளிவுரை

"தலைவ! இளவேனிற்காலத்தில் மலர்ந்த காட்டுமல்லிகை மலரையும், பருத்த அடிமரத்தைக் கொண்ட பாதிரியின் நுண்ணிய மயிரமைந்த சிறந்த மலரையும், நறுமணம் கமழும் செங்கருங்காலியையும் ஒருங்கே அடைத்து வைக்கப்பட்டிருந்த பூச்செப்பைத் திறந்தவுடன் எழும் நறுமணம் போன்று கமழ்வது, பெண்டிர் கூந்தல்; அது அழகிய நல்ல நிறம் பொருந்தி நீலமணியென விளங்குவதோடு, ஐந்து பகுதியாய் அமைந்து, தாழ்ந்து விளங்கும் சிறப்பினையும் கொண்டது. அத்தகைய கூந்தலில் உடனிருந்து உறைகின்ற அரிய பெரிய பயனைக் கொள்ளாதவராய், மகளிரைப் பிரிந்து பொருளீட்டி வாழ்கின்ற ஆடவர்கள், உலகம் தோன்றிய காலத்திலிருந்தே, அடைந்தாரைப் பேணிக் காக்கும் அன்பு நெறியை மறந்தவரே" எனத் தலைவனிடம் தோழி கூறினாள்.

கருத்து

'தன்னை நம்பி வந்து சேர்ந்தவரைக் கைவிடாது பேணுதலே சிறந்த அறநெறி' எனத் தலைவனிடம் தோழி கூறி, அவன் பிரிந்து செல்வதைத் தடுத்தாள்.

குறிப்பு

காட்டுமல்லிகை, பாதிரி, செங்கருங்காலி ஆகிய பூக்கள் ஒன்றாய்ச் செறித்து வைக்கப்பட்ட செப்பினின்று வெளிவரும் இனிய கூட்டு மணத்தைப் போன்று நறுமணமிக்கது, தலைவியின் கூந்தல்.

சொற்பொருள்

1. காலை - காலத்தில்.
2. சிறந்திசினோர் - அறிவில் சிறந்த பெரியோர்.
3. முதிரா வேனில் - இளவேனில்; எதிரிய - மலர்ந்த; அதிரல் - அதிரல் பூ, காட்டுமல்லிகை மலர்.
4. பராரை - பருத்த அடிமரம்; பாதிரி - பாதிரியின்; குறுமயிர் - நுண்ணிய மயிரமைந்த; மாமலர் - சிறந்த மலர்.
5. மோரோடம் - செங்கருங்காலிப்பூ; உடன் எறிந்து - ஒருங்கே சேர்த்து அடைத்து வைத்து.
6. செப்பு - சிமிழ்; இடந்தன்ன - திறந்தாற்போன்ற; தொக்கு - கலந்து.
7. மணிமருள் - நீலமணி போலும்; ஐம்பால் - ஐந்தாய் வகுக்கப்பட்ட; தாழ் கூந்தல் - சரிந்து தொங்கும் கூந்தல்; முள்கும் - முயங்கும்.
9. பயம் - பயன்.
10. பொருள் படைத்தோர் - பொருளீட்டி வாழ்பவர்.

தோழி கூற்று

நற்றிணை 33 **இளவேட்டனார்**

திணை : பாலை

கூற்று

பிரிவுணர்த்தப்பட்ட தலைமகளது குறிப்பறிந்த தோழி, தலைமகற்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவனிடம் பிரிந்து செல்லவிருப்பதை அறிந்த தலைவி வருந்துகிறாள். அந்நிலையில் தோழி எதிர்ப்பட்டுத் தலைவனிடம், 'உன் பிரிவைக் கேட்டதுமே அழுகின்ற தலைவி, நீ வருமளவும் எப்படி ஆற்றியிருப்பாள்' என்று கூறியது.

படுசுடர் அடைந்த பகுவாய் நெடுவரை,
முரம்புசேர் சிறுகுடி, பரந்த மாலை,
புலம்புகூட்டு உண்ணும் புல்லென் மன்றத்துக்
கல்லுடைப் படுவில் கலுழி தந்து,
நிறைபெயல் அறியாக் குறைக்குஊண் அல்லில்,
துவர்செய் ஆடைச் செந்தொடை மறவர்

அதர்பார்த்து அல்கும் அஞ்சுவரு நெறியிடை,
இறப்ப எண்ணுவர் அவர்எனின் மறுத்தல்
வல்லுவம் கொல்லோ, மெல்லியல்! நாம்என
விம்முறு கிளவியள் என்முகம் நோக்கி,
நல்அக வனமுலைக் கரைசேர்பு
மல்குபுனல் பரந்த மலர்ஏர் கண்ணே.

தெளிவுரை

"தலைவனே! தலைவி என்னை நோக்கி, 'மெல்லியளே! மேற்கில் செல்லும் ஞாயிறு மறையவே மாலைப்பொழுது பரவும். அப்போது, பிளவுபட்ட நீண்ட மலைச்சாரலில், வன்னிலத்தில் அமைந்த சிறுகுடியில் அச்சம் மிகுந்திருக்கும். மறக்குடியினர் கல் குழிகளில் உள்ள கலங்கல் நீரை அருந்தி வறுமையினாலே குறைந்த அளவே உண்ணுபவராயிருப்பர். துவர் நிற ஆடையினையும் செவ்விய அம்புத்தொடையினையும் உடையவரான அம்மறவர்கள், இரவுப்பொழுதில் வழிப் போவாரைக் கொள்ளையிடுதற்காக வழியருகே பதுங்கி யிருப்பர். அச்சம் தருகின்ற அக்காட்டுவழியே செல்லக் கருதி யுள்ளார், நம் தலைவர். மெல்லிய இயல்பினராகிய நமக்கு அவரை மறுத்துப் பேசும் வல்லமை உண்டா?' என விம்மிய சொல்லை உடையவளாய் என் முகத்தை நோக்கியவாறு கூறினாள், தலைவி. அவ்வேளையில் மலர் போன்ற அவள் கண்களிலிருந்து பெருகி வழிந்த கண்ணீர்த்துளிகள், அவளது நல்ல மார்பிலே அழகிய முலை முகட்டை அடைந்து வெள்ளமாய்ப் பரவி நின்றது. இதனை அறிக" என்று தோழி தலைவனிடம் கூறினாள்.

கருத்து

"உன் பிரிவைக் கேட்ட பொழுதே துன்புற்று அழுதவள் உன்னைப் பிரிந்து நெடுநாள் உயிர் வாழ்ந்திருப்பாளா? மாட்டாள்" என்று தோழி தலைவனிடம் கூறி அவன் செலவினைத் தவிர்க்க முயல்கிறாள்.

இறைச்சி

ஆறலை கள்வர்கள் வழியை நோக்கியபடி மறைந்திருப்பர் என்பதிலிருந்து, தலைவனது பிரிவை எதிர்நோக்கியபடி

தலைவியைப் பற்றிக் கொள்வதற்காகப் பசலை மறைந்து காத்திருக்கின்றது என்னும் இறைச்சிப்பொருள் பெறப்படுகிறது.

சொற்பொருள்

1. படுசுடர் - மறைகின்ற ஞாயிறு; பகுவாய் - அகன்ற பிளப்பினைக் கொண்ட.
2. முரம்புசேர் - முரம்பு நிலத்திலே அமைந்த.
3. புலம்பு - தனிமை.
4. கல்லுடை - கல்லினில் உள்ள; படு - குழி; கலுழி - கலங்கல் நீர்.
5. நிறைபெயல் அறியா - மிக்க மழையை அறியாத; குறைக்கு ஊண் - குறைந்த உணவைக் கொண்ட; அல் - இரவு.
6. துவர்செய் - துவர் நிற.
7. அதர் - வழி; அல்கும் - தங்கும்.
8. இறப்ப - கடந்து செல்ல; அவர் எனின் - நம் காதலர் என்றால்.
9. வல்லுவம் கொல்லோ? - வலிமை உண்டா?
10. கிளவியள் - சொல்லை உடையவள்.
11. அகம் - மார்பு; கரை சேர்பு - முகட்டை அடைந்து.
12. மலர் ஏர் கண் - பூப் போன்ற கண்களில்; மல்கு புனல் - நீர் நிறைந்து; பரந்த - பரவியிருக்கிறது.

தோழி கூற்று

அகநானூறு 143 **ஆலம்பேரி சாத்தனார்**

திணை : பாலை

கூற்று

பொருள்வயிற் பிரியக் கருதிய தலைமகனைத் தோழி தலைமகளது ஆற்றாமை கண்டு, செலவு அழுங்குவித்தது.

கூற்று விளக்கம்

தலைவன் பொருள்வயிற் பிரியக் கருதினான். அதனையறிந்த தோழி அவனிடம் சென்று, 'நீ கருதியதைச் சொல்லிய அளவிலேயே தலைவியின் கண்கள் நீரைச் சொரிந்தன; நீ பிரிந்தால் என்ன ஆவளோ?' என்று கூறித் தலைவன் பிரிவைத் தவிர்த்தது.

செய்வினைப் பிரிதல் எண்ணிக் கைம்மிகக்
காடுகவின் ஒழியக் கடுங்கதிர் தெறுதலின்,
நீடுசினை வறிய ஆக, ஒல்லென
வாடுபல் அகல்இலை கோடைக்கு ஒய்யும்
தேக்குஅமல் அடுக்கத்து ஆங்கண் மேக்குஎழுபு,
முளிஅரில் பிறந்த வளிவளர் கூர்எரிச்
சுடர்நிமிர் நெடுங்கொடி விடர்முகை முழங்கும்
'வெம்மலை அருஞ்சுரம் நீந்தி– ஐய!
சேறும்' என்ற சிறுசொற்கு, இவட்கே
வசைஇல் வெம்போர் வானவன் மறவன்
நசையின் வாழ்நர்க்கு நன்கலம் சுரக்கும்,
பொய்யா வாய்வாள், புனைகழல், பிட்டன்
மைதவழ் உயர்சிமைக் குதிரைக் கவாஅன்
அகல்அறை நெடுஞ்சுனை, துவலையின் மலர்ந்த
தண்கமழ் நீலம் போல,
கண்பனி கலுழ்ந்தன; நோகோ யானே.

தெளிவுரை

"தலைவனே! பொருள் ஈட்டக் கருதி நீ செல்லவிருக்கும் வழியை என்னிடம் கூறினாய். கதிரவனின் கதிர்கள் அளவு கடந்து காய்வதால் காடு அழகிழந்துள்ளது. மலையில் உள்ள மரங்களின் நீண்ட கிளைகளிலுள்ள அகன்ற இலைகள் வாடி உலர்ந்து மேல் காற்றால் 'ஒல்' என்னும் ஒலியுடன் உதிர்கின்றன. தேக்கு மரங்கள் நிறைந்த மலைப்பக்கத்தில் காய்ந்த தூறுகளில் நெருப்புப் பற்றிக் காற்றினால் வளர்ந்து சுடர்விட்டு மலைப்பிளவு களில் மேலெழுந்து சடசடவென்று எதிரொலிக்கிறது. அத்தகைய வெப்பமிக்க மலை வழியே செல்வேன் என்று கூறுகின்றாய். உன் பிரிவைப் பற்றி அவளிடம் சொன்ன அளவிலேயே கண்ணீர் பெருகுகிறது.

நியாயமான காரணத்திற்காகப் போரிடுபவன், சேரன்; அவன் படைத்தலைவன், பிட்டன்; பேராற்றல் வாய்ந்தவன். தன்னிடம் பரிசில் பெற விரும்பி வரும் கலைஞர்க்கு அணிகலன்களை வழங்குபவன், அவன். மேகம் தவழும் உயர்ந்த உச்சியைக் கொண்ட குதிரைமலை அவனுக்கு உரிமை உடையது. அங்கு

அகன்ற பாறையிலுள்ள நெடிய சுனையில் மலர்ந்த ஈரமான மணம் கொண்ட நீலமலர் மழையினால் நீர் சொரிவதைப் போல, உன் பிரிவைப் பற்றிக் கூறிய உடன் தலைவியின் கண்களும் நீரைச் சொரிந்தன. அதைக் கண்டு நான் வருந்துகின்றேன்" எனத் தோழி தலைவனிடம் கூறினாள்.

கருத்து

'தலைவ! உன் பிரிவைச் சொல்லிய அளவிலேயே தலைவி கண்ணீர் பெருக்கினாள்; பிரிந்து சென்றால் என்ன ஆவளோ?' என்று தோழி கூறித் தலைவனின் பயணத்தைத் தடுத்து நிறுத்தினாள்.

விளக்கம்

"தலைவ! பொருளீட்டி வரும்பொருட்டுத் தலைவியைப் பிரிய எண்ணி, 'கொடிய மலைப்புற வழிகளை ஊறின்றிக் கடந்து செல்வேன்' என்று என்னிடம் சொல்லிய இந்தச் சொற்களைக் கேட்ட அளவிலேயே தலைவியின் நீலமலர் போன்ற கண்கள் நீரைச் சொரிந்தன. நீ பிரிந்தால் இவள் என்ன ஆவளோ? நான் வருந்துகின்றேன்" எனத் தோழி தலைவனிடம் கூறி அவன் பயணத்தைத் தடுத்து நிறுத்தினாள்.

குறிப்பு

நீ பிரிவதைப் பற்றிக் கேட்கவே பொறுக்காதவள், நீ பிரியின் உயிர் தரியாள் என்பதைத் தோழி குறிப்பாய்ச் சொல்கிறாள். அதைக் கேட்கும் தலைவன் பிரிவைத் தவிர்ப்பான்.

சொற்பொருள்

1. செய்வினை - பொருள் ஈட்டும் செயல்; கைம்மிக - அளவு கடந்து.
2. கவின் - அழகு; கடுங்கதிர் - ஞாயிற்றின் கடுமையான கதிர்; தெறுதல் - காய்தல்.
3. வறிய ஆக - (இலை உதிர்ந்து) வெறுமை அடைய; ஒல் என - 'ஒல்' என்னும் ஒலியுடன்.
4. வாடு - வாடிய; பல் - பல; அகல்இலை - அகன்ற இலை; கோடை - மேல் காற்று; ஒய்யும் - உதிர்ந்து விழும்.
5. தேக்கு - தேக்கு மரங்கள்; அமல் - நிறைந்த; அடுக்கம் - மலைப்பக்கம்; மேக்கு எழுபு - மேலே எழுந்து.
6. முளி - காய்ந்த; அரில் - தூறு; வளிவளர் - காற்றினால் வளர்ந்த.

7. விடர்முகை - மலைப்பிளப்பாகிய குகை.
8. நீந்தி - கடந்து.
9. சேறும் - செல்வேன்; சிறுசொல் - சில சொற்கள்.
10. வசைஇல் - குற்றமற்ற, நியாயமான; வெம்போர் - கொடிய போர்; வானவன் - சேரன்; மறவன் - படைத்தலைவன்.
11. நசையின் வாழ்நர்க்கு - (பரிசில்) விருப்புடன் வாழ்பவர்க்கு (பரிசிலர்க்கு); நன்கலம் - நல்ல அணிகலன்; சுரக்கும் - அளிக்கும்.
12. பொய்யா வாய்வாள் - தப்பாது வெற்றி தரும் கூரிய வாள்; பிட்டன் - சேர மன்னனின் படைத்தலைவன்.
13. மை - மேகம்; சிமை - உச்சி; குதிரை - ஒரு மலை; கவாஅன் - பக்க மலை.
14. அகல் - அகன்ற (பாறை); துவலை - மழைத்துளி.
15. நீலம் - நீல மலர்.
16. பனி - நீர்த்துளி; கலுழ்ந்தன - சொரிந்தன; நோகு - (நான் அது கண்டு) நோகின்றேன் (துன்பப்படுகின்றேன்); நோ - துன்பம்.

தோழி கூற்று

கைந்நிலை 13 **புல்லங்காடனார்**

திணை : பாலை

கூற்று

பொருள் வயின் நோக்காக உடைய தலைமகனிடம், பிரிவைத் தலைமகள் தாங்காள் என்று தோழி கூறுவது.

கூற்று விளக்கம்

வரைவிடை வைத்துப் பொருள்வயிற்பிரிதலை அறிந்த தோழி தலைவியின் பிரிவாற்றாமையைப் பற்றித் தலைவனிடம் கூறியது.

கடுகி அதர்அலைக்கும் கல்சூழ் பதுக்கை
விடுவில் எயினர்தம் வீளைஓர்த்(து)ஓடும்
நெடுஇடை அத்தம் செல(வு)உரைப்பக் கேட்டே
வடுவிடை மெல்கின கண்.

தெளிவுரை

"தலைவ! வழிச்செல்லும் மக்களின் பொருளை ஆறலை கள்வர்கள் விரைவாய் வந்து பறித்துத் துன்புறுத்துவர். பருக்கைக் கற்கள் நிறைந்த கற்குவியல்களின் மறைவில் இருந்து அம்பினை விடுகின்ற வில்லினையுடைய வேடர்களின் சீழ்க்கை ஒலி கேட்டு நெடிய காட்டெருதுகள் அஞ்சி ஓடும். இத்தகைய பாலை நில வழியில் நீ செல்ல விரும்புகின்றாய் என்று நான் கூறக் கேட்டவுடன் மாவடுவைப் பிளந்தாற்போன்ற தலைவியின் கண்களிலிருந்து கண்ணீர் மெதுவாய் வழிந்தது" என்று கூறித் தோழி தலைவனின் செலவைத் தடுக்கிறாள்.

கருத்து

'தலைவ! நீ பிரிவாய் என்பதைக் கேட்ட அளவிலேயே தலைவியின் கண்களில் நீர் வழிந்தோடியது; அதனால் உன் செலவைத் தவிர்த்திடு.'

விளக்கம்

வேடர்கள் பல இடங்களில் பதுங்கியிருப்பர். வழிச்செல்வோரைக் கண்டதும் வேடன் ஒருவன் சீழ்க்கை அடிப்பான். அதனைக் கேட்டு மற்றவர் வந்து கூடுவர்.

சொற்பொருள்

1. கடுகி - விரைந்து; அதர் - வழி; அலைக்கும் - வருத்திப் பறிக்கும்; பதுக்கை - பதுங்கியிருப்பதற்கேற்ற கற்குவியல்.
2. எயினர் - வேடர்; வீளை - சீழ்க்கை ஒலி; ஓர்த்து - கேட்டு.
3. நெடு விடை - நெடிய காட்டெருது; அத்தம் - வழி; செலவு - நீ செல்ல இருப்பதை; உரைப்ப - நான் கூற.
4. வடுவிடை - மாவடுவைப் பிளந்தாற்போன்ற; மெல்கின - மெதுவாய் வழிந்தன; கண் - கண்ணீர்.

தோழி கூற்று

குறுந்தொகை 15 **புல்லங்காடனார்**

திணை : பாலை

கூற்று

பொருள் வயின் நோக்காக உடைய தலைமகனிடம், பிரிவைத் தலைமகள் தாங்காள் என்று தோழி கூறுவது.

கூற்று விளக்கம்

பொருளீட்டப் பிரியும் தலைவன் பிரிவைத் தலைவி தாங்காள் என்று தோழி தலைவனுக்குக் கூறியது.

....
கடுங் கதிர் வெங் கானம் பல் பொருட்கள் சென்றார்
கொடுங் கல் மலை ....

தெளிவுரை

கதிரவனின் கடுங்கதிர்களால் வெப்பம்அடைந்துள்ள காட்டு வழியே மிகுதியான பொருளைத் திரட்டி வருவதற்காகப் பிரிந்து சென்ற நம் தலைவரின் வளைந்த பாறைகளையுடைய மலை.

கருத்து

தலைவி பிரிவைத் தாங்காள். உன் செய்வினைத் தவிர்த்திடு என்று தோழி தலைவனுக்குக் கூறியது.

சொற்பொருள்

3. கடுங்கதிர் - பகலவனின் கடுமையான கதிர்களால்; வெங்கானம் - வெப்பம் அடைந்துள்ள காட்டு வழியே; பல் பொருள் - மிகுதியான பொருளை; சென்றார் - தேடிச் சென்றுள்ள தலைவனுடைய.
4. கொடுங்கல் - வளைந்த பாறைகளையுடைய.

தோழி கூற்று

அகநானூறு 307 **மதுரை ஈழத்துப் பூதன் தேவனார்**

திணை : பாலை

கூற்று

பிரிவு உணர்த்தப்பட்ட தோழி, தலைமகனைச் செலவு விலக்கியது.

கூற்று விளக்கம்

பொருள் ஈட்டக் கருதிய தலைவன் தலைவியைப் பிரியக் கருதினான். அதனை உணர்ந்த தோழி அக்கருத்தைக் கைவிடுமாறு தலைவனிடம் கூறியது.

'சிறுநுதல் பசந்து, பெருந்தோள் சாஅய்,
அகல்எழில் அல்குல் அவ்வரி வாட,
பகலும் கங்குலும் மயங்கிப் பையென,
பெயல்உறு மலரின் கண்பனி வார,
ஈங்குஇவள் உழக்கும் என்னாது, வினைநயந்து,
நீங்குதல் ஒல்லுமோ– ஐய!– வேங்கை
அடுமுரண் தொலைத்த நெடுநல் யானை
மையல்அம் கடாஅம் செருக்கி, மதம்சிறந்து,
இயங்குநர்ச் செகுக்கும் எய்படு நனந்தலை,
பெருங்கை எண்கினம் குரும்பி தேரும்
புற்றுடைச் சுவர புதல்இவர் பொதியில்,
கடவுள் போகிய கருந்தாள் கந்தத்து
உடன்உறை பழமையின் துறத்தல் செல்லாது,
இரும்புறாப் பெடையொடு பயிரும்
பெருங்கல் வைப்பின் மலைமுதல் ஆறே?

தெளிவுரை

"*தலைவ! வேங்கைப்புலியின் கொலை வலிமையைத் தொலைத்த உயர்ந்த யானை, மயக்கம் தரும் மதத்தினால் செருக்குற்று, வலிமை கொண்டு வழிப்போவாரைக் கொல்லும். முள்ளம்பன்றி திரியும் அகன்ற அக்காட்டில், பெரிய கையைக் கொண்ட கரடிக் கூட்டம் புற்றாம்சோற்றினைத் தேடும். பொது மன்றத்தில், புற்றுகளுள்ள சுவரினைக் கொண்ட புதர் வளர்ந்து,*

மக்கள் அங்கிருந்து போய்விட்டதால், தெய்வம் நீங்கிய கரிய அடியினைக் கொண்ட 'கந்து' எனப்படும் சிறுதூண் நிற்கும். பெரிய புறாக்கள் அதில் தங்கிய பழைய பழக்கத்தினால், அதைவிட்டு நீங்காமல் தம் பெட்டைகளுடன் கூடி வாழும். தலைவியினைப் பிரிந்து அத்தகைய பெரிய குன்று சூழ்ந்த ஊர்களைக் கொண்ட மலை வழியில் செல்லக் கருதுகின்றாய்!

இவளது சிறிய நெற்றி பசப்புறவும், பெரிய தோள் மெலியவும், அழகிய இடையிலுள்ள வரிகள் வாடவும், பகலும் இரவும் மயங்கி, சிறிதளவே மழையை ஏற்ற மலர்போலக் கண்களில் நீர் ததும்ப, இங்கே இவள் தனித்துத் துன்புறுவள் என்று கருதாமல், பொருள் ஈட்டும் செயலை விரும்பிப் பிரிதல் தகுமோ?"

கருத்து

'தலைவ! தலைவி இங்கே மயங்கிக் கண்ணீர் சொரிந்திருப்ப நீ பிரிந்து செல்லல் தகுமோ?'

விளக்கம்

"தலைவ! இத்தலைவி தனித்துத் துயரால் வருந்துவள் என்று கருதாமல் பொருளீட்டும் செயலை விரும்பி மலைவழியில் பிரிந்து செல்லுதல் பொருந்துவது ஆகுமோ? நன்கு சிந்தித்துப் பார்" என்று சொல்லித் தோழி தலைவன் கருத்தினை மாற்று கிறாள்.

சொற்பொருள்

1. நுதல் - நெற்றி; பசந்து - பசலையுற்று; சாஅய் - மெலிந்து.
2. அகல் - அகன்ற; அவ்வரி - அழகிய வரிகள்.
3. கங்குல் - இரவு; பையென - மெல்லென.
4. பெயல்உறு - மழை பெய்தலை ஏற்ற; கண்பனி - கண்ணீர்; வார - பெருகி வழிய.
5. உழக்கும் - வருந்துவள்; என்னாது - என்று நினையாது; வினை - பொருளீட்டும் செயல்; நயந்து - விரும்பி.
6. நீங்குதல் - பிரிதல்; ஒல்லுமோ? - பொருந்துவது ஆகுமோ?; வேங்கை - புலி.
7. அடுமுரண் - போரிடும் வேறுபாட்டினை; தொலைத்த - ஒழித்த.
8. மையல் - மயக்கம்; கடாஅம் - மதம்; மதம் சிறந்து - வலிமிக்கு.

9. இயங்குநர் - வழிச் சல்வோர்; செகுக்கும் - கொல்லும்; எய் - முள்ளம்பன்றி; படு - பொருந்திய; நனந்தலை - அகன்ற இடம்.
10. எண்கு இனம் - கரடிக்கூட்டம்; குரும்பி - புற்றாஞ்சோறு; தேரும் - ஆராயும்.
11. சுவர - சுவர்களைக் கொண்ட; புதல் இவர் - புதர்கள் படரப் பெற்ற; பொதியில் - பொது மன்றம்.
12. கருந் தாள் - வலிய தாள்; கந்து - தூண்.
13. உடனுறை பழமையின் - நெடுங்காலம் கூடியிருந்த பழமை பற்றி; துறத்தல் செல்லாது - விட்டு நீங்காமல்.
14. இரு புறா - பெரிய புறாக்கள்; பயிரும் - கூடி ஒலிக்கும்.
15. பெருங்கல் - பெரிய கற்கள் (பொருந்திய); வைப்பு - ஊர்கள்; மலை முதல் - மலையடிவாரத்திலுள்ள; ஆறு - வழி.

தோழி கூற்று

அகநானூறு 161 **மதுரைப் புல்லங்கண்ணனார்**

திணை : பாலை

கூற்று

பிரிவுணர்த்திய தோழி, தலைமகளது வேறுபாடு கண்டு, 'முன்னமே உணர்ந்தாள் நம் பெருமாட்டி' என்று தலைமகனைச் செலவு விலக்கியது.

கூற்று விளக்கம்

தலைவன் பொருள்வயிற் பிரிவான் என உணர்ந்த தோழி, அதனைத் தலைவியிடம் கூறி அவளை ஆற்றுவிக்கச் சென்றாள். அச்செய்தியை முன்னரே அறிந்த தலைவியோ வருந்தியதால் அவள் உடல் வேறு பட்டிருக்கக் கண்ட தோழி, தலைவனிடம் சென்று, அவள் நிலையை எடுத்துக் கூறி, அவன் செல்லுதலைத் தடுத்து நிறுத்தியது.

வினைவயின் பிரிதல் யாவது? 'வணர்சுரி—
வடியாப் பித்தை, வன்கண் ஆடவர்
அடிஅமை பகழி ஆர வாங்கி,
வம்பலர்ச் செகுத்த, அஞ்சுவரு கவலை,
படுமுடை நசைஇய வாழ்க்கைச் செஞ்செவி

எருவைச் சேவல் ஈண்டுகிளை பயிரும்
வெருவரு கானம் நீந்தி, பொருள்புரிந்து
இறப்ப எண்ணினர்' என்பது சிறப்பக்
கேட்டனள் கொல்லோ தானே? தோட்டுஆழ்பு
சுரும்புஉண ஒலிவரும் இரும்பல் கூந்தல்
அம்மா மேனி, ஆய்இழை, குறுமகள்
சுணங்குசூழ் ஆகத்து அணங்குஎன உருத்த
நல்வரல் இளமுலை நனைய,
பல்இதழ் உண்கண் பரந்தன பனியே.

தெளிவுரை

“தலைவனே! தலைவி இளநங்கை. அவள் கரிய, அடர்ந்த கூந்தலில் சூடியுள்ள மாலையிலுள்ள பூக்களின் இதழினுள்ளே ஆழ்ந்து சென்று வண்டுகள் தேன் உண்டன. தேமல் படர்ந்த அவள் மார்பில், அவளைத் தெய்வமோ என ஐயுறும்படி வளர்ந்துள்ள மார்பகம் நனையுமாறு, பல இதழ்களைக் கொண்ட நீலமலர் போன்ற அவள் கண்கள் கண்ணீரைச் சிந்தின. (நான் உன் பிரிவை அவளுக்குத் தெரிவிக்கச் சென்றபொழுது இதனைக் கண்டேன்.)

(நீ செல்லவிருக்கும் பாலைநில வழியில் கொடிய வேட்டுவர் வாழ்கின்றனர்.) அவர்கள் வளைந்து, சுருண்ட, கோதப் பெறாத முடியினைக் கொண்டவர். அவர்கள் தம் வில்லினில் அம்பின் குதை நன்கு படியுமாறு வைத்து, தம் காதுவரை நாணை இழுத்து எய்து, வழிப்பயணிகளைக் கொன்று, அவர்தம் பொருளைக் கொள்ளை கொள்பவர். இறந்தோரின் ஊனை உண்ண, சிவந்த செவிகளைக் கொண்ட ஆண்பருந்து தன் இனத்தைக் கூவி அழைக்கும்.

இத்தகைய அச்சம் நிறைந்த காட்டுவழியில் பொருளை விரும்பும் உள்ளத்துடன் செல்ல நீ விரும்பினை என்று, தலைவி முன்னமே நன்கறிந்துள்ளாள். ஆதலால், அவளைப் பிரிந்து நீ விரும்பியவாறு செயலை மேற்கொள்ள எப்படி இயலும்?” என்று தோழி தலைவனைக் கேட்கிறாள்.

கருத்து

'தலைவ! நீ பொருளீட்டச் செல்லவிருப்பதை உணர்ந்த தலைவி, கண்ணீர் சிந்தியிருக்கிறாள். அவளைப் பிரிந்து நீ எவ்வாறு செல்ல இயலும்?'

விளக்கம்

தலைவ! உன் பிரிவை உணர்த்த நான் தலைவியிடம் சென்றேன். இளமுலைகள் நனைய, அவள் கண்களிலிருந்து நீர் வடிந்து கொண்டிருந்தது; அஞ்சத்தகும் கானத்தைக் கடந்து பொருளை ஈட்ட நீ பிரியவிருப்பதை அவள் முன்பே அறிந்தனள் போலும்! ஆதலின், இனி எவ்வாறு உன்னால் பிரிய முடியும்?

சொற்பொருள்

1. வினைவயின் பிரிதல் - பொருளீட்டப் பிரிதல்; யாவது? - எங்ஙனம் இயலும்?; வணர்சுரி - வளைந்து சுருண்ட.
2. வடியா - கோதப்பெறாத (ஒப்பனை செய்யப்படாத); பித்தை - மயிர்.
3. அடிஅமை - குதை அமைந்த; பகழி - அம்பு; ஆர வாங்கி - முழுதும் இழுத்து விடுத்து.
4. வம்பலர் - வழிச்செல்லும் புதியவர்; செகுத்த - கொன்ற; கவலை - கவர்த்த வழி.
5. படுமுடை - முடை நாற்றம் பொருந்திய புலால்; நசைஇய - விரும்பிய; வாழ்க்கை - வாழ்க்கையினைக் கொண்ட; செஞ்செவி - சிவந்த காது.
6. எருவை - பருந்து; ஈண்டு - நெருங்கிய; கிளை - சுற்றம்; பயிரும் - அழைக்கும்.
7. வெருவரு - அஞ்சத்தக்க; நீந்தி - கடந்து; பொருள் புரிந்து - பொருளை விரும்பி.
8. இறப்ப - கடக்க; என்பது - என்பதை; சிறப்ப - நன்கு.
9. தானே - தலைவியாகிய அவளே; தோட்டு ஆழ்பு - இதழினுள் புகுந்து.
10. சுரும்பு - வண்டு; ஒலித்தல் - தழைத்தல்; இரும்பல் - கரிய பல.
11. அம் மா மேனி - அழகிய மாமை நிறம் கொண்ட மேனி; குறுமகள் - இளமகள்.
12. சுணங்குசூழ் - தேமல் பரவிய; ஆகம் - மார்பு; அணங்கு - தெய்வம்; உருத்த - உருக்கொண்ட.

13. நல்வரல் - நல்ல வளர்ச்சியைக் கொண்ட.
14. பல் இதழ் - பல இதழ்களைக் கொண்ட (நீலப் பூப்போன்ற); உண் கண் - மையுண்ட கண்கள்; பனி பரந்தன - நீர் பரந்து ஒழுகின.

தோழி கூற்று

ஐங்குறுநூறு 302 — **ஓதலாந்தையார்**

திணை : பாலை

கூற்று

பொருள்வயிற்பிரியும் தலைமகன் 'பிரிவு உடன்படுத்த வேண்டும்' என்றானாக அவற்குத் தோழி சொல்லியது.

கூற்று விளக்கம்

பொருள் தேடப் பிரிய விரும்பிய தலைவன், தலைவியின் உடன்பாட்டைப் பெற்றுத் தருமாறு தோழியை வேண்டியபொழுது அவள் சொல்லியது.

அரும்பொருள் செய்வினை தப்பற்கும் உரித்தே;
பெருந்தோள் அரிவை தகைத்தற்கும் உரியள்;
செல்லாய் ஆயினோ நன்றே.
மெல்லம் புலம்ப இவள்அழப் பிரிந்தே.

தெளிவுரை

"மென்மையான இயல்பினைக் கொண்ட தலைவனே! அரியதான பொருளைத் தேடுகிற முயற்சியில் வெற்றி கிட்டாமல் போதலும் உண்டு. பெரிய தோள்களைக் கொண்ட தலைவி நீ பிரிந்து செல்வதற்கு உடன்படாது தடுப்பதற்கும் உரியள். இந்நிலையில் இவள் துன்புற்று அழுது புலம்புமாறு நீ பிரியாது இருப்பதே மிக நன்று."

கருத்து

'தலைவ! தலைவி அழுது புலம்புமாறு நீ பிரிவது நன்றன்று.'

குறிப்பு

கிட்டுமோ கிட்டாதோ என ஐயத்திற்கிடனான பொருளை ஈட்டும் முயற்சியில் காலத்தை வீணாக்குவதைவிட, தன் முன்னுள்ள தலைவியைக் கூடி இன்புறல் அறிவுடைமை என்று கூறினாள், தோழி.

சொற்பொருள்

1. அரும்பொருள் - எளிதில் கிட்ட (தேடற்கரிய) பொருள்; செய்வினை - பொருள் தேடும் முயற்சி; தப்பல் - தவறுதல்.
2. அரிவை - என்றது தலைவியை; தகைத்தற்கும் - தடுப்பதற்கும்.
4. மெல்அம்புலம்ப - மென்மையான இயல்பினைக் கொண்ட தலைவனே.

தோழி கூற்று

ஐந்திணை ஐம்பது 34 **மாறன் பொறையனார்**

திணை : பாலை

கூற்று :

தோழி தலைமகனைச் செலவழுங்கியது.

கூற்று விளக்கம்

பொருள்வயிற் பிரியக் கருதிய தலைவனை, அவன் பிரிந்தால் தலைவி வருந்துவாள் என்பதைக் கூறித் தோழி அவன் பயணத்தை நிறுத்தியது.

கோட்(டு)அமை வல்வில் கொலைபிரியா வன்கண்ணர்
ஆட்டிவிட்(டு) ஆறலைக்கும் அத்தம் பலநீந்தி
வேட்டம் முனைவயின் சேறிரோ, ஐய!நீர்
வாள்தடங்கண் மாதரை நீத்து.

தெளிவுரை

ஐய! வாள் போன்ற ஒளிமிக்க அகன்ற கண்களைக் கொண்ட தலைவியைப் பிரிந்து, வளைகின்ற மூங்கிலாலாகிய வலிமையான வில்லினால், கொலைத் தொழிலிலிருந்து நீங்காத கொடிய

மறவர்கள், வழிச் செல்வோரைக் கொள்ளையடித்து விரட்டி ஓட்டும், கொடிய காட்டுவழிகள் பலவற்றைக் கடந்து பொருளீட்டுச் செல்ல விரும்புகின்றீரோ? (சென்றால் தலைவி இறந்துபடுவள்.)

கருத்து

தலைவ! தலைவியை வருந்தச் செய்து, அவளைப் பிரிந்து கொடிய காட்டுவழியே பொருள்தேடச் செல்லப் போகின்றீரோ?

குறிப்பு

தலைவியின் நிலையறியும் தலைவன் பொருளீட்டி வரச் செல்லவிருந்த தன் பயணத்தைத் தவிர்ப்பான்.

சொற்பொருள்

1. கோட்டு - வளைகின்ற; அமை - மூங்கில்; பிரியா - நீங்காத; வன்கண்ணர் - கொடிய மறவர்கள்.
2. ஆட்டிவிட்டு - கொள்ளையடித்து விரட்டி; ஆற - வழி(யிடத்தே); அலைக்கும் - வருந்தும்; அத்தம் - வழி; நீங்கி - கடந்து.
3. வேட்டம் - வேட்டை (யாடுதற்குரிய); முனைவயின் - கொடிய காட்டுவழி; சேறீரோ - செல்லப் போகின்றீரோ?
4. தடங்கண் - அகன்ற கண்; மாதர் - பெண் (தலைவி).

தோழி கூற்று

ஐந்திணை எழுபது 37 **மூவாதியார்**

திணை : பாலை

கூற்று

பிரிவுணர்த்திய தலைமகற்குத் தோழி உடன்படாது தலைமகட்குப் பின்னர் நேரும் இன்னல்களை எடுத்துக் கூறியது.

கூற்று விளக்கம்

தான் பொருள்வயிற்பிரியவிருப்பதைத் தோழியிடம் தலைவன் கூறினான். பிரிவைத் தலைவி தாங்க மாட்டாள் எனக் கூறிய தோழி பிரிவிற்கு ஒப்பாது கூறியது.

பொரிபுற ஓமைப் புகர்படு நீழல்
வரிநுதல் யானை பிடியோ(டு) உறங்கும்
எரிமயங்கு கானம் செலவுரைப்ப நில்லா
அரிமயங்கு உண்கண்ணுள் நீர்.

தெளிவுரை

தலைவ! பொரிந்த மேற்பகுதியைக் கொண்ட ஓமை மரத்தின் நிழலில் நீண்ட நெற்றியினைக் கொண்ட ஆண்யானை தன் பெண்யானையுடன் உறங்குவதும், காட்டுத் தீ எங்கும் பரவி எரிவதுமான காட்டு வழியிலே நீ பொருள் தேடப் பிரிந்து செல்லவிருக்கிறாய். இதைத் தலைவியிடம் கூறினால் செவ்வரி படர்ந்த, மை பூசப்பட்டுள்ள அவள் கண்களிலிருந்து நீர் நில்லாது வழிந்துகொண்டே இருக்கும். (ஆதலால், நீ பிரிய வேண்டா என்று சொல்லிச் செலவைத் தவிர்க்க வேண்டினாள், தோழி.)

கருத்து

'தலைவ! நீ பிரிந்தால் தலைவியின் கண்களில் நீர் பெருக்கெடுத்து நில்லாது வழியும்; ஆதலின், செலவைத் தவிர்க்க.'

சொற்பொருள்

1. பொரி புறம் - பொரிந்த மேற்பகுதி; ஓமை - ஒருவகை மரம்; புகர்படு - அழகு பொருந்திய; நீழல் - நிழல்.
2. வரி நுதல் - நீண்ட நெற்றி.
3. எரி - தீ; மயங்குதல் - கலத்தல், பரவுதல்; செலவு - பொருள் தேடச் செல்லுதல்; உரைப்ப - கூறினால்.
4. அரி - கண் வரி; மயங்கும் - கலங்கும்; உண்கண்ணுள் - மையுண்ட கண்ணிலிருந்து; நீர் நில்லா - நீர் நிற்காது.

தோழி கூற்று

ஐங்குறுநூறு 306 **ஓதலாந்தையார்**

திணை : பாலை

கூற்று

பிரியும் தலைமகற்குத் தோழி தலைமகள் பிரிவாற்றாமை கூறியது.

கூற்று விளக்கம்

பொருளீட்டுதற்குப் பிரியும் தலைவனைச் செலவழுங்குவிக்கும் நோக்கத்துடன் தோழி, தலைவியின் பிரிவாற்றாமையை எடுத்துக் கூறியது.

வெல்போர்க் குரிசில்!நீ வியன்சுரன் இறப்பின்,
பல்காழ் அல்குல் அவ்வரி வாட,
குழலினும் இனைகுவள் பெரிதே,
விழவுஒலி கூந்தல் மாஅ யோளே.

தெளிவுரை

"போர் வெற்றி காணும் தலைவனே! மாமை நிறம் கொண்ட தலைவி விழாக் கால நறுமணத்தோடு கூடியிருக்கும் தழைத்த கூந்தலைக் கொண்டவள். நீ (பொருளீட்டும் பொருட்டு) அகன்ற பாலை நிலத்தைக் கடந்து செல்வாயெனில், முத்துவடங்களால் அழகு பெற்ற மேகலை அணிந்த தலைவி, தன் அல்குலிடத்தே யுள்ள அழகிய வரிகள் மறைந்தொழிய, மெலிவுற்று, குழலினும் இனிய தன் குரலெடுத்துப் புலம்பி மிகவும் வருந்தி அழுவாள். (இவள் அவ்வாறு அழ நீ எங்ஙனம் பிரிய இயலும்?)"

கருத்து

'தலைவ! நீ பிரிந்தால் தலைவி தன் அல்குல்வரி வாட்டமடைய வருந்தி அழுவாள்.'

குறிப்பு

இப்போது மணம் கமழ்ந்தும், தழைத்தும் உள்ள அவள் குழல், உன் பிரிவால் பூ அணியப் பெறாமலும் நெய் பூசப்பெறாமலும் அழகினையும் சிறப்பினையும் இழக்கும்.

சொற்பொருள்

1. வெல்போர்க் குரிசில்- போரில் வெற்றி காணும் தலைவன்; வியன் சுரன் - அகன்ற பாலை நில வழி; இறப்பின் - கடந்து சென்றால்.
2. காழ் - முத்துவடம்; அவ்வரி - அழகிய வரிகள்.
3. இனைகுவள் - அழுது இரங்குவள், வருந்துவள்.
4. விழவு ஒலி கூந்தல் - விழாக் காலத்து நறுமணத்தோடு கூடியிருக்கும் தழைத்த கூந்தல்; மாயோள் - மாமை நிறத்தவள்.

தோழி கூற்று

அகநானூறு 271 **காவிரிப்பூம்பட்டினத்துச் செங்கண்ணனார்**

திணை : பாலை

கூற்று

செலவு உணர்த்திய தோழி, தலைமகளது குறிப்பு அறிந்து, தலைமகனைச் செலவு அழுங்கச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் பொருள் தேடக் கருதினான். அதனைத் தோழியிடம் சொன்னான். தோழி அதனைத் தலைவியிடம் சொன்னாள். அது கேட்ட தலைவியின் துன்பமிகுதியைக் கண்ட தோழி, 'இவள் பிரிவு ஆற்றாமை யால் இறப்பாள்' என்பதை அறிந்து, தலைவனிடம் போய், அவன் பிரிந்து செல்லாதவாறு தடுக்கக் கருதிக் கூறியது.

பொறிவரிப் புறவின் செங்கால் சேவல்
சிறுபுன் பெடையொடு சேண்புலம் போகி,
அரிமணல் இயவில் பரல்தேர்ந்து உண்டு,
வரிமரல் வாடிய வான்நீங்கு நனந்தலைக்,
குறும்பொறை மருங்கின் கோட்சுரம் நீந்தி,
நெடுஞ்சேண் வந்த நீர்நசை வம்பலர்
செல்உயிர் நிறுத்த சுவைக்காய் நெல்லிப்
பல்காய் அம்சினை அகவும் அத்தம்
சென்று,நீர் அவணிர் ஆகி, நின்றுதரும்
நிலைஅரும் பொருட்பிணி நினைந்தனிர் எனினே,
வல்வ தாகநும் செய்வினை! இவட்கே,

களிமலி கள்ளில் நல்தேர் அவியன்
ஆடுஇயல் இளமழை சூடித் தோன்றும்
பழம்தூங்கு விடரகத்து எழுந்த காம்பின்
கண்இடை புரையும் நெடுமென் பணைத்தோள்,
திருந்துகோல் ஆய்தொடி ஞெகிழின்,
மருந்தும் உண்டோ, பிரிந்துறை நாட்டே?

தெளிவுரை

"தலைவ! நீ செல்லவிருக்கும் காட்டு வழியில் புள்ளிகளையும் சிவந்த கால்களையும் கொண்ட ஆண் புறா, தன் பெடையுடன் நெடுந்தொலைவு பறந்து சென்று, மணற்பாங்கான இடத்தில், சிறிய, மெல்லிய கூழாங்கற்களை ஆராய்ந்து பொறுக்கி உண்ணும்; வரிகளைக் கொண்ட மரற்செடியும் வாடியிருக்கின்ற, மழையற்ற அகன்ற இடம் கொண்ட குன்றுகளை ஒட்டியுள்ள வழியில் நெடுந்தூரம் நீர் வேட்கையால் நடந்து வந்த வழிப்போக்கர்களின் நீங்கும் உயிரை நெல்லி மரத்தில் உள்ள இனிய காய்கள் தடுத்து நிறுத்தும். (நெல்லிக்காயை உண்டு நீர் வேட்கையைத் தீர்த்துக்கொள்வர்.)

அத்தகைய நெல்லி மரத்தின் கிளையில், அந்தப் புறாக்கள் அமர்ந்து கூவும். நிலையில்லாத தன்மையினைக் கொண்ட செல்வத்தை ஈட்டுதற்காக, நீ இந்த வழியில் செல்லவிருக்கின்றாய்.

உன் செயல் வலிமை பெறட்டும்! களிப்பு மிகுந்த 'கள்ளில்' என்னும் ஊரினையும் நல்ல தேரினையும் கொண்டவன், 'அவியன்' என்பவன். அவனுடைய மலைப்பிளவுகளில் இள மேகங்கள் அசைந்துகொண்டிருக்கும்; பழங்கள் பழுத்துத் தொங்கிக் கொண்டிருக்கும். அங்கு வளர்ந்திருக்கும் மூங்கிலின் இரு கணுக்களின் இடைப்பகுதியைப் போல்வன, தலைவியின் நீண்ட மெல்லிய திரண்ட தோள்கள். அத்தோள்களிலுள்ள திருந்திய, திரண்ட, வேலைப்பாடமைந்த வளையல்கள் நெகிழ்ந்து விழுமானால், அவற்றை வீழாது மீண்டும் தோளில் செறிக்கும் மருந்து நீ பிரிந்து தங்கியிருக்கும் இடத்தில் உன்னிடம் இருக்குமோ? இருக்குமெனில் செல்க" என்கிறாள், தோழி.

கருத்து

நீ பிரிந்தால் தலைவியின் உடல் மெலியும். அதனால் கழன்று விழும் வளையல்களை நீ சென்ற இடத்திலிருந்தே செறிக்கும் மருந்து உன்னிடம் இருக்குமோ? இருக்குமெனில் செல்லலாம்.

விளக்கம்

"தலைவ! நீ நீரற்ற காட்டுவழிகளைக் கடந்து சென்று பொருளீட்டக் கருதியுள்ளாய்! உன் செயல் சிறப்புற நிறைவேறட்டும். ஆனால் நீ பிரிந்துறையும்போது தலைவியின் தோள் மெலிந்து அழகிய தொடி நெகிழ்ந்து விழுமானால், நீ தங்கியிருக்கும் நாட்டிலிருந்தே அதனைச் செறித்தற்கு ஏதேனும் மருந்து உன்னிடம் இருக்குமா? இருக்குமெனில் நீ செல்க" என்று தலைவனிடம் தோழி கூறினாள்.

குறிப்பு

மருந்தும் உண்டோ என்னும் குறிப்பால் அவள் பிரிவுத்துயரால் மெலிந்து இறந்துபடுவள் என்று கூறியவாறு ஆயிற்று. நீ இவளைப் பிரிந்து சென்று தங்கும் நாட்டில் இவளைக் காக்கத் தக்கதொரு மருந்து இராதாதலால் நீ செல்லுதலைத் தவிர்க எனத் தோழி தலைவனிடம் கூறி அவன் பயணத்தை நிறுத்துகிறாள்.

சொற்பொருள்

1. பொறிவரி - புள்ளிகளும் கோடுகளும்; புறவு - புறா; செங்கால் - சிவந்த கால்.
2. சேண்புலம் - நெடுந்தொலைவு; போகி - சென்று.
3. அரிமணல் - விளங்கும் மணல்; இயவு - வழி; பரல் - பரல் கற்கள்; தேர்ந்து - ஆராய்ந்து.
4. வரிமரல் - வரிகளைக் கொண்ட மரல் செடி; வான் - மேகம்; நனந்தலை - அகன்ற இடம்.
5. குறும்பொறை - குன்று; மருங்கு - பக்கம்; கோட் சுரம் - துன்பம் மிகுந்த வழி; நீந்தி - நடந்து கடந்து.
6. நீர்நசை - நீர் வேட்கை; வம்பலர் - புதிய மக்கள் (வழிப்போக்கர்).
7. செல் உயிர் - நீங்குகின்ற உயிர்; நிறுத்த - போகாது நிறுத்த.
8. அகவும் - கூவும்; அத்தம் - வழி.

9. அவணிர் ஆகி - அவ்விடத்தே சென்று; நின்று - தங்கி; தரும் - ஈட்டி வரும்.
10. நிலைஅரும் பொருள் - நிலைத்து நில்லாத பொருள்; பிணி - பற்று.
11. வல்வதாக - வலிமையுறுவதாகுக; செய்வினை - பொருளீட்டும் செயல்.
12. களிமலி - களிப்பு மிகுந்த; கள்ளில் - ஓர் ஊர்; அவியன் - ஒரு தலைவன்.
13. ஆடுஇயல் - அசைதல் பொருந்திய; இளமழை - இளமுகில்.
14. தூங்குதல் - தொங்குதல்; விடர் - மலைப் பிளப்பு; காம்பு - மூங்கில்.
15. கண்இடை - இரு கணுக்களின் இடைப் பகுதி; பணை - பெரிய.
16. திருந்து - திருந்திய; ஆய்தொடி - அழகிய வளையல்.
17. பிரிந்து உறை - பிரிந்து தங்கியிருக்கும்.

தோழி கூற்று

அகநானூறு 81 **ஆலம்பேரி சாத்தனார்**

திணை : பாலை

கூற்று

பிரிவுணர்த்திய தலைமகற்குத் தோழி, தலைமகள் குறிப்பறிந்து வந்து சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவியைப் பிரிந்து சென்று பொருளீட்டி வரவிருப்பதாகத் தலைவன் தோழியிடம் சொன்னான். அதனைத் தோழி தலைவியிடம் சொன்னாள். அதனால் தலைவி வருந்தி அழுதாள். அதுகண்ட தோழி, தலைவனிடம் சென்று, நீ பிரிந்து சென்றால் தலைவி ஆற்றாமை வயப்பட்டு இறந்துபடக் கூடும் என்று சொல்லியது.

நாள்உலா எழுந்த கோள்வல் உளியம்
ஓங்குசினை இருப்பைத் தீம்பழம் முணையின்,
புல்அளைப் புற்றின் பல்கிளைச் சிதலை
ஒருங்குமுயன்று எடுத்த நனைவாய் நெடுங்கோடு,
இரும்புஊது குருகின், இடந்து,இரை தேரும்
மண்பக வறந்த ஆங்கண், கண்பொரக்

கதிர்தெற, கவிழ்ந்த உலறுதலை நோன்சினை
நெறிஅயல் மராஅம் ஏறிப் புலம்புகொள
எறிபருந்து உயவும் என்றூழ் நீள்இடை
வெம்முனை அருஞ்சுரம் நீந்தி– சிறந்த
செம்மல் உள்ளம் துரத்தலின், கறுத்தோர்
ஒளிறுவேல் அழுவம் களிறுபடக் கடக்கும்
மாவண் கடலன் விளங்கில் அன்ன,எம்
மைஎழில் உண்கண் கலுழ–
ஐய சேறிரோ! அகன்றுசெய் பொருட்கே.

தெளிவுரை

"ஐயனே! சிறந்த தலைமை வாய்ந்த உம் உள்ளம் எம்மைப் பிரிந்து பொருள் ஈட்டச் செல்லுமாறு உம்மைத் தூண்டுகிறது (என்பதை அறிகிறேன்).

மிக்க வள்ளல் தன்மை கொண்ட 'கடலன்' என்பவன் வெகுண்டு போருக்கு எழுந்த பகைவரது, ஒளிர்கின்ற வேல்களையுடைய போர்க்களத்தில் களிறுகள் மடியுமாறு வீழ்த்தும் ஆற்றல் கொண்டவன். அவனது 'விளங்கில்' என்னும் ஊரினைப் போன்ற, அழகிய மையுண்ட கண்ணினளான எம் தலைவி உன் பயணத்தை அறியின் அழுது புலம்புவாள்.

கரடி ஒன்று தனக்குரிய அன்றைய இரையினைத் தேடப் புறப் பட்டது. உயர்ந்த கிளைகளைக் கொண்ட இருப்பை மரத்தின் இனிய பழத்தினை உண்டது. அதில் சலிப்பு ஏற்பட்டதென்றால், கறையான்கள் தம் நனைந்த வாயால் ஒருங்கு கூடிப் பல கிளைகளாய்க் கட்டிய, புல்லிய வளைகளைக் கொண்ட புற்றின் நெடிய உச்சியினை, இருப்பு உலையிலே ஊதும் துருத்தியைப் போன்று ஊதிப் பெயர்த்து, ஆங்குள்ள புற்றாஞ்சோறாகிய இரையினை எடுத்து உண்ணும். நிலம் பிளவுபட எரிக்கும் கோடையால் வறட்சியுற்ற பாலை நிலம் அது.

அவ்விடத்திலே, கண்கள் கலங்குமாறு கதிரவன் எரிக்கும். ஆதலால், வழியினுக்கு அருகேயுள்ள வெண்கடம்பு மரங்களில் கவிழ்ந்திருக்கும் காய்ந்த உச்சியினைக் கொண்ட உயர்ந்த கிளைகளிலே ஏறித் தன் இரையினைப் பாய்ந்து எடுக்கும்

பருந்தும், ஏதும் கிட்டாது தனித்திருந்து வருந்தும். மிகுதியான வெப்பம் நெடுகப் பரவியிருக்கும் அத்தகைய வெவ்விய முனைகளைக் கொண்ட அரிய காட்டினை நீயிர் கடந்து செல்லுவீரா?" (வேண்டா என்பது கருத்து).

கருத்து

'தலைவ! நீ பிரிந்தால் தலைவி இறந்துபடவும் கூடும். இதனை அறிந்தும் கடுமையான காட்டினைக் கடந்து செல்ல எண்ணுகிறாயா?'

விளக்கம்

"தலைவ! காலையில் இரை தேடிச் சென்ற கரடி, இருப்பைப் பழங்களைத் தின்பதில் சலிப்பு ஏற்பட்டதால் கறையான்கள் அரிது முயன்று செய்த புற்றின் உச்சியைப் பெருமூச்சு விட்டுப் பெயர்த்துப் புற்றாஞ்சோற்றை உண்ணும். நிலம் பிளவுபட வறண்டுவிட்ட அவ்விடங்களில் வழிக்கு அயலேயுள்ள கடப்ப மரத்தின் வலிய கிளைகளின் காய்ந்த உச்சியில் பருந்து தனிமைத் துயர் கொண்டு வருந்தியிருக்கும். பகைப்புலம் போன்ற அரிய சுரத்தைக் கடந்து, போராற்றல் மிக்க 'கடலன்' என்பானுக்குரிய 'விளங்கில்' என்னும் நகரத்தையொத்த எம் தலைவியின் அழகிய மை உண்ட கண்கள் நீர் சொரிய, பொருள் ஈட்டி வரப் புறப்படுகின்றீரோ?" என்று தோழி தலைவனிடம் கூறி அவன் செல்வதைத் தடுக்கிறாள்.

சொற்பொருள்

1. உலா - உலாவி; கோள்வல் - இரையைக் கொள்ளுதலில் வல்ல; உளியம் - கரடி.
2. சினை - கிளை; தீம்பழம் - இனிய பழம்; முனையின் - வெறுப்பின்.
3. புல் அளை - புல்லிய (குறுகிய) வளை; பல்கிளை - பல கிளைகளாகிய; சிதலை - கறையான்.
4. நனைவாய் - நனைந்த வாய்; நெடுங்கோடு - நெடிய உச்சி.
5. இரும்பு ஊது குருகு - இரும்பு உலையில் ஊதும் துருத்தி; இடந்து - பெயர்த்து.
6. மண்பக - மண் பிளவுபட; வறந்த - வறட்சியுற்ற; கண்பொர - கண்கள் கலங்குமாறு.
7. கதிர் - சூரியன்; தெற - காய்தலின்; உலறுதலை - காய்ந்த உச்சி; நோன் - வலிய.

8. மராஅம் - கடப்ப மரம்; புலம்பு - தனிமை.
9. எறி பருந்து - இரையைப் பாய்ந்தெடுக்கும் பருந்து; உயவும் - வருந்தும்; என்றூழ் - வெப்ப மிக்க; நீள் இடை - நீண்ட இடம்.
10. வெம்முனை - வெவ்விய முனை; நீந்தி - கடந்து.
11. செம்மல் - தலைமை வாய்ந்த; துரத்தலின் - தூண்டுதலின்; கறுத்தோர் - வெகுண்டெழுந்த பகைவர்.
12. அழுவம் - போர்க்களம்; பட - மடிய; கடக்கும் - வெல்லும்.
13. மா வண் - பெரிய வள்ளல் தன்மை; கடலன் - தலைவன் ஒருவன்; விளங்கில் - ஓர் ஊர்.
14. கலுழ - நீர் சொரிய.
15. சேறிரோ? - செல்லுவீரோ?; அகன்று - பிரிந்து சென்று; செய் பொருள் - தேடும் பொருள்.

தோழி கூற்று

ஐங்குறுநூறு 368 **ஓதலாந்தையார்**

திணை : பாலை

கூற்று

'வேனிற்காலத்து நும்மொடு விளையாட்டு நுகர வருவல்' என்று பருவம் குறித்துப் பிரியலுற்ற தலைமகற்குத் தோழி கூறியது.

கூற்று விளக்கம்

தலைவன், 'உங்களோடு வேனிற்காலத்தில் விளையாட வருவேன்' என்று தான் பிரிந்து செல்வதைத் தெரிவித்தான். அப்போது அவனுக்குத் தோழி கூறியது.

எரிப்பூ இலவத்து ஊழ்கழி பல்மலர்
பொரிப்பூம் புன்கின் புகர்நிழல் வரிக்கும்
தண்பத வேனில் இன்ப நுகர்ச்சி
எம்மொடு கொண்மோ, பெரும!நின்
அம்மெல் ஓதி அழிவிலள் எனினே!

தெளிவுரை

பெருமானே! இளவேனிலில் நெருப்புப் போன்ற நிறத்தினைக் கொண்ட இலவ மலர்கள் உதிர்ந்து, பொரி போன்ற பூக்களைக்

கொண்ட புன்க மரத்தின் புள்ளி போன்ற நிழலிலே கிடந்து அழகு செய்யும். அத்தகைய குளிர்ச்சி பொருந்திய இதமான வேனிற் காலத்தில் எம்மோடு விளையாடி இன்பம் நுகர வந்து விடுவதாய்க் கூறுகிறாய். நீ திரும்பும்வரை தலைவி உயிரோடிருப் பாள் என்றால் நீ சொன்னவாறு விளையாடலாம்.

கருத்து

'தலைவ! நீ திரும்பும்வரை அவள் பொறுத்திருக்க மாட்டாள்; உயிர் விடுவாள்.'

விளக்கம்

பிரியக் கருதும் தலைவன், 'வேனில் பருவத்தின் இன்பம் நுகர வந்து சேர்ந்துவிடுவேன்' என்கிறான். தோழியோ அவனிடம், 'தலைவி உன் பிரிவாற்றாது மேனிநலம் அழியப் பெற்று உயிரை விடுவாள் என்பது உறுதி. ஆதலால், நீ திரும்ப வந்து பெறக் கருதும் இன்ப நுகர்ச்சிக்கு வாய்ப்பிராது' என்று கூறுகிறாள். இதனைக் கேட்கும் தலைவன் பிரிதலைக் கைவிடுவான்.

சொற்பொருள்

1. எரிப்பூ இலவம் - நெருப்புப் போன்ற நிறம் கொண்ட இலவ மலர்; ஊழ்கழி - காம்பிலிருந்து கழன்று விழுந்த.
2. பொரிப்பூம் புன்கு - பொரி போன்ற பூக்களைக் கொண்ட புன்க மரம்; புகர் நிழல் - புள்ளி போன்ற நிழல்; வரிக்கும் - கோலம் செய்யும், பரந்து கிடக்கும்.
3. தண்பத வேனில் - குளிர்ந்த இதமான வேனிற்காலம்.
4. கொண்ம் - கொள்வாய்.
5. அம் மெல் ஓதி - அழகிய மென்மையான கூந்தல்; அழிவிலள் - அழியாது இருந்தால் (நுகர்ச்சி கொள்ளலாம்).

தோழி கூற்று

ஐங்குறுநூறு 424 **பேயனார்**

திணை : முல்லை

கூற்று

கார்ப்பருவத்தே பிரியக் கருதிய தலைமகற்குத் தோழி தலைமகளது ஆற்றாமை கூறிச் செலவழுங்குவித்தது.

கூற்று விளக்கம்

தலைவன் கார் காலத்தே பிரியக் கருதிய போது, பிரிவைத் தலைவி பொறுத்துக் கொள்ள மாட்டாள் என்பதைக் கூறித் தோழி அவனின் பயணத்தைத் தடுத்தது.

புறவணி நாடன் காதல் மடமகள்
ஒள்நுதல் பசப்ப நீசெலின் தெள்நீர்ப்
போதவிழ் தாமரை அன்னநின்
காதலம் புதல்வன் அழும்இனி முலைக்கே.

தெளிவுரை

“*பெரும! அழகான முல்லைநிலத் தலைவன் அன்பு மகளாகிய உன் காதலியின் ஒளிபொருந்திய நெற்றி நீ பிரிந்து சென்றால் பசலையடையும். மேலும், தெளிந்த நீரில் மலர்ந்த தாமரை போன்ற உன் அன்பு மகனும் தாய்ப்பாலுக்காக அழ வேண்டிய நிலை ஏற்படும்.*”

கருத்து

‘தலைவ! நீ பிரிந்தால் உன் காதலி உயிரோடிராள்; உன் அன்பு மகன் தாய்ப்பாலுக்காக அழுவான்.’

குறிப்பு

‘பாலுக்குக் குழந்தை அழும்’ என்பது, தலைவன் பிரிந்தால் தலைவி இறந்து போவாள் என்பதைக் குறிக்கிறது.

சொற்பொருள்

1. புறவணி - அழகிய முல்லை நிலம்; மடமகள் - இளமகள்.
2. நீ செலின் - நீ பிரிந்து சென்றால்; தெள்நீர் - தெளிந்த நீர்.

3. போதுஅவிழ் - மலர்கின்ற.
4. காதல் அம் புதல்வன் - அன்புமிக்க அழகிய மகன்; முலைக்கு - தாய்ப்பாலுக்கு.

தோழி கூற்று

ஐங்குறுநூறு 309 **ஓதலாந்தையார்**

திணை : பாலை

கூற்று

'பொருள்வயிற் பிரிவல்' என்ற தலைமகற்குத் தோழி சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் தான் பொருள் தேடுவதற்குத் தலைவியைப் பிரிய விரும்புவதாய்க் கூறினான். அவன் செலவினை விலக்குதற்பொருட்டுத் தோழி சொல்லியது.

வேனில் திங்கள் வெஞ்சுரம் இறந்து
செலவுஅயர்ந் தனையால் நீயே; நன்றும்
நின்நயந்து உறைவி கடுஞ்சூல் சிறுவன்
முறுவல் காண்டலின் இனிதோ
5. இறுவரை நாட,நீ இறந்துசெய் பொருளே!

தெளிவுரை

"பெரிய மலைநாடனே! நீ வேனிற்காலத்தில் வெப்பம் மிக்க பாலை வழியைக் கடந்து சென்று பொருளீட்டிவர விரும்புகின்றாய். அவ்வாறு நீ பிரிந்து சென்று தேடும் பொருள் உன்னையே மிகவும் விரும்பி வாழும் உன் காதலியின் முதற்சூலில் பிறந்த மகனது முறுவலைக் கண்டு மகிழ்தலினும் இனிதோ?"

கருத்து

'மலைநாடனே! நீ தேடிவரும் பொருள் உன் மனைவியின் முதற்சூலில் பிறந்த குழந்தையின் முகம் காண்பதினும் இனிதோ?'

குறிப்பு

1. நீ பொருளையே விரும்பிப் பிரிய எண்ணினாய்; ஆனால், உன்னையே விரும்பி வேறு எதனையும் கருதாது ஒருத்தி இருப்பதனை மறந்தாய் என்று தோழி இடித்துரைத்தாள்.

2. முதற்சூல் உயிர்க்கு ஏதம் விளைக்கும் கடுமை மிக்கது; இங்ஙனம் அரிதிற் பெற்ற மகனின் முறுவலைக் காண்பதிலும் நீ ஈட்டி வரக் கருதும் செல்வம் இனியதாமோ?

3. இளவேனிற்காலம் பொழில் விளையாடியும், புதுப் பூக்கொய்தும், அருவியாடியும் காதலர்கள் இன்பம் நுகர்தற்கு ஏற்ற காலம் ஆதலின் அக்காலத்தில் பிரிதல் கூடாது.

சொற்பொருள்

1. வேனில் திங்கள் - வேனிற்காலம்; வெஞ்சுரம் - வெப்பம் மிகுந்த பாலைவழி; இறந்து - கடந்து.
2. செலவு அயர்ந்தனை - பொருள் ஈட்டுவதற்குச் செல்ல விரும்பினாய்; நன்றும் - மிகவும்.
3. நின் நயந்து உறைவி - உன்னையே விரும்பி வாழுபவள் (தலைவி); கடும் சூல் சிறுவன் - முதல் சூலில் பிறந்த மகன்.
4. முறுவல் - புன்சிரிப்பு; காண்டலின் - காண்பதைவிட.
5. இறுவரை - பெரிய மலை; செய்பொருள் - ஈட்டும் பொருள்.

தோழி கூற்று

அகநானூறு 387 — **மதுரை மருதனிளநாகனார்**

திணை : பாலை

கூற்று

தலைமகளது குறிப்பு அறிந்து, தோழி தலைமகனைச் செலவு அழுங்கச் சொல்லியது.

கூற்று விளக்கம்

பொருளீட்டும்பொருட்டுத் தலைவன் பிரிந்து செல்லக் கருதினான். அவன் பிரிவினைத் தான் ஆற்றியிருக்க இயலாதெனத் தலைவி தோழியிடம் குறிப்பால் வெளிப்படுத்த அதனை உணர்ந்த தோழி தலைவனிடம் பிரிந்து செல்லாதிருக்குமாறு கூறியது.

திருந்துஇழை நெகிழ்ந்து, பெருந்தோள் சாஅய்,
அரிமதர் மழைக்கண் கலுழச் செல்வீர்!
வருவீர் ஆகுதல் உரைமின் மன்னோ–
உவர்உணப் பறைந்த ஊன்தலைச் சிறாஅரொடு
அவ்வரிக் கொன்ற கறைசேர் வள்உகிர்ப்
பசைவிரல் புலைத்தி நெடிதுபிசைந்து ஊட்டிய
பூந்துகில் இமைக்கும் பொலன்காழ் அல்குல்,
அவ்வரி சிதைய நோக்கி, வெவ்வினைப்
பயில்அரில் கிடந்த வேட்டுவிளி வெரீஇ,
வரிப்புற இதலின் மணிக்கண் பேடை
நுண்பொறி அணிந்த எருத்தின், கூர்முள்
செங்கால், சேவல் பயிரும் ஆங்கண்,
வில்ஈண்டு அருஞ்சமம் ததைய நூறி,
நல்இசை நிறுத்த நாணுடை மறவர்
நிரைநிலை நடுகல் பொருந்தி, இமையாது,
இரைநசைஇக் கிடந்த முதுவாய்ப் பல்லி
சிறிய தெற்றுவது ஆயின், 'பெரிய
ஓடை யானை உயர்ந்தோர் ஆயினும்,
நின்றாங்குப் பெயரும் கானம்
சென்றோர் மன்'என இருக்கிற் போர்க்கே.

தெளிவுரை

"தலைவியின் திருத்தமான அணிகள் நெகிழுமாறும், பெரிய தோள்கள் மெலிவுறுமாறும், செவ்வரி பரந்து மதர்த்த கண்களில் நீர் ஒழுகுமாறும்அவளைப் பிரிந்து செல்ல முயலும் தலைவனே!

கொடுந்தொழில் புரியும் வேட்டுவர் துன்பம் மிகுந்த காடுகளில் தங்கி, எழுப்பும் கூப்பாட்டினைக் கேட்டு அஞ்சி, புறத்தே வரிகளைக் கொண்ட காடையின் நீலமணி போன்ற கண்களைக் கொண்ட பேடை, நுண்ணிய புள்ளிகளைக் கொண்ட கழுத்தினையும், கூரிய முள் போன்ற விரலுடன் சிவந்த காலையும் கொண்ட தன் சேவலை அழைக்கும் தன்மை வாய்ந்தது, நீ செல்லவிருக்கும் காடு.

அக்காட்டில், வில் வீரர் நிறைந்த அரிய போர்க்களத்தில் பகைவர் அழியுமாறு கொன்று, பெரும் புகழை நிலைநிறுத்தி,

இறந்த மானம் மிக்க மறவர்களுக்கு எழுப்பப்பட்ட நடுகற்கள் வரிசையாய் நிற்கும். அந்நடுகற்களில் ஒட்டியிருந்து, கண் இமையாது இரையினைப் பெற விரும்பி அசையாது கிடந்த முதுமை வாய்ந்த பல்லி, சிறிது அளவே ஒலிக்குமாயினும் அதனைக் கேட்டுப் பெரிய நெற்றிப்பட்டம் அணியப் பெற்ற யானைமேல் செல்லும் அரசரேயாயினும், அது நிமித்தமோ எனக் கருதி அங்கிருந்து மேற்செல்ல விரும்பாமல் திரும்பிச் செல்வர். அத்தகைய கொடிய தன்மை வாய்ந்தது காடு.

உவர்மண்ணைச் சுமத்தலால் மயிர் முழுவதும் உதிர்ந்தமையால் ஊன் பொருந்திய தலையைக் கொண்ட சிறுவர்களுடன் கூர்மையான நகத்தினையும் கஞ்சிப்பசை கொண்ட விரல்களைக் கொண்ட வண்ணாத்தி நீண்ட நேரம் பிசைந்து கஞ்சி ஊட்டிய அழகிய ஆடை விளங்குகின்ற பொன்வடம் மிளிரும் அல்குல் பரப்பில் அழகிய சுணங்குகள் அழியவும் கண்டு ஆற்றியிருக்கும் வல்லவர் இருப்பாராயின் அத்தகையவரிடம் தலைவ! 'நீவிர் கொடிய காட்டிலே சென்று பொருளீட்டி விரைந்து வருதலைக் கூறுக!'

கருத்து

'தலைவ! பிரிவை ஆற்றியிருக்க, வல்லாரிடம் உன் பிரிவைப் பற்றிக் கூறு.'

விளக்கம்

"தலைவியின் இழை நெகிழுமாறும், தோள் வாடுமாறும், கண் கலுழுமாறும் பிரிந்து செல்ல விரும்பும் தலைவ! அரசரேயாயினும் சகுனம் சரியில்லை எனில் மேற்செல்லத் துணியாது திரும்பிச் செல்ல விரும்பும் காட்டுவழியில் தலைவர் சென்றுள்ளார் என்பதை கூறின், அதனை ஆற்றியிருக்க வல்லாரிடம், 'நான் விரைவில் வந்து விடுவேன்' என்பதைச் சொல். (தலைவி அவ்வாறு ஆற்றியிருக்கும் வல்லமையுடையவள் அல்லள்; ஆதலின், விரும்பிய அவளிடம் இதனைச் சொல்லற்க)" என்று, பிரிய விரும்பிய தலைவனிடம் தோழி கூறினாள்.

தலைவி உன் பிரிவை ஆற்றியிருக்கும் வலிமை இல்லாதவள்; ஆதலின், நீ செல்ல வேண்டா.

"செல்லாமை உண்டேல் எனக்குரை, மற்றுநின், வல்வரவு வாழ்வார்க்கு உரை" என்னும் திருக்குறளை இங்கே நினைவில் கொள்க.

குறிப்பு

அரசரேயாயினும் பல்லியின் சகுனம் நல்ல சகுனம் அன்றாயின் மேலும் சென்று போரிட விரும்பாது திரும்பிவிடுவர்.

சொற்பொருள்

1. திருந்து இழை - திருந்திய அணிகலன்; சாஅய் - மெலிய.
2. அரிமதர் - அரி பரந்து மதர்த்த; கலுழ - நீர் ஒழுக; செல்வீர் - செல்ல விரும்பும் தலைவ!
3. வருவீர் ஆகுதல் - விரைவில் வந்துவிடுவேன் என்னும் செய்தியை; உரைமின் - சொல்லுக.
4. உவர் - உவர்மண்; உண - அரித்தலால்; பறைந்த - மயிர் முழுவதும் உதிர்ந்துவிட்ட.
5. அவ் வரிக் கொன்ற - ஆடையின் கறைகளை அழித்த; கறை - அழுக்கு; வள்உகிர் - கூரிய நகம்.
6. பசை விரல் புலைத்தி - கஞ்சிப்பசை கொண்ட விரலைக் கொண்ட வண்ணாத்தி; ஊட்டிய - கஞ்சி ஊட்டிய.
7. பூந்துகில் - அழகிய ஆடை; இமைக்கும் - ஒளிரும்; பொலன்காழ் - பொன் வடம்.
8. அவ்வரி - அழகிய தேமல்; வெவ்வினை - கொடுந்தொழில்.
9. பயில் அரில் - பிணக்கம் பொருந்திய (காடுகளில்); கிடந்த - தங்கிக் கிடக்கின்ற; வேட்டு - வேட்டுவர்; விளி - கூப்பீடு; வெரீஇ - அஞ்சி.
10. வரிப்புறம் - புறத்தே வரிகளைக் கொண்ட; இதல் - காடை; மணிக்கண் - நீலமணி போன்ற கண்; பேடை - பெண் காடை.
11. நுண்பொறி - நுண்ணிய புள்ளிகள்; எருத்து - கழுத்து; கூர்முள் - கூரிய முள் போன்ற விரலையுடைய.
12. செங்கால் - சிவந்த கால்; பயிரும் - கூப்பிடும், அழைக்கும்; ஆங்கண் - அக்காட்டுவழியில்.
13. வில்ஈண்டு - விற்படை நெருங்கிய; அருஞ்சமம் - அரிய போர்; ததைய - அழிய; நூறி - கொன்று.

14. நல் இசை - நல்ல புகழ்; நிறுத்த - நிலைநாட்டிய; நாணுடை மறவர் - மானம் மிக்க வீரர்கள்.
15. நிரைநிலை -வரிசையாய் நிற்கும்; இமையாது - கண் இமையாது.
16. இரைநசைஇ - இரையை விரும்பி; முதுவாய்ப் பல்லி - முதுமை வாய்ந்த பல்லி.
17. சிறிய - சிறிதளவே; தெற்றுவது - ஒலித்துத் தடை செய்யுமாயின்.
18. ஓடை - (யானையின்) நெற்றிப்பட்டம்; உயர்ந்தோர் ஆயினும் - அரசரே ஆயினும்.
19. சென்றோர் மன் - சென்றோர் மீளும் கானத்தில்; இருக்கிற் போர்க்கு - (நம் தலைவர் சென்றார் என்று கூறி) ஆற்றியிருக்க வல்லார்க்கு.

தோழி கூற்று

நற்றிணை 46 **ஆசிரியர் பெயரை அறிய இயலவில்லை**

திணை : பாலை

கூற்று

பிரிவு உணர்த்திய தலைமகற்குத் தோழி சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன், தான் பொருள் தேட செல்லவிருப்பதைத் தலைவியிடம் சொன்னால் அவள் மிகவும் வருத்தமுறுவாள் எனக் கருதி அதைத் தோழியிடம் உரைத்தான். தோழி அவனிடம் இளமையும் செல்வமும் நிலையாதன எனக் கூறித் தலைவன் செல்லவிருப்பதைத் தடுத்தது.

வைகல் தோறும் இன்பமும் இளமையும்
எய்கணை நிழலின் கழியும்இவ் வுலகத்துக்
காணீர் என்றலோ அரிதே; அதுநனி
பேணீர் ஆகுவீர் ஐய!என் தோழி
பூண்அணி ஆகம் புலம்பப் பாணர்
அயிர்ப்புக்கொண் டன்ன கொன்றைஅம் தீங்கனி
பறைஅறை கடிப்பின் அறைஅறையாத் துயல்வர
வெவ்வளி வழங்கும் வேய்பயில் அழுவத்து
எவ்வம் மிகூஉம் அருஞ்சுரம் இறந்து

நன்வாய் அல்லா வாழ்க்கை
மன்னாப் பொருட்பிணிப் பிரிதும்யாம் எனவே.

தெளிவுரை

"ஐய! கொன்றையின் அழகிய இனிய கனிகள், பாணர்கள், தம் பறையினை அடித்து முழக்குதற்குப் பயன்படுத்தும் குறுந் தடிகளோ என ஐயுறுமாறு பாறைமேல் சென்று சென்று மோதும்வண்ணம் அதன் தாழ்ந்த கிளைகளில் அசைந்தாடிக் கொண்டிருக்கும். அங்ஙனம் வெம்மையான காற்று வீசப் பெறுவதும், நிறைந்த மூங்கில்களைக் கொண்டதும், பெரிய இடத்தினைக் கொண்டதுமான கடத்தற்கு அரிதான காட்டு வழியைக் கடந்து சென்று பொருளீட்ட நீ விரும்பினாய்! இன்பத்தை விரும்பாது, ஈட்டப்படும் அப்பொருளும் நிலைத் திருப்பது அன்று. அப்பொருளை விரும்பி, சிறந்த பூணாரம் அணிந்த தலைவியின் மார்பு அப்பூண் கழிந்து தனிமையுற்று வாடும்படியாக, 'நான் பிரிந்து செல்கின்றேன்' என்று கூறுகிறாய். நாள்தோறும் இல்லிலிருந்து செய்யும் நல்லறத்தால் விளையும் இன்பமும் அதனை நுகர்தற்குரிய இளமைத்தன்மை யும் வில்லிலிருந்து புறப்பட்டுச் செல்லும் அம்பின் நிழல்போல, விரைவில் சென்று முடியும் இயல்பு கொண்டவை. 'இவற்றை நீ அறியாய்' என்று சொல்வது பொருந்துவது அன்று. ஆதலின் இன்பமும் இளமையும் கழிவதற்குமுன் அவற்றைத் துய்ப்பதற் காகப் பொருளீட்டப் பிரிதலைத் தவிர்த்திடுக" என்று தோழி கூறினாள்.

கருத்து

'தலைவ! நிலையில்லாத பொருளை நிலையென்று எண்ணி, தலைவியைப் பிரியக் கருதாதே!'

குறிப்பு

'எய்யப்பெற்ற அம்பின் நிழல் போன்று அழியும்' என்றது, குறியை நோக்கிச் செல்லுகின்ற அம்புடன் செல்லும் நிழலும் விரைவாய்ச் சென்று, அம்பு குறியிடத்துத் தைத்து நின்ற அளவிலே, முற்றவும் இல்லாதுபோம்! அதுபோல, இன்பமும் இளமையும் குறித்த பருவ காலம் வரை இருந்து, அப்பருவ காலம் கழிந்ததும் அழிந்துபோம் என்பதாம்!

அம்புக்கு நிழல் உண்டு; ஆயினும், அது செல்லும் வேகத்தால் நிழல் கண்ணுக்குப் புலப்படுவதில்லை. அதுபோல, இளமையும் இன்பமும் கழிவதை கால வேகத்தால் நம்மால் அஃதை உணர இயலவில்லை.

நீ கருதும் பொருள் சிறப்புடையதே; ஆயினும் இளமையும் இன்பமும் போன்று அது சிறப்புடையதன்று.

சொற்பொருள்

1. வைகல் - நாள்.
2. எய்கணை - எய்யப்பெறும் அம்பு; நீழல் - நிழல்; கழியும் - நீங்கும்.
3. காணீர் - அறியீர்; என்னலோ - என்று சொல்லப்படுவது; அரிது - பொருந்துவது அன்று; அது நனி - அதனை மிகவும் அறிந்து.
4. பேணீர் ஆகுவீர் - (மனத்திலிருத்திக்) காப்பீராக.
5. ஆகம் - மார்பு; புலம்ப - தனிமையுற்று வாட.
6. அயிர்ப்பு - ஐயம், மயக்கம்.
7. கடிப்பு - குறுந்தடி; அறை அறையா - (பாறையின் மேல்) அறைந்து கொண்டு; துயல்வர - அசையுமாறு.
8. வெவ்வளி - வெம்மையுடன் வீசும் காற்று; வேய் - மூங்கில்; அழுவம் - காடு.
9. எவ்வம் - துன்பம்; மிகூஉம் - மிகுந்த; இறந்து - கடந்து.
10. நன்வாய் - நன்மை வாய்த்தல்.
11. மன்னா - நிலையாத; பிரிதும் - பிரிந்து செல்கின்றேன்.

தோழி கூற்று

ஐங்குறுநூறு 307 — **ஓதலாந்தையார்**

திணை : பாலை

கூற்று

பொருள்வயிற்பிரியக் கருதிய தலைமகன் அதன் சிறப்புக் கூறியவழித் தோழி அதனை இழித்துக் கூறியது.

கூற்று விளக்கம்

தலைவன் பொருளின் சிறப்பை உரைத்துப் பொருள்வயிற்பிரிய ஒப்புதலைப் பெற முயன்றான். அது கேட்ட தோழி, பொருளின் தாழ்வினைக் கூறி அவனைச் செலவழுங்குமாறு கூறியது.

ஞெலிகழை முழங்குஅழல் வயமா வெரூஉம்,
குன்றுடை அருஞ்சுரம் செலவுஅயர்ந் தனையே –
நன்றுஇல் கொண்க,நின் பொருளே
பாவை அன்னநின் துணைப்பிரிந்து வருமே.

தெளிவுரை

"தலைவனே! ஒன்றோடொன்று உராய்ந்த மூங்கில்களில் தீப்பற்றிக் குமுறி எரியும். அப்பெருநெருப்பினைக் கண்டு வலிய புலி அஞ்சியோடும் காட்சிக்குரிய குன்றுகளைக் கொண்ட கடத்தற்கரிய சுரநெறியில் சென்று பொருள் தேடிவர விரும்புகிறாய். அப்பொருள் கொல்லிப்பாவையைப் போன்ற உன் காதலியைப் பிரிந்தால்தான் கிட்டும் என்றால், நீ ஈட்ட விழையும் பொருள் நன்மை தருவதாகாது."

கருத்து

'தலைவ! நின் காதலியின் நலத்தை அழித்துத்தான் நீ பொருள் ஈட்ட இயலும் என்றால், அதனால் பயன் எதுவும் இல்லை.'

விளக்கம்

நீ ஈட்ட விரும்பும் பொருள், கொல்லிப்பாவை போன்ற உன் காதலியைப் பிரிந்தாலன்றி உனக்குக் கிட்டாது. ஆதலால், நீ இன்பத்தைத் துறந்து பொருளைத் தேடுவது அறமாகாது.

உள்ளுறை

மூங்கிற்புதரையே புகலிடமாய்க் கொண்டு அதிலே உறங்கும் புலி, அம்மூங்கிற்கோலிலேயே தோன்றிய தீயினுக்கு அஞ்சுகிறது என்னும் செய்தி, உன்னையே புகலிடமாய்க் கொண்டு உன்னருளிலேயே இனிது வாழும் தலைவி உன் நெஞ்சத்தே தோன்றிய இக்கருத்தினை அறிந்தால் வருந்துவாள் என்னும் உள்ளுறைப் பொருளைத் தருகிறது.

சொற்பொருள்

1. ஞெலிகழை - ஒன்றோடொன்று மோதி உராய்ந்த மூங்கில்; வய மா - வலிய புலி; வெரூஉம் - அஞ்சும்.
2. செலவு அயர்ந்தனை - செல்ல விரும்பினாய்.

3. நன்று இல் - நன்று இல்லாதது; கொண்க - தலைவன்.
4. பாவை - கொல்லிப்பாவை; அன்ன - போன்ற; நின் துணை - உன் தலைவி.

தோழி கூற்று

ஐங்குறுநூறு 310 **ஓதலாந்தையார்**

திணை : பாலை

கூற்று

பிரிகின்ற தலைமகற்குத் தோழி, 'நீ நினைக்கின்ற கருமம் முடிப்பாய் ஆயினும் இவள் நலம் மீட்டற்கு அரிது' எனச் சொல்லிச் செலவழுங்கு வித்தது.

கூற்று விளக்கம்

பொருள் தேடும்பொருட்டுப் பிரிகின்ற தலைவனிடம் தோழி, 'நீ செய்ய விரும்பும் செயலை செய்து முடிப்பாய். ஆனால், இழந்த உன் மனைவியின் நலனை மீண்டும் பெறுதல் இயலாது' எனக் கூறி அவனைச் செலவழுங்கச் சொல்லியது.

பொலம்பசும் பாண்டில் காசுநிரை அல்குல்
இலங்குவளை மென்தோள் இழைநிலை நெகிழப்
பிரிதல் வல்லுவை ஆயின்
அரிதே விடலைஇவள் ஆய்நுதல் கவினே.

தெளிவுரை

தலைவனே! பொன்னாலான பசிய வட்டக்காசுகள் வரிசையாய் அமைந்து அழகு செய்யும் அல்குலையும், வளைகள் செறிந்த மென்மையான தோள்களையும் கொண்டவள், தலைவி. அணிகலன் பலவும் நெகிழும்படியாக இவளை மெலியச்செய்து, நீ பிரிந்து செல்வதால் நீங்கும் இவள் அழகை நீ திரும்பப் பெற இயலாது.

கருத்து

'தலைவ! நீ கொணரும் பொருள், இழந்த இவள் இளமை நலனை மீட்டுத் தாராது.'

குறிப்பு

இளமை கழிந்து போனபின் அதனை மீண்டும் பெற இயலாது. ஆதலால், இளமைக்காலத்தில் பிரிவை மறந்து, தலைவியின் உடனுறைந்து இன்புறுதலே செயத்தக்க அறம்.

சொற்பொருள்

1. பொலம்பசும் பாண்டில் காசு - பொன்னாலான பசுமையான வட்டக் காசுகள்.
2. இலங்கு வளை - வளைகள் விளங்குகின்ற; இழை நிலை நெகிழ - அணிகலன்கள் தத்தம் இடங்களினின்றும் நெகிழ்ந்து கழலுதல்.
3. வல்லுவை - வல்லமை கொண்டவன்.
4. விடலை - பாலை நிலத் தலைவன்; ஆய்நுதல் - அழகிய நெற்றி; கவின் - அழகு.

தோழி கூற்று

திணைமாலை நூற்றைம்பது 85 **கணிமேதாவியார்**

திணை : பாலை

கூற்று

தலைமகனைத் தோழி செலவழுங்குவித்தது.

கூற்று விளக்கம்

தலைவன் பிரிவை மேற்கொண்டபோது, இளமை நிலையாமையைத் தோழி எடுத்துக் கூறி அவன் செல்வதைத் தடுத்தது.

பொருள்பொருள் என்றார்சொல் பொன்போலப் போற்றி
அருள்பொருள் ஆகாமை ஆக – அருளால்
வளமை கொணரும் வகையினான் மற்றோர்
இளமை கொணர இசை.

தெளிவுரை

பொருள் தேடுதல் கடமை என்று பெரியவர் சொல்லிய சொல்லைப் பொன்னைப்போல் போற்றி ஏற்றுக்கொண்டு, தலைவியிடம் காட்ட வேண்டிய அருளைப் பொருட்படுத்தாது பொருள் தேடப் புறப்படும் புரவலனே! நீ தேடிவரும் பல

வளங்களையும் கொண்டு, இழந்துவிட்ட (கழிந்துவிட்ட) இளமையினைப் பெற இயலுமா? இயலுமாயின் செல்.

கருத்து

சென்ற இளமையை மீட்டும் பெற இயலாது; பொருளுக்காகப் பிரிந்து, இளமை இன்பத்தை இழக்காதே!

சொற்பொருள்

1. என்றார் சொல் - என்று பெரியவர்கள் சொல்லிய சொல்.
2. ஆகாமை - ஆகாது; ஆக - போயினும் போகட்டும்.
3. வளமை - பொருள்; கொணரும் - கொண்டுவரும்; வகையினால் - முறைமையினால்; மற்றோர் - வேறோர்.
4. கொணர - கொண்டு வர (இயலுமா?); இசை - சொல்.

தோழி கூற்று

நற்றிணை 43 — **எயினந்தையார்**

திணை : பாலை

கூற்று

பிரிவுணர்த்தப்பட்ட தோழி தலைமகனைச் செலவழுங்குவித்தது.

கூற்று விளக்கம்

தலைவன் பொருள்வயிற்பிரியக் கருதியுள்ளான் என்பதை அறிந்த தோழி, அதனால் தலைவிக்கு வந்துறும் பேரழிவைச் சுட்டி அவன் பயணத்தைத் தடுத்தது.

துகில்விரித் தன்ன வெயில்அவிர் உருப்பின்
என்றூழ் நீடிய குன்றத்துக் கவாஅன்,
ஒய்பசிச் செந்நாய் உயங்குமரை தொலைச்சி
ஆர்ந்தன ஒழிந்த மிச்சில் சேய்நாட்டு
அருஞ்சுரம் செல்வோர்க்கு வல்சி ஆகும்
வெம்மை ஆர்இடை இறத்தல் நுமக்கே
மெய்ம்மலி உவகை ஆகின்று; இவட்கே,
அஞ்சல் என்ற இறைகை விட்டெனப்

பைங்கண் யானை வேந்துபுறத்து இறுத்தலின்,
களையுநர்க் காணாது கலங்கிய உடைமதில்
ஓரெயில் மன்னன் போல,
அழிவுவந் தன்றால் ஒழிதல் கேட்டே.

தெளிவுரை

“வெள்ளிய ஆடையை விரித்தாற்போன்று வெயில் விளங்கும் வெப்பம் மிக்க கோடை நீடிய மலைப்பக்கம். அங்குப் பசிமிக்க செந்நாய் வாடியிருந்த மரையாவைக் கொன்றது; செந்நாய் தின்றதுபோக எஞ்சிய மிச்சில், நெடுந்தொலைவில் உள்ள வேற்று நாட்டிலிருந்து செல்லுதற்கரிய பாலை நிலத்தின் வழியே செல்லும் மாந்தர்க்கு உண்ணும் உணவாய்ப் பயன்படும். அத்தகைய வெம்மையான அரிய வழியிலே செல்லுவது, உமக்கு உடல் பூரிக்கும் மகிழ்ச்சி தருவதாய் உள்ளது. இவளுக்கோ நீ பிரிந்துபோதலைக் கேட்டவுடன், ‘அஞ்சாதே நான் காப்பேன்’ என்று துணைக்கு வந்த ஓர் அரசன் ஒருவன் கைவிட்டானாக, அந் நிலையில் பசிய கண்ணைக் கொண்ட யானைப் படையைக் கொண்ட பகைவேந்தன், கோட்டையை முற்றுகையிட்டுத் தாக்க, தனக்கு ஏற்பட்ட துன்பத்தைப் போக்குவாரைக் காணாமல், கலக்கமுற்று உடைந்த ஒரு மதிலைக் கொண்ட குறுநில மன்னன் உற்ற நிலையை அடைந்தனள். இதனைக் கேட்டபின் நீ தக்கது செய்க” என்று தோழி தலைவனிடம் கூறினாள்.

கருத்து

‘தலைவ! நீ இவளைப் பிரிந்தால் இவள் கோட்டையை இழந்த மன்னன் போலப் பெரிதும் கலங்கி அழிவாள். இதனை நினைந்து நீ தக்கது செய்க.’

விளக்கம்

“பெரும! வெம்மை வருத்தும் கடுஞ்சுரத்தைக் கடந்து செல்வது உனக்கு மகிழ்ச்சி தருகிறது. மன்னன் ஒருவன் மீது பகையரசன் படையெடுத்தான். அம்மன்னனுக்கு உதவி செய்வதாய்க் கூறியிருந்த வேறு ஒரு மன்னன் உதவாது கைவிட்டான். அந்நிலையில் உடைந்த தன் கோட்டையைப் பகையரசன் முற்றுகையிட்டபோது உள்ளிருக்கும் மன்னன்

கலங்குவதுபோலத் தலைவி உன் பிரிவைக் கேட்டுக் கலங்கி யிருக்கிறாள். இதனை நினைத்து நீ ஏற்றது செய்க" என்று தோழி தலைவனிடம் கூறினாள்.

குறிப்பு

'ஓரெயில் மன்னன்' அதனைக் கைவிட்டகன்று வேறு இடத்திற்குச் சென்று வாழ்வதற்கும் போக்கற்ற நிலையினன் ஆகின்றான். அவ்வாறே, இவ்வுடலைப் பசலைக்கு இரையாகவிட்ட தலைவியின் உயிரும் வேறு புகலிடம் காணாது சென்றொழியும் என்கிறாள், தோழி.

இறைச்சி

செந்நாய் தின்று கழித்த மரையாவின் ஊன், வழிச்செல் வார்க்கு உணவாகும் என்னும் தொடர்மூலம், நீ நுகர்ந்து கைவிட்டகன்ற இவளது மேனியின் எழிலினைப் பசலைநோய் பற்றியுண்ணும் என்னும் இறைச்சிப் பொருள் பெறப்படுகிறது.

சொற்பொருள்

1. துகில் - வெள்ளிய ஆடை; அவிர் - விளங்கும்; உருப்பு - வெப்பம்.
2. என்றூழ் - கோடை; கவாஅன் - பக்க மலை.
3. ஒய்பசி - பசி மிக்க; உயங்கு - வாடிய; மரை - காட்டுமான்; தொலைச்சி - கொன்று.
4. ஆர்தல் - உண்ணுதல்; மிச்சில் - எஞ்சியது.
5. வல்சி - உணவு.
6. ஆர் இடை - அரிய வழி; இறத்தல் - செல்லுதல்.
7. மெய்ம்மலி - உடல் பூரிக்கும்; உவகை - மகிழ்ச்சி.
8. அஞ்சல் - அஞ்சாதே; இறை - அரசன்.
9. வேந்து - பகை அரசன்; புறத்து - வெளியே; இறுத்தலின் - முற்றுகையிட்டுத் தாக்க.
10. களையுநர் - (தன் துன்பத்தைப்) போக்குபவர்; உடைமதில் - உடைந்து வலிமையிழந்த.
11. ஓர் எயில் - ஒரே அரண்.
12. ஒழிதல் கேட்டு - நீ பிரிவதைக் கேட்டு; அழிவு வந்தன்று - அழிவு அவளை வந்தடையும்.

தோழி கூற்று

நற்றிணை 71 **வண்ணப்புறக் கந்தரத்தனார்**

திணை : பாலை

கூற்று

தலைமகனைத் தோழி செலவழுங்குவித்தது.

கூற்று விளக்கம்

தலைவன் தான் பொருளீட்டப் பிரியவிருப்பதைத் தலைவியிடம் கூறுமாறு தோழியிடம் வேண்டினான். தலைவி பிரிவை ஆற்றமாட்டாள் எனக் கூறித் தலைவனின் பயணத்தைத் தோழி தடுத்து நிறுத்தியது.

மன்னாப் பொருட்பிணி முன்னி, 'இன்னதை
வளைஅணி முன்கைநின் இகுளைக்கு உணர்த்து'எனப்
பல்மாண் இரத்திர் ஆயின், 'சென்ம்'என
விடுநள் ஆதலும் உரியள்; விடினே,
கண்ணும் நுதலும் நீவி, முன்நின்று,
பிரிதல் வல்லிரோ ஐய! செல்வர்
வகைஅமர் நல்இல் அகஇறை உறையும்
வண்ணப் புறவின் செங்கால் சேவல்
வீழ்துணைப் பயிரும் கையறு முரல்குரல்
நும்இலள் புலம்பக் கேட்டொறும்
பொம்மல் ஓதி பெருவிதுப் புறவே.

தெளிவுரை

"தலைவ! நிலையற்ற பொருளினைத் தேடும் ஆசை நோயினை அடைந்தனை! அதனையே கருத்திற்கொண்டு, 'இச்செயலை வளையணிந்துள்ள முன்னங்கைகளைக் கொண்ட உன் தோழிக்குக் கூறு' என்று சிறந்த மொழிகளால் என்னை இரந்து கூறுகின்றாய். செல்வர்களுடைய பல கட்டுகள் அமைந்த வீட்டில் உள் இறப்பிலிருக்கும் சிவந்த கால்களைக் கொண்ட சேவல்புறா தான் விரும்பிய பெண்புறாவைப் புணர்ச்சிக்கு அழைக்கும். அக்குரலைக் கேட்குந்தோறும் உன்னோடு உன் இல்லத்திலேயே இருந்தாளாயினும் வேட்கை மிகுந்து, பொலிவு

பெற்ற கூந்தலைக் கொண்ட தலைவி, உன்னோடு கூடுதற்காய்ப் பெரிதும் விரைந்து வருவாள்.

அவளிடம் நான் சென்று உன் கருத்தைக் கூறினால் அவள், 'செல்' என்று உன்னை விடுக்கவும் கூடும். அவ்வாறு அவள் கூறினும் அவள் கண்களையும் நெற்றியையும் நீவி, அவள் முன்னே நின்று உன் பிரிவைச் சொல்லி நீங்குதற்கு உன்னால் இயலுமா? ஒருபோதும் இயலாது" என்று தோழி தலைவனிடம் கூறி, அவன் பயணத்தைத் தடுத்தாள்.

கருத்து

'தலைவியைத் தழுவுவதை விடுத்துச் செல்லும் வலிமை உனக்கு உண்டா?' என்று கேட்டுத் தோழி தலைவனைச் செலவழுங்குவித்தாள்.

விளக்கம்

அவள் " 'செல்' என விடுதலும் செய்வாள்; ஆயினும், பிரியும் வல்லமை உனக்குண்டோ? துயரைப் பொறுத்துக் கொள்ள அவள் துணிந்தாலும், அவள் துயருற்று நலிவதனைப் பொறுத்துக் கொள்ள உன்னால் இயலாது" என அவனது காதல்மிகுதியைப் போற்றிச் செலவழுங்குவிக்கிறாள், தோழி.

சொற்பொருள்

1. மன்னா - நிலையற்ற; முன்னி - நினைத்து.
2. இகுளை - தோழி; உணர்த்து - சொல்.
3. பல்மாண் - பலவாகிய சிறந்த மொழிகளால்; இரத்திர் ஆயின் - இரந்து கேட்பீராயின்; சென்ம் - செல்.
4. விடுநள் ஆதலும் - விடை கொடுத்தலும்.
5. முன் நின்று - (அவளுக்கு) முன்னே நின்று.
6. வல்லிரோ? - வலிமை வாய்ந்தவரா?
7. வகை அமர் - பல கட்டுகள் அமைந்து; அகநிறை - உள் இறப்பு.
8. புறவின் சேவல் - ஆண்புறா.
9. வீழ் - விரும்புகின்ற; பயிரும் - அழைக்கும்; கையறு - செயலற்று; முரல் - ஒலி.
10. நும் இலள் - உன்னோடு உன் இல்லத்தே இருந்தாலும்.
11. பொம்மல் ஓதி - பொலிவு பெற்ற கூந்தலைக் கொண்ட தலைவி; பெரு விதுப்புறும் - (உன்னைக் கூடப்) பெரிதும் விரைந்து வருவாள்.

தோழி கூற்று

அகநானூறு 319 **எருக்காட்டூர்த் தாயங்கண்ணனார்**

திணை : பாலை

கூற்று

செலவு உணர்த்திய தலைமகற்குத் தோழி, செலவு அழுங்கச் சொல்லியது.

கூற்று விளக்கம்

பொருள் ஈட்ட விரும்பிய தலைவன் அதனைத் தோழியிடம் சொன்னான். அவள் தலைவியின் நிலைமையை விளக்கிப் பிரிவைத் தவிர்க்கச் சொல்லியது.

மணிவாய்க் காக்கை மாநிறப் பெருங்கிளை
பிணிவீழ் ஆலத்து அலங்குசினை ஏறி,
கொடுவில் எயினர் குறும்பிற்கு ஊக்கும்
கடுவினை மறவர் வில்லிடத் தொலைந்தோர்
படுபிணம் கவரும் பாழ்படு நனந்தலை
அணங்குஎன உருத்த நோக்கின், ஐயென
நுணங்கிய நுசுப்பின், நுண்கேழ் மாமை,
பொன்வீ வேங்கைப் புதுமலர் புரைய,
நல்நிறத்து எழுந்த, சுணங்குஅணி வனமுலை,
சுரும்புஆர் கூந்தல், பெருந்தோள், இவள்வயின்,
பிரிந்தனிர் அகறல் சூழின், அரும்பொருள்
எய்துக மாதோ நுமக்கே; கொய்தழைத்
தளிர்ஏர் அன்ன தாங்கரும் மதுகையள்,
மெல்லியள், இளையள், நனிபேர் அன்பினள்;
'செல்வேம்' என்னும் நும்எதிர்
ஒழிவேம் என்னும் ஒண்மையோ இலளே!

தெளிவுரை

"*கரியமணி போன்ற அலகினைக் கொண்ட காக்கையின் கரிய நிறங்கொண்ட பெரிய கூட்டம், ஒன்றுடன் ஒன்று பிணைந்து தொங்கும் விழுதுகளைக் கொண்ட ஆலமரத்தின் அசைகின்ற கிளைகளில் ஏறித் தங்கி இருக்கும். வளைந்த வில்லைக் கொண்ட எயினர்கள், கொல்லும் தொழிலினராவர். அவர்கள் தம்*

அரணில் இருந்து ஊக்கத்துடன் புறப்பட்டு வந்து, அம்பு எய்தமையால் உயிர் நீங்கிய பிணங்களை அக்காக்கைகள் கவர்ந்து தின்னும். அத்தகைய பாழ்பட்ட அகன்ற பாலைநிலப் பரப்பினை நீ கடந்து செல்ல உள்ளாய்!

இவள் தெய்வம் என எண்ணுமாறு வடிவு கொண்ட கூரிய கண்களைக் கொண்டவள்; அழகான மெலிந்த இடையினைக் கொண்டவள். நுண்ணிய மாமை நிறப் பொன் போன்ற பூக்களைக் கொண்ட வேங்கையின் புதிய மலர் போன்ற தேமல் கொண்ட நல்ல மார்பில் எழுந்த அழகிய முலைகளைக் கொண்ட வண்டு மொய்க்கும் கூந்தலைக் கொண்டவள். பருத்த தோள்களைக் கொண்டவள். இத்தகைய இவளைப் பிரிந்து செல்ல நீ எண்ணுகின்றாய்.

அங்ஙனமாயின் உனக்கு அரும்பொருள் வந்து சேரட்டும்! தலைவியோ கொய்யத் தகுந்த தழையின் அழகிய தளிர் போன்ற பிரிவுத் துன்பத்தைத் தாங்கும் வலிமை அற்றவள்; மென்மைத் தன்மையினள்; இளம் பருவத்தினள்; உன்னிடம் மிக்க அன்பு கொண்டவள்; 'நான் பிரிந்து செல்வேன்' என்று கூறும் உன் எதிரில் நின்று, 'பிரிந்தபின் ஆற்றி இருப்பேன்' என்று கூறும் மன வலிமை இல்லாதவள். (நான் என்ன செய்ய இயலும்? நீ பிரிய வேண்டா.)"

கருத்து

'தலைவ! தலைவி உன் பிரிவை ஆற்றியிருக்கும் தன்மையினள் அல்லள்.'

விளக்கம்

"தலைவ! பாழ்பட்ட அகன்ற வழியில், தலைவியை விட்டுப் பிரிந்து சென்று பொருள் தேடி வரக் கருதியுள்ளாய்! நீ தேடும் அரும்பொருள் உனக்குக் கிட்டட்டும். ஆனால், தலைவியோ மெல்லியள்; இளையள்; 'செல்வேன்' என்று கூறும் உன் எதிர் நின்று, 'உன்னைப் பிரிந்து ஆற்றியிருப்பேன்' என்று கூறும் வலிமையற்றவள். நான் என் செய்வேன்; நீ பிரிய வேண்டா" என்று தோழி தலைவனிடம் கூறுகிறாள்.

சொற்பொருள்

1. மணி - கருமணி; மாநிறம் - கரிய நிறம்; பெருங்கிளை - பெரிய சுற்றம்.
2. பிணிவீழ் - பின்னிய விழுது; ஆலம் - ஆலமரம்; அலங்குதல்- அசைதல்; சினை - கிளை.
3. கொடுவில் - வளைந்த வில்; எயினர் - வேட்டுவர்; குறும்பு - சிற்றரண்; ஊக்கும் - ஊக்கத்துடன் எழுகின்ற.
4. கடுவினை - கொடுந்தொழில்; வில்இட - வில்லால் எய்தலால்; தொலைந்தோர் - இறந்தோர்.
5. படுபிணம் - விழுந்து கிடக்கும் பிணம்; பாழ்படு - பாழ்பட்ட; நனந்தலை - அகன்ற இடம்.
6. அணங்குஎன - தெய்வம் என்று கருதுமாறு; உருத்த - வடிவு கொண்ட; நோக்கின் - கண்களையும்; ஐ - அழகு.
7. நுணங்கிய - மெலிந்த; நுசுப்பு - இடை; நுண்கேழ் மாமை - நுண்ணிய மாமை நிறம் (கேழ் - நிறம்).
8. பொன் வீ - பொன் போலும் மலர்.
9. நல்நிறம் - நல்ல மார்பு; சுணங்கு - தேமல்; வனமுலை - அழகிய முலை.
10. சுரும்பு - வண்டு; ஆர் - மொய்க்கும், பொருந்திய; இவள்வயின் - இவளிடமிருந்து.
11. பிரிந்தனிர் - பிரிந்து; அகறல் - அகன்று செல்லுதல்; சூழின் - எண்ணுவீராயின்.
12. எய்துக - வந்து சேர்வதாக; கொய் - கொய்யத் தகுந்த; தழை தளிர் - தழையின் அழகிய தளிர்.
13. தாங்கரும் - தாங்குதற்கரிய; மதுகை - வலிமை.
14. மெல்லியள் - மென்மைத் தன்மையினள்; இளையள் - இளமை யானவள்; நனி - மிக.
15. செல்வேம் என்னும் - நான் பிரிந்து செல்வேன் என்று கூறும்.
16. ஒழிவேம் என்னும் - பிரிந்து ஆற்றியிருப்போம் என்று கூறும்; ஒண்மை - வலிமை; இலள் - இல்லாதவள்.

தோழி கூற்று

குறுந்தொகை 363 **செல்லூர்க் கொற்றன்**

திணை : பாலை

கூற்று

பிரிவுணர்த்தப்பட்ட தோழி, கிழவற்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவனால் பிரிவுணர்த்தப்பட்ட தோழி, 'உன் பிரிவைத் தலைவி பொறுத்துக் கொள்ள மாட்டாள்' என்று அவனிடம் சொல்லியது.

கண்ணி மருப்பின் அண்ணல் நல்ஏறு,
செங்காற் பதவின் வார்குரல் கறிக்கும்
மடக்கண் மரையா நோக்கி, வெய்துற்றுப்
புல்அரை உகாஅய் வரிநிழல் வதியும்
இன்னா அருஞ்சுரம் இறத்தல்
இனிதோ பெரும! இன்துணைப் பிரிந்தே?

தெளிவுரை

தலைவ! காட்டுவழியில் பூங்கண்ணி கட்டப் பெற்ற கொம்புகளுடன் தலைமை வாய்ந்த பெரிய மலை எருதானது, சிவந்த தண்டினைக் கொண்ட அறுகம்புல்லின் நீண்ட கொத்தினைக் கறித்துத் தின்னும் அழகான கண்களைக் கொண்ட தன் மலைப் பசுவைப் பார்த்துப் பெருமூச்சு விட்டவாறு, மென்மையான அடிப்பாகத்தினைக் கொண்ட உகாய் மரத்தின் புள்ளி புள்ளியாயுள்ள நிழலிலே தங்கியிருக்கும். அத்தகைய துன்பம் மிக்க கடத்தற்கரிய பாலை வழியைக் கடந்து, உன் இனிய துணைவியைப் பிரிந்து செல்லுதல் உனக்கு இனியதாகுமா? (ஆகாது; ஆதலின், நீ பிரிந்து செல்லுதல் கூடாது.)

கருத்து

இனியளாகிய துணைவியைப் பிரிந்து செல்லுதல் இன்னாது.

குறிப்பு

தலைவன் பொருள் தேடச் செல்லத் தீர்மானித்தான். அவன் தனது எண்ணத்தைத் தோழியிடம் தெரிவித்தான். அதைத் தலைவியிடம்

சொன்னால் அவள், அவன் பிரிந்து செல்ல ஒருப்பட மாட்டாள்; பிரிவு என்னும் சொல்லைக் கேட்டாலே துடிப்பாள் என்பதாலேயே, பொருளீட்டச் செல்ல வேண்டிய இன்றியமையாமையைத் தோழியிடம் கூறி, தலைவியின் ஒப்புதலைப் பெற்றுத் தருமாறு அவளிடம் கேட்டுக்கொண்டான். தலைவன் பிரிந்து செல்வதைத் தோழியும் விரும்பவில்லை. அவன் பாலை நில வழியைக் கடந்து செல்லுதல் துன்பத்திற்கே இடமாகும் என்று கூறித் தலைவனைத் தடுக்கிறாள்.

சொற்பொருள்

1. கண்ணி - தலையிற் சூட்டப்படும் மாலை; மருப்பு - கொம்பு; அண்ணல் - தலைமை வாய்ந்த; ஏறு - எருது.
2. பதவு - அறுகம்புல்; வார்குரல் - நீண்ட கொத்து; கறிக்கும் - தின்னும்.
3. மரைஆ - மலைப்பசு; வெய்துற்று - பெருமூச்சு விட்டு.
4. புல் அரை - மென்மையான அடிப்பகுதி; உகாஅய் - பாலை நில மரம்; வரி நிழல் - புள்ளி புள்ளியாய் உள்ள நிழல்; வதியும் - தங்கியிருக்கும்.
5. இறத்தல் - கடத்தல்.

தோழி கூற்று

அகநானூறு 179 **கொடிமங்கலத்து வாதுளி நற்சேந்தனார்**

திணை : பாலை

கூற்று

பிரிவு உணர்த்திய தலைமகற்குத் தோழி செலவு அழுங்கச் சொல்லியது.

கூற்று விளக்கம்

பொருளீட்டக் கருதிய தலைவன், தான் பிரிந்து செல்லவிருப்பதனைத் தோழியிடம் கூறினான். அது கேட்ட தோழி, 'உன் பிரிவினை அறிந்தால் தலைவி பெரிதும் வருந்துவாள்' எனக் கூறித் தலைவன் பிரிவினைத் தடுத்து நிறுத்தியது.

விண்தோய் சிமைய விறல்வரைக் கவாஅன்,
வெண்தேர் ஓடும் கடம்காய் மருங்கில்,
துனைஎரி பரந்த துன்அரும் வியன்காட்டு,
சிறுகண் யானை நெடுங்கை நீட்டி,
வான்வாய் திறந்தும் வண்புனல் பெறாஅது,

கான்புலந்து கழியும் கண்அகன் பரப்பின்
விடுவாய்ச் செங்கணைக் கொடுவில் ஆடவர்
நல்நிலை பொறித்த கல்நிலை அதர,
அரம்புகொள் பூசல் களையுநர்க் காணாச்
10 சுரம்செல விரும்பினிர் ஆயின்— இன்நகை,
முருந்துஎனத் திரண்ட முள்எயிற்றுத் துவர்வாய்,
குவளை நாள்மலர் புரையும் உண்கண்,இம்
மதிஏர் வாள்நுதல் புலம்ப,
பதிபெயர்ந்து உறைதல் ஒல்லுமோ, நுமக்கே?

தெளிவுரை

"தலைவ! நீ செல்லும் இடமகன்ற பாலைநில வழியில் பெருமையினைக் கொண்ட பக்கமலையில் கானல் நீர் ஓடும் காய்ந்த காட்டில் நெருப்பு விரைந்து பற்றிப் பரவி நெருங்குதற்கு அரியதாய் இருக்கிறது. அங்கிருந்த நீர்வேட்கை மிக்க சிறுகண் களைக் கொண்ட யானை அக்கானல் நீரின் பக்கம் தன் நெடுங் கையை நீட்டியும், பெரிய வாயினைத் திறந்தும் வளவிய நீரினைப் பெறாது அக்காட்டினை வெறுத்து அடுத்த இடத்திற்குச் செல்லும். அத்தகைய காட்டுவழியில் இலக்கினைத் தவறாமல் விடுதற்குரிய சிவந்த அம்பினையுடைய வளைந்த வில்லைக் கொண்ட மறவர் போரில் விழுப்புண்பட்டு வீழ்ந்தமையால் அவருக்கு வெற்றி நிலையை எழுதிய நடுகற்கள் நடப்பட்டி ருக்கும். அங்கு வழிப்பறி கொள்ளையராகிய வேடர்கள் திடும் என வருவர். அவர்களுடன் போரிட அங்கு எவரும் இரார். அத்தகைய பாலைநில வழியைக் கடந்து செல்ல நீ விரும்பு கின்றாய். ஆனால், இனிய சிரிப்பினையும், மயில் இறகின் அடி போலத் திரண்ட முள்போலும் கூரிய பற்களையும், சிவந்த வாயினையும், புதிய குவளை மலர் போன்ற மையுண்ட கண்களையும், பிறை போன்ற ஒளி பொருந்திய நெற்றியினையும் கொண்ட தலைவி வருந்தும்படியாக இவ்வூரினின்று நீங்கிப் போய் உன்னால் பிரிந்திருக்கக் கூடுமோ?"

கருத்து

'தலைவ! உன் பிரிவை அறிந்து தலைவி வருந்தும்படி உன்னால் பிரிந்திருக்கக் கூடுமோ?'

விளக்கம்

"தலைவ! தலைவியைப் பிரிந்து அரிய காட்டுவழியில் செல்ல விரும்பினாய். இனிய நகை, மயிலிறகின் அடிபோலும் கூரிய பற்கள், செவ்வாய், குவளை உண்கண், பிறை நுதல் ஆகிய வற்றைக் கொண்ட தலைவி வருந்தும்படி நீ இங்கிருந்து நீங்கிப் போய் உன்னால் பிரிந்திருக்கக் கூடுமோ? (இயலாது)" என்று கூறித் தோழி, தலைவன் பயணத்தைத் தடுத்து நிறுத்தினாள்.

சொற்பொருள்

1. சிமையம் - உச்சி; விறல் - பெருமை; வரைக் கவாஅன் - மலைப்பக்கம்.
2. வெண்தேர் - பேய்த்தேர் (கானல் நீர்); காய் கடம் - காய்ந்த காடு; மருங்கு - பக்கம்.
3. துனைஎரி - விரைந்த நெருப்பு; பரந்த - பரவிய; துன்னரும் - கிட்டுதற்கு (நெருங்குதற்கு) அரிய; வியன் - அகன்ற.
5. வான்வாய் - பெரிய வாய்; வண்புனல் - வளவிய நீர்.
6. புலந்து - வெறுத்து; கழியும் - அகன்று செல்லும்; கண்அகன் - இடம் அகன்ற.
7. விடுவாய் - விடுதல் வாய்ந்த; செங்கணை - சிவந்த அம்பு; கொடுவில் - வளைந்த வில்; ஆடவர் - வீரர்.
8. நல்நிலை - நல்ல வெற்றி நிலையை; பொறித்த - எழுதிய; கல் - நடுகல்; நிலை - நிற்கும்; அதர் - வழி.
9. அரம்பு - குறும்பர், வழிப்பறிக் கொள்ளையர்; கொள் - செய்யும்; பூசல் - போர்; களையுநர் - நீக்குபவர்; காணா - இல்லாத.
10. சுரம் - கடுமையான காடு; இன்நகை - இனிய முறுவல்.
11. முருந்து - மயிலிறகின் அடி; முள் - கூரிய; எயிறு - பல்; துவர் - சிவப்பு.
12. நாள்மலர் - புதிய மலர்; உண்கண் - மையுண்ட கண்.
13. மதி - (பிறை) நிலவு; வாள் - ஒளி; புலம்ப - தனித்திருப்ப.
14. பதி - இடம்; உறைதல் - தங்குதல்; ஒல்லுமோ - பொருந்துவ தாகுமோ?

தோழி கூற்று

ஐங்குறுநூறு 301 **ஓதலாந்தையார்**

திணை : பாலை

கூற்று

பிரிவு உணர்த்தப்பட்ட தோழி தலைமகற்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவியைப் பிரிந்து சென்று பொருளீட்டக் கருதிய தலைவன் அதனைத் தோழியிடம் கூறினான். அப்போது அவள் தலைவனிடம் சொல்லியது.

மால்வெள் ளோத்திரத்து மைஇல் வால்இணர்,
அருஞ்சுரம் செல்வோர் சென்னிக் கூட்டும்;
அவ்வரை இறக்குவை ஆயின்,
மைவரை நாட! வருந்து வள்பெரிதே.

தெளிவுரை

"*கார்முகில் தவழும் மலைநாடனே! பெரிய வெள்ளோத்திரத்தின் தூய்மையான வெள்ளை மலர்களை, கடத்தற்கரிய பாலை நிலத்தில் நடப்போர் தலையில் அணிந்துகொண்டு செல்வர். அத்தகைய மலைப்பாங்கான வழியை நீ கடந்து செல்வாய் என்றால், தலைவி பெரிதும் வாடி வருந்துவாள்.*"

கருத்து

'தலைவ! நீ பிரிந்தால் தலைவி வருந்துவாள்; அதனால் பிரியாதே.'

குறிப்பு

நீ செல்லக் கருதிய பாலை நில வழியில் செல்வோர் அதன் வெம்மையை ஆற்றிக்கொள்வதற்கு வெள்ளோத்திர மலரேனும் உள்ளது. ஆனால், பிரிவாற்றாது வெம்பும் தலைவியின் வருத்தத்தை ஆற்றுவிக்க வழியேதும் காணேன் என்பது தோழி கூற்று.

சொற்பொருள்

1. மால் - பெரிய; வெள்ஒத்திரம் - வெள்ளிலவ மரம், பாலை நிலத்திலுள்ள ஒரு வகை இலவ மரம், வெண்மையான பூக்களைக்

கொண்டிருப்பதால் வெள்ளோத்திரம் எனப்பட்டது. பாலை நில வழியில் செல்வோர், அதன் வெம்மையை ஆற்றும்பொருட்டு வெள்ளோத்திரத்து மலரைத் தலையிலே நிரம்ப இட்டுச் செல்வர்; மை இல் - குற்றம் இல்லாத; வால் இணர் - வெண்பூக் கொத்துகள்.

2. அருஞ்சுரம் - கடத்தற்கரிய பாலை நிலம்; சென்னி - தலை; கூட்டும் - அணிந்துகொள்வர்.
3. அவ்வரை - அ+வரை - அத்தகைய மலைப்பாங்கான வழி; இறக்குவை ஆயின் - கடந்து செல்வாயாயின்.
4. மை வரை - கரிய மலை, கருமுகில் தவழும் மலை.

தோழி கூற்று

ஐங்குறுநூறு 304 **ஓதலாந்தையார்**

திணை : பாலை

கூற்று

பொருள்வயிற்பிரியலுற்ற தலைமகற்குத் தோழி சொல்லியது.

கூற்று விளக்கம்

பொருள் தேடத் தலைவியைப் பிரிந்து செல்ல விரும்பிய தலைவனுக்கு, அவன் செல்லாமை வேண்டித் தோழி சொல்லியது.

கல்லாக் கோவலர் கோலின் தோண்டிய
ஆன்நீர்ப் பத்தல், யானை வௌவும்,
கல்அதர்க் கவலை செல்லின், மெல்இயல்
புயல்நெடுங் கூந்தல் புலம்பும்;
வயமான் தோன்றல் வல்லா தீமே.

தெளிவுரை

"விரைந்தோடும் குதிரையையுடைய தலைவனே! தம் தொழிலன்றி மற்றொன்றும் கற்றறியாத இடையர், தம் பசு மாடுகள் குடிப்பதற்காகத் தம் கையிலுள்ள கோலினால் தோண்டிய பள்ளத்தில் உள்ள சிறிதளவு நீரையும் காட்டுயானைகள் கவர்ந் துண்ணும்; அத்தகைய கற்கள் நிரம்பிய கவர்த்த வழியில் நீ

பிரிந்து செல்லுவையாயின், மெல்லிய இயல்பையும் கரிய புயலொத்த கூந்தலையும் கொண்ட இவள் தனிமைத்துயரால் வருந்துவாள். ஆதலால், நீ பிரிந்து செல்லாதே."

கருத்து

'தலைவ! தனிமைத்துயரால் தலைவி வருந்துவாள்; அதனால் பிரியாதே.'

உள்ளுறை

கோவலர்கள் பசுக்கள் குடிக்கும்பொருட்டுத் தோண்டிய பள்ளத்தில் உள்ள நீரை, யானை கவர்ந்து குடிக்கும் என்னும் தொடர்மூலம், உன் நுகர்ச்சிக்குரியதாய சிறந்த இவள் நலம் பசலையால் உண்ணப்பட்டுக் கழியும் என்னும் உள்ளுறைப் பொருள் பெறப்பட்டது.

சொற்பொருள்

1. கல்லாக் கோவலர் - தம் தொழிலையன்றிப் பிற எதையும் கற்றறியாத இடையர்; கோல் - கோவலர் கையிலுள்ள கோல்.
2. ஆன்நீர் - ஆடு, மாடுகள் குடிப்பதற்குரிய தண்ணீர்; பத்தல் - பள்ளம்; வௌவும் - கவரும்.
3. கல்அதர் - கற்கள் நிரம்பிய வழி; கவலை - பல பிரிவுகளைக் கொண்ட பாதை; மெல் இயல் - மெல்லிய இயல்பினைக் கொண்டவள்.
4. புயல் நெடுங் கூந்தல் - மேகம் போன்ற (கரிய) நீண்ட கூந்தல்; புலம்பும் - வருந்தும், அழகிழக்கும்.
5. வயமான் - விரைந்து செல்லும் குதிரை; தோன்றல் - தலைவன்; வல்லாதீமே - பிரியாதே.

தோழி கூற்று

ஐங்குறுநூறு 305 **ஓதலாந்தையார்**

திணை : பாலை

கூற்று

உடன்போக்கொழித்துத் தனித்துச் செல்வலென்ற தலைமகற்குத் தோழி கூறியது.

கூற்று விளக்கம்

பொருள் தேடும்பொருட்டுப் பிரியக் கருதிய தலைவன், 'தலைவியை உடன் அழைத்துச் செல்ல இயலாது; நான் மட்டுமே செல்வேன்' என்றான். அவனிடம் தோழி சொல்லியது.

களிறு பிடிதழீஇப் பிறபுலம் படராது
பசிதின வருந்தும் பைதறு குன்றத்துச்
சுடர்த்தொடிக் குறுமகள் இனைய
எனைப்பயம் செய்யுமோ விடலைநின் செலவே!

தெளிவுரை

"தலைவ! களிறுகள் தம் பிடியைத் தழுவி, கோடை வெப்பம் வாட்டுதலால் உணவு பெறாது வருந்தும் நிலையிலும் அதனைப் பெறுதற்பொருட்டு வேறு நிலங்களை நாடிச் செல்லாமல் கடும்பசி வாட்ட அக்குன்றிலேயே வருந்தியிருக்கும். பசுமை சிறிதுமில்லாத இத்தகைய குன்றம் கடந்து ஒளிமிக்க வளைகளை அணிந்த இளமகள் வருந்த நீ பிரிந்து செல்வது என்ன பயனைத் தரும்? (ஒரு பயனும் தராது.)"

கருத்து

'தலைவ! தலைவியைத் தனியே விட்டுவிட்டுப் பொருள்வயிற்பிரிதல் நன்மை தாராது.'

குறிப்பு

கோடை வெப்பம் வாட்டுவதால், பிடியைத் தழுவி நிற்கும் ஆண்யானை, பசித்துன்பம் வருத்தும் நிலையிலும் பெண்யானையைப் பிரிய இயலாது,

பசுமையற்ற அக்குன்றத்தைவிட்டு வேறு இடங்களை நாடிச் செல்லாது. அதுபோலத் தலைவனும், பொருள் தேடும் விருப்பத்தால் தன் காதலியை வருந்தும்படியாகத் தனியே விட்டுச் சென்றுவிடாது, தன் காதலியோடு உடன் உறைய வேண்டும் என்று தோழி குறிப்பால் உணர்த்துகிறாள்.

சொற்பொருள்

1. களிறு - ஆண்யானை; பிடி - பெண்யானை; தழீஇ - தழுவி; பிற புலம் - வேற்றிடம்; படராது - செல்லாது.
2. பசி தின - பசி தன்னை வருத்த; பைதுஅறு - பசுமை அற்ற; குன்றத்து - குன்றை நீங்கி.
3. சுடர்த்தொடி - ஒளி வீசும் வளையல்; குறுமகள் - இளமை பொருந்திய தலைவி; இனைய - வருந்த.
4. எனைப் பயம் - என்ன பயன்?; செலவு - பொருள் தேடப் பிரிந்து செல்லுவது.

தோழி கூற்று

திணைமொழி ஐம்பது 12 **கண்ணஞ்சேந்தனார்**

திணை : பாலை

கூற்று

'யான் பிரியத் தலைமகள் ஆற்றுமோ? நீ அறிவாயாக!' என்ற தலைமகற்குத் தோழி சொல்லியது.

கூற்று விளக்கம்

'நான் பொருள் ஈட்டப் பிரிந்து சென்றால் தலைவி ஆற்றியிருப்பாளா, அறிந்து சொல்' என்று கேட்ட தலைவனிடம் தோழி மறுமொழி கூறியது.

முரிபரல ஆகி முரண்அழிந்து தோன்றி
எரிபரந்த கானம் இயைபொருட்குப் போவீர்
அரிபரந்த உண்கண்ணாள் ஆற்றாமை நும்மின்
தெரிவார்யார் தேரும் இடத்து.

தெளிவுரை

"உடைந்த பருக்கைக்கற்கள் நிறைந்த நடக்க இயலாத வழியில் நடந்து, காட்டுத் தீ பரவியுள்ள இடத்தைக் கடந்து பொருள் ஈட்டச் செல்லும் தலைவ! செவ்வரி படர்ந்த, மையுண்ட கண்களைக் கொண்ட நம் தலைவியின் பிரிவாற்றாத் துன்பத்தை உன்னைவிட உணர்பவர் யார் இருக்கின்றனர்? (நான் அதனை அறியவல்லேன் அல்லன்)" என்று தோழி தலைவனிடம் கூறினாள்.

கருத்து

'தலைவ! தலைவியின் துயரை நீயே அறிவாய்! நான் என்ன கூற?'

சொற்பொருள்

1. முரி - உடைந்த; பரல் - பருக்கைக்கல்; முரண் அழிந்து - வலிமை கெட்டு.
2. எரி - காட்டுத்தீ; இயை பொருட்கு - எல்லாவற்றையும் உண்டாக்கு விக்கும் பொருளை ஈட்டுவதற்காக.
3. அரி - செவ்வரி; உண்கண்ணாள் -மை தீட்டப்பெற்ற கண்களைக் கொண்டவள்; ஆற்றாமை - பிரிவை ஆற்றாது வருந்தும் தன்மை.
4. தேரும் இடத்து - ஆராயுங்கால்; தெரிவார் யார்? -அறியக்கூடியவர் யார்?

தோழி கூற்று

ஐங்குறுநூறு 303 **ஓதலாந்தையார்**

திணை : பாலை

கூற்று

சுரத்து அருமை கூறி உடன்செலவு மறுக்கும் தலைமகற்குத் தோழி சொல்லியது.

கூற்று விளக்கம்

பொருள் தேடப் பிரியப் புறப்பட்ட தலைவனிடம் தானும் உடன் வருவதாய்த் தலைவி கூறினாள். சுரத்தின் கடுமை கூறித் தலைவன் அவ் வேண்டுகோளை மறுத்தான். அதற்கு விடையாய்த் தோழி சொல்லியது.

புதுக்கலத்து அன்ன கனிய ஆலம்
போகில் தடுக்கும் வேனில் அருஞ்சுரம்
தண்ணிய, இனிய ஆக,
எம்மொடும் சென்மோ! விடலை நீயே

தெளிவுரை

"தலைவ! புதிய மட்பாண்டம் போன்ற செந்நிறப் பழங்களைக் கொண்ட ஆலமரம் தன் கனிகளின் இனிமையால் தன்னிடம் வந்து சேரும் பறவையினைத் தன்னை விட்டு வெளியில் செல்ல விடாது தடுக்கும். அத்தகைய ஆலமரங்களால் வேனிலால் வெப்பமுற்ற கடத்தற்கரிய பாலை வழிகளும் இப்போது தண்ணியவாகவும் இனியவாகவும் இருக்கின்றன; ஆதலால், தலைவியையும் அழைத்துச் செல்."

கருத்து

'தலைவ! தலைவியை உடனழைத்துச் செல்வதாயின் செல்.' (தலைவியை அழைத்துச் செல்வது மரபன்று; ஆதலின், செலவைத் தவிர்ப்பான்.)

விளக்கம்

வேனில் வெம்மையையும் சுரவழிகளின் இன்னாமையையும் கூறி, உடன் செல்லுதல் கூடாதெனத் தலைவன் உரைத்தான். ஆலமரங்களால் வெம்மையும் இன்னாமையும் இலவாதலைத் தோழி தெரிவித்து, 'இப்போது அருஞ்சுரம் தண்ணியவாகவும் இனிய ஆகவும்' இருப்பதாய்க் கூறினாள். ஆகவே தம்மையும் உடன்கொண்டு செல்லுதல் தீதன்று என்றும் கூறினாள். நீ இல்லாதபோது இவ்வீடு எமக்கு இனிதாகாது என்பதையும் குறிப்பிடுகிறாள். "பெருங்காடு இன்னா என்றிர் ஆயின், இனியவோ பெரும தமியோர்க்கு மனையே" என்று தோழி கூறுவதைக் குறுந்தொகை 124ஆம் பாடலிலும் காணலாம்.

குறிப்பு

கோடைக் கொடுமைக்கு ஆற்றாது வரும் பறவைகளுக்கு ஆலமரம் குளிர்ந்த நிழலும் இனிமையான கனியும் கொடுக்கும். அதுபோல, தலைவனின் சேர்க்கையாலும் அவன் உடன் இருப்பதாலும் பாலை

வழியின் கொடுமையைத் தலைவி அறியாள் என்பது குறிப்புச் செய்தி. ஆலம் நிழல் தலைவிக்கும் உனக்கும் குளிர்ச்சியும் இனிமையும் தரும்.

உவமை நயம்

ஆலின் செந்நிறப் பழங்கட்கு, புதிய மட்பாண்டத்தை உவமை யாய்க் கூறியிருப்பது நயமிக்கது.

சொற்பொருள்

1. புதுக்கலத்து அன்ன - புதுப் பானையைப் போன்ற செந்நிறம் பொருந்திய; கனிய ஆலம் - பழத்தைக் கொண்ட ஆலமரம்.
2. போகில் - பறவை தன்னிடமிருந்து பிரிந்து செல்வதை; தடுக்கும் - வெளியில் செல்லவிடாது தடுக்கும்; அருஞ்சுரம் - அரிய காட்டுவழி.
3. தண்ணிய - குளிர்ச்சி பொருந்தியதாயும்; இனிய - இனிமை பொருந்தியதாயும்; ஆக - ஆக்கும்.
4. சென்மோ - சென்றால்; விடலை - பாலைநிலத் தலைவன். (பாலைநிலத் தலைவனே எம்மையும் உடனழைத்துச் செல்.)

தோழி கூற்று

நற்றிணை 325 — **மதுரைக் காருலவியங் கூத்தனார்**

திணை : பாலை

கூற்று

தோழி செலவழுங்குவித்தது.

கூற்று விளக்கம்

பொருள்வயிற்பிரியும் தலைவனிடம் தோழி, அவன் செலவைத் தவிர்க்குமாறு கூறியது.

கவிதலை எண்கின் பரூஉமயிர் ஏற்றை
இரைதேர் வேட்கையின் இரவில் போகி,
நீடுசெயல் சிதலைத் தோடுபுனைந்து எடுத்த
அரவாழ் புற்றம் ஒழிய, ஒய்யென,

முரவாய் வள்உகிர் இடப்ப வாங்கும்,
ஊக்குஅருங் கவலை நீந்தி, மற்றுஇவள்
பூப்போல் உண்கண் புதுநலம் சிதைய,
வீங்குநீர் வாரக் கண்டும்,
தகுமோ? பெரும! தவிர்கநும் செலவே.

தெளிவுரை

பெருமானே! இத்தலைவியின் நீலமலர் போன்ற மையுண்ட கண்களின் அழகு சிதைந்து போகுமாறு, மிகுதியான கண்ணீர் வடிதலைக் கண்டும் நீ பிரிதல் என்பது தகுதியுடையதாமோ? உன் செலவினைத் தவிர். நீ செல்லுகின்ற காட்டுவழியில், தொடர்ந்து விடாது செயற்படும் கறையான்களின் தொகுதி முயன்று உண்டாக்கியிருக்கும் புற்றுகளில் பாம்புகள் வாழ்ந்திருக்கும். அப் புற்றுகளில் கவிந்த தலையையும் பருத்த மயிரையும் கொண்ட ஆண் கரடி, தான் இரை தேடி உண்ணும் விருப்பத்தில் இரவில் சென்று, அங்கு வாழும் கறையான்கள் முழுதும் ஒழியுமாறு, வேகமாய், அப்புற்றுகளைத் தன் ஒடிந்த முனையைக் கொண்ட பெரிய நகங்களால் பறித்து, அவற்றின் உள்ளே அமைந்த புற்றாஞ்சோறு முதலியவற்றை உறிஞ்சி இழுக்கும். உள்ளத்தால் கருதிப்பார்ப்பதற்கும் அரிய அத்தகைய கவர்த்த வழிகளைக் கொண்ட சுரத்தில் செல்லுவதும் தக்கதாமோ?

கருத்து

'தலைவ! தலைவி கண்ணீர் வடித்தலைக் கண்டும் அரிய காட்டுவழியில் நீ செல்ல விரும்பலாமா?'

விளக்கம்

கரடியின் பசிவேட்கை, கறையான் கூட்டம் நெடிது முயன்று உண்டாக்கிய புற்றுக்கும், அவற்றின் முட்டைகட்கும், அக்கறை யான்களுக்கும் அழிவை உண்டாக்கும். அதுபோல, உன்னுடைய பொருள்வேட்கை நெடிது முயன்று அமைத்த உன் இல்லற வாழ்வுக்கும், அதனை அமைத்த உன் துணைவியான இவளுக்கும் அழிவைத் தரும். 'பாம்பு உறையும் புற்று' என்பது, கறையான் புற்றில் ஒடுங்கியிருந்த பாம்பும் அழிவதுபோல, தலைவியின்

அழிவால், அவள் தோழியராகிய நாங்களும் வருந்தி நலிவோம் என்னும் கருத்தைத் தருகிறது.

குறிப்பு

கறையான் நீண்ட நாள் முயன்று உண்டாக்கும் புற்றைக் கரடி ஓர் இரவில் அழிப்பதுபோலப் பொருளும் விரைந்தழியும்.

இறைச்சி

இரை தேடும் வேட்கையில் கரடி புற்றகழ்ந்து உண்ணும் என்பது, தலைவியின் காமமும் தலைவனைக் கூடும் விருப்பத்தின் மிகுதியால் அவள் உயிரை உண்ணும் என்னும் இறைச்சிப் பொருளைத் தருகிறது.

சொற்பொருள்

1. கவிதலை - கவிந்த தலை; எண்கு - கரடி; பரூஉ - பருத்த; ஏற்றை - ஆண்.
2. வேட்கை - விருப்பம்.
3. நீடு செயல் - தொடர்ந்து விடாது செயற்படும்; சிதலை - கறையான்; தோடு - தொகுதி; புனைந்து எடுத்த - கட்டி உண்டாக்கிய.
4. அரவாழ் - பாம்பு வாழ்கின்ற; புற்றம் - புற்று; ஒழிய - சிதைய; ஒய்யென - விரைந்து.
5. முரவு - சிதைந்த, ஒடிந்த; வாய் - புற்றின் உச்சி; உகிர் - நகம்; இடப்ப - தோண்டி; வாங்கும் - புற்றாஞ்சோற்றை உறிஞ்சி இழுக்கும்.
6. ஊக்கு அரும் - செல்லுதற்கரிய; கவலை - கவர்த்த வழி; நீந்தி - கடந்து.
7. புதுநலம் - புது அழகு; சிதைய - அழிய.
8. வீங்கு நீர் - மிகுந்த கண்ணீர்; வார - வடிய, சொரிய.
9. தவிர்க - தவிர்ப்பாய்.

தோழி கூற்று

ஐங்குறுநூறு 423 **பேயனார்**

திணை : முல்லை

கூற்று

கார்ப் பருவத்தே பிரியக்கருதிய தலைமகற்குத் தோழி தலைமகளது ஆற்றாமை கூறிச் செலவழுங்குவித்தது.

கூற்று விளக்கம்

தலைவன் கார் காலத்தே பிரியக் கருதியபோது, தலைவி பிரிவைப் பொறுத்துக் கொள்ள மாட்டாள் என்பதைக் கூறித் தோழி தலைவன் பயணத்தைத் தடுத்தது.

மாமழை இடியூஉத் தளிசொரிந் தன்றே;
வாள்நுதல் பசப்பச் செலவுஅயர்ந் தனையே;
யாமே நின்துறந்து அமையலம்;
ஆய்மலர் உண்கணும் நீர்நிறைந் தனவே.

தெளிவுரை

"*தலைவ! கருமையான மழைமேகம் இடி முழக்கமிட்டு மழை பொழியத் தொடங்கிவிட்டது; தலைவியின் ஒளி பொருந்திய நெற்றி பசப்படையுமாறு செலவினை மேற்கொண்டுள்ளாய்; நாங்கள் உன்னைப் பிரிந்து ஆற்றியிருக்க மாட்டோம்; தலைவியின் பூப்போன்ற மையுண்ட கண்களிலும் நீர் நிறைந் துள்ளது (நீர் ஒழுகுகின்றது.)*"

கருத்து

'தலைவ! கார் காலப்பிரிவு வருத்தம் தரும்; ஆதலின் பிரியாதே.'

குறிப்பு

கார் காலம் தலைவன் தலைவியோடு கூடியிருக்க வேண்டிய காலம்; பிரிவதற்கு ஏற்றதன்று.

சொற்பொருள்

1. மாமழை - கருமையான மழைமேகம்; இடியூஉ - இடி இடித்து; தளி - நீர்த்துளி, மழை; சொரிந்தன்று - பெய்கின்றது.

2. வாள்நுதல் - ஒளி பொருந்திய நெற்றி; செலவு அயர்ந்தனை - பயணம் மேற்கொண்டுள்ளாய்.
3. நின்துறந்து - உன்னைப் பிரிந்து; அமையலம்- பொறுத்திருக்க மாட்டோம்.
4. ஆய் மலர் - அழகிய மலர்; நீர் - கண்ணீர்.

தோழி கூற்று

நற்றிணை 124 **மோசி கண்ணத்தனார்**

திணை : நெய்தல்

கூற்று

பிரிவுணர்த்தப்பட்ட தோழி தலைமகற்குரைத்தது.

கூற்று விளக்கம்

தலைவனால் பிரிவுணர்த்தப்பட்ட தோழி, அவனது எண்ணத்தை மாற்றக் கருதி, 'அவன் பிரியின் தலைவி பெரிதும் துயருறுவாள்' எனக் கூறியது.

ஒன்றுஇல் காலை அன்றில் போலப்
புலம்புகொண்டு உறையும் புன்கண் வாழ்க்கை
யானும்ஆற்றன்;அது தானும்வந் தன்று
நீங்கல்; வாழியர் ஐய! ஈங்கை
முகைவீ அதிரல் மோட்டுமணல் எக்கர்,
நெளவி நோன்குளம்பு அழுந்தென, வெள்ளி
உருக்குறு கொள்கலம் கடுப்ப, விருப்புறத்
தெள்நீர்க் குமிழி இழிதரும்
தண்ணீர் தகைஇ நின்ற பொழுதே.

தெளிவுரை

தன் துணை பிரிந்த காலத்து மற்றோர் அன்றிற்பறவை ஆற்றாது இறந்துபடுதல் போலத் தனிமையுற்று இருக்கும் துன்பமான வாழ்வினை நானும் சிறிதும் ஆற்ற இயலாதவளாய்

உள்ளேன். ஈங்கையின் அரும்பும், காட்டுமல்லிகை மலரும் மணலால் அமைந்த உயர்ந்த திடலில் உதிர்ந்து கிடக்கும். அவற்றை மான்கள் தங்கள் வலிமையான குளம்புகளினால் மிதித்து அழுத்துவதால் அவை சிதைந்து அழியும். வெள்ளியை உருக்கிச் சாய்த்தற்போன்று அவற்றினின்றும் தெளிந்த நீர்க்குமிழி வடியும் கூதிர்ப்பருவம் வந்து விட்டது. இப்பருவமே நான் ஆற்றாதிருப்பதற்குக் காரணமாகும். ஆதலின் ஐயனே! என்னை விட்டு நீங்காது இரு! நீ நெடுங்காலம் வாழ்க! (தலைவி கூற்றைத் தன் கூற்றாய்க் கொண்டு தோழி கூறியது இது.)

கருத்து

கூதிர்ப்பருவம் கூற்றினைப் போல் வந்தது; நீ பிரியின் தலைவி உயிர் வாழ்தல் அரிது.

விளக்கம்

உதிர்ந்த மலர்கள் மான் குளம்பால் மிதிபட்டு அழிதலைப் போல, வாடைக்கு ஆற்றாது பிரிந்துறையும் தலைவியின் நலமும் அழியும் என்பதாம்.

சொற்பொருள்

1. ஒன்று இல் காலை - தனது துணை இல்லாத பொழுது; அன்றில் - அன்றில் பறவை; போல - (ஆற்றாது இறந்துவிடுவது) போல.
2. புலம்பு கொண்டு - தனிமை கொண்டு; புன்கண் - துன்பம்.
3. அது தானும் - அத்துன்ப நிலையும்; வந்தன்று - (நீ பிரிய விருப்பதாய்க் கூறுவதால்) ஏற்பட்டுள்ளது.
4. நீங்கல் - நீங்க வேண்டா; ஈங்கை - ஈங்கைச்செடி.
5. முகை - அரும்பு; அதிரல் - காட்டுமல்லிகை மலர்; மோட்டு மணல் - குவிந்துள்ள மணல்; எக்கர் - மணல்மேடு.
6. நௌவி - மான்; நோன் - வலிய.
7. விருப்புற - காண்போர் மகிழ.
8. தெள்நீர் - தெளிந்த நீர்; இழிதரும் - வழியும்.
9. ததைஇ - நிறைந்து; பொழுது - கூதிர் காலம்.

தோழி கூற்று

அகநானூறு 13 **பெருந்தலைச் சாத்தனார்**

திணை : பாலை

கூற்று

பொருள்வயிற் பிரியலுற்ற தலைமகனைத் தோழி செலவழுங்குவித்தது.

கூற்று விளக்கம்

தலைவன் தலைவியைப் பிரிந்து சென்று பொருளீட்டக் கருதினான். இதனைக் குறிப்பால் உணர்ந்த தோழி, ‘பெரும! நீ இவளைப் பிரிந்து வாழ்தல் அறமன்று’ என்று தலைவனிடம் கூறி, அவன் பயணத்தைத் தடுத்து நிறுத்தியது.

தன்கடற் பிறந்த முத்தின் ஆரமும்,
முனைதிறை கொடுக்கும் துப்பின், தன்மலைத்
தெறல்அரும் மரபின் கடவுட் பேணி,
குறவர் தந்த சந்தின் ஆரமும்
இருபேர் ஆரமும் எழில்பெற அணியும்
திருவீழ் மார்பின் தென்னவன் மறவன்—
குழியில் கொண்ட மராஅ யானை
மொழியின் உணர்த்தும் சிறுவரை அல்லது,
வரைநிலை இன்றி இரலர்க்கு ஈயும்,
வள்வாய் அம்பின், கோடைப் பொருநன்—
பண்ணி தைஇய பயம்கெழு வேள்வியின்,
விழுமிது நிகழ்வது ஆயினும்— தெற்குஏர்பு,
கழிமழை பொழிந்த பொழுதுகொள் அமையத்து,
சாயல் இன்துணை இவட்பிரிந்து உறையின்,
நோய்இன் றாக செய்பொருள்! வயிற்பட
மாசுஇல் தூமடி விரிந்த சேக்கை,
கவவுஇன் புறாமைக் கழிக— வளவயல்,
அழல்நுதி அன்ன தோகை ஈன்ற
கழனி நெல்லின் கவைமுதல் அலங்கல்
நிரம்புஅகன் செறுவில், வரம்புஅணையாத் துயல்வர,
புலம்பொடு வந்த பொழுதுகொள் வாடை,
இலங்குபூங் கரும்பின் ஏர்கழை இருந்த

வெண்குருகு நரல, வீசும்
நுண்பல் துவலைய தண்பனி நாளே!

தெளிவுரை

"தலைவ! பகைவர் அஞ்சிப் போர்க்களத்திலே தாம் செலுத்துவதற்குரிய திறையினைக் கொடுக்கும் வலிமையினைக் கொண்டவன், பாண்டியன். அவன் தென்கடலில் தோன்றிய முத்துகளாலான மாலை, தன் பொதிய மலையில் உள்ள முருகனை வழிபட்ட குறவர்கள் தந்த சந்தன மாலை ஆகிய இரு பெரிய மாலைகளையும் அழகுற அணிந்துகொள்ளும் திருமகள் உறையும் மார்பைக் கொண்டவன். கோட்டூர் பண்ணி என்பவன் அவன் படைக்குத் தலைவன். அவன், வெட்டப்பட்ட குழியில் பிடிபட்ட யானையை உரிய மொழியால் பழக்கும் சிறு பொழுதைத் தவிர வேறு பொழுதைத் தனக்கென வரையறுத்துக் கொள்ளாமல் இரவலர்களுக்கு வாரி வழங்கும் வள்ளல் தன்மை வாய்ந்தவன்; கூர்மை வாய்ந்த அம்பினை உடையவன்; 'கோடை' என்னும் மலைக்குத் தலைவன். அவன் செய்த பெரிய களவேள்வி பெரும் பயனைத் தருவது. அதுபோல, நீ தேடி வரும் பொருள் பெரும்பயன் நல்கலாம். அதனால் பயன் என்ன?

வளமிக்க வயல்களில் தீக்கொழுந்து போன்ற தோடுகளை ஈன்ற வயல்நெல், பலவாகக் கிளைத்துக் கிடக்கும்; நெற்கதிர்கள் வயல் வரப்புகளை அணையாய்க்கொண்டு கிடந்து அசையும். தனிமைத் துன்பத்தைத் தரும் பனிப்பருவ வாடைக்காற்று, பூக்களைக் கொண்ட கரும்பின் உயர்ந்த தண்டின்மீது ஒலியுண்டாக வீசும்.

மேகங்கள் தெற்கே சென்று மிக்க மழையினைப் பொழியும் கூதிர்க்காலம் இது; இனிய துணைவியான இவளைப் பிரிந்து வேற்று நாட்டிலே நீ தங்குவாயாயின், மாசில்லாத தூய துகில் விரிக்கப்பட்ட படுக்கையில் உன்னைத் தழுவிப் பெறுகின்ற இன்பம் இவளுக்கு வாய்க்காது போவதாயினும் போகட்டும். அது ஒரு பொருட்டன்று. நீ தேடும் பொருள் ஒரு குறையுமின்றி உனக்கு வாய்க்கட்டும்.

தக்க காலத்தில் பெற வேண்டிய இன்பத்தை நீ இழக்கத் துணிந்தாலும், நீ தேடும் பொருளுக்குக் குறையேதும் இல்லா திருக்கட்டும்!

(இங்ஙனம் வெறுப்பாய்க் கூறப்பட்டதாலும், இன்பந் துய்க்கும் காலம் பனிக்காலம் என்பதைச் சுட்டியதாலும் தலைவன் பிரிவைத் தவிர்ப்பான்.)

கருத்து

பனிக்காலத்தில் தலைவியைப் பிரிதல் அறமன்று.

விளக்கம்

பொருள்வயிற்பிரியலுற்ற தலைவனிடம் தோழி, கூதிர்க் காலத்து இன்துணையாகிய தலைவியைப் பிரிந்து நீ ஈட்டும் பொருள் துன்பமின்றி நிறையட்டும்" என்றாள். இதன்வழி, "கூதிர்க்காலத்து இன்துணையாய் அமைபவள், தலைவி; இக்காலத்தில் இவளைப் பிரிந்து பொருள் செய்தல் உன்னால் இயலாது" என்பதைச் சொல்லாமல் சொல்லி, தலைவனைச் செல்லாமல் தடுத்தாள்.

குறிப்பு

கரும்பின் கழைமேலிருந்த குருகு, சிறகாகிய போர்வையைக் கொண்ட தாயிருந்தும் (துணையாயிருந்தும்) அது கதறுமாறு வாடைக்காற்று வீசும் பனி நாள் என்பதால், குளிர் அடங்க அணைக்கும் கேளிரைப் பிரிந்த மகளிரை அவ்வாடை எவ்வாறு வருத்தும் என்பதைக் குறிப்பால் அறிந்துகொள்ள வைத்தாள், தோழி.

சொற்பொருள்

1. ஆரம் - மாலை.
2. முனை - பகைவர்; துப்பு - வலிமை; தன் மலை - தன்னுடைய பொதியில் மலை.
3. தெறல்அரு மரபு - பகைவரால் வெல்லுதற்கு இயலாத தன்மை; கடவுள் - முருகன்.
4. சந்து - சந்தனம்.
5. இருபேர் ஆரம் - பெரிய இரு மாலை.
6. திரு - திருமகள்; வீழ் - விரும்பும்; தென்னவன் - பாண்டியன்; மறவன் - படைத்தலைவன்.

7. மராஅ யானை - பழகாத யானை.
8. மொழியின் உணர்த்தும் - உரிய மொழியால் (யானை உணரும் மொழியால்) பழக்கும்; சிறுவரை - சிறு பொழுது.
9. வரைநிலை - தனக்கெனச் சிறிதும் வரைந்துகொள்ளும் நிலைமையின்றி; ஈயும் - வழங்கும்.
10. வள்வாய் - கூர்மை வாய்ந்த; கோடை - கோடை என்னும் மலைக்கு.
11. பண்ணி - பாண்டியன் படைத்தலைவன்; தைஇய - செய்த; பயன்கெழு - பயன் மிக்க.
12. விழுமிது - சிறந்தது; தெற்குஏர்பு - தெற்கே எழுந்து போய்.
13. கழிமழை - மிக்க மழை; அமையம் - கூதிர்க்காலம்.
14. சாயல் - மென்மையான; உறையின் - தங்குவீராயின்.
15. நோய்இன்று ஆக - எக்குறையும் நேராது ஒழிக; வயிற்பட - தக்க இடத்தே.
16. மாசுஇல் - குற்றமற்ற; தூ - தூய; மடி - அறுவை, துகில்; சேக்கை - படுக்கை.
17. கவவுதல் - தழுவுதல்; கழிக - (நீங்கினும்) நீங்குக.
18. அழல்நுதி - தீக்கொழுந்து; தோகை - தோடு.
19. கழனி - வயல்; இன் - ஈன்ற; கவை - பிளப்பு; அலங்கல் - அசையும் கதிர்.
20. நிரம்பு - நிரம்பிய; அகன் - அகன்ற; செறு - வயல்; வரம்பு - வரப்பு; துயல்வர - கிடந்து அசைய.
21. புலம்பு - தனிமை; வாடை - வாடைக்காற்று.
22. ஏர் கழை - உயர்ந்த தண்டு.
23. குருகு - கொக்கு; நரல - ஒலிக்க.
24. துவலை - துளி.

தோழி கூற்று

நாலடியார் 393 சமணப் புலவர் ஒருவர் - பெயரை அறிய இயலவில்லை

திணை : பாலை

கூற்று

தலைமகள் செலவுடன்படாமையைத் தோழி, தலைமகனுக்குக் கூறியது.

கூற்று விளக்கம்

தலைவன் பொருள் தேடி வரப் பிரிந்து செல்ல எண்ணினான். அவன் பயணத்தைத் தடுக்க, தலைவியின் ஆற்றாமை நிலையைக் கூறி தோழி, தலைவனுக்குக் கூறியது.

கம்மம்செய் மாக்கள் கருவி ஒடுக்கிய
மம்மர்கொள் மாலை, மலர்ஆய்ந்து பூத்தொடுப்பாள்,
கைம்மாலை இட்டுக் கலுழ்ந்தாள் துணையில்லார்க்கு
இம்மாலை என்செய்வ(து) என்று?

தெளிவுரை

"கம்மியத் தொழிலைச் செய்கின்ற மக்கள், தம் வேலையை நிறுத்தி, கருவிகளை எடுத்து வைக்கும் மயக்கம் பொருந்திய மாலைக் காலம்; மலர்களை ஆய்ந்தெடுத்து, மாலையாகத் தொடுத்து, அம்மாலையைக் கையில் வைத்திருந்த தலைவி, அதனைக் கீழே நழுவ விட்டு, 'தலைவன் இல்லாத மகளிர்க்கு இம்மாலை நேரத்தில் இம்மலர் மாலை என்ன பயனைத் தரப் போகிறது' என்று பெருமூச்செறிந்து அழுதாள்" என்று தோழி தலைவனுக்குக் கூறி அவன் செலவினைத் தவிர்த்தாள்.

கருத்து

காதலன் இல்லா மாலை நேரம் காதலிக்குக் கண்ணீரையே வரவழைக்கும்.

சொற்பொருள்

1. கம்மம் - கம்மியர் தொழில் - பொன், வெள்ளி முதலியவை கொண்டு செய்யும் தொழில்; ஒடுக்கிய - அடங்கச் செய்த.
2. மம்மர் - மயக்கம்; பூத்தொடுப்பாள் - மாலை தொடுக்கும் தலைவி.

3. இட்டு - நழுவவிட்டு; கலுழ்ந்தாள் - அழுதாள்.
4. இம்மாலை - இம்மாலைப் பொழுது; என்செய்வது- என்ன பயனைத் தரப்போகிறது?

தோழி கூற்று

ஐங்குறுநூறு 308 **ஓதலாந்தையார்**

திணை : பாலை

கூற்று

'பிரிவல்' என்ற தலைமகற்குத் தோழி, 'பிரியாதொழியப்பெறின் நன்று; பிரிவையாயின் இப்பருவத்து இம்மாமலை எங்களை விட்டுப் பிரிந்தாற் பிரி' எனச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன், பொருள் தேடப் பிரிவதாய்த் தோழியிடம் கூறினான். அதற்கு அவள், 'இப்பருவத்தில் இப்பெரிய மலை எங்களை விட்டுப் பிரிந்தால் நீயும் பிரியலாம்' என்று அவன் பிரியலாகாது என்ற கருத்துத் தோன்றச் சொல்லியது.

பல்இருங் கூந்தல் மெல்லிய லோள்வயின்
பிரியாய் ஆயினும் நன்றே; விரிஇணர்க்
கால்எறுழ் ஒள்வீ தாஅய
முருகுஅமர் மாமலைப் பிரிந்தெனப் பிரிமே.

தெளிவுரை

"அடர்ந்த கருமையான கூந்தலையும் மென்மையான இயல் பினையும் கொண்ட தலைவியை நீ பிரியாதிருத்தல் நல்லது. எறுழ மரத்தின் விரிந்த ஒளி பொருந்திய கொத்துக்கொத்தான மலர்கள் விழுந்து பரந்துகிடக்கும் இம்மலையில் முருகப் பெருமான் விரும்பி அமர்ந்துள்ளார். அவர் இம்மலையை விட்டுப் பிரிந்தால் நீயும் பிரி."

கருத்து

இம்மலையில் தங்கியிருக்கும் முருகன் இம்மலையை விட்டுப் பிரிவ தானால் நீயும் எம்மைவிட்டுப் பிரியலாம்.

விளக்கம்

தலைவன் பண்டு களவுக்காலத்தில் தலைவியைத் தெளிவிக்கும் பொருட்டு முருகன் உறையும் மலையையும் அவன் அடிகளையும் சுட்டி, 'நான் இனி எப்பொழுதும் பிரியேன்' என்று சூளுரைத்தான். ஆதலின், அச்சூளினை நினைவூட்டி, 'முருகன் இம்மாமலையை விட்டுப் பிரியும்போது நீயும் பிரிக' என்றாள், தோழி.

குறிப்பு

காய்த்துப் பலன் தருதற்குரிய எறுழின் ஒளிமிக்க மலர் வேனிலால் அலைப்புண்டு விழுந்து பரந்து கிடக்கும். அதுபோல, இவளும் பிரிவின் வெம்மையால் நலனழிந்து வாடிச் சோர்ந்து அழிவெய்துவள் என்பது குறிப்புப் பொருள்.

சொற்பொருள்

1. பல் இருங்கூந்தல் - அடர்ந்த கரிய கூந்தல்; மெல்இயலோள் - மெல்லிய தன்மை வாய்ந்த தலைவி.
2. விரிஇணர் - விரிந்த பூங்கொத்து.
3. கால் - அடிமரம்; எறுழ் - எறுழ மரம்; ஒள்வீ - ஒளியுடைய மலர்; தாஅய - பரந்த.
4. முருகு - முருகக் கடவுள்; அமர் - விரும்பும்; பிரிந்தென - பிரிந்தால்.

தோழி கூற்று

கலித்தொகை 3 | **பாலைபாடிய பெருங்கடுங்கோ**

திணை : பாலை

கூற்று

தலைமகனால் பிரிவுணர்த்தப்பட்ட தோழி, தலைமகட்கு அஃது உரைத்து, அவளது ஆற்றாமையின் வகை தலைமகற்கு உணர்த்தவும், பின்னும் பிரிவின்மேல் சென்ற உள்ளத்தனாயினானை, 'நீர் செல்லும் கானமே நும்மை இடிக்கும் கேளிர்போல விலக்கு' என, அவன் செலவழுங்கும்வகை அவள் கூறியது.

கூற்று விளக்கம்

தான் பொருளுக்காகப் பிரியவிருப்பதைத் தலைவன் தோழியிடம் கூறினான். அவள் அதைத் தலைவியிடம் கூறியபோது அவளால் அதைப் பொறுத்துக் கொள்ள இயலவில்லை. அதனைத் தோழி தலைவனிடம் கூறியபோதும் தான் பிரியவிருப்பதாகவே அவன் கூறினான். தோழி அவனிடம் அவன் செல்லும் காட்டுவழியே அவனைச் செல்லாது தடுக்கும் காட்சிகளைக் கொண்டனவாயிருக்கும் என்றுரைத்து, அவன் தன் பயணத்தைக் கைவிடுமாறு கூறியது.

தரவு

அறனின்றி அயல்தூற்றும் அம்பலை நாணியும்
வறன்நீந்தி நீசெல்லும் நீள்இடை நினைப்பவும்
இறைநில்லா வளைஓட, இதழ்சோர்பு பனிமல்கப்
பொறைநில்லா நோயோடு புல்என்ற நுதல்இவள்
விறன்நலன் இழப்பவும், வினைவேட்டாய்! கேள்,இனி;

தாழிசை

'உடைஇவள் உயிர்வாழாள், நீநீப்பின்' எனப்பல
இடைகொண்டுயாம் இரப்பவும், எமகொள்ளாய் ஆயினை;
கடைஇய ஆற்றிடை, நீர்நீத்த வறுஞ்சுனை,
அடையொடு வாடிய அணிமலர் – தகைப்பன.

'வல்லைநீ துறப்பாயேல், வகைவாடும் இவள்'என,
ஒல்லாங்குயாம் இரப்பவும், உணர்ந்தீயாய் ஆயினை;
செல்லும்நீள் ஆற்றிடைச் சேர்ந்தெழுந்த மரம்வாடப்
புல்லுவிட்டு இறைஞ்சிய பூங்கொடி – தகைப்பன.

'பிணிபுநீ விடல்சூழின், பிறழ்தரும் இவள்'எனப்
பணிபுவந்து இரப்பவும், பலசூழ்வாய் ஆயினை;
துணிபுநீ செலக்கண்ட ஆற்றிடை, அம்மரத்து
அணிசெல, வாடிய அந்தளிர் – தகைப்பன.

எனவாங்கு –

சுரிதகம்

யாம்நிற் கூறவும் எமகொள்ளாய் ஆயினை;
ஆனாது இவள்போல் அருள்வந் தவைகாட்டி,

மேல்நின்று மெய்கூறும் கேளிர்போல், நீசெல்லுங்
கானம், தகைப்ப, செலவு.

தெளிவுரை

"*தலைவ! நீ பொருள்வயிற்பிரியக் கருதியிருப்பதைத் தலைவியிடம் கூறினேன். அதனால் அவள் உடல் மெலிந்து, முன் கையிலிருந்த வளையல்கள் கழன்று விழுந்தன; கண்ணிமைகள் சோர்வுற்று நனையுமாறு கண்ணீர் பெருகியது; தாங்குதற்கரிய பிரிவு நோயினால் அவள் நெற்றி பொலிவிழந்தது; அயலிலுள்ளார் அறம் சிறிதுமில்லாமல் கூறிய பழிச்சொற்களைக் கேட்டு நாணத்தால் குன்றிப்போனாள். இங்ஙனம் அவள் தன் நலனை இழந்தாளாயினும், நீயோ, நீ கருதியுள்ள வறட்சிமிக்க நீண்ட வழிப் பயணத்தை மேற்கொள்ளவே விரும்பியுள்ளாய். இப்போது நான் கூறுவதைக் கேள்!*

"*நீ பிரிந்து சென்றால் இவள் உயிரோடு இருக்க மாட்டாள் என்று பலவாறாக யாம் இரந்து வேண்டியும், எம் சொற்களை நீ ஏற்பதாய் இல்லை. (எங்களால் உன்னைத் தடுக்க இயலாது போயினும்) நீ செல்லும் வழியில் நீர் முற்றிலுமாய் வற்றிவிட்ட சுனையில் இலைத்தொகுதியோடு வாடிக் கிடக்கும் அழகிய மலர்கள் உன் பயணத்தைத் தடுக்கும்.*

"*நீ பிரிந்து சென்றால், வகையுற அமைந்துள்ள இவள் எழில் விரைவில் கெடும் என்று உன்னிடம் பொருந்தும் வகையில் நாங்கள் கெஞ்சிக் கூறினோம்; ஆயினும், நீ அதை உணர்ந்து அருள் செய்பவனாய் இல்லை. நீ செல்லும் வழியில், பூங்கொடிகள் பற்றிப் படர்ந்திருந்த மரம் வறட்சியால் வாடியதால், அக்கொடிகள் அம்மரத்தைத் தழுவியிருப்பதை விட்டுக் கீழே விழுந்து வாடிக் கிடக்கும்; அக்கொடிகள் உன் பயணத்தைத் தடுத்து நிறுத்தும்.*

"*இவளோடு கொண்டுள்ள உறவுப்பிணைப்பினை விட்டு நீ பிரிந்து செல்லத் துணிந்தால் இவள் இறந்துபடுவாள் என்று பணிவுடன் கூறியும், உன் பயணம்பற்றியே நீ பலவும் சிந்திக்கின்றாய். நீ துணிந்து செல்லும் வழியில் அழகு மாறி வாடி*

நிற்கும் மரத்தின் பொலிவற்ற தளிர்கள் இவளை நினைப்பூட்டி உன்னைத் தடுக்கும்.

"நாம் பலவாறு உன்னிடம் கூறியும், எம் வேண்டுகோளை நீ ஏற்கவில்லை. உனக்கும் மேலாக நின்று உண்மைகளை விளக்கிக் கூறும் உன் உறவினர்போல, நீ செல்லும் காடு 'நீயில்லாது இவள் இல்லை' என்று அருள் வருவதற்குக் காரணமாயினவற்றை மேன் மேலும் காட்டி, உன் பயணத்தைத் தடுக்கும்."

கருத்து

தலைவ! நீ பிரிந்து செல்லின் காட்டில் காணும் காட்சிகளே தலைவி உயிர் வாழாள் என்பதைப் புலப்படுத்தி உன் பயணத்தைத் தடுக்கும்.

விளக்கம்

தலைவன் செல்லும் வழியில் சுனை வற்றியதால் இலையொடு காய்ந்துவிட்ட மலரும்;

மரம் வெப்பத்தால் வாடி வற்றியதால் அம்மரத்தில் படர்ந் திருந்த கொடி மரத்தின் பிடிப்பை விட்டுக் கீழே விழுந்து கிடக்கும். அக்கொடியும், வெப்பத்தால் மரத்தில் வாடி அழகிழந் திருந்த தளிரும் ஆகியவை தலைவனது பிரிவால் வாடிய தலைவியின் நிலையை எடுத்துக் காட்டி அவனை வீடு திரும்பச் செய்யும் எனத் தோழி கூறினாள்.

சுனைநீர், தலைவன்; சுனையில் மலரும் மலர், தலைவி; நீர் வற்றினால் மலர் அழியும்.

தலைவன், கொழுகொம்பாய் நிற்கும் மரம்; தலைவி, அதனைப் பற்றிப் படரும் கொடி; மரம் வாடி வற்றினால் அதனைப் பற்றியிருந்த கொடி பிடிப்புவிட்டுக் கீழே விழும்; தலைவன் என்ற கொழுகொம்பு இல்லையாயின் தலைவி என்னும் கொடி படர வாய்ப்பில்லை.

இயற்கையிலுள்ள இந்தக் காட்சிகள் தலைவன் உள்ளத்தே, 'தன் அன்பு இல்லையாயின் தலைவி இல்லை' என்னும் எண்ணத்தைத் தோற்றுவிக்க, அவன் பயணத்தை விடுத்து வீடு திரும்புவான்.

சொற்பொருள்

1. அயல் - அயலார்; அம்பலை - பழிமொழி.
2. வறன் - வறட்சி; நீந்தி - கடந்து; நீள்இடை - நீண்ட வழி.
3. இறை - முன்கை; இதழ் - கண் இமை; சோர்பு - சோர்ந்து; பனி - நீர்; மல்க - பெருக.
4. பொறை - பொறுமை; புல் என்ற - சிறிய.
5. விறல்நலன் - பெருமை பொருந்திய அழகு; வினைவேட்டாய் - பொருள் தேடச் செல்லும் செயலை விரும்பினாய்.
6. நீப்பின் - நீங்கினால்.
7. எமகொள்ளாய் - நாங்கள் கூறியதை ஏற்கவில்லை.
8. கடைஇய - உன் உள்ளம் செலுத்திய; ஆறு - வழி; வறுஞ்சுனை - நீர் வற்றிய சுனை.
9. அடை - இலை; தகைப்பன - தடுப்பன.
10. வல்லை - விரைவு; வகை - வகைப்பாட்டுடன் அமைந்த அழகு.
11. ஒல்லாங்கு - பொருந்தும் முறையில்; உணர்ந்தீயாய் - யாம் சொன்னதைக் கேட்டு இசையாய்.
12. நீள் ஆற்றிடை - நீண்ட வழியில்.
13. புல்லுவிட்டு - பற்றியிருப்பதை விட்டு; இறைஞ்சிய - கீழே வீழ்ந்த.
14. பிணிபு - சேர்ந்திருப்பதை; சூழின் - நினைந்தால்; பிறழ்தரும் - இறந்து படுவள்.
15. சூழ்வாய் - சிந்தனை செய்வாய்.
16. ஆற்றிடை - வழியில்.
17. அணிசெல - அழகு கெட.
18. எனவாங்கு - என்று.
19. எம் கொள்ளாய் - எம் சொற்களை நீ ஏற்றுக்கொள்ளவில்லை.
20. ஆனாது - அமையாது.
21. மேல் நின்று - உனக்கு மேலே இருந்து; மெய் கூறும் - உறுதிப் பொருளைக் கூறும்; கேளிர் - உறவினர்.
22. கானம் தகைப்ப செலவு - காட்டுவழியிலுள்ள இயற்கைக் காட்சிகள் உன் பயணத்தைத் தடுத்து நிறுத்தும்.

தோழி கூற்று

கலித்தொகை 4 **பாலை பாடிய பெருங்கடுங்கோ**

திணை : பாலை

கூற்று

'பொருள் வயிற் பிரிவேன்' என்ற தலைமகற்குத் தோழி தலைவி செலவுக் குறிப்பு அறிந்தவாறும், அவளது ஆற்றாமையும் உணர்த்தி, 'செலவு ஒழிவாயாக' எனக் கூறியது.

கூற்று விளக்கம்

பொருளீட்டும்பொருட்டுப் பிரியக் கருதியுள்ள தலைவனிடம் தோழி, அவன் பிரியக் கருதியுள்ளதைத் தலைவி அறிந்துள்ளாள் என்றும், பிரிந்தால் அவளால் பொறுத்துக்கொள்ள இயலாது என்றும் உணர்த்திப் பிரிவை நிறுத்துமாறு கூறியது.

தரவு

வலிமுன்பின், வல்லென்ற யாக்கை, புலிநோக்கின்
சுற்றமை வில்லர், சுரிவளர் பித்தையர்,
அற்றம்பார்த்து அல்கும் கடுங்கண் மறவர்தாம்
கொள்ளும் பொருள்இலர் ஆயினும், வம்பலர்
துள்ளுநர்க் காண்மார் தொடர்ந்துயிர் வௌவலின்,
புள்ளும் வழங்காப் புலம்புகொள் ஆரிடை,
வெள்வேல் வலத்திர், பொருள்தரல் வேட்கையின்,
உள்ளினர் என்பது அறிந்தனள் என்தோழி.

தாழிசை

'காழ்விரி கவைஆரம் மீவரும் இளமுலை
போழ்துஇடைப் படாஅமல் முயங்கியும் அமையார்,என்
தாழ்கதுப்பு அணிகுவர், காதலர்; மற்றுஅவர்
சூழ்வதை எவன்கொல்? அறியேன்!' என்னும்.

'முள்உறழ் முளைஎயிற்று அமிழ்துஊறும் தீநீரைக்
கள்ளினும் மகிழ்செயும் எனவுரைத்தும், அமையார்,என்
ஒள்ளிழை திருத்துவர், காதலர்; மற்றுஅவர்
உள்ளுவது எவன்கொல்? அறியேன்!' என்னும்.

'நுண்ணெழில் மாமைச் சுணங்கணி ஆகம்தம்
கண்ணொடு தொடுத்தென நோக்கியும் அமையார்,என்
ஒண்ணுதல் நீவுவர், காதலர்; மற்றுஅவர்
எண்ணுவது எவன்கொல்? அறியேன்!' என்னும்.

எனவாங்கு–

சுரிதகம்

'கழிபெரு நல்கல்ஒன்று உடைத்து'என, என்தோழி
அழிவொடு கலங்கிய எவ்வத்தள்; ஒருநாள்நீர்,
பொழுதுஇடைப் படநீப்பின், வாழ்வாளோ?
ஒழிகஇனிப் பெரும!நின் பொருட்பிணிச் செலவே.

தெளிவுரை

"மறவர்கள் மிக்க வலிமையும், கட்டான உடம்பும், புலி போன்ற பார்வையும் கொண்டவர்கள்; வரிச்சுற்றமைந்த வில்லினைக் கையில் கொண்டவர்; சுருண்டு வளர்ந்த கூந்தலைக் கொண்டவர்; அவ்வழியே வருவோரைக் கொள்ளையிடச் சமயம் பார்த்துத் தங்கியிருக்கும் கடுமையான கண்களைக் கொண்டவர்; அம்மறவர்கள் புதிதாய் வருகின்ற வழிப்போக்கர் களிடம் பறித்துக் கொள்ளப் பொருள் ஏதும் இல்லையாயினும் அவர்கள் துடிதுடித்து இறந்து வீழ்வதைக் காண்பதற்காகவே தொடர்ந்து வழிப்போக்கர்களின் உயிரை வாங்கிக்கொண்டி ருப்பர்; அதனால் பறவைகளும் அஞ்சி நடுங்கி அவ்வழியே பறப்பதில்லை. அத்தகைய கொடிய வழியில், பொருள் தேடும் எண்ணத்தினால் கையிலே வெள்ளிய வேலை ஏந்திச் செல்லும் தலைவ! நீர் பிரிந்து செல்ல உள்ளீர் என்பதைத் தலைவி அறிந்துள்ளாள்.

(எவ்வாறெனில்)

'மணிக்கோவைகளுடன் முத்தாரங்கள் கிடந்தசையும் என் இளைய முலையை இடைவிடாமல் தழுவியும் வேட்கை தணியாமல் தலைவர் என் கூந்தலைத் திருத்தியும் அணி செய்தார். அவர் மனத்தில் எண்ணியுள்ள கருத்து யாதோ?' என்று தலைவி கூறுகிறாள்.

'கூரிய முள்ளினையொத்த நாணல் முளை போன்ற உன் பற்களில் ஊறும் அமிழ்தமாகிய நீர், கள்ளினும் மிக்க களிப்பினை ஊட்டுகிறது என்று, பருகியும் தணியாமல், காதலர் என் ஒளி பொருந்திய அணிகளைத் திருத்தமும் செய்தார். அவர் கருதுவது யாதோ?' என்றும் தலைவி கூறுகிறாள்.

'நுண்ணிய அழகிய தேமல் படர்ந்துள்ள என் மார்பைத் தன் கண் எதிரே கட்டி வைத்திருப்பதுபோல இமையாமல் பார்த்தும் வேட்கை தணியாதவராய், காதலர் என் ஒளிமிக்க நெற்றியை நீவியும் விடுவார். அவர் என்ன கருதியுள்ளாரோ அறியேன்' என்றும் தலைவி கூறுகிறாள்.

இவ்வாறு, புணர்ச்சிக்குப் பின் அதிகமாய்ச் செய்கின்ற அருள், ஏதோ ஒரு குறிப்பை - அஃதாவது, பிரியும் கருத்தைக் கொண்டது என்று உட்கொண்டு என் தோழியாகிய தலைவி நெஞ்சுடைந்து கலங்குகிறாள். நீ ஒருநாள் இவளை விட்டுப் பிரியினும் இவள் உயிர் வாழமாட்டாள். ஆதலால், பெரும! நீ பொருளுக்காகப் பிரியவிருக்கும் பயணத்தைக் கைவிடு" எனத் தோழி தலைவனிடம் கூறினாள்.

கருத்து

தலைவ! நீ மிகுதியாய்க் காட்டும் அன்பே நீ பிரிய இருப்பதைப் புலப்படுத்துகிறது. தலைவன் பிரியின் தலைவி உயிர் வாழாள்.

விளக்கம்

"புணர்ச்சிக்குப் பின்னர்த் தலைவன் தன் விருப்ப மிகுதியைத் தழுவல், இதழ் பருகல், இடைவிடாது நோக்கியிருத்தல் எனப் பல வகையாய் உணர்த்தினான். தலைவி, அவற்றின் உட்கருத்து, பிரிவைப் புலப்படுத்துவதே என்பதை அறிந்து நெஞ்சழிய வருந்தியிருக்கிறாள். உன் பிரிவு ஒரு நாளேயாயினும் பொறாமல் அவள் உயிர் விடுவாள். ஆதலின், பெரும! உன் பயணத்தைக் கைவிடு" எனத் தோழி கூறினாள்.

குறிப்பு

தலைவனின் அன்புச்செயல்களாகிய கூந்தலைத் திருத்துதல், அணிமணி களைச் சரி செய்தல், தலைவியையே உற்று நோக்கிப் பார்த்தபடியிருத்தல்

முதலாயின வழக்கத்திற்கு மாறாய் மிகுதியாய் இருக்குமாயின், அவை தலைவன் பிரியவிருக்கிறான் என்பதைக் குறிப்பாய் உணர்த்தும்.

சொற்பொருள்

1. வலி, முன்பு - வலிமை (இரு சொற்கள் ஒரே பொருள் தரும்); வல்லென்ற - திண்ணிய.
2. சுற்றமை வில்லர் - வரிச்சுற்றுகளைக் கொண்ட வில்லினை உடையவர்; சுரி - சுருள்; பித்தை - கூந்தல்.
3. அற்றம் - ஏற்ற காலம்; அல்கும் - காத்திருக்கும்.
4. கொள்ளும் பொருள் - கொள்ளையடிக்கும் பொருள்; வம்பலர் - வழியில் புதிதாய் வருபவர்.
5. காண்மார் - காண்பதற்காக; வௌவல் - பறித்தல்.
6. புள் - பறவை; வழங்கா - பறவாத; புலம்பு - துன்பம், தனிமை.
7. வலத்திர் - ஆண்மையைக் கொண்டவர்; வேட்கை - விருப்பம்.
8. உள்ளினிர் - எண்ணம் கொண்டுள்ளீர்.
9. காழ் - முத்துமாலை; மீவரும் - மேல கிடந்து புரளும்.
10. போழ்து - இடைவிடாது; முயங்குதல் - தழுவுதல்; அமையார் - மன நிறைவு கொள்ளார்.
11. தாழ் கதுப்பு - தாழ்ந்து தொங்கும் கூந்தல்; அணிகுவர் - செப்பம் செய்வார்.
12. சூழ்தல் - நினைத்தல்; எவன்கொல்? - எதுவோ (அறியேன்.)
13. உறழ் - ஒத்த; முளை எயிறு - நாணல் முளை போன்ற பல்; தீ நீர் - இனியநீர் - இனிய நீர்.
14. மகிழ் செயும் - களிப்பூட்டும்.
15. ஒள் இழை - ஒளி பொருந்திய அணிகலன்கள்.
17. மாமை - அழகு தரும் பொன் நிறம்; சுணங்கு - தேமல்; ஆகம் - மார்பு.
18. கண்ணொடு தொடுத்தென - கண்ணுக்கு எதிரே, அசையாது வைத்துக் கட்டியது போன்று ஒரே நிலையில் அமைந்த.
19. ஒள்நுதல் - ஒளி பொருந்திய நெற்றி.
21. என ஆங்கு - என்றெல்லாம்.
22. கழி பெரு நல்கல் - வழக்கத்திற்கு மிகுந்த அன்பு.
23. அழிவு - உள்ளத் துயர்; எவ்வம் - துன்பம்.
24. பொழுது இடைப்பட - ஒரு பொழுது இடையீடுபட்டாலும்; நீப்பின் - பிரிந்தால்.
25. ஒழிக - கைவிடுக; செலவு - பயணம்.

தோழி கூற்று

கலித்தொகை 5 **பாலை பாடிய பெருங்கடுங்கோ**

திணை : பாலை

கூற்று

தலைமகன், 'பொருள்வயிற்பிரிவல்' எனக் கேட்ட தோழி, தான் ஆற்றாளாய், 'நீர் செய்யும் பொருளினும் யாம் உமக்குச் சிறந்தேம் என்பது, நும் உள்ளத்து உளதெனின், நும்மை நாளும் புள்ளும் விலக்கும்' எனவும், 'இவள் பிரிந்திருப்பார் இருக்குமாறு இருப்பாள் அல்லள்; பிரிந்த அன்றே இறந்துபடுவள்' எனவுஞ் சொல்லிச் செலவு அழுங்குவித்தது.

கூற்று விளக்கம்

தலைவன் பொருள்வயிற்பிரிவேன் எனக் கூறக் கேட்ட தோழி ஆற்றாளாய், 'நீர் ஈட்டும் பொருளைக் காட்டிலும் நாங்கள் உமக்குச் சிறந்தவர்களாயுள்ளோம் என்று நீர் எண்ணினீராயின் உம் செலவை நாளும் புள்ளும் விலக்கும் (நீக்கும்); நீர் பிரிந்திருக்க இவள் உயிர் வாழாள்; பிரிந்த அன்றே இறந்துபடுவள்' எனக் கூறி அவன் செலவைத் தவிர்த்தது.

தரவு

பாஅல் அஞ்செவிப் பணைத்தாள் மாநிரை
மாஅல் யானையொடு மறவர் மயங்கித்
தூறுஅதர் பட்ட ஆறுமயங்கு அருஞ்சுரம்
இறந்துநீர் செய்யும் பொருளினும், யாம்உமக்குச்
சிறந்தனம் ஆதல் அறிந்தனிர் ஆயின்,
நீள்இரு முந்நீர் வளிகலன் வௌவலின்
ஆள்வினைக்கு அழிந்தோர் போறல் அல்லதைக்
கேள்,பெருந் தகையோடு எவன்பல மொழிகுவம்?
நாளும் கோள்மீன் தகைத்தலும் தகைமே.

தாழிசை

கல்எனக் கவின்பெற்ற விழவுஆற்றுப் படுத்தபின்,
புல்என்ற களம்போலப் புலம்புகொண்டு, அமைவாளோ?

ஆள்பவர் கலக்குற அலைபெற்ற நாடுபோல்
பாழ்பட்ட முகத்தோடு, பைதல்கொண்டு, அமைவாளோ?

ஓர்இரா வைகலுள், தாமரைப் பொய்கையுள்

நீர்நீத்த மலர்போல, நீநீப்பின் வாழ்வாளோ?

எனவாங்கு–

சுரிதகம்

பொய்ந்நல்கல் புரிந்தனை புறந்தரல் கைவிட்டு,
எந்நாளோ, நெடுந்தகாய்! நீசெல்வது,
அந்நாள்கொண்டு இறக்கும்,இவள் அரும்பெறல் உயிரே.

தெளிவுரை

"பல பகுதிகளாயுள்ள உடல் உறுப்புகளையும், அழகிய காது களையும், பருத்த கால்களையும் கொண்ட பெரிய யானைக் கூட்டம் மதத்தால் மயங்கித் திரியும். அவற்றோடு மறவர்களும் கூட்டம் கூட்டமாய்க் கலந்து திரிவதால் புதர்களெல்லாம் அழிபட்டு வழியாயின. மற்ற வழிகளும் தெளிவின்றிக் கலந்து கிடக்கும். அத்தகைய அரிய வழிகளைக் கடந்து பொருள் ஈட்டச் செல்கின்றீர்! அப்பொருளைவிட நாங்கள் உமக்குச் சிறந்தவர் என்ற உணர்வு உமக்கு இருக்குமானால் எம்மை நீர் பிரிய மாட்டீர்.

"நீண்ட கரிய கடலில் சூறாவளிக்காற்று, கலத்தைச் சிதற அடித்தலின் (அதில் பயணம் செய்தோர்) தாம் எடுத்துக் கொண்ட முயற்சி யாதாகுமோ என்று நெஞ்சழிந்து கலங்குவர். அதுபோல, உம் பிரிவால் நாங்கள் கலங்கியழிவோம் என்பதைத் தவிர நாங்கள் வேறு என்ன கூற இயலும்?"

பெரியோய்! இன்னும் நான் கூறுவதைக் கேள்.

" 'கல்' என்னும் ஆரவாரத்தோடு அழகிய முறையில் விழா நடந்து முடிந்த பிறகு ஊர்ப் பொதுவிடம் பொலிவிழந்து காணப் படுவதுபோல, இவள் பொலிவிழந்து உம்மைப் பிரிந்து தனிமையில் ஆற்றியிருக்க இயலுமா?"

"ஆளுகின்ற அரசரால் அலைக்கழிக்கப்பட்ட நாடு பாழ்பட் டிருப்பதுபோல, இவள் பொலிவிழந்த முகத்தோடு தனிமையில் வாழ்ந்திருக்க இயலுமா?"

"நீர் நிறைந்த தாமரைக்குளம் ஓர் இரவுப்பொழுதுக்குள் வற்றி விட அதனால் வாடி வதங்கிக் கிடக்கும் தாமரை மலர்போல, நீ

பிரிந்தால் ஒருபொழுதுகூட இவளால் உயிர் வாழ்ந்திருக்க இயலாதே!"

(என்று உமக்கு யாம் சொல்லவும்)

"பெருமானே! இவளுக்கு அருள்வதுபோல் பொய்யாகக் காட்டி, இவளைப் பாதுகாப்பதைக் கைவிட்டு, என்று நீர் புறப்படுகின்றீரோ அன்றே, பெறுதற்கரிய இவள் உயிரும் நீங்கும் என்பதை அறிவீராக!"

கருத்து

'நீ பிரிந்தால் தலைவி உயிர் நில்லாது' என்று கூறித் தோழி தலைவனின் பயணத்தைத் தடுத்தாள்.

விளக்கம்

"தலைவ! விழா நடக்கும்போது ஊர் கலகலப்பாய் இருப்பது போல், நீ உடனிருக்கும்போது தலைவியும் பொலிவுடன் விளங்கு வாள்; விழா முடிந்ததும் ஊர் ஆரவாரமின்றித் தனிமையுறுவது போல, இவளும் நீ பிரிந்தால் களையிழந்து துயரால் வருந்துவாள்."

"அரசன் நல்லாட்சி செய்தால் மக்கள் வளமும் நலமும் பெற்று மகிழ்வர். அதுபோல, நீ இவளைப் பாதுகாத்திருப்பின் அழகும் நலமும் பெற்றுத் திகழ்வாள். நீ பிரிந்தாலோ கொடுங் கோல் மன்னன் நாட்டில் மக்கள் அஞ்சியஞ்சி அழிவார்களே, அதுபோல் இவளும் துன்பத்தால் துவண்டு அழிவாள்."

"குளத்தில் நீர் இருக்கும்போது தாமரை அழகோடு விளங்கு வது போல, நீ சேர்ந்திருக்கும்போது இவள் எழிலுடன் திகழ் வாள். இரவோடிரவாக நீர் வற்றிவிட்டால், அந்நீரிலுள்ள மலர் வாடி வதங்கி அழிவதுபோல, நீ பிரியும் அப்பொழுதே இவள் உயிரும் பிரிந்துவிடும்" என்று தலைவியின் நிலையை எடுத்துக் கூறித் தோழி, தலைவனின் பயணத்தைத் தடுக்கிறாள்."

சொற்பொருள்

1. பால் - பகுதி; அம்செவி - அழகிய காது; பணைத்தாள் - பருத்த கால்; மாநிரை - யானைக்கூட்டம்.

2. மால் - மயக்கம்.
3. தூறு - புதர்; அதர்பட்ட - வழியாயின.
4. இறந்து - கடந்து.
6. நீள் இரு - நீண்ட கரிய; முந்நீர் - கடல்; வளி - (சூறாவளிக்) காற்று; கலன் வௌவலின் - மரக்கலத்தைச் சிதைத்தலின்.
7. ஆள்வினை - முயற்சி; அழிந்தோர் - (முயற்சி பாழாதல் கண்டு) மனம் உடைந்தோர்.
8. எவன்பல மொழிகுவம்? - எவ்வாறு பல சொல் சொல்லித் (தடுக்க இயலும்?).
9. நாள் - நன்னாள்; கோள் - கிரகம்; தகைத்தலும் தகைமே - தடுக்கவும் தடுக்கலாம்.
10. கல் - ஆரவாரம்; கவின் - அழகு; ஆற்றுப்படுத்தபின் - நடந்து முடிந்த பிறகு.
11. புல் - தனிமை; களம் - ஊர் மன்றம்; புலம்பு - தனிமை.
12. ஆள்பவர் - நாட்டை ஆள்பவர்; கலக்குற - கலங்கச்செய்ய; அலை பெற்ற - வருத்தமுற்ற.
13. பைதல் - துன்பம்.
14. ஓர் இரா வைகல் - ஓர் இரவுப்பொழுது.
15. நீப்பின் - பிரிந்தால்.
17. பொய் நல்கல் - பொய்யான அன்பு; புறந்தரல் - பாதுகாத்தல்.
18. நெடுந்தகாய் - பெருமைக்குரியவனே.

தோழி கூற்று

கலித்தொகை 7 **பாலை பாடிய பெருங்கடுங்கோ**

திணை : பாலை

கூற்று

பிரிவுணர்த்தப்பட்ட தோழி தலைமகற்கு, 'நீர் பிரிகின்றீரென்று யான் கூறத் தலைமகள் கேட்பின், அவட்கு அக்காலத்து நிகழ்வனவற்றை, நும்மோடு ஆராய்வதுடையேன்; நீர் செய்யும் பொருள் இவள் உயிரையுந் தருகிற்குமோ?' எனச் செலவு அழுங்கக் கூறியது.

கூற்று விளக்கம்

தலைவன் தன் பிரிவைப்பற்றித் தோழியிடம் கூற, அவள், "நான் தலைவியிடம் இச்செய்தியைக் கூறினால் அவளுக்கு என்ன நேரும்

என்பதை இப்போது உங்கட்குக் கூறுகிறேன். கேட்ட பின்னர், நீர் ஈட்டவிருக்கும் பொருள் இவள் உயிரை மீட்டுத் தருமா என்று எண்ணிப் பாருங்கள்" என்று சொல்லி அவன் பயணத்தைத் தவிர்க்குமாறு கூறியது.

தரவு

வேனில் உழந்த வறிதுஉயங்கு ஓய்களிறு
வான்நீங்கு வைப்பின் வழங்காத்தேர் நீர்க்குஅவாஅம்
கானம் கடத்திர், எனக்கேட்பின், யான்ஒன்று,
உசாவுகோ – ஐய! சிறிது?

தாழிசை

நீயே,செய்வினை மருங்கில் செலவுஅயர்ந்து, யாழநின்
கைபுனை வல்வில் ஞாண்உளர் தீயே;
இவட்கே, செய்வுஉறு மண்டிலம் மையாப் பதுபோல்,
மைஇல் வாள்முகம் பசப்புஊ ரும்மே;

நீயே,வினைமாண் காழகம் வீங்கக் கட்டிப்
புனைமாண் மரீஇய அம்பு தெரிதியே;
இவட்கே, சுனைமாண் நீலம் கார்எதிர் பவைபோல்,
இனைநோக்கு உண்கண் நீர்நில் லாவே;

நீயே, புலம்புஇல் உள்ளமொடு பொருள்வயின் செலீஇய,
வலம்படு திகிரி வாய்நீ வுதியே;
இவட்கே அலங்குஇதழ்க் கோடல் வீஉகு பவைபோல்,
இலங்குஏர் எல்வளை இறைஊ ரும்மே.

என நின் –

சுரிதகம்

செல்நவை அரவத்தும் இனையவள் நீநீப்பின்,
தன்நலம் கடைகொளப் படுதலின், மற்றுஇவள்
இன்னுயிர் தருதலும் ஆற்றுமோ –
முன்னிய தேஎத்து முயன்றுசெய் பொருளே?

தெளிவுரை

" '*ஐயனே! வேனிற்கால வெப்பத்தால் மழை பெய்யாமையினால் வருந்தி மெலிந்து உடல் ஒய்ந்த ஆண்யானை, கானல் நீரை உண்மையான நீரென்று கருதிக் குடிக்கச் செல்லுகின்ற*

காட்டினைக் கடந்து, பொருள் தேடி வருவேன் என்று கூறுகின்றாய். இதைத் தலைவியிடம் கூறினால் அவள் மனநிலை என்ன ஆகும் என்பது பற்றி உன்னிடம் பேசலாமா?'

'நீயோ, பொருளீட்டுவதற்காகப் பிரிந்து செல்ல விரும்பி, உம் கையாலேயே செய்த வலிய அழகிய வில்லின் நாணினைத் தடவுகின்றாய்; அவளிடமோ களங்கமில்லாது அமைந்த திங்களின் மேற்பரப்பில் மேகம் படர்வதுபோல, குற்ற மொன்றில்லாத ஒளி பொருந்திய முகத்தில் பசலை நிறம் படர்ந்து தோன்றுகிறது.'

'நீயோ, தொழிலில் மாட்சிமைப்பட்ட கையுறையை இறுகக் கட்டிப் பொருத்தமான அம்புகளைத் தேர்ந்தெடுத்துக் கொண்டிருக்கிறாய். அவளிடமோ சுனையிலுள்ள நீல மலர்கள் மழையால் நனைவதுபோலக் கண்களில் நீர் ததும்புகின்றது.'

'நீயோ, தலைவியின் தனிமையைப் பற்றிச் சிறிதும் சிந்தி த்திடாது பொருள் ஈட்டுவதையே எண்ணியவாறு வெற்றியைத் தருகின்ற சக்கரத்தின் விளிம்பினைத் தூய்மை செய்கின்றாய். அவளிடமோ காந்தள் மலர் முதிர்ந்து உதிர்வதுபோல் கைவளைகள் கழன்று விழுகின்றன.'

'பிரிவதற்காக நீ ஏற்பாடு செய்யும்போதே அவள் நிலைமை இத்தகையது ஆகிறது என்றால், நீ பிரிந்துவிட்டால் அவள் நிலைமை என்ன ஆகுமோ? நீ புறப்படும்போதே அவள் உயிரும் போய்விடும். நீ முயன்று தேடப்போகும் பொருள் அந்த உயிரை மீட்டுத் தருமா? சிந்தித்துப் பார்.' "

கருத்து

'தலைவ! நீ ஈட்டும் பொருள் இவள் உயிரை மீட்டுத் தருமா?' என்று தோழி கூறி அவன் பயணத்தைத் தடுத்தாள்.

'பொருள் பெரிதா, தலைவியின் உயிர் பெரிதா; நீ முயன்று ஈட்டிவரும் பொருள் தலைவியின் உயிரை மீட்டுத் தருமா?' என்று வினவி, தோழி தலைவனின் பயணத்தைத் தடுத்து நிறுத்தினாள்.

விளக்கம்

" '*தலைவ! நீ பொருளீட்டும்பொருட்டு மழையற்ற கடுமை யான காட்டுவழியே செல்வதாய்க் கூறுகின்றாய். அதனால் வில்லினை எடுத்து நாணைத் தடவுகின்றாய். தலைவியின் அழகிய முகத்திலோ, முழுமதியின்மீது முகில் படிவதுபோல, பசலை படர்கின்றது.*'

'*நீ பொருத்தமான அம்புகளைத் தேர்ந்தெடுக்கிறாய்; தலைவி யின் கண்களிலோ, சுனையிலுள்ள நீலமலர்களில் மழை நீர் ததும்புவதுபோல, கண்ணீர் ததும்பிக்கொண்டிருக்கிறது.*'

'*நீ, தலைவியின் தனிமையைச் சிறிதும் கருதாமல் சக்கரத்தின் விளிம்பைத் துடைக்கின்றாய்; தலைவியிடமோ முன்கைகளி லிருந்து வளையல்கள் காந்தள்மலர் காம்பிலிருந்து முதிர்ந்து வீழ்வதுபோலக் கழன்று விழுகின்றன.*'

'*இவற்றையெல்லாம் சிறிதும் கருதிடாமல் பிரிய முனை கிறாய். நீ புறப்படும் அப்பொழுதே தலைவியின் உயிரும் நீங்கி விடும். நீ தேடி வரும் பொருளால் அவள் உயிரைத் திரும்பப் பெற இயலுமா? சிந்தித்துப் பார்*' " - *இவ்வாறு கூறித் தலைவனின் பயணத்தைத் தோழி தடுத்து நிறுத்தினாள்.*

சொற்பொருள்

1. வேனில் - கோடை; உழந்த - வருந்திய; வறிது உயங்கும் - உடல் சுருங்கிட வருந்தும்; ஓய் - ஓய்ந்த, தளர்ந்த.
2. வான் - மழை; வைப்பு - இடம்; வழங்காத் தேர் - பேய்த்தேர் - கானல் நீர்.
3. கடத்திர் - கடக்கின்றாய்.
4. உசாவுதல் - கேட்டல்.
5. செய்வினை - செய்ய விரும்பிய செயல் (பொருளீட்டச் செல்லுதல்); செலவு அயர்ந்து - செல்ல விரும்பி.
6. கைபுனை - உன் கையால் செய்த; வல்வில் - வலிமையான வில்; ஞாண் - நாண்; உளர்தீயே - தடவுகின்றாய்.
7. மண்டிலம் - திங்கள்; மையாப்பது போல் - மேகம் பரவுவதுபோல.
8. மைஇல் - குற்றமில்லாத; வாள்முகம் - ஒளி பொருந்திய முகம்; ஊரும் - படரும்.

9. வினைமாண் - தொழில் மாட்சிமைப்பட்ட; காழகம் - கையுறை; வீங்க - இறுக்கமாய்.
10. புனைமாண் - புனைவதற்குச் சிறப்புடைய; மரீஇய - பொருந்திய; தெரிதியே - தேர்ந்தெடுக்கிறாய்.
11. சுனை மாண் - சுனையிலே உள்ள சிறந்த; நீலம் - நீல மலர்; கார் எதிர்வதுபோல் - மழையை எதிர்கொள்வதுபோல.
12. இனை நோக்கு - வருந்தும் பார்வை; நீர் நில்லாவே - கண்ணீர் நிறைந்து நிற்கும்.
13. புலம்பு இல் - பிரிகின்றோம் என்று எண்ணி வருந்ாத.
14. வலம்படு - வெற்றி பொருந்திய; திகிரி - ஆழிப்படை - சக்கரம்; நீவுதியே - துடைக்கின்றாய்.
15. அலங்கு இதழ் - அசைகின்ற இதழ்; கோடல் - வெண்காந்தள் மலர்; வீ - மலர் இதழ்கள்.
16. இலங்கு - விளங்குகின்ற; ஏர் - அழகு; எல்வளை - ஒளி பொருந்திய வளையல்; இறை - முன்கை; ஊரும் - கழன்று விழும்.
18. நவை அரவம் - துயர் தரும் ஆரவாரம்; இனையவள் - துயர் கொள்வாள்.
19. தன் நலம் கடைகொளப் படுதல் - இறத்தல்.
20. ஆற்றுமோ - முடியுமோ?
21. முன்னிய - கருதிய; தேஎம் - நாடு, தேசம்.

தோழி கூற்று

கலித்தொகை 8 **பாலை பாடிய பெருங்கடுங்கோ**

திணை : பாலை

கூற்று

சொல்லாது பிரியலுற்ற தலைமகன் குறிப்பறிந்து, தோழி பொருளது நிலையாமை கூறி, ‘அவனோடு கூடிச் செல்கின்ற இல்வாழ்க்கைச் செலவே பொருள்’ என, அவன் செலவழுங்கக் கூறியது.

கூற்று விளக்கம்

சொல்லாது பிரியக் கருதிய தலைவனின் குறிப்பறிந்து தோழி, பொருளினது நிலையாமையை எடுத்துக் கூறி, ‘இல்வாழ்க்கையில் மனைவியோடிருந்து வாழ்தலே பெரும்பொருள்’ என்று கூறித் தலைவனது செலவைத் தடுத்தது.

தரவு

நடுஇகந்து ஒரீஇ நயன்இல்லான் வினைவாங்கக்
கொடிதுஓர்த்த மன்னவன் கோல்போல, ஞாயிறு
கடுகுபு கதிர்மூட்டிக் காய்சினம் தெறுதலின்,
உறல்ஊறு கமழ்கடாஅத்து ஒல்கிய எழில்வேழம்,
வறன்உழு நாஞ்சில்போல், மருப்புஊன்றி நிலம்சேர,
விறல்மலை வெம்பிய போக்குஅரு வெஞ்சுரம்
சொல்லாது இறப்பத் துணிந்தனிர்க்கு ஒருபொருள்
சொல்லுவது உடையேன்; கேண்மின்,மற்று ஐஇய!

தாழிசை

வீழுநர்க்கு இறைச்சியாய் விரல்கவர்பு இசைக்கும்கோல்
ஏழும்தம் பயன்கெட, இடைநின்ற நரம்புஅறூஉம்
யாழினும் நிலைஇலாப் பொருளையும் நச்சுபவோ?

மரீஇத்தாம் கொண்டாரைக் கொண்டக்கால் போலாது,
பிரியுங்கால் பிறர்எள்ளப் பீடுஇன்றிப் புறம்மாறும்
திருவினும் நிலையிலாப் பொருளையும் நச்சுபவோ?

புரைதவப் பயன்நோக்கார் தம்ஆக்கம் முயல்வாரை
வரைவுஇன்றிச் செறும்பொழுதில், கண்ணோடாது உயிர்வௌவும்
அரைசினும் நிலையிலாப் பொருளையும் நச்சுபவோ?

எனவாங்கு –

சுரிதகம்

நச்சல் கூடாது, பெரும! இச்செலவு
ஒழிதல் வேண்டுவல்; சூழின், பழிஇன்று;
மன்னவன் புறந்தர வருவிருந்து ஓம்பித்
தன்நகர் விழையக் கூடின்,
இன்னுறல் வியன்மார்ப! அதுமனும் பொருளே.

தெளிவுரை

“ஐய, நடுவு நிலைமை நீங்கி, வேலை வாங்கும் அருளில்லாத அமைச்சன் சொற்படி கொடிய செயல்களைச் செய்யும் அரசனின் கொடுங்கோலாட்சிபோல விரைந்து காய்கின்ற கதிர்களை ஞாயிறு செலுத்துவதால் சுடுகின்ற காட்டில், மணம் நாறப் பெறுவதும் மதம் ஊறப் பெறுவதும் தளர்ச்சியுற்றதுமான

ஆண்யானை வெப்பம் தாங்க முடியாமல், வறண்ட நிலத்தை உழப் பயன்படுத்தும் கலப்பைபோலத் தன் தந்தங்களைத் தரையில் ஊன்றிக்கொண்டு, துதிக்கையை மேலே தூக்கியவாறு தரையில் கிடக்கிறது. பெருமை பெற்ற மலைகளும் வேனிலால் வெம்பியுள்ளன. இத்தகைய வெப்பம் மிக்க காட்டின் வழியே, எம்மிடம் எதுவும் சொல்லாது, பொருள் தேடச் செல்லத் துணிந்தீர்! உமக்கு ஒரு செய்தி சொல்லுகிறேன், கேட்பீராக!

“ஐய! விரும்புபவர்களுக்கு நல்விருந்தாய், ஒரு யாழின் ஏழு நரம்புகளும் விரலால் மீட்டி இசைக்கப்படும் பொழுது, இடையிலே ஒரு நரம்பு அறுந்தாலும் யாழின் இசையின்பம் நிலையற்றுப் போகும். அந்த யாழைவிட நிலையில்லாத் தன்மை கொண்ட பொருளை நன்மக்கள் விரும்புவார்களோ? (மாட்டார்).

“ஒருவரைச் செல்வம் வந்தடையும்போது அவரைப் பிறர் தழுவிக் கொண்டாடுவர். அச்செல்வம் அவரிடமிருந்து நீங்குமானால் முன்பு போற்றிய மக்களே அவரை எள்ளி நகையாடி மனம் மாறிப் பழிப்பர். இவ்வாறு நிலையற்ற இயல்பு வாய்ந்த செல்வத்தை நன்மக்கள் விரும்புவார்களா?

“தன் நலன் எதுவும் கருதாமல் அரசனின் நன்மைக்காகவே செயலாற்றிய ஒருவன்மீது அரசன் சினம் கொள்ளும்பொழுது, சற்றும் அருளில்லாமல் அவன் உயிரை எடுப்பான். (அவன் நிலைத்து நின்று அரசாள இயலாது.) இத்தகைய அரசனினும் நிலையற்றதான பொருளை நன்மக்கள் விரும்புவார்களா?

“அதனால் பொருளை விரும்பிப் பிரியும் எண்ணத்தைக் கைவிடு. நாட்டினை மன்னன் பழியின்றிக் காக்கட்டும். உம்மை நாடி வரும் விருந்தினரைப் பேணி, இல்லறம் நடத்தித் துணைவியோடு கூடி வாழ்தலே பொருளாகும்; அதனினும் சிறந்த பொருள் வேறில்லை. (நீ தேட விரும்புவது நிலையான பொருள் அன்று.)

கருத்து

‘பொருள் நிலையற்றது. தலைவியோடு கூடி இல்லறம் பேணி வாழ்தலே பொருளாகும். மற்றைய பொருள்களெல்லாம் பொருள் அல்ல.’

சொற்பொருள்

1. நடு - நடுவு நிலைமை; இகந்து - கைவிட்டு; ஒரீஇ - நீங்கி; நயன் இல்லான் - அருள் இல்லாதவன் (அமைச்சன்).
2. ஓர்த்த - விரும்பிய; கோல் போல - அரசாட்சி போல.
3. கடுகுபு - விரைந்து; கதிர்மூட்டி - கதிர்களைப் பரப்பி; காய்சினம் - மிக்க வெப்பம்; தெறுதல் - சுடுதல்.
4. உறல் ஊறு - ஊறுதல் பொருந்திய; கடாஅம் - மதம்; ஒல்கிய - தளர்ந்த.
5. வறன் - வறண்ட நிலம்; நாஞ்சில் - கலப்பை; மருப்பு - கொம்பு, தந்தம்.
6. விறல் - பெருமை; போக்குஅரு - கடத்தற்கு அரிய.
7. இறப்ப - கடக்க.
8. கேண்மின் - கேட்பாயாக!
9. வீழுநர் - விரும்புபவர்; இறைச்சி - இன்பம்; கோல் - யாழின்கோல்.
11. நச்சுபவோ? - விரும்புவரோ?
12. மரீஇ - பொருந்தி.
13. எள்ள - நகைக்க; பீடு - பெருமை; புறம்மாறும் - நீங்கும்.
15. புரை - உயர்வு; தவ - மிகுதியான; ஆக்கம் - உயர்வு, பெருக்கம்.
16. செறும் பொழுதில் - கண்டிக்கும் நேரத்தில்; கண்ணோடாது - அருளில்லாமல்; வெளவும் - பறிக்கும்.
17. அரைசு - அரசு.
19. நச்சல் - விரும்புதல்; இச்செலவு - இப்பயணம்.
20. சூழின் - ஆராய்ந்து பார்த்தால்.
21. புறந்தர - நன்கு பாதுகாக்க; ஓம்பி - பேணி.
22. தன்நகர் - தன் வீடு.
23. அதுமனும் பொருளே - அதுவே அழியாச் செல்வமாகும்.

தோழி கூற்று

கலித்தொகை 10 **பாலை பாடிய பெருங்கடுங்கோ**

திணை : பாலை

கூற்று

தலைமகனாற் பிரிவுணர்த்தப்பட்ட தோழி, ‘இவ்வகைப்பட்ட சுரத்தைப் பொருள் காரணமாகப் பிரிகின்றீர்’ எனக் கேட்பின், ‘இவ்வகை ஆகற்பாலள்’ எனச் சொல்லிச் செலவழுங்குவித்தமை, தலைமகட்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் பொருள்வயிற்பிரியவிருப்பதை உணர்ந்த தோழி, ‘இவ்வகை யான காட்டின் வழியே பொருள் காரணமாகச் செல்கின்றீர் எனக் கேட்பின் தலைவி இவ்வகையாக ஆவள்!’ எனக் கூறி அவன் பயணத்தைத் தடுத்து நிறுத்தினாள். அதனைத் தோழி தலைவியிடம் சொல்லியது.

தரவு

வறியவன் இளமைபோல், வாடிய சினையவாய்ச்
சிறியவன் செல்வம்போல், சேர்ந்தார்க்கு நிழல்இன்றி,
யார்கண்ணும் இகந்துசெய்து இசைகெட்டான் இறுதிபோல்,
வேரொடு மரம்வெம்ப, விரிகதிர் தெறுதலின்,
அலவுற்றுக் குடிகூவ, ஆறின்றிப் பொருள்வெஃகிக்
கொலைஅஞ்சா வினைவரால், கோல்கோடி யவன்நிழல்
உலகுபோல் உலறிய உயர்மர வெஞ்சுரம்;

தாழிசை

இடைகொண்டு பொருள்வயின் இறத்திநீ எனக்கேட்பின்,
உடைபுநெஞ்சு உக,ஆங்கே ஒளிஓடற் பாள்மன்னோ?
படைஅமை சேக்கையுள் பாயலின் அறியாய்நீ
புடைபெயர்வாய் ஆயினும், புலம்புகொண்டு இனைபவள்;

முனிவுஇன்றி, முயல்பொருட்கு இறத்திநீ எனக்கேட்பின்,
பனியகண் படல்ஒல்லா படர்கூர்கிற் பாள்மன்னோ?
நனிகொண்ட சாயலாள் நயந்துநீ நகையாகத்
துனிசெய்து நீடினும், துறப்புஅஞ்சிக் கலுழ்பவள்;

பொருள்நோக்கிப் பிரிந்துநீ போகுதி எனக்கேட்பின்,

மருள்நோக்கம் மடிந்துஆங்கே மயல்கூர்கிற் பாள்மன்னோ?
இருள்நோக்கம் இடைஇன்றி, ஈரத்தின் இயன்றநின்
அருள்நோக்கம் அழியினும், அவலம்கொண்டு அழிபவள்;

எனஆங்கு–

சுரிதகம்

'வினைவெஃகி நீசெலின், விடும்இவள் உயிர்'எனப்
புனைஇழாய்! நின்னிலை யான்கூறப் பையென,
நிலவுவேல் நெடுந்தகை நீள்இடைச்
செலவுஒழிந் தனனால், செறிகநின் வளையே!

தெளிவுரை

" 'ஒருவன் இளமையிலே வறுமையுற்றதைப் போல, பாலை நில மரங்கள் வாடிப்போன கிளைகளைக் கொண்டுள்ளன; கொடுக்க மனமில்லாதவனுடைய செல்வம் அவனைச் சார்ந்தவர்க்குப் பயன்படாததுபோல, தம்மை அடைந்தார்க்கு நிழல் தாராமல் மரங்கள் நின்றுகொண்டிருக்கின்றன. எவர்க்கும் தீங்கு செய்த ஒருவன் அதனால் புகழ் இழந்து கடைசிக் காலத்தில் அவன் மட்டுமன்றி அவன் உறவினரும் அழிவதைப் போல, கதிரவனின் கதிர்கள் சுடுதலால் மரங்கள் வேரோடு வெம்பிப் போயிருக்கின்றன. கொலைக்கஞ்சாத பணியாளர்கள் சொல் கேட்டு, நெறியின்றிப் பொருளைப் பறித்து ஆட்சி செய்யும் கொடுங்கோலன் நாட்டில் மக்கள் பொலிவிழந்து வாடியிருப்பதுபோல, காடு முழுவதும் உலர்ந்து போன உயர்ந்த மரங்களைக்கொண்டு கரிந்து கிடக்கிறது. அக்காட்டுவழியே நீ பொருள் தேடுவதற்காகச் செல்லவிருக்கிறாய்.

"பக்குவமாய் அமைக்கப்பட்ட படுக்கையில் தூங்கும்போது உன்னையறியாது சற்றே விலகிப் படுத்தாலும் அதற்கே புலம்பி வருந்துபவள், தலைவி. அத்தகையவள், நீ பொருள் தேடச் செல்கிறாய் என்பதைக் கேட்டால், நெஞ்சுடைந்து அழகு கெடப் பெறுவாள்.

"அவள் மென்மையான சாயலைக் கொண்டவள். விளையாட்டாக நீ ஊடல் கொண்டு அதில் காலத்தைச் சற்று நீட்டித்தாலும், அந்தப் பிரிவிற்காகக் கண் கலங்குவாள்.

அத்தகையவள் பொருள் தேடுவதற்காக நீ பிரிந்து செல்ல விருக்கிறாய் என்பதைக் கேட்டால் அவள் கண்களில் நீர் வடிய, உறக்கமின்றித் துன்புறுவாள்.

"அருள் பொருந்திய உன் பார்வை, கருணையின்றிச் சிறிது மாறினாலும் அவள் துன்பம் மிகக் கொண்டு வருந்துவாள். பொருள் தேடுவதற்காக நீ பிரிந்து போகிறாய் என்பதை அவள் கேட்டால் தன் மருண்ட பார்வை மறைய அவள் மயக்கம் கொள்வாள்.

"நல்ல அணிகளைப் புனைந்தவளே! 'நீ பொருள் தேடும் செயலை விரும்பிச் சென்றால் அவள் உயிர் வாழாள்; இறந்துபடுவள்' என்று உன் நிலையைத் தலைவனிடம் எடுத்துக் கூறினேன். ஒளி பொருந்திய வேலினைக் கொண்டுள்ள தலைவன் உன்னைப் பிரிந்து நீண்ட வழியே செல்லக் கருதிய பயணத்தை உடனே கைவிட்டான். எனவே, உன் வளையல்கள் கழன்று விழாது கையை இறுகப் பற்றிக்கொள்ளட்டும்" என்று தோழி தலைவியிடம் கூறினாள்.

கருத்து

'தலைவ! நீ பிரிந்தால் தலைவி உயிர் வாழாள்' என்று தோழி கூறியதைக் கேட்டுத் தலைவன் தன் பயணத்தை நிறுத்தினான்.

விளக்கம்

"தலைவ! படுக்கையில் படுத்து உறங்குகையில் தலைவியின் அணைப்பிலிருந்து நீ சற்று விலகினாலும் அவள் புலம்பி வருந்துபவள்; நீ விளையாட்டாய் ஊடல் கொண்டு கூடுதற்குச் சற்று அதிக நேரம் ஆனாலும் அவள் கண் கலங்குபவள்; உன் அருள் பார்வை சற்று மாறினாலும் அவள் மயக்கம் கொள்ளுபவள்" என்று தோழி கூறியதைக் கேட்டுத் தலைவன் உடனே தன் பயணத்தை நிறுத்தினான்.

சொற்பொருள்

1. சினை - கிளை.
2. சிறியவன் - சிறுமை குணங்களைக் கொண்டவன்.
3. இகந்து - வரம்பு மீறி; இசை - புகழ்.
4. வெம்புதல் - வாடுதல்; தெறுதல் - சுடுதல்.

5. அலவுற்று - துன்பமுற்று; குடி - மக்கள்; கூவ - அழ; ஆறின்றி - முறையின்றி; வெஃகுதல் - பேராசை கொள்ளுதல்.
6. வினைவர் - பணியாளர்; கோல் கோடி - நீதி தவறி.
7. உலகு - நாடு; உலறிய - உலர்ந்துபோன.
8. இடைகொண்டு - காட்டினை இடை வழியாய்க்கொண்டு; பொருள் வயின் - பொருள் காரணமாய்.
9. உடைபு நெஞ்சு உக - நெஞ்சழிந்து கெட்டுப்போக; ஒளி ஓடற்பாள் - அழகு கெடுவாள்.
10. படையமை - பக்குவமாய்ச் செய்யப்பட்ட; சேக்கை - படுக்கை; பாயல் - தூக்கம்.
11. புடை பெயர்தல் - சற்றே விலகுதல்.
12. முனிவு - வெறுப்பு; இறத்தி - பிரிகிறாய்.
13. படல் ஒல்லா - உறக்கம் கொள்ளா; படர் - துன்பம்; கூர்கிற்பாள் - மிகக் கொள்வாள்.
14. நனி கொண்ட - மிகவும் மென்மை கொண்ட; நயந்து - விரும்பி; நகையாக - விளையாட்டாக.
15. துனி - பிரிவு; துறப்பு அஞ்சி - பிரிந்திருக்க அஞ்சி; கலுழ்பவள் - அழுவாள்.
17. மருள் நோக்கம் - மருண்ட பார்வை.
18. இருள் நோக்கம் - வெறுப்புத் தரும் பார்வை; ஈரம் - அன்பு.
21. வெஃகி - விரும்பி.
22. புனைஇழாய் - அணிகலன்களை அணிந்தவள்; பையென - விரைவாய்.
23. நிலவுவேல் - ஒளி பொருந்திய வேல்; நீளிடை - நீண்ட தொலைவு.
24. ஒழிந்தனன் - விடுத்தனன்; செறிக - இறுகப் பற்றுவதாகுக.

தோழி கூற்று

கலித்தொகை 12 **பாலை பாடிய பெருங்கடுங்கோ**

திணை : பாலை

கூற்று

தமைகனால் பிரிவுணர்த்தப்பட்ட தோழி, காட்டது கடுமையும், தலைமகளது மென்மையும், "நாளது சின்மையும், இளமையது அருமையும், தாளாண் பக்கமும், தகுதியது அமைதியும், அன்பினது அகலமும், அகற்சியது அருமையும்" கூறிச் செலவழுங்குவித்தது.

கூற்று விளக்கம்

தலைவன், தான் பிரிந்து செல்லவிருப்பதைத் தோழியிடம் உணர்த்தினான். செல்லவிருக்கும் காட்டின் கடுமையையும், தலைவியது மென்மையையும் பற்றித் தோழி கூறினாள். மேலும், 'வாழ்நாள் சிலவே; இளமைக்காலம் விரைந்து கழியும்; முயற்சியால் துன்பம் உண்டாகும்; பொருளை விரும்புவது உணர்ந்தோர்க்குத் தகாது' என்பனவற்றை யெல்லாம் எடுத்துக் கூறினாள். மேலும் தலைவி கொண்டுள்ள மிகுந்த அன்பினையும், பிரிய இயலாத தன்மையினையும் எடுத்துக் கூறித் தலைவன் தன் பிரிவைத் தவிர்க்குமாறு செய்தது.

இடுமுள் நெடுவேலி போலக் கொலைவர்
கொடுமரம் தேய்த்து,ஆர் பதுக்கை நிரைத்த
கடுநவை ஆர்ஆற்று, அறுசுனை முற்றி,
உடங்குநீர் வேட்ட உடம்புஉயங்கு யானை
கடும்தாம் பதிபு,ஆங்குக் கைதெறப் பட்டு,
வெறிநிரை வேறாகச் சார்ச்சாரல் ஓடி,
நெறிமயக் குற்ற நிரம்பாநீடு அத்தம்
சிறுநனி நீதுஞ்சி ஏற்பினும், அஞ்சும்
நறுநுதல் நீத்துப் பொருள்வயின் செல்வோய்!
உரனுடை உள்ளத்தை; செய்பொருள் முற்றிய
வளமையான் ஆகும் பொருள்இது என்பாய்!
இளமையும் காமமும் நின்பாணி நில்லா;
இடைமுலைக் கோதை குழைய முயங்கும்
முறைநாள் கழிதல் உறாஅமைக் காண்டை;
கடைநாள் இதுவென்று அறிந்தாரும் இல்லை.
போற்றாய் பெரும!நீ, காமம் புகர்பட

வேற்றுமைக் கொண்டு, பொருள்வயின் போகுவாய்!
கூற்றமும் மூப்பும் மறந்தாரோடு ஓராஅங்கு
மாற்றுமைக் கொண்ட வழி.

தெளிவுரை

"கொலைஞர்கள் வழிச்செல்வோரை வில்லால் கொன்று, பிணங்களை இலைதழைகளால் மூடி மறைப்பர். அப்படி மறைக்கப்பட்ட குவியல்கள், நீண்ட முள்வேலிபோலத் தோன்றும். நீர் வேட்கை கொண்ட, உடம்பு இளைத்துப்போன யானைகள், நீரற்ற வறண்ட சுனையைச் சுற்றிலும் நின்று, நீர் குடிப்பதற்காகத் தம் கைகளை, சுனையில் ஒருசேரப் பதிக்கும். வறண்ட சுனை யானைகளின் கைகளைச் சுட்டமையால், சூடு பொறுக்க இயலாது, அச்சம் கொண்ட அந்த யானைக்கூட்டம் தனித்தனியே சிதறி வெவ்வேறாய் மலைச்சாரல்தோறும் ஓடும். அவ்வாறு யானைகள் ஓடுவதால் எங்கும் வழியாகி, முறையான வழி எதுவென அறிய இயலாதவாறு தொலையாத பெருவழி யாய்த் தோன்றும். பெரும! நீ எழ வேண்டிய நேரத்தில் எழாது சற்றுக் காலந்தாழ்த்து துயில் எழுந்தாலும் உனக்கு யாதோ நேர்ந்துவிட்டது என்று எண்ணி அஞ்சுகின்ற தலைவியைப் பிரிந்து இக்காட்டுவழியே பொருளீட்டச் செல்ல எண்ணு கிறாய்!'

நீ அதற்கான வலிமை கொண்ட உள்ளத்தவனாய் இருக்கிறாய். தேடும் பொருளை ஈட்டிய பின்னர், இல்லற இன்பம் அப்பொருளால்தான் அமையும் என்று கூறுகிறாய். ஆனால், நீ பொருள் ஈட்டித் திரும்புமவரை இளமையும் காமமும் உன் கையிடத்து நில்லாது நாள்தோறும் கழியும். அதுவே அன்றி இறக்கும் நாள் இதுவென்று உலகத்திலே அறிந்தவர்களும் இல்லை. காதலால், முலையிடையில் மாலை குழையும்படி முயங்கும் முறைமையினைக் கொண்ட நாள்கள் அப்பயனின்றிப் போதலையும் காண்பாய். பெரும! காம இன்பம் குறையும்படி, அதனோடு வேறுபாடு கொண்டு, நீ பொருளீட்டுவதற்குச் செல்கின்றாய். அந்த எண்ணத்தினைக் கைவிட்டு, வாழ்நாளில் முதுமையும் சாக்காடும் உண்டு என்பதை மறந்த அறிவற்றவர்

போல அல்லாமல், அதை ஒப்புக்கொண்டு, உள்ள நாளில் இன்பத்தை நிறைவாய் அனுபவிப்பதற்கான வழியைச் சிந்திப் பாயாக!"

கருத்து

'தலைவியின் இளமையும் காமமும் பயனின்றிக் கழிய உன் பயணத்தை நீ மேற்கொள்ளலாமா?'

விளக்கம்

"தலைவனே! நீ தேடிக் கொண்டுவரும் செல்வந்தான் பெரிது என்று எண்ணுகிறாய். நீ பொருள் தேடும் காலத்தில் உன் இளமையும் காமமும் நாள்தோறும் குறைந்துகொண்டே இருக்கும் என்பதை உணர்ந்தறிவர். உன் வாழ்நாள் என்றைக்கு முடியும் என்பதை உன்னால் அறிய இயலாது. உன் இளமை பயனின்றிக் கழியலாமா? இயற்கையான காம நுகர்வினைக் கைவிட்டுப் பொருள்தேடச் செல்வதாய்ச் சொல்கிறாய். தமக்கு நேரவிருக்கும் மூப்பையும் இறப்பையும் அறிந்த நன்மக்கள் சொல்லும் நெறியைக் கடைப்பிடித்து, உன் மனைவியின் முலை யிடையில் மாலை குழையுமாறு தழுவிக் காம இன்பத்தை அடைக" என்று தோழி தலைவனிடம் கூறி அவன் பிரிவைத் தடுக்கிறாள்.

சொற்பொருள்

1. இடு முள் - வேலிக்கு இடும் முள்; நெடுவேலி - நீண்ட வேலி; கொலைவர் - கொலைத்தொழிலைக் கொண்டவர்.
2. கொடுமரம் - கொடிய வில்; தேய்த்து - கொன்று; பதுக்கை - பிணக் குவியலை மறைக்கும் இலைக்குவியல்; நிரைத்த - நிரையாய் உள்ள.
3. கடுநவை - கொடிய குற்றம்; அறுசுனை - நீரற்ற வறண்ட சுனை; முற்றி - சூழ நின்று.
4. உடங்கு நீர் வேட்ட - நீர் உண்ணுதலை விரும்பிய; உடம்பு உயங்கு - உடம்பு வாடப் பெற்ற.
5. கடும்தாம் பதிபு - விரைவாய்த் தரையில் பதிக்க; தெறப்பட்டு - சுடப் பட்டு.
6. வெறிநிரை - அச்சம் கொண்ட யானைக்கூட்டம்; வேறாய் - தனித் தனியாய்.

7. நெறி மயக்குற்ற - எது வழி என அறியவியலாதவாறு மயக்க முற்றிருக்கும்; நிரம்பா நீடு அத்தம் - முடியாத நீண்ட வழி.
8. சிறு நனி - சிறிது நேரம்; ஏற்பினும் - எழுந்தாலும்.
9. நறுநுதல் - நல்ல நெற்றியைக் கொண்ட தலைவி; நீத்து - பிரிந்து.
10. உரனுடை உள்ளத்தை - வலிமையான உள்ளம் கொண்டவனாய் இருக்கிறாய்.
11. வளமை - செல்வம்.
12. பாணி - கை.
13. கோதை - மாலை; குழைய - நெருங்கி உறவாட, கசங்க.
14. முறைநாள் - முறைமையினைக் கொண்ட நாள்கள்; கழிதல் உறாஅமை - பயனின்றிக் கழியாதவாறு; காண்டை - பார்த்துக்கொள்.
15. கடை நாள் - வாழ்க்கையின் இறுதி நாள்.
16. புகர் - குற்றம்.
17. வேற்றுமை - வேறுபாடு.
18. கூற்றம் - சாவு; மூப்பு - முதுமை.
19. மாற்றுமைக் கொண்ட வழி - மாறுபாட்டினைக் கொண்ட நன்மக்கள் நிற்கும் வழி.

தோழி கூற்று

கலித்தொகை 14 **பாலை பாடிய பெருங்கடுங்கோ**

திணை : பாலை

கூற்று

தலைமகனால் பிரிவுணர்த்தப்பட்ட தோழி, தலைமகற்கு, 'முன்னையின் சிறப்ப எம்மை இற்பாராட்டியது எல்லாம் எம்வயிற் பிறந்த வெறுப்பென்பது இப்பொழுதறிந்தேன்; இவ்வகைப்பட்ட போக்கு நினக்கு எவ்வகையான் வந்தது?' என, அவன் செலவழுங்கக் கூறியது. (இற்பாராட்டுதல் - நலம் பாராட்டுதல்.)

கூற்று விளக்கம்

தான் பிரியவிருப்பதைத் தலைவன் கூற, அதைக் கேட்ட தோழி, தலைவனை நோக்கி, 'முன்னர் எம்மைச் சிறப்பாகப் பாராட்டிப் பேசினாய். அவற்றையெல்லாம் மறந்து இப்போது துன்பமுண்டாகும்படி பேசுகிறாய். எம்மிடம் உமக்குண்டாகிய வெறுப்பினால்தான் நீ இப்போது இவ்வாறு பேசுகிறாய். இவ்வகையான வேறுபாடு உனக்கு எவ்வகையால் ஏற்பட்டது?' என்று கேட்டு அவன் பிரிந்து செல்லா வண்ணம் தடுத்தது.

தரவு

அணைமருள் இன்துயில் அம்பணைத் தடமென்தோள்,
துணைமலர் எழில்நீலத்து ஏந்துஎழில், மலர்உண்கண்
மணமௌவல் முகையன்ன மாவீழ்வான் நிரைவெண்பல்,
மணம்நாறும் நறுநுதல், மாரிவீழ் இருங்கூந்தல்,
அலர்முலை ஆகத்து, அகன்ற அல்குல்,
சிலநிரை வால்வளைச் செய்யா யோ!எனப்
பலபல கட்டுரை பண்டையின் பாராட்டி,
இனிய சொல்லி, இன்னாங்குப் பெயர்ப்பது,
இனிஅறிந் தேன்,அது துனிஆ குதலே.

தாழிசை

'பொருள்அல்லால் பொருளும் உண்டோ'என யாழநின்
மருளிகொள் மடநோக்கம், மயக்கப்பட்டு அயர்த்தாயோ?

காதலார் எவன்செய்ப பொருள்இல்லா தார்க்குஎன
ஏதிலார் கூறும்சொல் பொருளாக மதித்தாயோ?

செம்மையின் இகந்துஒரீஇப் பொருள்செய்வார்க்கு, அப்பொருள்
இம்மையும் மறுமையும் பகையாவது அறியாயோ?

அதனால்

சுரிதகம்

எம்மையும் பொருளாக மதித்தீத்தை; நம்முள்நாம்
கவவுக்கை விடப்பெறும் பொருள்திறத்து
அவவுக்கை விடுதல் அதுமனும் பொருளே.

தெளிவுரை

" 'நான் சாய்ந்து தூங்குதற்கு இனிய அழகிய மூங்கில் போன்ற பருத்த மென்மையான தோள்களைக் கொண்டவள்; நீல மலர்கள் இரண்டு பூத்துள்ளனபோல மையூட்டப் பெற்ற அழகிய கண்களைக் கொண்டவள்; மணக்கின்ற முல்லை மொட்டுகள் போன்று வரிசையாய் அமைந்துள்ள வெண்மை யான பற்களைக் கொண்டவள்; அப்பற்கள் உண்மையிலே முல்லைகள் என்று கருதி அவற்றின்மீது மொய்க்க வரும் வண்டுகளைக் கொண்டவள்; மணம் கமழும் நெற்றியினைக் கொண்டவள்; கருமேகம் போன்ற இருண்ட கூந்தலைக்

கொண்டவள்; மார்பிலே விரிந்துள்ள முலைகளைக் கொண் டவள். அகன்ற அல்குலினைக் கொண்டவள்; சில வரிசைகளாய் அணிந்துள்ள வெண்மையான வளையல்களைக் கொண்டவள்; இவற்றுடன் திருமகள்போலத் தோன்றுபவள். இவ்வா றெல்லாம் பலப் பல புனைந்துரைகளால் பண்டை நாளில் தலைவனே! நீ தலைவியைப் பாராட்டிக் கூறினாய். இப்போதோ துன்பத்தை விளைவிக்கும் சொற்களைக் கூறுகின்றாய். உனக்கு எம்மைப் பிரியும் எண்ணம் ஏற்பட்டதால்தான் வெறுப்புடன் இவ்வாறு பேசுகின்றாய் என்பதை இப்போது அறிந்து கொண்டேன்.

"ஈட்டி வரும் பொருள்தான் பொருள் என்னும் அறியாமை யால் மயக்கம் கொண்டு நீ உன் உறுதியிலிருந்து தவறி விட்டாயா?

"பொருளில்லாதவரைக் காதலியும் விரும்பமாட்டாள் என்று அயலார் கூறுவதைக் கேட்டு அதை ஒரு பொருளாய் மதித்து மனம் மாறினையோ?

"இல்லறமான செந்நெறியிலிருந்து விலகி ஈட்டி வரும் பொருள் இம்மைக்கும் மறுமைக்கும் பயன் தாராது என்னும் உறுதிமொழியினை நீ அறிந்ததில்லையா?

"நீ சேர்க்க விரும்பும் பொருள் இத்தகையது. அதனால் தலைவியொடு வாழ்வதையும் ஒரு பொருளாய்க் கருது! தலைவியும் நீயும் ஒருவர் கையோடு பிணைத்துள்ள மற்றவர் கையைப் பிரிக்கின்ற பொருளின்மீதுள்ள அவாவினை நீக்கு; காதலியுடன் கூடியிருப்பதே நிலைத்த செல்வம் என்பதை அறிந்திடு!"

கருத்து

'தலைவ! நீ தேடி வரும் செல்வம் நிலையில்லாதது; காதலியோடு கூடி வாழ்வதே நிலையான செல்வம்.'

விளக்கம்

"தொடர்பில்லாதவர் பேச்சைக் கேட்டோ, அறியாமை யாலோ பொருள்வயிற்பிரியவிருப்பதாய்க் கூறுகிறாய்; முன்

எம்மிடம் சொன்னவற்றையெல்லாம் மறந்தாய்! பொருள் தேடவா செல்கிறாய்? அன்று எம்மை வெறுத்துத்தான் நீ பிரிகிறாய்."

குறிப்பு

"பொருட்செல்வந்தான் பொருள் என்பது அறியாத் தன்மை; பொருளில்லாதவரை காதலியும் மதியாள் என்பது அறிவற்ற பேச்சு; இல்லற நெறி விலகி ஈட்டி வரும் பொருள் இம்மை, மறுமை என இரண்டுக்கும் பயன் தாரா. காதலியோடு கூடி வாழ்வதே நிலையான செல்வம்" என்று கூறித் தோழி தலைவனின் பயணத்தை நிறுத்தினாள்.

சொற்பொருள்

1. அணைமருள் - தலையணை போன்ற; அம் - அழகிய; பணை - மூங்கில்; தட - பெரிய.
2. துணை மலர் - இரண்டாய் இணைந்து பூத்த மலர்; உண்கண் - மை தீட்டப் பெற்ற கண்.
3. மௌவல் - முல்லை; முகை - மொட்டு; மா வீழ் - வண்டுகள் விரும்பும்.
4. மாரி வீழ் - கார் மேகம் போலத் தாழ்ந்து தொங்குகின்ற.
5. அலர்தல் - விரிதல், மலர்தல்; ஆகம் - மார்பு.
6. சில நிரை - சில வரிசை; வால் வளை - வெண்மையான வளையல்; செய்யாய் - திருமகள் போன்றவளே!
7. கட்டுரை - புனைந்துரை; பண்டையின் - முன் நாளில்.
8. இன்னாங்குப் பெயர்ப்பது - துன்பந்தருமாறு பேசுவது.
9. துனி - வெறுப்பு.
10. யாழ - தலைவ!
11. மருள் - மயக்கம்; மடநோக்கம் - அறியாமை; அயர்த்தாயோ - தளர்ந்தனையோ.
13. ஏதிலார் - அயலார்.
14. செம்மை - செந்நெறி; இகந்து - மாறுபட்டு; ஒரீஇ - நீங்கி.
17. மதித்தீத்தை - மதிப்பாயாக.
18. கவவுக்கை - தழுவிய கைகள்.
19. அவவு - அவா.
20. அதுமனும் பொருளே - அதுவே நிலை பெற்ற பொருள்.

தோழி கூற்று

கலித்தொகை 15 **பாலை பாடிய பெருங்கடுங்கோ**

திணை : பாலை

கூற்று

பிரிவுணர்த்திய தலைமகற்குத் தோழி, தலைமகளது ஆற்றாமையும், இளமையது அருமையுங் கூறி, 'நீர் பிரிந்து செய்யக் கருதியவை எக்காலத்துஞ் செய்யலாம், பொருளால் கழிந்த இளமை மீட்கலாமோ?' எனக் கூறியது.

கூற்று விளக்கம்

பிரிவுபற்றித் தலைவன் உணர்த்த அறிந்த தோழி, தலைவனிடம் தலைவியது ஆற்றாமையையும், இளமைக்காலத்தின் அருமையையும் கூறினாள். 'பிரிந்து சென்று தேடக் கருதிய பொருளை எக்காலத்தும் ஈட்டலாம். ஆனால், பொருளீட்டச் செல்லக் காரணமாய் இளமையை இழந்து, பின் அதை மீட்க இயலுமோ?' என்று கேட்டு அவன் பயணத்தைத் தோழி தடுத்து நிறுத்தியது.

தரவு

அரிமான் இடித்தன்ன அம்சிலை வல்வில்
புரிநாண், புடையின், புறங்காண்டல் அல்லால்,
இணைப்படைத் தானை அரசோடு உறினும்,
கணைத்தொடை நாணும் கடுந்துடி ஆர்ப்பின்,
எருத்து வலிய எறுழ்நோக்கு இரலை
மருப்பின் திரிந்து மறிந்துவீழ் தாடி,
உருத்த கடுஞ்சினத்து, ஓடா மறவர்,
பொருள்கொண்டு புண்செயின் அல்லதை அன்போடு,
அருள்புறம் மாறிய ஆரிடை அத்தம்.

தாழிசை

புரிபுநீ புறம்மாறிப் போக்குஎண்ணிப் புதிதுஈண்டிப்
பெருகிய செல்வத்தால் பெயர்த்தரல் ஒல்வதோ?
செயலைஅம் தளிர்ஏய்க்கும் எழில்நலம்; அந்நலம்
பயலையால் உணப்பட்டுப் பண்டைநீர் ஒழிந்தக்கால்;

பொய்யற்ற கேள்வியால், புரையோரைப் படர்ந்து,நீ
மைஅற்ற படிவத்தான் மறுத்தரல் ஒல்வதோ?

தீங்கதிர் மதிஏய்க்கும் திருமுகம்; அம்முகம்,
பாம்புசேர் மதிபோலப் பசப்புஊர்ந்து தொலைந்தக்கால்;

பின்னிய தொடர்நீவிப் பிறர்நாட்டுப் படர்ந்து,நீ
மன்னிய புணர்ச்சியால் மறுத்தரல் ஒல்வதோ?
புரிஅவிழ் நறுநீலம் புரைஉண்கண் கலுழ்புஆனாத்
திரிஉமிழ் நெய்யேபோல், தெண்பனி உறைக்குங்கால்;

எனவாங்கு—

சுரிதகம்

அனையவை போற்றி, நினைஇயன நாடிக்காண்;
வளமையோ வைகலும் செயலாகும்; மற்றுஇவள்
முளைநிரை முறுவலார் ஆயத்துள் எடுத்தாய்ந்த
இளமையும் தருவதோ, இறந்த பின்னே.

தெளிவுரை

“ ‘*தலைவ! காட்டு வழியில் கொலைத் தொழிலுக்கு அஞ்சாத மறவர்கள், சிலை மரத்தாற் செய்த வில்லில் முறுக்கமைந்த நாண் கயிற்றைப் பூட்டுவர். துணைப் படையோடு அரசனே வந்து எதிர்த்தாலும் அவர் அஞ்சாதவர். அப்படை மீது திரட்சியான அம்பினைத் தொடுப்பது தம் வீரத்திற்குத் தகுதியன்று என்று வெட்கங்கொண்டு நாணைத் தெறித்துச் சிங்கம் முழங்குவது போல ஒலி எழுப்புவர். அந்நாணொலி கேட்ட அளவிலேயே அரசர் தோற்று ஓடுவர். அதிரும் பறையின் ஆரவாரத்தோடு மறவர் எங்கும் திரிவர். வன்மை மிக்க பார்வையுடைய அவர், வலிமையான கழுத்தினை உடையவராய்க் கலைமானின் கொம்புபோல முறுக்கேறித் தொங்கும் தாடி கொண்டவர். கொடுந்தொழில் புரியும் அம்மறவர்கள், வழிச் செல்வோரின் பொருள்களைப் பறிப்பதோடு மட்டுமின்றி அவர்களின் உடல்களைப் புண்படுத்தியும் மகிழ்வர்; அன்பும் அருளும் அறவே இல்லாதவர். இத்தகைய கொடிய வழியிலேதான் நீ பொருள் தேடச் செல்ல நினைக்கிறாய்.*

“*நீ பொருளை விரும்பிக் காதலை இழக்க எண்ணுகிறாய். நீ பொருளீட்டப் பிரிந்தால் உன் மனைவியின் அசோகின் இளந்தளிர் போன்ற அழகையெல்லாம் பசலை பற்றிக்*

கொள்ளும். நீ புதிதாகத் தேடிக் கொண்டுவரும் திரண்ட செல்வத்தால் இழந்துவிட்ட இவளுடைய எழிலை மீட்டுத் தரமுடியுமா?

"உன் தலைவியின் முகம் திங்களைப் போன்ற அழகுடையது. நீ பிரிந்தால் அந்த முகம் கிரகணம் பிடித்த திங்களைப்போலப் பசலை படர்ந்து பொலிவிழந்துவிடும். உண்மையான கேள்வி அறிவுள்ள சான்றோர் பலரைச் சந்தித்து மாசற்ற மனமுள்ள வனாய் நீ வந்தாலும் என்ன பயன்? உன் மாசு நீங்கிய மனம் உன் தலைவியின் அழகை மீட்டுத் தரும் வல்லமை வாய்ந்ததா?

"உன் மனையாளின் கண்கள் மணம் கமழும் நீலமலர் போன் றவை. நீ அவளைப் பிரிந்து சென்றால் அழுவாள்; அப்பொழுது எரிகின்ற திரியிலிருந்து சொட்டும் நெய்போலச் சூடேறிய கண்ணீர்த் துளிகள் சொட்டும். இவளைப் பிரிந்து நீ வேற்று நாட்டுக்குச் சென்று கற்றுத் தெளியும் மெய்ப்பொருளால் உன் தலைவியின் கண்ணீரைப் போக்க முடியுமா?

"நான் இதுவரை கூறியவற்றை ஆராய்ந்து அறிந்து நீ செய்ய வேண்டியதைச் செய்க. செல்வத்தை என்றும் ஈட்டலாம். முளை யொத்த பல் வரிசை கொண்ட அழகிய இளம்பெண்களுள் இளமையழகைக் கொண்ட உன் தலைவியின் இளமை அழிந்த பின் நீ தேடி வந்த பொருளோ, அறிவோ அந்த இளமையை மீண்டும் தரும் ஆற்றல் பெற்றவை அல்ல" என்று தோழி கூறித் தலைவனைச் செலவழுங்குவிக்கிறாள்.

கருத்து

'நீ ஈட்டிக் கொணரும் பொருள், தலைவியின் இழந்த இளமையையும் அழகையும் மீட்டுத் தாராது.'

விளக்கம்

"நீ பொருள் தேடச் செல்லவிருக்கும் காட்டுவழி கொடுமை வாய்ந்தது. அரசர்கள் படையோடு வரினும் தங்கள் வில்லின் நாணின் ஒலியினாலேயே அவர்களை விரட்டியடிக்கும் வீரம் மிக்க மறவர்கள் அங்கே வாழ்கின்றனர். அவர்கள் வழிப் போவாரைக் கொள்ளையடித்துத் துன்புறுத்துவர்.

"நீ பிரிந்தால், உன் மனைவியின் அசோகந்தளிர் போன்ற உடலில் பசலை பாய்ந்து அழகு கெடும்; கிரகணம் பற்றிய திங்கள் போல அவள் முகம் ஒளியிழக்கும்; அழுது சூடேறிய கண்ணீர்த் துளிகளைச் சிந்தியவாறு அவள் இருப்பாள்.

அவளது இளமை அழிந்தபின் நீ தேடிக் கொணரும் செல்வத் தாலோ அறிவாலோ அவள் இளமையையும் அழகையும் மீட்டுத்தர இயலாது" எனத் தோழி இளமை, செல்வம் ஆகிய வற்றின் நிலையாமையைக் கூறித் தலைவனின் செலவைத் தடுக்கிறாள்.

சொற்பொருள்

1. அரிமான் - சிங்கம்; இடித்தன்ன - முழங்குதல் போல; சிலை - வில் செய்யும் மரம்.
2. புரிநாண் - முறுக்குண்ட வில் நாண்; புடைத்தல் - ஒலியெழுப்புதல்; புறங்காண்டல் - தோல்வி காண்பது.
3. இணைப்படைத்தானை - தன் படையோடு துணையாய்ச் சேர்த்துக் கொண்ட படை; உறினும் - எதிர்த்து வந்தாலும்.
4. கணைத் தொடை - திரட்சியான அம்பு; துடி - பறை.
5. வலிய எருத்து - வலிமையான கழுத்து; எறுழ்நோக்கு - கடுமையான பார்வை; இரலை - ஆண்மான்.
6. மருப்பு - கொம்பு; மறிந்து - முறுக்குண்டு.
7. உருத்த - கொடிய; ஓடா மறவர் - தோற்று ஓடாத வீரர்.
8. புண் செயின் - புண்ணை உண்டாக்குவது.
9. புறம் மாறிய - இல்லாமற் போன.
10. ஈண்டி - தேடித் தொகுத்தல்.
11. பெயர் தரல் - திருப்பித் தருதல்; ஒல்வதோ? - இயல்வதோ?
12. செயலை - அசோகு; ஏய்க்கும் - ஒக்கும்.
13. பயலை - பசலை; பண்டை நீர் - பழைய தன்மை, பழைய அழகு.
14. புரையோர் - சான்றோர்; படர்ந்து - சேர்ந்து.
15. மைஅற்ற படிவம் - குற்றமற்ற உருவம்; மறுத்தரல் - திரும்பத் தரல்.
16. தீம்கதிர் - அழகிய கதிர்களைக் கொண்ட.
17. பாம்பு சேர் மதிபோல - கிரகணம் பற்றிய திங்களைப் போல; பசப்பு ஊர்ந்து - பசலை படர்ந்து; தொலைந்தக்கால் - அழகு குறைந்தால்.
18. பின்னிய தொடர் - அன்பால் பிணைந்த தொடர்பு; நீவி - நீக்கி; படர்ந்து - சென்று.

19. மன்னிய புணர்ச்சியால் - நிலைபெற்ற அறிவுச்சேர்க்கையால்.
20. புரிஅவிழ் - முறுக்கு அவிழ்ந்த; உண்கண் - மையுண்ட கண்; கலுழல் - கலங்குதல்.
21. தெண்பனி - தெளிந்த கண்ணீர்; உறைக்கும்கால் - உதிர்க்கும் பொழுது.
23. அனையவை - கூறியவற்றை; நினைஇயன - நினைத்து; நாடிக் காண் - ஆராய்ந்து உணர்.
24. வளமை - செல்வம்; வைகலும் - நாள்தோறும், எப்போதும்.
25. முளைநிரை முறுவலார் - மூங்கில் முளையை ஒத்த பல் வரிசை கொண்ட புன்முறுவல் பூக்கும் பெண்கள்; ஆயத்துள் - கூட்டத்துள்.
26. இறந்த பின்னே - கழிந்த பின்னே.

தோழி கூற்று

கலித்தொகை 19 **பாலை பாடிய பெருங்கடுங்கோ**

திணை : பாலை

கூற்று

பிரிவுணர்த்தப்பட்ட தோழி செலவு விலக்கவும், பிரிவின்மேற்சென்ற உள்ளத்தன் ஆயினானை, 'நீ பிரியின், இவள் இறந்துபடும்' எனச் சொல்லிய வாய்பாட்டான் மறுத்தது.

கூற்று விளக்கம்

தலைவன் தன் பிரிவினைத் தோழிக்கு உணர்த்தினான். தோழி பிரிவை விலக்கினாள். தலைவன் பிரிந்து செல்வதையே உள்ளத்தில் கொண்டிருந்தனன். அதனால், 'நீ பிரிந்து சென்றால் தலைவி உயிர் வாழாள்' எனச் சொல்லி, தோழி தலைவனின் பயணத்தைத் தடுத்தது.

செவ்விய தீவிய சொல்லி, அவற்றொடு
பைய முயங்கிய அஞ்ஞான்று, அவையெல்லாம்
பொய்யாதல் யான்யாங்கு அறிகோ? மற்று ஐய!,
அகல்நகர் கொள்ளா அலர்தலைத் தந்து,
பகல்முனி வெஞ்சுரம் உள்ளல் அறிந்தேன்;
மகன் அல்லை மன்ற, இனி.

செல்,இனிச் சென்றுநீ செய்யும் வினைமுற்றி,
அன்புஅற மாறி,'யாம் உள்ளத் துறந்தவள்

பண்பும் அறிதிரோ?' என்று, வருவாரை
என்திறம் யாதும் வினவல்; வினவின்,
பகலின் விளங்கும்நின் செம்மல் சிதையத்
தவல்அரும் செய்வினை முற்றாமல், ஆண்டுஓர்
அவலம் படுதலும் உண்டு.

தெளிவுரை

" 'தலைவ! தலைவியோடு அந்த நாளில் களவுப் புணர்ச்சிக் காலத்தில் செம்மையான இனிய பேச்செல்லாம் பேசி, அதனோடும் அமையாது தலைவியைப் பையத் தழுவி மகிழ்ந்தாயே. அவற்றால் அகன்ற இவ்வூரார் அடக்க இயலாத பழிச்சொற்களைப் பேசுமாறு செய்துவிட்டு, ஞாயிறு சினங்கொண்டு எரிக்கும் வெம்மையான காட்டுவழியில் நீ செல்ல எண்ணியிருப்பதை இப்போது அறிகிறேன். இனியும் உன்னை நல்ல பண்புள்ள ஆண்மகன் ஒருவன் என என்னால் எப்படி உறுதியாய்ச் சொல்ல இயலும்?'

இனி நீ புறப்பட்டுச் செல்லலாம். அங்குச் சென்று, நீ செய்ய வேண்டிய காரியத்தை முடித்துக்கொண்டு திரும்பும்போது, இங்கிருந்து அங்கு வருவாரிடம், 'அன்பு இல்லாமல் என்னால் மறக்கப்பட்ட என் தலைவி எவ்வாறுள்ளாள்? என்று ஏதும் வினவி விடாதே! வினவினால், 'அவள் இறந்துவிட்டாள்' என்று அவர்கள் கூறவும் நேரும். அதனால் உன் தலைமைத் தன்மை கெடுவதோடு, நீ செய்ய விரும்பிய செயல் முடிவு பெறாமல் அவ்விடத்தில் உனக்கு ஓர் அவலம் நேரிடுதலும் கூடும்" எனத் தோழி தலைவனிடம் கூறினாள்.

கருத்து

'தலைவ! நீ பிரிந்தால் தலைவியின் உயிர் பிரியும் என்பதை மறவாதே.'

விளக்கம்

"நீ பிரிந்தால் தலைவி இறந்துவிடுவாள் என்பதால், தலைவ! நீ சொல்லாமலே செல்ல விரும்புகிறாய்; செல்; சென்று, உன் வேலையை முடித்துக்கொண்டு திரும்பும் நிலையில், இங்கிருந்து அங்கு வருவாரிடம் தலைவியைப்பற்றி எதுவும் கேளாதே.

கேட்டால் அவர்கள் அவள் இறப்புச்செய்தியைச் சொல்லவும் கூடும். அதனால் உன் தகுதியும் செயலும் கெட்டுவிடும்" என்று தலைவனிடம் தோழி எடுத்துரைத்து அவன் புறப்படவிருப் பதைத் தடுக்கிறாள்.

சொற்பொருள்

1. செவ்விய - செம்மையான; தீவிய - இனிய.
2. பைய - மெதுவாய்; முயங்கிய - தழுவிய; அஞ்ஞான்று - அக் காலத்தில், அதாவது களவுப் புணர்ச்சிக்காலத்தில்.
3. யான் யாங்கு அறிகோ? - நான் எவ்வாறு அறிவேன்?
4. அகல் நகர் - அகன்ற மனையின்; கொள்ளா - அடக்கவியலாத; தலைத் தந்து - கொடுத்துவிட்டது.
5. பகல் - ஞாயிறு; முனி - சினங்கொண்டு; வெஞ்சுரம் - கடுமையான காடு; உள்ளல் அறிந்தேன் - செல்ல எண்ணியிருப்பதை அறிந்தேன்.
6. மகன் அல்லை - நன்மகனாய்க் கருத இயலாது.
7. வினை முற்றி - வேலை முடிந்து.
9. பண்பும் அறிதிரோ? - நிலையினை அறிவீர்களோ?
10. என் திறம் - என் (தலைவியின்) நிலை; வினவல் - கேட்க வேண்டா.
11. பகலின் - ஒளியுடன்; செம்மல் - தலைமை; சிதைய - அழிய.
12. தவல்அரும் - குற்றமற்ற; ஆண்டு - அவ்விடத்தே.
13. ஓர் அவலம் படுதலும் உண்டு - ஒரு துன்பம் அடைதலும் கூடும்.

தோழி கூற்று

கலித்தொகை 18 **பாலை பாடிய பெருங்கடுங்கோ**

திணை : பாலை

கூற்று

'ஒன்றாத் தமரினும்' என்னுஞ் சூத்திரத்தில், 'நாளது சின்மையும் இளமையது அருமையும் - தாளாண் பக்கமும் தகுதியது அமைதியும் - இன்மையது இழிவும் உடைமையது உயர்ச்சியும் - அன்பினது அகலமும் அகற்சியது அருமையும்" எனக் கூறிய எட்டினையுந் தலைமகன் கூறக் கேட்ட தோழி, அவற்றை, 'நிகழ்ந்தது கூறி, நிலையலுந் திணையே' என்னும் விதியால் தலைமகற்குக் கூறிச் செலவழுங்குவித்தது.

கூற்று விளக்கம்

தலைவன் தோழியிடத்து, 'வாழ்நாள் குறைவானது; இளமை நிலையாதது; முயற்சி கடினமானது; உண்மை உணர்ந்தோர் பொருளை விரும்பலாகாது' என்று எண்ணாமல், 'வறுமையின் இழிவை எண்ணி மேலும் மேலும் பொருள் ஈட்ட வேண்டும் என்றும், அவர்கள், தாம் விரும்பியவர்மீது கொண்டுள்ள அன்பு மிகுதியால் பொருளீட்டப் பிரிவதனின்றும் தங்கிவிடக்கூடாது" என்றும் எடுத்துக் கூறிப் பொருட்பிரிவை உணர்த்தினான். தோழி பொருளியல்புகள் சிலவற்றை எடுத்துக் கூறி அவன் பிரிவைத் தவிர்க்கச் செய்தது.

அரும்பொருள் வேட்கையின் உள்ளம் துரப்பப்
பிரிந்துறை சூழாதி – ஐய! விரும்பிநீ
என்தோள் எழுதிய தொய்யிலும், யாழநின்
மைந்துடை மார்பில் சுணங்கும் நினைத்துக்காண்;
சென்றோர் முகப்பப் பொருளும் கிடவாது;
ஒழிந்தவர் எல்லாரும் உண்ணாதும் செல்லார்;
இளமையும் காமமும் ஓராங்குப் பெற்றார்
வளமை விழைதக்கது உண்டோ? உளநாள்,
ஒரோஒகை தம்முள் தழீஇ, ஒரோஒகை
ஒன்றன்கூறு ஆடை உடுப்பவரே ஆயினும்,
ஒன்றினார் வாழ்க்கையே வாழ்க்கை; அரிதுஅரோ,
சென்ற இளமை தரற்கு!

தெளிவுரை

"ஐய! அரிய பொருளைத் தேட வேண்டும் என்னும் ஆசை உன் உள்ளத்தைத் தூண்டுதலால் தலைவியைப் பிரிந்து வாழ விரும்பாதே! நீ ஆசையோடு தலைவியின் தோளில் எழுதிய தொய்யிலையும் நீ தலைவியின் மார்பைத் தழுவியதால் வலிமை மிக்க உன் மார்பில் ஏற்பட்ட தேமலையும் நினைத்துப் பார்.

"நீ சென்ற உடனே அள்ளி வரும்படியாகப் பொருளும் ஓரிடத்தில் குவிந்து கிடப்பதில்லை. முயன்று பொருளைத் தேடாதவர் எல்லாரும் உண்ணாது இருப்பதுமில்லை. இளமைப்பருவமும் காம விருப்பமும் இருவர் உள்ளத்திலும்

ஒருசேரப் பெற்றவர், சாதாரண பொருட்செல்வத்தை விரும்பி யிருப்பதும் உண்டா?

"இளமையும் காமமும் உள்ள நாள்வரை, வீட்டில் ஒரு கையினால் ஒருவரையொருவர் தழுவிக்கொண்டு, மற்றொரு கையால் ஒரே ஆடையை இரண்டாய்ப் பகுத்து உடுத்துக் கொள்ளுகின்ற வறுமை நிலை வாய்த்தாலும், ஒன்றுசேர்ந்து வாழும் காதலர் வாழ்க்கையே சிறந்த வாழ்க்கை. நீங்கும் இளமையை மீட்டுத் தர எவராலும் இயலாது.' "

கருத்து

'காதலர் பிரிவின்றி ஒன்று சேர்ந்து இன்பம் துய்த்தலே இல்லறப்பண்பு.'

விளக்கம்

"இளமை நாள்தோறும் கழிந்துகொண்டே இருக்கும்; கழிந்த இளமையை எவராலும் மீட்கவும் இயலாது; ஆகவே இளமை இன்பத்தை இருவரும் ஒன்றிணைந்து துய்த்து வாழ்தலே வாழ்க்கை" என்று தோழி தலைவனிடம் இல்லற வாழ்வின் இனிய தத்துவத்தை எடுத்துரைத்துப் பொருள்வயிற் பிரிந்து செல்வதைத் தடுத்து நிறுத்தினாள்.

குறிப்பு

"ஓர் ஆடையை இருகூறாக்கித் துண்டுபட்ட சிறிய ஆடையை உடுத்தும் அளவுக்கு வறுமையுற்று வாழ்பவரேயாயினும், அதுபற்றிக் கவலையுறாது வாழ்வதே இன்ப வாழ்வாகும்" என்று தோழி கூறித் தலைவனைச் செலவழுங்குவித்தாள்.

சொற்பொருள்

1. வேட்கை - விருப்பம்; துரப்ப - தூண்ட, உந்த.
2. சூழாதி - எண்ணாதே.
3. தொய்யில் - தலைவன் தலைவியின் தோளிலும் மார்பிலும் எழுதும் சித்திரம்.
4. மைந்து - வலிமை; சுணங்கு - தேமல்.
5. முகப்ப - அள்ளிவர; கிடவாது - ஓரிடத்தில் குவிந்து கிடக்காது.
6. ஒழிந்தவர் - பொருள் தேடச் செல்லாதிருந்தவர்.
7. ஓராங்கு - ஒருங்கே.

8. வளமை - செல்வம்; விழைதக்கது - விரும்பத்தக்கது; உளநாள் - வாழும் நாள்.
9. ஒரோ கை - ஒவ்வொரு கை.
10. ஒன்றன் கூறு ஆடை - ஓர் ஆடையை இரண்டாய்ப் பகுத்தது.
11. ஒன்றினார் - கூடியிருப்பவர்.
12. சென்ற - கழிந்த, நீங்கிய.

தோழி கூற்று

கலித்தொகை 21 **பாலை பாடிய பெருங்கடுங்கோ**

திணை : பாலை

கூற்று

தலைமகனால் பிரிவுணர்த்தப்பட்ட தோழி, அவனை நெருங்கிக் களவுக் காலத்தொழுக்கம் எடுத்துக்காட்டலால், தெளிவுபட மொழிந்ததூஉம், பொருளது நிலையின்மையும், அவளது ஆற்றாமையும் கூறிச் செலவு மறுத்தது.

கூற்று விளக்கம்

தலைவன் பிரிந்து செல்லவிருப்பதை அறிந்த தோழி, அவனை அணுகி, களவுக் காலத்தில் தலைவியை 'என்றும் பிரியேன்' என்று கூறியதையும், இப்பொழுது பொருள் காரணமாய்ப் பிரிவதாய்ச் சொல்வதைச் சுட்டிக் காட்டியும், பொருளின் நிலையாமையை எடுத்துரைத்தும் தலைவனது பயணத்தைத் தடுத்தது.

'பால்மருள் மருப்பின், உரல்புரை பாவடி,
ஈர்நறும் கமழ்கடாஅத்து, இனம்பிரி ஒருத்தல்
ஆறுகடி கொள்ளும் வேறுபுலம் படர்ந்து,
பொருள்வயின் பிரிதல் வேண்டும்' என்னும்
அருளில் சொல்லும், நீசொல் லினையே;

நன்னர் நறுநுதல் நயந்தனை நீவி
'நின்னிற் பிரியலன், அஞ்சல்ஓம்பு' என்னும்
நன்னர் மொழியும் நீமொழிந் தனையே;

அவற்றுள், யாவோ வாயின? மாஅல் மகனே!
கிழவர் இன்னோர், 'என்னாது' பொருள்தான்;

பழவினை மருங்கின் பெயர்புபெயர்பு உறையும்;
அன்ன பொருள்வயின் பிரிவோய், நின்இன்று
இமைப்புவரை வாழாள் மடவோள்
அமைக்கவின் கொண்ட தோளிணை மறந்தே.

தெளிவுரை

"தலைவ! காட்டில் பால் போன்ற வெண்மையான தந்தங் களையும், உரல் போன்ற பரந்த அடிகளையும் கொண்ட ஒப்பற்ற ஆண்யானை ஒன்று மணமிகுந்த மதநீரைப் பொழிந்து கொண்டு தன் கூட்டத்திலிருந்து பிரிந்து நிற்கும் அக்காட்டுவழியே வேற்று நாட்டுக்குப் பொருள் ஈட்டுவதற்காகச் செல்ல வேண்டும் என்று நீ கருணையின்றிக் கூறுகின்றாய். முன்னர்க் களவுக் காலத்தில் தலைவியின் நன்மை தரும் நெற்றியினை அன்போடு தடவிய வாறே, 'உன்னை விட்டுப் பிரியேன்; அஞ்ச வேண்டா' என்னும் இனிய சொற்களைக் கூறினாய்! இவ்விரண்டனுள் எது உண்மை?

"மயக்கம் கொண்ட தலைவ! நீ சென்று தேட விரும்புகின்ற பொருளோ, தனக்கு உரிமையானவர் என்று ஒருவரிடமும் நிலைத்து இராது. முன்வினைப் பயனுக்கேற்ப இடம் மாறி மாறிச் செல்லும் இயல்பு வாய்ந்தது. நீ இன்றிக் கண்ணிமைக்கும் நேரங்கூட வாழ இயலாத தலைவியின் மூங்கில் போன்ற அழகிய தோள்களைத் தழுவுவதை மறந்து, நிலையில்லாத பொருளுக் காகப் பிரிவேன் என்று சொல்வது முறையா?' "

கருத்து

'தலைவியைத் தழுவியிருப்பதை விடுத்து நிலையில்லாத பொருளுக் காகப் பிரிவதா?'

விளக்கம்

"தலைவ! களவுக் காலத்தில் தலைவியின் நெற்றியைத் தடவிய வாறே, 'உன்னைப் பிரியேன்! அஞ்சாதே' என்றாய். இன்றோ, அச்சம் தரும் காட்டுவழியே பொருளீட்டப் பிரிந்து செல்வேன் என்கிறாய்! இரண்டனுள் எது உண்மை? உன்னைப் பிரிந்து இமைப்பொழுதும் வாழாத இயல்பினள், தலைவி. அவளை மறந்து, நிலையற்ற பொருளைத் தேடிச் செல்வது உனக்குப்

பெருமை தாராது" என்று தோழி தலைவனிடம் கூறிப் பயணத்தைத் தடுத்து நிறுத்தினாள்.

சொற்பொருள்

1. பால்மருள் - பால் போன்ற; மருப்பு - தந்தம்; உரல் புரை - உரல் போன்ற; பாவடி - பரந்த அடி.
2. ஈர் நறுங்கமழ் கடாஅம் - ஈரமும் நாற்றமும் கொண்ட மதநீர்; ஒருத்தல் - ஆண்யானை.
3. ஆறு - வழி; கடிகொள்ளும் - விரைந்து செல்லும்; படர்ந்து - சென்று.
6. நன்னர் - நன்மை; நயந்தனை - விரும்பியவனாய்.
7. அஞ்சல் ஓம்பு - அஞ்சுதலைக் கைவிடு.
8. நன்னர்மொழி - நன்மை தரும் சொற்கள்.
9. வாயின - உண்மை உடையன; மாஅல் மகனே - மயக்கம் கொண்ட தலைவனே.
10. கிழவர் - உரியவர்; என்னாது - என்று கருதாது.
11. மருங்கின் - காரணமாய்; பெயர்புபெயர்பு - மாறி மாறி; உறையும் - தங்கும்.
12. நின் இன்று - நீ இல்லாமல்.
13. இமைப்பு வரை - இமைக்கும் நேர அளவும்.
14. அமைக்கவின் - மூங்கில் அழகு; தோள் இணை - இணையான இரண்டு தோள்கள்.

தோழி கூற்று

கலித்தொகை 22 **பாலைபாடிய பெருங்கடுங்கோ**

திணை : பாலை

கூற்று

பிரிவுணர்த்தப்பட்ட தோழி, அதற்கு உடம்படாது, தலைமகனை நெருங்கி, களவுக்காலத்து ஒழுக்கம் எடுத்துக்காட்டி, ஆற்றுவித்து, உடம்பட்ட வாய்பாட்டான் மறுத்தது.

கூற்று விளக்கம்

தலைவன் பொருள் தேடப் பிரிந்து செல்லக் கருதியிருப்பதைத் தோழி அறிந்தாள். அவனை அணுகி, அவனது களவொழுக்கத்தை நினைவு

படுத்தினாள். அக்காலத்தில் அவன் பிரிந்தபோது, தலைவி மிக்க இளம் பருவத்தினள்; ஆதலால் ஆற்றுவதற்கு உடன்பட்டாள்; இப்பொழுது மங்கைப் பருவத்தள்; ஆதலின், உடன்படமாட்டாள் என்று கூறித் தலைவனது பிரிவுக்கு மறுப்புத் தெரிவித்தது.

தரவு

உண்கடன், வழிமொழிந்து இரக்குங்கால் முகனும்,தாம்
கொண்டது கொடுக்குங்கால் முகனும்,வேறு ஆகுதல்
பண்டும்இவ் வுலகத்து இயற்கை; அஃதுஇன்றும்
புதுவது அன்றே, புலனுடை மாந்திர்!—
தாய்உயிர் பெய்த பாவை போல,
நலன்உடையார் மொழிக்கண் தாவார்;தாம் தம்நலம்
தாதுதேர் பறவையின் அருந்து,இறல் கொடுக்குங்கால்,
ஏதிலார் கூறுவது எவனோநின் பொருள்வேட்கை?

தாழிசை

நறுமுல்லை நேர்முகை ஒப்ப நிரைத்த
செறிமுறை பாராட்டி னாய்;மற்றுஎம், பல்லின்
பறிமுறை பாராட்டி னையோ? – ஐய!

நெய்இடை நீவி மணிஒளி விட்டன்ன,
ஐவகை பாராட்டி னாய்;மற்று,எம் கூந்தல்
செய்வினை பாராட்டி னையோ? – ஐய!

குளன்அணி தாமரைப் பாசரும்பு ஏய்க்கும்
இளமுலை பாராட்டி னாய்;மற்று,எம் மார்பின்
தளர்முலை பாராட்டி னையோ? – ஐய!

எனவாங்கு –

சுரிதகம்

அடர்பொன்அவிர்ஏய்க்கும் அவ்வரி வாடச்
சுடர்காய் சுரம்போகும் நும்மையாம் எங்கண்
படர்கூற நின்றதும் உண்டோ? தொடர்கூரத்
துவ்வாமை வந்தக் கடை?

தெளிவுரை

"பொருளைப் பெறுவதற்காக, ஒருவரிடம் சென்று அவரைப் புகழ்ந்து பேசிக் கெஞ்சிக் கடன் கேட்கும்போது இருக்கின்ற முக பாவமும், அக்கடனைத் திருப்பித் தரும்போது இருக்கின்ற முக பாவமும் வேறாய் இருப்பது பண்டைய நாளிலிருந்தே இவ்வுலக இயற்கை; இன்றும் அது புதியது அன்று.

"அறிவு மிக்க சான்றோர் ஒன்றைச் சொல்லிவிட்டுப் பின்னர் அதனின்றும் மாற மாட்டார். தன் உயிரையே பெய்து பெற்றெடுக்கும் தன் குழந்தையை ஒரு தாய் பேணிக் காப்பதுபோல, நல்லறிவு வாய்ந்தோர் தாம் சொன்னவற்றினின்றும் மாறிச் செல்லாமல் சொன்ன சொல்லைக் காப்பாற்றுவர். களவுக் காலத்தில் 'உன்னைப் பிரியேன்' என்று தலைவியிடம் நீ சொன்ன சொல்லைக் காப்பாற்ற வேண்டாவா?

"தேனைத் தேடி உண்ணும் வண்டுபோல, தலைவியிடம் இன்பம் நுகர்ந்த நீ, அவள் அவ்வின்பத்தைக் கருதியபோது அவளை விட்டுப் பிரிந்து செல்லக் கருதியுள்ளாய் என்பதை ஏதிலாரும் கூறுகின்றனர். நீயே நம் தலைவிக்கு இக்கேட்டினை விளைவிக்கும்போது என் போன்றோர் கூறுவதற்கு என்ன உள்ளது?

"ஐய! உன் தலைவி இளமைப்பருவத்தினளாய் இருந்தபோது, பற்கள் விழுந்து முளைத்தெழுந்திருந்த தன்மையைப் பாராட்டினாய்! இன்று மணங்கொண்ட முல்லையின் மொட்டுகளைப் போன்று வரிசையாய்ச் செறிந்து நிற்கும் அவற்றின் அழகினைப் பாராட்டி உன் தலைவியை மகிழ்விக்க வேண்டாவா? இஃது உன் கடமையன்றோ?

"நீலமணி ஒளிவிட்டாற் போன்ற கூந்தலில் நெய் பூசி நீவி வாரி ஐவகையாகத் தாயார் முடித்திருந்த இளமைப்பருவத்தின் அழகினைப் பாராட்டிப் போற்றிய நீ, தலைவி உன்னோடு வந்து வாழுங்கால், அவள் கூந்தலை நீவிவிட்டு நீ செய்ய வேண்டிய அன்புச் செயல்களைச் செய்து மகிழ்ந்து பார்த்துப் பாராட்டாமல் உள்ளாய். இஃது உனக்குத் தகுதியாகுமா?

“குளத்தை அழகுபடுத்தும் தாமரை மலரின் பசிய மொட்டு களைப் போன்று இருந்தபோது உன் தலைவியின் ஊற்றின்பம் மிகுதியில்லாத இளமுலைகளைப் பாராட்டி மகிழ்ந்தாய். அப் பருவம் மாறி, ஊற்றின்பம் மிகுதியாயுள்ள பருவத்தில் சற்றுச் சாய்ந்து ஏந்திய நிலையில் இருக்கும் இளமை குலையாத மார்பகங்களைப் பாராட்டி மகிழத் தவறுதல் உனக்குத் தகுதியாகுமா?

“தலைவியின் இளமையை நுகர்ந்திடாமல், பொன் தகட்டி னைப் போல ஒளி விளங்கும் அவளின் அழகிய தேமல்கள் வாடி வதங்குமாறு, கதிரவன் காய்கின்ற சுரத்துவழியே செல்லத் துணிந்துவிட்டாய்! எம் துன்பத்தைச் சொல்லி உன் பயணத்தை விலக்க எண்ணினோம். ஆனால், உன்னைப் பிரியாதிருக்கும் நல்வினை எங்களுக்கு இல்லை போலும்” என்று தோழி எடுத்துக் கூறி தலைவன் பயணத்தைத் தடுத்தாள்.

கருத்து

‘தலைவியின் இளமையையும் அழகையும் நுகராது நீ பிரிதல் தகுதியன்று.’

விளக்கம்

“களவுக் காலத்தே தலைவியின் பல்லையும் கூந்தலையும் மார்பகங்களையும் பலபடப் பாராட்டிய தலைவன், கற்புக் காலத்தே அதனைச் செய்யாதவனாய் உள்ளான். கடன் கேட்கச் செல்லும்போது ஒருவரிடம் உள்ள முகபாவமும், அவர் அக்கடனைத் திருப்பித் தரும்போது உள்ள முகபாவமும் வேறுபட்டே இருக்கும். இது பண்டைய நாள்தொட்டு இன்று வரை உள்ளதுதான். நல்லறிவு வாய்ந்தோர் சொன்ன சொல்லி லிருந்து மாறமாட்டார். களவுக் காலத்திலிருந்த உன் முக பாவம் இன்று மாறிவிடக்கூடாது” எனத் தோழி தலைவனிடம் கண்டித்துக் கூறி, அவன் பயணத்தைத் தவிர்த்தாள்.

சொற்பொருள்

1. உண் கடன் - உணவுப் பொருளை வாங்குவதற்காகப் பெற்ற கடன்; வழிமொழிந்து - பாராட்டிப் பேசி.

2. முகன் - முகம்.
3. பண்டும் - முற்காலத்திலும்.
4. புலன் உடை மாந்திர் - அறிவு மிக்க மாந்தர்.
5. உயிர் பெய்த - உயிரைத் தந்த; பாவை - குழந்தை.
6. தாவார் - அதனை விட்டு வேறொன்றுக்கு மாறமாட்டார்.
7. தாதுதேர் பறவை - பூந்தாதினை ஆராய்ந்து உண்ணும் வண்டு; இறல் - கேடு.
8. ஏதிலார் - தொடர்பு இல்லாதவர்.
9. முல்லை நேர் முகை - முல்லை மொட்டுகளை ஒத்த; நிரைத்த - வரிசையாய் அமைந்த.
10. செறிமுறை - செறிந்து நின்ற முறை.
11. பறிமுறை - வீழ்ந்து போகும் நிலை.
12. மணிஒளி விட்டன்ன - நீலமணி ஒளி வீசியதுபோல.,
13. ஐவகை - ஐந்து வகையாகப் பகுக்கப்பட்டது.
15. பாசரும்பு - பசிய மொட்டு; ஏய்க்கும் - ஒத்திருக்கும்.
17. தளர் முலை - சிறிது சாய்ந்து ஏந்தினாற் போன்று தோன்றும் முலை.
19. அடர் பொன் - பொன் அடர் - பொன் தகடு; அவிர் - ஒளி; அவ்வரி - அழகிய வரிகளைக் கொண்ட தேமல்.
21. படர் கூற - துன்பத்தைச் சொல்ல; தொடர் கூர - அன்புத் தொடர்பு.
22. துவ்வாமை - தீவினைப்பயன்.

தோழி கூற்று

கலித்தொகை 25 **பாலைபாடிய பெருங்கடுங்கோ**

திணை : பாலை

கூற்று

பிரிவுணர்த்தப்பெற்ற தோழி, 'நீ பிரிந்தால் பீடிலார் தொடர்புபோல, நும்மை அலர் தூற்றுவன இவ்வகைப்பட்டன சில உள' எனத் தலைமகள் ஆற்றாமை கூறிச் செலவழுங்குவித்தது.

(பீடிலார் - பெருமை இல்லாதவர்; அலர் - பழிச்சொல்; இவ்வகைப் பட்டன - இவ்வகையான.)

கூற்று விளக்கம்

தலைவன் தான் பிரியவிருக்கும் செய்தியைத் தோழியிடம் சொல்ல, அவள், 'நீ பிரிந்தால் தலைவி மிகவும் வருந்துவாள்; ஆதலின், அவள் உடல்

வேறுபாடு கண்டு ஊரார் பழி தூற்றுவர்" என்று கூறிப் பிரிவைத் தவிர்க்கு மாறு செய்தது.

தரவு

வயக்குறு மண்டிலம் வடமொழிப் பெயர்பெற்ற
முகத்தவன் மக்களுள் முதியவன் புணர்ப்பினால்,
'ஐவர்'என்று உலகேத்தும் அரசர்கள் அகத்தராக்
கைபுனை அரக்குஇல்லைக் கதழ்எரி சூழ்ந்தாங்குக்
களிதிகழ் கடாஅத்த கடுங்களிறு அகத்தவா,
முளிகழை உயர்மலை முற்றிய முழங்குஅழல்,
ஒள்உரு அரக்குஇல்லை வளிமகன் உடைத்துத்தன்
உள்ளத்துக் கிளைகளோடு உயப்போகு வான்போல,
எழுஉறழ் தடக்கையின் இனம்காக்கும் எழில்வேழம்,
அழுவம்சூழ், புகைஅழல் அதர்பட மிதித்துத்தம்
குழுவொடு புணர்ந்துபோம், குன்றுஅழல் வெஞ்சுரம்
இறத்திரால், ஐய!மற்று இவள்நிலைமை கேட்டீமின்:

தாழிசை

மணக்குங்கால் மலர்அன்ன தகையவாய்ச் சிறிதுநீ
தணக்குங்கால் கலுழ்புஆனாக் கண்எனவும் உளஅன்றோ?
சிறப்புச்செய்து உழையராப் புகழ்புஎத்தி, மற்றுஅவர்
புறக்கொடையே பழிதூற்றும் புல்லியார் தொடர்புபோல்;

ஈங்குநீர் அளிக்குங்கால் இறைசிறந்து, ஒருநாள்நீர்
நீங்குங்கால் நெகிழ்போம் வளைஎனவும் உளஅன்றோ?
செல்வத்துள் சேர்ந்து அவர் வளன்உண்டு, மற்றவர்
ஒல்கிடத்து உலப்புஇலா உணர்விலார் தொடர்புபோல்;

ஒருநாள்நீர் அளிக்குங்கால் ஒளிசிறந்து, ஒருநாள்நீர்
பாராட்டாக் கால்பசக்கும் நுதல்எனவும் உளவன்றோ?
பொருந்திய கேண்மையின் மறைஉணர்ந்து, அம்மறை
பிரிந்தக்கால் பிறர்க்குஉரைக்கும் பீடிலார் தொடர்புபோல்;

எனவாங்கு–

சுரிதகம்

யாம்நிற் கூறுவது எவன்உண்டு? எம்மினும்
நீநற்கு அறிந்தனை; நெடுந்தகை! வானம்

துளிமாறு பொழுதின்,இவ் உலகம் போலும்!நின்
அளிமாறு பொழுதின்,இவ் ஆய்இழை கவினே.

தெளிவுரை

"ஐயனே! பன்னிரு சூரியருள் பகன் என்பான் ஒருவன். அவனைப் போல் பார்வையற்றவன், திருதராட்டிரன். அவன் மக்கள் நூற்றுவருள் மூத்தவன், துரியோதனன். அவனது சூழ்ச்சியால் ஐவர் என்று உலகோரால் பாராட்டப்படும் பாண்டவர்கள் உள்ளே இருந்த அரக்கு மாளிகைக்குத் தீ வைக்கப்பட்டது. அதனால் மாளிகையை விரைந்து நெருப்புச் சூழ்ந்தது. ஐவருள் ஒருவனாகிய வாயுவின் மைந்தனான வீமன், விரைந்து, எரியும் தீயினுக்கு இடையே வழி கண்டு, அன்பு மிக்க உடன்பிறந்தாரைக் காப்பாற்றி அவர்களோடு தப்பிச் சென்றான். அதுபோல, உயர்ந்த மலையில் உலர்ந்த மூங்கில் காடு தீப்பற்றி எரிய, அதனுள் வலிமைமிக்க யானைகள் வருந்தி நின்றன. அவற்றுள் ஒரு யானை, கணைய மரத்தை வெல்லுகின்ற திண்மை வாய்ந்த பெரிய துதிக்கையினைக் கொண்டது. அந்த யானை, வழியெங்கும் பரவிக் கிடந்த நெருப்புத் துண்டங்களை மிதித்துப் புகை மண்டலத்தினுள் ஓடி, ஏனைய யானைக் கூட்டத்தை அழைத்துக் கொண்டு வெளியேறியது. அவ்வாறு குன்றே அழல்போலக் கொதிக்கும் வெம்மையான காட்டில் பிரிந்து செல்லக் கருதுகின்றாய். தலைவியின் நிலையைக் கூறுகிறேன், கேள்.

"அருகில் இருக்கும்வரை ஒருவரைப் பாராட்டிப் புகழ்ந்து பேசி, அவர் நீங்கியவுடன் அயலாரிடம் அவரைப் பழிதூற்றும் அற்பரின் உறவுபோல, நீயும் தலைவியும் கூடியிருக்கும்போது, மலரைப் போல ஒளி சிறந்து விளங்கும் தலைவியின் கண்களே நீ சிறிது பொழுது பிரிந்தாலும் உன் குணத்தைப் பிறருக்கு அறிவித்துப் பசந்து காட்டும் நெற்றி எனும் ஒரு பகை உண்டன்றோ?

"செல்வக்காலத்தில் ஒருவரோடு நட்புக்கொண்டு, அச்செல் வத்தை அனுபவித்து, அவர் வறுமையுற்றபோது அவருக்கு ஓர் உதவியும் செய்யாத நன்றியற்றவரது நட்புப்போல,நீ கூடியிருந்து அருள் செய்தபோது தலைவி பெற்ற புதுப்பொலிவை அவள்

தோள்களும் பெற்றுச் சிறந்திருந்தன. அவை நீ ஒருநாள் பிரிந்தவுடன் மெலிவுற்றதால் அத்தோள்களிலிருந்து கழன்று விழும் வளையல்கள், உங்கள் தொடர்பைப் பிறர் அறிந்து தூற்றும்படி செய்வதால் அவ்வளைகளும் உனக்குப் பகை யாயிருக்கின்றனவே!

"ஒருவனுடன் நட்புக்கொண்டிருக்கும்போது அவன் இரகசியத்தை அறிந்துகொண்டு, அந்த நட்பு மாறியபோது அதனைப் பிறர்க்குக் கூறும் பெருமையற்றாரின் உறவுபோல, நீ அன்புடன் பாராட்டித் தடவும்பொழுது பொலிவு பெற்றிருந்த தலைவியின் நெற்றியும் உன் பிரிவின்போது பசலை பாயப் பெற்று உன் குணத்தினைப் பிறருக்கு அறிவித்து உனக்குப் பகையாயிருக்கின்றதுவே!

இவ்வாறு பிரிவுக்காலத்தில் தலைவியின் உறுப்புகளே உனக்குப் பகையாகி உன்னை ஊரார் பழிதூற்றச் செய்யும் என நான் உனக்குக் கூறுவதற்குக் காரணம் என்ன? அதை நீயே நன்கறிவாய்!

"போற்றுதற்குரிய தலைவ! மேகம் மழை பெய்யாவிடில் இந்த உலகம் பயன் குன்றும். அதுபோல நீ அருள் செய்யாவிடில் இவள் அழகு குன்றும். இதனை நீ அறிக" என்று கூறித் தோழி தலைவனின் பயணத்தைத் தடுத்தாள்.

கருத்து

'தலைவ! நீ பிரியின் தலைவியின் அழகு முழுதுமாய் அழியும்.'

விளக்கம்

"தலைவ! ஒருவரோடு இருக்கும்போது அவரைப் பாராட்டி விட்டு அவரை விட்டு நீங்கும்போது அவரைத் தூற்றுவதுபோல, நீ அருகிலிருக்கும் பொழுது அழகொளிர விளங்கும் தலைவியின் கண்கள், நீ பிரிந்தால் அழுது நீர் சொரிந்து உன் அன்பின்மை யைக் காட்டிவிடும்.

ஒருவர் செல்வமுடையவராய் இருக்கும்போது அவரைப் பாராட்டி மகிழ்ந்த ஒருவர் அவரிடம் அச்செல்வம் பிரிந்தவுடன் அவரைத் தூற்றுவர். அதுபோல, நீ தலைவியோடு இருக்கும்

பொழுது தலைவியின் உடலில் செறிந்திருந்த வளையல்கள் நீ பிரிந்தால் கழன்று விழுந்து நீ தலைவியை விட்டு அகன்றிருப் பதை அனைவர்க்கும் அறிவித்துவிடும்.

நண்பர்களாய் இருந்தபொழுது ஒருவரின் இரகசியத்தை அறிந்த மற்றவர், நட்புக் குலைந்தபின் அந்த இரகசியத்தைப் பிறருக்குக் கூறி நண்பரைத் தூற்றுவார். அதுபோல, நீ தலைவியுடன் ஒன்றாயிருக்கும்போது ஒளிபொருந்தி விளங்கிய நெற்றி, நீ பிரிந்ததும் பசலை பாயப் பெற்றுத் தலைவியை நீ பிரிந்திருப்பதை ஊரார்க்கு உரைத்துவிடும்.

நீ எல்லாம் அறிந்தவன். நீ பிரிந்தால் தலைவியின் அழகு, மழை யில்லாத உலகம்போல அழிந்துவிடும்."

இவ்வாறு கூறித் தோழி, தலைவன் செலவினைத் தடுக்கிறாள்.

சொற்பொருள்

1. வயங்குதல் - ஒளி செய்தல்; மண்டிலம் - வட்டம்; வயக்குறு மண்டிலம் - ஒளி செய்யும் சூரியன்; வடமொழிப்பெயர் பெற்ற முகத்தவன் - திருதராட்டிரன்.
2. முதியவன் - மூத்தவனான துரியோதனன்; புணர்ப்பினால் - சூழ்ச்சியால்.
3. ஐவர் - ஐந்து பேராகிய பாண்டவர்; அகத்தாராக - உள்ளே இருக்க.
4. கதழ் எரி - விரைந்து எரியும்.
5. கடாஅத்த - மதநீர் சொரிகின்ற; அகத்தவா - உள்ளேயிருக்க.
6. முளிகழை - உலர்ந்த மூங்கில்.
7. ஒள்உரு அரக்கு இல் - ஒளி பொருந்திய வடிவினைக் கொண்ட அரக்கு மாளிகை; வளிமகன் - காற்றின் மைந்தன் வீமன்.
8. உயப்போகுவான் - பிழைத்துச் செல்பவன்.
9. எழு - கணைய மரம்; தடக்கை - பெரிய கை.
10. அழுவம் - பரப்பு; அதர்பட - வழியுண்டாகும்படி.
11. குன்று அழல் வெஞ்சுரம் - குன்றமே கொதிக்கும்படியான காடு.
12. இறத்திர் - செல்லுகின்றாய்; கேட்டீமின் - கேட்பாயாக.
13. மணக்குங்கால் - ஒன்றாய்க் கூடி இருக்கும்வரை.
14. தணக்குங்கால் - பிரியும்போது; கலுழ்புஆனா - விடாமல் அழுகின்ற.
15. உழையர் - அருகிலிருப்போர்; புகழ்பு ஏத்தி - புகழ்ந்து பாராட்டி.
16. புறக்கொடை - பிரிந்த நிலை; புல்லியார் - அற்பர்.

18. நெகிழ்பு ஓம் - கழன்று போகும்.
20. ஒல்கிடத்து - வறுமையுற்றபோது; உலப்பிலா - உதவாத.
22. பாராட்டாக்கால் - அருள்காட்டாதபோது.
23. மறை உணர்ந்து - இரகசியத்தை அறிந்து.
24. பீடிலார் - பெருமையில்லாதவர்.
27. நெடுந்தகை - பெரியோய்!
28. துளி - மழை.
29. அளி - அன்பு.

தோழி கூற்று

கலித்தொகை 2 — **பாலை பாடிய பெருங்கடுங்கோ**

திணை : பாலை

கூற்று

'இல்வாழ்க்கை நெறி ஆற்றுதற்குப் பொருள்வயிற் பிரிவேன்' என்ற தலைமகற்குத் தலைமகளது இயல்பு கூறி, இப்பெற்றியாளைப் பிரியாமையே பொருளாவது எனச் சொல்லிச் செலவழுங்குவித்தமை தோழி, தலைமகட்கு உவந்து சொல்லியது.

கூற்று விளக்கம்

இல்வாழ்க்கையை நெறி முறைப்படி நடத்தற்கு வேண்டிய பொருளை ஈட்டுவதற்குத் தலைவன் பிரியக் கருதிப் 'பொருள்வயிற் பிரிவேன்' என்றான்; தோழி தலைவியது இயல்புகளை எடுத்துரைத்து, 'இத்தகைய வளைப் பிரியாமையே பொருள்' என்று எடுத்துச் சொல்லி, அவளைப் பிரியாது தடுத்தனள். இதனை அவள் மகிழ்ச்சியுடன் தலைவிக்குச் சொல்லியது.

தரவு

தொடங்கற்கண் தோன்றிய முதியவன் முதலாக,
அடங்காதார் மிடல்சாய, அமரர்வந்து, இரத்தலின்,
மடங்கல்போல் சினைஇ, மாயஞ்செய் அவுணரைக்
கடந்தடு முன்பொடு, முக்கண்ணான் மூஎயிலும்
உடன்றக்கால் முகம்போல ஒண்கதிர் தெறுதலின்,
சீறுஅருங் கணிச்சியோன் சினவலின் அவ்எயில்
ஏறுபெற்று உதிர்வனபோல், வரைபிளந்து, இயங்குநர்

ஆறுகெட விலங்கிய அழல்அவிர் ஆரிடை;
மறப்பருங் காதல் இவள்ஈண்டு ஒழிய,
இறப்பத் துணிந்தனிர், கேண்மின்மற்று – ஐஇய!

தாழிசை

தொலைவுஆகி, இரந்தோர்க்குஒன்று ஈயாமை இளிவுஎன,
மலைஇறந்து செயல்சூழ்ந்த பொருள்பொருள் ஆகுமோ?
நிலைஇய கற்பினாள், நீநீப்பின் வாழாதாள்,
முலைஆகம் பிரியாமை பொருள்ஆயின் அல்லதை;

'இல்என இரந்தோர்க்குஒன்று ஈயாமை இளிவு'எனக்
கல்இறந்து செயல்சூழ்ந்த பொருள்பொருள் ஆகுமோ?
தொல்இயல் வழாஅமைத் துணைஎனப் புணர்ந்தவள்
புல்ஆகம் பிரியாமை பொருள்ஆயின் அல்லதை;

'இடன்இன்றி இரந்தோர்க்குஒன்று ஈயாமை இளிவு'எனக்
கடன்இறந்து செயல்சூழ்ந்த பொருள்பொருள்ஆகுமோ?
வடமீன்போல் தொழுதுஏத்த வயங்கிய கற்பினாள்
தடமென்தோள் பிரியாமை பொருள்ஆயின்அல்லதை;

எனஇவள் –

சுரிதகம்

புன்கண்கொண்டு இனையவும், பொருள்வயின் அகறல்
அன்புஅன்று, என்றுயான் கூற, அன்புற்றுக்
காழ்வரை நில்லாக் கடுங்களிற்று ஒருத்தல்
யாழ்வரைத் தங்கி யாங்குத் தாழ்புநின்
தொல்கவின் தொலைதல் அஞ்சி,என்
சொல்வரைத் தங்கினர் காத லோரே.

தெளிவுரை

" '*இறைவன் உலகங்களைப் படைக்கக் கருதிய பொழுது முதன் முதலாய்ப் படைக்கப்பட்டவன், அயன். அந்த அயனும் மற்ற தேவர் அனைவரும் ஒன்றுசேர்ந்து வந்து, தமக்கு அடங்காத வராகிய அவுணரின் வலிமையை அழிக்குமாறு முக்கண்ணனாகிய சிவனை வேண்டினர். மழுவேந்திய சிவன் அதனைக் கேட்ட தம் முகத்தில் சினம் கொண்ட அளவிலேயே மூன்று*

கோட்டைகளும் இடி விழப் பெற்ற மலைபோல் பொடிப் பொடியாய் உதிர்ந்து வீழ்ந்தன. உதிர்ந்து கிடந்த அக் கோட்டைச் சிதறல்களைப் போல, கதிரவன் சுடுதலால் மலைகள் பிளந்து கிடக்கின்றன. அத்தகைய வெப்பம் கொதிக்கும் வழி யிலே, மறத்தற்கரிய தலைவியை இங்கேயே விட்டுவிட்டு, பொருள் தேடுவதற்காக நீ புறப்பட்டுச் செல்லத் துணிந்து விட்டாய்! தலைவ! நான் கூறுவனவற்றைக் கேள்.

"உன்னிடமுள்ள பொருளையெல்லாம் கொடுத்துத் தீர்ந்தமையால் மேலும் உன்னிடம் வந்து கேட்பவர்க்கு, இல்லையென்று சொல்வது இழிவென்று கருதி, மலையைக் கடந்து நீ ஈட்டச் செல்லும் பொருளும் ஒரு பொருள் ஆகுமா? (ஆகாது). உன் மனைவி நிலைத்த கற்புடையவள்; நீ அவளை நீங்கினால் உயிர் வாழாள். அவள் மார்பைத் தழுவி மகிழ்ந்து பிரியாமல் வாழ்வதுதான் சிறந்த பொருள்.

"வறுமையில் வாடுவோர் உன்னிடம் வந்து கேட்டால் அவர்க்கு இல்லை என்று சொல்வது இழிந்த செயல் என்று கருதி, மலைகளைக் கடந்துபோய் நீ ஈட்டி வரும் பொருளும் ஒரு பொருளா? அன்று. மரபு வழுவாமல் உன் மனைவியாய் வாழ்பவள் மார்பினைத் தழுவிப் பிரியாது வாழ்வதுதான் உண்மைப்பொருள்.

"எம்மிடம் எதுவுமில்லை; எமக்கு உதவுக என்று கேட்பவர்க்கு இல்லை என்று சொல்வது இழிவு என்று கருதிக் காட்டுவழியைக் கடந்து சென்று தேடிவரும் பொருளும் ஒரு பொருளா? அன்று (அச்செயல் சிறப்புடையதே). ஆனாலும் அருந்ததிபோலும் தொழுது வணங்குதற்கேற்ற கற்பினளாய் விளங்கும் உன் மனைவியின் மென்மையான பெரிய தோள்களைப் பிரியாமல் இருப்பதே பெரும் பொருள் என்று இவ்வாறு கூறினேன்." மேலும்,

" 'உன் மனைவி பொலிவிழந்து வருந்தவும் நீ பொருள் தேடிப் பிரிதல் அன்பன்று' என்று தலைவனிடம் கூறினேன். அதனைக் கேட்டு அன்புற்ற தலைவன், அங்குசத்திற்கு அடங்காது சென்ற மதங்கொண்ட ஆண்யானை, யாழிசையில் கட்டுண்டு நின்றது

போல, உன் அழகு கெடுவதற்கு அஞ்சி, என் சொல்லை ஏற்று உன்னைப் பிரிந்து செல்லும் எண்ணத்தினைக் கைவிட்டான்' " என்று தோழி தலைவியிடம் கூறினாள்.

கருத்து

'தலைவ! உன் மனைவி பொலிவிழந்து வருந்த நீ பொருள் தேடிப் புறப்படலாமா?'

விளக்கம்

'இரந்து கேட்போர்க்கு இல்லையென்று சொல்வது இழிவு' என்று கருதி, மலைகளைக் கடந்து சென்று பொருளீட்டி வர விரும்புகிறான் தலைவன். அது சிறந்த செயல்தான்; என்றாலும், "தலைவி உன் சொல்வழி நடக்கும் கற்பினள்; நீ பிரிந்தால் அவள் வாழாள். எனவே, அவளைப் பிரியாமைதான் நீ செய்வதற்கு உரியது" என்று சொல்லித் தோழி தலைவனின் பயணத்தைத் தவிர்த்தாள்.

இப்பாடலில் காணப்பெறும் தொன்மக் கருத்துகள்:

1) இறைவன் உலகங்களைப் படைக்கக் கருதினான். படைப்புத்தொழிலைச் செய்ய பிரம்மா எனப்படும் அயன் முதலில் தோற்றுவிக்கப்படுகின்றான். அசுரர்களோ பொன், வெள்ளி, இரும்பு ஆகியவற்றால் ஆன மூன்று கோட்டைகளில் அமர்ந்து தேவர்களைத் தாக்க வருகின்றனர். அயனும் அவனால் படைக்கப்பட்ட தேவர்களும் சிவனிடம் முறையிட, சிவன் சினத்துடன் நோக்க அம்மூன்று கோட்டைகளும் பொடிப் பொடியாய் உதிர்ந்து விழுந்தன.

2. கௌதம முனிவர் புதல்வி அருந்ததி. அவள் வசிட்ட முனிவருக்கு மனைவியானாள். வசிட்டனைப்பற்றி அருந்ததி ஐயப்பட்டபோது அவனால் சபிக்கப்பட்டு, கருநிறம் இயைந்த செந்நிறம் உள்ளவளாய் யாவரும் காணுமாறு நட்சத்திரமானாள். இந்நட்சத்திரமே 'வடமீன்' எனப்படுகிறது.

சிவன் முக்கண்ணால் எரித்தபோது கோட்டைகள் சிதறி உதிர்ந்தன என்பது உவமை. கதிரவனின் வெம்மையால் மலைகள் பிளவுபட்டு உதிர்ந்தன என்பது உவமேயம்.

சொற்பொருள்

1. தொடங்கற்கண் - உலகத் தோற்றக் காலத்தில்; முதியவன் - அயன்.
2. அடங்காதார் - பகைவர்; மிடல் - வலிமை; சாய - அழிய.
3. மடங்கல் - கூற்றுவன்; சினைஇ - சினந்து; மாயம் - வஞ்சனை; அவுணர் - அசுரர்.
4. கடந்து அடு - எதிர்நின்று அழிக்கின்ற; முன்பு - வலிமை; முக்கண்ணான் - மூன்று கண்களைக் கொண்ட சிவன்; மூ எயில் - பொன், வெள்ளி, இரும்பு ஆகியவற்றாலான மூன்று கோட்டைகள்.
5. உடன்றக்கால் - சினந்து நோக்கியபோது; தெறுதல் - சுடுதல்.
6. கணிச்சியோன் - மழு ஏந்திய சிவன்; சினவலின் - சினந்ததால்.
7. ஏறு பெற்று - இடி இடித்து; வரை - மலை; இயங்குநர் - வழிச் செல்வோர்.
8. ஆறு - வழி; அழல்அவிர் - வெப்பம் வீசுகின்ற.
10. இறப்ப - நீங்க.
11. தொலைவுஆகி - தம்மிடமுள்ள எல்லாம் தொலைந்தபின்; ஈயாமை - கொடாமை; இளிவு - இகழ்ச்சி.
12. செயல் சூழ்ந்த - ஈட்டிய.
13. நீப்பின் - நீங்கினால்.
14. முலை ஆகம் - முலைகளைக் கொண்ட மார்பு.
16. கல் - மலை.
17. தொல்இயல் வழாமை - பழைய மரபு மாறாமல்.
18. புல் ஆகம் - ஆகம் புல் - மார்பைத் தழுவுதல்.
19. இடன் இன்றி - இல்லை என்று; ஈயாமை - கொடாமை.
20. கடன் இறந்து - காட்டைக் கடந்து.
21. வடமீன் - அருந்ததி; வயங்கிய - பிறரால் போற்றுதற்குரிய.
24. புன்கண் - துன்பம்; இனையவும் - வருந்தவும்.
26. காழ் வரை - குத்துக்கோலின் ஆணைக்கு; நில்லா - அடங்காத; கடுங்களிற்று ஒருத்தல் - மதம் மிக்க ஆண் யானை.
27. தங்கியாங்கு - அடங்கினாற்போல; தாழ்பு - விருப்பத்திற்குரிய.
28. தொலைதல் - அழிதல்.
29. சொல்வரை - சொல்லுக்குக் கட்டுப்பட்டு.

செலவறிந்த தலைவி கூறியது.

தலைவி கூற்று

நற்றிணை 177 **ஆசிரியர் பெயரை அறிய இயலவில்லை**

திணை : பாலை

கூற்று

செலவுக்குறிப்பறிந்த தலைமகள் தோழிக்கு உரைத்தது.

கூற்று விளக்கம்

தலைவன் பொருள் தேடக் காட்டுவழியே செல்ல முடிவு செய்து விட்டதை அவன் குறிப்புகள் சிலவற்றால் அறிந்த தலைவி, அதைத் தோழியிடம் சொல்லி, 'நாம் துன்ப வெள்ளத்தில் நீந்தும் நாள் இப்போதே வந்துவிட்டது' என வருந்திக் கூறியது.

பரந்துபடு கூர்எரி கானம் நைப்ப
மரந்தீ யுற்ற மகிழ்தலை அம்காட்டு
ஒதுக்குஅரும் வெஞ்சுரம் இறந்தனர் மற்றவர்
குறிப்பின் கண்டிசின் யானே நெறிப்பட
வேலும் இலங்குஇலை துடைப்பப் பலகையும்
பீலி சூட்டி மணிஅணி பவ்வே
பண்டினும் நனிபல அளிப்ப இனியே
வந்தன்று போலும் தோழி நொந்துநொந்து
எழுதுஎழில் உண்கண் பாவை
அழிதரு வெள்ளம் நீந்தும் நாளே.

தெளிவுரை

"நெருப்புப் பற்றியதால் பரந்துபட்ட காடு முழுவதும் அழிந்து பட்டது. அக்காட்டிலிருந்த மரங்களெல்லாம் தீய்ந்து பார்ப் போர்க்குத் துன்பத்தைத் தந்தது. அக்காட்டில் ஒதுங்கி இருக்க வும் நிழலில்லாத வெம்மை மிகுந்த வழியில் செல்ல முடிவு செய் துள்ளார், நம் தலைவர் என்பதை அவர் குறிப்புகள் சிலவற்றால் கண்டறிந்தேன். அடிக்கடி வேலின் இலைப்பகுதியைத் துடைத்து வைப்பார்; கேடயத்திற்கு மயிற்பீலி சூட்டி மணிகளை அணிவிப்பார். மேலும், அவர் முன்பு என்னிடம் செலுத்திய அன்பைக் காட்டிலும் மிகுதியும் செலுத்தி அருள் புரிகிறார். ஆதலால், அவர் பிரிவை நினைந்து, வருந்தி வருந்திக் கண்ணின்

பாவை கண்ணீரில் மூழ்கும் காலம் இப்போதே வந்துவிட்டது" எனத் தலைவி தோழியிடம் கூறினாள்.

கருத்து

'தலைவன் செய்யும் சில குறிப்புகளால் அவன் பிரியவிருக்கிறான் என்பதை உணர்கிறேன்' என்கிறாள், தலைவி.

விளக்கம்

"தோழி! தலைவர் பொருளீட்டப் பாலை வழியில் செல்ல முடிவு செய்துவிட்டார் என்பதை அவர் குறிப்புகள் சிலவற்றால் அறிந்தேன். வேலின் இலையைத் துடைக்கிறார்; கேடயத்திற்கு மயில் தோகை சூட்டி மணிகளை அணிவிக்கிறார். முன்பைவிட அன்பைச் செலுத்தி என்னைப் பாராட்டுகிறார். எனவே, அவர் பிரிவது திண்ணம். நம் கண் பாவை கண்ணீரில் நீந்தும் நாள் இப்போதே தொடங்கிவிட்டது. இனி எப்படி ஆற்றியிருப்பது?"

குறிப்பு

இதனைக் கேட்கும் தோழி தலைவனின் செலவினைத் தவிர்ப்பாள் என்பது பயன்.

சொற்பொருள்

1. பரந்துபடு - பரந்து எழுந்த; கூர்எரி - கொழுந்துவிட்டு எரியும் நெருப்பு; கானம் - காடு; நைப்ப - அழிக்க.
2. மகிழ்தலை - மகிழ்ச்சி நீங்கும்.
3. ஓதுக்குஅரும் - செல்லுதற்கரிய; இறந்தனர் - செல்ல முடிவு செய்துள்ளார்.
4. அவர் குறிப்பின் - அவரது குறிப்பால்; கண்டிசின் - கண்டறிந்தேன்; நெறிப்பட - வழியில் செல்லுவதற்காக.
5. வேலும் - வேலினையும்; இலங்குஇலை - (அவ்வேலில் இருக்கின்ற) இலைப்பகுதியையும்; துடைப்ப - துடைத்துத் தூய்மை செய்கின்றார்; பலகை - கேடயம்.
6. பீலி சூட்டி - மயில் தோகையை அணிவித்து; மணி அணி பவ்வே - மணிகள் நிரலே கோத்துக் கட்டப்படுகின்றன.
7. பண்டினும் - முன் நாளினும்; நனிபல அளிப்ப - மிகுதியும் அன்பு செலுத்தி அருள் புரிகின்றார்; இனியே - இப்போதே.
8. வந்தன்று - வந்துவிட்டது; நொந்து நொந்து - வருந்தி வருந்தி.

9. எழுது எழில் - எழுதுதற்கும் அரிதான அழகு; பாவை - கண்ணில் உள்ள பாவை.
10. வெள்ளம் - கண்ணீரில்; நீந்தும் - முழுகும்.

தலைவி கூற்று

நற்றிணை 73 **மூலங்கீரனார்**

திணை : பாலை

கூற்று

செலவுக்குறிப்பு அறிந்து வேறுபட்ட தலைமகள் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் பிரிந்து செல்லவிருப்பதைத் தலைவி அறிந்தாள். 'அவனைத் தழுவிக் கிடக்கும் நிலையிலும் கொடிய மாலைப்போதில் நாம் அஞ்சுவோம். அவன் நம்மைப் பிரிந்து செல்லும் நிலையில் எங்ஙனம் ஆற்றியிருப்போம்' எனத் தலைவி கூறியது.

வேனில் முருக்கின் விளைதுணர் அன்ன
மாணா விரல வல்வாய்ப் பேஎய்
மல்லல் மூதூர் மலர்ப்பலி உணீஇய,
மன்றம் போழும் புன்கண் மாலை,
தம்மொடும் அஞ்சும் நம்இவண் ஒழியச்
செல்ப என்ப தாமே, செவ்வரி
மயிர்நிரைத் தன்ன வார்கோல் வாங்குகதிர்ச்
செந்நெல்அம் செறுவின் அன்னம் துஞ்சும்
பூக்கெழு படப்பைச் சாய்க்காட்டு அன்னஎன்
நுதல்கவின் அழிக்கும் பசலையும்,
அயலோர் தூற்றும் அம்பலும் அளித்தே.

தெளிவுரை

"தோழி! பேய்கள், வேனிற்காலத்தில் மலரும் செம்முருக்க மரத்தில் தோன்றும் பூங்கொத்துப் போன்ற பொலிவில்லாத விரல்களையும் வலிய வாயையும் கொண்டவை. அவை, வளமிக்க பழமையான ஊரவர் மாலையில் இடப்படும் பலிச்

சோற்றினை உண்ணுதற்காகத் தாம் வாழும் பாழான மன்றத்தை மோதி எழும். அவ்வாறு பேய்கள் மோதி எழும், பிரிந்தாரைத் துன்புற்றும் மாலைப்போதில், தலைவரோடு இருப்பினும் நான் அஞ்சுவேன். இந்நிலையில் நான் இங்குத் தனியே தங்குமாறு என்னை விட்டு விட்டுச் செல்ல நினைக்கின்றார் என உரைக்கின்றனர். சிவந்த மெல்லிய மயிரை நிரைத்து வைத்தாற் போன்று நீண்டு திரண்டு வளைந்த செந்நெற்கதிர்களைக் கொண்ட வயல்களில் அன்னப் பறவைகள் துயில்கின்ற பொலிவு பெற்ற பூக்கொல்லைகளைக் கொண்டது, திருச்சாய்க்காடு எனும் ஊர். அவ்வூர் போன்ற என் நெற்றியைப் பசலை பரந்து அழிக்கும். அதனைக் கண்டு அயலவர் பழிச்சொல் கூறித் தூற்றுவர். அப்பசலையையும் பழிச் சொல்லையும் எனக்களித்து அவர் செல்லுகிறார். இதனை நான் எவ்வாறு ஆற்றியிருப் பேன்?" என்று தலைவி தோழியிடம் கூறுகிறாள்.

கருத்து

தலைவனுடன் இருக்கும்போதே தனித்திருக்க வருந்தும் நான், தலைவனைப் பிரிந்து எவ்வாறு ஆற்றியிருப்பேன்?

விளக்கம்

"தோழி! நான் தலைவனோடு கூடியிருக்கும் காலத்திலேயே மாலைப்பொழுது வந்தால் வேட்கை மிகுந்து வருந்தும் இயல்பினள். இப்போது தலைவர் நம்மைப் பிரியக் கருதி யுள்ளார் என்று கூறுகின்றனர். அவர் பிரியின் பசலை பாய்ந்து என் நெற்றியொளி கெடும். அயலோர் அம்பலும் அலரும் தூற்றித் துன்பம் விளைவிப்பர்; ஆதலான், நான் எவ்வாறு ஆற்றுவேன்?" என்று கூறித் தலைவி வருந்தினாள்.

இறைச்சி

பேய் பலிச் சோற்றை உண்பதற்காக மன்றத்தைச் சிதைத்து எழும் என்னும் சொற்றொடர், பசலை தலைவியின் அழகை உண்ணுதற்கு அவள் நெஞ்சைப் புடைத்து நெற்றியில் எழும் என்னும் இறைச்சிப் பொருளைத் தருகிறது.

சொற்பொருள்

1. முருக்கு - செம்முருக்க மரம்; விளை - விளையும், தோன்றும்; துணர் - பூங்கொத்து.
2. மாணா - பொலிவில்லாத; வல்வாய் - வலிய வாய்.
3. மல்லல் - வளப்பம்; மூதூர் - பழமையான ஊர்; உணீஇய - உண்ணுவதற்காக.
4. போழும் - பிளக்கும்; புன்கண் - வருத்தம்.
5. தம்மொடும் - தலைவனோடு இருந்தாலும்; இவண் ஒழிய - இங்கே தனித்திருக்க.
6. செல்ப என்ப - செல்ல விரும்புகிறார் என்று கூறுவர்; செவ்வரி - செவ்விய பொன் போன்ற, (அரி - பொன்).
7. மயிர் நிரைத்தன்ன - மயிரை வரிசைப்படுத்தி வைத்தாற் போன்ற; வார்கோல் - நீண்டு திரண்ட தண்டொடு; வாங்கு கதிர் - வளைந்த கதிர்.
8. செறு - வயல்; அன்னம் - அன்னப் பறவை; துஞ்சும் - தூங்கும்.
9. பூக்கெழு - பூக்கள் பொருந்திய; படப்பை - வயல்; சாய்க்காடு - ஓர் ஊர்.
10. நுதல் - நெற்றி; கவின் - அழகு; பசலை - பசலை நோய்.
11. அம்பல் - பழிச்சொல்; அளித்து - எனக்குத் தந்துவிட்டு.

தலைவி கூற்று

நற்றிணை 1 **கபிலர்**

திணை : குறிஞ்சி

கூற்று

பிரிவுணர்த்திய தோழிக்குத் தலைமகள் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் பிரியவிருக்கிறான் என்பதறிந்த தோழி அச்செய்தியைத் தலைவியிடம் கூறினாள். அதனைக் கேட்ட தலைவி, 'என் மேல் மிகவும் அன்பு கொண்ட அவர் என்னை விட்டுப் பிரிய மாட்டார்' என்று தலைவனைப் புகழ்ந்துரைப்பது.

நின்ற சொல்லர், நீடுதோன்று இனியர்
என்றும் என்தோள் பிரிபுஅறி யலரே
தாமரைத் தண்தாது ஊதி மீமிசைச்
சாந்தில் தொடுத்த தீம்தேன் போலப்
புரைய மன்ற, புரையோர் கேண்மை;
நீர்இன்று அமையா உலகம் போலத்
தம்இன்று அமையா நம்நயந் தருளி,
நறுநுதல் பசத்தல் அஞ்சிச்
சிறுமை உறுபவோ செய்புஅறி யலரே!

தெளிவுரை

தோழி! நம் தலைவர் சொன்ன சொல் தவறாதவர். நாளும் பெருகித் தோன்றும் நற்பண்பினைக் கொண்டவர்; என்றுமே என் தோளைப் பிரிந்தறியாதவர். ஆழமான பொய்கையில் மலரும் தாமரையின் குளிர்ந்த மகரந்தத் தூளை ஊதி (தேன் எடுத்து) மிக உயர்ந்த மலையிலே நிற்கின்ற சந்தன மரத்தில் தொடுக்கப்பெற்ற இனிய தேன் அடையைப் போல, உயர்ந் தோருடன் கொண்ட நட்பு மிகவும் உயர்வானது. நீரில்லாமல் இவ்வுலகம் இல்லை; அதுபோல அவரில்லாமல் நாம் இல்லை. அவர் நம்மீது மிகுந்த அன்பு கொண்டவர். நறுமணம் கமழும் நமது நெற்றி பசப்பெய்தும்படியான சிறுமையான செயல்களை அவர் செய்யமாட்டார். (அவர் நம்மை விட்டுப் பிரிய மாட்டார்.)

கருத்து

'நம் காதலர் நற்பண்புகள் மிக்கவர். நம் நெற்றி, பசலையடையும்படியான துன்பத்தைத் தந்து அவர் பிரிய மாட்டார்.'

விளக்கம்

பூக்களுள் உயர்ந்தது தாமரை; இனிமையில் உயர்ந்தது தேன்; நிலத்தில் உயர்ந்திருப்பது மலை; மரங்களுள் உயர்ந்தது, சந்தன மரம். உயர்ந்த இவற்றைப் போன்று சான்றோர் உயர்ந்த குணமுடையவராகவே இருப்பர்.

சொற்பொருள்

1. நின்ற சொல்லர் - சொன்ன சொல் தவறாதவர்; நீடுதோன்று - நாளும் பெருகித் தோன்றுகின்ற; இனியர் - இனிய பண்புகளைக் கொண்டவர்.
2. பிரிபு அறியலர் - பிரிந்து அறியாதவர்.
3. தண்தாது - குளிர்ந்த மகரந்தத் தூள்; மீமிசை - மிக உயர்ந்த (மலைமேல் உள்ள).
4. சாந்தில் - சந்தன மரத்தில்.
5. புரையோர் கேண்மை - உயர்ந்தோர் நட்பு.
6. நீர் இன்று - நீரின்றி; அமையா - பொருந்தாத, அமையாத.
7. நயந்தருளி - விரும்பி அருள் செய்தவர்; தம் இன்று - அவர் இல்லாமல்.
8. பசத்தல் - பசப்படைதல்.
9. சிறுமை உறுபவோ? - சிறுமையானவற்றைச் செய்வாரா?; செய்பு அறியலர் - செய்ய அறியாதவர், செய்ய மாட்டார்.

தலைவி கூற்று

நற்றிணை 296 **குதிரைத்தறியனார்**

திணை : பாலை

கூற்று

தோழியால் பிரிவு உணர்த்தப்பட்ட தலைமகள் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் பிரிவதைத் தோழியாலறிந்த தலைவி, அவளை நோக்கி, 'கார் காலத்தில் நம் தலைவர் நம்மைப் பிரிந்து செல்கிறார். நாம் அவரின்றி வருந்தி மனையிலிருக்கிறோம். இஃதென்ன கொடுமை?' என்று நொந்து சொல்லியது.

என்ஆ வதுகொல்? தோழி! மன்னர்
வினைவல் யானைப் புகர்முகத்து அணிந்த
பொன்செய் ஓடைப் புனைநலம் கடுப்பப்
புழற்காய்க் கொன்றைக் கோடுஅணி கொடிஇணர்
ஏகல் மீமிசை மேதக மலரும்,

பிரிந்தோர் இரங்கும் அரும்பெறல் காலையும்,
வினையே நினைந்த உள்ளமொடு துனைஇச்
செல்ப என்ப, காதலர்
ஒழிதும் என்பதால், வருந்துபடர் உழந்தே.

தெளிவுரை

'தோழி! உயர்ந்த மலையின் உச்சியில் உள்துளை அமைந்த காய்களைக்கொண்ட சரக்கொன்றையின் கிளைகளில் கொடி கொடியாய்த் தொங்கும் பூங்கொத்துகள், சிறப்புற மலர்ந் திருக்கும். இக்காட்சி மன்னரின் போர்த்தொழிற்குரிய யானை யின் புள்ளிகளைக் கொண்ட முகத்தில் அணியப்பெற்ற பொன் னால் செய்த நெற்றிப்பட்டத்தினைப் போன்று அழகியதா யிருக்கும். பெறுவதற்கரிய இக்கார் காலத்தில் பிரிந்தோர் வந்து சேர்வர். ஆனால், இக்காலத்திலும், தலைவர் தாம் செய்ய வேண்டிய தொழிலையே நினைந்த உள்ளத்தினராய் விரைந்து செல்வார் என்று கூறுகின்றனர். நாம் பொறுத்தற்கரிய பிரிவுத் துயரைத் தாங்கி இங்கேயே இருக்க வேண்டியவர் ஆயினோம். இதனால் நம் நிலை என்னாவது?' என்று தலைவி தோழியிடம் கூறினாள்.

கருத்து

"காதலர் மகிழ்தற்குரிய கார் காலத்தே நம் தலைவர் பொருள்வயிற் பிரியக் கருதுகிறார். அவர் பிரிவெண்ணி நாம் வருந்தி உறைதல் எவ்வாறு?"

விளக்கம்

'கார் காலத்தில் தோன்றும் கொன்றை மலர்ந்துள்ளது. இக் காலம் காதலர் பிரியாது ஒன்றுகூடி மகிழ்தற்குரியது; பிரிந்திருப் போரும் பிரிவைத் தவிர்த்து மீளுதற்குரியது. அவ்வாறிருக்க, நம் தலைவர் பொருள்வயிற்பிரிவார் என்பதும், நாம் பிரிவெண்ணி வருந்தியிருக்க வேண்டும் என்பதும் இயல்புக்கு மாறுபடு கின்றனவே' என்று தலைவி தோழியிடம் கூறினாள்.

குறிப்பு

பாறையின்மேல் விழுந்து கிடக்கும் கொன்றை மலர்கள் யானையின் முகத்திலேயுள்ள பொற்பட்டத்தைப் போலத் தோன்றும்.

இறைச்சி

யானையின் நெற்றிப்பட்டம்போலக் கார் காலத்தில் கொன்றை மலரும் என்னும் தொடர்மூலம், தலைவற்கு இல்லக் கிழத்தியாய் உரிமை பூண்டு ஒழுகிய தலைவி கார் கால முடிவில் கொன்றை மலர் உதிர்வதுபோல உயிரிழப்பாள் எனும் இறைச்சிப் பொருள் பெறப்படுகிறது.

சொற்பொருள்

2. வினைவல் - போர்த்தொழிலில் வல்லமை வாய்ந்த; புகர் - புள்ளி.
3. ஓடை - நெற்றிப் பட்டம்; புனைநலம் - ஒப்பனை அழகு.
4. புழற்காய் - உள்ளே துளையினைக் கொண்ட; கோடு - கொம்பு.
5. ஏகல் - உயர்ந்த மலை; மேதக - சிறப்பாய்.
6. அரும்பெறல் - பெறுவதற்கரிய; காலை - கார் காலம்.
7. வினை - செய்யும் தொழில்; துனைஇ - விரைந்து.
8. செல்ப - செல்குவர்; என்ப - என்று கூறுகின்றனர்.
9. வருந்துபடர் - வருத்தம் தரும் துன்பம்; உழந்து - உழன்று.

தலைவி கூற்று

நற்றிணை 79 **கண்ணகனார்**

திணை : பாலை

கூற்று

பிரிவு உணர்ந்து வேறுபட்ட தலைமகள், தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தன்னைப் பிரிந்து செல்லக் கருதிய தலைவனை எண்ணி வருந்திய தலைவி தோழியை நோக்கிச் சொல்லியது.

சிறைநாள் ஈங்கை உறைநனி திரள்வீ,
கூரை நன்மனைக் குறுந்தொடி மகளிர்
மணல்ஆடு கழங்கின் அறைமிசைத் தாஅம்
ஏர்தரல் உற்ற இயக்குஅருங் கவலைப்
பிரிந்தோர் வந்துநம் புணரப் புணர்ந்தோர்
பிரிதல் சூழ்தலின், அரியதும் உண்டோ?
என்றுநாம் கூறிக் காமம் செப்புதும்;

செப்பாது விடினே, உயிரொடும் வந்தன்று
அம்ம! வாழி தோழி!
யாதனின் தவிர்க்குவம் காதலர் செலவே?

தெளிவுரை

"தோழி! நான் கூறுவதைக் கேள். வீட்டுக்கு வேலியாய் வளர்ந்துள்ள ஈங்கை மரத்தின் தேன்துளி மிகத் திரண்டு விளங்கும், மலர்கள் கற்பாறை மேல் உதிர்ந்து பரவிக் கிடக்கும். இக்காட்சி, கூரை வேய்ந்த நல்ல வீடுகளில் வாழும் குறிய வளையலணிந்த மகளிர் மணல் பரப்பில் விளையாடுவதற்கு இட்ட கழற்சிக் காய்களைப் போலத் தோன்றும். இத்தகைய ஈங்கை மலர் பொருந்தியதும் செல்லுதற்கு அரியதுமான கவர்த்த வழியில் முன்பு ஒருமுறை நம்மைப் பிரிந்து சென்ற என் தலைவர் திரும்ப வந்து, தம் பிரிவால் தொலைந்திருந்த என் மேனிநலம் மீண்டதாய்க் கூறினார். அவர் இப்போது மீண்டும் பிரியக் கருதுவாராயின் 'இதனினும் வேறு கொடுமை உண்டோ?' என்று நாமே அவரிடம் கூறினால் என்ன? நாம் சொல்லாது விடுவோமாயின் அவர் பிரிந்து செல்வதன்றி என் உயிர்க்கும் கேடு நேரும் என்பது உறுதி. ஆகவே, நாம் நேரில் கூறி அவர் செலவை நிறுத்துவதன்றி, வேறு எவ்வாறு தவிர்க்க இயலும்? என் உள்ளம் நோகின்றது."

கருத்து

தலைவன் பிரிந்து செல்லுதலைத் தவிர்க்குமாறு நாம் அவரிடம் கூறினால் என்ன?

விளக்கம்

"ஒருமுறை பிரிந்து சென்று திரும்பிய தலைவன் மீண்டும் பிரிய முயற்சிகளை மேற்கொண்டிருந்தான். அவற்றைக் குறிப்பால் உணர்ந்த தலைவி, தோழியிடம் நமக்குத் துன்பம் நேருமாறு தலைவர் நம்மைப் பிரிந்து செல்வது போன்ற கொடுமை வேறில்லை. இதனை நாமே அவரிடம் எடுத்துக் கூறினால் என்ன? சொல்லாவிட்டால் அவர் பிரிந்து செல்வார் என்பதோடு என் உயிருக்குக் கேடும் நேரிடும். அவர் செலவைத் தவிர்ப்பதற்கு இதனைவிட வேறு வழி என்ன இருக்கிறது, கூறு" என்று தோழியிடம் தலைவி கேட்டாள்.

குறிப்பு

1. கற்புடை இல்லத்தலைவியர் தம் காமத்தினை எடுத்துரைப்பது பொருந்தா மரபே. எனினும், பிரிவைத் தாங்கி உயிரோடிருக்க இயலாத நிலையில் அந்த மரபையும் ஒதுக்குவோமா? என்கிறாள்.
2. ஈங்கை மலர்கள் பாறை மேல் விழுந்து அதனை மறைத்ததுபோல, தலைவி தலைவனோடு கூடி உறையும் இன்ப வாழ்வில், தலைவன் பிரிவு தலைவியின் உயிருக்கு இடையூறாய் அமையும் என்பது குறிப்பு.

சொற்பொருள்

1. சிறை - வேலி; நாள்வீ - அன்று மலர்ந்த பூ; ஈங்கை - ஒருவகை மரம்; உறை - தேன்துளி.
2. கூரை - கூரை வேயப்பட்ட.
3. கழங்கு - கழற்சிக்காய்; அறை - பாறை; தாஅம் - பரவிக் கிடக்கும்.
4. ஏர்தரல் உற்ற - எழுச்சியைப் பொருந்தியிருத்தலால்; இயக்கு அரும் - செல்லுதற்கு அரியதாகிய; கவலை - பிரிவுபட்ட வழி.
5. புணர - இழந்த அழகு வந்து சேர.
6. சூழ்தல் - கருதுதல்.
7. காமம் - விருப்பம்; செப்புவோம் - சொல்லுவோம்.
8. உயிரொடும் வந்தன்று - உயிரொடும் பொருந்தித் தீங்கு செய்தல் ஒரு தலை.

10. யாதனின் - வேறு எவ்வகையால்; தவிர்க்குவம் - தவிர்த்தல் கூடும்.

தலைவி கூற்று

குறுந்தொகை 20 **கோப்பெருஞ்சோழன்**

திணை : பாலை

கூற்று

செலவுணர்த்திய தோழிக்குக் கிழத்தி உரைத்தது.

கூற்று விளக்கம்

தலைவன் பிரியக் கருதியிருப்பதைத் தோழி தலைவியிடம் உரைக்கின்றாள். அதனைக் கேட்டதும் தலைவி தன் உள்ள வேதனையின் மிகுதியைக் கூறியது. (செலவு - தலைவன் பொருள்வயிற்பிரிதல்)

அருளும் அன்பும் நீக்கி, துணைதுறந்து,
பொருள்வயின் பிரிவோர் உரவோர் ஆயின்,
உரவோர் உரவோர் ஆக,
மடவம் ஆக, மடந்தை, நாமே!

தெளிவுரை

"இயற்கையாய்க் காட்ட வேண்டிய அருளையும் அன்பையும் கைவிட்டுவிட்டு, நம்மைப் பிரிந்து பொருள் தேடச் செல்வோர் அறிவு வாய்ந்தவர் என்றால் அறிவு வாய்ந்தவராகவே இருக் கட்டும். அவரைப் பிரிந்திருக்கும் ஆற்றல் இல்லாதவராகிய நாம் அறிவற்றவராகவே இருந்திடுவோம்."

கருத்து

தலைவன் பிரிவை நம்மால் ஆற்றியிருக்க இயலாது.

விளக்கம்

இல்வாழ்க்கைக்குப் பொருள் இன்றியமையாதது. ஆதலின், பொருள் தேடச் செல்வது ஆடவர் கடமை என்று கருதப்பட்டது. ஆனால், அது மகளிரிடம் கொள்ள வேண்டிய அன்பையும் அருளையும் துறந்து செய்ய வேண்டியுள்ளது.

சொற்பொருள்

1. துணை - இல்லத்துணைவி.
2. உரவோர் - அறிவு வாய்ந்தவர்.
4. மடவம் - அறிவு அற்றவர்.

தலைவி கூற்று

குறுந்தொகை 174 **வெண்பூதி**

திணை : பாலை

கூற்று

பிரிவுணர்த்திய தோழிக்குத் தலைமகள் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவனின் பிரிவைத் தன்னிடம் உணர்த்திய தோழியிடம் தலைவி நெஞ்சழிந்து கூறியது.

பெயல்மழை துறந்த புலம்புஉறு கடத்துக்
கவைமுடக் கள்ளிக் காய்விடு கடுநொடி
துதைமென் தூவித் துணைப்புறவு இரிக்கும்
அத்தம் அரிய என்னார், நத்துறந்து,
பொருள்வயிற் பிரிவார் ஆயின்,இவ் உலகத்துப்
பொருளே மன்ற பொருளே;
அருளே மன்ற ஆரும்இல் லதுவே.

தெளிவுரை

"தோழி! மழை பெய்யாது நீங்கிய தனிமையைக் கொண்டிருப்பது, பாலை நிலம். அப்பாலைநிலக் காட்டில் கவைத்த முள்ளைக் கொண்ட கள்ளியின் காய்கள் வெடிக்கும்போது கடிய ஒலி எழும். அவ்வொலி, நெருங்கிய மென்மையான சிறகுகளைக் கொண்ட ஆணும் பெண்ணுமாய் இணைந்திருக்கும் புறாக்களை அவ்விடத்திலிருந்து அஞ்சியோடச் செய்யும். அத்தகைய பாலை வழி கடத்தற்கு அரிது என்று கருதாமல், நம்மைப் பிரிந்து, பொருள் தேடி வருவதற்காக நம் தலைவர் செல்வார் என்கிறாய்! அங்ஙனம் செல்வாராயின் இவ்வுலகத்தில் செல்வம் ஒன்றேதான் உறுதியாய் மதிக்கத் தக்கது. அருள் என்பது நிச்சயமாய் எவராலும் மதிக்கப்படாதது ஆகும்" என்று தலைவி தோழியிடம் கூறினாள்.

கருத்து

அவர் அருளுடையவராதலின் நம்மைப் பிரிந்து செல்லமாட்டார்.

குறிப்பு

உலகம் அருட்செல்வத்தை மதியாமல் பொருட்செல்வத்தையே மதிப்பதாய் இருக்கிறது.

சொற்பொருள்

1. புலம்பு - தனி; கடம் - காடு.
2. கவை - கவைத்த; முட - வளைந்த; நொடி - ஒலி.
3. துதை - செறிந்த; தூவி - உட்புறச் சிறகுகள்; துணைப்புறவு - ஆண் பெண் இணைந்த இரட்டைப் புறா; இரிக்கும் - ஓடச்செய்யும்.
4. அத்தம் - பாலை நில வழி; நத்துறந்து - நம் துறந்து - நம்மைப் பிரிந்து.

6. பொருளே - செல்வமே; மன்ற - உறுதியாய்; பொருளே - மதிக்கத்தக்கது.
7. ஆரும் இல்லதுவே - எவராலும் மதிக்கப்படாதது ஆகும்.

தலைவி கூற்று

திணைமொழி ஐம்பது 18 **கண்ணஞ்சேந்தனார்**

திணை : பாலை

கூற்று

செலவுக்குறிப்பறிந்த தலைமகள் உடன்படாது சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் பிரியவிருப்பதை அறிந்த தலைவி, தலைவன் தன்னைப் பிரிந்து செல்லக் கூடாது எனத் தோழியிடம் சொல்லியது.

கதிர்சுடக் கண்உடைந்து முத்தம் சொரியும்
வெதிர்பிணங்கும் சோலை வியன்கானம் செல்வார்க்(கு)
எதிர்வன போல்இலவே எல்வளையோ கொன்னே
உதிர்வன போல உள.

தெளிவுரை

தோழி! கதிரவன் வெப்பம் மிகுந்து வீசுவதால் கணுக்கள் உடைந்து முத்துகள் கொட்டிக் கிடக்கும் மூங்கில் புதர்கள் காணப்படும் சோலைகளைக் கொண்ட அகன்ற காட்டுவழியில் நம் தலைவர் செல்லக் கருதியுள்ளார். என் கையிலுள்ள ஒளி பொருந்திய வளையல்களோ அவர் செல்வதற்கு உடன்பட மறுத்தலைப் போலக் கழன்று விழுகின்றன.

கருத்து

தலைவர் பிரியின் என் மேனி மெலிந்து அழகழியுமாதலால் அவன் பிரியக் கூடாது.

சொற்பொருள்

1. கதிர் சுட - வெயில் மிகுந்து எரித்தலால்; கண் - கணு; முத்தம் - முத்து.

2. வெதிர் - மூங்கிற்புதர்; பிணங்கும் - கலந்து காணப்படும்; வியன் - பெரிய, அகன்ற.
3. எதிர்வன - உடன்படுவன; எல்வளை - ஒளி விளங்கும் வளையல்; கொன்னே - வீணே.
4. உதிர்வன - கழன்று விழுவன.

பிரியான் எனத் தோழி கூறியது.

தோழி கூற்று

நற்றிணை 5 **பெருங்குன்றூர் கிழார்**

திணை : குறிஞ்சி

கூற்று

தலைமகன் செலவுக் குறிப்பறிந்து வேறுபட்ட தலைமகட்குத் தோழி சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் பிரிந்து செல்லவிருப்பதைக் குறிப்பாலுணர்ந்த தலைவியின் எழில் வேறுபட்டது. அதையறிந்து, 'தலைவன் தன் செலவைக் கைவிட்டனன்' என்று தலைவியிடம் தோழி சொல்லித் தேற்றியது.

நிலம்நீர் ஆரக் குன்றம் குழைப்ப
அகல்வாய்ப் பைஞ்சுனைப் பயிர்கால் யாப்பக்
குறவர் கொன்ற குறைக்கொடி நறைப்பவர்
நறுங்காழ் ஆரம் சுற்றுவன அகைப்ப,
பெரும்புயல் பொழிந்த தொழில எழிலி
தெற்குஏர்பு இரங்கும் அற்சிரக் காலையும்,
அரிதே, காதலர்ப் பிரிதல் இன்றுசெல்
இளையர்த் தரூஉம் வாடையொடு
மயங்குஇதழ் மழைக்கண் பயந்த தூதே.

தெளிவுரை

"*மழை பெய்ததால் நிலம் நீரால் நிரம்பப்பெற்று மலை மேலுள்ள மரம் முதலாயின தழைத்தன; அகன்ற இடத்தைக் கொண்ட குளிர்ந்த சுனையில் நீர் நிறைந்து வழிந்து ஓடுவதால்*

அங்குள்ள பயிர்கள் நெருங்கி வளர்ந்தன; குறவர் வெட்டி அழித்தலால் குறைக்கப்பட்ட நறைக்கொடிகள் நறுமணம் கமழும் சந்தன மரத்தின்மீது சுற்றிப் படர்ந்தன. இவ்வாறு பெரிய மழையைப் பொழிவித்த மேகம், இப்போது தெற்கு நோக்கிச் செல்கின்றது; இது முன்பனிக் காலம். வாடைக்காற்றும், வருந்திக் கண்ணீர் வடிக்கும் உன் கண்களும் காதலர் பிரிந்து செல்லாதவாறு தூது உரைத்தன. ஆதலால், நம் காதலர் நம்மைப் பிரிந்து தங்குதல் அரிது. அவர் பிரிய மாட்டார்."

கருத்து

வாடைக்காற்றும் உன் நீர் நிறைந்த கண்களும் தலைவர் பிரிந்து செல்லாதிருக்கத் தூதாயின. ஆதலால், அவர் பிரிந்து செல்ல மாட்டார்.

விளக்கம்

குறவரால் குறைக்கப்பட்ட நறைக்கொடிகள் சந்தன மரத்தில் படருமாறு வளர்ந்தன என்பது, தலைவியின் கவலையால் மெலிந்த உடல், மீண்டும் களிப்பால் பூரித்து, அவள் தலைவனைத் தழுவி இன்புறலைக் குறிக்கின்றது.

சொற்பொருள்

1. ஆர - நிரம்பப் பெற்று; குழைப்ப - தழைப்ப.
2. சுனைப்பயிர் - நெல் முதலாயின; கால் யாப்ப - முளைத்தெழுந்து வளர.
3. கொன்ற - வெட்டிய; குறைக்கொடி - குறைப்பட்ட; நறைப்பவர் - மணக்கொடி.
4. நறுங்காழ் - நன்றாய் வயிரமேறிய; ஆரம் - சந்தன மரம்; அகைப்ப - படர்ந்து ஏற, சுற்றிப் படர.
5. தொழில - (மழை பெய்யும்) தொழிலைச் செய்த; எழிலி - மேகம்.
6. ஏர்பு - எழுந்து; இரங்கும் - முழங்கும்; அற்சிரக் காலை - முன்பனிக் காலம்.
7. காதலர்ப் பிரிதல் அரிதே - தலைவர் பிரிந்து செல்லல் அரிது; இன்று செல் - இன்றைக்குச் செல்கின்றவரான.
8. இளையர்த் தரூஉம் - இளையோரை (காதலரை) மீட்டுக் கொண்டுவந்து தருவதான; வாடையொடு - வாடைக்காற்றுடன்.
9. மயங்கு இதழ் - ஒன்றோடொன்று கூடுதலையுடைய பூவிதழ்; மழைக் கண் - கண்ணீர் வடிக்கும் கண்கள்; பயந்த தூது - உரைத்த தூது.

தோழி கூற்று

நற்றிணை 391 **பாலை பாடிய பெருங்கடுங்கோ**

திணை : பாலை

கூற்று

பிரிவு உணர்த்தப்பட்டு ஆற்றாளாய தலைமகளைத் தோழி வற்புறுத்தியது.

கூற்று விளக்கம்

தலைவன் பிரிந்து செல்வான் என்பதை அறிந்த தலைவி ஆற்ற முடியாதவள் ஆனாள். தோழி, 'மடந்தாய்! அழாதே! நீ அழுவதைக் கண்டால் தலைவர் உன்னைப் பிரிந்து செல்லார்; தன் பயணத்தைத் தவிர்ப்பார்' என்று கூறித் தலைவியைத் தேற்றியது.

ஆழல், மடந்தை! அழுங்குவர் செலவே
புலிப்பொறி அன்ன புள்ளிஅம் பொதும்பில்
பனிப்பவர் மேய்ந்த மாஇரு மருப்பின்
மலர்தலைக் காரான் அகற்றிய தண்அடை
ஒண்தொடி மகளிர் இழைஅணிக் கூட்டும்,
பொன்படு, கொண்கான நன்னன் நல்நாட்டு
ஏழிற்குன்றம் பெறினும், பொருள்வயின்
யாரோ பிரிகிற் பவரே குவளை
நீர்வார் நிகர்மலர் அன்னநின்
பேர்அமர் மழைக்கண் தெண்பனி கொளவே.

தெளிவுரை

"மடந்தாய்! குவளை மலரிலிருந்து நீர் வடிவதுபோல ஒளியினைக் கொண்ட மலர் போன்ற உன் பெரிய விரும்பத்தக்க, குளிர்ந்த கண்களிலிருந்து கண்ணீர் மிகுதியாய் வடியுமாறு அழாதே! தலைவர் பயணத்தைத் தவிர்ப்பார்; புலியின் மேனியில் படர்ந்துள்ள புள்ளியினைப் போன்று புள்ளி புள்ளியாக நிழல் விளங்கும் சோலையில் படர்ந்திருக்கும், குளிர்ந்த மலைப்பச்சைக் கொடிகளை, நீண்ட கரிய கொம்பினையும் அகன்ற தலையையும் கொண்ட எருமை மேயும்; அது தின்று எஞ்சிய பச்சிலைகளை ஒளிபொருந்திய தொடியணிந்த மகளிர் தம் கலன்களுக்கு

அழகுண்டாகுமாறு சேர்த்து அணிவர். அத்தகைய பொன் விளையும் கொண்கானத்திலுள்ள நன்னனது நல்ல நாட்டிலுள்ள ஏழில் மலையையே பெறுவதாய் இருந்தாலும் உன்னை விட்டுப் பிரிபவர் எவர்? (காதலர் பிரிய மாட்டார்; வருந்தாதே)" என்று கூறித் தோழி தலைவியைத் தேற்றினாள்.

கருத்து

தலைவர் செல்லுமிடத்தில் கொண்கான நாட்டு ஏழில் குன்றமே பொருளாய்க் கிட்டுவதாயிருந்தாலும், நீ கண்ணீர் சொரியுமாறு, உன்னைப் பிரிந்து ஒருகாலும் அவர் செல்லமாட்டார்.

உள்ளுறை

எருமை தின்றொழிந்த மலைப்பச்சை இலை, மகளிர் இழையணியாகப் பயன்படும் என்றது, தலைவன் ஈட்டும் பொருள் தலைவி இல்லறம் நிகழ்த்துவதற்குப் பயன்பட்டு எஞ்சியது உலகத்தார்க்குப் பயன்பட்டு நிற்கும் என்பதனை உள்ளுறுத்தி நின்றது.

சொற்பொருள்

1. ஆழல் - அழாதே; அழுங்குவர் - தவிர்ப்பார்.
2. பொதும்பு - சோலை.
3. பனி - குளிர்ந்த; பவர் - அடர்ந்த கொடி; மா இரு மருப்பு - பெரிய கரிய கொம்பு.
4. மலர்தலை - அகன்ற தலை; காரான் -கரிய எருமை; அகற்றிய - மேய்ந்து எஞ்சிய; தண் அடை - குளிர்ந்த இலைகளை.
5. இழை - தாம் அணிந்துள்ள அணிகலன்களுக்கு; அணிக்கூட்டும் - அழகுண்டாகும்படி சேர்த்து அணிவர்.
6. பொன்படு - பொன் விளையும்; கொண்கானம் - ஒரு நாடு; நன்னன் - மன்னருள் ஒருவன்.
7. ஏழிற்குன்றம் - ஒரு மலையின் பெயர்.
8. பிரிகிற்பவர் - பிரிந்து செல்வர்.

8-9. குவளை நீர்வார் நிகர்மலர் அன்ன - குவளையின் நீர் துளிக்கும் ஒளி பொருந்திய மலரை ஒத்து.

10. பேர் அமர் - மிகவும் விரும்பத்தக்க; மழைக்கண் - குளிர்ந்த கண்; தெண்பனி கொள - தெளிந்த கண்ணீர்த் துளிகளைச் சொரிய.

தோழி கூற்று

குறுந்தொகை 22 **சேரமானெந்தை**

திணை : பாலை

கூற்று

செலவுக்குறிப்பறிந்து ஆற்றாளாகிய கிழத்தியைத் தோழி வற்புறுத்தியது.

கூற்று விளக்கம்

தலைவன் தன்னைப் பிரிந்து செல்லத் திட்டமிட்டிருக்கிறான் என்பதைக் குறிப்பால் அறிந்த தலைவி அதுபற்றி வருந்தியிருந்தனள். அவளைத் தேற்றுவாளாய்த் தோழி கூறியது.

நீர்வார் கண்ணை நீஇவண் ஒழிய
யாரோ பிரிகிற் பவரே? சாரல்
சிலம்புஅணி கொண்ட வலம்சுரி மராஅத்து
வேனில் அம்சினை கமழும்
தேம்ஊர் ஒண்ணுதல்! நின்னொடும், செலவே.

தெளிவுரை

மலைச்சாரலுக்கு அழகு தரக்கூடிய, வலப்புறமாய்ச் சுரிந்த வெண்கடப்ப மலர்கள் இளவேனிற்காலத்தில் பூத்துக் குலுங்கும். மரக்கிளைகள் மணப்பது போன்று ஒளி வீசும் நெற்றியினைக் கொண்டவளே! தலைவர் பிரிவர் என்று கருதி நீர் ஒழுகும் கண்களைக் கொண்ட உன்னை இங்கே விட்டுவிட்டு, பிரியக் கூடிய மனவலிமை கொண்டவர் யாரோ? தலைவன் செலவு உன்னோடு நிகழும்.

கருத்து

உன்னைப் பிரியும் மன வலிமை அவரிடம் இல்லை.

சொற்பொருள்

1. வார் - கொட்டும்; கண்ணை - கண்களையுடையவள்; ஒழிய - விட்டு விட்டு.
2. பிரிகிற்பவர் - பிரியும் மனவலிமை கொண்டவர்.
3. சிலம்பு - மலை; மராஅம் - வெண்கடப்ப மரம்.
4. வேனில் - இளவேனிற்காலம்.
5. தேம் - மணம்; ஒண்நுதல் - ஒள் நுதல் - ஒளி பொருந்திய நெற்றி.

தோழி கூற்று

குறுந்தொகை 135 **பாலைபாடிய பெருங்கடுங்கோ**

திணை : பாலை

கூற்று

தலைமகன் பிரியும் என வேறுபட்ட தலைமகட்குத் தோழி சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் செயற்பாடுகளிலிருந்து அவன் தன்னைப் பிரிவான் என ஐயுற்று மெலிந்த தலைவிக்கு, 'அவன் பிரியான்' எனக் கூறித் தோழி தேற்று வித்தது.

'வினையே ஆடவர்க்கு உயிரே; வாள்நுதல்
மனைஉறை மகளிர்க்கு ஆடவர் உயிர்'என
நமக்குஉரைத் தோரும் தாமே,
அழாஅல் தோழி! அழுங்குவர் செலவே.

தெளிவுரை

'தொழிலே ஆடவர்களுக்கு உயிர். ஒளி பொருந்திய நெற்றியைக் கொண்ட மகளிர்க்குக் கணவன்மாரே உயிர்' என்று நமக்குச் சொன்னவரே தலைவர்தானே! ஆதலின் நீ அழாதே! அவர் பிரிந்து செல்வதைக் கைவிடுவார்.

கருத்து

'உன்னைப் பிரியேன்' என்று சொன்ன அவர் தம் சொல்லுக்கு மாறாய்ப் பிரிய மாட்டார்.

விளக்கம்

உடலின்றி உயிரால் தனித்துச் செயற்பட இயலாது. ஆதலின், தலைவியைப் பிரிந்து செல்லத் தலைவன் கருதான்.

குறிப்பு

செலவினைத் தவிர்ப்பது என்பது முற்றிலும் செல்லாதிருப்பது அன்று. மனைவியைத் தேற்றிச் சில காலம் சென்றபின் பிரிந்து செல்வான்.

சொற்பொருள்

1. வினை - தொழில்; ஆடவர் - ஆண்மக்கள்; வாள்நுதல் - ஒளி பொருந்திய நெற்றி.
2. மனை உறை - இல்லத்தில் தங்கியிருக்கும்.
3. தாமே - அவரே, தலைவரே.
4. அழாஅல் - அழாதே; அழுங்குவர் - செல்லுதலைத் தவிர்ப்பார்.

தோழி கூற்று

குறுந்தொகை 273 **சிறைக்குடி ஆந்தையார்**

திணை : பாலை

கூற்று

'பிரிவர்' எனக் கவன்ற தலைமகளைத் தோழி வற்புறுத்தியது.

கூற்று விளக்கம்

தலைவன் தன்னைப் பிரிந்து போய்விடுவானோ எனக் கருதி கவலை கொண்டனள், தலைவி. அவளிடம் தலைவன் பிரிந்து போகமாட்டான் என்று தோழி வற்புறுத்திக் கூறியது.

அல்குறு பொழுதில் தாதுமுகை தயங்கப்
பெருங்காட்டு உளரும் அசைவளி போல,
தண்ணிய கமழும் ஒண்ணுத லோயே!
நொந்தனை ஆயின், கண்டது மொழிவல்;
பெருந்தேன் கண்படு வரைவில் முதுமால்பு
அறியாது ஏறிய மடவோன் போல,
ஏமாந் தன்றுஇவ் உலகம்;
நாம்உளேம் ஆகப் பிரியலன் தெளிமே.

தெளிவுரை

இரவில், மகரந்தத்தைக் கொண்ட மலர்மொட்டுகள் விளக்க முற்று மலர, அம்மலர்களைத் தடவியவாறு அசையும் மணம் கமழும் காற்றைப் போலக் குளிர்ந்து மணம் கமழும் ஒளி பொருந்திய நெற்றியைக் கொண்டவளே! தலைவன் பிரிவானோ என்று நீ வருந்தினையாயின், நான் அறிந்த ஒன்றைக் கூறுவேன்,

கேள்! மிகப்பெரிய தேனடை ஒன்று கண்ணில்படுமாறு மிக உயர்ந்த மலைமீது இருக்க, அதனைப் பெறுவதற்காக, பழைய கண்ணேணியின் மேல் அதன் வலுமின்மையை அறியாமல் ஏறிய அறிவற்றவனைப் போல இவ்வுலகமும் நிச்சயமாய் ஏமாறும். நாம் உயிரோடு இங்கு இருக்கத் தலைவன் நம்மை உறுதியாய்ப் பிரிந்து செல்ல மாட்டான்; இதனைத் தெளிவாக அறிந்து கொள்.

கருத்து

தான் பிரியின் உன் உயிர் நில்லாது என்பதை உணர்ந்துள்ள தலைவன் உன்னைப் பிரியான்.

விளக்கம்

மிகப் பழையதாகி ஒடிந்துவிடும் நிலையிலுள்ள கண்ணேணியில், அதனை அறியாது ஏறிய மடவோன், பின்னர் அதன் தன்மையையறிந்து, தேனை எடுக்க முயல்வதை விடுத்துக் கீழே இறங்குவான். அவ்வாறே, பொருளார்வம் தூண்டப் பிரியக் கருதிய தலைவனும், அதனால் தலைவி உயிரிழக்க நேரும் என்பதையும், அது தனக்குத் துயர் என்பதையும் கருதித் தான் பிரியவிருப்பதை நிறுத்திவிடுவான்.

தலைவன் தலைவியை அடையும்பொழுதே, 'உன்னை என்றும் பிரியேன்' என்று அவன் கூறியுள்ள உறுதிமொழி யையும் தோழி, தலைவியிடம் நினைவுபடுத்துகிறாள்.

சொற்பொருள்

1. அல்குறு பொழுது - இரவு; தாது - பூந்தாது, மகரந்தம்; முகை - மலர் மொட்டு; தயங்க - விளங்க.
2. உளரும் - தடவி வருகின்ற; அசைவளி - மெல்லென இயங்கும் காற்று.
3. ஒண்ணுதல் - ஒள்நுதல் - ஒளி பொருந்திய நெற்றி.
4. நொந்தனையாயின் - (தலைவன் பிரிவான் என்று நீ) வருந்தினாயானால்; கண்டது - நான் அறிந்தது; மொழிவல் - கூறுவேன்.
5. பெருந்தேன் - பெரிய தேன் இறால்; கண்படு - தொங்கிக் கொண்டிருக்கும்; வரை - மலை; முதுமால்பு - பழைய கண்ணேணி.

6. மடவோன் - அறிவில்லாதவன்.
7. ஏமாந்தன்று - ஏமாந்தது.
8. நாம் உளேம் - நாம் உயிரோடிருக்கும் பொருட்டு; பிரியலன் - பிரிய மாட்டான்; தெளிமே - தெளிவாய்.

தோழி கூற்று

குறுந்தொகை 331 **வாடாப் பிரமந்தன்**

திணை : பாலை

கூற்று

செலவுக் குறிப்பறிந்து வேறுபட்ட தலைமகட்குத் தோழி சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவரது நடவடிக்கைகளால் அவர் தன்னைப் பிரிவான் என்பதறிந்து தலைவி மெலிவுற்றாள். அவளிடம் தோழி, 'தலைவர் பிரியார்' என்று சொல்லியது.

நெடுங்கழை திரங்கிய நீர்இல் ஆர்இடை,
ஆறுசெல் வம்பலர் தொலைய, மாறுநின்று,
கொடுஞ்சிலை மறவர் கடறுகூட் டுண்ணும்
கடுங்கண் யானைக் கானம் நீந்தி,
இறப்பர்கொல் வாழி தோழி! நறுவடிப்
பைங்கால் மாஅத்து அம்தளிர் அன்ன
நல்மா மேனி பசப்ப,
நம்மினும் சிறந்த அரும்பொருள் தாற்கே.

தெளிவுரை

நல்ல வடுவையும் பசுமையான அடி மரத்தையுமுடைய மாமரத்தின் அழகிய தளிர் போன்ற மாமை நிறம் கொண்ட நம் மேனி பசலையுற, நம்மைக் காட்டிலும் சிறந்ததெனக் கருதிப் பொருள் ஈட்டி வருவதற்காகத் தலைவர் செல்வார் என்று வருந்தியிருக்கிறாய். நீண்ட மூங்கில்கள் உலர்ந்து வாடிய நீரில்லாத காட்டில், அவ்வழியே செல்லும் பயணிகள் அழியுமாறு அவர்களை எதிர்த்து நின்று, வளைந்த வில்லை யுடைய ஆறலை கள்வர் கொள்ளையிட்டுக் கூடியுண்டு வாழ்ந்து

கொண்டிருக்கின்றனர். அங்குக் கடுமையான கண்களைக் கொண்டிருக்கும் யானைகளும் திரிந்துகொண்டிருக்கும். அக் காட்டைக் கடந்து நம் தலைவர் செல்வாரோ? (மாட்டார்.)

கருத்து

நாம் பசலையுற்று வருந்துமாறு தலைவர் நம்மைப் பிரிந்து கொடிய காட்டிடையே செல்லார்.

விளக்கம்

நீண்ட மூங்கில்கள் வளர்ந்திருக்கும் நீரற்ற வழி. அங்கு அவ்வழியில் செல்வோரைக் கொன்று பொருளைப் பறித்து உண்ணும் மறவர்கள் வாழ்கின்றனர். மேலும், அங்கு வலிமை மிகுந்த யானைகளும் திரிந்து கொண்டிருக்கும். அவ்வழியில் தலைவர் செல்லமாட்டார்.

சொற்பொருள்

1. கழை - மூங்கில்; திரங்கிய - உலர்ந்த.
2. வம்பலர் - புதியவர்; தொலைய - அழியுமாறு; மாறுநின்று - எதிர்த்து நின்று.
3. கொடுஞ்சிலை - வளைந்த வில்; மறவர் - வீரர், ஆறலை கள்வர்; கடறு - காடு; கூட்டுண்ணும் - ஒன்றுகூடி உண்பர்.
4. கானம் - காடு; நீந்தி - கடந்து.
5. இறப்பர் - செல்வார்; வடி - வடு - மாம்பிஞ்சு.
6. மா - மா மரம்; அம்தளிர் - அழகிய தளிர்.
7. மாமேனி - மாமை நிறம் கொண்ட உடல்; பசப்ப - பசலையுறுமாறு.
8. தரற்கு - ஈட்டி வருவதற்காக.

தோழி கூற்று

குறுந்தொகை 348 **மாவளத்தன்**

திணை : பாலை

கூற்று

செலவுக் குறிப்பறிந்து வேறுபட்ட கிழத்தியைத் தோழி வற்புறீஇயது.

கூற்று விளக்கம்

தலைவன் பிரிவான் என்றறிந்து வருந்திய தலைவியை, 'அவர் செல்லார்' எனத் தேற்றித் தோழி சொல்லியது.

தாமே செல்ப ஆயின், கானத்துப்
புலம்தேர் யானைக் கோட்டிடை ஒழிந்த
சிறுவீ முல்லைக் கொம்பின் தாஅய்,
இதழ்அழிந்து ஊறும் கண்பனி, மதர்எழில்
பூண்அக வனமுலை நனைத்தலும்
காணார் கொல்லோ மாணிழை! நமரே?

தெளிவுரை

மாட்சிமை மிக்க அணிகளைப் பூண்டவளே! நம் தலைவர் உன்னைப் பிரிந்து, தான் மட்டும் தனித்துச் செல்வாராயின் நன்றே. காட்டில் தான் மேய்வதற்கான இடத்தினைத் தேடிச் செல்லும் யானையின் கொம்பிடையே சிக்கி ஒட்டிக் கிடக்கும் சிறிய பூக்களைக் கொண்ட முல்லைக் கொடியினைப் பார்ப்பார், அன்றோ? அப்போது, உன் கண் இமைகளைக் கடந்து ஊற்றெடுக்கும் கண்ணீர், மதர்த்த அழகினைக் கொண்ட அணிகலன்களால் பூணப் பெற்ற உன் அழகிய முலைகளை நனைப்பதனைத் தம் மனக்கண்ணால் காண்பார் அல்லவா?

கருத்து

தலைவர் உன் துயரை அறிந்து, தம் பிரிவினைக் கைவிடுவார்.

குறிப்பு

யானையின் கொம்பிடையே கிடக்கும் முல்லைக்கொடி யானைக்கு உணவாகி அழியவிருப்பது உறுதி. அதுபோல, அவர் பிரிந்து சென்றால்

ஏற்படும் பிரிவுத் துயரினால் நீ அழிந்துபடுவது உறுதி என்பதைத் தலைவர் உணர்வார். ஆதலால், அவர் பிரியக் கருதார்.

சொற்பொருள்

1. செல்பஆயின் - செல்வார் ஆனால்.
2. புலம் தேர் - மேய்வதற்கான நிலத்தைத் தேடும்; ஒழிந்த - கிடந்த.
3. சிறுவீ - சிறிய பூக்கள்; கொம்பின் - கொடியின்; தாஅய் - (கண்ணீர்) பரவி.
4. இதழ் அழிந்து - இமையைக் கடந்து; கண்பனி - கண்ணீர்த்துளி; மதர் எழில் - மதர்த்த அழகு.
5. பூண்அகம் - அணிகலன்களைத் தன்னிடத்தே கொண்டுள்ள.
6. காணார் கொல்? - காண மாட்டாரோ?; மாண் இழை - மாட்சிமைப்பட்ட அணிகலன்களை அணிந்துள்ளவளே!; நமர் - நம் உறவினர், தலைவர்.

தோழி கூற்று

கலித்தொகை 13 **பாலை பாடிய பெருங்கடுங்கோ**

திணை : பாலை

கூற்று

தலைமகனால் பிரிவுணர்த்தப்பெற்று ஆற்றாளாய தலைமகள், 'யான் நும்மோடு போதுவல்' என்றாட்குத் தலைமகன் அவளது மென்மையுங் காட்டின் கடுமையுங் கூறி உடம்படானாக, ஆற்றாளாய தலைமகளைத் தோழி, 'அவர் நம்மோடு நகையாடிச் சொன்னார், பிரிவரல்லர்' என வற்புறுத்தியது.

கூற்று விளக்கம்

தலைவன், 'பொருள் ஈட்டுவதற்காகப் பிரிவேன்' என்று கூறியபோது, தலைவி, 'நானும் உடன் வருவேன்' என்று கூறினாள். அவன், 'நீ மெல்லியள்; காடோ கடுமையானது' என்று கூறி அவளது வேண்டுகோளுக்கு இசையவில்லை. அதனால் வருந்திய தலைவியிடம் தோழி, 'தலைவர் விளையாட்டாகச் சொன்னாரே தவிர, அவர் செல்ல மாட்டார்' என்று கூறி அவளை வருந்தாதிருக்குமாறு சொல்லியது.

தரவு

செருமிகு சினவேந்தன் சிவந்துஇறுத்த புலம்போல,
எரிமேய்ந்த கரிவறல் வாய்புகுவ காணாவாய்ப்
பொரிமலர்ந் தன்ன பொறிய மடமான்,
திரிமருப்பு ஏறொடு தேர்அல்தேர்க்கு ஓட,
மரல்சாய, மலைவெம்ப, மந்தி உயங்க,
உரல்போல் அடிய உடம்புஉயங்கு யானை,
ஊறுநீர் அடங்கலின், உண்கயம் காணாது,
சேறு சுவைத்துத்தம் செல்லுயிர் தாங்கும்
புயல்துளி மாறிய, போக்கரு, வெஞ்சுரம் –

தாழிசை

எல்வளை! எம்மொடு நீவரின், யாழநின்
மெல்லியல் மேவந்த சீறடித் தாமரை
அல்லிசேர் ஆய்இதழ் அரக்குத்தோய்ந் தவைபோலக்
கல்லுறின், அவ்வடி கறுக்குந அல்லவோ?

நலம்பெறு சுடர்நுதால்! எம்மொடு நீவரின்,
இலங்குமாண் அவிர்தூவி அன்னமென் சேக்கையுள்
துலங்குமான் மேல்ஊர்தித் துயிலேற்பாய், மற்றுஆண்டை
விலங்குமான் குரல்கேட்பின், வெருவுவை அல்லையோ?

கிளிபுரை கிளவியாய்! எம்மொடு நீவரின்,
தளிபொழி தளிரன்ன எழில்மேனி தகைவாட,
முளிஅரில் பொத்திய முழங்குஅழல் இடைபோழ்ந்த
வளிஉறின், அவ்எழில் வாடுவை அல்லையோ?

எனவாங்கு–

சுரிதகம்

அனையவை காதலர் கூறலின், 'வினைவயின்
பிரிகுவர்' எனப்பெரிது அழியாதி, திரிபுஉறீஇக்
கடுங்குரை அருமைய காடுஎனின், அல்லது,
கொடுங்குழாய்! துறக்குநர் அல்லர்;
நடுங்குதல் காண்மார், நகைகுறித் தனரே.

தெளிவுரை

" 'போர்த்தொழில் மிக்க அரசன் சினங்கொண்டு வெகுண்டு போர் செய்து தீயிட்டு அழிக்கப்பட்ட பகைவர் நாடுபோல, காடு நெருப்பில் வெந்து கரிந்து வறண்டு கிடக்கின்றது. அரிசிப்பொரி தெறித்தாற்போல உடலெங்கும் புள்ளிகளைக் கொண்ட இளைய மான் ஒன்று உண்ணுதற்கு எதுவும் கிட்டாமல் திரிந்த கொம்பினைக் கொண்ட தன் ஆண்மானோடு கானல்நீரைத் தண்ணீர் என்று கருதிக் குடிக்க ஓடுகின்றது. மரல் செடிகள் வாடிக் கிடக்கின்றன; மலைகள் கொதிப்புற்றிருக்கின்றன; உணவின்றி மந்திகள் வருந்திக் கிடக்கின்றன. உரல் போன்ற அடிகளைக் கொண்ட உடல் மெலிந்த யானைகள், ஊறுகின்ற நீர் வற்றிவிட்டமையால், எங்குமே நீர் கிட்டாது சேற்றின் ஈரத்தைச் சுவைத்துத் தம் உயிர் நீங்கிவிடாமல் காத்துக்கொண் டுள்ளன; மேகம் மழை பெய்தலை மறந்தமையால் கடத்தற் கரியதாய் உள்ளது, நாம் செல்ல வேண்டிய காடு.

" 'ஒளி பொருந்திய வளையல்களை அணிந்தவளே! என்னோடு நீ அக்காட்டுவழியே வந்தால், தாமரை போன்ற உன் அழகிய அடிகள் அங்குள்ள கற்களில் பட்டுக் கன்றி, தாமரை இதழின்மீது அரக்கினைப் பூசியதுபோலக் கறுத்துவிடும்.

" 'நலம் பொருந்திய ஒளி வீசும் நெற்றியைக் கொண்டவளே! நீ இங்கு, சிங்க உருவங்கள் சுமக்கின்ற கட்டிலின்மேல் அன்னத் தூவியால் அமைந்த மெல்லிய படுக்கையில் உறங்குகின்றனை. நீ காட்டிலே என்னோடு வந்தால் உண்மையான சிங்கத்தின் முழக்கத்தைக் கேட்டு அஞ்சுவாய்!

" 'கிளிபோல் பேசும் மழலைமொழியினைக் கொண்டவளே! நீ மழைத் துளிகள் தோய்ந்த தளிர் போன்ற மென்மையினையும் அழகும் கொண்டவள். என்னுடன் நீயும் காட்டுக்கு வந்தால், அங்குத் தூறுகளைத் தீப்பற்றி எரிக்க, அதை ஊடறுத்துக் கொண்டு வரும் அனல் காற்று உன் மேனியழகை வாடச் செய்யாதா?

"இவ்வாறு தலைவர் கூறுவதால் அவர் பொருள் ஈட்டுவதற் காகப் பிரிந்து சென்றுவிடுவார் என நெஞ்சு அழியாதே!

“வளைந்த மகரக்குழை அணிந்தவளே! காட்டின் கொடுமையை மிகுத்துக் கூறி, அதைக் கேட்டு நீ அஞ்சி நடுங்குவதைக் காணத் தலைவர் அவ்வாறு விளையாட்டாய் சொன்னாரே யன்றி உண்மையில் அவர் உன்னைப் பிரிய மாட்டார். அஞ்சாதே” எனத் தோழி தலைவியிடம், தலைவர் உனைப் பிரிந்து செல்ல மாட்டார் என்பதை விளக்கிச் கூறினாள்.

கருத்து

“காட்டின் கொடுமையையும் வழியின் கடுமையையும் கூறினால் நீ அஞ்சி நடுக்கம் கொள்வாய் என்று கருதிய தலைவன், அந்த நடுக்கத்தைக் கண்டு நகையாடி மகிழ்வதற்கே பிரிவு பற்றிக் கூறியுள்ளான். அவன் செல்ல மாட்டான்; நெஞ்சழியாதே” என்று தோழி தலைவியிடம் கூறினாள்.

விளக்கம்

காட்டின் கொடுமை : *வெற்றி கொண்ட மன்னன் தீயிட்டு அழித்த பகைவர் நாடுபோல, காடு வெப்பத்தால் கருகிக் கிடக்கும்; மான்கள் குடிக்க நீரின்றிக் கானல்நீரைத் தண்ணீர் என்று கருதிக் குடிக்க ஓடும்; மரல் செடிகள் வெந்தழியும்படி மலைகள் கொதித்திருக்கும்; குரங்குகள் உணவின்றி வாடியிருக்கும்; யானைகள் எங்கும் நீர் கிடைக்காமல் சேற்றிலுள்ள ஈரப்பசையை உறிஞ்சித் தம் உயிரைக் காப்பாற்றிக் கொள்ளும். மேகம் அக்காட்டில் மழை பெய்யவே மறந்துவிடும்.*

வழியின் கடுமை : *தலைவி அக்காட்டின் வழியே நடந்தால் தாமரை போன்ற அவள் அடிகள் கன்றித் தாமரை இதழின்மேல் அரக்குப் பூசியிருப்பதுபோலத் தோன்றும்; சிங்கக் கால்கள் அமைந்த கட்டிலின்மேல் மெல்லிய அணையில் படுத்திருப்பவள், காட்டில் உண்மையான சிங்கத்தின் முழக்கத்தைக் கேட்டு அஞ்ச நேரிடும்; மெல்லிய தளிர் போன்ற அவள் மேனியழகை அங்கு வீசும் அனல் காற்று வாட்டிக் கெடுக்கும்.*

சொற்பொருள்

1. செருமிகு - போரில் சிறந்த; சிவந்து - வெகுண்டு; இறுத்த - படையொடு தங்கிய; புலம் - இடம்.
2. எரி - நெருப்பு; கரிவறல் - கரிந்து வறண்டது.
3. பொரி - புள்ளி; மடமான் - இள மான்.

4. திரிமருப்பு - முறுக்கப்பட்டுள்ள கொம்பு; ஏறு - ஆண்மான்; தேர் அல்தேர் - தேர் அல்லாத தேர் - பேய்த்தேர் - கானல்நீர்.
5. மரல் - ஒரு வகைச் செடி; மந்தி - குரங்கு; உயங்குதல் - வருந்துதல்.
6. அடிய - கால் அடிகளைக் கொண்ட.
7. ஊறுநீர் - நீர் ஊறுகின்ற; உண்கயம் - நீர் உண்ணும் மடு.
8. புயல் - மேகம்; துளி - மழைத்துளி; மாறிய - பெய்யாமல் போன.
10. எல்வளை - ஒளி வீசும் வளையல்.
11. மேவந்த - சேர்ந்த.
12. அல்லி - தாமரைப்பூவின் இதழ்.
13. கறுக்குந - கறுநிறம் அடைவன.
15. இலங்குமாண் - பெருமையுடன் விளங்குகின்ற; தூவி - அன்னத்தின் தூவி; சேக்கை - படுக்கை.
16. துலங்குமான்மேல் - சிங்கங்கள் சுமப்பனபோலச் செய்யப்பட்ட கட்டிலின் மேல்.
17. விலங்கு மான் - விலங்காகிய சிங்கம்; வெருவுவை - அஞ்சுவாய்.
18. புரை - ஒத்த; கிளவி - பேச்சு.
19. தளி - மழைத்துளி.
20. முளி - உலர்ந்த; அரில் - புதர்; பொத்திய - மூண்ட.
24. அழியாதி - அழியாதே - அழிய வேண்டா; திரிபுஉறீஇ - மாறுபடுத்தி.
25. காண்மார் - காண்பதற்காக; நகை குறித்தனர் - விளையாட்டாய்க் கூறினார்.

தோழி கூற்று

அகநானூறு 27 **மதுரைக் கணக்காயனார்**

திணை : பாலை

கூற்று

செலவு உணர்ந்து வேறுபட்ட தலைமகட்குத் தோழி சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் பிரிவதைப் பிறர் வாயிலாய் உணர்ந்து மனம் வருந்திய தலைவியிடம் தோழி, ‘அவன் உன்னைப் பிரிய மாட்டான்’ என்பதைக் காரணம் காட்டி விளக்குகிறாள்.

'கொடுவரி இரும்புலி தயங்க, நெடுவரை
ஆடுகழை இருவெதிர் கோடைக்கு ஒல்கும்
கானம் கடிய என்னார், நாம்அழ,
நின்றதுஇல் பொருட்பிணிச் சென்றுஇவண் தருமார்,
செல்ப' என்ப, என்போய்! நல்ல
மடவை மன்ற நீயே; வடவயின்
வேங்கடம் பயந்த வெண்கோட்டு யானை,
மறப்போர்ப் பாண்டியர் அறத்தின் காக்கும்
கொற்கைஅம் பெருந்துறை முத்தின் அன்ன,
நகைப்பொலிந்து இலங்கும் எயிறுகெழு துவர்வாய்
தகைப்பத் தங்கலர் ஆயினும், இகப்ப
யாங்ஙனம் விடுமோ மற்றே– தேம்படத்
தெள்நீர்க்கு ஏற்ற திரள்கால் குவளைப்
பெருந்தகை சிதைத்தும், அமையாப் பருந்துபட,
வேத்துஅமர்க் கடந்த வென்றி நல்வேல்
குருதியொடு துயல்வந் தன்னநின்
அரிவேய் உண்கண் அமர்த்த நோக்கே.

தெளிவுரை

" 'இவள் அழும்படியாக இவள் தலைவன், நிலைத்தலில்லாத பொருள்மீது கொண்டுள்ள பற்றினால், அதனைத் தேடி வர நீண்ட மலையிலுள்ள காட்டுவழியே செல்லக் கருதியுள்ளான். மேல் காற்று வீசுவதால், அக்காட்டிலுள்ள நீண்ட தண்டினைக் கொண்ட மூங்கில்கள் அசைய, காட்டின் உள்ளே புலி உலாவுவது வெளிப்படத் தோன்றும். அத்தகைய காட்டு வழியைக் கொடுமையானது என்று கருதாமல் பிரிந்து போக உள்ளான்' என ஊரார் கூறுவதாய்ச் செப்பும் தலைவியே! நீ உறுதியாய் அறியாமை வாய்ந்தவள்.

வடபாலுள்ள வேங்கடத்து அரசரிடம் வெண்மையான தந்தத்தினைக் கொண்ட யானைகளைக் கப்பமாய்ப் பெறும் வலிய போர்த்திறத்தில் வல்லவர், பாண்டிய மன்னர்; அறநெறி பிறழாது காக்கும் அப்பாண்டியனின் கொற்கைத்துறையில் உள்ள முத்துகள் போன்ற முறுவலால் சிறந்து விளங்கும்

பற்களைக் கொண்ட உன் பவள வாயின் அழகு அவரைப் பிரிந்து போவதைத் தடுக்காதிருக்கலாம்.

தேன் உண்டாகத் தெளிந்த நீரினை ஏற்ற திரண்ட தண்டினைக் கொண்ட குவளை மலரைவிட உன் கண் அழகியது. பருந்துகள் சூழப் பகைவரைப் போரில் வெற்றி கொள்ளும் இரத்தம் தோய்ந்த வேலைப் போன்ற செவ்வரி படர்ந்த மையுண்ட உன் கண்ணின் செருக்கிய பார்வை அவரை எங்ஙனம் பிரிந்துசெல்ல விடும்?" (பிரிந்து செல்ல விடாது என ஆறுதலாய்க் கூறினாள், தோழி.)

கருத்து

உன் முத்துப்பற்களின் இனிய முறுவல் அவர் பயணத்தைத் தடுக்கவில்லையாயினும், வேல் போன்ற உன் கண் பார்வை அவர் பயணத்தை உறுதியாய்த் தடுத்துவிடும்.

விளக்கம்

தலைவன் பிரிவான் என்றெண்ணி வேறுபட்ட தலைவியிடம் தோழி, "காடு கொடியதென்று கருதாமல் பொருள் தேடிவரத் தலைவர் செல்வார் என்று சொல்கின்ற தலைவியே! நீ மிகவும் அறியாமை கொண்டவள். காரணம் கேள்! பாண்டியரின் கொற்கை முத்தினைப் போன்று புன்சிரிப்பால் பொலியும் பற்கள் பொருந்திய உன் சிவந்த வாய் அவர் பயணத்தைத் தடுத்துவிடும் என்பதை நீ அறியாயா? ஒருவேளை அது தடுக்கத் தவறினாலும், போர்க்களத்து வெற்றிவேல் இரத்தத்தொடு அசைந்தாற் போன்ற செவ்வரி பரந்த உன் கண்களின் செருக்கிய பார்வை அவரை எவ்வாறு போக விடும்? இதனை அறியாதவளாயிருக் கிறாயே" என்று கூறி அவளை ஆற்றுவித்தாள்.

குறிப்பு

1. மூங்கில் காட்டினுள் பிறர் காண இயலாதவாறு பதுங்கிக் கிடக்கும் புலி, காற்றில் மூங்கில் அசைந்து வளைந்ததால் பிறர் காணத் தோற்றமளிக் கிறது. தலைவியின் உள்ளத்தில் தலைவன் பிரிவனோ என்று கொண் டிருக்கும் அச்சம், மற்றவர் சொல்லால் வெளிப்படத் தோன்றுகிறது.

2. வேங்கடமலைக்கு அப்பாலிருந்த அரசர்கள், யானைத்தந்தங்களைப் பாண்டிய மன்னர்க்குத் திறையாய்த் தந்துள்ளனர்.

சொற்பொருள்

1. கொடுவரி - வளைந்த வரி; இரும்புலி - பெரிய புலி; தயங்க - வெளிப்பட்டுத் தோன்ற; வரை - மலை.
2. ஆடுதல் - அசைதல்; கழை - தண்டு; இரு - வலிய; வெதிர் - மூங்கில்; கோடை - மேல்காற்று; ஒல்கும் - தளர்ந்து வளையும்.
3. கடிய - கொடிது.
4. நின்றது இல் - நிலைபேறு இல்லாத; பிணி - பற்று; தருமார் - தருவதற்காக.
5. செல்ப - செல்வார்.
6. மடவை - அறியாமை வாய்ந்தவள்; வடவயின் - வட பக்கம், வட திசை.
7. வேங்கடம் - வேங்கட மலை; பயந்த - (அரசர் திறையாய்க்) கொடுத்த; கோடு - தந்தம்.
8. மறம் - வீரம்; அறம் - அறநெறி.
9. கொற்கை - பாண்டியர் துறைமுகம்.
10. நகை - புன்முறுவல்; பொலிந்து - சிறந்து; இலங்கும் - விளங்கும்; எயிறு - பல்; கெழு - பொருந்திய; துவர் - பவளம், சிவப்பு.
11. தகைப்ப - தடுக்க; இகத்தல் - விட்டுவிடுதல்.
12. தேம்பட - தேன் உண்டாகுமாறு.
13. திரள்கால் - திரண்ட தண்டு.
14. பெருந்தகை - அழகு; சிதைத்து - அழித்து, வென்று; அமையா - அமையாமல்; பட - சூழ.
15. வேத்து - வேந்து - அரசன்; அமர் - போர்; கடந்த - வென்ற; வென்றி - வெற்றி.
16. துயல் வந்தன்ன - பிறழ்வது போன்ற.
17. அரி - செவ்வரி; வேய் - படர்ந்த; அமர்த்த - வேறுபட்ட, செருக்கிய; நோக்கு - பார்வை.

தோழி கூற்று

அகநானூறு 137 **உறையூர் முதுகூத்தனார்**

திணை : பாலை

கூற்று

'தலைமகன் பிரியும்' எனக் கருதி வேறுபட்ட தலைமகட்குத் தோழி சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் பிரிவானோ எனக் கருதி மெலிந்தாள், தலைவி. அவள் மெலிவால் கவலையுற்ற தோழி, தன் மனம் வருந்திக் கூறியது.

ஆறுசெல் வம்பலர் சேறுகிளைத்து உண்ட
சிறுபல் கேணிப் பிடிஅடி நசைஇ,
களிறுதொடூஉக் கடக்கும் கான்யாற்று அத்தம்
சென்றுசேர்பு ஒல்லார் ஆயினும், நினக்கே—
வென்றுஎறி முரசின் விறல்போர்ச் சோழர்
இன்கடுங் கள்ளின் உறந்தை ஆங்கண்,
வருபுனல் நெரிதரும் இருகரைப் பேரியாற்று
உருவ வெண்மணல் முருகுநாறு தண்பொழில்
பங்குனி முயக்கம் கழிந்த வழிநாள்,
வீஇலை அமன்ற மரம்பயில் இறும்பில்
தீஇல் அடுப்பின் அரங்கம் போல,
பெரும்பாழ் கொண்டன்று, நுதலே; தோளும்,
தோளா முத்தின் தெண்கடல் பொருநன்
திண்தேர்ச் செழியன் பொருப்பிற் கவாஅன்
நல்எழில் நெடுவேய் புரையும்
தொல்கவின் தொலைந்தன; நோகோ; யானே.

தெளிவுரை

"பாலை வழியில் செல்லும் புதிய வழிப்போக்கர்கள், சேற்றைக் கிளைத்து ஊறிய நீரை உண்டு செல்வர்; அதனால் உண்டான சிறிய பல கேணிகளைத் தம் பிடிகளின் அடிச்சுவடுகள் எனக் கருதி விருப்பமுற்றுக் களிறுகள் அவற்றைத் தொட்டுத் தொட்டு நுகர்ந்து பார்த்துக் கடந்து செல்லும்; காட்டாற்றினைக்

கொண்ட அத்தகைய பாலை வழியைக் கடந்து செல்ல நம் தலைவர் ஒருபோதும் உடன்பட மாட்டார்; என்றாலும், அவர் பிரிவார் என்னும் ஏக்கம் கொண்டிருக்கிறாய்.

உறையூர், பகைவர்களை வென்று முழங்குகின்ற வீரமுரசினையும், போர் வெற்றியையும் இனிய கடுப்பு மிக்க கள்ளினையுமுடைய சோழரது ஊராகும். அவ்வூரில், பெருகிவரும் நீர் உடைத்திட, இடிந்து விழும் கரைகளைக் கொண்ட காவிரிப் பேரியாற்றின் அழகிய வெண்மையான மணலைக் கொண்ட மணங்கமழுகின்ற குளிர்ச்சி பொருந்திய சோலையில் உத்தரமும் நிறைமதியும் கூடிய நன்னாளில், பங்குனி உத்திர விழா நடைபெறும்.

அவ்விழாவிற்கு மறுநாளில், பூக்களும் இலைகளும் நெருங்கி அடர்ந்த மரங்களைக் கொண்ட குறுங்காட்டிற்கு நடுவே நெருப்பில்லாத வெற்று அடுப்புகளைக் கொண்ட (திரு) அரங்கம் போல, உன் நெற்றி அழகினை இழந்து பொலிவற்றுள்ளது.

துளையிடப்படாத முத்துகள் விளையும் தெளிந்த கடலைத் தனக்கு உரிமையாய் உடையவனும், வீரனுமாகிய திண்ணிய தேரினையுடைய பாண்டியனது பொதிய மலைப்பக்கத்தில் வளர்ந்த நல்ல அழகு வாய்ந்த நீண்ட மூங்கிலைப் போன்ற உன் தோள்களும் தம் பழைய அழகினை இழந்தன; (இந்நிலை கண்டு) நான் வருந்துகின்றேன்" என்று தோழி தலைவியிடம் கூறினாள்.

கருத்து

தலைவன் ஒருபோதும் பிரியான்; அதனால், உன் பொலிவழியாதிருக்கட்டும்.

விளக்கம்

"பாலை வழியில் செல்லும் புதியவர் சேறு கிளைத்து அருந்திய சிறிய பல கேணி (கிணறு)களைப் பெண்யானையின் காலடி என்று கருதி ஆண்யானைகள் தொட்டுத் தொட்டுப் பார்த்து அஃதில்லாமை அறிந்து துன்பமுற்றுச் செல்லும். அக் காட்டாற்று வழியினில் செல்ல நம் தலைவர் ஒருபோதும் உடன்படார். ஆயினும், அவர் பிரிவார் என்று கருதியே

உன் நெற்றி பொலிவிழந்துள்ளது; தோள்களும் பண்டைய அழகினை இழந்தன. அதற்கே நான் வருந்துகின்றேன்" என்று தோழி தலைவியைத் தேற்றித் தன் வருத்தத்தைப் புலப்படுத்துகிறாள்.

குறிப்பு

இப்பாடலாசிரியர் காலத்துத் திருவரங்கம் ஓர் ஊராய் அமையாது, அகன்ற பொழில் சூழ்ந்த ஆற்றிடைக் குறையாய் இருந்ததுபோலும்! குறுங்காடு மண்டிய அவ்வாற்றிடைக் குறையில் உறையூர் மக்கள், பங்குனி உத்திர விழாவினைச் சிறப்பாய்க் கொண்டாடினர்; மக்கள் விடியுமளவும் ஊர் ஒன்றுகூடியிருந்தமையால் விழாக் கோலம் பூண்டது; எங்கும் அடுப்புகள் அமைத்துத் தீ மூட்டி, உணவு சமைத்து, உண்டு களித்து மக்கள் இன்பம் எய்தினர்; மறுநாள், மக்கள் நடமாட்டமின்றி, அடுப்புகளில் தீயின்றி அவ்வரங்கம் அழகிழந்து பொலிவற்று, வறிதே வெறிச்சோடிக் கிடந்தது.

உறையூரைச் சேர்ந்த இவ்வாசிரியர், தலைவன் பிரிவனெனக் கருதி வருத்தமுற்று வேறுபட்ட தலைவியின் பொலிவழிந்த பாழ்பட்ட நெற்றிக்கு, விழா முடிந்த மறுநாள் பொலிவிழந்த அவ்வரங்கத்தை உவமையாய்க் கூறியிருக்கிறார்.

சொற்பொருள்

1. ஆறு செல் - (பாலை) வழியில் செல்லும்; வம்பலர் - புதியவர்; கிளைத்து - தோண்டி (ஊறிய நீரை).
2. சிறுபல் - சிறிய பல; கேணி - கிணறு; பிடி அடி - பிடியின் அடிச்சுவடு; நசைஇ - விரும்பி.
3. தொடூஉ - தொட்டுப் பார்த்து; கடக்கும் - கடந்து செல்லும்; கான்யாறு - காட்டாறு; அத்தம் - வழி.
4. சென்று சேர்பு - சென்று சேர்தலை; ஒல்லார் ஆயினும் - மாட்டார் (இசையார்) ஆயினும்.
5. வென்று எறி முரசு - பகைவரை வென்று அடிக்கும் முரசு; விறல் போர் - போர் வெற்றி; சோழர் - சோழ மன்னர்.
6. இன் கடுங்கள்ளின் - இனிய கடுப்பு மிகுந்த கள்; உறந்தை - சோழர்களின் தலைநகர்.
7. வருபுனல் - வரும் நீர்; நெரிதரும் - உடைத்திடும்; இகுகரை - இடிந்த கரை; பேரியாறு - பெரிய ஆறு.

8. உருவ - அழகிய; முருகு நாறு - மணம் கமழும்; தண்பொழில் - குளிர்ந்த சோலை.
9. பங்குனி முயக்கம் - பங்குனித் திங்கள் கூட்டம் (பங்குனித் திங்களில் உத்தரமும் நிறைமதியும் கூடிய நன்னாளில் உறையூரில் பங்குனி உத்தர விழாச் சிறப்புறக் கொண்டாடப்பட்டது); கழிந்த - நடந்து முடிந்த; வழிநாள் - மறுநாள்.
10. வீ இலை - மலரும் இலையும்; அமன்ற - நெருங்கிய; பயில் - பொருந்திய; இறும்பு - குறுங்காடு.
11. தீ இல் அடுப்பு - சமைத்தல் இல்லாமையால் நெருப்பில்லாத வெற்று அடுப்பு (கொண்ட); அரங்கம் - விழாக்களம்.
12. பெரும் பாழ் - பெரிதும் பாழடைந்த தன்மை; கொண்டன்று - கொண்டது; நுதல் - நெற்றி.
13. தோளா - துளையிடாப்படாத; தெண்கடல் - தெளிந்த கடல்; பொருநன் - வீரன்.
14. திண்தேர் - திண்ணிய தேர்; செழியன் - பாண்டிய மன்னன்.
15. நெடுவேய் - நெடிய மூங்கில்; புரையும் - ஒக்கும்.
16. தொல்கவின் - பழைய அழகு; தொலைந்தன - கெட்டன; நோகோயான் - நோவேன் நான்.

தலைவன் பிரிவுணர்ந்த தோழி கூறியது.

தோழி கூற்று

நற்றிணை 129 **ஔவையார்**

திணை : குறிஞ்சி

கூற்று

பிரிவுணர்த்தப்பட்ட தோழி தலைமகளை முகம் புக்கது. (முகம் புக்கது - முகம் நோக்கி நிற்றல்.)

கூற்று விளக்கம்

தலைவனாலே பிரிவுணர்த்தப்பட்ட தோழி, தலைவியிடம் சென்று, 'நம் தலைவர் நம்மை இங்கே விட்டுவிட்டுத் தனியே பொருள் ஈட்டச் செல்வாராம்! அவர் மீண்டு வரும்வரை நாம் இல்லத்தில் அவருக்காகக் காத்திருக்க வேண்டுமாம்! இது நகைப்புக்குரியது அன்றோ?' என்று கூறித்

தலைவன் பிரிய இருப்பதைக் குறிப்பாய்க் கூறித் தலைவியின் முகம் நோக்கி நின்றாள்.

பெருநகை கேளாய், தோழி! காதலர்
ஒருநாள் கழியினும் உயிர்வேறு படூஉம்
பொம்மல் ஓதி! நம்இவண் ஒழியச்
செல்ப என்ப தாமே; சென்று
தம்வினை முற்றி வரூஉம்வரை, நம்மனை
வாழ்தும் என்ப, நாமே, அதன்தலைக்
கேழ்கிளர் உத்தி அரவுத்தலை பனிப்பப்
படுமழை உருமின் உரற்றுகுரல்
நடுநாள் யாமத்தும் தமியம் கேட்டே.

தெளிவுரை

"காதலரின் ஒருநாள் பிரிவையும் ஆற்றாது வருந்தும் பொலிவுற்ற கூந்தலைக் கொண்ட தலைவியே! பெரிதும் நகைப்புக்குரிய செய்தியை நீயே கேள்! தலைவர் நம்மை விட்டு நீங்கித் தனித்துப் பொருளீட்டி வரச் செல்வார் என ஊரிலுள்ளவர் கூறுகின்றனர். மேலும், நிறம் பொருந்திய படத்தினைக் கொண்ட பாம்பின் தலை நடுங்கும்படி பெய்யும் மழையில், இடியின் பேரொலியை நள்ளிரவில் தனியராய் இருந்து கேட்டுக்கொண்டு அவர் வினைமுடித்து மீளும் அளவும் நாம் வாழ்ந்திருத்தல் வேண்டும் எனவும் கூறுகின்றனர். இது நகைப்புக்கு இடமானது அன்றோ?"

கருத்து

தலைவனது ஒரு நாள் பிரிவையும் ஆற்றாத நாம், அவன் பொருளீட்டச் சென்று திரும்பும்வரை பொறுத்திருக்க வேண்டும் என ஊரார் கூறுகின்றனர்.

விளக்கம்

தோழி தலைவியிடம், "தலைவியே! கேட்டால் நகைப்பதற் குரிய செய்தி ஒன்று உள்ளது. அதனை நீ அறிவாயா? தலைவர் ஒரு பொழுது பிரிந்தாலும் உயிர் நீங்கும் அத்துணை மென்மைத் தன்மையர் நாம். தலைவர், நம்மை இங்கே தனியே விட்டு, சில

நாள்களுக்குப் பிரிந்து செல்வாராம்! நாம் வீட்டிலே நள்ளிரவிலும் கண்ணுறக்கமின்றி இடிமுழக்கத்தைக் கேட்டுக்கொண்டு அவர் திரும்ப வரும்வரை வாழ வேண்டுமாம்! இவ்வாறு ஊரார் சொல்வது எத்துணை நகைப்புக்குரியது" என்று கூறித் தலைவன் பிரிய இருப்பதை உணர்த்தினாள்.

குறிப்பு

தலைவன் பிரிவைப் பொறுத்திருக்க வேண்டும் என ஊரார் கூறுவதாய் முதலில் கூறி, பின்னர் மெல்ல மெல்ல ஆடவர்க்குரிய கடமைப்பாட்டினை எடுத்துக் கூறுவதன்மூலம், பிரிவைப் பொறுத்தற்குரிய நிலைக்குத் தலைவியைப் பக்குவப்படுத்தலே தோழியின் கருத்து.

சொற்பொருள்

1. நகை - நகைப்புக்குரிய செய்தி.
2. கழியினும் - நீங்கினாலும்; உயிர் வேறுபடூஉம் - வேறுபட்டு உயிர் நீங்கும்.
3. பொம்மல் - பொலிவு.
4. செல்ப என்ப - செல்வார் என ஊரிலுள்ளார் கூறுகின்றனர்.
5. வினை முற்றுதல் - செயல் முடிதல்.
6. அதன் தலை - அதற்கு மேலே.
7. கேழ் - நிறம்; உத்தி - பாம்பின் படம்; அரவு - பாம்பு; தலைபனிப்ப - தலை நடுங்குமாறு.
8. படுமழை - பெய்யும் மழை; உரும் - இடி; உரறுதல் - முழங்குதல்.
9. தமியம் - தனித்து இருந்து.

தோழி கூற்று

நற்றிணை 171 **ஆசிரியர் பெயரை அறிய இயலவில்லை**

திணை : பாலை

கூற்று

பிரிவுணர்த்தப்பட்ட தோழி தலைமகட்கு உரைத்தது.

கூற்று விளக்கம்

தலைவனால் பிரிவுணர்த்தப்பட்ட தோழி, தலைவியிடம், 'நம் காதலன் விரைவில் பிரியவிருக்கின்றான். நம்மை விட்டுக் காட்டுவழியே அவன் சென்றால், முன்பு அவன் மார்பில் கிடந்து துயிலும் கண்கள் இனி எங்ஙனம் துயில் கொள்ளும்' என வருந்திக் கூறியது.

நீர்நசைக்கு ஊக்கிய உயவல் யானை
வேனிற் குன்றத்து வெவ்வரைக் கவாஅன்
நிலம்செலச் செல்லாக் கயந்தலைக் குழவி
சேரிஅம் பெண்டிர் நெஞ்சத்து எறிய
ஊர்ஆன் கன்றொடு புகுதும் நாடன்
பன்மலை அருஞ்சுரம் இறப்பின், நம்விட்டு,
யாங்கு வல்லுந மற்றே ஞாங்கர்
வினைப்பூண் தெண்மணி வீழ்ந்தன நிகர்ப்பக்
கழுதுகால் கொள்ளும் பொழுதுகொள் பானாள்,
ஆர்வ நெஞ்சமொடு அளைஇ,
மார்புறப் படுத்தல் மரீஇய கண்ணே?

தெளிவுரை

நீர் உண்ணும் விருப்பம் கொண்டு வருந்திய பெண்யானை, சிறு குன்றுகள் சூழ்ந்துள்ள வெப்பமான மலைப்பக்க நிலத்தில் செல்லும். தாயுடன் செல்ல இயலாத இளமையான தலையினைக் கொண்ட யானைக்கன்று, சேரியில் உள்ள பெண்டிர் அஞ்சுமாறு ஊரில் உள்ள பசுவின் கன்றுகளோடு சேர்ந்து அச்சேரியில் புகுந்து விடும். இத்தகைய மலைக்குரிய தலைவன் நம்மைக் கைவிட்டுப் பல மலைகளுக்கு இடையே அரிய வழியில் செல்வானாயின் நாம் எவ்வாறு ஆற்றியிருக்க இயலும்? அன்பினைக் கொண்ட நெஞ்சம் தம்மில் கலத்தலால் அவன்

மார்பின் மேலாகப் பொருந்திப் படுத்துறங்கிப் பழக்கப்பட்டுள்ள கண்கள், பேய்கள் உலவும் நடுயாமத்தில் இனி எங்ஙனம் உறங்கிடுமோ? நல்ல வேலைப்பாடமைந்த சிறந்த அணிகலனி லிருந்து தொலைந்த அருமணியைத் தேடுபவர்போல உறக்க மின்றி வருந்தியிருப்போம்.

கருத்து

'தோழி! நம் காதலர் அரிய சுரத்தைக் கடந்து பொருளீட்டி வர நம்மைப் பிரியக் கருதியுள்ளார். அவர் பிரிந்து சென்றால், நாம் எங்ஙனம் உறங்கிடுவோம்?' எனத் தோழி தலைவியிடம் கூறினாள்.

விளக்கம்

பிடியானையைத் தொடர்ந்து செல்ல இயலாக் கன்று, தன் இனமெனப் பசுவின் கன்றுகளோடு மயங்கி நிற்கும்.

தலைவன் பிரிந்து சென்ற பின் பேய்கள் உலவும் நடுயாமத்தில் துணையின்றித் தலைவி எங்ஙனம் துயில்வாள்? இயல்பாகவே இரவுப் பொழுது அச்சம் தரும். அத்துடன் துணையுமின்றிப் பேய் உலவும் சூழலும் அமைவதைக் கூறி, தலைவனைப் பிரிந்திருத்தல் அரிது என்று தோழி கூறுகிறாள்.

சொற்பொருள்

1. நசை - விருப்பம்; ஊக்கிய - செலுத்திய; உயவல் - வருத்தம்.
2. வெவ்வரை - வெம்மையான மலை; கவாஅன் - மலைப்பக்கம்.
3. நிலம்செலச் செல்லா - தாயுடன் செல்ல இயலாத; கயந்தலை - இளமையான தலை; குழவி - கன்று.
4. எறிய - அச்சம் தாக்கும்படியாக.
5. ஊர் - ஊரிலுள்ள; ஆன் கன்று - பசுவின் கன்றொடு.
6. நம்விட்டு இறப்பின் - நம்மை விட்டுப் பிரிந்து செல்வானாயின்.
7. ஞாங்கர் - இனி.
8. வினைப் பூண் - வேலைப்பாடமைந்த அணிகலன்.
9. கழுது - பேய்; கால் கொள்ளும் பொழுது - காலூன்றி உலவும் பொழுது; பானாள் - நடுயாமம்.
10. அளைஇ - கலந்து.
11. மரீஇய-பொருந்திய.

தலைவர் பிரியார்.

தலைவி கூற்று

ஐந்திணை ஐம்பது 36 **மாறன் பொறையனார்**

திணை : பாலை

கூற்று

பிரிவுணர்த்திய தோழிக்குத் தலைமகள் உடன்படாது சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் பொருள்வயிற் பிரியவிருப்பதைத் தோழி தலைவியிடம் தெரிவிக்க, அவள் அதற்கு உடன்படாது கூறியது.

கடி(து)ஒடும் வெண்தேரை நீராம்என்(று) எண்ணிப்
பிடியோ(டு) ஒருங்கோடித் தாள்பிணங்கி வீழும்
வெடிஒடும் வெம்கானம் சேர்வார்கொல் நல்லாய்!
தொடிஒடி வீழத் துறந்து.

தெளிவுரை

தோழியே! விரைந்தோடும் கானல்நீரை உண்மையான தண்ணீர் என்று நம்பி (அதனைக் குடிக்க விரும்பி) ஆண் யானைகள் பெண்யானைகளுடனே சேர்ந்து ஓடி ஓய்ந்து விழும்படியான நில வெடிப்புகளைக் கொண்டது, கொடிய காட்டுவழி; என் கை வளையல்கள் கழன்று விழும்படி, தலைவர் என்னைவிட்டுப் பிரிந்து அக்காட்டுவழியில் செல்வாரோ?

கருத்து

என் கை வளையல்கள் கழன்று விழுமாறு தலைவர் நம்மைப் பிரிந்து செல்ல மாட்டார்.

சொற்பொருள்

1. கடிது - விரைந்து; வெண்தேர் - பேய்த்தேர் - கானல்நீர்; நீர்ஆம் - தண்ணீர் ஆகும்.
2. பிடி - பெண்யானை; ஒருங்கு - ஒன்றாய்ச் சேர்ந்து; தாள் - அடி; பிணங்கி - ஒய்ந்து.
3. வெடி - வெடிப்பு; வெம் கானம் - கொடிய காடு.
4. தொடி - வளையல்; துறந்து - பிரிந்து.

தலைவி கூற்று

ஐந்திணை எழுபது 30 **மூவாதியார்**

திணை : பாலை

கூற்று

தலைமகனின் செலவுடன்படாத தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் பொருளீட்டுதற்குப் பிரிந்து செல்லவிருப்பதற்கு உடன்படாத தலைவி தோழியிடம் சொல்லியது.

வில்லுழு(து) உண்பார் கடுகி அதர்அலைக்கும்
கல்சூழ் பதுக்கைஆர் அத்தத்தில் பாரார்கொல்
மெல்இயல் கண்ணோட்டம் இன்றிப் பொருட்(கு)இவர்ந்து
நில்லாத உள்ளத் தவர்.

தெளிவுரை

தோழி! மென்மையான இரக்கப் பண்பு சிறிதுமின்றிப் பொருள் தேடுதலை விரும்பி நம்மிடமிருந்து பிரிந்து செல்ல விரும்புகிறார், நம் தலைவர்.

வில்லால் அம்பெய்து வழிப்போக்கரை வீழ்த்திப் பொருள் பறித்து, அது காரணமாய்க் கிட்டும் பொருளைக் கொண்டு உண்டு பிழைப்பவர், ஆறலை கள்வர். அவர்கள் அலைந்து திரியும் கற்கள் நிறைந்த பாலைநில வழிக்கொடுமையைத் தலைவர் எண்ணிப் பார்க்க மாட்டாரா? (பார்ப்பார்; அதனால் செலவைத் தவிர்ப்பார் என்கிறாள், தலைவி.)

கருத்து

வழிக்கொடுமையை எண்ணித் தலைவர் செலவைத் தவிர்ப்பார்.

சொற்பொருள்

1. வில் உழுது - வில்லினாலே போர் புரிந்து; கடுகி - விரைந்து; அதர் அலைக்கும் - வழிச்செல்வாரை வருத்தும்.
2. பதுக்கை - சிறு தூறுகள்; ஆர் - நிறைந்த; பாரார் கொல் - எண்ணிப் பார்க்க மாட்டாரா?

3. கண்ணோட்டம் - இரக்கம்; இவர்ந்து - விரும்பி.
4. நில்லாத - நம்மிடத்திலே நிலை பெற்றில்லாத; உள்ளத்தவர் - உள்ளம் கொண்டவர்.

தலைவி கூற்று

ஐந்திணை எழுபது 32 **மூவாதியார்**

திணை : பாலை

கூற்று

பிரிவுணர்த்திய தோழிக்குத் தலைமகள் உடன்படாது சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் பிரியவிருப்பதை உணர்த்திய தோழியிடம் தலைவி உடன்படாது மறுத்துக் கூறியது.

நீர்இல் அருஞ்சுரத்(து) ஆமான் இனம்வழங்கும்
ஆர்இடை அத்தம் இறப்பர்கொல் ஆய்இழாய்!
நாணினை நீக்கி உயிரோ(டு) உடன்சென்று
காணப் புணர்ப்பதுகொல் நெஞ்சு.

தெளிவுரை

ஆய்ந்தெடுத்த அணிகலன்களை அணிந்துள்ள தோழியே! என் உள்ளம் வெட்கத்தைவிட்டு உயிருடன் சென்று தலைவரைக் கண்டு தழுவிக்கொள்ள விரும்புகிறது. அங்ஙனமிருக்கக் குடிப்பதற்கும் நீரில்லாமல் காட்டுப்பசுக்கள் கூட்டமாய்த் திரியும் அரிய காட்டு வழியில் தலைவர் நம்மைப் பிரிந்து செல்வாரா? (மாட்டார்.)

கருத்து

அரிய காட்டுவழியில் தலைவர் செல்ல மாட்டார்.

சொற்பொருள்

1. நீர்இல் - நீரில்லாத; அருஞ்சுரம் - அரிய காடு; ஆமான் - காட்டுப் பசு; இனம் - கூட்டம்; வழங்கும் - திரியும்.
2. ஆர் இடை - அரிய இடத்தைக் கொண்ட; அத்தம் - வழி; இறப்பர் கொல் - செல்வாரோ?

3. நாண் - வெட்கம்.
4. புணர்ப்பது - விரும்புவதாயுள்ளது.

தலைவி கூற்று

ஐந்திணை எழுபது 34 **மூவாதியார்**

திணை : பாலை

கூற்று

பிரிவுணர்த்திய தோழிக்குத் தலைமகள் உடன்படாது சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் பொருள் தேடச் செல்வதற்கு உடன்படாத தலைவி, தோழியிடம் சொல்லியது.

பீர்இவர் கூரை மறுமனைச் சேர்ந்(து) அல்கிக்
கூர்உகிர் எண்கின் இருங்கிளை கண்படுக்கும்
நீர்இல் அருஞ்சுரம் உன்னி அறியார்கொல்
ஈரம்இல் நெஞ்சி னவர்.

தெளிவுரை

தோழியே! நம் தலைவர் நம்மீது இரக்கமில்லா உள்ளம் கொண்டவர். அவர் செல்லும் வழி, பீர்க்கங்கொடிகள் படர்ந்திருக்கும் கூரைகளைக் கொண்ட பாழடைந்த வீடுகளைக் கொண்டது. அவ்வழியில், கூரிய நகங்களைக் கொண்ட கரடிகளின் பெரிய கூட்டம் ஒன்றுசேர்ந்து உறங்கும். நீரில்லாத அந்த அரிய பாலை நிலக் கொடுவழியில்தானே தாம் செல்ல வேண்டும் என்பதை அவர் எண்ணிப் பார்க்க மாட்டாரா?

கருத்து

வழியின் கொடுமையை அறிந்து தலைவர் செலவினைத் தவிர்ப்பார்.

சொற்பொருள்

1. பீர் - பீர்க்கங்கொடிகள்; இவர் - படர்ந்திருக்கும்; மறுமனை - பாழடைந்த வீடு; அல்கி - ஒன்றுசேர்ந்து.

2. கூர் உகிர் - கூரிய நகம்; எண்கு - கரடி; இரு - பெரிய; கிளை - கூட்டம்; கண்படுக்கும் - தூங்கும்.
3. நீர் இல் - நீரில்லாத; உன்னி - நினைத்து, எண்ணி.
4. ஈரம் இல் - இரக்கமில்லாத; நெஞ்சினவர் - உள்ளம் கொண்டவர்.

தலைவி கூற்று

ஐந்திணை எழுபது 39 **மூவாதியார்**

திணை : பாலை

கூற்று

பிரிவுணர்த்திய தோழிக்குத் தலைமகள் உடன்படாது சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் பொருள்வயிற்பிரிவதை உணர்த்திய தோழியிடம் தலைவி உடன்பட மறுத்துச் சொல்லியது.

கொடுவரி பாயத் துணையிழந்(து) அஞ்சி
கடுஉணங்கு பாறைக் கடவு தெவுட்டு
நெடுவரை அத்தம் இறப்பர்கொல் கோள்மாப்
படுபகை பார்க்கும் சுரம்.

தெளிவுரை

தலைவி தோழியிடம், "தோழியே! வளைந்த வரிகளைக் கொண்ட புலி பாய்ந்ததால் தன் துணையான பெண்யானையைப் பறிகொடுத்த ஆண்யானை, அச்சமிகுந்து, அப்பாறு சென்று, மாவிலங்கு என்னும் மரங்கள் வாடி நிற்கும் பாறைகளின் இடுக்கில் தன் துணையைக் கொன்ற புலியின் வருகையை எதிர்பார்த்துப் பழிவாங்கக் காத்திருக்கும். இத்தகைய கொடிய பாலை நிலத்தில் நீண்ட மலைத்தொடர்களைக் கொண்ட அரிய நெறியினைக் காதலர் கடந்து செல்வாரோ?" என ஐயத்துடன் வினவினாள்.

கருத்து

கடுமை மிக்க காட்டு வழியில் காதலர் செல்ல மாட்டார்.

சொற்பொருள்

1. கொடு வரி - வளைந்த வரிகளைக் கொண்ட புலி; பாய - பாய்தலினால்.
2. கடு - மாவிலங்கு மரம்; உணங்கும் - வாடி நிற்கும்; கடவு - வழி; தெவுட்டு - அடைத்து நிற்கும்.
3. கோள்மா - களிறு.
4. படுபகை - (தனது துணையினைக்) கொன்ற புலியாகிய பகை.

தலைவி கூற்று

திணைமாலை நூற்றைம்பது 83 **கணிமேதாவியார்**

திணை : பாலை

கூற்று

தலைமகன் செலவுணர்த்திய தோழிக்குத் தலைமகள் உடன்படாது சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் பிரிந்து செல்லவிருப்பதைத் தோழி தலைவியிடம் கூறியபோது, தலைவி அதற்கு உடன்படாது கூறியது.

செல்பவோ, சிந்தனையும் ஆகாதால் நெஞ்செரியும்
வெல்பவோ சென்றார் வினைமுடிய – நல்லாய்
இதடி கரையும்கல் மாபோலத் தோன்றிச்
சிதடி கரையும் திரிந்து.

தெளிவுரை

தோழியே! பாலை நிலத்தில் காட்டெருமைகள் தம்மைப் பிரிந்து சென்ற எருமைகளை எண்ணிக் கதறும்; அங்குக் கிடக்கும் குண்டுக் கற்கள் யானைகள் பரவி நிற்பனபோல் தோன்றும்; சிள் வண்டுகள் கூடிப் பல இடங்களிலும் திரிந்து ஒலிக்கும். இத்தகைய பாலை வழியே எவரேனும் செல்பவருண்டா? செல்ல நினைக்கவும் இயலாது; நினைத்துப் பார்க்கும் நெஞ்சும் சுடும். இவற்றையெல்லாம் பொருட்படுத்தாது சென்று, தாம் செய்ய விரும்பிய காரியத்தை வெற்றிகரமாய் முடித்துத் திரும்பியவர்

உண்டா? இல்லையே! (எனவே, நம் காதலர் பொருள்வயிற் பிரிதல் பொல்லாதது.)

கருத்து

நினைத்துப் பார்க்கவே நெஞ்சம் சுடுகின்ற கொடிய வழியில் தலைவர் செல்லுதல் கூடாது.

சொற்பொருள்

1. செல்பவோ - செல்பவருண்டா? நெஞ்செரியும் - (செல்ல நினைத்த) நெஞ்சும் சுடும்.
2. வெல்பவோ? - வெற்றி பெற்றவருண்டா? வினை முடிய - காரியம் முடியுமாறு.
3. இதடி - காட்டு எருமை; கரையும் - கதறும், கத்தும்; கல் - கற்கள்; மாபோல - யானைகள்போல.
4. சிதடி - சிள் வண்டு; கரையும் - ஒலிக்கும்.

தலைவி கூற்று

திணைமாலை நூற்றைம்பது 84 **கணிமேதாவியார்**

திணை : பாலை

கூற்று

தலைமகன் செலவுணர்த்திய தோழிக்குத் தலைமகள் செலவுடன்படாது சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் பிரிந்து செல்லவிருப்பதைத் தோழி தலைவியிடம் கூறியபோது, தலைவி அதற்கு உடன்படாது கூறியது.

கள்ளியங் காட்ட கடமா இரிந்தோடத்
தள்ளியும் செல்பவோ தம்முடையார் – கொள்ளும்
பொருள்இல ராயினும் பொங்கெனப்போந்(து) எய்யும்
அருள்இல் மறவர் அதர்.

தெளிவுரை

“வழிப்போக்கரிடம் பறித்துக்கொள்ளுவதற்குரிய பொருள் எதுவும் இல்லையென்றாலும், இரக்கம் இல்லாத மறவர் திடீரெனத் தோன்றி அவர்களைக் கொல்லுவர். கள்ளிக் காடுகள் அடர்ந்த பாலை நில வழியே காட்டுப்பசுக்கள் அஞ்சி ஓடும். அவ்வழியில் மறந்தும் எவரேனும் செல்வரோ? செல்லார். ஆதலால், பொருள் தேட நம் தலைவர் அப்பாலை வழியில் செல்வது நல்லதன்று” எனத் தலைவி கூறினாள்.

கருத்து

அஞ்சத்தக்க பாலை வழியில் நம் தலைவர் செல்லக்கூடாது.

சொற்பொருள்

1. காட்ட - காட்டினிடத்தே; கடமா - காட்டுப்பசு; இரிந்தோட - அஞ்சி ஓட.
2. தள்ளியும் - மறந்தும்; செல்பவோ - செல்வரோ? (செல்லார்); தம்முடை யார் - தமக்கென அறிவினைக் கொண்டோர் (செல்வரோ?); கொள்ளும் - (கொள்ளை யடித்துக்) கொள்ளக்கூடிய.
3. இலராயினும் - (பொருள் எதுவும்) இலராயினும்; பொங்கு என - திடீரென; போந்து - தோன்றி; எய்யும் - அம்பினைச் செலுத்தும்.
4. அருள்இல் - அருளில்லாத; அதர் - வழி.

தலைவி கூற்று

திணைமாலை நூற்றைம்பது 91 **கணிமேதாவியார்**

திணை : பாலை

கூற்று

தலைமகன் செலவுடன்படாத தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் பொருள் தேடச் செல்வதற்குடன்படாது, தலைவி தோழியிடம் சொல்லியது.

கள்ளிசார் கார்ஓமை நார்இல்பூ நீள்முருங்கை
நள்ளியவேய் வாழ்பவர் நண்ணுபவோ — புள்ளிப்
பருந்து கழுகொடு வம்பலர்ப் பார்த்தாண்(டு)
இருந்துறங்கி வீயும் இடம்.

தெளிவுரை

புள்ளிகளைக் கொண்ட பருந்துகள், கழுகுகளுடன் அமர்ந்து அவ்வழியில் செல்வாரிடம் உள்ள பொருள்களைப் பறித் துண்ணக் காத்திருக்கும்; கொள்ளை எதுவும் கிட்டாவிட்டால் அப்பறவைகள் அங்கேயே உறங்கி விழுந்துவிடும். அவ்விடத்தில் கள்ளிச்செடிகளும், அவற்றைச் சார்ந்து கரிய ஓமை மரங்களும், நார்ப்பற்றுதலில்லாத மலர்களைக் கொண்ட நீண்ட முருங்கை மரங்களும், மூங்கில் புதர்களும் அடர்ந்திருக்கும். இத்தகைய பாலைநில வழியே செல்ல நல்ல வாழ்க்கையை மேற்கொள்ள விரும்புபவர் கருதுவரோ? கருதார். (ஆதலால், தலைவன் அங்குச் செல்வதைத் தவிர்க்க வேண்டும்.)

கருத்து

பாலைநில வழியில் தலைவர் செல்வதற்கு நான் உடன்படேன்.

சொற்பொருள்

1. சார் - அடுத்து; கார் - கரிய; ஓமை - ஒரு வகை மரம்; இல் - இல்லாத; நீள் - நீண்ட.
2. நள்ளிய - மிகுந்த; வேய் - மூங்கில்; நண்ணுபவோ - செல்ல விரும்பு வரோ? புள்ளி - புள்ளிகளைக் கொண்ட.
3. வம்பலர் - வழிச்செல்வோரை; பார்த்து - எதிர்பார்த்து; ஆண்டு - அவ் விடத்து.
4. இருந்து - தங்கி; உறங்கி - தூங்கி; வீயும் - விழுகின்ற.

தலைவி கூற்று

ஐந்திணை எழுபது 35 **மூவாதியார்**

திணை : பாலை

கூற்று

பிரிவுணர்த்திய தோழிக்குத் தலைமகள் உடன்படாது சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் பொருளீட்டப் பிரிவான் என்று சொல்லிய தோழியிடம் தலைவி அப்பிரிவுக்கு உடன்படாது சொல்லியது.

சூரல் புறவின் அணில்பிளிற்றும் சூழ்படப்பை
ஊர்கெழு சேவல் இதலொடு – போர்திளைக்கும்
தேர்ஒடு கானம் தெருள்இலார் செல்வார்கொல்
ஊர்இடு கவ்வை ஒழித்து.

தெளிவுரை

நம் தலைவர் செல்லவுள்ள பாலை நில ஊர்கள் பிரம்பம் புதர்கள் நிறைந்த காடுகளாலும், அணிற்பிள்ளைகள் கீச்சிட்டு ஓடும் தோட்டங்களாலும் சூழப்பட்டிருப்பவை. அங்குள்ள கோழிச் சேவல்கள் காடைப்பறவைகளுடன் போரிட்டுக்கொண் டிருக்கும். இவ்வழியே, பொருளைவிட அருளே மேலானது என்னும் தெளிவில்லாத தலைவர் இங்கு நமக்குச் செய்ய வேண்டியதைக் கைவிட்டுத் தேரேறிப் போவாரா? (போக மாட்டார் எனத் தலைவன் பிரிவுக்கு உடன்படாத தலைவி கூறினாள்.)

கருத்து

நமக்கு அருள வேண்டிய தலைவர் நம்மை விட்டுப் பிரிய மாட்டார்.

சொற்பொருள்

1. சூரல் - பிரப்பம் புதர்கள்; புறவு - காடு; பிளிற்றும் - கீச்சிடும்; படப்பை - தோட்டம்.
2. கெழு - பொருந்தியுள்ள; இதல் - காடைப்பறவை; திளைக்கும் - செய்யும்.
3. தேர் ஒடு - தேருடன்; தெருள் இலார் - தெளிவில்லாதவர்.

4. ஊர் இடு - ஊரில் நமக்குச் செய்ய வேண்டிய; கவ்வை - காரியத்தை; ஒழித்து - விட்டுவிட்டு.

தலைவி கூற்று

திணைமாலை நூற்றைம்பது 92 **கணிமேதாவியார்**

திணை : பாலை

கூற்று

தலைமகன் செலவுடன்படாத தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் பொருள்தேடச் செல்வதற்குடன்படாது தலைவி தோழியிடம் சொல்லியது.

செல்பவோ தம்அடைந்தார் சீரழியச் சிள்துவன்றிக்
கொல்பபோல் கூப்பிடும் வெங்கதிரோன் – மல்கிப்
பொடிவெந்து பொங்கிமேல் வான்சுடும்; கீழால்
அடிவெந்து கண்சுடும் ஆறு.

தெளிவுரை

சிள் வண்டுகள் நெருங்கிக் கொடிய ஓசையுடன் பிறரைக் கொல்பவை போன்று ஒலித்துக்கொண்டிருக்கும்; சூரியனின் மிகுந்த வெம்மை எரித்தலால் மண்புழுதி வெந்து ஆவி கிளம்பி மேலே போய் வானத்தைக் கொதிக்கச்செய்யும்; அவ்வழியில் நடப்பவர் காலடிகள் வெந்துபோய், கண்கள் சூட்டினால் எரியும். அத்தகு பாலைவழியில் தம்மையே நம்பியிருக்கும் மனைவியை வாடவிட்டுக் கணவர் பிரிந்து செல்வாரோ? (மாட்டார்).

கருத்து

அவரையே நம்பியிருக்கும் நம்மைப் பிரிந்து அவர் செல்லார்.

சொற்பொருள்

1. செல்பவோ - செல்வரோ?; தம் அடைந்தார் - தம்மைச் சேர்ந்த மனைவி; சீர்அழிய - சிறப்பழிய, வாடவிட்டு; சிள் - சிள் வண்டு; துவன்றி - நெருங்கி.
2. கூப்பிடும் - ஒலிக்கும்; மல்கி - மிகுந்து (எரிந்து).

3. பொடி - புழுதி; பொங்கி - ஆவி கிளம்பி; மேல் - மேலே சென்று; கீழால் - கீழே தரையில்.
4. அடி - கால் அடி; ஆறு - வழி.

தலைவி கூற்று

திணைமாலை நூற்றைம்பது 86 **கணிமேதாவியார்**

திணை : பாலை

கூற்று

தலைமகள் தோழிக்குச் செலவுடன்படாது சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் பிரிந்து செல்லவிருப்பதைக் கேட்ட தலைவி அதற்கு உடன் படாது தோழியிடம் கூறியது.

ஒவ்வார் உளரேல் உரையா(து) ஒளியாது
செல்வார்என் றாய்நீ சிறந்தாயே – செல்லா(து)
அசைந்(து)ஒழிந்த யானை பசியால்ஆள் பார்த்து
மிசைந்(து)ஒழியும் அத்தம் விரைந்து.

தெளிவுரை

தோழியே! உணவும் நீருமின்றி நடக்கவும் இயலாது வருந்தி இறந்து கிடக்கும் யானைகளை அங்குள்ளவர் தமது மிக்க பசி யினால் தேடிப் பார்த்துத் தின்று செல்லும்படியான கொடிய பாலைநில வழியில் நம் காதலர் பொருளீட்டுவதற்காகச் செல்வார் என்று நீ என்னிடம் மறைக்காமல் கூறினை. நீ எனக்கு உண்மையிலேயே சிறந்த தோழிதான்! என்றாலும், இந்தப் பிரிவினை ஆற்றுவார் எவரேனும் இருந்தால் அவரிடம் கூறு!

கருத்து

தலைவர் பிரிவார் என்பதை உயிரோடிருப்பவரிடம் கூறு.

விளக்கம்

கொடிய பாலைநில வழியாகத் தலைவர் பிரிந்து செல்வார் என்பதை மறையாது கூறியமையால் நீ கொண்டாடத்தக்கவளே!

ஆயினும், இதனைக் கேட்டு ஆற்றுபவர் எவரேனும் இருந்தால் அவரிடம் கூறுதலே நல்லது.

சொற்பொருள்

1. ஒவ்வார் உளரேல் - ஆற்றுவர் எவரேனும் இருந்தால்; ஒளியாமல் - மறக்காமல்.
2. செல்லாது - நடக்க இயலாது.
3. அசைந்து - வருந்தி; ஒழிந்த - இறந்து வீழ்ந்த; யானை - யானையை; ஆள் பார்த்து - தேடிப் பார்த்து.
4. மிசைந்து - தின்று; ஒழியும் - செல்லும்; அத்தம் - வழி.

தலைவி கூற்று

ஐந்திணை எழுபது 31 **மூவாதியார்**

திணை : பாலை

கூற்று

பொருள்வயின் பிரிந்துபோய தலைமகனைக் காய்ந்து தலைமகள் தானே கூறிக்கொண்டது.

கூற்று விளக்கம்

பிரிந்து சென்ற தலைவனை எண்ணித் தலைவி தனக்குத்தானே சொல்லிக் கொண்டது.

பேழ்வாய் இரும்புலி குஞ்சரம் கோள்பிழைத்துப்
பாழூர்ப் பொதியில் புகாப்பார்க்கும் ஆரிடைச்
சூழாப் பொருள்நசைக்கண் சென்றோர் அருள்நினைந்து
வாழ்தியோ மற்றோ உயிர்.

தெளிவுரை

என் உயிரே! பிளந்த வாயினைக் கொண்டே பெரிய புலி, யானையைக் கொல்ல முயன்று தோல்வியுற்றது. உணவை இழந்த அது பாழ்பட்ட ஊர்களின் மன்றங்களிலே புகுந்து உணவைத் தேடி நின்றது; அத்தகைய கொடிய பாலை நில வழியிலே பொருள் தேடப் பிரிந்து சென்றுள்ளவரது அருளினை எதிர்பார்த்து இன்னும் மடியாமல் வாழ விரும்பு கின்றனையோ?

கருத்து

உயிரே! தலைவன் பிரிந்த பின்னும் நீ வாழலாமா?

சொற்பொருள்

1. பேழ்வாய் - பிளந்த வாய்; குஞ்சரம் - யானை; கோள் - கொள்ளுதலி னின்றும்; பிழைத்து - தவறிப்போய்.
2. பாழூர் - பாழ்பட்ட ஊர்; பொதியில் - மன்றம்; புகா - புகுந்து; பார்க்கும் - (உணவினைத்) தேடி நிற்கும்.
3. சூழா - நெருங்கி; நசை - விருப்பம்.
4. வாழ்தியோ - வாழ விரும்புகின்றனையோ?

தலைவி கூற்று

கலித்தொகை 24 **பாலை பாடிய பெருங்கடுங்கோ**

திணை : பாலை

கூற்று

தலைமகன் குறிப்புக் கண்டு ‘பிரிவன்’ என ஐயுற்றுச் செல்கின்ற தலைமகள், அக்காலத்துத் தலைமகன் கனவின் அரற்றினமை கேட்டுப் ‘பொருள்வயிற் பிரிகின்றான்’ எனத் துணிந்து, ஆற்றாளாய்த் தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவனது குறிப்பினைக் கண்டு அவன் தன்னைப் பிரியவிருக் கின்றான் என ஐயம் கொண்டனள், தலைவி. அவள் ஐயுற்றிருந்த அக்காலத்தில் தலைவன் கனவில் அரற்றினமை கேட்டு, அவன் ‘பொருள்வயிற்பிரிவன்’ என நன்கு அறிந்த தலைவி, ஆற்றாதவளாய்த் தோழியிடம் சொல்லியது.

‘நெஞ்சு நடுக்குறக் கேட்டும், கடுத்தும்,தாம்
அஞ்சியது ஆங்கே அணங்காகும்’ என்னும்சொல்
இன்தீம் கிளவியாய்! வாய்மன்ற; நின்கேள்
புதுவது பன்னாளும் பாராட்ட, யானும்
‘இதுஒன்று உடைத்து’என எண்ணி, அதுதேர,
மாசுஇல்வண் சேக்கை மணந்த புணர்ச்சியுள்,

பாயல்கொண்டு என்தோள் கனவுவார், 'ஆய்கோல்
தொடிநிரை முன்கையாள் கையாறு கொள்ளாள்,
கடிமனை காத்தோம்ப வல்லுவள் கொல்லோ?–
இடுமருப்பு யானை இலங்குதேர்க்கு ஓடும்
நெடுமலை வெஞ்சுரம் போகி, நடுநின்று,எம்
செய்பொருள் முற்றும்அளவு?' என்றார்; ஆயிழாய்!
தாமிடை கொண்டது அதுவாயின், தம்மின்றி
யாம்உயிர் வாழும் மதுகை இலேமாயின்
'தொய்யில் துறந்தார் அவர்'என, தம்வயின்
நொய்யார் நுவலும் பழிநிற்பத் தம்மொடு
போயின்று, சொல்என் உயிர்.

தெளிவுரை

"இனிமையும் சுவையும் கொண்ட பேச்சினைப் பேசும் தோழியே! என் நெஞ்சு நடுங்குமாறு ஒரு செய்தியைக் கேட்டேன். 'நாம் அஞ்சியது, அஞ்சியவாறே நடந்து துன்பம் விளைவிக்கும்' என்னும் சொல் உண்மையே. நீயும் இதனைக் கேள்.

தலைவர் என்னைப் பல நாளும் புதிது புதிதாய்ப் பலபடக் கூறிப் பாராட்டி வந்தார். இவ்வாறு பேசுவதில் ஏதோ ஒன்று அடங்கியிருக்கிறது என்று நானும் எண்ணியிருந்தேன். அஃது இப்போது தெளிவாகிவிட்டது.

மாசில்லாத திணிவுற்ற படுக்கையில் என்னோடு கூடிக் கலந்த காலத்தில், தலைவர் என் தோள்மீது படுத்தவாறே உறங்கியவர் கனாக் கண்டு பிதற்றினார். 'குத்தும் கொம்பினைக் கொண்ட யானை, அங்கே தோன்றிய கானல்நீரை நோக்கி ஓடும். அந்த மலையிலுள்ள வெப்பமிக்க காட்டினைக் கடந்து நான் நடுவு நிலையோடு பொருள் தேடி வருவேன். சித்திரத் தொழிலமைந்த வளையலைச் செறிவாய் அணிந்த முன் கையைக் கொண் டவளே! நான் பொருள் தேடி வருமளவும் நம் பெருமைமிக்க இல்லத்தைப் பேணிக் காத்துவர நீ வல்லவளாயிருப்பாயோ?' என்று தம் கனவின்போது கூறினார்.

ஆராய்ந்தெடுத்த அணிகலன்களை அணிந்தவளே! அவர் உள்ளம் புரிந்தது; அவர் பொருள் தேடி வரப் பிரிவாராயின்,

அவரின்றி உயிர் வாழும் வலிமை எனக்கில்லை. 'அவள் மார்பின் தொய்யிலை விட்டு நீங்காதிருந்தவர், இப்போது பிரிந்து விட்டார்' என்று ஊரிலுள்ள இழிமகளிர் கூறும் பழிச்சொற்கள் அவரையே சென்று சேரட்டும்; அவர் பிரிந்ததும் என் உயிரும் பிரிந்துவிடும் என்பதை அவரிடம் சொல்" எனத் தோழியிடம் தலைவி கூறினாள்.

கருத்து

'தோழி! தலைவர் பிரியும் அன்றே என் உயிரும் பிரிந்துவிடும்' என்பதை அவரிடம் சொல்.

விளக்கம்

மனைவியைப் பிரிந்து வேற்று நாடு சென்று பொருளீட்டி வரக் கருதினான், தலைவன். தலைவன் தன்னிடம் பல்வேறு நிலைகளிலும் அன்பைச் சொரிவதைக் கண்ட தலைவி, தலைவன் தன்னைப் பிரியவிருக்கிறான் என்பதைக் குறிப்பால் உணர்ந்து ஐயுற்றாள். அந்த ஐயம் தீருவதுபோல, ஒருநாள் தலைவன் தலைவியோடு படுத்துறங்குகையில் கனவு கண்டு 'நான் பொருள்தேடிப் பிரிந்தால், நீ இல்லத்தைப் பாதுகாக்கும் வல்லமை உள்ளவளோ?' என்று அரற்றினான். தலைவன் தான் பிரிந்து செல்லவிருப்பதைக் கனவில் கூறிய உரையின்மூலம் சொல்கிறான் என்பதை உணர்ந்த தலைவி, 'அவர் என்று பிரிகிறாரோ அன்றே என் உயிர் போய்விடும்' என்று தலைவனிடம் கூறுமாறு தோழியிடம் கூறுகிறாள்.

சொற்பொருள்

1. கடுத்து - ஐயுற்று.
2. அணங்காகும் - வருத்தும்.
3. இன்தீம் - இனிய சுவை; கிளவி - பேச்சு; வாய்மன்ற - உண்மையே.
4. புதுவது - புதிது புதிதாய்; பன்னாளும் - பல நாளும்.
5. இது ஒன்று உடைத்து - இதில் ஏதோ ஓர் எண்ணம் உள்ளது; தேர - தெளிவாகி விட்டது.
6. சேக்கை - படுக்கை; மணந்த - புணர்ந்த, கூடிய.
7. பாயல் கொண்டு - படுக்கையாய்க் கொண்டு; கனவுவார் - கனாக் கண்டவர்; ஆய்கோல் - சித்திரத் தொழிலமைந்த.

8. கையாறு - துயருறுதல்.
9. வல்லுவள் கொல்லோ? - வல்லவளோ?
10. இடு - குத்தும்; தேர் - பேய்த்தேர் - கானல்நீர்.
11. நடுநின்று - நடுவு நிலையோடு.
12. அளவு - காலம்வரை.
13. தம்மின்றி - அவர் இல்லாமல்.
14. மதுகை - வலிமை.
16. நொய்யார் - இழி மகளிர்; நுவலும் - சொல்லும்.
17. போயின் - போயிற்று.

தலைவி கூற்று

அகநானூறு 157 **வேம்பற்றூர்க் குமரனார்**

திணை : பாலை

கூற்று

பிரிவு உணர்த்திய தோழிக்குத் தலைமகள் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் தலைவியைப் பிரிந்து பொருள் ஈட்டி வர விரும்பினான். அதனைத் தானே நேரில் கூறித் தலைவி படும் வேதனையைக் காணும் மனத் துணிவு இல்லாத தலைவன், தன் பிரிவைத் தோழியிடம் கூற, அவளும் அதனைத் தலைவிக்கு உணர்த்த, அப்போது தலைவி சொன்னது.

அரியல் பெண்டிர் அல்குல் கொண்ட
பகுவாய்ப் பானைக் குவிமுனை சுரந்த
அரிநிறக் கலுழி ஆர மாந்திச்
செருவேட்டு, சிலைக்கும் செங்கண் ஆடவர்,
வில்இட வீழ்ந்தோர் பதுக்கை, கோங்கின்
எல்லி மலர்ந்த பைங்கொடி அதிரல்
பெரும்புலர் வைகறை அரும்பொடு வாங்கி
கான யானை கவளம் கொள்ளும்
அஞ்சுவரு நெறியிடைத் தமியர் செல்மார்
நெஞ்சுஉண மொழிப மன்னே– தோழி!
முனைபுலம் பெயர்த்த புல்லென் மன்றத்து,
பெயல்உற நெகிழ்ந்து வெயில்உறச் சாஅய்,

வினைஅழி பாவையின் உலறி,
மனைஒழிந் திருத்தல் வல்லு வோர்க்கே.

தெளிவுரை

தோழி, ஊரை ஆள்வோர்க்கும் படையெடுத்து வந்தோர்க்கும் நடந்த போரால் குடிமக்கள் இடம் பெயர்ந்தனர். அதனால் ஊர்ப் பொதுமன்றம் பாழாயிற்று. அங்குள்ள பொம்மைகள் மழையில் நனைந்தும் வெயிலில் காய்ந்தும் கலையழகு சிதையப்பெற்றன. (தலைவன் பிரிந்த பிறகு) அப்பொம்மைகளைப் போல மேனி வாடி தனியே வாழ வல்லவர் உள்ளனர். (அவர்கள் எத்துன்பத்தையும் தாங்கிக் கொள்வர்.)

கள் விற்கும் மகளிர், கள் பானையை இடுப்பில் வைத்துச் சுமந்து வருவர். போருக்குச் செல்லும் வீரர், விரிந்த வாயைக் கொண்ட அக்கள் பானையின் குவிந்த முனை வழியே சொரியும் அரிக்கப்பட்ட கள்ளை மிகுதியாய்க் குடித்துச் செல்வர். சிவந்த கண்ணுடன் ஆரவாரிக்கும் வீரர்களுள் போரில் இறந்தவர்கள் உடலைப் புதைத்துக் கற்குவியலால் மூடி வைப்பர். அந்த மேட்டிற்கு அருகில், கோங்க மரத்தில் படர்ந்த அதிரல் கொடியைக் காட்டு யானைகள் விடியற்காலை உணவாய்க் கொள்ளும். அத்தகைய அச்சம் தரும் வழிகளில் சென்றுள்ளோர், தம் தலைவியர் ஏற்றுக் கொள்ளுமாறு கூறி, அவர்கள் அனுமதி பெற்றுச் சென்றுள்ளனர்.

நான் அவ்வாறு தனித்திருக்க மாட்டேன். (அவர் பிரிந்தால் என் உயிர் பிரியும்.)

கருத்து

தலைவர் பிரிந்தால் மற்ற பெண்டிரைப் போல் வீட்டில் தனித்திருக்காது, நான் உயிரோடிரேன்.

விளக்கம்

"தோழி! அச்சம் தரும் காட்டுவழியில், குடிமக்கள் நீங்கிச் சென்று விட்ட பாழ்மன்றத்தில், மழையால் நனைந்து வெயிலால் உலர்ந்து அழகிழந்த பாவையைப் போல, வீட்டில் தனித்திருந்து

வாழும் வல்லமை கொண்டவர்கள் நெஞ்சு ஒப்பும்படி அவர்தம் தலைவர் பிரிவர். எனக்குத் தனித்திருக்கும் வல்லமையில்லை; அதனால் நான் இறந்துபடுவேன்'' என்று தலைவி தோழியிடம் கூறினாள். (அவள் நெஞ்சுகொளச் சொல்லி, ஒப்புதல் பெறும் வரை தலைவன் பொறுத்திருப்பான்.)

சொற்பொருள்

1. அரியல் பெண்டிர் - கள் விற்கும் மகளிர்; அல்குல் கொண்ட - இடையில் சுமந்து வந்த.
2. பகுவாய்ப் பானை - விரிந்த வாயைக் கொண்ட பானை; சுரந்த - சொரிந்த.
3. அரிநிறக் கலுழி - அரிக்கப்பெற்ற நிறம் கொண்ட கள்ளின் வண்டல்; ஆர மாந்தி - மிகுதியாய் குடித்து.
4. செரு - போர்; சிலைக்கும் - ஆரவாரிக்கும்.
5. பதுக்கை - வீரர்களைப் புதைத்து அதன்மீது மேலே குவிக்கப்பட்டிருக்கும் கற்குவியல்; கோங்கு - கோங்கு மரம்.
6. எல்லி - இரவில்; பைங்கொடி - பசிய கொடி; அதிரல் - அதிரல் கொடி.
7. பெரும்புலர் வைகறை - மிகுந்த இருள் புலர்கின்ற விடியற்காலை; வாங்கி - இழுத்து.
8. கவளம் கொள்ளும் - உணவைக் கவளமாய் உண்ணும்.
9. தமியர் - தனியே; செல்மார் - செல்பவர்.
10. நெஞ்சுண மொழிப - (தலைவி) மணங்கொளப் பேசி அனுமதி பெறுவர்.
11. முனைபுலம் பெயர்த்த - போரால் இடம் விட்டுப் பெயர்ந்ததால்; புல்லென் - தனிமைப்பட்டுக் கிடந்த; மன்றத்தின் - பொது இடத்தில்.
12. பெயலுற - மழை பொழிய; நெகிழ்ந்து - இளகி; சாஅய் - காய்ந்து.
13. வினை அழி பாவை - வேலைப்பாடு சிதைந்துவிட்ட (களையற்ற) பொம்மை; உலறி - மேனி வாடி.
14. மனை ஒழிந்திருத்தல் - வீட்டில் தலைவனைப் பிரிந்து தனித்து இருத்தல்; வல்லுவோர் - வல்லவர்.

தலைவி கூற்று

திணைமொழி ஐம்பது 11 **கண்ணஞ்சேந்தனார்**

திணை : பாலை

கூற்று

தலைமகனது செலவுணர்ந்து வேண்டாத மனத்தாளாய்த் தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

'உன்னைப் பிரியேன்' என்று சொன்ன மொழியை மறந்து, பொருள்வயிற் பிரிந்து சென்ற தலைவனின் நிலை குறித்துத் தலைவி, தோழியிடம் கூறியது.

கழுநீர் மலர்க்கண்ணாய்! கௌவையோ நிற்கப்
பொருள்நீரார் காதலர் பொய்த்தனர்; நீத்தார்
அழிநீர ஆகி அரித்தெழுந்து தோன்றி
வழிநீர் அறுத்த சுரம்.

தெளிவுரை

கழுநீர் மலரினைப் போன்ற அழகிய கண்களையுடைய என் தோழியே! நம் தலைவர் பிரிந்ததால் ஏற்படும் பழிமொழிகள் ஒருபுறம் இருக்கட்டும்! பொருள் தேடுவதையே முதன்மையாய்க் கொண்டுள்ள நம் காதலர் களவுப் புணர்ச்சிக் காலத்தில் 'பிரியேன்' என்று, தாம் சொன்ன உறுதிமொழியை மறந்தார். இப்போது நம்மை விட்டுப் பிரிந்து, எங்கும் அழிவுபெற்ற தன்மையுடன் விளங்கும், புல் பூண்டும் இல்லாத, கானல்நீர் முதலியன தோன்றக்கூடிய, நீரற்று விளங்கும் வறண்ட பாலைநிலத்தினை நோக்கிச் சென்றுவிட்டார்!

கருத்து

தலைவர் களவுக் காலத்தில், 'உன்னைப் பிரியேன்; பிரியின் உயிர் வாழேன்' என்று தாம் சொன்ன உறுதிமொழியை மறந்துவிட்டாரா? பிரிந்து சென்றுள்ளார்.

சொற்பொருள்

1. கழுநீர் மலர் - செங்கழுநீர்ப்பூ; கௌவை - பழிச்சொற்கள்; நிற்க - ஒருபுறம் இருக்கட்டும்.

2. பொருள் நீரார் - பொருள் தேடுவதையே தம் தன்மையாய்க் கொண்டுள்ளவர்; பொய்த்தனர் - மறந்துவிட்டார்; நீத்தார் - பிரிந்து சென்று விட்டார்.
3. அழிநீர - அழியும் தன்மையினைக் கொண்ட; அரித்து - புல் பூண்டு களையும் போக்கி; எழுந்து தோன்றி - கானல்நீர் முதலியன உண்டாகி.
4. வழி - பாதை; நீர் - உண்ணும் நீர்; அறுத்த - இல்லாமற்செய்த.

தலைவி கூற்று

அகநானூறு 293 **காவன்முல்லைப் பூதனார்**

திணை : பாலை

கூற்று

பொருள்வயிற்பிரியக் கருதிய தலைமகன் குறிப்பு அறிந்து, தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

பொருள் தேடி வருதலில் தலைவன் மனம் செலுத்தியுள்ளான் என்பதைச் சில குறிப்புகளால் தலைவி உணர்ந்தாள். அதனால் கவலை மிகுதியாக, அவள் தன் வருத்தத்தைத் தோழியிடம் சொல்லியது.

இலைஒழித்து உலறிய புன்தலை உலவை
வலைவலந் தனைய ஆக, பலஉடன்
சிலம்பி சூழ்ந்த புலம்கெடு வைப்பின்,
துகில்ஆய் செய்கைப் பாவிரிந் தன்ன,
வெயில்அவிர்பு நுடங்கும் வெம்வெம் களரி,
குயில்கண் அன்ன குரூஉக்காய் முற்றி,
மணிக்காசு அன்ன, மால்நிற இருங்கனி
உகாஅய் மென்சினை உதிர்வன கழியும்
வேனில் வெஞ்சுரம் தமியர் தாமே
செல்ப என்ப— தோழி!— யாமே
பண்புஇல் கோவலர் தாய்பிரித்து யாத்த
நெஞ்சுஅமர் குழவி போல, நொந்துநொந்து,
இன்னா மொழிதும் என்ப;
என்மயங் கினர்கொல், நம்காத லோரே.

தெளிவுரை

"வேல மரங்கள் தம் இலைகளை உதிர்த்து வற்றிப் பொலிவிழந்த உச்சியினையுடையவையாய்த் தோன்றும். அவற்றில் வலையைக் கட்டியுள்ளதுபோல, சிலந்திப்பூச்சிகள் தம் கூடுகளை அமைத்திருக்கும். காடெல்லாம் வளம் கெட்டுக் கிடக்கும் பாழ்பட்ட நிலம் அது. ஆடை நெய்யும்போது, ஊடுபாவானது குறுக்கும் நெடுக்கும் ஓடுவதுபோல, வெயில் கதிர்கள் பரவாத இடமில்லை என்று சொல்லும்படி எங்கும் சுட்டெரிக்கும். உகாய் மரத்தின் மெல்லிய கிளைகளிலிருந்து, குயிலின் கண் போன்ற சிறிய காய்கள் முற்றி, அழகிய பொற்காசு போன்ற நிறம் கொண்ட பெருங்கனிகளாய் உதிர்ந்து கொண்டிருக்கும். வேனிலால் வெப்பமிக்க அக்காட்டு வழியே, நம் தலைவர் தனித்துச் செல்லுவார் என்று ஊரார் கூறு கின்றனர்.

ஆயர்கள் பசுக்களை மேய்ச்சலுக்கு ஓட்டிச் செல்லும்போது அவற்றின் இளங்கன்றுகளைத் தனியே பிரித்துக் கட்டி வைப்பர். இஃது இரக்கமற்ற, பண்பற்ற செயல்போலத் தோன்றும். அங்ஙனம் கட்டி வைக்கப்பெற்றிருக்கும் கன்றைப் போன்று நாமும் தலைவரின் பிரிவை நினைத்து மிகவும் நொந்து கடுமையான சொற்களைச் சொல்லிக்கொண்டிருக்கிறோம் என்று இவ்வூரார் சொல்லுகின்றனராம்.

அவர்கள் இவ்வாறு அறிவு குழம்பிப் பேசுவது ஏனோ?" என்று தலைவி சொன்னாள்.

கருத்து

தலைவர் பொருள் தேடக் காட்டுவழியில் தனித்துச் செல்ல இருக்கின்றார் என ஊரார் பேசுகின்றனரே. அஃது உண்மையா?

விளக்கம்

"தோழி! நம் காதலர் வேனிற்காலத்து வெஞ்சுரத்தே தனியராய்ச் செல்லுவார் என்று இவ்வூரார் கூறுகின்றனர். அத்துடன் அவர்களே நாம் மனம் நொந்து இன்னாத சொற்களைச் சொல்லுகின்றோம் என்றும் கூறுகின்றனர்.

அவர்கள் இவ்வாறு குழம்பிப் பேசுவது ஏனோ?" என்று தலைவி தோழியிடம் கேட்கிறாள்.

சொற்பொருள்

1. உலறிய - வற்றிய; புன்தலை - பொலிவற்ற உச்சி; உலவை - வேலமரம்.
2. வலந்தனைய - பின்னியதைப் போன்ற.
3. சிலம்பி - சிலந்திப்பூச்சி; புலம்கெடு வைப்பு - நிலம் பாழ்பட்ட இடம்.
4. துகில் - துணி; செய்கை - நெசவு.
5. அவிர்பு - விளங்கி; நுடங்கும் - அசையும்; வெம்வெம் - மிக்க வெம்மை; களரி - காடு.
6. குரூஉக்காய் - சிறிய காய்.
7. மணிக்காசு - பொற்காசு; மால் - பெருமை; இருங்கனி - பெரிய கனி.
8. உகாஅய் - ஒரு வகை மரம்; உதிர்வன கழியும் - உதிர்ந்து ஒழியும்.
9. வேனில் - வேனிற்பருவம்; வெம்சுரம் - கொடிய காடு; தமியர் - தனியர் (தலைவர்).
10. செல்ப - செல்லுவார்.
11. கோவலர் - இடையர்; யாத்த - கட்டிய.
12. நெஞ்சு அமர் - நெஞ்சத்தால் தன் தாயை விரும்பிய; குழவி - கன்று.
13. இன்னா - கொடிய; மொழிதும் - கூறுவர்.

தலைவி கூற்று

அகநானூறு 355 **தங்கால் பொற்கொல்லனார்**

திணை : பாலை

கூற்று

பிரிவு உணர்த்திய தோழிக்குத் தலைமகள் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவியைப் பிரிந்து சென்று பொருளீட்டிவரத் தலைவன் கருதினான். அதையுணர்ந்த தோழி அதனைத் தலைவியிடம் கூறினாள். அது கேட்ட தலைவி ஆற்றாளாய்த் தோழியிடம் கூறியது.

மாவும் வண்தளிர் ஈன்றன; குயிலும்
இன்தீம் பல்குரல் கொம்பர் நுவலும்;
மூதிலை ஒழித்த போதுஅவிழ் பெருஞ்சினை,
வல்லோன் தைவரும் வள்உயிர்ப் பாலை
நரம்புஆர்த் தன்ன வண்டினம் முரலும்;
துணிகயம் துன்னிய தூமணல் எக்கர்,
தாதுஉகு தண்பொழில் அல்கி, காதலர்
செழுமனை மறக்கும் செவ்வி வேனில்
தானே வந்தன்று ஆயின், ஆனாது
இலங்குவளை நெகிழ்ந்த எவ்வம் காட்டிப்
புலந்தனம் வருகம்; சென்மோ– தோழி!–
'யாமே எமியம் ஆக, நீயே
பொன்நயந்து அருள்இலை யாகி,
இன்னை ஆகுதல் ஒத்தன்றால்' எனவே.

தெளிவுரை

மா மரங்களும் அழகிய தளிர்களை ஈன்றன; அவற்றின் கொம்புகளிலிருந்து குயில்களும் மிக இனிய குரலால் பலமுறை கூவத் தொடங்கின. முதிர்ந்த இலைகளை உதிர்த்த மரங்களின் விரிந்த பெரிய கிளைகளில், மலர்ந்த மலர்களில் வண்டின் கூட்டங்கள் யாழ் வல்லோன் தடவுகின்ற நரம்பு இனிய இசை கொண்ட பாலைப் பண்ணை ஒலித்தாலொத்த இசையுடன் ஒலிக்கின்றன. தெளிந்த நீர் நிலையைச் சார்ந்துள்ள பூந்தாதுகள் உதிரும் குளிர்ந்த சோலையில் உள்ள தூய மணல்மேட்டில் தங்கிக் காதலர்கள் தம் வளமனையை மறந்திருக்கும் இளவேனிற் காலமும் வந்துளது. ஆதலால் (நாம் தலைவனிடம் சென்று) கை வளையல்கள் அடிக்கடி கழன்று விழும் துன்பத்தைத் தலைவனிடம் காட்டி, 'நாம் தனியே இங்கிருக்க, நீ பொருளை விரும்பி, அருள் இல்லாதவன் ஆகி, இத்தன்மை உடையவனாய் இருத்தல் உன் தகுதிக்கு ஒத்ததன்று' என்று சொல்லி, அவனோடு வெறுத்துப் பேசி வர நாம் செல்வோமா?

கருத்து

'நாம் தனித்திருக்க அவன் பிரிந்து செல்லுதல் அவன் தகுதிக்கு ஏற்றதன்று' என்று அவனிடம் சொல்லி வருவோம்! வா.

விளக்கம்

"தோழி! காதலர்கள் சோலையில் தங்கி இல்லங்களை மறக்கும் இளவேனிற்காலம் வந்துளது; ஆதலால், நாம் தலைவனிடம் செல்வோம்; நம் வளையல்கள் கழன்று விழும் துன்பத்தைக் காட்டுவோம். 'நாங்கள் இங்கே தனித்திருக்க நீ பொருளை விரும்பிப் பிரிந்துறைதல் தக்கதன்று' என்றும் சொல்வோம்; புறப்படு" என்று தலைவி தோழியிடம் கூறினாள்.

சொற்பொருள்

1. மா - மா மரம்; வண்தளிர் - அழகிய தளிர்.
2. இன்தீம் - மிக இனிய; பல்குரல் நுவலும் - பலமுறை கூவும்; கொம்பர் - கொம்பு.
3. மூதிலை - முதிர்ந்த இலை; ஒழித்த - உதிர்ந்த; போது - மலர்; அவிழ் - மலர்ந்த; பெருஞ்சினை - பெரிய கிளை.
4. வல்லோன் - யாழ் மீட்டுவதில் திறமையுள்ளவன்; தைவரல் - தடவுதல்; வள்உயிர் - இனிய இசை; பாலை - பாலைப்பண்.
5. நரம்பு - யாழ் நரம்பு; ஆர்த்தன்ன - இசைத்தாற்போல; முரலும் - ஒலிக்கும்.
6. துணிகயம் - தெளிந்த நீர்நிலை; துன்னிய - அடுத்துள்ள; எக்கர் - மேடு.
7. தாது - மகரந்தம்; அல்கி - தங்கி.
8. செழுமனை - வளமைமிகு இல்லம்; செவ்வி - காலம்.
9. ஆயின் - அதனால்; ஆனாது - இங்கு தங்கியிராது.
10. இலங்குதல்- விளங்குதல்; நெகிழ்ந்த - கழன்று விழுகின்ற; எவ்வம் - துன்பம்.
11. புலந்தனம் - (அவனை) வெறுத்து; வருகம் - வருவோம்; சென்மோ - புறப்படுவோம்.
12. எமியம் ஆக - தனியே இருக்க.
13. பொன்நயந்து - பொருள் விரும்பி; இலையாகி - இல்லாதவனாய்.
14. இன்னை ஆகுதல் - இவ்வாறு பிரிந்து செல்லுதல்; ஒத்தன்று - தகுதியுடையது அன்று; எனவே - என்று சொல்லி.

தலைவி கூற்று

அகநானூறு 217 **கழார்க் கீரன்எயிற்றியார்**

திணை : பாலை

கூற்று

பிரிவு உணர்த்திய தோழிக்குத் தலைமகள், ஆற்றாமை மீதூரச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் பொருள் ஈட்டிவரப் பிரிந்து செல்லவிருப்பதைத் தோழி தலைவியிடம் கூறினாள். அது கேட்ட தலைவி, ஆற்றாமை மிகுந்து கூறியது.

'பெய்துபுறந் தந்த பொங்கல் வெண்மழை,
எஃகுஉறு பஞ்சித் துய்ப்பட் டன்ன,
துவலை தூவல் கழிய, அகல்வயல்
நீடுகழைக் கரும்பின் கணைக்கால் வான்பூக்
கோடைப் பூளையின் வாடையொடு துயல்வர,
பாசிலைப் பொதுளிய புதல்தொறும் பகன்றை
நீல்உண் பச்சை நிறம்மறைத்து அடைச்சிய
தோல்எறி பாண்டிலின் வாலிய மலர,
கோழிலை அவரைக் கொழுமுகை அவிழ,
ஊழ்உறு தோன்றி ஒண்பூத் தளைவிட,
புலம்தொறும் குருகினம் நரல, கல்லென
அகன்றுஉறை மகளிர் அணிதுறந்து நடுங்க,
அற்சிரம் வந்தன்று, அமைந்தன்று இதுஎன
எப்பொருள் பெறினும் பிரியன் மினோ'எனச்
செப்புவல் வாழியோ, துணையுடை யீர்க்குஎன,
நல்காக் காதலர் நலன்உண்டு துறந்த
பாழ்படு மேனி நோக்கி, நோய்பொர,
இணர்இறுபு உடையும் நெஞ்சமொடு, புணர்வுவேட்டு,
எயிறுதீப் பிறப்பத் திருகி,
நடுங்குதும் பிரியின்யாம் கடும்பனி உழந்தே.

தெளிவுரை

"தோழி! கார் காலம் முடிந்தது. மழையைப் பெய்துமுடித்த மேகங்கள், வெண்மை பூசப்பெற்ற பஞ்சுபோல மெல்லியன வாகித் தூறல் பொழிவிப்பதையும் நிறுத்திவிட்டன. அகன்ற வயல்களில் உள்ள நெடிதுயர்ந்த கரும்புகளில், திரண்ட காம்பினைக் கொண்ட பெரிய பூளைப் பூக்கள், கோடைக் காலத்துப் பூக்களைப் போலக் கடுமையான வாடைக்காற்றால் அசைகின்றன. பசிய இலை நெருங்கிய புதல்தோறும், நீல நிறமுள்ள தோல் கேடகத்தில் அந்நீல நிறம் மறைய இடை யிடையே பதிக்கப்பட்ட வட்டக் கண்ணாடிகள்போல வெள்ளை வெளேரெனப் பகன்ற மலர்கள் தோன்றியுள்ளன. கொழுத்த இலைகளைக் கொண்ட அவரையின் வளமான அரும்புகள் விரிந்தன. முற்றிய காந்தள் மலர்கள் முறையாய்த் தம் இதழ்களைத் திறந்தன. வயல்களில் பறவைக்கூட்டம் கல்லென்று ஒலிக்கிறது. தம் தலைவரைப் பிரிந்து தங்கியிருக்கும் மகளிர் அழகிழந்து நடுங்குமாறு பனிக்காலமும் வந்துவிட்டது. இப்பருவம் பொருள் ஈட்டப் பிரிபவர்க்கு ஏற்றதன்று. எத்துணைச் சிறந்த பொருளைப் பெறுவதாய் இருப்பினும், 'பிரிய வேண்டா' என்று நீ நம் தலைவரிடம் கூறு.

"நமக்கு அருள் செய்யாது தாம் நினைத்தவாறு அவர் பிரிவா ராயின் நம் நிலை என்ன? அவர் நம் பெண்மை நலத்தை நுகர்ந்து கைவிட்டுள்ள பாழ்பட்ட மேனியை நோக்கி வருந்துவோம்; பிரிவுத் துயர் வாட்டும்; நம் மனம் வலிமை நீங்கி உடையும். அவரது கூடலை விரும்பிக் கடுமையான பனியால் வருந்தி, பற்களைத் தீயுண்டாகுமாறு கடித்து நடுங்குவோம் என்பதனை யும் கூறு."

கருத்து

'இது பிரியும் பருவமன்று; பிரிந்தால் நடுங்கி வருந்துவோம் என்று தலைவனிடம் கூறு.'

விளக்கம்

"தோழி! பனிப்பருவம் வந்துவிட்டது. இப்பருவம் பொருள் தேடிப் புறப்படுவோர்க்கு ஏற்றதன்று. 'எமக்குத் துணையாய்

இருக்கும் நீவிர் எப்பொருளைப் பெறுவதாயிருந்தாலும் பிரியாதீர்' என்று தலைவரிடம் கூறு. அதனை மனத்தில் கொள்ளாது, அருளின்றி அவர் பிரிந்து செல்வாராயின், நம் நலனுண்டு அவரால் கைவிடப்பட்ட நம் மேனியைப் பார்த்து, வலிமை கெட்டு, உடைந்த நெஞ்சத்துடன், அவரோடு புணர்தலை விரும்பி, கடும்பனியால் வருந்தி, பற்களை நெருப்புப் பறக்கக் கடித்து நடுங்குவோம் என்றும் அவரிடம் கூறு" என்று தோழியிடம் தலைவி கூறினாள்.

சொற்பொருள்

1. புறந்தந்த - முடிந்துபோன; பொங்கல் - பரவிய; வெண்மழை - வெள்ளை மேகம்.
2. எஃகுறு - அடிக்கப் பெற்ற; பஞ்சி - பஞ்சு; துய் - மென்மை.
3. துவலை தூவல் - சிறிய துளியைத் தூவுதலையும்; கழிய - நீங்க.
4. நீடுகழை - உயரமான தண்டு; கணைக்கால் - திரண்ட கால்; வான்பூ - வெண்மையான பூ.
5. பூளை - பூளைப் பூ; வாடை - வாடைக்காற்று; துயல்வர - அசைய.
6. பாசிலை - பசிய இலை; பொதுளிய - நிறைந்த; பகன்றை - ஒரு வகைப் பூ.
7. நீல்உண் - நீலம் ஊட்டப்பெற்ற; அடைச்சிய - மறையும்படி.
8. பாண்டில் - கண்ணாடி; வாலிய - வெண்மையாய்.
9. கோழிலை - கொழுத்த இலை; கொழுமுகை - வளமான அரும்பு.
10. தோன்றி - காந்தள்; தளைவிட - பிணிப்பு விட.
11. புலம் - நிலம்; குருகு - நாரை; 'கல்' என நரல - 'கல்' என்று ஒலிக்க.
12. அகன்று - தலைவனைப் பிரிந்து; உறை - தங்குகின்ற; அணி - அழகு.
13. அற்சிரம் - பனிக்காலம்; அமைந்தன்று - ஏற்றது அன்று.
14. பிரியன்மின் - பிரியாதீர்.
15. செப்பு - சொல்; துணையுடையீர் - எமக்குத் துணையாய் இருப்பவர்.
16. நல்குதல் - அருளுதல்; நலன் - பெண்மை நலன்.
17. நோய் பொர - காமநோய் தாக்க.
18. இணர்இறுபு - வலிமை நீங்கி; புணர்வு வேட்டு - அவரோடு புணருதலை விரும்பி.
19. எயிறு - பல்; தீ பிறப்ப - நெருப்புப் பறக்க; திருகி - கடித்து.
20. கடும்பனி - கடிய பனி; உழத்தல் - வருந்துதல்.

தலைவி கூற்று

அகநானூறு 305 **வடமவண்ணக்கன் பேரிசாத்தனார்**

திணை : பாலை

கூற்று

பிரிவு உணர்த்தப்பட்ட தோழிக்குத் தலைமகள் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவியைப் பிரிந்து போவதற்கான ஏற்பாடுகளைத் தலைவன் செய்கிறான். அதனை அறிந்த தலைவி, தான் ஆற்றியிருக்க இயலாத நிலையினைத் தோழியிடம் கூறியது.

பகலினும் அகலா தாகி, யாமம்
தவல்இல் நீத்தமொடு ஐயெனக் கழிய,
தளிமழை பொழிந்த தண்வரல் வாடையொடு
பனிமிக் கூரும் பைதல் பானாள்,
பல்படை நிவந்த வறுமைஇல் சேக்கை,
பருகு வன்ன காதலொடு திருகி,
மெய்புகு வன்ன கைகவர் முயக்கத்து,
ஓர்உயிர் மாக்களும் புலம்புவர் மாதோ;
அருளி லாளர் பொருள்வயின் அகல,
எவ்வம் தாங்கிய இடும்பை நெஞ்சத்து
யான்எவன் உளெனோ–தோழி!– தானே
பராரைப் பெண்ணைச் சேக்கும், கூர்வாய்,
ஒருதனி அன்றில் உயவுக்குரல் கடைஇய,
உள்ளே கனலும் உள்ளம் மெல்லெனக்
கனைஎரி பிறப்ப ஊதும்
நினையா மாக்கள் தீம்குழல் கேட்டே.

தெளிவுரை

பகலெல்லாம் மழை ஓயாமல் பெய்தமையால் இரவெல்லாம் வெள்ளம் பெருக்கெடுத்தோடி குளிர்ச்சியுடன் வீசும் வாடைக் காற்று நடுங்கச் செய்யும் நள்ளிரவுப் பொழுது, பல அடுக்கா யுள்ள மெத்தைகளால் உயர்ந்த வளமிக்க படுக்கையில், பருகுவது போன்ற காதலுடன், ஈர் உடலுக்கும் ஓர் உயிரெனக் கருதுமாறு

தழுவியிருக்கும் ஒருவர் உடலில் ஒருவர் மாறிப் புகுவது போன்று கைகளால் தழுவி, காதலரும் வருந்துமாறு அத்துணைக் கொடிய வாடைக்காற்று வீசுகின்றது.

ஆனால், அருள் இல்லாத தலைவரோ பொருளீட்டச் செல்வதாய்ச் சொல்கிறார். அதனால் நான் துன்பத்தைத் தாங்கிக் கொண்டு வருத்தத்தோடு கூடிய நெஞ்சம் கொண்டவளாயிருக்கிறேன். பருத்த அடியைக் கொண்ட பனை மரத்தில் துணையின்றித் தனியே தங்கியிருக்கும் கூரிய வாயினையுடைய அன்றிலின் அவலக்குரல், உள்ளே கொதிக்கின்ற என் நெஞ்சத்தில் மிக்க தீயை மூட்டுகின்றது. இவற்றை எண்ணிப்பாராது, இடையர்கள் ஊதும் இனிய குழலோசையைக் கேட்டு எவ்வாறு பொறுத்திருப்பேன்?

கருத்து

தலைவர் பொருளீட்டச் செல்வதாய்க் கூறுகிறார்; அவர் பிரிவை என்னால் பொறுத்திருக்க இயலாது.

விளக்கம்

“தோழி, நள்ளிரவில், ஒருவரையொருவர் காற்றும் இடைப்புக முடியாதவாறு, ஈருடல் ஓருயிரெனத் தழுவியிருக்கும் காதலரும் நடுங்கும் இப்பனிக் காலத்தில், தலைவர் பொருளீட்டச் செல்வதாய்ச் சொல்கின்றார். இத்துன்பத்தை நான் எவ்வாறு தாங்கியிருப்பேன்? நள்ளிரவில் பனை உச்சியில் துணையைப் பிரிந்து தனித்திருக்கும் அன்றில் பறவையின் அவலக் குரலைக் கேட்கும் என் நிலை என்ன ஆகும்?” என்று, தலைவர் பிரிவைத் தன்னால் பொறுத்திருக்க இயலாதெனத் தலைவி கூறுகிறாள்.

சொற்பொருள்

1. அகலாதாகி - நீங்காதாகி.
2. தவல்இல் - நீங்குதல் இல்லாத; நீத்தம் - வெள்ளம்; ஐ - மெல்ல.
3. தளிமழை - குளிர்ந்த மழை.
4. பனிமீக் கூரும் - குளிர் மிகுந்த; பைதல் - துன்பம்; பானாள் - நள்ளிரவு.

5. பல்படை - பல அடுக்கு; நிவந்த - உயர்ந்த; வறுமைஇல் - (குறைவு இல்லாத) வளமான; சேக்கை - படுக்கை.
6. பருகுவன்ன - பருகுதலையொத்த; திருகி - மாறி.
7. மெய்புகுவன்ன - ஒருவர் மெய்யில் ஒருவர் புகுந்ததுபோல; முயங்கல் - தழுவுதல்.
8. ஓர்உயிர் மாக்களும் - ஈருடம்பிற்கு ஓர் உயிரெனத் திகழும் காதலர்களும்; புலம்புவர் - வருந்துவர்.
9. அருளிலாளர் - அருளில்லாத தலைவர்; பொருள்வயின் - பொருள் ஈட்டுதற்பொருட்டு.
10. எவ்வம் - துன்பம்; இடும்பை - வருத்தம்.
11. எவன் உளெனோ - எவ்வாறு ஆற்றியிருப்பேன்?
12. பராரை - பரு அரை - பருத்த அடிமரம்; பெண்ணை - பனை மரம்; சேக்கும் - தங்கியிருக்கும்; கூர்வாய் - கூரிய அலகு.
13. ஒருதனி - துணையைப் பிரிந்து தனியாய் இருக்கும்; அன்றில் - அன்றில் பறவை; உயவுக்குரல் - துன்பக்குரல்; கடைஇய - மூட்டுவதால்.
14. கனலும் - கொதிக்கின்ற.
15. கனைஎரி பிறப்ப - மிக்க தீ உண்டாக.
16. நினையா மாக்கள் - எண்ணிப் பாராத இடையர்.

தலைவி கூற்று

குறுந்தொகை 76 **கிள்ளி மங்கலங்கிழார்**

திணை : குறிஞ்சி

கூற்று

பிரிவுணர்த்தச் சென்ற தோழிக்கு அவர் பிரிவு முன்னர் உணர்ந்த தலைமகள் கூறியது.

கூற்று விளக்கம்

தலைவன் பிரியக் கருதியிருப்பதைத் தலைவியிடம் தோழி அறிவிக்கின்றாள். அதனைத் தான் முன்பே அறிந்ததனைத் தலைவி தோழியிடம் சொல்லியது.

காந்தள் வேலி ஓங்குமலை நல்நாட்டுச்
செல்ப என்பவோ, கல்வரை மார்பர்
சிலம்பின் சேம்பின் அலங்கல் வள்இலை
பெருங்களிற்றுச் செவியின் மானத் தைஇ,
தண்வரல் வாடை தூக்கும்
கடும்பனி அச்சிரம் நடுங்குஅஞர் உறவே.

தெளிவுரை

“தோழி! காற்றில் அசையும் மலைச்சேம்பின் வளமான இலைகள் பெரிய ஆண்யானையின் காதுகள்போலத் தோன்றும். அந்த இலைகளை மிகுந்த குளிருடன் வீசும் வாடைக்காற்று மெல்லத் தடவி மேலே தூக்கும் கடுமையான பனி பெய்யும் முன்பனிக் காலம் இது. இக்காலத்தில் நாம் குளிரில் நடுங்கித் துன்புறுமாறு, நம்மைப் பிரிந்து, கல்லைப் போன்ற உறுதியான நெஞ்சினைக் கொண்ட தலைவர் காந்தள் செடிகளை வேலி யாகக்கொண்டு விளங்கும் உயர்ந்த மலைகளுள்ள நல்ல நாட்டிற்குச் செல்வாரென்று கூறுகின்றனர்.”

கருத்து

தலைவன் பிரியக் கருதியிருப்பதை ஊரார் வாயிலாக முன்னரே அறிவேன்!

விளக்கம்

‘தலைவர் பிரியவிருப்பது முன்னரே தெரிந்தும். அவர் பிரிந்து செல்வதைத் தடுக்க வேண்டிய பொறுப்பினைக் கொண்டுள்ள நீ, அப்பொறுப்பினை நிறைவேற்றாமல் அயலவரைப்போலப் பிரிவார் என்பதைச் சொல்ல வந்துள்ளாயே’ என்று தலைவி தோழியிடம் வருந்திக் கூறினாள்.

சொற்பொருள்

1. காந்தள் - ஒருவகைச் செடி.
2. கல்வரை மார்பர் - கல்லைப் போன்ற உறுதியான மார்பினைக் கொண்டவர்.
3. சிலம்பின் சேம்பு - மலைச்சேம்பு (சேம்பு ஒருவகைக் கிழங்குச்செடி); அலங்கல் - அசைதல்; வள் - வளம்.
4. மான - போல; தைஇ - தடவி.

5. தண் - குளிர்ச்சி; வாடை - வாடைக்காற்று; தண்வரல் - குளிருடன் வீசும்.
6. அச்சிரம் - அற்சிரம் - முன்பனிக்காலம்; அருர் - துன்பம்.

உன்னுடன் வருவேன்.

தலைவி கூற்று

கலித்தொகை 6 **பாலை பாடிய பெருங்கடுங்கோ**

திணை : பாலை

கூற்று

தலைமகன் செலவுக்குறிப்பறிந்து, 'நீர் செல்லுங் கடுஞ்சுரத்துத் துன்பத்திற்குத் துணையாக எம்மையும் உடன்கொண்டு சென்மின்' எனத் தலைமகள் கூறியது.

கூற்று விளக்கம்

தலைவன் பொருள்தேடப் பிரியவிருக்கிறான் என்பதையறிந்த தலைவி, தன்னையும் அவனுக்குத் துணையாக அழைத்துப் போகும்படி வேண்டினாள்.

மரைஆ மரல்கவர, மாரி வறப்ப—
வரைஓங்கு அருஞ்சுரத்து ஆரிடைச் செல்வோர்,
சுரையம்பு, மூழ்கச் சுருங்கிப் புரையோர்தம்,
உள்நீர் வறப்பப் புலர்வாடும் நாவிற்குத்
தண்ணீர் பெறாஅத் தடுமாற்று அருந்துயரம்
கண்ணீர் நனைக்கும் கடுமைய, காடுஎன்றால்,
என்?நீர் அறியாதீர் போல இவைகூறல்
நின்நீர அல்ல, நெடுந்தகாய்! எம்மையும்,
அன்புஅறச் சூழாதே, ஆற்றிடை நும்மொடு
துன்பந் துணையாக நாடின், அதுஅல்லது,
இன்பமும் உண்டோ, எமக்கு?

தெளிவுரை

"*மழை வறண்டமையால் காட்டுப்பசுக்கள் தாம் மேய்வதற்குப் புல் கிட்டாமையால் கற்றாழையைக் கடித்துத் தின்னும் ஓங்கிய*

மலையினைக் கொண்டது, அக்காடு; கடத்தற்கரிய காட்டு வழியிலே செல்வோர்மேல் துன்பம் செய்யும் ஆறலை கள்வர், கூரிய நுனியினைக் கொண்ட அம்பினை உடலில் முழுகும்படி யாகச் செலுத்துவர்; அதனால் வழிச் செல்வோர் உடல் சுருங்கி, உடம்பில் உள்ள நீர் வற்றிப்போக, உலர்ந்து வாடும் நாவிற்குத் தண்ணீர் பெற இயலாது தவிப்பர். அத்தவிப்பினை அவர்கள் கண்களிலிருந்து வழியும் கண்ணீரே நனைத்துச் சிறிது தணிக்கும். அத்தகைய கடுமையான சூழ்நிலையைக் கொண்டது காடு என்கிறீர். என் நிலை அறியாததுபோல நீர் இவ்வாறு கூறுதல் உம் குணத்துக்கு ஏற்றதன்று. பெருந்தகைமை உடையோய்! அன்பு நீங்கும் வகையில் பிரிந்து செல்வதையே கருதாமல், வழியில் நேரிடும் உம் துன்பத்திற்குத் துணையாய் என்னையும் அழைத்துச் சென்றால் எனக்கு அதைவிட இன்பம் தரக்கூடியது வேறு என்ன உண்டு?" என்று தலைவி, தலைவனிடம் கூறினாள்.

கருத்து

'காட்டுவழியில் எத்தகைய துன்பம் நேர்ந்தாலும், தலைவனோடு சேர்ந்து செல்லுதல் எனக்கு இன்பமே' எனக் கூறித் தன்னையும் உடனழைத்துச் செல்லுமாறு தலைவி, தலைவனிடம் வேண்டுகிறாள்.

குறிப்பு

தலைவியைக் காட்டுவழியில் அழைத்துச் செல்ல இயலாது; அவளோ அழைத்துச் செல்லுமாறு கூறுகிறாள். தலைவன் நிலையைக் கூறி அவளை ஆற்றுவித்த பின்னர்த் தன் பயணத்தை மேற்கொள்வான் என்பது குறிப்பு.

சொற்பொருள்

1. மரைஆ - காட்டுப்பசு; மரல் - கற்றாழை இனத்தைச் சார்ந்த ஒரு புல்; வறப்ப - வறண்டுபோக.
2. வரை - மலை; சுரம் - காடு; ஆர் - வழி.
3. சுரை அம்பு - கூரிய நுனியினைக் கொண்ட அம்பு; மூழ்க - முற்றிலுமாக அழுந்த; சுருங்க - உடல் தளர்ந்து; புரையோர் - குற்றம் செய்பவர் - ஆறலை கள்வர்.
4. உள்நீர் - உடம்பிலுள்ள நீர்த் தன்மை; புலர்வாடும் - வறட்சியால் வாடும்.
5. தடுமாற்று - தடுமாறும்.

7. நீர் - தன்மை.
8. நீர - குணத்துக்கு, இயல்புக்கு.
9. அன்புஅறச் சூழாதே - அன்பு அறும்படி விட்டுப் பிரிதலைக் கருதாது.
10. நாடின் - உடன்கொண்டு செல்லுதலை நினைப்பின்.

தலைவன் கூற்று

நற்றிணை 162 **ஆசிரியர் பெயரை அறிய இயலவில்லை**

திணை : பாலை

கூற்று

உடன்போதுவல் என்ற தலைமகளுக்குத் தலைமகன் சொற்றது.

கூற்று விளக்கம்

தலைவன் பிரிவுணர்த்தியபோது தானும் உடன் வருவதாய்க் கூறிய தலைவியை நோக்கி, " 'மாலைப்போதில் பிரிந்திருப்பது துன்பம்' என்ற காரணத்தால் என்னுடன் வருகின்றேன் என்கின்றாய். கொடிய பாலை நிலத்தில் உன்னால் வர இயலாது. ஆகவே என்னுடன் வரவேண்டா" என்று தலைவன் கூறியது.

'மனைஉறை புறவின் செங்காற் பேடைக்
காமர் துணையொடு சேவல் சேரப்
புலம்பின்று எழுதரு புன்கண் மாலைத்
தனியே இருத்தல் ஆற்றேன்' என்றுநின்,
பனிவார் உண்கண் பைதல கலுழ,
'நும்மொடு வருவல்' என்றி; எம்மொடு
பெரும்பெயர்த் தந்தை நீடுபுகழ் நெடுநகர்
யாயொடு நனிமிக மடவை! முனாஅது
வேனில் இற்றித் தோயா நெடுவீழ்,
வழிநார் ஊசலின், கோடை தூக்குதொறும்
துஞ்சுபிடி வருடும் அத்தம்
வல்லை ஆகுதல் ஒல்லுமோ நினக்கே?

தெளிவுரை

மிகுந்த புகழைக் கொண்ட உன் தந்தையின் பெருமைமிக்க மாளிகையில் உன்னைப் பெற்ற தாயோடு எப்போதும் பிரியாது வாழ்கின்ற இளமையினைக் கொண்ட தலைவியே! உன் வீட்டில் வாழ்கின்ற சிவந்த கால்களைக் கொண்ட பெண்புறாக்கள் அவற்றின் காதல் துணையாகிய அழகிய சேவல் புறாக்களோடு சேர்ந்து மகிழும் மாலை நேரத்தில், நீ தனியே இருப்பதற்குப் பெரிதும் துன்பமுற்றவளாய், குளிர்ந்த நீண்ட மையுண்ட கண்கள் கலங்கி நீர் சொரிய 'நானும் உம்முடன் வருகின்றேன்' என்று கூறுகின்றாய்.

பாலை நிலத்தில், வேனிற்காலத்தில், இற்றி மரத்தின் நிலம் தோயா நீண்ட விழுதுகள் தொங்க, அவற்றின்மீது மேல்காற்று வீசும்போதெல்லாம், ஊஞ்சல் கயிறு ஆடுவதுபோல அசைந்து, மரத்தினடியில் தூங்குகின்ற பெண்யானையை வருடும். அத்தகைய பாலை வழியில் என்னோடு வருதற்கு நீ வல்லமை யுடையவளோ?

கருத்து

பாலை நில வழியில் உன்னால் நடக்க இயலாது; ஆதலின், உன் எண்ணத்தைக் கைவிடு.

விளக்கம்

'நீ செல்வத்தில் திளைத்து வாழ்ந்தவள்; பாலைநிலக் கொடுமைகளை நீ அறியாய்! அதனால்தான் என்னுடன் வருவதாய்க் கூறுகிறாய். இற்றி மரத்தின் நிழலில் உறங்கும் பெண்யானையின் உடலை, அம்மரத்தின் நிலந்தோயா விழுது காற்றில் அசைந்து வருடும். இத்தகைய கொடிய வழியில் உன்னால் வர இயலாது' எனத் தலைவன் தலைவியிடம் கூறுகிறான்.

குறிப்பு

கடமை காரணமாய் ஆடவர் பிரிகையில் காதல் மகளிர் உடன் சென்றால் கடமை இனிது முடிதற்கு இடையூறாகும் என்று அந்நாளைய அறநூல்கள்

கருதி உடன் செல்லுதலை விலக்கியது. எனினும், காதல் மிகுதியால் விதியையும் மீறித் தன்னை உடன் அழைத்துச் செல்லுமாறு தலைவனைத் தலைவி வேண்டுகிறாள்.

சொற்பொருள்

1. புறவு - புறா; பேடை - பெண்புறா.
2. காமர் - விருப்புறும் அழகு.
3. புலம்பு - தனிமை; புன்கண் - துன்பம்.
4. ஆற்றேன் - பொறேன்.
5. பைதல கலுழ - வருத்தமுற்றுக் கலங்க.
6. என்றி - என்கிறாய்.
7. நெடுநகர் - நீண்ட மாளிகை.
8. யாய் - தாய்; மடவை - இளமை வாய்ந்தோய்!; முனாஅது - வெறுப்பின்றி.
9. இற்றி - இற்றி மரம்; தோயா - நிலம் தோயாத; நெடுவீழ் - நீண்ட விழுது.
10. ஊசலின் வழிநார் - ஊஞ்சல் கயிறு ஆடுதல்போல; கோடை - மேல் காற்று; தூக்குதொறும் - வீசும் போதெல்லாம்.
11. துஞ்சு பிடி - தூங்குகின்ற பெண்யானை; வருடும் - தடவும்; அத்தம் - வழி.
12. வல்லை ஆகுதல் - வல்லமை கொண்டவள்; ஒல்லுமோ - பொருந் துமோ?

தலைவி கூற்று

கலித்தொகை 20 **பாலை பாடிய பெருங்கடுங்கோ**

திணை : பாலை

கூற்று

பிரிவுணர்த்திய தலைமகற்குத் தலைமகள், 'எம்மையும் உடன் கொண்டு சென்மின் என்றாட்கு, அவன் கானின் கடுமையும் தலைமகள் மென்மையும் கூறுவது கேட்ட தலைமகள், நாளது சின்மையும் இளமையது அருமையும் கூறி, எம்மையும் உடன்கொண்டு சென்மின்' என்றது.

கூற்று விளக்கம்

பிரிவுபற்றிக் கூறிய தலைவனிடம் தலைவி தன்னையும் உடனழைத்துச் செல்லுமாறு கூறினாள். தலைவன் காட்டின் கடுமையையும் தலைவியின் மென்மையையும் கூறினான். அது கேட்ட தலைவி, வாழ்நாள் சிலவாயிருப் பதையும் இளமையின் நிலையாமையையும் கூறித் தன்னையும் உடன் அழைத்துச் செல்லுமாறு கூறியது.

தரவு

பல்வளம் பகர்புஊட்டும் பயன்நிலம் பைதுஅறச்
செல்கதிர் ஞாயிறு செயிர்சினம் சொரிதலின்,
தணிவுஇல்வெங் கோடைக்குத் தண்நபந்து அணிகொள்ளும்
பிணிதெறல் உயக்கத்த பெருங்களிற் றினம்தாங்கும்
மணிதிகழ் விறல்மலை வெம்ப, மண்பகத்
துணிகயம் துகள்பட்ட தூங்குஅழல் வெஞ்சுரம் –

தாழிசை

கிளிபுரை கிளவியாய்! 'நின்அடிக்கு எளியவோ?
தளிஉறுபு அறியாவே, காடு?'எனக் கூறுவீர்!
வளியினும் வரைநில்லா வாழும்நாள், நும்ஆகத்து,
அளிஎன, உடையேன்யான் அவலங்கொண்டு,அழிவலோ?

'ஊறுநீர் அமிழ்துஏய்க்கும் எயிற்றாய்!நீ உணல்வேட்பின்,
ஆறுநீர் இல்'என, அறன்நோக்கிக் கூறுவீர்!
யாறுநீர் கழிந்தன்ன இளமை,நும் நெஞ்சுஎன்னும்
தேறுநீர், உடையேன்யான்; தெருமந்துஊங்கு ஒழிவலோ?

'மாண்எழில் வேய்வென்ற தோளாய்!நீ வரின்,தாங்கும்
மாண்நிழல் இல,ஆண்டை மரம்'எனக் கூறுவீர்!
நீள்நிழல் தளிர்போல நிறன்ஊழ்த்தல் அறிவேன்;நும்
தாள்நிழல்கை விட்டுயான் தவிர்தலைச் சூழ்வலோ?

எனவாங்கு–

சுரிதகம்

'அணைஅரும் வெம்மைய காடு'எனக் கூறுவீர்!
கணைகழி கல்லாத கல்பிறங்கு ஆரிடைப்
பணைஎருத்து எழில்ஏற்றின் பின்னர்ப்
பிணையும் காணிரோ? பிரியுமோ, அவையே?

தெளிவுரை

"பல வளங்களையும் விளைவித்துக் கொடுத்து, எல்லார்க்கும் உணவளிக்கும் பயன்மிக்க நிலத்தின் பசுமை அழியும்படியாய்ச் சூரியன் தன் கொதிக்கும் கதிர்களால் சுட்டெரிக்கிறது. கோடை வெப்பம் தணியாததால், குளிர்ச்சியை விரும்பி, பசியால் வருந்தியுள்ள பெரிய யானைக்கூட்டம் மலையை அடைகிறது. ஆனால், மலையும் ஞாயிற்றின் வெம்மையால் வெம்பி, மண்பிளப்புடன் காட்சியளிக்கிறது. தெளிந்த நீர்நிலைகளும் நீர் வற்றிப் புழுதிபட்டிருக்கின்றன. நெருப்பே தூங்குவது போன்று பாலைநில வழிகள் காட்சியளிக்கின்றன. மழை என்பதையே அறியாத காடு அது.

"கிளிபோலும் மழலைப்பேச்சினைக் கொண்டோய்! அவ் வழியே மென்மை மிக்க உன் பாதங்களால் நடக்க இயலாது என்று தலைவ! நீ கூறுகின்றாய். காற்றைப்போல் ஓர் எல்லைக்குள் நில்லாதது வாழ்வு. உன் மார்பகத்தையே அடைக்கலமாய்க் கொண்டவளாகிய நான் உன்னைப் பிரிந்து துன்பங்கொண்டு அழிவேனா?

"அமிழ்தூறும் இதழ்களுடன் அழகூட்டும் பல்வரிசை பெற்றுத் திகழ்பவளே! செல்லும் வழியில் குடிப்பதற்குத் தண்ணீர் கிட்டாது என்று அற நெஞ்சம் காரணமாய்த் தலைவ! நீ கூறுகின்றாய். ஆற்றுநீர் ஓடியது ஓடியதுதான்; மீண்டும் வாராது. அதுபோலச் சென்ற இளமையும் திரும்பி வாராது. உன் நெஞ்சத்தையே தெளிந்த நீராய்க் கொண்டிருப்பவள் நான். அப்படிப்பட்ட நான் உம்மைப் பிரிந்து கவலையால் அழிவேனா?"

" 'மூங்கிலை வென்ற பெரிய அழகுத் தோளினைக் கொண்டவளே! நீ என்னுடன் வந்தால் வெயிலில் தங்க நிழல் கொடுக்க ஒரு மரங்கூட இல்லை' என்று தலைவ! நீ கூறுகின்றாய். ஆனால், என்னை விட்டு நீ பிரிந்தால் அடர்ந்த நிழலில் உள்ள செடியின் தளிர்போல என் அழகின் நிறம் மாறிவிடும். உன் தாள் நிழல் எனக்குப் பேரருள் புரியும் தன்மையது என்பதை அறிந்தவளாகிய நான் உன்னை விட்டு அகல நினைக்கவும் மாட்டேன்.

"தலைவ! நீர் செல்லும் காட்டினை நான் நெருங்கிடவும் இயலாது என்று கூறுகின்றீர். எய்யும் அம்புகள் மேலே செல்லாதவாறு கற்கள் குவிந்து கிடக்கும் அக்காட்டில், பருத்த கழுத்தினைக் கொண்ட அழகிய கலைமானின் பின்னால் பெண் மான் சேர்ந்தே செல்வதைப் பார்த்திருப்பாய்! அவை என்றேனும் பிரிந்ததுண்டா? இணைந்தே இருக்கும். அதனை நீ அறிவாய் அன்றோ?"

கருத்து

என்றும் பிரியாது இணைந்திருக்கும் என்னையும் உடன் அழைத்துச் செல்லுங்கள்.

விளக்கம்

"தலைவ! 'காடு கடுமையானது; அக்காட்டுவழியே உன்னால் நடக்க இயலாது; அதனால் வாராதே என்கிறீர்! ஆனால், உம் மார்பகத்தை அடைக்கலமாய்க் கொண்டிருப்பவள் நான். அம் மார்பகத்தைப் பிரிந்து என்னால் இருக்க இயலாது.

காட்டில் குடிக்க நீரே கிட்டாது; அதனால் வாராதே என்கிறீர். ஆனால், உமது நெஞ்சத்தையே தெளிந்த நீராய்க் கொண்டிருக்கும் நான் அந்த நீரைவிட்டு நீங்கியிருக்க இயலாது.

காட்டில் தங்குவதற்கு நிழலேதும் இல்லை; அதனால் வாராதே என்கிறீர்! ஆனால், உம் கால்அடி நிழலே எனக்குப் பேரருள் புரியக் கூடியது என்று கருதுபவள் நான். அந்த அடியினைப் பிரிந்து என்னால் இருக்க இயலாது" என்று தலைவி, தலைவனிடம் கூறித் தன்னையும் பயணத்தில் உடனழைத்துச் செல்லுமாறு கூறுகிறாள்.

சொற்பொருள்

1. பகர்பு ஊட்டும் - இதோ என்று சொல்லிக் கொடுக்கும்; பைது - பசுமை; அற - நீங்க.
2. செயிர் சினம் - மிக்க சினம். செயிர், சினம் ஆகிய இரண்டும் ஒரே பொருளன.
3. தணிவுஇல் - குறைதல் இல்லாத; வெம்கோடை - வெம்மையான கோடை; தண்நயந்து - குளிர்ச்சியை விரும்பி.

4. தெறல் - துன்புறுத்தல்; உயக்கம் - துன்பம்.
5. விறல் - பெருமை; பக - பிளவுபட.
6. துணிகயம் - தெளிந்த நீரினைக் கொண்ட நீர்நிலை; தூங்குஅழல் - மிக்க வெப்பம்.
8. தளி - மழைத்துளி; உறுபுஅறியா - பெய்தலை அறியாத.
9. வரைநில்லா - எல்லைக்குள் நில்லாத.
10. அளி - அன்பு, அருள்; அவலம் - துன்பம்.
11. ஏய்க்கும் - ஒக்கும்; எயிற்றாய் - பற்களைக் கொண்டவளே; வேட்பின் - விரும்பினால்.
12. ஆறுநீர் இல - வழியில் தண்ணீர் இல்லை.
14. தேறுநீர் - தெளிந்த நீர்; தெருமந்து - கவலையால்; ஒழிவலோ? - வருந்தியிருப்பேனோ?
15. வேய் - மூங்கில்.
16. ஆண்டை - அவ்விடத்தில்.
17. நிறன் - நிறம்; ஊழ்த்தல் - குறைதல்.
18. சூழ்வலோ? - ஆராய்வேனோ; நினைப்பேனோ.
20. அணைஅரும் - சேர்வதற்கு அரிய.
21. கணை - அம்பு; கழிகல்லாத - மேற்கொண்டு செல்லாத; கல்பிறங்கு - மலை தோன்றுகின்ற.
22. பணை எருத்து - பெரிய கழுத்து; ஏறு - ஆண்மான்.
23. பிணை - பெண்மான்.

தலைவி கூற்று

கலித்தொகை 23 — **பாலை பாடிய பெருங்கடுங்கோ**

திணை : பாலை

கூற்று

பிரிவுணர்த்தப்பட்டு ஆற்றாளாய தலைமகள், 'எம்மையும் உடன் கொண்டு சென்மின்' என்றாட்கு, உடன்படாது அவன் பிரியலுறத் தனது இறந்துபாடு தோன்றக் கூறியது.

கூற்று விளக்கம்

தலைவனால் பிரிவுணர்த்தப்பட்ட தலைவி தன்னையும் உடனழைத்துச் செல்லுமாறு கூறினாள். தலைவன் அதற்கு உடன்படவில்லை; தலைவி, நீ பிரிந்தால், நான் இறந்துபடுவன் என்பது தோன்றக் கூறியது.

தரவு

இலங்குஒளி மருப்பின் கைம்மா உளம்புநர்,
புலம்கடி கவணையின், பூஞ்சினை உதிர்க்கும்
விலங்குமலை வெம்பிய போக்கரு வெஞ்சுரம்
தனியே இறப்ப, யான்ஒழிந்து இருத்தல்
நகுதற்கு ஒன்று,இவ் அழுங்கல் ஊர்க்கே;
இனி யான் –
உண்ணலும் உண்ணேன்; வாழலும் வாழேன்.

தாழிசை

தோள்நலம் உண்டு துறக்கப் பட்டோர்
வேண்நீ ருண்ட குடைஒ ரன்னர்.

நல்குநர் புரிந்து நலன்உணப் பட்டோர்
அல்குநர் போகிய ஊரோ ரன்னர்.

கூடினர் புரிந்து குணன்உணப் பட்டோர்
சூடினர் இட்ட பூவோ ரன்னர்

எனவாங்கு–

சுரிதகம்

யானும் நின்னகத்து அனையேன்; ஆனாது,
கொலைவெங் கொள்கையொடு நாய்அகப் படுப்ப,
வலைவர்க்கு அமர்ந்த மடமான் போல,
நின்னாங்கு வருஉம்என் நெஞ்சினை
என்னாங்கு வாராது ஓம்பினை கொண்மே.

தெளிவுரை

“ஒளி பொருந்திய தந்தங்களைக் கொண்ட யானையை விரட்டக் கானவர் கவண் கொண்டு வீசும் கல், பூக்களைக் கொண்ட கொம்பில் பட்டு மலர்களை உதிர்க்கும். அத்தகைய வளம் மிக்கதாயிருந்த மலைவழி, இப்போது வெயிலால் வெம்பிச் செல்லுதற்கரியதாய் இருக்கிறது. அத்தகைய கொடுமையான வழியில் நீ தனியே செல்வதையும் நான் உன்னைப் பிரிந்து இங்கேயே இருப்பதையும் காணும் இவ்வூரார் சிரிப்பர்.

"நீ பிரிந்து சென்றால் நான் உண்ணவும் மாட்டேன்; உயிரோ டிருக்கவும் மாட்டேன்.

"பெண் ஒருத்தியின் தோள்நலத்தை அனுபவித்த கணவன், அவளைக் கைவிடுவானேயானால் அவள், பதநீரைக் குடிப்ப தற்குப் பயன்படுத்தப்பட்டு வீசியெறியப்பட்ட பனங்குடையைப் போன்றவள் ஆவாள்.'

"உளமார விரும்பி இன்பம் தந்தருளிய கணவன், அவளை விட்டு அகலுவானேயாயின் அவள், குடியிருந்தோர் நீங்கிய பாழடைந்த ஊரினை ஒப்பவள் ஆவாள்.

"தன்னோடு அன்புடன் கூடியிருந்து தன் பெண்மைநலத்தை அனுபவித்த பின் கணவனால் கைவிடப்படுபவள், பெண்களால் தம் கூந்தலில் சூடப்பட்டு, சூடியிருந்த பின் வீசியெறியப்படும் கசங்கிய பூவினை ஒப்பவள் ஆவாள்.

"பனங்குடையும், பாழடைந்த ஊரும், கசங்கிய பூவும்போல நானும் உனக்குப் பயன்படாதவள் ஆனேன்.

"கொலைவெறியோடு சென்ற நாய்கட்கு அகப்படாமல் ஓடிய மான், வேடனின் வலையில் சிக்கிக்கொண்டு தவித்திடுவது போல, என் நெஞ்சம் எனக்கு அகப்படாமல் உன்னால் கைப்பற்றப்பட்டு உன் பின்னாலேயே வந்துகொண்டிருக்கிறது. அதனைக் காப்பது உன் கடமை" என்று கூறி, தன்னை உடன் அழைத்துச் செல்லுமாறு தலைவனிடம் தலைவி வேண்டினாள்.

கருத்து

'உனக்கு மனைவியாய் இருந்து இன்பமளித்த நான், நீ பிரிந்தால் பயன்படாத பனங்குடை ஓலையாவேன்; பாழடைந்த ஊராவேன்; மகளிர் சூடிக் கழித்த பூவாவேன். என் உயிர் உன் பின்னாலேயே வந்துகொண்டிருக் கிறது; அதைக் காப்பாற்றுவது உன் கடமை.'

குறிப்பு

வேனிற்காலத்தில் பனை மரத்திலூறும் பதநீரைக் குடிப்பதற்குப் பயன்படும் பனையோலை குடைபோலக் குழிவாய் அமைக்கப் பட்டிருக்கும். குடிப்போர் பதநீரை அவ்வோலைக் குடையில் வாங்கி

அருந்துவர்; குடித்து முடிந்ததும் அதனை வீசிவிடுவர். குடைவுக்குள் பதநீர் இருக்கும்போது அதனை மிகவும் எச்சரிக்கையோடு பிடித்திருப்பர்; அதனுள் இருந்த பதநீரைக் குடித்து முடித்ததும் அதனை வேகமாய்த் தொலைவில் வீசி எறிவர்.

சொற்பொருள்

1. மருப்பு - யானைத்தந்தம்; கைம்மா - கையினைக் கொண்ட விலங்கு - யானை.
2. கடி - காவல்; கவணை - கல்லெறி கருவி.
3. போக்கரு - செல்வதற்கு அரிய.
4. ஒழிந்திருத்தல் - தனியே இருத்தல்.
5. நகுதற்கு ஒன்று - சிரிப்பிற்கு இடமானது; அழுங்கல் - இரங்கல்.
8. வேண்நீர் - வேனில் நீர், பதநீர்; குடை - பனையோலையால் செய்யப் பெற்ற ஒரு சிறு குடைவு.
9. ஓரன்னர் - போன்றவர், ஒப்பவர்.
10. நல்குநர் - மனம் விரும்பி அருளிய கணவர்.
11. அல்குநர் - தங்கி வாழ்வோர்.
12. கூடினர் - மனம் விரும்பிக் கூடின கணவர்.
14. ஆனாது - அடங்கியிராது.
16. வலைவர் - வலை விரிக்கும் வேடர்; அமர்ந்த - விரும்பிய.
18. நின்ஆங்கு - உன்னிடம்.
19. கொண்மே - பாதுகாத்துக்கொள்.

தலைவி பிரிவுக்கு உடன்படுதல்.

தோழி கூற்று

ஐந்திணை எழுபது 29 — **மூவாதியார்**

திணை : பாலை

கூற்று

தலைமகன் செலவினைத் தலைமகட்குத் தோழி உணர்த்தியது.

கூற்று விளக்கம்

தலைவன் பொருள் ஈட்டுவதற்காகப் பிரிந்து செல்லவிருப்பதைத் தலைவியிடம் தோழி உரைப்பது.

எழுத்துடைக் கல்நிரைக்க வாயில் விழுத்தொடை
அம்மா(று) அலைக்கும் சுரநிரைத்(து) அம்மா!
பெருந்தகு தாளாண்மைக்(கு) ஏற்க அரும்பொருள்
ஆகுமவர் காதல் அவா.

தெளிவுரை

பெருமையும் தகுதியும் கொண்ட நம் தலைவர் தம் முயற்சிக்கு ஏற்றவாறு அரிய பொருள் ஈட்டிவர மிகவும் விரும்புகிறார். அதற்காக எழுத்தினைக் கொண்ட நடுகற்கள் வரிசையாய் அமைக்கப்பட்டிருப்பதும், ஆறலை கள்வர்கள் மக்களைத் துன்புறுத்துவதற்கு இடமுமான பாலைநில வழியில் செல்லக் கருதியுள்ளார்.

கருத்து

தலைவர் பொருள் ஈட்டிவரப் பிரிந்து செல்ல முடிவு செய்துள்ளார்.

சொற்பொருள்

1. எழுத்து உடை - பெயர் முதலியன குறிக்கப்பெற்ற; கல் - நடுகல்; நிரைக்க - வரிசையாய் அமைப்பதற்கு; வாயில் - காரணமாகிய; விழுத் தொடை - சிறப்பாய் அம்பினைத் தொடுக்கும் தொடையாலே.
2. அம்மாறு - பழமையான தம் பகைவர்களை; அலைக்கும் - வருத்தும்.
3. பெருந்தகு - பெருமையும் தகுதியும்; தாளாண்மை - முயற்சி.
4. காதல் அவா- மிக்க விருப்பம்.

தோழி கூற்று

திணைமாலை நூற்றைம்பது 82 **கணிமேதாவியார்**

திணை : பாலை

கூற்று

தலைமகனது செலவுக்குறிப்பறிந்து ஆற்றாளாய தலைமகளைத் தோழி உலகத்தினது இயற்கை கூறி ஆற்றி உடன்படுவித்தது.

கூற்று விளக்கம்

தலைவனது செலவுக்குறிப்பறிந்து தலைவி பெரிதும் வருந்தியிருந்தாள். ஆடவர் பொருள் தேட வேண்டுவது உலக நியதி என்று கூறி, தோழி அவளைத் தேற்றித் தலைவன் செல்லுதற்கு உடன்படச் செய்தது.

ஆண்கடனாம் ஆற்றை ஆயுங்கால் ஆடவர்க்குப்
பூண்கடனாப் போற்றிப் புரிந்தமையால் – பூண்கடனாச்
செய்பொருட்குச் செல்வரால் சின்மொழி! நீசிறிது
நைபொருட்கண் செல்லாமை நன்று.

தெளிவுரை

"சுருங்கப் பேசும் இனிய சொற்களைக் கொண்ட தலைவியே! ஆண்களுக்குரிய கடமைகளை ஆராய்ந்த முன்னோர், பொருள் தேடி வருதல் அவர் கடமை என்று முடிவு செய்துள்ளனர். அக் கடமையின்படி நம் தலைவர் பொருள் தேடச் செல்கிறார். ஆதலால், நீ சிறிது காலம் அவர் பிரிவை ஆற்றியிருப்பது நன்று" எனத் தோழி தலைவியிடம் கூறினாள்.

கருத்து

பொருள் தேடுதல் ஆடவர் கடமை; ஆகவே, அவர் பிரிந்து செல்ல உடன்படு!

சொற்பொருள்

1. கடன் - கடமை; ஆற்றை - நெறியினை.
2. பூண்கடனா - மேற்கொள்ள வேண்டிய கடமையாய்; போற்றி - (பொருள் தேடுதலைப் பெரியோர்) நெறியாய்; புரிந்தமையால் - அமைத்தமையினால்; பூண்கடன் - (அவ் ஆண்மக்கள்) மேற்கொள்ள வேண்டிய கடமை.
3. செய்பொருட்கு - தேட வேண்டிய பொருளுக்கு; செல்வர் - செல்கின்றனர், செல்வர்; சின்மொழி - சிலவாகிய இனிய மொழிகளைக் கொண்டவளே!
4. நைபொருட்கண் - பிரிவால் வருந்துகின்ற வகையில்; செல்லாமை - செல்லாது (ஆற்றியிருத்தல்).

தோழி கூற்று

நற்றிணை 229 **ஆசிரியர் பெயரை அறிய இயலவில்லை**

திணை : பாலை

கூற்று

தலைமகனால் பிரிவு உணர்த்தப்பட்ட தோழி, தலைமகளை ஆற்றுவித்துச் செல்ல உடன்பட்டது.

கூற்று விளக்கம்

தலைவன் பிரியக் கருதிய செய்தியைத் தலைவியிடம் தோழி பக்குவமாய்ச் சொல்லி அவளை அதற்கு இசைய வைத்த பின்னர், தலைவனிடம் அவன் செலவுக்குத் தலைவி உடன்பட்டுக் கூறியதாய்ச் சொல்லியது.

சேறும், சேறும் என்றலின் பலபுலந்து,
சென்மின் என்றல் யான்அஞ் சுவலே;
செல்லா தீம்எனச் செப்பின், பல்லோர்
நிறத்தெறி புன்சொலின் திறத்துஅஞ் சுவலே;
அதனால் சென்மின்; சென்றுவினை முடிமின் சென்றாங்கு,
அவண்நீ டாதல் ஓம்புமின்; யாமத்து,
இழைஅணி ஆகம் வடுக்கொள முயங்கி,
உழையீர் ஆகவும் பனிப்போள் தமியே
குழைவான் கண்ணிடத்து ஈண்டித் தண்ணெனு,
ஆடிய இளமழைப் பின்றை,
வாடையும் கண்டிரோ, வந்துநின் றதுவே.

தெளிவுரை

"வினை காரணமாய்ப் 'பிரிந்து செல்வேன், செல்வேன்' என்று பல முறை கூறுவீர். அதற்கு மறுமொழியாய்த் தலைவியின் துயரை நினைந்து, 'செல்லுங்கள்' என்று கூறவும் அஞ்சுகிறேன். 'செல்லாதிருங்கள்' என்று கூறினால், மார்பில் தைக்கும் அம்பு போன்று பலரும் கூறும் கடுஞ்சொற்கள் காரணமாய்ப் பழி நேருமோ என்று அவ்வாறு கூறவும் அஞ்சுகிறேன். அதனால், 'நீங்கள் செல்லுங்கள்; கருதிய செயலை முடியுங்கள்; சென்ற விடத்தில் நீண்ட நாள் தங்காது இருக்கும்வண்ணம் செயற்

படுங்கள். இரவின் நடு யாமத்தில் கலனணிந்த மார்பில் தழும்பு பட முயங்கியவராய் நீங்கள் அருகிலிருந்தாலும் நடுங்கும் இயல்பினவள், தலைவி. இப்போது அகன்ற இடந்தோறும் பரவிச் செறிந்து குளிர்ச்சி தரும் மழை பெய்கிறது; அம் மழையினைத் தொடர்ந்து வாடையும் வந்து வீசும். அஃது இவளைத் தனித்து வருந்தச்செய்யும். ஆதலின், ஆராய்ந்து செய்யத் தகுவன செய்யுங்கள்" என்று தோழி, தலைவனை நோக்கிக் கூறினாள்.

கருத்து

'நும் பணியொன்றே கருதுகின்றீர்; அங்ஙனமே செல்லுக.'

விளக்கம்

"தலைவ! நீயோ செல்ல வேண்டும் எனப் பலமுறையும் கூறு கின்றாய். தலைவியின் துயரை நினைந்து 'செல்லும்' என்று சொல்லவும் அஞ்சுகிறேன். 'செல்லாதே' என்று சொன்னால் கடமையைச் செய்யத் தடையாய் இருந்தேன் என்று பலரும் பழித்துரைப்பரே என்றும் அஞ்சுகிறேன். இனி என் செய்வது? செல்க; சென்று செயலை முடித்ததும் அங்குத் தங்கிடாது உடனே திரும்புக. முயங்கி உடனிருந்தாய் ஆயினும் ஆற்றாது நடுங்குபவளாகிய தலைவி எங்ஙனம் பிரிந்து தனித்திருப்பாள்?" என்று தோழி தலைவனிடம் கூறினாள். தான் இவ்வாறு கூறி யதைத் தலைவியிடம் சொல்லி அவளைத் தலைவன் பிரிவிற்கு உடன்படுமாறும் செய்கிறாள்.

சொற்பொருள்

1. சேறும் - செல்வேன்; புலந்து - மனம் வேறுபட்டு.
2. சென்மின் - செல்க; அஞ்சுவல் - அஞ்சுகிறேன்.
3. செல்லாதீம் - செல்லற்க; செப்பின் - கூறினால்.
4. நிறம் - மார்பு; எறி - தைக்கும் அம்புபோல; புன்சொல் - கடுஞ்சொல்.
5. வினை - செயல்.
6. அவண் - சென்ற அவ்விடத்தில்; நீடாதல் - நீண்டு தங்குதல்.
7. ஆகம் - மார்பு; வடுக்கொள - தழும்பு ஏற்பட; முயங்கி - தழுவி.
8. உழையீர் ஆகவும் - பக்கத்திலே இருந்தீராயினும்; பனிப்போள் - நடுங்குபவள்; தமியே - தனியே.

9. கண்ணிடத்து - அகன்ற இடத்தில்; ஈண்டி - செறிந்து; தண்ணென - குளிர்ந்து.
10. இளமழைப் பின்றை - மழை பெய்த பின்னர்.
11. வாடை - வாடைக்காற்று.

தோழி கூற்று

நற்றிணை 266 **கச்சிப்பேட்டு இளந்தச்சனார்**

திணை : முல்லை

கூற்று

தலைமகனைத் தோழி செலவு உடன்பட்டது.

கூற்று விளக்கம்

தலைவன் பொருள்வயிற்பிரியக் கருதியதறிந்த தோழி, அவனை நெருங்கி, தாம் அவனது செலவுக்குடன்பட்டு ஆற்றியிருப்பதாய்க் கூறி, அவனைக் கவலையற்றுச் சென்று வருமாறு உறுதிமொழி கூறுவது.

கொல்லைக் கோவலர் குறும்புனம் சேர்ந்த
குறுங்கால் குரவின் குவிஇணர் வான்பூ
ஆடுடை இடைமகன் சூடப் பூக்கும்
அகலுள் ஆங்கண் சீறூ ரேமே;
அதுவே சாலுவ காமம்; அன்றியும்,
எம்விட்டு அகறிர் ஆயின், கொன்ஒன்று
கூறுவல் வாழியர், ஐய! வேறுபட்டு
இரீஇய காலை இரியின்,
பெரிய அல்லவோ, பெரியவர் நிலையே!

தெளிவுரை

"தலைவ! நீ வாழ்க! முல்லை நிலத்திலே வாழ்பவர், இடையர். அவர்களுடைய குறுகிய புனங்களில் குறுகிய அடிமரத்தினைக் கொண்ட குரா மரங்களில் கொத்தாய் வெண்ணிறப் பூக்கள் பூத்திருக்கும். ஆடு மேய்க்கும் இடையர் அப்பூக்களைச் சூடி மகிழ்வர். அத்தகைய அகன்ற சிற்றூரிலே உன்னோடு கூடி உன் வீட்டிலிருந்து வாழ்தலே இப்போது எம் விருப்பம். இஃதல்லாமல் எம்மைவிட்டு நீ நீங்கும் கருத்துடையையாயின் நாங்கள் கூறுவது இன்னொன்றும் உண்டு. தலைவனைப் பிரிந்து

வேறாய்த் தங்க வேண்டிய காலத்து, நாங்கள் வருந்த வேண்டியவர்களாய் இருப்பினும், அதனைப் பொறுத்துக் கொள்ளுதலே பெருமைக்குரிய பண்பாகும். அதனால் உன் பிரிவினைத் தாங்கியிருப்போம்" என்று தோழி தலைவனின் பயணத்திற்கு உடன்பட்டுச் சொன்னாள்.

கருத்து

தலைவ! உன் பிரிவு இன்றியமையாதது என்பதால், நாங்கள் உன் பிரிவினை ஆற்றியிருப்போம்; நீ சென்று வருக.

விளக்கம்

"தலைவ! யாம் விரும்புவனவெல்லாம் உன்னோடு கூடி உன் ஊரில் உன் வீட்டிலிருந்து வாழ்வது ஒன்றேயாம். அதுவே எமக்குப் பொருந்தியது! இப்போது நீ எம்மைப் பிரிந்து செல்லக் கருதுகின்றாய்; உனக்கு ஒன்று கூறுவோம். பிரிதல் கூடாது; ஆயினும், பிரிவு இன்றியமையாதபோது அதனால் உண்டாகும் துன்பத்தைத் தாங்கியிருப்பதே எமக்குப் பெருமை. பெருங்குடியிற் பிறந்தவர் இயல்புகள் எக்காலத்தும் எவ்விடத்தும் பெருமையுடையனவாகவே இருக்கும். நாங்கள் ஆற்றியிருப்போம். நீ சென்று வருக!" என்று தோழி தலைவனிடம் கூறி, அவன் பயணத்துக்கு உடன்பட்டாள்.

சொற்பொருள்

1. கொல்லை - முல்லை நிலம்; குறும்புனம் - குறுகிய காடுகள்.
2. குறுங்கால் - குறுகிய அடிமரம்; குரவு - குரா மரம்; இணர் - பூங்கொத்து; வான் பூ - வெண்மையான பூ.
3. ஆடுடை - ஆடுகளைக் கொண்டிருக்கும்.
4. அகலுள் - அகன்ற இடம்; ஆங்கண் - அங்கே.
5. சாலுவ - பொருந்தியது; காமம் - விருப்பமுமாகும்.
6. அகறிர் ஆயின் - பிரிவீர் என்றால்.
7. கூறுவல் - சொல்லுவேன்; வேறுபட்டு - வேறுபட்ட சூழ்நிலையில்.
8. இரீஇய காலை - இருத்திய பொழுது; இரியின் - வருந்த வேண்டியவர் களாயிருப்பினும் (பொறுத்துக்கொள்வோம்).
9. பெரியவர் நிலை - பெருங்குடியில் பிறந்த பெருமக்கள் (இயல்பு); பெரிய அல்லவோ? - எவ்விடத்தும் எக்காலத்தும் பெருமை யுடையனவே.

தலைவி கூற்று

நற்றிணை 24 **கணக்காயனார்**

திணை : பாலை

கூற்று

பொருட்பிரிவுக்கு உடன்பட்ட தோழியைத் தலைமகள் உவந்து கூறியது.

கூற்று விளக்கம்

பொருள் ஈட்டும்பொருட்டுத் தலைவன் தலைவியைப் பிரிந்து சென்றதைத் தோழி நன்றெனக் கூறினாள். அது கேட்ட தலைவி கற்பொடு நின்று தோழியை நோக்கி உவந்து கூறியது.

பார்பக வீழ்ந்த வேருடை விழுக்கோட்டு
உடும்புஅடைந் தன்ன நெடும்பொரி விளவின்
ஆட்டுஒழி பந்தின், கோட்டுமூக்கு இறுபு,
கம்பளத்து அன்ன பைம்பயிர்த் தாஅம்
வெள்ளில் வல்சி வேற்றுநாட்டு ஆர்இடைச்
சேறும் நாம்எனச் சொல்லச் சேயிழை!
நன்றுஎனப் புரிந்தோய், நன்றுசெய் தனையே;
செயல்படு மனத்தர் செய்பொருட்கு
அகல்வர் ஆடவர்; அதுஅதன் பண்பே.

தெளிவுரை

“செவ்வையான அணிகலன்களை அணிந்துள்ள தோழியே! நிலம் பிளவுபடுமாறு கீழ்நோக்கிச் செல்லும் வேர்களையும், பெரிய கிளைகளையும், உடும்புகள் பொருந்தியிருத்தலைப் போன்று தோன்றும் பொரிந்த மரப்பட்டைகளையும் கொண்டது, நெடிய விளா மரம். பச்சைக் கம்பளத்தை விரித்தாற்போன்ற பசிய பயிரினிடையே ஆடப்பெறாமல் கிடக்கும் பந்துகள் போன்று விளாம்பழங்கள் கிளையிலிருந்து மூக்கு அற்று வீழ்ந்து கிடக்கும். அவ்விளாம்பழங்களையே உணவாய்க் கொள்ளும் வேற்று நாட்டு அரிய வழியில் நான் செல்லுவேன் என்று தலைவன் கூறினான். அது கேட்டு ‘நல்ல செயல்’ என்று விருப்பத்துடன் நீ உடன்பட்டுள்ளாய். நீ நன்றே

செய்துள்ளாய். ஆடவர் எப்போதும் செயல்படுவதில் ஆர்வ முள்ளவராய்ப் பொருளுக்காக அகலுதல் இயற்கையே. அவ்வாறு அகலும்போது மறுத்துக் கூறாமல் உடன்படுதலே சிறந்த பண்பு" எனத் தலைவி தோழியிடம் கூறினாள்.

கருத்து

தோழியே! பிரிவிற்கு நீ உடன்பட்டது பண்புடைச் செயலே!

விளக்கம்

தலைவன் பொருள் தேடி வரப் பிரியத் தான் உடன்பட்டதைத் தோழி தலைவியிடம் குறிப்பால் உணர்த்தினாள்; தலைவி வருந்துவளோ எனத் தோழி அஞ்சி நின்றாள். ஆனால், தலைவியோ, 'வினைமேற்கொண்டு பொருள் தேடச் செல்வதே ஆடவர்க்கு உயிராய் அமைவது. அதனை நன்கு தேர்ந்து நீ பிரிவுடன்பட்டது, பண்புடைச் செயலே' என்றாள்.

சொற்பொருள்

1. பார் பக - நிலம் பிளவுபடுமாறு; விழுக்கோடு - பெரிய மரக்கிளை.
2. உடும்பு - பல்லி வகையைச் சார்ந்த ஓர் உயிரினம்; அடைந்தன்ன - பொருந்தியிருத்தலைப் போன்று; நெடும் பொரி - மரத்தின் மேற்பட்டை; விளவு - விளா மரம்.
3. ஆட்டு - விளையாட்டு; கோட்டு - மரக்கிளை; மூக்கு இறுபு - மூக்கு அற்று வீழ்ந்து.
4. கம்பளம் - கம்பள விரிப்பு; பைம்பயிர் - பசிய பயிர்; தாஅம் - பரவிக் கிடக்கும்.
5. வெள்ளில் - விளாம்பழம்; வல்சி - உணவு; ஆர் இடை - பாலை வழி.
6. சேயிழை - செம்மையான அணிகலன் அணிந்துள்ள தோழி.
8. செயல்படு மனத்தர் - வினைமேற்செல்லும் ஆடவர்.
9. அகல்வர் - பிரிந்து செல்வர்.

தலைவன் பொருள்வயிற் பிரிந்து செல்லல்.

தலைவி கூற்று

குறுந்தொகை 207 **உறையனார்**

திணை : பாலை

கூற்று

செலவுக் குறிப்பறிந்து 'அவர் செல்வார்' என்று தோழி சொல்லக் கிழத்தி உரைத்தது.

கூற்று விளக்கம்

பிரிவைப்பற்றிச் சொன்னால் தலைவி பெரிதும் வேதனைப்படுவாள் எனக் கருதிய தலைவன், சொல்லாமலேயே சென்றுவிட்டான் என்பதனைத் தோழி தலைவியிடம் சொல்ல, தலைவி அதை முன்னரே தான் அறிந்திருப்பதைத் தோழியிடம் சொல்லியது.

'செப்பினம் செலினே செலவுஅரிது ஆகும்'என்று,
அத்த ஓமை அம்கவட்டு இருந்த
இனம்தீர் பருந்தின் புலம்புகொள் தெள்விளி
சுரம்செல் மாக்கட்கு உயவுத்துணை ஆகும்
கல்வரை அயலது தொல்வழங்கு சிறுநெறி,
நல்அடி பொறிப்பத் தாஅய்ச்
சென்றெனக் கேட்டநம் ஆர்வலர் பலரே.

தெளிவுரை

நம் தலைவர், நம்மிடம் சொல்லிச் செல்வதென்றால் பிரிவு தடைபடும் என்று கருதி, (சொல்லாமலேயே) பாலைநில வழியில் சென்றுவிட்டார். ஓமை மரத்தின் அழகிய கவடுபட்ட கிளையிலிருந்து, தன் இனத்தினின்றும் பிரிந்த பருந்து ஒன்று, தன் தனிமையை வெளிப்படுத்த ஒலித்த தெளிந்த ஒலி, அப் பாலைநில வழியிலே செல்லுகின்ற மக்களுக்கு அயர்வு நீக்கும் படியாய் அமைந்திருக்கும். கற்களைக் கொண்ட அம்மலை வழியில் தொன்று தொட்டு மக்கள் இயங்கிவரும் ஒற்றையடிப் பாதையில் தம் கால் சுவடு பதியுமாறு நம் தலைவர் விரைந்து சென்றார் என்று நம்மீது அன்பு கொண்டவர்கள் கூறினர்.

கருத்து

தலைவர் பிரிந்து சென்றதை நான் முன்னரே அறிவேன்.

விளக்கம்

“நம்பால் அன்பு கொண்டவர்கள் வந்து சொல்ல, நானும் முன்பே அறிந்துளேன். நீ இப்போது வந்து கூறுவதால் என்ன பயன்? எல்லாரையும்போல நீயும் அவர் கூறுவதைக் கேட்டுக் கொண்டிருந்தாயே அன்றி, அவரைச் செல்ல விடாது தடுக்க வில்லை” எனத் தோழியைத் தலைவி நொந்து கொண்டாள்.

சொற்பொருள்

1. செப்புதல் - சொல்லுதல்; செலவு - பயணம்.
2. அத்தம் - வழி; ஓமை - ஒரு வகை மரம்; அம் கவடு - அழகிய இரு பிரிவாய் அமைந்த கிளை.
3. புலம்பு - தனிமை; தெள்விளி - தெளிந்த ஒலி.
4. உயவுத் துணை - அயர்வு நீக்கும் துணை.
5. தொல்வழங்கு சிறுநெறி - தொன்றுதொட்டு மக்கள் இயங்கி வரும் குறுகிய வழி.
6. பொறிப்ப - காலடிச்சுவடு பதிய; தாஅய் - விரைந்து.
7. ஆர்வலர் - அன்பு கொண்டோர்.

தலைவி கூற்று

அகநானூறு 345 **குடவாயிற்கீரத்தனார்**

திணை : பாலை

கூற்று

தோழிக்குத் தலைமகள் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் பொருள்வயிற்பிரிந்து செல்ல எண்ணியதை அறிந்த தலைவி தானும் உடன் வருவதாய்த் தெரிவித்தாள். அதைக் கேட்ட தலைவன், சில நாள் கழிந்த பின் செல்லலாம் என்று பொய்யுரைத்துத் தலைவி அறியாதபடி பிரிந்து சென்றான். அதனை அறிந்த தலைவி தோழியை நோக்கிக் கூறியது.

விசும்புதளி பொழிந்து வெம்மை நீங்கி,
தண்பதம் படுதல் செல்க!எனப் பல்மாண்
நாம்செல விழைந்தன மாக, ஓங்குபுகழ்க்
கான்அமர் செல்வி அருளலின், வெண்கால்,
பல்படைப் புரவி எய்திய தொல்இசை
நுணங்குநுண் பனுவல் புலவன் பாடிய
இளமழை தவழும் ஏழில் குன்றத்து,
கருங்கால் வேங்கைச் செம்பூம் பிணையல்
ஐதுஏந்து அல்குல் யாம்அணிந்து உவக்கும்
சில்நாள் கழிக! என்று முன்நாள்
நம்மொடு பொய்த்தனர் ஆயினும், தம்மொடு,
திருந்துவேல் இளையர் சுரும்புஉண மலைமார்,
மாமுறி ஈன்று மரக்கொம்பு அகைப்ப,
உறைகழிந்து உலந்த பின்றை, பொறைய
சிறுவெள் அருவித் துவலையின் மலர்ந்த
கருங்கால் நுணவின் பெருஞ்சினை வான்பூச்
செம்மணற் சிறுநெறி கம்மென வரிப்ப,
காடுகவின் பெறுக– தோழி– ஆடுவளிக்கு
ஒல்குநிலை இற்றி ஒருதனி நெடுவீழ்
கல்கண் சீக்கும் அத்தம்,
அல்குவெயில் நீழல் அசைந்தனர் செலவே!

தெளிவுரை

தோழி! வானம் மழைத்துளிகளைப் பொழிய, வெப்பம் நீங்கிக் குளிர்ச்சி பொருந்திய நிலையில், 'எம்மையும் உடன் அழைத்துச் செல்க' என்று தலைவனிடம் பல முறையும் நாம் விரும்பி வேண்டினோம். மேகங்கள் தவழும் ஏழில் குன்றம் புகழ்வாய்ந்த கொற்றவை அருள் கூர்ந்து அளித்தலின் வெண்மையான கால்களைக் கொண்ட குதிரைகளையும் படைகள் பலவற்றையும் பெற்றது; புகழ் வாய்ந்த பாடல்களை இயற்றிய புலவனால் பாடப்பெற்றது; அங்குள்ள கரிய அடியைக் கொண்ட வேங்கை மரத்தின் சிவந்த மலர்களாலான மாலையை அழகிய உயர்ந்த அல்குலில் நாம் அணிந்து மகிழ்கின்ற 'இப்பருவத்தின் சில காலம்

கழியட்டும், பிறகு செல்வோம்' என்று முன்பு நம்மிடம் பொய் கூறிய தலைவர் பிறகு தான் மட்டும் தனித்துச் சென்றுவிட்டார்.

ஆயினும், அசையும் காற்றுக்குத் தளரும் தன்மை வாய்ந்த இற்றி மரத்தின் தனித்து நீண்ட விழுதுகள் ஒன்றாகி அவர் செல்லும் மலைப்பாதையைத் தூய்மை செய்யட்டும். அவரும் வெயிலில் வருந்தாது நிழலில் தங்கி இளைப்பாறிச் செல்லட்டும். திருந்திய வேல் ஏந்தி அவருடன் சென்ற வீரர்களும் மகிழத் தக்கவாறு மரக் கொம்புகள் துளிர்க்கும்படி மழை பொழியட்டும். அதனால் குன்றுகளில் சிறிய வெள்ளிய அருவிகளின் நீர்த்துவலையினால் மலர்ச்சி பெற்ற, கருத்த அடியினைக் கொண்ட நுணா மரத்தின் பெருத்த கிளைகளில் பூத்த வெண்மையான பூக்கள், சிவப்பான மணலைக் கொண்ட சிறிய வழிகளில் 'கம்' என்று கமழ்ந்து உதிர்ந்து, காடு அழகு பெற்று விளங்கட்டும்" என்று தலைவி தோழியிடம் கூறினாள்.

கருத்து

தலைவர் நம்மையும் அழைத்துச் செல்வதாய்ப் பொய் கூறிப் பிறகு தனியே சென்றுவிட்டார். ஆயினும், அவர் செல்லும் வழி பயனுள்ளதாய் அமையட்டும்.

விளக்கம்

"தோழி! பன்முறை நாமும் தலைவருடன் செல்ல விழைந்தோம். 'சில நாள் கழியட்டும்' என்று நம்மிடம் பொய் கூறி விட்டுச் சென்று விட்டார். ஆயினும், அவர் செல்லும் சுர வழியில் வெயிலுக்கு நிழலில் தங்கிச் செல்லும் வகையில் காடு அழகு பெறட்டும்" என்று தலைவர் அருளற்றவராய்த் தன்னைப் பிரிந்து செல்லினும், தான் அவரிடம் அன்பு கொண்டவள் என்பதைத் தலைவி குறிப்பிடுகிறாள்.

சொற்பொருள்

1. விசும்பு - வானம்; தளி - நீர்த்துளி.
2. தண்பதம் படுதல் - குளிர்ந்த நிலைமை எய்துதல்; செல்க - எம்மையும் உடன்கொண்டு செல்க; பல்மாண் - நாம் பல முறையும்; விழைந்தனம் - உடன் செல்ல விரும்பினோம்.

4. கான்அமர் செல்வி - கொற்றவை (காட்டில் அமர்ந்துள்ள கடவுள்); வெண்கால் - வெண்மையான கால்.
5. பல்படை - பல படை; புரவி - குதிரை; தொல்இசை - பழமையான புகழ்.
6. நுணங்கு நுண் பனுவல் - மிக நுணுகிய செய்யுள்கள்.
7. ஏழில் - ஒரு குன்றம்.
8. செம்பூ - சிவந்த பூ; பிணையல் - மாலை.
9. ஐது ஏந்து - அழகியதாய் உயர்ந்துள்ள.
12. இளையர் - வீரர்; சுரும்பு - வண்டு; மலைமார் - தரித்துக்கொள்வதற்கு.
13. மாமுறி - சிறந்த தளிர்; அகைப்ப - தளிர்க்குமாறு.
14. உறை கழிந்து - மழை பெய்து; உலந்த பின்றை - நீங்கிய பின்பு; பொறைய - குன்றுகளிடத்துள்ள.
15. துவலை - நீர்த்துளி.
16. நுணா - நுணா மரம்; சினை - கிளை; வான்பூ - வெண்மையான பூ.
17. சிறுநெறி - சிறிய வழி; கம்மென - 'கம்' என்று மணக்குமாறு.
18. கவின் - அழகு; ஆடுவளி - அசையும் காற்று.
19. ஒல்குநிலை - தளர்ந்த நிலை; இற்றி - ஒருவகை மரம்; ஒருதனி - ஒன்றாகித் தனித்த; நெடுவீழ் - நீண்ட விழுது.
20. கல்கண் சீக்கும் - மலையின் இடத்தைத் துடைக்கும்; அத்தம் - வழி.
21. அல்குவெயில் - பொருந்திய வெயில்; அசைந்தனர் - தங்கிச் செல்வதற்கு.

தலைவி கூற்று

ஐந்திணை எழுபது 38 **மூவாதியார்**

திணை : பாலை

கூற்று

பிரிவுணர்த்திய தோழிக்குத் தலைமகள் உடன்படாது சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் பிரிந்து சென்றதை உணர்த்திய தோழியிடம், தலைவி உடன்பட மறுத்துச் சொல்லியது.

கோள்வல் கொடுவரி நல்வய மாக்குழூஉம்
தாள்வீ பதுக்கைய கானம் இறந்தார்கொல்
ஆள்வினையின் ஆற்ற அகன்றவா நன்றுணரா
மீளிகொள் மொய்ம்பி னவர்.

தெளிவுரை

தலைவி தோழியிடம், "தோழி! பாலைநில வழி, மான் முதலிய பிற விலங்குகளைக் கொல்லும் வலிமை மிக்க, வளைந்த வரிகளையும் நெற்றியினையும் கொண்ட புலிகள் கூடித் திரிவதும், பூக்கள் நிறைந்த அடிப்பகுதியினைக் கொண்ட புதர்கள் பொருந்தியதுமாகும். அவ்வழியே, வீரம் செறிந்த வலிமை மிக்க நம் தலைவர் தம் முயற்சி மேல் கொண்ட விருப்பத்தால், இங்குத் தங்குதலினால் ஏற்படும் நன்மையினையும் அறியாமல், நம்மைப் பிரிந்து சென்றுவிட்டாரோ" என்று வினவினாள்.

கருத்து

நம்மோடு கூடியிருக்கும் நன்மையை அறியாது, பொருள்மேல் உள்ள விருப்பத்தால் தலைவர் பிரிந்துவிட்டாரோ!

சொற்பொருள்

1. கோள்வல் - கொல்லுதலில் வல்ல; கொடுவரி - வளைந்த வரி; வய மா - வலிமையுள்ள புலி; குழூஉம் - கூடித் திரியும்.
2. தாள்வீ - பூக்கள் நிறைந்த அடிப்பாகத்தைக் கொண்ட; பதுக்கை - புதர்.
3. ஆள்வினை - முயற்சி; ஆற்ற - மிகுதியும் கொண்ட; அவா - விருப்பத் தினாலே; நன்றுணரா - இங்குள்ள நன்மையை அறியாமல்; அகன்று - பிரிந்து.
4. மீளி கொள் - வீரம் கொண்ட; மொய்ம்பினவர் - வலிமை மிக்கவர்.

தலைவி கூற்று

அகநானூறு 187 **மாமூலனார்**

திணை : பாலை

கூற்று

பிரிவு உணர்த்திய தோழிக்குத் தலைமகள் சொல்லியது.

கூற்று விளக்கம்

பொருளின்றி வாழ்வு சிறவாது எனக் கருதிய தலைவன் தான் அதனை ஈட்டி வாராதிருத்தலுக்கு வெட்கப்பட்டு, தன் தலைவியைப் பிரிந்து பாலையையும் கடந்து வேற்று நாட்டிற்குச் செல்லத் துணிந்தான். அதனை அறிந்து கூறிய தோழியிடம் தலைவி உரைத்தது.

தோள்புலம்பு அகலத் துஞ்சி, நம்மொடு
நாள்பல நீடிய கரந்துஉறை புணர்ச்சி
நாண்உடை மையின் நீங்கிச் சேய்நாட்டு
அரும்பொருள் வலித்த நெஞ்சமொடு ஏகி,
நம்உயர்வு உள்ளினர் காதலர்– கறுத்தோர்
தெம்முனை சிதைத்த, கடும்பரிப் புரவி,
வார்கழல் பொலிந்த வன்கண் மழவர்
பூந்தொடை விழவின் தலைநாள் அன்ன,
தருமணல் ஞெமிரிய திருநகர் முற்றம்
புலம்புறும் கொல்லோ– தோழி!– சேண்ஓங்கு
அலந்தலை ஞெமையத்து ஆள்இல் ஆங்கண்,
கல்சேர்பு இருந்த சில்குடிப் பாக்கத்து,
எல்விருந்து அயர, ஏமத்து அல்கி,
மனைஉறை கோழி அணல்தாழ்பு அன்ன,
கவைஒண் தளிர கருங்கால் யாஅத்து
வேனில் வெற்பின் கானம் காய,
முனைஎழுந்து ஓடிய கெடுநாட்டு ஆர்இடை,
பனைவெளிறு அருந்து பைங்கண் யானை
ஒண்சுடர் முதிரா இளங்கதிர் அமையத்துக்
கண்படு பாயல் கைஒடுங்கு அசைநிலை
வாள்வாய்ச் சுறவின் பனித்துறை நீந்தி,
நாள்வேட்டு எழுந்த நயன்இல் பரதவர்

வைகுகடல் அம்பியின் தோன்றும்
மைபடு மாமலை விலங்கிய சுரனே.

தெளிவுரை

"தோழி! நம் காதலர், நெடுநாள் களவுப் புணர்ச்சியாகவே நம்மைச் சந்தித்து, நமது தோளின் தனிமை நீங்குமாறு இரவு வேளைகளில் இங்குத் தங்கிக் கொண்டிருந்தார். இப்பொழுது, வாழ்க்கைக்குப் பொருள் இன்றியமையாதது ஆதலின், அதனைத் தேடாதிருக்கும் தமது செயலுக்கு வெட்கமுற்று, நம்மைப் பிரிந்து தொலைநாட்டுக்குச் செல்லும் மனத் துணிவோடு சென்றுள்ளார்.

"அவர் சென்ற பாலைநில வழியில் மலைகளும் காடுகளும் கோடை வெப்பத்தால் காய்ந்திருக்கும். காட்டில் யாமரங்கள் கருநிற அடிப்பாகத்தைக் கொண்டனவாய் நிற்கும். அவற்றின் பொலிவு பெற்ற தளிர்கள், கோழியின் கழுத்தில் தொங்கும் தாடியைப் போல் கவடுபட்டிருக்கும். அப்பகுதியில் உள்ள காட்டு அரண்களில் வாழ்ந்த மக்கள் நீரும் உணவும் கிட்டாத கோடைக் காலத்து வெம்மைக்கு அஞ்சிக் குடிபெயர்ந்து சென்றிருப்பர்.

"பாழான அந்த நாட்டின் நடத்தற்கரிய வழிகளில் திரியும் யானை தின்பதற்கு வேறொன்றும் கிட்டாமல், பனங்குருத்தைத் தின்னும். அதனுடைய கண்கள் பசலை பாய்ந்து தீராப் பசியைக் காட்டும். அந்த யானை இரவெல்லாம் கண் அயராது திரிந்து காலை நேரத்தில் இளஞாயிற்றின் எழுச்சியின்போது செயலொடுங்கி நின்றவாறு உறங்கும். அதன் உடல் அசைவு, வாள் போல் கூரிய பற்கள் கொண்ட சுறா மீன்கள் திரியும் கடலில், நெடுந் தொலைவு மீன் வேட்டைக்குப் புறப்படும் கருணையற்ற பரதவர்கள் ஏறும் தோணியைப் போலத் தோன்றும். மேகம் உலாவும் சாரல்களைக் கொண்ட பெரிய மலைகள் குறுக்கே அமைந்திருக்கும். அம்மலைகளைக் கடந்துதான் தலைவர் செல்ல வேண்டும்.

"அவர் செல்லும் வழியில் உயர்ந்து நிற்கும் ஞெமை மரங்களின் உச்சிப்பகுதி காய்ந்திருக்கும். அவ்விடங்களில் மக்கள்

இயக்கமும் இராது. மலையைச் சார்ந்த சில ஊர்களில் மக்கள் சிலரே வாழ்வர். தலைவர் அந்த ஊர்களைக் கடந்து செல்லும் போது, அவர்கள் அவருக்கு விருந்தளித்து, பாதுகாவலாய் இரவில் தங்குமாறு வேண்டுவர்.

"இவ்வாறு தலைவர் தொடர்ந்து அவ்வழியைக் கடந்து, நம் உயர்வைக் கருதிச் சென்றுள்ளார். அதனால், போர்க்களத்தில் சினந்தெழுந்த பகைவரை முறியடிக்கப் பயன்பட்ட குதிரைகளை யும், அஞ்சாமையினையும் கொண்டவராய், நீண்ட கழல்களை அணிந்த மழவர்கள் எடுக்கும் 'பூந்தொடை விழா' என்னும் விழாவின் முதல் நாளை ஒப்ப, புதுமணல் பரப்பப்பட்டிருக்கும் நம் வீட்டு முற்றம் அவர் இல்லாமையால் வெறிச்சோடி இருக்கிறது" என்று தலைவி தோழியிடம் கூறினாள்.

கருத்து

தலைவன் பொருளீட்ட மலைகளைக் கடந்து நெடுந்தொலைவு சென்றுள் ளான். அதனால் வீடு பொலிவிழந்து வெறிச்சோடி இருக்கிறது.

விளக்கம்

"தோழி! நம் காதலர் நம் தோள் தனிமை நீங்க நம்முடன் துயின்று பல நாள் களவுப் புணர்ச்சியை நீட்டித்து வந்தார். ஆடவருக்கு உயிராகிய வினையைச் செய்யாது இருத்தலுக்கு நாணம் கொண்டவராய் அரும்பொருள் ஈட்டும் துணிவுடன் தொலைதூர நாட்டிற்குச் சென்றுள்ளார். மேகம் பொருந்திய மலை குறுக்கிட்ட பாலை நிலத்தில் சிறு குடிசைகளைக் கொண்ட ஊர்களில் இரவில் விருந்து நுகரத் தங்கும் அவர், நம் இல்லத்தில் விருந்தோம்பி நல்லறம் செய்யும் உயர்ச்சியைக் கருதிப் பொருளீட்டலில் மேலும் ஊக்கம் கொண்டிருப்பார். அதனால் பொலிவு பெற்ற நம் மனையின் முற்றம் தனிமை யுறுமோ என்று அஞ்சுகிறேன்" என்று தலைவி தோழியிடம் கூறினாள்.

குறிப்பு

படைக்கலம் பயின்ற இளைய வீரரை அரங்கேற்றுவிக்கும் விழா, 'பூந்தொடை விழா' என்று வழங்கப்படும். (தொடை - அம்பு.)

சொற்பொருள்

1. புலம்பு - தனிமை; அகல - நீங்க; துஞ்சி - உறங்கி.
2. கரந்துறை புணர்ச்சி - களவுப் புணர்ச்சி.
3. சேய்நாடு - தொலை நாடு.
4. வலித்த - ஈட்டத் துணிந்த.
5. உயர்வு - உயர்ச்சி; கறுத்தோர் - சினந்தெழுந்த பகைவர்.
6. தெம்முனை - தெவ்முனை - பகைப்புலம்; கடும்பரி - விரைந்து செல்லும்.
7. வார்கழல் - நீண்ட கழல்; வன்கண்மை - அஞ்சாமை; மழவர் - வீரர்.
8. பூந்தொடை - ஒரு விழா; தலைநாள் - முதல் நாள்.
9. தருமணல் - கொண்டுவந்த மணல்; ஞெமிரிய - பரப்பிய; திருநகர் - அழகிய இல்லம்.
10. புலம்புறும் கொல்லோ? - தனிமை கொள்ளுமோ?; சேணோங்கு - நெடுந்தூரம் உயர்ந்த.
11. அலம்தலை - காய்ந்த உச்சியினைக் கொண்ட; ஞெமை - ஞெமை மரங்கள்; ஆள்இல் - ஆள் வழக்கற்ற.
12. கல் - மலை; சில்குடி - சில குடிகள்.
13. எல் - இரவு; ஏமத்து - பாதுகாவலாய்; அல்கி - தங்கி.
14. அணல் - தாடி; தாழ்பு - தொங்குகின்ற.
15. கவை - பிளவுபட்ட; கால் - அடிமரம்; யா - ஒரு வகை மரம்.
16. வெற்பு - மலை; கானம் - காடு.
17. முனை எழுந்து ஓடிய - காட்டு அரணிலுள்ளார் குடியெழுந்து நீங்கிவிட்ட; கெடுநாடு - பாழ்பட்ட நாடு.
18. பனைவெளிறு - பனங்குருத்து.
19. இளங்கதிர் அமையம் - இளங்காலைப் பொழுது.
20. கண்படுதல் - உறங்குதல்; கைஒடுங்குதல் - செயலொடுங்குதல்.
21. வாள்வாய் - வாள் போன்ற வாய்; சுறா - சுறா மீன்.
22. வேட்டு - வேட்டை.
23. அம்பி - படகு.
24. மை - மேகம்.

தலைவி கூற்று

அகநானூறு 147 **ஔவையார்**

திணை : பாலை

கூற்று

செலவு உணர்த்திய தோழிக்குத் தலைமகள் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் பொருள்வயிற்பிரிந்து சென்றதைத் தோழி தலைவியிடம் கூறினாள். அதைக் கேட்ட தலைவி, தன் வருத்தத்தைத் தோழியை நோக்கிக் கூறியது.

ஓங்குமலைச் சிலம்பில் பிடவுடன் மலர்ந்த
வேங்கை வெறித்தழை வேறுவகுத் தன்ன,
ஊன்பொதி அவிழாக் கோட்டுஉகிர்க் குருளை,
மூன்றுஉடன் ஈன்ற முடங்கர் நிழத்த
துறுகல் விடர்அளைப் பிணவுப்பசி கூர்ந்தென,
பொறிகிளர் உழுவைப் போழ்வாய் ஏற்றை
அறுகோட்டு உழைமான் ஆண்குரல் ஓர்க்கும்
நெறிபடு கவலை நிரம்பா நீளிடை,
வெள்ளி வீதியைப் போல நன்றும்
செலவுஅயர்ந் திசினால் யானே; பலபுலந்து,
உண்ணா உயக்கமொடு உயிர்செலச் சாஅய்,
தோளும் தொல்கவின் தொலைய, நாளும்
பிரிந்தோர் பெயர்வுக்கு இரங்கி,
மருந்துபிறிது இன்மையின் இருந்துவினை இலனே!

தெளிவுரை

தலைவன் பிரிந்தமையால் என் மனம் எல்லாவற்றையும் வெறுக்கிறது; உண்ணாமல் உடல் மெலிந்தது; உயிர் பிரிய நிற்கிறது; தோள்களில் பழைய அழகில்லை. ஒவ்வொரு நாளும் அவன் பிரிவை எண்ணித் துயரம் மிகுதியாகின்றது. அதனைப் போக்க வேறு மருந்தும் இல்லை; ஆதலால், செயலற்று இருக்கிறேன்.

கணவனைத் தேடிச் சென்ற வெள்ளிவீதியார் என்பவரைப் போல நானும் என் தலைவனைத் தேடிச் செல்லலாம் எனச் சில வேளை தோன்றுகிறது.

உயர்ந்து ஓங்கும் மலைக்குப் பக்கத்தே விளங்கும் பக்க மலையின் பிளப்பிலுள்ள குகையில் ஒரு புலி மூன்று குட்டிகளை ஈன்றது. அக்குட்டிகள், பிடா மரத்தோடு ஒருங்கே மலர்ந்த வேங்கை மரத்தின் மணம் கமழும் பூவுடன் கூடிய தழைகளைத் தனித்தனிக் கூறுகளாய்க் கட்டி வைத்தது போன்று தோற்ற மளித்தன; அவற்றின் நகங்களை மூடிய தசை இன்னும் நீங்க வில்லை. தாய்ப்புலி பசியினாலும், ஈன்ற இளைப்பினாலும் ஒய்ந்து கிடந்தது கண்டு, புள்ளிகளையும், அகன்ற வாயையும் கொண்ட ஆண்புலி, குகைக்கு வெளியே நின்று, அருகில் எங்கேனும் அற்றற்றுத் தோன்றும் கொம்பினைக் கொண்ட ஆண்மானின் குரல் கேட்கிறதா என்று உற்றுக் கேட்கும். இத்தகைய அச்சம் நிறைந்த வழிகள் உள்ள நீண்ட காட்டில் நானும் செல்லலாம் என்று கருதுகிறேன்.

கருத்து

வருத்தத்தைத் தாங்க இயலாத நான், தலைவனைத் தேடி அவனிருக்குமிடம் செல்ல விரும்புகின்றேன்.

விளக்கம்

"தலைவன் பிரிந்து சென்றதால் எல்லாவற்றையும் வெறுத்து, உயிர் நீங்குமளவு என் உடல் மெலிந்தது. அவர் இருக்கு மிடத்தைத் தேடிச் செல்லவும் கருதுகின்றேன். பிரிவாற்றாமைக்கு வேறு மருந்து இல்லாமையால் நான் செய்வதறியாது தவிக் கிறேன்" என்று தலைவி கூறுகிறாள்.

சொற்பொருள்

1. சிலம்பு - பக்க மலை; பிடவு - பிடா மரம்.
2. வெறித்தழை - மணம் கமழும் தழை; வேறு வகுத்து - தனித்தனிக் கூறுகளாய்ப் பிரித்து வைத்தல்.
3. ஊன்பொதி - தசை மூடிய; கோட்டு உகிர் - கூரிய நகம்; குருளை - குட்டி.

4. ஈன்ற - பெற்றெடுத்த; முடங்கர் - முடக்கமான பகுதி, வளைவு; நிழத்த - மெலிந்த.
5. துறுகல் விடர் - பெரும் பாறைப்பிளப்பு; அளை - குகை; பிணவு - பெண்புலி.
6. பொறிகிளர் - புள்ளிகள் விளங்குகின்ற; உழுவை - ஆண்புலி; போழ்வாய் - அகன்ற வாய்; ஏற்றை - ஆண்.
7. அறுகோடு - அற்றற்றுத் தோன்றும் கொம்பு; உழைமான் - ஆண்மான்; ஓர்க்கும் - உற்றுக் கேட்கும்.
8. கவலை - பிளவுபட்ட வழி; நிரம்பா - சென்று முடிக்க இயலாத; நீளிடை - நீண்ட வழி.
9. வெள்ளி வீதி - பெண்பாற்புலவர் ஒருவர்.
10. செலவு - தேடிச் செல்லுதல்; அயர்ந்திசின் - விரும்புகின்றேன்; புலத்தல் - வெறுத்தல்.
11. உயக்கம் - வருத்தம்; சாஅய் - மெலிந்து.
12. தொல்கவின் - பழைய அழகு; தொலைய - நீங்க.
13. பெயர்வுக்கு - பிரிந்தமைக்கு.
14. வினை இலன் - செயலற்றனன்.

தலைவன் பிரிவிடை, தோழி தலைவியை ஆற்றுவித்தது.

தோழி கூற்று

ஐங்குறுநூறு 315 **ஓதலாந்தையார்**

திணை : பாலை

கூற்று

சொல்லாது தலைமகன் பிரிந்துழித் தலைமகள் வேறுபாடு கண்ட தோழி இரங்கிச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் தலைவியிடம் சொல்லாது பிரிந்து சென்றான். அதனால் தலைவி உடலும் உள்ளமும் வேறுபட்டன. அந்நிலை கண்டு தோழி வருந்திச் சொல்லியது.

பாயல் கொண்ட பனிமலர் நெடுங்கண்
பூசல் கேளார் சேயர் என்ப
இழைநெகிழ் செல்லல் உறீஇக்
கழைமுதிர் சோலைக் காடுஇறந் தோரே.

தெளிவுரை

"நம் தலைவர் நம் அணிகலன்கள் நெகிழுமாறு பெருந்துயர் தந்து, மூங்கில் அடர்ந்த சோலைகளைக் கொண்ட காடுகளைக் கடந்து சென்றிருக்கிறார். அவர் உடனிருந்தபோது நாம் உறங்கிக் கொண்டிருந்தோம். கண் விழித்தபோது, அவர் இல்லாதது கண்டு நாம் அழுகின்ற ஆரவாரத்தை அவரால் கேட்க இயலாது; ஏனெனில், அவர் பிரிந்து சென்று மிகத் தொலைவில் உள்ளார்."

கருத்து

அவர் நெடுந்தொலைவில் உள்ளார்; இப்பொழுது நீ அழுது பயனில்லை.

குறிப்பு

அவர் பிரிவிற்கு அஞ்சி நம் கண்கள் அழுது கண்ணீர் விடுவதைக் கண்டபின் அவரால் பிரிய இயலாது என்று கருதியே, நாம் உறங்கிக்கொண்டிருக்கும்போதே சொல்லாமல் பிரிந்துவிட்டார்.

சொற்பொருள்

1. பாயல் - உறக்கம்; பனி மலர் நெடுங்கண் - குளிர்ந்த மலர் போன்ற நீண்ட கண்.
2. பூசல் - ஆரவாரம்; சேயர் - நெடுந்தொலைவில் உள்ளார்.
3. இழை - அணிகலன்; நெகிழ் - கழலுமாறு; செல்லல் - துன்பம்; உறீஇ - அடைவித்து.
4. கழை - மூங்கில்; முதிர் - அடர்ந்த; இறந்தோர் - கடந்து சென்றோர்.

தோழி கூற்று

ஐங்குறுநூறு 316 **ஓதலாந்தையார்**

திணை : பாலை

கூற்று

தலைமகள் மெலிவிற்கு நொந்து, தலைமகன் பிரிவின்கண் தோழி கூறியது.

கூற்று விளக்கம்

தலைவியைப் பிரிந்து தலைவன் பொருள் ஈட்டி வரப் பிரிந்து சென்றான். அதனால் தலைவி பெரிதும் வாடி மெலிந்தாள். அதுகண்டு மனம் நொந்து தோழி இரங்கிக் கூறியது.

பொன்செய் பாண்டில் பொலங்கலம் நந்த,
தேரகல் அல்குல் அவ்வரி வாட,
இறந்தோர் மன்ற தாமே பிறங்குமலைப்
புல்அரை ஓமை நீடிய
புலிவழங்கு அதர கானத் தானே.

தெளிவுரை

பொன்னால் செய்யப்பட்ட பொற்காசுகளைக் கோத்து இடையில் அணியும் பாண்டில் என்னும் அணி நெகிழ்ந்தது; தேர்த்தட்டு போலும் அகன்ற அல்குலில் படர்ந்த அழகிய வரிகளும் வாடிப் பொலிவு இழந்தன. தலைவியை இவ்வாறு மெலியச்செய்து தலைவர் பிரிந்துள்ளார். உயர்ந்த மலைகளைக் கொண்டதும், உள்ளீடற்ற ஓமை மரங்கள் நிறைந்ததும், புலிகள் இரை தேடித் திரியும் காடுகளைக் கொண்டதுமான வழியிலே தலைவர் சென்றுள்ளார். (தலைவியின் துயரை நான் தணித்திருப்பது எவ்வாறு? என்று தோழி துன்புற்றாள்.)

கருத்து

தலைவன் பிரிவினால் வாடி அழகிழந்திருக்கும் தலைவியின் துயரை நான் தணியச்செய்வது எவ்வாறு?

குறிப்பு

தோழியின் வருத்தத்தைக் காணும் தலைவி, தான் கொண்ட துயரத்தை ஒருவாறு ஆற்றியிருப்பாள் எனக் கொள்ளலாம்.

சொற்பொருள்

1. பாண்டில் - வட்டமான; பொன் கலம் - பொன்னால் செய்யப்பட்ட அணிகலன்; நந்த - பொலிவழிய.
2. அகல் - அகன்ற; அவ்வரி - அழகிய வரிகள்; வாட - பொலிவழிய.
3. இறந்தோர் - பிரிந்து சென்றவர் (தலைவர்); பிறங்கும் - விளங்கும்.
4. அரை - அடிப்பகுதி; ஓமை - ஓமை மரம்; நீடிய - நிறைந்த.
5. வழங்குதல் - திரிதல்; அதர் - வழி.

தோழி கூற்று

நற்றிணை 18 **பொய்கையார்**

திணை : பாலை

கூற்று

பிரிவிடை ஆற்றாளாகிய தலைமகளைத் தோழி வற்புறுத்தியது.

கூற்று விளக்கம்

தலைவன் பொருள்வயிற்பிரிந்தான். தலைவி பிரிவை ஆற்ற இயலாது வருந்தினாள். 'தலைவன் விரைவில் வருவான்' எனச் சொல்லித் தலைவியை ஆற்றியிருக்குமாறு தோழி வற்புறுத்திக் கூறியது.

பருவரல் நெஞ்சமொடு பல்படர் அகல
வருவர் வாழி தோழி! மூவன்
முழுவலி முள்எயிறு அழுத்திய கதவின்,
கானலந் தொண்டிப் பொருநன், வென்வேல்
தெறல்அருந் தானைப் பொறையன், பாசறை,
நெஞ்சம் நடுக்குறூஉம் துஞ்சா மறவர்
திரைதபு கடலின் இனிதுகண் படுப்பக்
கடாஅம் கழீஇய கதன்அடங்கு யானைத்
தடாஅநிலை ஒருகோட் டன்ன
ஒன்றுஇலங்கு அருவிய குன்றுஇறந் தோரே.

தெளிவுரை

"*தலைவி! வாழ்க! சேரன் கணைக்கால் இரும்பொறை, மூவன் என்பவனைப் போரில் வென்று வலிமையான முள் போன்ற*

கூர்மையான அவன் பற்களைப் பிடுங்கிக் கொண்டுவந்து, தன் தலைநகர் தொண்டியிலுள்ள கோட்டைக்கதவில் இழைத்து வைத்தான். கடற்கரை சூழ்ந்த அத்தொண்டி நகருக்குத் தலைவனும், வெல்லும் வேற்படையினைக் கொண்டவனும், பகைவரால் வெல்லுதற்கரிய சேனையைக் கொண்டவனுமாகிய கணைக்காலிரும்பொறையின் பாசறையில் (யானை ஒன்று மதங்கொண்டதால்) வீரர்கள் துஞ்சாதிருந்தனர். அவர்கள் நெஞ்சு நடுங்கக் காரணமாயிருந்த மதங்கொண்ட யானை இரும்பொறையால் அடக்கப்பெற்றதால் வீரர் யாவரும் அலை ஓய்ந்த கடல்போல இனிதாய்க் கண்ணுறங்கினர். அந்த யானையின் ஒற்றைத் தந்தத்தைப்போல விளங்கும் அருவியைக் கொண்ட மலை வழியில் நம் தலைவர் சென்றுள்ளார். துன்புற்ற நெஞ்சோடு பல் வகைத் துயரங்களைக் கொண்ட உன் கவலை நீங்கியொழியத் தலைவர் விரைவில் வருவார். ஆதலால், வருந்தாதிரு" என்று தோழி தலைவியிடம் கூறினாள்.

கருத்து

தலைவன் விரைவில் வந்து உன் துயர் துடைப்பான்; வருந்தாதிரு.

விளக்கம்

தலைவன் கடமை காரணமாய்ப் பிரிந்தான். பிரிவாற்றாது தலைவி மிகவும் வருந்தினாள். தலைவியைத் தோழி தேற்ற முற்பட்டாள். ஒரு சமயம், கணைக்காலிரும்பொறையின் போர்ப்பாசறையில் யானை ஒன்றுக்கு மதம் தோன்ற, அது கண்டு அஞ்சிய வீரர்கள் கண் துயிலாது வருந்தியிருந்தனர். மதம் கொண்ட அந்த யானையை இரும்பொறை அடக்கியதும் வீரர்கள் துயரம் நீங்கி இனிதே துயின்றனர். தோழி இதனை எடுத்துரைத்து, பொறையன் யானையின் மதத்தை அடக்கி வீரர்களின் துயரத்தைப் போக்கியதுபோல, தலைவனும் விரைவில் வந்து, உன் துயரத்தைத் தீர்ப்பான் என்று கூறித் தலைவியைத் தேற்றினாள்.

குறிப்பு

சேரமான் கணைக்காலிரும்பொறை தன்னைப் பகைத்துப் போர் தொடுத்த மூவன் என்பானை வென்று, அவன் பற்களைப் பிடுங்கி வந்து, தன் கோட்டை வாயிலில் பதித்து வைத்தான் என்பது வரலாற்றுக் குறிப்பு.

சொற்பொருள்

1. பருவரல் - வருத்தம்; படர் - துன்பம்.
2. மூவன் - சிற்றரசருள் ஒருவன்.
3. முழு வலி - மிக்க வலிமை; முள் - கூரிய; அழுத்திய - பதித்த.
4. தொண்டி - சேரர் துறைமுகம்; பொருநன் - தலைவன்.
5. தெறல் அரும் - வெல்லுதற்கு அரிய; தானை - சேனை; பொறையன் - கணைக்காலிரும்பொறை என்னும் சேர மன்னன்.
6. நடுக்குறூஉம் - நடுக்கம் கொண்ட.
7. திரைதபு - அலை ஓய்ந்த; படுப்ப - மூட, துயில.
8. கடாஅம் - மதம்; கழீஇய - நீக்கிய; கதன் - சினம்.
9. தடாஅ நிலை - பருத்த; ஒரு கோடு - கொம்பு, ஒற்றைத் தந்தம்.
10. இலங்கு - விளங்குகின்ற; அருவிய - அருவியைக் கொண்ட; இறந்தோர் - கடந்து சென்றவர்.

தோழி கூற்று

கைந்நிலை 19 **புல்லங்காடனார்**

திணை : பாலை

கூற்று

பிரிவிடை வேறுபட்ட தலைமகளைத் தோழி வற்புறுத்தியது.

கூற்று விளக்கம்

தலைவனைப் பிரிந்தமையால் வாடிய தலைவியைத் தோழி ஆறுதல் கூறித் தேற்றியது.

அரக்(கு)ஆர்ந்த ஓமை அரிபடு நீழல்
செருக்(கு)இல் கடுங்களிறு சென்றுறங்கி நிற்கும்
பரல்கானம் பல்பொருட்குச் சென்றார் வருவர்
நுதற்கு இவர்ந்(து)ஏறும் ஒளி.

தெளிவுரை

"அரக்கினைப் போன்ற சிவந்த நிறம் கொண்ட ஓமை மரத்திற்கு இடையிடையே புள்ளிகள் கொண்ட நிழலில் வன்மையற்ற யானைகள் உறங்கும் தன்மை கொண்ட பரல்

கற்களைக் கொண்ட பாலைநிலக் காட்டின் வழியாய்ப் பொருள் திரட்டச் சென்ற தலைவர் இப்பொழுதே வருவார். அதனால் உன் நெற்றியிலுள்ள பசலை நீங்கி ஒளி உண்டாகும்" எனத் தோழி தலைவியைத் தேற்றினாள்.

கருத்து

பிரிந்து சென்ற தலைவர் இப்பொழுதே திரும்பி வருவார்; இழந்த அழகைத் திரும்பப் பெறுவாய்; வருந்தாதே.

சொற்பொருள்

1. ஆர்ந்த - போன்ற; ஓமை - ஒருவகை மரம்; அரிபடு - புள்ளிகளிட்ட.
2. செருக்கு - வன்மை.
3. பரல் - பரல் கற்கள்; கானம் - காடு.
4. இவர்ந்து - படர்ந்து; ஏறும் ஒளி - ஒளி உண்டாகும்.

தோழி கூற்று

குறுந்தொகை 260 **கல்லாடனார்**

திணை : பாலை

கூற்று

அவர் வரவிற்கு நிமித்தமாயின கண்டு, ஆற்றாளாகிய தலைமகட்குத் தோழி சொல்லியது. (நிமித்தம் - நல்ல அறிகுறி)

கூற்று விளக்கம்

தலைவனைப் பிரிந்து வருந்தியிருக்கும் தலைவியிடம், 'தலைவியே வருந்தாதே! தலைவன் வருவான் என்பதைக் குறிக்கும் நல்ல அறிகுறிகள் காணப்படுகின்றன. அதனால் அவன் வருவது உறுதி' என்று கூறித் தலைவியை ஆற்றியிருக்குமாறு தோழி வற்புறுத்திக் கூறியது.

குருகும் இருவிசும்பு இவரும்; புதலும்
வரிவண்டு ஊத வாய்நெகிழ்ந் தனவே;
சுரிவளைப் பொலிந்த தோளும் செற்றும்;
வருவர்கொல் வாழி தோழி! பொருவார்

மண்ணெடுத்து உண்ணும் அண்ணல் யானை
வண்தேர்த் தொண்டையர் வழைஅமல் அடுக்கத்து,
கன்றுஇல் ஓர்ஆ விலங்கிய
புன்தாள் ஓமைய சுரன்இறந் தோரே.

தெளிவுரை

"தலைவி! நாரைகள் விரிந்த வானத்தில் உயரப் பறக்கின்றன; புதர்களிலுள்ள மலர் மொக்குகள் வண்டுகள் மொய்த்து ஊதுதலால் மலர்ந்துள்ளன; சுழித்த சங்கு வளையல்களால் அழகு பெற்றுள்ள தோள்களும் பருத்துள்ளன. இவ்வாறு நன்னிமித்தங்கள் தோன்றுகின்றன. போர் செய்து தம்மிடம் தோற்றவர்களின் நாட்டிலே விளைந்த பொருள்களை உண்டு வாழும் யானைகளையும், சிறந்த தேர்களையுமுடையவர், தொண்டை நாட்டு மன்னர்கள். சுரபுன்னை மலர்கள் நிறைந் திருக்கும் அவர்களுடைய மலைச்சாரல்களில் சிறிய அடிப் பாகத்தைக் கொண்ட ஓமை மரங்கள், கன்றையிழந்த பசுவைத் தம் நிழலிலே தங்க வைத்துக் காப்பாற்றும். இந்த வழியைக் கடந்து பொருள் தேடச் சென்ற நம் தலைவர் விரைவில் வந்து விடுவார். ஆதலால், நீ வருந்த வேண்டா."

கருத்து

வருந்தாதே! நல்ல நிமித்தங்கள் காணப்படுகின்றன; அவர் விரைவில் வருவார்.

விளக்கம்

நாரைகள் வானத்தில் மேலெழும்பிப் பறக்கின்றன. புதர்களிலே உள்ள மலர் மொக்குகள் வண்டுகள் மொய்ப்பதால் மலர்ந்து மணம் வீசுகின்றன; உன் இளைத்த தோள்கள் பருத்து வளையல்கள் இறுகுகின்றன. இவையெல்லாம் நல்ல சகுனங்கள். ஆதலால், தலைவர் விரைவில் வந்து சேர்வார்.

கூறப்படும் நிமித்தங்கள் கூதிர்க் காலம் என்பதைப் புலப் படுத்துகின்றன. கூதிர்க் காலம் தொடங்கிவிட்டதால் தலைவர் உடனே திரும்பிவிடுவார்.

சொற்பொருள்

1. குருகு - நாரை; இரு விசும்பு - விரிந்த வானம்; இவரும் - மேலேறிப் பறக்கின்றன.
2. வரிவண்டு - சிறகிலே வரிகளைக் கொண்ட வண்டு; வாய் நெகிழ்ந்தன - இதழ்கள் விரிந்து மலர்ந்தன.
3. சுரி - முறுக்கு, சுழித்த; செற்றும் - செறியும், இறுகும்.
4. பொருவார் - பகைவர்.
5. மண் எடுத்து உண்ணும் - நிலத்தில் விளைந்ததை உண்ணும்; அண்ணல் - தலைமை பொருந்திய.
6. வண்தேர் - வள்தேர் - வளவிய தேர்; வழை - சுரபுன்னை மரம்; அமல் - நெருங்கிய; அடுக்கம் - மலைப்பக்கம்.
8. புன்தாள் - சிறுத்த அடிப்பக்கத்தைக் கொண்ட; ஓமை - ஒரு வகை மரம்.

தோழி கூற்று

ஐந்திணை எழுபது 41 **மூவாதியார்**

திணை : பாலை

கூற்று

தலைமகனின் வருகையினை எதிர்நோக்கிக் கலங்கிய தலைமகட்குத் தோழி நிமித்தம் காட்டிக் கூறியது.

கூற்று விளக்கம்

தலைவன் பொருள்தேடப் பிரிந்து சென்றதனால் தலைவி கலங்கி யிருந்தாள். நல்ல நிமித்தங்கள் தோன்றுவதைத் தோழி சுட்டிக்காட்டித் தலைவியை ஆற்றியிருக்குமாறு கூறியது.

பூங்கண்(இ)டம் ஆடும் கனவும் திருந்தின
ஓங்கிய குன்றம் இறந்தாரை யாம்நினைப்ப
வீங்கிய மென்தோள் கவினிப் பிணிதீரப்
பாங்கத்துப் பல்லி படும்.

தெளிவுரை

வானளாவிய உயர்ந்த குன்றுகள் பொருந்தியுள்ள பாலை நில வழியில் சென்ற நம் தலைவரை நாம் நினைத்த அளவிலேயே நம்

மென்மையான தோள்கள் பூரித்து அழகுற்றன. நம் துன்பம் நீங்கும் வண்ணம் பல்லியும் நமக்கு இணக்கமாய் ஒலிக்கிறது. மலர் போன்ற நம் இடக்கண்கள் துடிக்கின்றன; நாம் காணும் கனவுகளும் நல்லனவாய் விளங்குகின்றன. (எனவே, விரைவில் தலைவர் திரும்புவார்.)

கருத்து

நிமித்தங்கள் நல்லனவாய் உள்ளன. தலைவர் விரைவில் மீள்வார்; ஆற்றியிரு!

சொற்பொருள்

1. பூங்கண் - அழகிய கண்; இடம் ஆடும் - இடப்பக்கம் துடிக்கிறது; திருந்தின - நல்லனவாயுள்ளன.
2. இறந்தாரை - கடந்து சென்றவரை.
3. வீங்கிய - பூரித்த; கவினி - அழகுற்று; பிணிதீர - பிரிவு நோய் நீங்க.
4. பாங்கு - இணக்கமாய்; பல்லி படும் - பல்லியும் சொல்லுகிறது.

தோழி கூற்று

ஐந்திணை எழுபது 40 — **மூவாதியார்**

திணை : பாலை

கூற்று

தலைமகனின் வருகையினை எதிர்நோக்கிக் கலங்கிய தலைமகட்குத் தோழி நிமித்தம் காட்டிக் கூறியது.

கூற்று விளக்கம்

தலைவன் பொருள் தேடப் பிரிந்து சென்றதனால் தலைவி கலங்கி யிருந்தாள். நல்ல நிமித்தங்கள் தோன்றுவதைத் தோழி சுட்டிக்காட்டித் தலைவியை ஆற்றியிருக்குமாறு கூறியது.

மன்ற முதுமரத்(து) ஆந்தை குரல்இயம்ப
குன்றகம் நண்ணி குறும்(பு)இறந்து – சென்றவர்
உள்ளிய தன்மையர் போலும் அடுத்தடுத்(து)
ஒள்ளிய தும்மல் வரும்.

தெளிவுரை

பொதுமன்றத்தில் உயரமாய் வளர்ந்திருக்கும் பழைய ஆலமரத்தில் வாழுகின்ற ஆந்தைகள் அலறுகின்றன. இரவு நேரத்தில் மலைவழியே சென்று, பாலை நிலத்து ஊர் பல வற்றைக் கடந்துபோன நம் தலைவர் நம்மை நினைத்துக்கொண்டு உடனே திரும்ப எண்ணினார் போலும்! அதனாலேயே (நன்னிமித்தமாய்) நம்மிடம் அடிக்கடி நலமிக்க தும்மல்கள் தோன்றுகின்றன.

கருத்து

நன்னிமித்தங்கள் தோன்றுகின்றன; தலைவர் விரைவில் வருவார்; ஆற்றியிரு.

குறிப்பு

பகலில் ஆந்தை அலறுவது நன்னிமித்தமாய்க் கருதப்பட்டது எனத் தெரிகிறது.

சொற்பொருள்

1. முது மரம் - பழைய மரம்; குரல் இயம்ப - ஒலிக்க, அலற.
2. நண்ணி - நெருங்கி; குறும்பு - பாலை நிலத்தூர்; இறந்து - கடந்து.
3. உள்ளிய - எண்ணிய; அடுத்தடுத்து - அடிக்கடி.
4. ஒள்ளிய - நலம் மிக்க; வரும் - வருகின்றது.

தோழி கூற்று

திணைமாலை நூற்றைம்பது 80 **கணிமேதாவியார்**

திணை : பாலை

கூற்று

தலைமகளைத் தோழி பருவங்காட்டி வற்புறீஇயது.

கூற்று விளக்கம்

பிரிந்து சென்ற தலைவன் வருவதாய்க் கூறிச் சென்ற பருவத்தில் தோழி நன்னிமித்தம் தோன்றுவதைக் காட்டி, தலைவன் வருவான் என நம்பிக்கை ஊட்டும் வகையில் வற்புறுத்திச் சொல்லியது.

உருவவேல் கண்ணாய்! ஒருகால்தேர்ச் செல்வன்
வெருவிவீந்(து) உக்கநீள் அத்தம் – வருவர்
சிறந்து பொருள்தருவான் சேண்சென்றார் இன்றே
இறந்துகண் ஆடும் இடம்.

தெளிவுரை

"அழகிய வேல் போன்ற கண்களைக் கொண்டவளே! என் இடக்கண் மிகவும் துடிக்கின்றது. எனவே, ஒற்றைச் சக்கரத்தைக் கொண்ட தேரில் செல்லும் கதிரவனால், பார்த்தார்க்கு அச்சம் தோன்றுமாறு கரிந்து போன பாலை நிலத்தைத் தாண்டிப் பொருள் ஈட்ட நெடுந்தொலைவு சென்ற நம் தலைவர் இன்றே வருவார்! ஆதலால், நீ துன்பம் உறாதே" என்று தோழி கூறினாள்.

கருத்து

நன்னிமித்தம் தோன்றுவதால் பொருள் தேடி வர நெடுந்தொலைவு சென்றுள்ளவர் இன்றே வருவார்; வருந்தாதே!

குறிப்பு

பெண்களுக்கு இடக்கண் துடிப்பது நன்னிமித்தம் என்னும் நம்பிக்கை அன்று இருந்துள்ளது.

சொற்பொருள்

1. உருவ - அழகிய; ஒரு கால் தேர்ச் செல்வன் - ஒற்றைச் சக்கரத்தைக் கொண்ட தேரில் செல்லும் சூரியன்.
2. வெருவி - அச்சமுண்டாக்கும்படி; வீந்து உக்க - மடிந்து அவிந்து போன, கரிந்து போன; நீள் - நீண்ட; அத்தம் - வழி.
3. பொருள் தருவான் - பொருள் தேடும்பொருட்டு; சேண் - நெடுந்தொலைவு.

2-3.வருவர் இன்றே - இன்றே வருவர்.

4. இறந்து - மிகுந்து; ஆடும் இடம் - இடப்பக்கம் துடிக்கிறது.

தோழி கூற்று

நற்றிணை 333 **கள்ளிக்குடிப் பூதம் புல்லனார்**

திணை : பாலை

கூற்று

பொருள்வயிற்பிரிவின்கண் ஆற்றாளாகிய தலைமகளைத் தோழி வற்புறுத்தது.

கூற்று விளக்கம்

பொருள்வயிற்பிரிந்து சென்ற தலைவன் திரும்பவில்லை என்பதால் தலைவி வருந்தியிருந்தாள். அவர் உடனே வந்துவிடுவார் எனத் தோழி வற்புறுத்தித் தேற்றியது.

மழைதொழில் உலந்து, மாவிசும்பு உகந்தென,
கழைகவின் அழிந்த கல்அதர்ச் சிறுநெறிப்
பரல்அவல் ஊறல் சிறுநீர் மருங்கில்,
பூநுதல் யானையொடு புலிபொருது உண்ணும்
சுரன்இறந்து, அரிய என்னார் உரன்மிகுந்து
உளமலி நெஞ்சமொடு வளமை வேண்டி,
அரும்பொருட்கு அகன்ற காதலர் முயக்குஎதிர்ந்து,
திருந்திழைப் பணைத்தோள் பெறுநர் போலும்;
நீங்குக மாதோ நின்அவலம் – ஓங்குமிசை,
உயர்புகழ் நல்இல் ஒண்சுவர்ப் பொருந்தி
நயவரு குரல பல்லி,
நள்ளென் யாமத்து, உள்ளுதொறும் படுமே.

தெளிவுரை

"தலைவி! நம் தலைவர் சென்றுள்ள காட்டில் மழைமுகில் பெய்தல் தொழிலை மறந்து வறண்டு ஆகாயத்தில் உயரச் சென்று விட்டது. வெப்பம் மிகுந்து மூங்கில் வாடி அழகிழந்தது. அக்காடு கற்களிடையே சிறிய வழிகளைக் கொண்டுள்ளது. பரல்கற்கள் மிகுந்த பள்ளத்தில், கல் ஊற்றுகள் உண்டு. அவற்றில் ஊறும் சிறிதளவு தண்ணீரையும் மென்மையான நெற்றியைக் கொண்ட யானையோடு போரிட்டு வென்ற புலி குடிக்கும். அக்காட்டினைக் கடப்பது அரிது என்று கருதாமல்,

நம் தலைவர் நெஞ்சுரம் அழியாது, ஊக்கம் மிகுந்து, தாம் விரும்பிய பொருளை ஈட்டுதற்குச் சென்றுள்ளார். புகழ்மிக்க நம் வீட்டில் ஒள்ளிய சுவரில் உயர்ந்த இடத்தில் பொருந்தி யிருக்கும் பல்லி, நாம் தலைவனை நினைக்கும் போதெல்லாம் நயமான குரலில் நல்ல செய்தியைச் சொல்லியவாறு இருக்கிறது. அதனால், தலைவர் விரைந்து வந்து, திருந்திய இழையணிந்த உன் பருத்த தோள்நலம் நுகர்வார் என்பது தெளிவாகிறது. ஆதலால், உன் மனக்கவலையை நீக்குக" எனத் தோழி தலைவியை நோக்கிக் கூறி ஆற்றியிருக்கச் சொல்கிறாள்.

கருத்து

பல்லி நல்ல சொல்லைக் கூறுகிறது; தலைவன் விரைந்து வருவான்; கவலை ஒழிக.

விளக்கம்

தலைவனைப் பிரிந்து தலைவி வருந்தியிருக்கிறாள். தோழி, 'தலைவன் விரைவில் வருவான்; கவலையின்றி இரு' என வற்புறுத்துகிறாள். 'நீ எவ்வாறு அத்துணை உறுதியாய்ச் சொல்கிறாய்' எனத் தலைவி கேட்ட பொழுது தோழி, 'தலைவி! நம் இல்லத்தில் உயர்ந்த சுவரைப் பொருந்தியிருந்து, அனைத் துயிரும் கண்ணுறங்கும் நடு இரவிலும், நாம் தலைவனை நினைக்குந்தோறும் பல்லி நல்ல சகுனத்தைச் சொல்கிறது பார்' என்று சொல்லித் தேற்றுகிறாள்.

குறிப்பு

பள்ளத்தில் கிடக்கும் சிறிதளவு நீரையும் புலி யானையோடு போரிட்டு வென்று குடிக்கும் என்பது, தலைவன் இடர்களையெல்லாம் வென்று தான் விரும்பிய பொருளைத் திரட்டி வருவான் என்னும் குறிப்பைத் தருகிறது.

சொற்பொருள்

1. மழை - மேகம்; தொழில் - பெய்தல்; உலந்து - வற்றி; மா விசும்பு - கரிய ஆகாயத்தில்; உகத்தல் - உயரச் செல்லுதல்.
2. கழை - மூங்கில்; கவின் - அழகு; அதர் - வழி; சிறுவழி - குறுகிய வழி.
3. பரல் - பரல் கற்கள்; அவல் - பள்ளம்; ஊறல் - ஊற்று; சிறுநீர் - சிறிய அளவிலான நீர்.

4. பூ நுதல் - மென்மையான நெற்றி; பொருது - போரிட்டு.
5. சுரன் - காடு; இறந்து - கடந்து; உரன் - மனத்திண்மை.
6. உளம் மலி - ஊக்கம் மிகுந்து; வளமை - செல்வ வளம் கருதி.
7. முயக்கு எதிர்ந்து - முயக்கத்தை விரும்பி.
8. திருந்து இழை - திருத்தமான அணிகலன்; பணை - பருத்த.
9. அவலம் - துன்பம்; ஓங்குமிசை - நெடிதுயர்ந்த.
10. நல்இல் - நம் நல்ல வீட்டில்; ஒண் - ஒள்ளிய, ஒளிமிக்க.
11. நயவரு குரல - விரும்பத்தக்க குரலைக் கொண்ட.
12. உள்ளுதொறும் - நாம் தலைவரை நினைக்கும் போதெல்லாம்; படும் - சொல்லும்.

தோழி கூற்று

கைந்நிலை 18 **புல்லங்காடனார்**

திணை : பாலை

கூற்று

பிரிவிடை வேறுபட்ட தலைமகளைத் தோழி வற்புறுத்தியது.

கூற்று விளக்கம்

தலைவனைப் பிரிந்தமையால் வாடிய தலைவியைத் தோழி ஆறுதல் கூறித் தேற்றியது.

ஆமா சிலைக்கும் அணிவரை ஆரிடை,
ஏ,மாண் சிலையார்க்கு இனமா இரிந்துஓடும்
தாம்மாண்(பு)இல் வெஞ்சுரம் சென்றார் வரக்கண்டு,
வாய்மாண்ட பல்லி படும்.

தெளிவுரை

“காட்டுப்பசுக்கள் கனைக்கின்ற அழகிய மலையை அடுத்துள்ள வழியில் அம்புகளோடு கூடிய சிறந்த வில்லினை உடைய வேடர்களைக் கண்டு விலங்குகளின் கூட்டம் அஞ்சி ஓடும். நம்மைப் பிரிந்து சிறப்பற்ற கொடிய பாலைநிலக் காட்டில் சென்ற நம் தலைவரின் வருகையைக் கண்டு, சிறப்புடையன வற்றை முன்னரே எடுத்துக் கூறும் பல்லியும் ஒலித்துக் காட்டு கின்றது” என்று கூறித் தோழி தலைவியை ஆறுதல் பெறச் செய்தாள்.

கருத்து

பல்லி ஒலி நல் நிமித்தமாய் உள்ளது; தலைவர் விரைவில் வந்து சேர்வார்.

விளக்கம்

தோழி, தலைவியைத் தேற்றிக் கொண்டிருந்தாள். அப்போது பல்லி இடப்பக்கமாய் ஒலித்தது. "இது தலைவன் வருவதை அறிந்து கூறும் நல்ல சகுனம்; தலைவன் உடனே வந்து சேர்வான்; வருந்தாதே" என்கிறாள், தோழி.

சொற்பொருள்

1. ஆமா - காட்டுப்பசு; சிலைக்கும் - ஒலிக்கும்; அணிவரை - அழகிய மலை; ஆரிடை - அரிய வழி.
2. ஏ - அம்பு; மாண்சிலை - சிறப்பினைக் கொண்ட வில்; இனமா - கூட்டமான விலங்குகள்; இரியும் - அஞ்சி ஓடும்.
3. மாண்பு இல் - சிறப்பற்ற; வெஞ்சுரம் - பாலைநிலக் காட்டுவழி.
4. வாய் மாண்ட - வாய் சிறப்புற்ற; பல்லி படும் - பல்லி ஒலிக்கும்.

தோழி கூற்று

குறுந்தொகை 16 **பாலை பாடிய பெருங்கடுங்கோ**

திணை : பாலை

கூற்று

பொருள்வயிற் பிரிந்தவிடத்துத் தலைமகள் ஆற்றாமை கண்டு தோழி கூறியது.

கூற்று விளக்கம்

பொருளீட்டும்பொருட்டுப் பிரிந்த தலைவன் வாராதிருப்பது கண்டு வருந்திய தலைவியை, 'அவர் இப்பொழுதே வருவார்' எனக் கூறித் தோழி ஆற்றுவித்தது.

உள்ளார் கொல்லோ தோழி! கள்வர்தம்
பொன்புனை பகழி செப்பம் கொண்மார்,
உகிர்நுதி புரட்டும் ஓசை போலச்
செங்காற் பல்லி தன்துணை பயிரும்
அங்காற் கள்ளிஅம் காடுஇறந் தோரே?

தெளிவுரை

"தோழி! வழிப்பறிசெய்யும் கள்வர்கள் இரும்பினாற்செய்த தம் அம்பினைக் கூர்மையாக்குவதற்குத் தம் நக நுனியில் வைத்துப் புரட்டித் தீட்டுவர். அப்பொழுது ஏற்படும் ஒலி, அழகிய அடிப்பகுதியைக் கொண்ட கள்ளியிலிருக்கும் சிவந்த கால்களைக் கொண்ட ஆண்பல்லி, தன் பெண்பல்லியை ஆசையோடு அழைக்கும் ஒலியைப் போன்றிருக்கும். அத்தகைய கள்ளிகள் உள்ள காட்டினைக் கடந்து சென்ற நம் காதலர் அப் பல்லியின் ஓசையைக் கேட்டதும் நம்மை நினைத்திருப்பார் அன்றோ? (ஆதலால், விரைந்து வந்து நம்மைச் சேர்வார்; வருந்தாதே!)" எனத் தோழி தலைவியிடம் கூறினாள்.

கருத்து

'பல்லி தன் துணையை ஆசையோடு அழைக்கும் ஒலியைக் கேட்கும் தலைவர், உன்னை நினைந்து உடனே திரும்புவார்; வருந்தாதே' எனத் தோழி தலைவியைத் தேற்றுகிறாள்.

குறிப்பு

அம்பின் நுனியை நகத்தால் வருடும் ஓசை, பல்லியின் ஓசைக்கு உவமையாக்கப்பட்டுள்ளது.

சொற்பொருள்

1. உள்ளார் கொல்லோ - நினைக்காதிருப்பாரோ.
2. பொன்புனை - இரும்பினாற்செய்யப்பட்ட; பகழி - அம்பு; செப்பம் - செம்மை, கூர்மை; கொண்மார் - செய்யும்பொருட்டு.
3. உகிர் - நகம்; நுதி - நுனி.
4. பயிரும் - அழைக்கும்.
5. அம்காடு - அழகிய அடிப்பகுதி; இறந்தோர் - கடந்து சென்றோர்.

தோழி கூற்று

அகநானூறு 253 **நக்கீரர்**

திணை : பாலை

கூற்று

தலைமகன் பிரிவின்கண் வேறுபட்ட தலைமகட்குத் தோழி சொல்லியது.

கூற்று விளக்கம்

பொருளீட்டும்பொருட்டுத் தலைவன் தலைவியைப் பிரிந்து சென்றான். அவன் திரும்பி வருவதாய்ச் சொன்ன காலத்தில் வரவில்லை. காலம் கடந்தது. அதனால் தலைவி வருந்தினாள். அவளது வருத்தம் கண்ட தோழி அவளை ஆற்றுதற்குக் கூறியது.

வைகல் தோறும் பசலை பாய,என்
மெய்யும் பெரும்பிறிது ஆகின்று, ஒய்யென
அன்னையும் அமரா முகத்தினள்; அலரே
வாடாப் பூவின் கொங்கர் ஒட்டி,
நாடுபல தந்த பசும்பூண் பாண்டியன்
பொன்மலி நெடுநகர்க் கூடல் ஆடிய
இன்இசை ஆர்ப்பினும் பெரிதே; ஈங்குயான்
சிலநாள் உய்யலென் போன்ம்,எனப் பலநினைந்து,
ஆழல்– வாழி– தோழி!– வடாஅது
ஆர்இருள் நடுநாள் ஏர்ஆ ஒய்ய,
பகைமுனை அறுத்துப் பல்இனம் சாஅய்,
கணம்சால் கோவலர் நெடுவிளிப் பயிர்அறிந்து,
இனம்தலைத் தரூஉம் துளங்குஇமில் நல்ஏற்றுத்
தழூஉப்பிணர் எருத்தம் தாழப் பூட்டிய
அம்தூம்பு அகல்அமைக் கமஞ்செலப் பெய்த
துறுகாழ் வல்சியர் தொழூஅறை வெளவி,
கன்றுடைப் பெருநிரை மன்றுநிறை தரூஉம்
நேரா வன்தோள் வடுகர் பெருமகன்,
பேர்இசை எருமை நல்நாட்டு உள்ளதை
அயிரியாறு இறந்தனர் ஆயினும், மயர்இறந்து,
உள்ளுப தில்ல தாமே– பணைத்தோள்,
குரும்பை மென்முலை, அரும்பிய சுணங்கின்

நுசுப்புஅழித்து ஒலிவரும் தாழ்இருங் கூந்தல்,
மாக விசும்பில் திலகமொடு பதித்த
திங்கள் அன்னநின் திருமுகத்து,
ஒண்சூட்டு அவிர்குழை மலைந்த நோக்கே.

தெளிவுரை

"தலைவியே வாழ்க! 'என் நெற்றியில் பசலை நாள்தோறும் மிகுதியாகிறது. என் உடம்பும் மெலிந்துகொண்டே இருக்கிறது. விரைவில் இறப்பே வந்துவிடக்கூடும். அன்னையும் என்னை வெறுப்புடன் பார்க்கிறாள்.

" 'பசும்பூண் பாண்டியன் பொற்பூ அணிந்த கொங்கரை வென்று அவருடைய நாடு பலவற்றையும் கைப்பற்றினான். அந்த வெற்றியினைத் தனது தலைநகர் மதுரையில் களிப்புடன் கொண்டாடினான். அப்போது எழுந்த பெரிய ஆரவார ஒலியைவிட இப்போது இவ்வூரில் என்னைப் பழி தூற்றும் ஆரவாரம் மிகுதியாய் இருக்கிறது. இங்கு நான் சில நாள்கூட உயிர் தரிக்க இயலாது போலும்' என்று, பலவும் எண்ணித் துயரில் அழுந்திக் கிடக்காதே!

"எருமை என்பவன் வடுகர் தலைவன். வடுக வீரர்கள் தம் பகைவரின் ஊர்களில் நள்ளிரவில் புகுந்து, பசுக்கூட்டங்களைக் கவர்வர். எதிர்த்து வரும் பகைவரை வென்று பசுக்களை மந்தை யாய்த் தம் நாட்டிற்கு ஓட்டிச் செல்வர்.

"மாலையில் கோவலர் குரல் கொடுத்ததும், அழகாய் அசையும் திமிலைக் கொண்ட காளைகள், ஆங்காங்கு மேயும் பசுக்களை ஒன்று திரட்டி அழைத்து வரும். அவற்றின் சொரசொரப்பான கழுத்துகளில், மூங்கில் குழாய்களைக் கட்டி அவற்றில் நிரம்ப உணவினை இட்டு வைத்திருப்பர். அவர்களின் மாட்டுத் தொழுவத்தில் வடுகர் புகுந்து, பசுக்களையும் காளைகளையும் கவர்வர்.

"கவர்ந்து வரும் மாட்டுநிரையைத் தமது ஊர் மன்றத்தில் சிறிதும் இடம் இல்லாதபடி நிறுத்துவர். அவரது நாட்டில் உள்ளது, அயிரி ஆறு.

"நம் தலைவர் அவ்வாற்றைக் கடந்து சென்றுள்ளார். அவர் அந்நாட்டில் தங்கியிருந்தாலும், மூங்கிலை ஒத்த உன் தோளும், மென்மையான மார்பகங்களும்; அம்மார்பில் படர்ந்த தேமலும், முழங்கால்வரை தாழ்ந்து, பாரத்தால் உன் மெல்லிய இடையைத் துவளச்செய்யும் கருங்கூந்தலும், வானத்துக்குத் திலகமிட்டாற் போலத் தோன்றும் நிலவையொத்த உன் அழகு முகத்தில், காதில் அணியும் குழையோடு மோதும் கண் சிந்தும் பார்வையும் அவர் மனத்திரையில் தோன்றி, உன்னை மறவாதிருந்திடச் செய்யும்" என்று தலைவியிடம் தோழி கூறினாள்.

கருத்து

தலைவர் நெடுந்தொலைவு சென்றனராயினும் உன் உருவம் அவர் மனத் திரையில் தோன்றியபடியே இருக்குமாதலால், தன் பணியினை முடித்து அவர் விரைந்து திரும்புவார்; வருந்தாதே!

விளக்கம்

"தலைவியே! வாழ்க! 'என் உடம்பு விரைவில் இறப்பை எதிர் நோக்குகிறது; தாயும் பொருந்தா முகம் கொண்டவளாய் என்னை அயிர்த்தும் செயிர்த்தும் நோக்குகிறாள்; அலர் பெரிதாயிற்று; நான் இனிப் பிழையேன்' என்று சொல்லி அழாதே. நம் தலைவர் அயிரி ஆற்றினைக் கடந்து சென்றாரா யினும் உன் திருமுகத்தில் குழையோடு மோதும் உன் காந்தப் பார்வையை மறவாமல் நினைப்பார்; ஆதலின், விரைந்து வருவார்; வருந்தாதே" எனக் கூறித் தோழி, தலைவியை ஆற்றியிருக்குமாறு கூறுகிறாள்.

குறிப்பு

கூந்தல் இருண்ட வானமாகவும் அதனிடையே விளங்கும் முகம் அவ் வானில் இட்ட பொட்டாகவும் உவமிக்கப்பட்டுள்ளன.

சொற்பொருள்

1. வைகல்தோறும் - நாள்தோறும்; பாய - படர.
2. மெய் - உடல்; பெரும்பிறிது - இறப்பு; ஒய்யென - விரைவாய்.
3. அமரா - விரும்பாத, வெறுப்புணர்ச்சியோடு கூடிய; அலர் - பழிச்சொல்.

4. வாடாப் பூ - பொற்பூ (அணிந்த); கொங்கர் - கொங்கு நாட்டினர்; ஓட்டி - அகற்றி.
5. பல தந்த - பலவற்றைக் கைப்பற்றிய; பசும்பூண் பாண்டியன் - பாண்டிய மன்னருள் ஒருவன்.
6. பொன்மலி - பொன் மிக்க; நெடுநகர் - பெரிய நகர்; கூடல் - மதுரை (மாநகரில்); ஆடிய - வெற்றிக்களிப்பினால் ஆடிய.
7. ஆர்ப்பு - ஒலி.
8. உய்யலென் - உயிர் தரித்திரேன்; போன்ம் - போலும்.
9. ஆழல் - அழுந்தாதே; வடாஅது - வடக்கே.
10. ஆர்இருள் - இயங்குதற்கரிய இருள் நிறைந்த; நடுநாள் - நள்ளிரவில்; ஏர்ஆ - அழகிய பசுக்கள்; ஒய்ய - கவர்ந்து வர.
11. பகைமுனை - பகைப்புலம் (கரந்தையாரது போர்முனை); அறுத்து - கெடுத்து; பல்இனம் - பல இனங்களையும்; சாஅய் - ஓட்டி.
12. நெடுவிளிப் பயிர் - தங்கள் நீண்ட கூப்பாட்டு ஒலியை.
13. இனம்தலைத் தரூஉம் - பசுவினத்தைத் தம்மிடத்து அணைத்துக் கொண்டு வரும்; துளங்குதல் - அசைதல்; இமில் - திமில்.
14. பிணர் - சொரசொரப்பு; எருத்தம் - கழுத்து; தாழப் பூட்டிய - தொங்கும்படி பூட்டியுள்ள.
15. அம்தூம்பு - அழகிய உள்துளையைக் கொண்ட; அகல் - அகன்ற; அமை - மூங்கில்; கமம் செல - குழாய் நிறைய.
16. துறுகாழ் - செறிவு மிக்க; வல்சி - உணவு; தொழுஅறை - தொழுவம், பசுக்கள் கட்டப்படும் இடம்; வௌவி - கவர்ந்து.
17. பெருநிரை - பெரிய பசுக்கூட்டம்; தரூஉம் - கொண்டுவரும்.
18. நேரா - ஒப்பில்லாத; வன்தோள் - வலிய தோள்; வடுகர் - வடுகர் எனும் இனத்தவர்; பெருமகன் - தலைவன்.
19. பேர்இசை - பெரும் புகழ்; எருமை - வடுகர் இனத் தலைவன்; உள்ளதை - உள்ளதாகிய.
20. அயிரியாறு - அயிரி என்னும் பெயர் கொண்ட ஆறு; இறந்தனர் - கடந்தனர்; மயர் இறந்து - மறத்தல் இல்லாது.
21. உள்ளுப - நினைப்பார்; பணைத்தோள் - மூங்கில் போன்ற தோள்.
22. குரும்பை - தென்னங்குரும்பை; அரும்பிய - தோன்றியுள்ள; சுணங்கு - தேமல்.
23. நுசுப்பு - இடை; அழித்து - வருத்தி; ஒலிவரும் - தழைத்து; தாழ் - தாழ்ந்த; இருங்கூந்தல் - கரிய கூந்தல்.

24. மாகம் - ஆகாயம்; விசும்பு - வானம் (மாகமாகிய வானம்); திலகமொடு பதித்த - இடையே திலகம் பதித்த.
25. திங்கள் - நிலவு; திருமுகம் - அழகிய முகம்.
26. ஒண் சூடு - ஒள்ளிய மத்தகமணி (சூடு - குழையில் பதித்த மத்தகமணி); குழை - காதணி; மலைந்த - பொருத; நோக்கு - பார்வை.

தோழி கூற்று

அகநானூறு 127 **மாமூலனார்**

திணை : பாலை

கூற்று

பிரிவிடை ஆற்றாளாகிய தலைமகளைத் தோழி வற்புறுத்தியது.

கூற்று விளக்கம்

பொருள் தேடிவரச்சென்ற தலைவன் வாராமை கண்டு வாடி மெலிந்தாள், தலைவி. அவள் வருத்தம் நீங்குமாறு, தோழி அவளிடம் உறுதிமொழி சொல்லித் தேற்றியது.

இலங்குவளை நெகிழச் சாஅய், அல்கலும்,
கலங்குஅஞர் உழந்து, நாம்இவண் ஒழிய,
வலம்படு முரசின் சேர லாதன்
முந்நீர் ஓட்டிக் கடம்புஅறுத்து, இமயத்து,
முன்னோர் மருள வணங்குவில் பொறித்து,
நல்நகர் மாந்தை முற்றத்து ஒன்னார்
பணிதிறை தந்த பாடுசால் நன்கலம்
பொன்செய் பாவை வயிரமொடு ஆம்பல்
ஒன்றுவாய் நிறையக் குவைஇ, அன்றுஅவன்
நிலம்தினத் துறந்த நிதியத்து அன்ன,
ஒருநாள் ஒருபகல் பெறினும், வழிநாள்
தங்கலர்– வாழி, தோழி!– செங்கோல்
கருங்கால் மராத்து வாஅல் மெல்இணர்
சுரிந்துவணர் பித்தை பொலியச் சூடி,
கல்லா மழவர் வில்இடம் தழீஇ,

வருநர்ப் பார்க்கும் வெருவரு கவலை
மொழிபெயர் தேஎத்தர் ஆயினும்,
பழிதீர் காதலர் சென்ற நாட்டே.

தெளிவுரை

"*தலைவி! வாழ்க! நாம் இங்கு நாளும் பெருகும் துன்பத்தால் மனங்கலங்கி, நமது கைவளை கழலும்படி மெலிந்து, தனியே இருக்கின்றோம்.*

"*சிவந்த கொம்பினையும், கரிய அடி மரத்தையும் கொண்ட வெண் கடம்ப மரத்தின் மலர்களைச் சுருண்டு வளைந்த தம் முடியில் அழகுறச் சூடி, வில்லை இடப்பக்கத்திலே தழுவிக் கொண்டு வழிப்போவாரை எதிர்நோக்கி மறைந்திருக்கும் வழிப்பறி கொள்ளையர்கள் வாழும் பாலை நிலக்காடு, மிகுந்த அச்சம் ஏற்படுவதற்குக் காரணமானது. பல கிளைப் பாதைகள் அங்குப் பின்னிக் கிடக்கும். தலைவர் அப்பகுதிக்கு அப்பால், வேறு மொழி பேசும் நாட்டில் உள்ளாராயினும், அங்குத் தங்க மாட்டார்.*

"*பல போர்களில் வெற்றி பெற்று வெற்றி முரசு கொட்டிய சேரலாதன், கடல்தீவில் வாழும் கடம்பர்களை வென்று, அவர்கள் காவல்மரமாகிய கடம்ப மரத்தை வெட்டினான்; வடதிசை மன்னர்களை வென்று, இமயமலையில், தனது வில் இலச்சினையினைப் பதித்தான்; மாந்தை என்னும் தன் ஊரிலுள்ள முற்றத்தில் பகைவர் கப்பமாய் அளித்த மதிப்புயர்ந்த பொன் நகைகளுடன் பொற்பாவை, வைரங்கள் முதலியவற்றை 'ஆம்பல்' என்னும் பேரெண் அளவில் குவித்துப் புதைத்து வைத்தான். அவற்றை அவனோ, பிறரோ எடுத்துப் பயன் படுத்தாமையால் அவை மண்ணில் கலந்தன. அவை போன்ற நிதியை, ஒரே நாளில் ஈட்டினாலும் பழி வரும்படி நடத்த லாகாது என்னும் கருத்துக் கொண்ட தலைவர், மறுநாள் கூட, அங்குத் தங்கியிருக்க மாட்டார்" எனத் தோழி, தலைவிக்கு ஆறுதல் கூறித் தேற்றுகிறாள்.*

கருத்து

தம் பணி நிறைவேறியதும், தலைவர் மேலும் ஒரு நாளும் அங்கே தங்க மாட்டார். உடனே திரும்ப வந்து அருள்வார்.

விளக்கம்

வெற்றி முரசுடைய சேரலாதன் கடலிலே பகைவரின் கடம்ப மரத்தை வெட்டியவன்; இமயத்தில் விற்கொடி பொறித்தவன்; பகையரசர் பணிந்து திறையாகக் கொடுத்த பொன்னையும் மணி யையும் நிலத்திலே புதைத்து மறைத்தவன்; அவற்றை எடுக்காம லேயே, நிலம் தின்னும்படி விட்டுவிட்டு உயிர் துறந்தவன். தோழீ! நம்மைப் பிரிந்து சென்றுள்ள தலைவர் அத்தகைய செல்வத்தைப் பெறுவதாயிருந்தாலும், ஆறலை கள்வர் வழிப்போக்கரைப் பார்த்திருக்கும் அஞ்சத்தக்க கவர்த்த வழிகளைக் கொண்ட வேற்று மொழி பேசுவோர் தேயத்திலே இருந்தாலும், தவறாது இங்கு உரிய காலத்தில் வந்து சேர்வார்; கலங்காதே! (காதலர் பொருளால் மயங்கியும், போரால் கலங்கியும் வேற்று நாட்டில் தங்குவார் அல்லர்.)

வரலாற்றுக்குறிப்பு

சேரலாதன், கடற்கொள்ளையரை வென்று, கடல் நடுவே இருந்த அவர் காவல் மரமாகிய கடம்ப மரத்தை வெட்டினான். வடக்கே படையெடுத்துச் சென்று, இமயத்தை வென்று அதன் உச்சியில் விற்கொடி பொறித்தான். அவன், தன் பகைவர் தனக்குத் திறையாய்க் கொடுத்த 'ஆம்பல்' என்னும் எண்ணின் அளவுக்கு நிறையக் குவிந்த பொன்னாற் செய்யப்பட்ட அணிகலன்களையும், வயிரங்களையும் பிறர் அறியா வகையில் நிலத்திலே புதைத்து வைத்தான்; அவற்றை எடுக்காமலேயே இறந்து விட்டான். இதனை மாமூலனார், 'நிலம் தினத் துறந்த நிதியம்' என்கிறார்.

சொற்பொருள்

1. இலங்குவளை - விளங்கும் கைவளை; சாஅய் - மெலிந்து; அல்கலும் - நாள்தோறும்.
2. அளர் - துன்பம்; ஒழிய - தங்கியிருக்க.
3. வலம்படு - வெற்றி பொருந்திய; சேரலாதன் - சேர மன்னன்.
4. முந்நீர் - கடல்; ஓட்டி - பகைவரை வெற்றி கொண்டு; கடம்பு அறுத்து - அவர் காவல் மரமாகிய கடம்ப மரத்தினை வெட்டி; இமயம் - இமயமலை.
5. முன்னோர் - அவன் முன்னோர்; மருள - ஒப்ப; வணங்கு வில் - வளைந்த வில்; பொறித்து - (இலச்சினையைப்) பொறித்து.

6. மாந்தை - சேரலாதனின் நகரம்; ஒன்னார் - பகைவர்.
7. பணிதிறை - பணிந்து கொடுத்த காணிக்கை.
8. ஆம்பல் - ஒரு பெரிய எண்.
9. அன்று அவன் - அன்று அக்காலத்தே.
10. நிலம் தினத்துறந்த - நிலம் தின்னும்படியாய் விட்டொழித்த.
11. ஒருநாள் ஒருபகல் - ஒரு நாளில் ஒரு பகலில்; வழிநாள் - பிற்றை நாள்.
12. தங்கலர் - தங்க மாட்டார்; செங்கோல் - சிவந்த கொம்பு.
13. கருங்கால் - கரிய அடிமரம்; மராத்து - வெண் கடப்ப மரம்; வாஅல் - வெண்மையான; மெல்இணர் - மெல்லிய பூங்கொத்து.
14. சுரிந்துவணர் - சுருண்டு வளைந்த; பித்தை - கூந்தல்; பொலிய - அழகு பெற.
15. கல்லா - அறிவில்லாத; இடம் தழீஇ - இடப்பக்கத்தே தழுவிக்கொண்டு.
16. வருந - வழியில் வருபவரை; வெருவரு - அஞ்சத்தக்க; கவலை - பிரிவுபட்ட வழி.
17. மொழிபெயர் தேஎம் - வேற்று மொழி வழங்கும் நாடு.
18. பழிதீர் - குற்றம் அற்ற.

தோழி கூற்று

குறுந்தொகை 180 **கச்சிப்பேட்டு நன்னாகையார்**

திணை : பாலை

கூற்று

பிரிவிடை வேறுபட்டாளைத் தோழி வற்புறுத்தியது.

கூற்று விளக்கம்

பொருளீட்டி வரத் தலைவன் பிரிந்தானாக, ஆற்றாமை மிக்க தலைவியை, 'அவன் வருமளவும் ஆற்றியிருப்பதுவே நமது கடமை' எனத் தோழி வற்புறுத்திக் கூறி ஆற்றுவித்தது.

பழூஉப்பல் அன்ன பருஉகிர்ப் பாஅடி
இருங்களிற்று இனநிரை ஏந்தல் வரின்மாய்ந்து,
அறைமடி கரும்பின் கண்இடை அன்ன,
பைதல் ஒருகழை நீடிய சுரன்இறந்து,

எய்தினர் கொல்லோ பொருளே, அல்குல்
அவ்வரி வாடத் துறந்தோர்
வன்பர் ஆகத்தாம் சென்ற நாட்டே?

தெளிவுரை

"பேய்ப்பல்லைப் போன்ற பருத்த நகங்களையும், பரந்த பெரிய அடியினையும் கொண்ட பெரிய யானைக்கூட்டம் வரிசையாய் தன் தலைவனாகிய யானைக்குப் பின்னே கரும்புத்தோட்டத்தில் புகுந்து செல்லுவதால் கரும்புப்பாத்திகளிலே கரும்புகள் மிதிபட்டுச் சாயும். அக்கரும்புகளில் ஒரு கணுவுக்கும் மற்றொரு கணுவுக்கும் இடையே உள்ள இடைவெளி எவ்வளவு நீளமோ, அவ்வளவே நீளம் கொண்ட வற்றிப்போன ஒற்றை மூங்கில் மட்டுமே பாலை நிலத்தில் ஓங்கி வளர்ந்திருக்கும். அப்பாலை வழியைக் கடந்துதான் பொருள் தேடும்பொருட்டு உன் அல்குலில் உள்ள தேமல்கள் கெடும்படி மிகவும் வலிமை கொண்ட நெஞ்சத்துடன் நம் தலைவர் சென்றுள்ளார். அங்கு அவர் தாம் தேட விரும்பிய செல்வத்தை அடைந்தனரோ அன்றோ அறியோம். பெற்றதும் திரும்பி வந்துவிடுவார். அதுவரை பொறுத்திரு" எனத் தோழி தலைவியைத் தேற்று கிறாள்.

கருத்து

தலைவர் விரும்பிச் சென்ற பொருளை இன்னும் பெற்றிருக்கமாட்டார்; பெற்றதும் உடனே திரும்பி வந்துவிடுவார்; வருந்தாதிரு.

விளக்கம்

யானைகள், கூட்டமாய்ச் செல்லும்போது அவற்றுள் வலிமை யுள்ள யானை ஒன்று அக்கூட்டத்திற்கு முன்னே செல்லும்.

பாலை நிலத்தில் உள்ள மூங்கில், வயல்களில் செழித்து வளரும் கரும்பின் ஒரு கரணை (இரு கணுக்களுக்கு இடையே உள்ள பகுதி) அளவே வளர்ந்திருக்கும். (நீரில்லாக் கொடுமையை மூங்கிலின் வளர்ச்சி காட்டுகிறது.)

சொற்பொருள்

1. பழு - பேய்; பரு - பருத்த, பெரிய; உகிர் - நகம்; பா - பரந்த.

2. இரு - பெரிய; நிரை - வரிசை; ஏந்தல் - தலைவன்.
3. அறை - பாத்தி; மடி - சாய்ந்து கிடக்கும்; கண்இடை - ஒரு கணுவுக்கும் இன்னொரு கணுவுக்கும் இடையேயுள்ள பகுதி, கரணை.
4. பைதல் - வருத்தம்; இறந்து - கடந்து.
5. அல்குல் - அடிவயிற்றின் கீழ்ப்பகுதி.
6. அவ்வரி - அழகிய கோடுகள்.
7. வன்பர் - வலிமை கொண்ட நெஞ்சினர்.

தோழி கூற்று

குறுந்தொகை 215 மதுரை அளக்கர் ஞாழார் மகனார் மள்ளனார்

திணை : பாலை

கூற்று

பிரிவிடைத் தோழி வற்புறுத்தியது.

கூற்று விளக்கம்

தலைவனின் பிரிவால் வருந்தியிருக்கும் தலைவியிடம், 'நீ வருந்தாதே! தலைவர் இன்று மாலைக்குள் வந்து சேர்வார்' எனத் தோழி ஆறுதல் கூறியது.

படரும் பைபயப் பெயரும்; சுடரும்
என்றூழ் மாமலை மறையும்; இன்றுஅவர்
வருவர்கொல், வாழி தோழி! நீர்இல்
வறுங்கயம் துழைஇய இலங்குமருப்பு யானை
குறும்பொறை மருங்கின் அமர்துணை தழீஇக்
கொடுவரி இரும்புலி காக்கும்
நெடுவரை மருங்கின் சுரன்இறந் தோரே.

தெளிவுரை

"தலைவி! நீரற்று வறண்ட குளத்தினைத் துழாவி நீர் பெறாத வெண்மையான தந்தங்களைக் கொண்ட ஆண்யானை, சிறிய குன்றிற்குப் பக்கத்தே தான் விரும்புகின்ற பெண்யானையைத் தழுவி, அப்பெண்யானையை வளைந்த கோடுகளைக் கொண்ட பெரும் புலியின் தாக்குதலினின்று பாதுகாத்து நிற்கும். இத்தகைய உயர்ந்த மலைகளைக் கொண்ட பாலைநில வழியில் நம் தலைவர் சென்றுள்ளார். ஒளி வீசும் கதிரவன், உயர்ந்த

மலையில் மறையும் நேரத்தில் இன்று நம் தலைவர் வந்து விடுவார். உன் துன்பமும் சிறிது சிறிதாய் நீங்கும்.”

கருத்து

“புலியின் தாக்குதலினின்று தன் துணையைக் காத்து நிற்கும் ஆண் யானையைப் பாலை வழியில் காணும் தலைவர், பிரிவுத் துன்பத்தால் உனக்கு ஏற்பட்டுள்ள துன்பத்தினின்றும் உன்னைக் காக்க இன்றே வந்து சேர்வார்; உன் வருத்தம் நீங்கும்” எனத் தோழி தலைவியிடம் கூறினாள்.

சொற்பொருள்

1. படர் - துன்பம்; பையப - சிறிது சிறிதாய்; பெயரும் - நீங்கும்; சுடரும் - ஒளி வீசுகின்ற.
2. என்றூழ் - கதிரவன்.
4. வறும்கயம் - நீரில்லாது வறண்ட குளம்; துழைஇய - துழாவிய; இலங்குதல் - விளங்குதல்; மருப்பு - தந்தம்.
5. குறும் பொறை - சிறிய குன்று; அமர்துணை - விரும்பப்படும் துணையாகிய பெண்யானை; தழீஇ - தழுவிக்கொண்டு.
6. கொடுவரி - வளைந்த கோடுகளைக் கொண்ட; இரும்புலி - பெரிய புலி.
7. நெடுவரை - நீண்டுயர்ந்த மலை; சுரன் - பாலை வழி; இறந்தோர் - கடந்து சென்றவர்.

தோழி கூற்று

குறுந்தொகை 37 **பாலை பாடிய பெருங்கடுங்கோ**

திணை : பாலை

கூற்று

தோழி ‘கடிது வருவார்’ என்று ஆற்றுவித்தது. (கடிது வருவார் - விரைந்து வருவார்.)

கூற்று விளக்கம்

தலைவன் பிரிவினை ஆற்றாது மிகவும் வருந்திய தலைவியை நோக்கி, ‘தலைவர் மிகவும் அன்பு கொண்டவர்; விரைவில் திரும்புவார்’ என்று கூறித் தோழி தலைவியைத் தேற்றியது.

நசைபெரிது உடையர்; நல்கலும் நல்குவர்.
பிடிபசி களைஇய பெருங்கை வேழம்
மென்சினை யாஅம் பொளிக்கும்
அன்பின தோழி!அவர் சென்ற ஆறே.

தெளிவுரை

"தலைவி! தலைவர் உன்மீது மிகவும் விருப்பம் கொண்டவர்; விரைந்து வந்து உறுதியாய் அருளும் புரிவார். அவர் சென்றுள்ள வழி, பெண்யானையின் பசியைப் போக்குவதற்காகப் பெரிய துதிக்கையினைக் கொண்ட ஆண்யானை, மெல்லிய கிளைகளைக் கொண்ட யாமரத்தின் பட்டையை உரித்து, அதிலுள்ள நீரை அருந்தச்செய்யும் அன்புக்காட்சியினைக் கொண்டது. அதனைக் காணும் அவர், உன்னிடம் மேலும் விருப்பம் கொண்டவராகி, விரைந்து வந்து அருள் புரிவார். ஆதலின், நீ வருந்தாது ஆற்றியிரு!"

கருத்து

தலைவர், தம் வழியில் காணும் அன்புக் காட்சிகளைக் கண்டு உடனே உன்னிடம் திரும்புவார்.

குறிப்பு

இயல்பாகவே தலைவியிடம் அன்பும் அருளும் கொண்ட தலைவர், ஆண் யானையின் செயலைக் கண்டதும், 'ஆடவர் மகளிரிடத்து அன்பு கொண்டு பாதுகாக்க வேண்டும்' என்னும் கடமையுணர்வு மீதூர விரைவில் திரும்புவார் என்பது குறிப்பு.

இறைச்சி

பிடிபசி களைஇய பெருங்கை வேழம் மென்சினை யாஅம் பொளிக்கும் - பெண்யானையின் பசியைப் போக்கும் பொருட்டு ஆண்யானை யாமரத்தின் பட்டையை உரித்து, அதிலுள்ள நீரைப் பெண்யானையை அருந்தச் செய்யும் என்பதன் மூலம், தம் தலைவியின் துயரினைப் போக்க வேண்டும் என்னும் கருத்துள்ளவராய் உடனே திரும்புவார் என்னும் இறைச்சிப் பொருள் பெறப்படுகிறது.

சொற்பொருள்

1. நசை - விருப்பம்; நல்கல் - அருளுதல்.
2. பிடி - பெண்யானை; வேழம் - ஆண்யானை.
3. மென்சினை - மெல்லிய கிளை; யாஅம் - யா - ஒரு வகை மரம்; பொளிக்கும் - பட்டையை உரிக்கும் (அதிலுள்ள நீரினைப் பிடி பருகச் செய்யும்).
4. அன்பின - அன்புச்செயலைக் கொண்டது.

தோழி கூற்று

அகநானூறு 59 **மதுரை மருதனிளநாகனார்**

திணை : பாலை

கூற்று

தலைமகன் பிரிவின்கண் வேறுபட்ட கிழத்திக்குத் தோழி சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் பொருள் சேர்க்கப் பிரிந்தான். அவனது வருகை நீட்டித்தது. அதனால் பிரிவாற்றாது பெரிதும் வருந்தும் தலைவியிடம் தோழி, 'அவன் விரைந்து வருவான்' என ஆறுதல் சொன்னது.

தண்கயத்து அமன்ற வண்டுபடு துணைமலர்ப்
பெருந்தகை இழந்த கண்ணினை, பெரிதும்
வருந்தினை, வாழியர், நீயே! வடாஅது
வண்புனல் தொழுநை வார்மணல் அகன்துறை,
அண்டர் மகளிர் தண்தழை உடீஇயர்
மரம்செல மிதித்த மாஅல் போல,
புன்தலை மடப்பிடி உணீஇயர் அம்குழை,
நெடுநிலை யாஅம் ஒற்றி, நனைகவுள்
படிஞிமிறு கடியும் களிறே— தோழி!
சூர்மருங்கு அறுத்த சுடர்இலை நெடுவேல்,
சினம்மிகு முருகன் தண்பரங் குன்றத்து,
அந்துவன் பாடிய சந்துகெழு நெடுவரை,
இன்தீம் பைஞ்சுனை ஈரணிப் பொலிந்த
தண்நறுங் கழுநீர்ச் செண்இயல் சிறுபுறம்

தாம்பா ராட்டிய காலையும் உள்ளார்
வீங்குஇறைப் பணைத்தோள் நெகிழ, சேய்நாட்டு
அருஞ்செயற் பொருட்பிணி முன்னி,நப்
பிரிந்து,சேண் உறைநர் சென்ற ஆறே.

தெளிவுரை

"தலைவி! நீ வாழ்க! குளிர்ச்சி பொருந்திய குளத்தில் நிறைந்திருக்கும் வண்டினம் படியும் துணைமலர்கள் போன்ற உன் கண்களின் பேரழகினையெல்லாம் இழந்து (தலைவரை நினைந்து நினைந்து) மிகவும் வருந்தியிருக்கின்றாய்!

"சூரபன்மாவினையும் அவன் சுற்றத்தினையும் தொலைத்த ஒளி சுடரும் முனையினைக் கொண்ட நெடுவேலினைக் கொண்ட, சினம் மிகுந்த முருகன் கோவில் கொண்டிருக்குமிடம், குளிர்ச்சி பொருந்திய திருப்பரங்குன்றமாகும். நல்லந்துவனாரால் பாடப் பெற்ற சந்தன மரங்கள் செறிந்த, உயரமான அத் திருப்பரங்குன்றத்து மலையிலேயுள்ள, இனிய தீவிய பசுமை வாய்ந்த சுனையிலேயுள்ள, தண்ணிய நறிய செங்கழுநீர்ப் பூவாலியன்ற, ஒப்பனையினால் அழகுடன் விளங்கும், கொண்டை அசைகின்ற உன் முதுகினைத் தாம் பாராட்டிய காலத்தையும், நம் தலைவர் நினைத்தனர் இல்லையே!

"மிகுந்த சந்தினைக் கொண்ட மூங்கில்போலும் தோள்கள் மெலிவடையும்படியாகத் தொலைவிலுள்ள நாட்டிற்குச் சென்று செய்யும் அருஞ்செயலாகிய பொருளீட்டலையே நினைந்தார். நம்மைப் பிரிந்து சென்று, அத்தொலைதூர நாட்டிலேயே வாழ்கின்றார். அவர் சென்ற வழியில்,

"வட திசையில் உள்ள, நீர் வளம் அறாத யமுனையாற்றின் நெடிய மணலைக் கொண்ட அகன்ற நீர்த்துறையிலே நீராடிய ஆயர் மகளிர், தண்ணிய தழையாடையினை உடுத்துக் கொள்ளுமாறு, குருந்தமரம் வளைந்திட மிதித்து உதவியவன், திருமாலான கண்ணன். அவனைப்போல, ஆண்யானை மெல்லிய தலையினைக் கொண்ட இளைய தன் பிடி அழகிய தளிர்களை உண்ணுமாறு, உயர்ந்து நிற்கும் யா மரத்தின் கிளைகளை வளைத்துத் தருவதோடு, மதத்தால் நனைந்த தன்

கன்னத்திலே படியும் வண்டுகளையும் ஓட்டிக் கொண்டிருக்கும். ('அதனைக் காணும் அவரும் உன்னை நினைந்து உடனேயே வீடு திரும்புவார்' என்பது கருத்து.)"

கருத்து

சென்ற வழியில் களிறு, தன் பிடி உண்ண யாமரத்தின் கிளையை வளைத்துத் தரும் அன்பு கண்டு, உன்னை நினைந்து தலைவர் உடனே வருவார்; வருந்தாதே.

விளக்கம்

"அழகு நீங்கிய கண்களுடன் பெரிதும் வருந்தியிருப்பவளே! முருகன் உறைவதும், நல்லந்துவனாரால் பாடப் பெற்றதுமாகிய திருப்பரங்குன்றத்தில் உள்ள சுனையில் மலர்ந்த கழுநீர்ப்பூவால் ஒப்பனை செய்யப் பெற்ற கொண்டை அசையும் உன் முதுகினை அவர் பாராட்டி அன்பு செய்த காலத்தைத் தலைவர் நினைத்தார் இலர். உன் தோளை நெகிழுமாறு செய்து, பொருள் தேடத் தொலைநாட்டிற்குச் சென்றுள்ளார். வடக்கே யமுனை ஆற்றங் கரையில் ஆயர் மகளிர் தழையாடை உடுத்த, குருந்த மரத்தை வளைத்துத் தந்த கண்ணன்போல, பெண்யானை உண்ண, ஆண்யானை அழகிய தளிரைக் கொண்ட யா மரத்தின் கிளையை வளைத்துக் கொடுப்பதோடு மதத்தால் நனைந்த தன் கன்னத்தில் படியும் வண்டுகளையும் ஓட்டும். அந்த யானையின் அன்பைக் காணும் தலைவர் உடனே வருவார்; வருந்தாதே" என்று சொல்லித் தோழி, தலைவியை ஆற்றுவிக்கிறாள்.

வரலாற்றுக் குறிப்பு

நல்லந்துவனார் கடைச்சங்கப் புலவர்களுள் ஒருவர். அவர், பரிபாடல் செய்யுளில் முருகப்பெருமான் எழுந்தருளியுள்ள திருப்பரங்குன்றத்தைப் பற்றிப் பாடியுள்ளார் (பரி. 8).

தொன்மச் செய்தி

ஆயர் மகளிர் யமுனை ஆற்றில் நீராடும்போது அவர்கள் கரையில் இட்டு வைத்த ஆடைகளைக் கண்ணபிரான் எடுத்துச் சென்று அருகிலிருந்த குருந்த மரத்தின்மீது ஏறியிருந்தார். அவ்வேளை பலதேவர் அங்கு வரவே, அம்மகளிர் ஒருசேர மறைவதற்கு வேறு வழியின்மையால், அவர்கள் தம்

ஆடைகளை எடுத்துக்கொள்ளக் கண்ணன் தாம் ஏறி நின்ற குருந்த மரத்துக் கிளையினை மிதித்து வளைத்துத் தாழ்த்திக் கொடுத்தார் என்பது தொன்மச் செய்தி.

சொற்பொருள்

1. தண் - குளிர்ந்த; கயம் - குளம்; அமன்ற - நெருங்கின, நிறைந்த; படு - படியும்; துணை மலர் - தமக்குத் தாமே நிகரான மலர்கள்.
2. பெருந்தகை - பேரழகு; கண்ணினை - கண்ணிணைக் கொண்டவள்.
3. வடாஅது - வடதிசையில் உள்ள.
4. வண்புனல் - வளமிக்க நீர்; தொழுநை - யமுனை ஆறு; வார்மணல் - நெடிய மணல்.
5. அண்டர் - இடையர்; தண்தழை - குளிர்ச்சி பொருந்திய தழையாடை; உடீஇயர் - உடுப்பதற்காக.
6. மாஅல் - கண்ணன், திருமால்.
7. அம்குழை - மெல்லிய தளிர்.
8. நெடுநிலை - உயர்ந்து நிற்கும்; யாஅம் - யா மரம்; ஒற்றி - வளைத்துத் தந்து; நனைகவுள் - நனைந்த கன்னம்.
9. படி - படியும்; ஞிமிறு - வண்டு; கடியும் - துரத்தும், விரட்டும்; களிறு - ஆண்யானை.
10. சூர் - சூரபன்மன்; மருங்கு - உறவு; அறுத்த - ஒழித்த; சுடர் - ஒளி வீசும்.
11. பரங்குன்றம் - திருப்பரங்குன்றம் என்னும் மலை (மதுரைக்கு அருகில் உள்ளது).
12. அந்துவன் - நல்லந்துவனார் என்னும் கடைச்சங்கப்புலவர்; சந்து - சந்தன மரம்; கெழு - நிறைந்த; நெடுவரை - உயர்ந்த மலை.
13. இன்தீம் - இனிய தீவிய; பைஞ்சுனை - பசுமை வாய்ந்த சுனை; ஈரணி - பெரிய ஒப்பனை.
14. கழுநீர் - கழுநீர் மலர்; சென்னி - கொண்டை; சிறுபுறம் - முதுகு.
15. காலை - காலம்; உள்ளார் - நினையாதவராய்.
16. வீங்குஇறை - மிகுந்த சந்து; பணை - மூங்கில்; நெகிழ - மெலியும்படி; சேய்நாடு - தொலைவிலுள்ள நாடு.
17. பொருள் பிணி - பொருள் பற்று; முன்னி - நினைந்து; நப் பிரிந்து - நம்மைப் பிரிந்து.
18. சேண் - தொலைவு; உறைநர் - தங்கியிருப்பவர்; ஆறு - வழி.

தோழி கூற்று

ஐந்திணை ஐம்பது 32 **மாறன் பொறையனார்**

திணை : பாலை

கூற்று

தலைமகனது பிரிவுக்குறிப்பறிந்து ஆற்றாளாய தலைமகளைத் தோழி ஆற்றுவித்தது.

கூற்று விளக்கம்

தலைவனின் பிரிவுக்குறிப்பை அறிந்த தலைவி வருந்தியிருக்க, அவளை வருந்தாதிருக்குமாறு தோழி கூறியது.

விலங்கல், விளங்கிழாய்! செல்வரோ அல்லர்
அழல்பட்(டு) அசைந்த பிடியை – எழில்களிறு
கல்சுனைச் சேற்றிடைச் சின்னீரைக் கையால்கொண்(டு)
உச்சி யொழுக்கும் சுரம்.

தெளிவுரை

ஒளி பொருந்திய அணிகலன்களை அணிந்த தலைவியே! காட்டுத் தீயினில் அகப்பட்டு வருந்தும் பெண்யானைமீது அன்பு கொண்ட அழகிய ஆண்யானை, மலைச்சுனையில் இருந்த சேற்றோடு கூடிய சிறிய அளவுள்ள நீரினைத் தன் துதிக்கையால் வாரியெடுத்து அப்பெண்யானையின் தலை உச்சியில் வார்க்கும். இத்தகைய இயல்பைக் கொண்ட பாலை வழியிலே தலைவர் செல்வரோ? செல்ல மாட்டார்.

கருத்து

பாலை வழியில் ஆண்யானை, பெண்யானையினிடம் காட்டும் பேரன்பினைக் காணும் தலைவர், உன்னைப் பிரிவுத்துன்பத்தில் தவிக்க விடாது உடனே திரும்புவார்.

சொற்பொருள்

1. விலங்கல் - விலக்காதே, தடுக்காதே.
2. அழல்பட்டு - தீயில் அகப்பட்டு: அசைந்த - வருந்திய; பிடி - பெண் யானை; களிறு - ஆண்யானை.
3. கல் சுனை - மலைச்சுனை; சேறுஇடை - சேற்றோடு கூடிய.

4. உச்சி - தலை உச்சி; ஒழுக்கும் - ஒழுகச்செய்யும், வார்க்கும்; சில் நீரை - சிறிய அளவுள்ள நீரினை; கொண்டு - வாரியெடுத்து.

தோழி கூற்று

ஐந்திணை ஐம்பது 38 **மாறன் பொறையனார்**

திணை : பாலை

கூற்று

பிரிவின்கண் ஆற்றாளாயின தலைமகளைத் தோழி ஆற்றுவித்தது.

கூற்று விளக்கம்

தலைவன் பொருள்வயிற்பிரிய அப்பிரிவைப் பொறுத்துக்கொள்ளாத தலைவியைத் தோழி பொறுத்திருக்குமாறு தேற்றியது.

சுனைவாய்ச் சிறுநீரை எய்தாதென் றெண்ணிப்
பிணைமான் இனிதுண்ண வேண்டிக் – கலைமாத்தன்
கள்ளத்தின் ஊச்சும் சுரம்என்பர் காதலர்
உள்ளம் படர்ந்த நெறி.

தெளிவுரை

“நம் காதலர் மனம் விரும்பிச் சென்ற வழி, நீரற்ற பாலை நிலம். அங்குச் சுனையில் இருந்த சிறிதளவு நீர் இரு மான்கள் குடிப்பதற்குப் போதாதென்று கருதிய ஆண்மான், தன் பெண்மான் மட்டும் நன்கு குடிக்கவேண்டும் என்று பெரிதும் விரும்பி, தானும் குடிப்பதுபோல் பொய்யாய் உறிஞ்சும் என்று கூறுவர்” எனத் தோழி தலைவியிடம் கூறினாள்.

கருத்து

‘அன்பின் தன்மையை அறிந்தவர், தலைவர்; ஆண்மானின் செயலைக் காணும் அவர் விரைவில் வருவார், வருந்தாதே’ என்று தோழி கூறித் தலைவியைத் தேற்றினாள்.

சொற்பொருள்

1. சுனைவாய் - சுனையிலுள்ள; சிறுநீர் - சிறிதளவு நீர்; எய்தாது - (பெண்மான் குடிக்கப்) போதாது.

2. பிணைமான் - பெண் மான்; கலைமா - ஆண்மான்.
3. கள்ளத்தின் - பொய்யாக; ஊச்சும் - (குடிப்பது போல) உறிஞ்சும்.
4. படர்ந்த - விரும்பிச் சென்ற.

பிரிவிடை தலைவி மெலிந்தது.

தலைவி கூற்று

நற்றிணை 153 **தனிமகன்**

திணை : பாலை

கூற்று

பிரிவிடை மெலிந்த தலைமகள் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் பிரிந்தபொழுது துன்புற்ற தலைவியின் உடல் மெலிந்தது. அப்போது தன் நெஞ்சம் அவரிடம் சென்று விட்டதால் தன் உடம்பு மட்டும் தனித்து இங்கு இருக்கிறதெனத் தலைவி வருந்திக் கூறியது.

குணகடல் முகந்து, குடக்குஏர்பு இருளி,
மண்திணி ஞாலம் விளங்கக் கம்மியர்
செம்புசொரி பானையின் மின்னிஎவ் வாயும்
தன்தொழில் வாய்த்த இன்குரல் எழிலி
தென்புல மருங்கில் சென்றுஅற் றாங்கு,
நெஞ்சம் அவர்வயின் சென்றென ஈண்டுஒழிந்து,
உண்டல் அளித்துஎன் உடம்பே விறல்போர்
வெஞ்சின வேந்தன் பகைஅலைக் கலங்கி,
வாழ்வோர் போகிய பேர்ஊர்ப்
பாழ்காத் திருந்த தனிமகன் போன்றே.

தெளிவுரை

கிழக்குக்கடலில் சென்று படிந்து, நீரை உண்டு மேலெழுந்த மேகம் படர்ந்ததால் உலகெங்கும் இருள்படர்ந்தது. அம்மேகம் கம்மியர் பானையைக் கடையும்போது தீப்பொறி எழுவதுபோல மின்னி, இடிஇடித்து, மழை பெய்து முடிந்தவுடன் தெற்குத்திசை

நோக்கிச் சென்று மறைந்தது. அதுபோல் என் நெஞ்சம் இங்கே தங்காமல் அவரிடம் சென்று தங்கிவிட்டது. வலிமை மிக்க போரைச் செய்யவல்ல வெஞ்சின வேந்தனின் படை ஓர் ஊரை அழித்ததால் அதற்குக் கலங்கி அவ்வூர் மக்கள் அனைவரும் வெளியேறிச் சென்றுவிட்டனர்; பாழடைந்த அப்பெரிய ஊரைத் தனி ஒருவன் காவல் செய்திருந்ததுபோல, உண்ணுவதால் காக்கப்படும் என் உடம்பு மட்டும் இங்குத் தனியாய்த் தலைவன் மீண்டும் வருவான் என்னும் நம்பிக்கையில் காத்திருக்கிறது.

கருத்து

பகைவர்களால் பாழ்படுத்தப்பட்ட ஊரில் எல்லோரும் வெளியேறிவிட, தனி ஒரு மனிதன் அப்பெரிய ஊரைக் காத்திருந்ததுபோல, என் உடல் மட்டும் இங்கே தலைவன் வருகைக்காகக் காத்திருக்கிறது.

குறிப்பு

இப்பாடலை இயற்றிய ஆசிரியரின் இயற்பெயர் தெரியவில்லை. 'பாழ் பட்ட ஊரைக் காத்திருந்த தனிமகன்' எனும் அரிய செய்தியைப் பாடலில் கூறியிருப்பதால் இவர் 'தனிமகன்' என்றே வழங்கப்படுகிறார்.

சொற்பொருள்

1. குணகடல் - கிழக்குக்கடல்; குடக்கு - மேற்கு; ஏர்பு - எழுந்து.
2. ஞாலம் - உலகம்; கம்மியர் - கம்மாளர்.
3. செம்புசொரி - செம்பை உருக்கிச் செய்யும்; எவ்வாயும் - எல்லா இடத்தும்.
4. எழிலி - மேகம்.
5. தென்புலம் - தெற்குத்திசை; அற்றாங்கு - மறைதல் போல.
6. ஈண்டு - இங்கே; ஒழிந்து - தங்காமல்.
7. உண்டல் அளித்து - உண்ணுதலால் மட்டும்; அளித்து - காக்கப் படுகிறது; விறல் - வலிமை.
8. அலைக் கலங்கி - வருத்தியதால் கலக்கமுற்று.
9. வாழ்வோர் - வாழும் மக்கள்; போகிய - வெளியேறிய; பேர் ஊர் - பெரிய ஊர்.
10. பாழ் - பாழிடம்; தனிமகன் - தனியான வீரன்.

தலைவி கூற்று

நற்றிணை 241 **மதுரைப் பெருமருதனார்**

திணை : பாலை

கூற்று

தலைமகள் வன்புறை எதிரழிந்தது. (வன்புறை - வற்புறுத்திக் கூறுதல்; எதிரழிதல் - மாறுபட்டுக் கூறுதல்; ஆற்றியிருக்குமாறு வற்புறுத்திக் கூறிய தோழியோடு தலைமகள் மாறுபட்டுக் கூறுதல்.)

கூற்று விளக்கம்

தலைவன் பிரிவினால் தலைவி வருந்தியதால் அவள் உடல் நலனழிந்தாள். அவளைத் தோழி ஆற்றியிருக்குமாறு கூறினாள். தல்லவி அதனை மறுத்துத் தன் நிலை பற்றித் தோழியிடம் கூறியது.

உள்ளார் கொல்லோ தோழி கொடுஞ்சிறை
புள்அடி பொறித்த வரியுடைத் தலைய
நீர்அழி மருங்கின் ஈர்அயிர் தோன்ற,
வளரா வாடை உளர்புநனி தீண்டலின்,
வேழ வெண்பூ விரிவன பலவுடன்,
வேந்துவீசு கவரியின், பூம்புதல் அணிய,
மழைகழி விசும்பின் மாறி ஞாயிறு
விழித்துஇமைப் பதுபோல் விளங்குபு மறைய,
எல்லை போகிய பொழுதின் எல்உற,
பனிக்கால் கொண்ட பையுள் யாமத்து,
பல்இதழ் உண்கண் கலுழ,
நில்லாப் பொருட்பிணிப் பிரிந்திசி னோரே?

தெளிவுரை

“தோழி! நீர் வற்றிய இடங்களிலெல்லாம் வளைந்த சிறகுகளைக் கொண்ட பறவைகளின் காலடிச்சுவடுகள் படிந்து வரிகள் போலத் தோன்றும். அவ்விடங்களின் மேலே குளிர்ச்சி பொருந்திய நுண்மணல் படியுமாறு மெல்லென வாடைக்காற்று வீசியபடியே இருக்கும். அக்காற்று மோதுதலால் பேய்க் கரும்பின் வெண்மையான பூக்கள் விரிந்து, வேந்தனுக்கு வீசும் கவரிபோல மென்மையான புதர் தோறும் அழகுறத் தோன்றும். மழை பெய்து கழிந்த மேகங்கள் நீந்திச் செல்லும் வானத்தில்,

கண்களைத் திறந்தும் மூடியும் இருப்பதுபோல ஞாயிறு வெளிப் பட்டும் மறைந்தும் தோன்றும். அத்தகைய பகற்பொழுது கழிந்து இரவும் வந்து சேரும். பனி மிகப் பெருகிப் பெய்யும் நள்ளிரவில் மை எழுதப்பெற்ற இமை கொண்ட என் கண்கள் கண்ணீர் பெருக்கி அழும். இத்தகைய நம் துன்பத்தைக் கருதாதவராய் நிலையில்லாப் பொருள் கருதிப் பிரிந்தவர் நம்மை நினைக்க மாட்டாரோ? அவர் பிரிவை நான் எவ்வாறு ஆற்றுவேன்?"

கருத்து

நிலையில்லாப் பொருளை நாடிச் சென்றுள்ள தலைவர், நம்மை நினை யாரோ என்று வருந்தியிருக்கும் நான், எங்ஙனம் ஆற்றியிருக்க இயலும்?

விளக்கம்

"காதலர் பெறுவதற்காகச் சென்றுள்ள பொருள் நிலை யில்லாத் தன்மை வாய்ந்தது. அது போன்றதே இளமையும், அது தரும் இன்பமும். இவற்றின் இயல்பை நோக்காது பொருள் ஒன்றையே நோக்கிக் காதலர் சென்றதனால் என் கண்களில் நீர் பெருகிச் சொரிகின்றது. கதிரவன் மறைந்துவிட்டான். இரவுப் பொழுதும் வந்துவிட்டது. பனி பெய்யத் தொடங்கிவிட்டது. இந்நிலையிலும் தலைவர் நம்மைப்பற்றி நினைக்கவே மாட் டாரோ" என்று கூறித் தலைவி தன் ஆற்றாமையை வெளிப் படுத்துகிறாள்.

சொற்பொருள்

1. உள்ளார் கொல் - நினைத்துப் பார்க்க மாட்டாரோ?; கொடுஞ் சிறை - வளைந்த தன்மையினைக் கொண்ட இறக்கை.
2. புள்அடி - பறவையின் கால் அடி; தலைய - இடத்தினைக் கொண்ட.
3. நீர் அழி மருங்கு - நீர் வற்றிய பக்கம்; ஈர் - குளிர்ந்த, ஈரமான; அயிர் - நுண்மணல்.
4. வளரா - மெல்லிய; உளர்பு - வீசுதல்; தீண்டல் - மோதுதல்.
5. வேழம் - பேய்க்கரும்பு.
6. வேந்து - மன்னன்; கவரி - வெண்சாமரம்; அணிய - அழகிய காட்சி வழங்க.
7. மழை கழி - மழை பெய்து கழிந்த மேகம்.

8. மாறி விழித்து இமைப்பது போல் - மாறி மாறிக் கண்களைத் திறந்து மூடி இமைத்தாற்போல.
9. எல்லை போகிய - பகற்பொழுது கழிந்த; எல் - இரவு.
10. பனிக்கால் கொண்ட - பனி பெய்யத் தொடங்கிய; பையுள் - துன்பம்.
11. கலுழ - நீர் சொரிய.
12. நில்லா - நிலைக்கும் தன்மை இல்லாத; பிரிந்திசினோர் - பிரிந்து சென்றவர்.

தலைவி கூற்று

ஐங்குறுநூறு 340 **ஓதலாந்தையார்**

திணை : பாலை

கூற்று

தலைமகன் பிரிந்துழி, 'கடிதின் வருவர்' என ஆற்றியிருந்த தலைமகள், அவன் நீட்டித்துழி ஆற்றாது தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் பிரிந்தபோது அவன் விரைவில் திரும்பிவிடுவான் எனத் தலைவி ஆற்றியிருந்தாள். அவன் திரும்பும் காலம் நீட்டித்தபோது துன்பத்தை ஆற்ற இயலாது தலைவி தோழியிடம் சொல்லியது.

அம்ம வாழி தோழி! காதலர்
உள்ளார் கொல்,நாம் அருள்அற் றனம்கொல்?
விட்டுச் சென்றனர் நம்மே!
தட்டைத் தீயின் ஊர்அலர் எழவே!

தெளிவுரை

தோழி! வாழி! மூங்கிலில் பற்றிய தீப்போல அலர் எழும்படி நம்மை விட்டுச் சென்ற நம் காதலர் நம்மை நினைக்க மாட்டாரோ? அவர் அருள் காட்டுதற்குரிய தகுதியை நாம் இழந்துவிட்டோமா?

கருத்து

நம்மைப் பிரிந்து சென்ற தலைவர் நம்மை நினையாரோ?

சொற்பொருள்

2. உள்ளார் கொல் - நினைக்க மாட்டாரோ?; அருள் அற்றனம் கொல்? - அவர் அருளை இழந்துவிட்டோமா?
3. நம்மே - நம்மை.
4. தட்டை - மூங்கில்; அலர் - பழிச்சொல்.

தலைவி கூற்று

கலித்தொகை 11 **பாலைபாடிய பெருங்கடுங்கோ**

திணை : பாலை

கூற்று

தலைமகள், மூன்றன் பகுதி தலைமகன் கூறிப் பொருள்வயிற்பிரிகின்ற காலத்துக் 'காடு கடியவாயினும், இவ்வகைப்பட்டனவும் உள' என்று கூறினார்; அவை காண்டலின் வருவர்' எனத் தோழிக்குக் கூறி, அதற்கு நிமித்தமுங் கூறி ஆற்றுவித்தது.

கூற்று விளக்கம்

தலைவன் பொருள் சேர்ப்பதற்காகப் பிரியத் திட்டமிட்டான். தலைவியிடம் செல்வமானது அறம், பொருள், இன்பம் ஆகிய மூன்றையும் தரும் என்று கூறித் தனது பிரிவையும் தெரியப்படுத்தினான். மேலும், தான் செல்லும் காட்டுவழி வெம்மையானது ஆயினும், சில நல்ல காட்சிகளும் அங்கு உண்டு என்று கூறிப் பிரிந்தான். அவன் பிரிவால் தலைவி வருந்தியதைக் குறிப்பால் அறிந்த தோழியும் வருந்தினாள். அப்பொழுது தலைவி, "நீ வருந்தாதே! தலைவர் காட்டில் உள்ள நல்ல காட்சிகளை எடுத்துக் கூறினார். அவற்றைப் பார்த்ததும் திரும்பிவிடுவார்" என்று கூறித் தோழியைச் சமாதானப்படுத்தியது.

(மூன்றன் பகுதி கூறுதலாவது, 'அறத்தினாற் பொருளாக்கி அப்பொரு ளால் காமம் நுகர்வேன் என்றலாம்' என்றார் நச்சினார்க்கினியர்.)

தரவு

'அரிதுஆய அறன்எய்தி அருளியோர்க்கு அளித்தலும்,
பெரிதுஆய பகைவென்று பேணாரைத் தெறுதலும்,
புரிவுஅமர் காதலின் புணர்ச்சியும் தரும்'எனப்

பிரிவுஎண்ணிப் பொருள்வயின் சென்றநம் காதலர்
வருவர்கொல், வயங்குஇழாய்! வலிப்பல்யான்; கேஎள்,இனி;

தாழிசை

'அடிதாங்கும் அளவுஇன்றி, அழல்அன்ன வெம்மையால்,
கடியவே கனங்குழாஅய்! காடுஎன்றார்;' அக்காட்டுள்,
துடிஅடிக் கயம்தலை கலக்கிய சின்னீரைப்
பிடியூட்டிப் பின்உண்ணும் களிறுஎனவும் உரைத்தனரே.

'இன்பத்தின் இகந்துஒரீஇ, இலைதீந்த உலவையால்,
துன்புறூஉம் தகையவே காடு,என்றார்' அக்காட்டுள்,
அன்புகொள் மடப்பெடை அசைஇய வருத்தத்தை
மென்சிறக ரால்ஆற்றும், புறவுஎனவும் உரைத்தனரே.

'கல்மிசை வேய்வாடக் கனைகதிர் தெறுதலான்,
துன்னரூஉம் தகையவே காடு,என்றார்' அக்காட்டுள்,
இன்னிழல் இன்மையான் வருந்திய மடப்பிணைக்குத்
தன்நிழலைக் கொடுத்துஅளிக்கும், கலைஎனவும் உரைத்தனரே.

எனவாங்கு–

சுரிதகம்

இனைநலம் உடைய கானம் சென்றோர்
புனைநலம் வாட்டுநர் அல்லர்; மனைவயின்
பல்லியும் பாங்குஒத்து இசைத்தன;
நல்எழில் உண்கணும் ஆடுமால், இடனே.

தெளிவுரை

" 'நகைகளை அணிந்து விளங்கும் தோழியே! செல்வம் தன்னைத் தேடியவர்க்கு அவர்கள் விரும்பியவற்றைக் கொடுத்து, எளிதில் அடையவியலாத அறத்தின் பயனை அடையச்செய்யும்; பகைவரை அழித்துப் பகையைத் தீர்த்துக்கொள்ளும்; அன்போடு ஒன்றுபட்டு வாழ்ந்து கொண்டிருப்பவர்க்கு இல்லற இன்பம் தரும். இம்மூன்று பயனையும் செல்வம் கொடுக்கும். அதைச் சேர்ப்பதற்காகவே தலைவர் பிரிந்து சென்றுள்ளார். ஆனால், அவர் பயணத்தைத் தொடராமல் திரும்பி வருவார் என உறுதியாய்க் கூறுவேன். அதற்குக் காரணம் கூறுகின்றேன், கேள்."

"தலைவர், 'காடு, காலடிகள் தாங்கவியலாத வெம்மையைக் கொண்டது' என்றார். உடனே, அக்காட்டினுள் உடுக்கையைப் போன்ற அடிகளைக் கொண்ட யானைக்கன்று, சிறிதளவே கிடந்த தண்ணீரைக் கலக்கிவிட்டது; அந்நீரைக் குடித்து ஆண்யானை தன் தாகத்தை முதலில் தீர்த்துக்கொள்ள விரும்பாமல், பெண்யானையைக் குடிக்கச்செய்து பிறகு எஞ்சியிருப்பதைத் தான் குடிக்கும்' என்றும் கூறினார்."

" 'இன்பக்காட்சிகள் நீங்கி, இலைகளெலாம் தீய்ந்து கிடக்கும் காடு, நடப்பவர்க்கு மிகவும் துன்பத்தைத் தரும் தன்மை கொண்டது' என்று கூறிய தலைவர், உடனே, 'அக்காட்டில் இளமையான பெண்புறா வெயிலில் வருந்திக் களைப்புற, ஆண்புறா தன் சிறகுகளை அசைத்து வீசி அப்பெண்புறாவின் களைப்பை நீக்கும்' என்றும் கூறினார்."

" 'மலை மேல் மூங்கில்களெல்லாம் வறட்சி கொள்ளுமாறு கடுமையான வெயில் எரிப்பதால் காடு நெருங்க இயலாததாய் உள்ளது' என்றார், தலைவர். ஆனால், 'நிழல் கிட்டாமல் வருந்திய பெண்மானை ஆண்மான் தன் நிழலில் நிற்கச்செய்து பாதுகாக்கும்' என்றும் கூறினார்.

"இத்தகைய அரிய தன்மைகளைக் கொண்ட காட்டில் செல்லும் தலைவர், என் புதுமை அழகு கெடும்படி செயல்பட மாட்டார். உடனே திரும்பி வருவார். அதற்கு நல்ல அறிகுறியாகப் பல்லியும் வீட்டில் இணக்கமான இடத்தில் நின்று ஒலிக்கிறது; என் இடக்கண்ணும் துடிக்கின்றது" என்று கூறித் தலைவி தோழியைச் சமாதானம் அடையுமாறு செய்கிறாள்.

கருத்து

காடுகள் வெம்மையின் கொடுமையைக் கொண்டிருந்தாலும், அங்கு நிகழும் காட்சிகள் தலைவரின் பொருளாசையைப் போக்கி அருளாசையை ஊட்டுவிக்கும்; ஆதலின், உடனே திரும்பிவிடுவார்.

சொற்பொருள்

1. அருளியோர் - தமக்கு அருள் செய்தோர்.
2. பேணார் - பகைவர்; தெறுதல் - அழித்தல்.
3. புரிவு - அன்பு; அமர் - ஒன்றுபட்ட.

5. வலிப்பல் - உறுதியாய்ச் சொல்லுவேன்.
6. அடி - பாதம்; அழல் - நெருப்பு.
7. கடிய - கடுமையானது.
8. துடி - உடுக்கை; கயந்தலை - யானைக்கன்று; சின்னீர் - சிறிதளவு நீர்.
9. பிடி - பெண்யானை; களிறு - ஆண்யானை.
10. இகந்து - விலகி; ஒரீஇ - நீங்கி; தீந்த - தீய்ந்து உலர்ந்த; உலவை - தழை, இலை.
11. தகையவே - தன்மை வாய்ந்தது.
12. மடப்பெடை - இளமையான பெண்புறா; அசைஇய - வருந்திய.
13. சிறகர் - சிறகு; புறவு - புறா; ஆற்றும் - நீக்கும்.
14. கல் - மலை; மிசை - மேலே; வேய் - மூங்கில்; கனைகதிர் - அடர்ந்த சூரியக்கதிர், கடுமையான வெயில்; தெறுதல் - எரித்தல்.
15. துன்னரூஉம் - துன்ன + அரும் - நெருங்குதற்கு அரியதான.
16. இன்னிழல் - இனிய நிழல்.
17. கலை - ஆண் மான்.
19. இனை - இத்தகைய; நலம் - தன்மை.
20. புனைநலம் - புதுமையான அழகு; வாட்டுநர் - கொடுப்பவர்; மனைவயின் - வீட்டில்.
21. பாங்கு - இணக்கம்; இசைத்தல் - ஒலித்தல்.
22. ஆடும் - துடிக்கும்; இடனே - இடப்பக்கம்.

தலைவி கூற்று

குறுந்தொகை 4 **காமஞ்சேர் குளத்தார்**

திணை : நெய்தல்

கூற்று

பிரிவிடை ஆற்றாள் எனக் கவன்ற தோழிக்குக் கிழத்தி உரைத்தது. (கவன்ற - கவலைப்பட்ட.)

கூற்று விளக்கம்

தலைவன் பொருள்வயிற்பிரிந்து சென்றான்; அப்பிரிவை ஆற்றாது தலைவி இறந்துபடுவளோ எனக் கவலையுற்ற தோழிக்கு, ‘நான் ஆற்றியிருப்பேன்’ என்று தலைவி கூறியது.

நோம்என் நெஞ்சே; நோம்என் நெஞ்சே;
இமைதீய்ப்பு அன்ன கண்ணீர் தாங்கி,
அமைதற்கு அமைந்தநம் காதலர்
அமைவுஇலர் ஆகுதல், நோம்என் நெஞ்சே.

தெளிவுரை

தோழி! என் நெஞ்சம் வருந்துகின்றது. கண் இமைகளைச் சூடு செய்வது போன்ற வெம்மையினைக் கொண்ட என் கண்ணீரைத் தம் கையால் துடைத்து, என்னுடன் கலந்து மகிழ்ந்திருந்த நம் தலைவர் இப்பொழுது நம்முடன் தங்கியிராது பிரிந்திருக் கின்றார் என்று என் நெஞ்சம் வருந்துகிறது!

கருத்து

அவர் இப்போது என்னோடு இல்லை என்பதற்காக வருந்துகிறேன்.

குறிப்பு

அவர் முன்பு என் கண்ணீரைத் துடைத்துவிட்டு அருகில் இருந்தார். அவர் விரைவில் ஆறுதல் அளிக்க வருவார்; அவர் வரும்வரை ஆற்றியிருப்பேன்.

சொற்பொருள்

1. நோம் - வருந்தும்.
2. தாங்கி - கையால் துடைத்து.
3. அமைதற்கு அமைதல் - கலந்திருந்து மகிழ்தல்.
4. அமைவிலர் ஆகுதல் - தங்கியிராது பிரிந்திருத்தல்.

தலைவி கூற்று

குறுந்தொகை 5 **நரிவெரூஉத்தலையார்**

திணை : நெய்தல்

கூற்று

பிரிவிடை ஆற்றாளெனக் கவன்ற தோழிக்குக் கிழத்தி உரைத்தது.
(கவன்ற - கவலைப்பட்ட.)

கூற்று விளக்கம்

பொருள் தேடி வரத் தலைவன் பிரிந்ததால் மிகவும் வருந்திய தலைவியின் நிலை கண்டு கவலையுற்ற தோழியிடம் தலைவி காமநோயின் கொடுமையைச் சொல்லி வருந்தியது.

அதுகொல், தோழி! காம நோயே?
வதிகுருகு உறங்கும் இன்நிழல் புன்னை,
உடைதிரைத் திவலை அரும்பும் தீம்நீர்,
மெல்லம் புலம்பன் பிரிந்தென,
பல்இதழ் உண்கண் பாடுஒல் லாவே.

தெளிவுரை

தன்னிடம் தங்கும் குருகுகள் உட்கார்ந்து உறங்க இனிய நிழலைத் தருகின்றது, புன்னை மரம்; கரையை மோதி அலைக்கும் கடலலைகளின் துளிகள் புன்னையின் அரும்புகளை மலர்விக் கின்றன. அத்தகைய நீர்ப்பரப்பினைக் கொண்ட மென்மையான கடற்கரையை உடையவன், நம் தலைவன். அவன் பிரிந்ததால் பல இதழ்களைக் கொண்ட தாமரை மலர் போன்ற மையுண்ட என் கண்கள் இமை பொருந்தி உறங்க இயலாதன ஆயின. தோழி! காமநோய் என்பது இதுதானோ?

கருத்து

தலைவனின் பிரிவால் நான் துயிலொழிந்தேன்.

விளக்கம்

கடற்கரையில் குளிர்ந்த புன்னை மரத்தில் உறங்கும் குருகுகளின் தூக்கத்தை மரத்தில் மோதும் கடலலைகளின் துளிகள் கெடுக்கும். அத்தகைய கடற்கரையைக் கொண்டவன்

தலைவன் என்பதால் நானும் உறங்க வேண்டிய இல்லத்தில் உறங்க இயலாதவாறு வருந்தியிருக்கிறேன்.

சொற்பொருள்

1. அதுகொல் - அதுதானோ?
2. வதி - வதிதல் - தங்குதல்; குருகு - நாரை, கொக்கு; புன்னை - புன்னை மரம்.
3. உடைதிரை - திரை உடை - உடைந்த அலையில்; திவலை - சிதறும் நீர்த்துளி; தீம்நீர் - இனிய நீர்ப்பரப்பு.
4. புலம்பன் - கடற்கரைத் தலைவன்.
5. பாடு - படுதல், இமை பொருந்துதல்; ஒல்லாவே - இயலாதன ஆயின.

தலைவி கூற்று

குறுந்தொகை 41 **அணிலாடு முன்றிலார்**

திணை : பாலை

கூற்று

பிரிவிடை வேறுபாடு கண்டு கவன்ற தோழிக்குக் கிழத்தி உரைத்தது.

கூற்று விளக்கம்

தலைவன் பிரிந்திருந்த காலத்தில் தலைவியின் மேனி பொலிவிழந்திருப்பது கண்டு வருந்திய தோழியிடம், 'தலைவர் இருந்தால் மகிழ்வேன்; பிரிந்தால் வருந்துவேன்' எனத் தலைவி சொல்லியது.

காதலர் உழையர் ஆகப் பெரிதுஉவந்து,
சாறுகொள் ஊரின் புகல்வேன் மன்ற;
அத்தம் நண்ணிய அம்குடிச் சீறூர்
மக்கள் போகிய அணில்ஆடு முன்றிற்
புலப்பில் போலப் புல்லென்று
அலப்பென் தோழி!அவர் அகன்ற ஞான்றே.

தெளிவுரை

தோழி! காதலர் என் பக்கத்தில் இருக்கும்போது, விழா நடந்து கொண்டிருக்கும் ஊரிலுள்ள மக்கள் மகிழ்வதைப்போல நானும் நிச்சயமாய் மகிழ்ந்திருப்பேன். அவர் என்னைவிட்டுப்

பிரிந்துபோன காலத்தில், பாலைநில வழியில் உள்ள அழகிய சிற்றூரில் ஆள் நடமாட்டமில்லாமல் மக்களனைவரும் நீங்கிச் சென்றதும் அணில்கள் விளையாடிக்கொண்டிருக்கும் முற்றத்தைக் கொண்ட தனிமைப்பட்ட இல்லம்போலப் பொலி விழந்து வருந்தி இருப்பேன்.

கருத்து

தலைவர் என்னுடன் இருந்தால் மகிழ்வேன்; பிரிந்தால் வருந்துவேன்.

குறிப்பு

'அணிலாடு முன்றில்' எனும் அழகுத்தொடரை உவமையாய்க் கூறியது கருதி, இயற்பெயர் அறியவியலாத இப்பாடல் ஆசிரியருக்கு 'அணிலாடு முன்றிலார்' என்றே பெயர் சூட்டினர்.

சொற்பொருள்

1. உழையர் ஆக - அருகில் இருக்க.
2. சாறு - விழா; புகல்வேன் - விரும்பி மகிழ்ந்திருப்பேன்; மன்ற - உறுதியாய்.
3. அத்தம் - பாலைநில வழி; நண்ணிய - பொருந்திய.
5. புலப்பு இல் - தனிமைப்பட்ட வீடு; புல்லென்று - பொலிவிழந்து.
6. அலப்பென் - வருந்துவேன்; ஞான்று - பொழுது.

தலைவி கூற்று

குறுந்தொகை 154 **மதுரைச் சீத்தலைச்சாத்தன்**

திணை : பாலை

கூற்று

பொருள்வயிற்பிரிந்த தலைமகனை நினைந்து தலைமகள் தோழிக்கு உரைத்தது.

கூற்று விளக்கம்

பொருளீட்டும்பொருட்டுத் தன்னைப் பிரிந்து சென்ற தலைவனை நினைந்து, 'என்னைப் பிரிந்து நெடுந்தூரத்தில் தங்கும் வல்லமையை அவர் எங்ஙனம் பெற்றார்?' என்று தலைவி தோழியை நோக்கி வினவியது.

யாங்குஅறிந் தனர்கொல் தோழி! பாம்பின்
உரிநிமிர்ந் தன்ன உருப்புஅவிர் அமையத்து,
இரைவேட்டு எழுந்த சேவல் உள்ளிப்
பொறிமயிர் எருத்தின் குறுநடைப் பேடை
பொரிகாற் கள்ளி விரிகாய் அம்கவட்டுத்
தயங்க இருந்து புலம்பக் கூஉம்
அருஞ்சுர வைப்பின் கானம்
பிரிந்து,சேண் உறைதல் வல்லு வோரே?

தெளிவுரை

"தோழி! தலைவர் கடந்து சென்ற பாலை வழியில், நண்பகலில், பாம்பின் உரிந்த தோல் (சட்டை) மேலெழுந்து காணப்படுவது போல் வெயிலொளி விளங்கித் தோன்றும். அங்கே ஆண்புறா ஒன்று இரை தேடுவதற்காகப் பறந்து சென்றது. புள்ளிகள் பொருந்திய கழுத்தையும் குறுக அடியிட்டு நடக்கும் நடையையும் கொண்ட அதன் பெண்புறா வெயில் தாங்க இயலாமல், பொரிந்த அடிகளைக் கொண்ட வெடித்த காயைக் கொண்ட கள்ளி மரத்தின் அழகிய பிளவுபட்ட கிளையிலே ஏறித் தயக்கத்துடன் அமர்ந்தவாறு, தனிமைத் துயரால் தன் ஆணை கூவி அழைத்துக் கொண்டிருக்கும். கடத்தற்கு அரிதான இப்பாலைநிலத்தைக் கடந்து சென்று, நம்மைப் பிரிந்து, நெடுந்தொலைவில் தங்கியிருக்கும் வல்லமையை நம் தலைவர் எவ்வாறு பெற்றாரோ?" என்று தலைவி தோழியிடம் வினவினாள்.

கருத்து

என்னைப் பிரிந்து செல்லும் வல்லமையைத் தலைவர் எவ்வாறு பெற்றாரோ?

விளக்கம்

தலைவர் தனிமைத்துயரைப் பறவைகளிடத்தும் கண்டிரங்கும் அருள் கொண்டவர்; காட்டில் அக்காட்சியைக் கண்டபோது நம்மை நினைத்து மீண்டிருப்பார்; அவ்வாறு மீளாது சென்ற இடத்திலேயே தங்கும் வன்மை அவரிடம் எவ்வாறு ஏற்பட்டது?

சொற்பொருள்

2. உரி - உரிந்த தோல் (பாம்புச்சட்டை); உருப்பு - ஒளி, வெப்பம்; அவிர் - விரிகின்ற; அமையம் - நேரம்.
3. வேட்டு - விரும்பி; உள்ளி - நினைந்து.
4. பொறிமயிர் - புள்ளிகளைக் கொண்ட மயிர்; எருத்து - கழுத்து.
5. பொரிகால் - பொரிந்த அடிப்பகுதி; விரிகாய் - வெடித்த காய்; அம்கவடு - அழகிய கிளை.
6. புலம்ப - தனிமை; கூஉம் - கூவும்.
8. சேண் - நெடுந்தொலைவு.

தலைவி கூற்று

குறுந்தொகை 190 **பூதம்புல்லன்**

திணை : முல்லை

கூற்று

பிரிவிடை ஆற்றாளாகிய தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் பிரிந்த காலத்தில் ஆற்றாமை மிக்க தலைவி, 'என் துன்பத்தைத் தலைவர் நினைத்தும் பாராரோ?' எனத் தோழியிடம் சொல்லியது.

நெறிஇருங் கதுப்பொடு பெருந்தோள் நீவி,
செறிவளை நெகிழச் செய்பொருட்கு அகன்றோர்
அறிவர்கொல் வாழி தோழி! பொறிவரி
வெஞ்சின அரவின் பைந்தலை துமிய
உரவுஉரும் உரறும் அரைஇருள் நடுநாள்,
நல்ஏறு இயங்குதொறு இயம்பும்
பல்ஆன் தொழுவத்து ஒருமணிக் குரலே?

தெளிவுரை

தோழி! நெளிவினைக் கொண்ட என் கரிய கூந்தலையும், பெரிய தோள்களையும் தடவிக் கொடுத்து என்னைத் தேற்றி, இறுகச் செறிந்த என் வளையல்கள் நெகிழும்படியாய்த் தாம்

ஈட்டும் பொருளின் பொருட்டு என்னைப் பிரிந்து சென்றார், தலைவர். புள்ளிகளையும் வரிவரியான கோடுகளையும், மிக்க சினத்தையும் கொண்ட பாம்புகளின் பசுமையான படம் கொண்ட தலைகள் துண்டித்து விழும்படியாக வலிமையான இடி முழக்கமிடுகின்ற இரவின் நடுயாமப்பொழுதில் பல பசுக்களையுடைய தொழுவத்தில் நல்ல காளை ஒன்று, அங்குள்ள பசுக்களை விரும்பிச் செல்லும்போது அக் காளையின் கழுத்தில் கட்டப்பட்டுள்ள ஒற்றை மணியின் குரலை நம் தலைவர் கேட்டிருக்க மாட்டாரோ?

கருத்து

இங்கே நான் படும் துன்பத்தைத் தலைவர் அறியார் போலும்!

விளக்கம்

இடிஇடித்து மழை பெய்யும் நள்ளிரவில், பசுக்கள் பல உள்ள தொழுவத்தில் காளை ஒன்று அங்குமிங்கும் போய்க்கொண் டிருக்கின்றது. அது அசையுந்தோறும் அதன் கழுத்தில் கட்டப்பட்டிருக்கும் மணியின் ஓசை கேட்கிறது. அந்த மணியோசை அங்குள்ள பசுக்கள் காளையுடன் இன்புற்றிருப் பதையே காட்டுகிறது. இதைத் தலைவர் அறியாரோ?

பசுக்கள் காளையோடு கூடி இன்புறுகின்றன. நானோ தனித் திருந்து துன்புறுகிறேன் என்று தலைவி வருந்தித் தோழியிடம் கூறுகிறாள்.

சொற்பொருள்

1. நெறி - நெளி; இரு - கரிய; கதுப்பு - கூந்தல்.
2. செய் பொருட்கு - பொருள் ஈட்டி வருவதற்கு.
3. பொறி - புள்ளி; வரி - கோடு; அரவு - பாம்பு.
4. பைந்தலை - பசிய தலை; துமிய - துண்டித்து விழ.
5. உரவு - வலிமை; உரும் - இடி; உரறும் - இடிக்கும்.
6. ஏறு - காளை; இயங்குதொறு - அசையும்தோறும்; இயம்பும் - ஒலிக்கும்.
7. ஆன் - பசு.

தலைவி கூற்று

குறுந்தொகை 243 **நம்பிகுட்டுவன்**

திணை : நெய்தல்

கூற்று

வன்புறை எதிர் அழிந்து சொல்லியது. (வன்புறை - வற்புறுத்துதல்; எதிரழிதல் - மறுத்துக் கூறுதல்).

கூற்று விளக்கம்

தோழி வற்புறுத்தி ஆறுதல் கூறியதற்கு எதிராய்த் தலைவி வருந்திக் கூறியது.

மான்அடி என்ன கவட்டிலை அடும்பின்
தார்மணி அன்ன ஒண்பூக் கொழுதி
ஒண்தொடி மகளிர் வண்டல் அயரும்
புள்இமிழ் பெருங்கடற் சேர்ப்பனை
உள்ளேன் தோழி படீஇயர்என் கண்ணே

தெளிவுரை

தோழி! மானின் குளம்பினைப் போன்ற, பிளவுபட்ட இலைகளைக் கொண்ட அடும்பங்கொடிகளில் உள்ள குதிரையின் கழுத்துப் பட்டையில் உள்ள மணியைப் போன்ற ஒள்ளிய பூக்களைக் கொய்து, ஒளி பொருந்திய வளையலணிந்த மகளிர் வண்டல் விளையாடுவதும், பறவைகள் எப்பொழுதும் ஒலித்துக் கொண்டிருப்பதுமாகிய பெரிய கடற்கரையினைக் கொண்ட தலைவனை, இனி நினைக்க மாட்டேன்; என் கண்கள் இனியேனும் உறங்கட்டும்! (அவனை நினைத்துக்கொண்டே இருப்பதாலன்றோ, உறக்கம் கெடுகின்றது. இனி நினையேன்; அதனால் என் கண்கள் உறங்கும்.)

கருத்து

தலைவனை நினைக்காமல் இருக்க இயலவில்லை. அதனால் என் துன்பமும் தணியவில்லை.

விளக்கம்

அடும்பங்கொடியின் இலைகள் மானின் குளம்பினைப் போலப் பிளவுபட்டவை. அதன் மலர்கள் குதிரையின் கழுத்தில்

கட்டப்படும் சதங்கை மாலையில் உள்ள மணியின் வடிவமைப்பினைக் கொண்டவை.

சொற்பொருள்

1. மான்அடி - மானின் பாதம்; கவட்டு - பிளவுபட்ட; அடும்பு - அடும்பங் கொடி.
2. தார்மணி - குதிரையின் கழுத்தில் கட்டப்பட்டிருக்கும் சதங்கை மாலையில் உள்ள மணி; ஒண்பூ - ஒளிமிக்க பூ; கொழுதி - கையால் வலிந்து மலரச்செய்யப்பட்டது.
3. ஒண்தொடி - ஒளி வீசும் வளையல்; வண்டல் அயரும் - விளையாடு கின்ற.
4. புள் இமிழ் - பறவைகள் ஒலிக்கின்ற.
5. உள்ளேன் - நினைக்க மாட்டேன்; படீஇயர் என் கண்ணே - என் கண் இமைகள் மூடி நன்றாய் உறங்கட்டும்.

தலைவி கூற்று

குறுந்தொகை 325 **நன்னாகையார்**

திணை : நெய்தல்

கூற்று

பிரிவிடை ஆற்றாள் எனக் கவன்ற தோழிக்குக் கிழத்தி மெலிந்து கூறியது.

கூற்று விளக்கம்

தலைவன் பிரிந்த காலத்தில் தலைவி ஆற்றியிராள் என்றெண்ணிக் கவலையுற்ற தோழியை நோக்கி, "அவர் செல்ல மாட்டார் என்று கருதிச் 'செல்லுங்களேன்' எனச் சொல்லிவிட்டேன். அக்கூற்றினை உண்மை எனக் கருதி அவர் சென்று விட்டார்" என்று தலைவி வருந்திக் கூறியது.

'சேறும் சேறும்' என்றலின், பண்டைத்தம்
மாயச் செலவாச் செத்து, 'மருங்குஅற்று
மன்னிக் கழிக'என் றேனே; அன்னோ!
ஆசாகு எந்தை யாண்டுஉளன் கொல்லோ?
கருங்கால் வெண்குருகு மேயும்
பெருங்குளம் ஆயிற்று,என் இடைமுலை நிறைந்தே.

தெளிவுரை

'பொருளீட்டப் பிரிவேன், பிரிவேன்' எனப் பலமுறை தலைவர் சொல்லிக் கொண்டிருந்தார். ஒருமுறை அவ்வாறு சொல்லியபோது, அவர் முன்புபோலப் பொய் சொல்வதாய் எண்ணி, 'செல்வதானால் என்னிடமிருந்து நீங்கி நிலையாகவே சென்றுவிடுங்கள்' என்று சொல்லிவிட்டேன். அவரும் சென்றுவிட்டார். நமக்குப் பற்றுக்கோடான அவர் இப்போது எங்கிருக்கிறாரோ? நான் அழுத கண்ணீரால் என் மார்பகங் களின் இடைப்பகுதி நிறைந்து, கரிய கால்களைக் கொண்ட வெண்ணிற நாரைகள் மேயும் பெரிய குளம்போல ஆயிற்று.

கருத்து

'நீங்கள் செல்வதானால் செல்லுங்கள்' என்று சொன்னது தவறாய் அமைந்துவிட்டது. அதனையே ஒப்புதலாய்க்கொண்டு அவர் சென்று விட்டார்; அழுதழுது என் கண்கள் நீர் சொரிகின்றன.

விளக்கம்

தலைவன், 'பிரிந்து செல்வேன், பிரிந்து செல்வேன்' என்று அடிக்கடி சொல்லிக்கொண்டிருந்தான். ஒருநாள் அவன் அப்படிச் சொன்னபோது அவன் வழக்கம்போலச் சொல்லு கிறான் என்று கருதித் தலைவி, 'செல்வதானால் நிலையாகவே சென்றுவிடுங்கள்; இப்படிச் சொல்லிச் சொல்லி அச்சுறுத்திக் கொண்டிருக்க வேண்டா' என்று சொன்னாள். அவனோ, அதனையே ஒப்புதலாய்க் கொண்டு உண்மையாகவே பிரிந்து போய்விட்டான். அவனைத் தவிர வேறு துணையில்லாத அவள் இப்பொழுது அழுது கொண்டிருக்கிறாள்.

சொற்பொருள்

1. சேறும் - பிரிவேன்; பண்டை - முன்பு.
2. மாயச் செலவு - போகாமலே போகவிருப்பதாய்ச் சொல்லுதல்; செத்து - கருதி; மருங்கு அற்று - பக்கத்திலிருந்து நீங்கி.
3. மன்னி - நிலையாய்.
4. ஆசு - பற்றுக்கோடு; எந்தை - எம் தலைவன்.
5. குருகு - கொக்கு.

சங்க இலக்கியங்கள், பழந்தமிழர் வாழ்வியலின்
பண்பாட்டுக் களஞ்சியங்கள்;

சாதாரண வரிக்குக் கூட மெருகூட்டி மிளிரச் செய்யும்
மேதை சிலம்பொலியின் முத்தான உரைகளோடு
தமிழுக்கு ஓர் அருங்கொடையாய்த்
தன் வாழ்நாளின் ஒப்பற்ற சாதனையாய்ப்

பதினான்கு தொகுதிகளாக வெளிவருகின்றன.
சிலம்பொலி செதுக்கியுள்ள உரைச்சிற்பங்கள் இவை
வெறும் பொழிப்புரைகள் அன்று, பொன்னுரைகள்.

தமிழ் கூறு நல்லுலகம்
சிலம்பொலியின் சீர்மிகு படைப்புக்குச்
சிவப்புக் கம்பள வரவேற்பு நல்கிப்
பெரிதும் பயன்பெறும்; அவரைப்
போற்றிப் பாராட்டும்.

இலக்கியவீதி இனியவன்

சிலம்பொலி...

செந்தமிழர் செவிகளுக்குத் தேனொலி;
செம்மாந்த சிந்தனையின் பேரொளி;
நன்னெறியாளர்; நுண்ணறிவாளர்;
தன்னலம் கருதாத் தமிழ்ப்பேரறிஞர்.
சங்கத்தமிழின் ஆழம்கண்ட வேழம் இவர்.

ஆறாயிரம் பக்கங்களில் பதினான்கு தொகுப்புகளாகச் சிலம்பொலி செல்லப்பனார் வடித்திருக்கும் "செம்மொழித் தமிழ் அகப்பொருள் களஞ்சியம்", தமிழின் அக இலக்கிய உலகிற்கு அருளப்பட்டிருக்கின்ற அரும்பெரும் கொடை. ஐம்பதாண்டுக் காலத்திற்குமேல் தமிழின் அக இலக்கியங்களில் ஆழ்ந்து தவமிருந்து, சிலம்பொலியார் அயராமல் உழைத்ததன் காரணமாக, நமது இளம்தலைமுறையினருக்கு இப்படியோர் வரம் கிடைத்திருக்கிறது. தவமிருந்தவர் சிலம்பொலியார்; வரம் பெற்றவர்களோ தமிழர்கள்.

தமிழைத் திரட்டித் திரட்டி நிகழ்காலத்தின் கரங்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்ற இந்நூல் வரிசை, என்றென்றைக்கும் நமது அகநூல் களுக்கான களஞ்சியமாகவும், அவற்றுக்கான அரணாகவும், அவற்றை நோக்கிப் பயணிக்க உதவுகின்ற பண்பட்ட பாதையாகவும் திகழும். இப்படைப்பு வரிசை உலகெங்கும் விரிந்து பரவுகின்ற உயிர்த்தன்மை மிக்க, உண்மைத்தன்மை மிக்க, படிப்போரை உயர்த்தும் தன்மை மிக்கவை. வணங்குவதற்கு மட்டுமன்று; நன்றி கூறவும் கைகூப்புவோம், சிலம்பொலியாரை நோக்கி.

கவிஞர் ஜெயபாஸ்கரன்

Set of 14 Books
ISBN: 978-81-8379-767-2

Vol-8
ISBN: 978-81-8379-775-7

விலை ரூ. 7200/-